திருவிவிலிய விளக்கம்

நீதிமொழிகள்

வெளியீடு
அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி.
தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை

திருவிவிலிய விளக்கம்

16

கிறிஸ்தவ ஒன்றிப்பு உரை

நீதிமொழிகள்

உரை ஆசிரியர்

மேதகு ஆயர். அ. ஸ்டீபன்

பொதுப்பதிப்பாசிரியர்

கு. எரோணிமுசு

அருள்வாக்கு மன்றம்
புனித பவுல் இறையியல் கல்லூரி
அ.பெ.எண்.36
திருச்சி - 620 001

தமிழ் இறையியல் நூலோர் குழு
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி
மதுரை 625 016

Name : **Proverbs**

Author : **Most Rev. Stephen Antony**

Editorial Board :

Cruz M. Hieronymus (Chief Editor)

Stephen Sundersing (OT)

J. Susaimanickam (DC)

Dyanchand Carr (NT)

Tenson Hector (Associate Editor)

Published by :

Arul Vakku Manram, Tiruchirappalli

&

Tamil Theological Book Club, Madurai

First Published :

2020

Number of Pages :

x + 302

Paper :

SS Maplitho 18:1 (GSM 68)

Printed by :

Anto Artcrafts

Sivakasi

உள்ளே

பதிப்புரை vii

என்னுரை ix

ஞான நூல்கள்

அறிமுகம்

1. இலக்கணம் 01

2. ஞானத்தின் பண்புகள் 02

3. ஞான இலக்கியப் பின்னணி 05

4. இஸ்ரயேல் ஞானம் 07

4.1. மக்கள் ஞானம் (கி.மு. 1020க்கு முன்) 08

4.2. அரசவை ஞானம் (கி.மு. 1020-587) 10

4.3. இறையியல் ஞானம் (கி.மு. 587க்குப் பின்) 11

5. ஞானத்தின் பயன் (குறிக்கோள்) 14

5.1. ஞானத்தின் நற்செய்தி வாழ்வு 14

5.2. இம்மை வாழ்வு 14

5.3. இவ்வாழ்வு இப்பொழுதே இங்கே கிடைக்க வேண்டும் 15

5.4. ஞானம் செயல்பாடுடையது 15

6. நன்னடத்தை 16

7. தீய நடத்தை 16

8. வினைப்பயன் கோட்பாடு 17

9. இறப்பு 18

10. ஆசிரியர் 19

11. காரணங்கள் 19

நீதிமொழிகள்

முன்னுரை

1. மஷால் 21

2. ஞானம் பற்றிய நீதிமொழிகள் 22

3. ஞானம் பற்றிய விரிவுரைகள் 22

4. நீதிமொழிகளின் சிறப்பியல்புகள் 22

5. சூழல் 23

6. இறையச்சம் 25

6.1. இறையச்சம் குறிக்கும் சொற்கள் 26

6.2. இறையச்சம் குறிப்பதென்ன? 26

7. இறையச்சம் தரும் பயன் 27

8. படைப்பு இறையியல் 28

8.1. ஞானம் அழைப்பு விடுக்கிறது 29

8.2. படைப்பில் ஞானம் 29

8.3. ஞானத்தைக் கண்டடைவோர் வாழ்வடைவர் (8:35) 30

8.4. பெண்ணாக உருவகிக்கப்படும் ஞானம் இறைவார்த்தை போல் செயல்படுகிறது (1:20-33) 30

8.5. ஏழை - செல்வந்தன் ஒரு கண்ணோட்டம் 32

9. செல்வம் எப்படி வந்தது? 33

10. நீதிமொழிகளின் எல்லை 34

விளக்கவுரை

1. நூலின் நோக்கம் (1:1-9:18) 37

1.1. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் (1:1-7) 37

1.2. இளைஞருக்கு நல்லுரை (1:8-19) 45

1.3. ஞானம் விடுக்கும் அழைப்பு (1:20-33) 49

1.4. ஞானம் அளிக்கும் பயன் (2:1-22) 54

1.5. ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை (3:1-12) 60

1.6. ஞானத்தின் மேன்மை (3:13-20) 65

1.7. ஞானாசிரியரின் நல்லுரை (3:21-35) 69

1.8. ஞானத்தினால் வரும் நன்மைகள் (4:1-27) 74

1.9. கற்புநெறி தவறாமை (5:1-14) 81

1.10. பிறன் மனைவி நயவாமை (5:15-23) 86

1.11. சில நல்லுரைகள் (6:1-5) 89

1.12. சோம்பேறியாயிராதே (6:6-11) 91

1.13. கயவனின் போக்கு (6:12-15) 93

1.14. கடவுள் வெறுப்பவை (6:16-19) 94

1.15. கற்புநெறி வழுவாமை (6:20-35) 96

1.16. இளைஞருக்கு எச்சரிக்கை (7:1-27) 100

1.17. ஞானத்திற்குப் புகழுரை (8:1-23) 109

1.18. ஞானமும் மதிகேடும் (9:1-18) 122

2. சாலமோனின் நீதிமொழிகள் (10:1-32) 127

3. அறநெறிகளைக் கடைபிடி (11:1-31) 136

4. நல்லாரும் பொல்லாரும் (12:1-28) 144

5. அறநெறியும் செல்வமும் (13:1-25) 154

6. ஞானிகளும் அறிவிலிகளும் (14:1-35) 161

7.	வாழ்க்கைப் பண்புகள் (15:1-35)	170
8.	ஆண்டவரும் அரசரும் (16:1-33)	177
9.	குடும்பம் பற்றிய கூற்றுகள் (17:1-28)	186
10.	நட்பும் நாவடக்கமும் (18:1-24)	194
11.	ஏழையும் செல்வந்தரும் (19:1-29)	201
12.	கடவுளை நம்பியிரு (20:1-30)	209
13.	ஆண்டவர் மன்னனை வழிநடத்துகிறார் (21:1-31)	217
14.	செல்வம், வறுமை (22:1-17)	224
15.	முப்பது முதுமொழிகள் (22:18-29)	228
16.	நல்ல, தீய பண்புகள் (23:1-35)	231
17.	அறிவுரைகள், கூற்றுக்கள், கட்டளைகள் (24:1-22)	238
18	நல்வாழ்வுக்குத் தேவையானவை (24:23-34)	242
19.	நற்செய்தி குளிர்ந்த நீரை ஒக்கும் (25:1-28)	244
20.	சோம்பேறி, மதிகேடர் (26:1-28)	252
21.	நண்பர்கள், நட்பு (27:1-27)	259
22.	நீதர், அநீதர் (28:1-28)	267
23.	நீதியான அரசர் (29:1-27)	274
24.	ஆகூரின் மொழிகள் (30:1-33)	281
25.	அரசனுக்கு அறிவுரை (31:1-9)	292
26.	நல்ல மனையாள் (31:10-31)	295

பதிப்புரை

திருவிவிலிய விளக்க உரைகள் வரிசையின் 35ஆவது நூலாக ஞான நூல்களுள் ஒன்றான நீதிமொழிகள் என்னும் நூலுக்கான விளக்கவுரையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முப்பத்தைந்து விவிலிய நூல்களுக்கான கிறிஸ்தவ ஒன்றிப்பு விளக்கவுரைகள் வெளிவந்துவிட்ட நிலையில் இன்னும் 12 விவிலிய நூல்களுக்கான விளக்கவுரைகள் வெளிவர வேண்டியுள்ளன. அவையும் விரைவில் வெளிவந்துவிடும் என நம்புகிறேன். இன்னும் விளக்கவுரைகள் எழுத வேண்டியவர்கள் தங்கள் பணியை விரைவில் முடித்து விடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமொழிக்கான விளக்கவுரை எழுதியவர்கள் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு அ. ஸ்டீபன் அவர்கள். அவர்கள் ஏற்கனவே ஞான நூல்களுள் ஒன்றான சாலமோனின் ஞானம் என்னும் நூலுக்கு விளக்கவுரை எழுதியவர்கள். பல்லாண்டுகள் புனித பவுல் இறையியல் கல்லூரியிலும் ஏனைய விவிலிய, இறையியல் நிலையங்களிலும் விவிலியப் பாடங்கள் கற்றுக் கொடுத்தவர். பல விவிலிய கட்டுரைகளையும் எழுதியவர்கள். ஞான நூல்களைப் பற்றிய அவர்களது ஆழ்ந்த அறிவும் பல்லாண்டுகள் கற்றுக் கொடுத்த அனுபவமும் இந்நூல் எழுத அவர்களுக்கு பெரிதும் உதவியிருக்கின்றன.

நீதிமொழிகள் நூலுக்கு விளக்கவுரை எழுத ஏற்கனவே பலர் முன்வந்தனர்; ஆனால் அவர்கள் யாவரும் ஒருவர் ஒருவராக இப்பணியை ஆற்றத் தங்களால் இயலவில்லை எனப் பின்வாங்கிவிட்டனர். இந்நிலையில் ஆயர் ஸ்டீபன் அவர்கள் பெருந்தன்மையோடு நீதிமொழிக்கான விளக்கவுரை எழுத முன்வந்து அதனை மிகச் செவ்வனச் செய்துள்ளார்கள். நீதிமொழிகள் நூல்கள் பற்றி ஆங்கிலம் மற்றம் பல்வேறு மொழிகளில் வெளிவந்துள்ள விளக்கவுரை நூல்களை வாசித்து அவற்றின் மைய அழுத்தங்களை உள்வாங்கி அவற்றைத் தமிழில் அழகாகத் தந்துள்ளார்கள். தமிழ் இலக்கிய நீதிநெறிப் பாடல்களையும் சிறப்பாகத் திருக்குறளில் வரும் ஒத்த கருத்துக்களையும் நம் பார்வைக்குத் தருகிறார்கள். விளக்கங்களுக்கிடையே நல்ல பல ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் நமக்குத் தருகிறார்கள்.

நீதிமொழிகளுக்கான விளக்கவுரை எழுதுவது எளிதான செயல் அன்று. இருப்பினும் இப்பணியைக் குறித்த காலத்தில் செய்து முடித்திருக்கிறார்கள் ஆயர் ஸ்டீபன் அவர்கள். அவர்களுக்கு நம்முடைய உளமார்ந்த வாழ்த்துகள். இச்சிறந்த பணிக்காகத் தமிழ் கூறும் நல்லுலகம் அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

இந்நூலை முழுமையாக வாசித்து அதனை ஒழுங்குபடுத்தி அச்சுப் பிழைகள் போன்றவற்றைச் சரிபார்த்து அதற்கு மெருகூட்டியவர்கள் அருள்பணி லூ. அந்துவான் அவர்கள்; அவருக்கும் இணைப் பதிப்பாதிரியர் அருள்பணி டென்சன் எக்டர் அவர்களுக்கும் அச்சுக் கோர்த்த திருமதி அ. ஜான்சி அவர்களுக்கும் இந்நூலை அழகுடன் அச்சிட்டு வெளியிட்ட ஆன்றோ ஆர்ட் கிராப்ஸ் உரிமையாளர் திரு. அந்தோணி ராஜ் அவர்களுக்கும் மிகவும் சிறப்பாக இந்நூல் வெளிவரப் பொருளாதார உதவி செய்த அருள்பணி. ஆர். கே. சாமி அவர்களுக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பு விளக்கவுரைகள் வெளியீட்டுக்குப் பொறுப்பாகச் சிறப்புடன் செயல்படும் அருள்பணி எல்பின்ஸ்டன் ஜோசப் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள். ஞானம் நிறைந்த இந்நூலை வாசித்து ஞான ஒளி பெற்று யாவரும் நலமே வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

இவண்

கு. எரோணிமுசு

பொதுப்பதிப்பாசிரியர்

என்னுரை

நீதிமொழிகள் மக்கள் அனுபவத்தின் வெளிப்பாடு. நீதிமொழிகள் வழியாக ஒரு சமூகத்தின், ஓர் இனத்தின் சிந்தனைக் கருவூலங்களையும், வாழ்வனுபவங்களையும், கலாச்சாரங்களையும் அறிய வருகிறோம். பொதுவாக மக்கள் ஞானமே காலத்தால் முந்தியது. பின்பு அது குடும்பங்களில், அரசவைகளில், வழிபாடுகளில் வாழப்பட்டு முதிர்ந்த நிலையை அடைந்துள்ளது.

மனிதா நீ உன்னை நம்பு என ஞானம் கூறுகிறது.

மனிதா நீ கடவுளை நம்பு என இறைநம்பிக்கை உரைக்கின்றது.

மனிதா நீ உன்னை நம்பு எனும்போது அது தன்னம்பிக்கையைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை இறை நம்பிக்கைக்கு மாறானது அல்ல. மாறாக அது இறை நம்பிக்கையை வலியுறுத்தும் ஒரு பக்குவமான நிலை.

தன்னம்பிக்கையுடையவன் கடவுள் தனக்குக்கொடுத்த ஆற்றல்களைப் பயன்படுத்தி "என்னால் இதைச் செய்ய முடியும்" என்ற மனஉறுதிப்பாட்டுக்கு வந்துவிடுகிறான். தன்னால் முடிவதை முனைந்து முயற்சிசெய்து தானே செய்து முடிக்கிறான். அதற்காக அவன் கடவுளை தொந்தரவு செய்வதில்லை. முயன்றும் முடியாதபோது பாரத்தைக் கடவுளிடம் ஒப்படைத்துவிடுகிறான். இவ்வாறு பார்க்கையில் தன்னம்பிக்கை உடையவனே உண்மையான இறைநம்பிக்கை கொண்டுள்ளான் என்பது தெளிவாகிறது.

அப்படி சிந்திக்கையில் மனித ஞானம் இறைஞானத்துக்கு எதிரானதல்ல என்பது விளங்கும் "இறைவனிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீமொ 1:7) என்பது ஒரு நம்பிக்கைக் கூற்று என்பது மட்டுமல்ல, அது ஞானக் கூற்று.

ஒரு கொடை, மனித ஞானம் எங்கு முடிவடைகிறதோ அங்கு இறைஞானம் துணைக்கு வருகிறது, இறுதியில் இறைவனே முழு ஞானம், அவர் மனித ஞானத்தின் வளர்ச்சிகண்டு மகிழ்ச்சியடைகிறார் என்பது விளங்கும். நீதிமொழிகளைக் கற்பதே இன்னொரு உலகில் நுழைவது போன்றதாகும். நீதிமொழிகள் நூலுக்கு உரை எழுத வாய்ப்புக் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நீதிமொழிகளைக் கற்கும்போதும் கற்பிக்கும்போதும் பெறும் இன்பமே தனி.

இந்த உரை எழுத எனக்கு நூல்களும், விரிவுரை நூல்களும் கொடுத்து உதவிய திருச்சி புனித பவுல் குருத்துவக்கல்லூரி, மைசூரு, பிரபோதனா இறையியல் கல்லூரி நூலகங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

என் எழுத்துப் பிரதியைப் படித்து தரமான, மேலான கருத்துக்களை வழங்கி, இன்னும் சிறப்பாக உரையமைய உதவிய விவிலிய ஆசான் பேரருள்பணி. கு. எரோணிமுஸ் அவர்களுக்கும் சகோதர குரு பணியாளர் அந்துவான் மிகுந்த சிரமங்களை மேற்கொண்டு பிரதிகளைப் படித்துத் திருத்தங்கள் தந்ததற்கும் என் மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன். ஆர்வமுடன் அனைத்தையும் வாசித்து பிழை களைய உதவிய அருள்பணி. தினேசுக்கு என் நன்றி.

சோர்வும், தளர்வுமின்றி முனைப்போடு உரையைக் கணினியில் ஏற்றி எல்லா திருத்தங்களையும் பொறுமையோடு செய்துமுடித்த திருமதி. அ. ஜான்சி அவர்களுக்கும் என் நன்றி.

நல்ல முறையில் அச்சேற்றி மிகச்சிறப்பாக இந்நூலை வெளிக்கொணரத் துணை நின்ற ஆன்டோ ஆர்ட் கிராப்ட் பதிப்பகத்திற்கும் என் நன்றி.

இந்நூல் வெளிவர ஒற்றுப்பிழை, வாக்கியப்பிழை அனைத்தையும் கவனமாகச் செய்து தந்த செல்வன் டேனியேல் M.A. M.Phil., திருமதி. ஜெஸ்மி பால் B.A. B.Ed.., திருமதி. ரதி பிரிட்டோ M.A. B.Ed., ஆகியோருக்கும் என் நன்றி. பல நூல்களைப் படித்து பல உரையாசிரியர்களை உள்வாங்கி எழுதப்பட்ட நூல்தான் இது. தமிழக அருள்வாக்கு மன்றம், தமிழ் இறையியல் நூலோர் குழு இணைந்து வெளியிடும் இந்நூலைப் படித்து, தியானித்துப் பயன்பெற வாழ்த்துகிறேன்.

தூத்துக்குடி — **அன்புடன்**

07.12.2019 — **மேதகு ஆயர் அ. ஸ்டீபன்**

நீதிமொழிகள்

அறிமுகம்

1. இலக்கணம்

ஞானத்திற்கு இலக்கணம் கூறுவது கடினம். ஆனால் அதை விளக்கலாம். ஞானம் என்பது எதார்த்தங்களை, உலகக் கண்ணோட்டங்களை எதிர்கொள்ளும் ஒரு சிறப்பான மனநிலை எனலாம். அது வாழ்க்கை அனுபவத்தில் விளைந்த சட்டங்களை உலக வழக்கங்களை நடைமுறையில் ஏற்று சமாளிக்கும் ஆற்றல். இது தன்னையும் உலகையும் புரிந்து கொள்ள உதவும் ஒரு தேடல். இது பெற்றோரின் அனுபவத்தில் பிறந்த மரபுரிமைச் செல்வம் (legacy). இது குடும்பத்தில், குலத்தில் வாழப்பட்டு, ஆட்சிமன்றங்களில் பரிசோதிக்கப்பட்டுப் பின் இயம்பப்பட்டது. இது மனித வளர்ச்சிக்காக, வாழ்வை மகிழ்வுடன் வாழ உதவும் உள்ளத் தெளிவுகள் (intutions).

இது வாழ்வின் புதிர்களைத் தத்தித் தடுமாறி ஆய்கிறது. படைப்பில் மறைந்துள்ள உண்மைகளைத் தேடுகிறது. மனித உறவின் சிக்கல்களைச் சமாளிப்பது எப்படி எனக் காட்டுகிறது.

ஞானம் அனுபவம், சிந்தனைச் செழுமையால் கண்டுபிடித்தவைகளை வாழ்வில் செயல்படுத்தி மேம்பாடடையச் செய்கிறது. ஞானியர் தலைமுறை தலைமுறையாக மனிதச் சிக்கல்களுக்குத் தாங்கள் கண்டுபிடித்த அனுபவத்தை தங்கள் சிந்தனைமூலம் சிறப்பான முறையில் எழுதித் தங்களது தலைமுறையினருக்கு விட்டுச் செல்கின்றனர். எப்படிப் பக்குவமாகப் பேசுவது, சாப்பிடுகையில் எப்படி நடந்து கொள்வது, உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துவது என்பன போன்றவற்றை இந்நூல்கள் விளக்குகின்றன.

2. ஞானத்தின் பண்புகள்

மனிதனை, உலகை, மனித ஆற்றலை ஞானியர் நம்பினர். துன்பம், நோய், வறுமை, அழிவு, சிக்கல்கள் அவனைத் தாக்கின. எனினும் இவைகளை எப்படி எதிர்கொள்வது. மனிதனுக்கு எது இனியது, எது நல்லது, எது தேவையானது என ஞானிகள் கூறத் தயங்கவில்லை.

எனவே ஞானம் மனிதனுக்கு எது நல்லது என்பதை ஆய்கிறது. அனுபவத்தில் பெற்றவைகள், உணர்ந்து ஆய்ந்து தெரிந்தவைகள் சிக்கல்களுக்குப் பதிலாய் அமைகின்றன.

ஞானம் யாவர்க்கும் உரியது: ஞானக் கூற்றுகளை எந்த இடத்திலும், யாருக்கும் கூறலாம். (எ.கா) அறம் செய விரும்பு; முயற்சி திருவினையாக்கும்; நல்ல மனிதனை ஊரே போற்றும்.

ஞானம் பண்பாடு, மொழி, கலாச்சாரம் இவற்றைத் தாண்டி நிற்கிறது: ஞானக் கூற்றுகள் எல்லா மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்படுகின்றன.

ஞான நூல்களிலிருந்து அதிக மேற்கோள்கள் பயன்படுத்தப்படுகின்றன: சமூக, சமய, நாத்திகவாதிகள் அனைவரும் பயன்படுத்தும் நூல் ஞான நூல்; சமய நூல்கள் சமயவாதிகளால்தான் பயன்படுத்தப்படுகின்றன.

அரசுகள் மறைந்துவிட்டன... ஞானிகள் மறைந்து விட்டனர். ஞானம் தொடர்கிறது.

ஞானிகள் பொதுவாக மரபுகளை எதிர்த்தனர்: ஞானிகள் ஞானத்தின் அதிகாரத்தை நிலை நிறுத்தினர்.

நீதி நிலை நாட்டும் பொறுப்பு, சமூகப் பொறுப்புப் பற்றிக் கூறினர். அநீதி வேண்டாமென்றனர் (அதை எதிர்த்துப் போராடக் கூறவில்லை). தர்மம் செய்வது நல்லது. ஆனால் நீ பிச்சை எடுக்கும் அளவுக்கு ஆளாகிவிடாதே என எச்சரித்தனர். அளவு மீறிய பக்தியால் பயனில்லை (காண். சஉ 1:18; 7:16).

ஞானத்தில் வாழ்வியல் தத்துவம் நல்லது நடக்கும் என்பதே (Optimism lies at the centre of wisdom). தோல்வி, தீமை, குழப்பங்கள் கண்டு அஞ்சாது. நல்லது

நடந்தேறும் எனக் கூறி ஞானம் மனிதனைத் தேற்றுகிறது. (காலம் ஒருநாள் மாறும் நம் கவலைகள் யாவும் தீரும்).

ஞானத்தின் அறநெறிக்கும் சமயப் புரிதலுக்கும் சிறிய வேறுபாடு உண்டு: மனிதன் தனது வாழ்வை வளமையாக்கும் தேவையான ஆற்றலை பெற்றுள்ளான் 'கடவுள் உதவத் தேவையில்லை' என்பதுபோல் ஞானம் கூறுகிறது. புண்ணியமே இதன் பரிசு. நீமொ 14:24. ஞானம் நல்லது எது, அதனை மனிதனால் கண்டுபிடிக்க இயலும் என்கிறது. பலன் கிடைத்தால் நல்லது இல்லை எனில் மறுபடியும் முயன்று பார் எனக் கூறுகிறது. (தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும் (குறள் 9). ஞானிகள் நேர்மை, சமூகப் பொறுப்புப் பற்றி வலியுறுத்தினர்.

ஞானிகள் புனிதத்திற்கும் (Sacred) உலகச் சார்புக்கும் (secular) இடைவெளி இல்லை என்கின்றனர். அவை ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. உலகம் புனிதத்தையும் புனிதம் உலகையும் வளர்க்கின்றன; மெருகூட்டுகின்றன. ஞானம் உலகைப் புனிதப்படுத்துகிறது எனலாம். பழமை ஞானத்தில் சமயமும் அறநெறியும் கைகோர்த்துக் செல்கின்றன. வாழ்வு கடவுளின் பிரசன்னத்தில் வாழப்பட்டது.

ஞானிகள் நம்பிக்கையை வேறு கோணத்தில் நோக்குகின்றனர்: நம்பிக்கை என்பது கடவுள் நம்மிடம் ஒப்படைத்த பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுவது. மனிதன் பழுத்தவனாவது (mature) ஞானத்தின் நோக்கம். மனிதன் சுதந்திரமாகச் செயல்பட்டு, பொறுப்புடன் நடப்பதே மனிதனைப் பழுத்த மனிதனாக்குகிறது.

பொதுநிலைப்படுத்தல் (அதாவது மத உள்ளீட்டுக்கு உட்படாத secularization): என்பது சமூக மதிப்பீடுகள், அறநெறிகள் பற்றிய புதிய நோக்குகளைக் கொணர்தலாகும். அதாவது உலகு மனிதனின் இல்லிடம். மனிதன் அங்கு உழைக்கிறான். புதியவைகளை ஆய்கிறான், கண்டு பிடிக்கிறான். அதை வளப்படுத்துகிறான். வரலாறு அவனது முயற்சிகளே. அவன் வரலாறு படைக்க அழைக்கப்படுகிறான். பொதுநிலைப்படுத்தல் என்றால் புனிதப்படுத்துதல் எனலாம். இங்கு நாடு புனிதம், மனிதன் புனிதன் என்பதை ஹார்வி கோக்ஸ் (Harvey Cox) வலியுறுத்துகிறார். நீபூர் (Niebuhr) என்பவர் "இதுவே புனிதத்திற்கும் உலகு சார்ந்ததற்கும் உள்ள எல்லைக் கோடுகளை அகற்றுகிறது. இது தூய்மையின்

கொடூரத்தை அகற்றி உலகின் காலியிடத்தை ஓட்டுகிறது." (It is the end of the tyranny of the Sacred but also the end of the void of the profane") என்கிறார். (கவிமணி: வண்டி அற்புதப் பொருளாம். வண்டி மாடும் அற்புதப் பொருளாம்) (M. Amaladoss, If God is Secular in New Leader, Sep., 15, 2005).

ஞானம் மனிதனை அவனது சொந்த கால்களில் நிற்கத் தூண்டுகிறது: மனிதனின் முடிவுகளை, இலக்குகளை அவனே நிர்ணயிக்க வேண்டும். நீ முதிர்ந்தவன். உனக்கு நீயே பொறுப்பு. உனது 'முடிவை' இன்னொருவரிடம் விட்டுவிடாதே (விசுவாசம், கடவுள், தலையீடு, கடவுளின் புதுமைகள் ஞானிகளால் அதிகம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை). நமது முடிவில் உருவாகும் உலகுக்கு நாமே பொறுப்பு.

ஞான நூல்கள் கடவுள் பற்றிப் பேசுவதைவிட மனிதனைப்பற்றி அதிகம் கூறுகின்றன: ஞானம் மனிதனில் அக்கறை கொள்ளும் கடவுளைக் காட்டுகிறது. கடவுள் மனிதனை நம்புகிறார். அவன் ஆற்றல், பொறுப்பு அனைத்தையும் மதிக்கிறார்.

மனித இறையாண்மையைக் கடவுள் மதிக்கிறார்: இங்கு கடவுள் எதிர்ப்பில்லை. மாறாகப் பொருளுள்ள சுதந்திர வாழ்வு நிலைநாட்டப்படுகிறது.

ஞானத்தின் கூற்றுகளுக்கு யார் அங்கீகாரமும் தேவையில்லை: இதை அங்கீகரிக்க ஒரு குழு இல்லை. கூற்றின் மேன்மை மட்டுமே அதற்கு அதிகாரம் தருகிறது. முயன்று பார், கூறியது சரிதானா? என ஆய்ந்து பார் என அது கூறுகிறது. எது வந்தாலும் வாழ்வின் அனுபவத்திற்கு ஒத்துப் போகிறதா எனப் பார்க்கிறது. வாழ்வுக்குரிய நல்லனவற்றை மனிதன் தனது ஆற்றலால் காணவியலும் என்பதைச் சமய வாதிகள் குறைத்து மதிப்பிடுகின்றனர். சமயவாதிகளுக்குக் "கடவுளின் அதிகாரம் மட்டுமே" ஏற்புடையது. இதற்கு ஒத்திருந்தால் அங்கீகாரம், இல்லையெனில் ஒதுக்கப்படும். இதற்கு "ஒரு தனி நபர், பொறுப்பிலிருப்பவர், நிறுவனம்" தேவைப்படுகிறது. அவர்களிடம் அந்த அதிகார உச்சம் (monopoly) அடங்கிக் கிடக்கிறது. ஆனால் ஞானிகள் அதை மறுக்கின்றனர். ஞானம் பற்றிய தெளிவுக்குத் தனிநபர் அங்கீகாரம் தேவையில்லை என்கின்றனர் (யோபு 12:2-3; இச 30:11-14) ஞானிகள்.

3. ஞான இலக்கியப் பின்னணி

இஸ்ரயேலர் மிகச் சிறந்த ஞானிகளாயிருக்கவில்லை. பரந்துபட்ட சூழலில் இவர்கள் உதயமானவர்கள். இவர்களுக்கு முன்னால் நாகரீகத்தின் தொட்டில் எனப்படும் எகிப்து, சுமேரியா, கானான், அராபியா, மெசபடோமியா, மேற்கு ஆசியா, கிரேக்க நாடுகள் ஞான இலக்கியங்களின் ஊற்றாக இருந்தன எனலாம். இதை ஆராய்ச்சியாளர்களும் தொல்பொருள் ஆய்வாளர்களுக்கும் வலியுறுத்துகின்றனர்.

மோசே எகிப்து நாட்டுக் கல்வி கேள்விகள் அனைத்திலும் சிறந்து விளங்கினார் (திப 7:22) என்ற கூற்று எகிப்து நிறைந்த ஞானத்தைப் பெற்றிருந்தது என்பதற்குச் சான்றாகும். மேலும் கீழைநாட்டார், எகிப்தியர் ஞானத்தைவிட சாலமோன் ஞானம் சிறந்தது (1அர 4:30-31) எனும் கூற்று அண்டை நாட்டவர்கள் ஞானத்தைக் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. யோபு நூலின் காவியத் தலைவர் ஓர் ஏதோமையர். இவரது நண்பர்கள் எலிபாஸ், பில்தாது, சோபார் எலிசூ என்பவர்கள் மெசபொடாமியர். மேலும் தொபி 4இல் வரும் அகிக்கார், நபத் பிறவினத்தார்கள் (காண். எரேமியா 49:7; பாரூக் 3;11-23; ஓப 1;8 பிற இனத்தவர் ஞான இலக்கியங்கள் பற்றிக் கூறுகின்றன).

அகில உலகப் பண்பாடு, பொதுத் தன்மை உடையவையாக ஞானக் கூற்றுகள் உள்ளன. அறிஞர்கள், அமைச்சர்கள், ஆலோசகர்கள், செயலர்கள் போன்றோரிடம் கல்வி, புலமை, பண்பாட்டுச் சிறப்பு உண்டு. இவர்கள் வாழ்க்கை அனுப வங்கள், ஆட்சி வழிகள், கேட்டறிந்தவை, வாழ்வுப் பிரச்சினைகள் பற்றி கதைகள், உருவகங்கள், போதகங்கள், மேற்கோள்கள் வழியாக அறிவுறுத்தினர். அவர்கள் அவற்றைத் தங்கள் மாணவர்களுக்கு, ஆட்சியில் பங்குபெறுவோருக்கு விட்டுச் சென்றனர்.

எகிப்திய ஞான இலக்கியங்கள் கி.மு.3000 ஆண்டுகளிலிருந்து எழுதப்பட்டவை. இவ்விலக்கியங்கள் அறிவுரையாகவும், கோட்பாடுகள், ஒழுக்க நெறிகள் பற்றிக் கேள்வி எழுப்புவனவாகவும் உள்ளன.

ஞானம் பற்றிய ஏழு தொகுப்புகள் முழுமையாகவும் மேலும் ஐந்து தொகுப்புகளில் பகுதிகளும் கிடைத்துள்ளன. இஞ்ஞானம் மக்களிடமிருந்து எழுந்தவை. ஒரு சில ஞான இலக்கியங்களாவன.

1. Onomasticon (ஞான நூல் அகராதி அல்லது ஞானக் களஞ்சியம் எனலாம். Encyclopedia of Wisdom) மக்கள் ஞானம் இதில் காணப்படுகிறது.

2. Sabayit (செபாயித்). இது தந்தை மகனுக்குப் பாடம் கற்றுத் தருவதாக உள்ளது. வாழ்வுக் கடமைகள், அரசவைக் கடமைகள் இதில் உண்டு. இது ஒரு போதக நூல்.

3. Maat (மாத்) நீதிநூல் / ஞானப் போதக நூல். இது இறைவனால் நிறுவப்பட்டது என்பர். சரஸ்வதி கல்வித் தெய்வம் போல் மாத் ஞானத் தெய்வமாகக் கருதப்பட்டது. வாழ்வு, இது நீதி, ஒழுக்கம், நட்பு, நேர்மை, நம்பிக்கை பற்றிக் கூறுகிறது. கட்டுபபாடு, தீய பெண்களோடு உறவு தவிர்த்தல் பெரியவர்களோடு எப்படி நடந்துகொள்ளுதல் என்பவை பற்றியும் பேசப்படுகிறது.

4. மேலும் ப்டாஓடெப் (Ptahotep) அறிவுரை, மெரிகாரே (Merikare) அறிவுரை, ஓர்டெடெப் (Hordedef) அறிவுரை, ககெமனி (Kagemani) அறிவுரை போன்ற நூற்கள் உள்ளன.

5. அமென் எம் ஒபே - நீதிமொழிகள் எனலாம். நீமொ 22:17-24,34இல் நாம் காணும் முப்பது கூற்றுகள் இந்நூலில் உள்ளதை ஒத்துள்ளன. இரண்டுக்கும் ஒருவேளை பொதுப் பாரம்பரியம் இருக்கலாம் என்பர் அறிஞர். மேலும் தற்கொலை பற்றிய விவாதம், குடியானவனின் எதிர்ப்பு (Protest of an elopquent peasant) போன்ற நூற்கள் உள்ளன. எனினும் யோபு நூல் போல் கூர்மையும் ஆழமும் இல்லை.

மெசபொதாமியாவில்: கில்காமெஷ், அவ நம்பிக்கை பற்றிய உரையாடல் (Diologue on Pessimism), சுருபாக்கின் போதனை (அரசன் தன் மகனுக்குக் கூறுவது), அகிக்கார் கதை, மேலும் ஞானத்தின் ஆண்டவனைப் போற்றுவேன் என்ற நூற்கள் யோபு நூலை ஒத்தவை.

பாபிலோனியாவில்: ஞானத்தின் ஆலோசனைகள், ஞானி தன் மகனை எச்சரிப்பதுபோல் உள்ளது.

பாபிலோனிய இறைநூல் (Theodicy): நீதிமானின் துன்பம் பற்றிக் கூறுகிறது. மேலும் பிற்காலக் கிரேக்க இலக்கியத் தத்துவத் தாக்கங்கள் சாலமோன் ஞானத்தில் காணலாம்.

ஞானத்தை அனைவரும் விரும்புவர். இது காலம், இனம், இடம் கடந்து நிற்கிறது. இஸ்ரயேல் மக்கள் நாடு கடத்தப்பட்டு கி.மு.587இல் பாபிலோனுக்குச் சென்றனர். அங்குள்ள இலக்கிய ஞானத் தாக்கங்கள் அறிவர்களை ஆட்கொண்டது. அவைகளைக் கண்டிப்பாக இஸ்ரயேல் ஞான இலக்கியம் பின்பற்றியிருக்க வேண்டும். கிரேக்க இலக்கியங்களின் தாக்கங்கள் இஸ்ரயேல் ஞான நூற்களில் உள்ளன.

நமது நாடும் ஞானத்திலே பரமோனத்திலே சிறந்த நாடு. தமிழ் மண்ணிலும் கி.மு. 200 தொட்டே நீதி இலக்கியங்கள் தோன்றின. நீதி இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, நாலடியார், சித்தர்கள் நூல், திருக்குறள் மற்றும் பிற நீதி நூற்கள் தமிழ் இலக்கியத்தை அணி செய்கின்றன.

இஸ்ராயேல் ஞானம் ஒரே கடவுள் கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை. இறையச்சம் சிறப்பிடம் பெறுகிறது. இங்குத் தந்திரம், குறிபார்த்தல், வித்தைகள் போன்றவை அறவே இல்லை. (காண். R.E. Murphy, "The Tree of LIfe," (New York, Doubleday Dell Publishing Group, 1990) 151-179.

4. இஸ்ரயேல் ஞானம்

ஞானம் என்ற சொல்லை எபிரேயத்தில் கோக்மா (Hokma) என்றும், கிரேக்கத்தில் சோபியா (Sophia) என்றும், இலத்தீனில் சபியேன்சியா (Sapientia) என்றும் கூறுவர். பழைய ஏற்பாட்டில் கோக்மா என்ற சொல் 318 முறையும் – இதில் 183 முறை நீதிமொழிகள், யோபு, சபைஉரையாளர் நூல்களிலும் – வருகிறது.

'கோக்மா' எனும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. மெய்யறிவு, புரிதல், விவேகம் (நீமொ 22:3-6), அறிவாற்றல் (3:5; 9:6), அறிவு (1:7; 9:10), கண்டிப்பு (3:11; 5:12) விவேகம் (5:12; 1:14) எல்லாம் ஞானத்தை குறிப்பவையே.

எகிப்திலுள்ள குறிசொல்பவர்கள், வித்தைக்காரர்கள் ஞானிகளாகக் கருதப்பட்டனர் (தொநூ 41:8; விப 7:11). தானியேல் கனவுகளுக்குப் பொருள் தருபவர் ஞானி என்கிறார் (2:27). அது ஞானம் திறமை, ஆற்றல், மற்றும் கலைகளில் தேர்ந்தோரையும் குறிக்கும் (விப 36:2,8; 1குறி 22:15-16; விப 35:35). மேலும் விவேகம், தந்திரம் உடையவர்கள் (நீமொ 30:21,28) மாலுமிகள் (திபா 10:27; நீமொ 1:5) ஞானிகளாகக் கருதப்பட்டனர். ஞானிகளின் அனுபவம்

வாழ்வை செய்வனே நடத்த உதவுவதாகும். ஞானிகள் எப்போது பேசுவது அமைதி காப்பது என்பது அறிவர். மேலும் இது உண்மை, நம்பகத்தன்மை, கனிவு, நேர்மை, கட்டுப்பாடு போன்றவற்றைக் குறித்தது. அரசியல் சாணக்கியம் (1அர 8:12), விடுகதைகளுக்கு விளக்கம் தருவது (1அர 10:1-4), ஆலோசனைகளைத் தருவது ஞானமாகும் (எரே 5:35). யூத ஞானத்தின் வளர்ச்சியை மூன்று நிலைகளில் பார்க்கலாம். அவை மக்கள் ஞானம், அரசவை ஞானம், இறை ஞானம் முதலியவையாகும்.

4.1. மக்கள் ஞானம் (கி.மு. 1020க்கு முன்)

ஞானம் முதன்முதலில் செயல்முறை அறிவாகும். வாழ்க்கையை ஒழுங்குபடுத்தக் கற்றுக் கொண்டவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவான். அவன் ஞானியாவான். இங்கு ஞானம் யூகித்து அல்லது ஆய்ந்துபெறும் அறிவெனக் கருதக்கூடாது (philosophical or logical) மாறாக அது அனுபவ அறிவு.

நீதிமொழியில் (6:6-11) மனிதர்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகை உற்று நோக்குகின்றனர். இயற்கையைப் பார்க்கின்றனர். மனிதர்களை, அவர்கள் செயல்களை, வாழ்வில் அரங்கேறும் நிகழ்வுகளைக் கண்ணோக்கி அவர்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கின்றனர். இதனால் மனிதர்கள் அனுபவம் பெறுகின்றனர். பட்டறிவைத் துய்க்கின்றனர். இது படித்தவர்களிடம் மட்டுமல்ல. பாமரர்களிடமும் உண்டு. எனவே இதை **மக்கள் ஞானம்** என்பர். கோபப்படுபவன் சண்டையிடுகிறான். நட்பு இதனால் மறைகிறது. பொறுமையுடையவன் நட்பை ஈன்றெடுக்கிறான். இதனால் "ஒருவர் பொறை இருவர் நட்பு," "பொறுத்தார் பூமியாள்வார்" எனக் கண்டு கொள்கிறான். எறும்பைப் பார்த்துச் சுறுசுறுப்பைக் கண்டுபிடிக்கிறான்.

முறையாகச் சிந்திக்கத் தெரிந்த ஞானியர் மக்களின் அனுபவத்தைக் கேட்டு அறிகின்றனர். ஆய்வு செய்கின்றனர். பின்பு நல்வாழ்வுக்கான உண்மைகளை, உறுதிப்பாடுகளை, நெறிமுறைகளை, தலைமுறையினருக்குத் தொகுத்துத் தருகின்றனர். இவைகளைப் **பழமொழி, மூதுரை, விடுகதை, உவமை, ஒப்புமை, புதிர் முதலிய இலக்கிய வகைகளில் எடுத்துத் தருகின்றனர்.** எ.கா. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு, முதியோர் சொல் முதிர்ந்த நற்கனி, முன் கசக்கும் பின் இனிக்கும், தன் வினை தன்னைச் சுடும்.

நல்ல மொழிகளில் நமக்குத் தருகின்றனர். இது இனம், மொழி, நாடு, இடம், காலம் கடந்து அமரத்துவமும் பொதுமையும் பெறுகிறது.

"அனுபவம் என்பது வழுக்கை விழுந்தபின்பு வாழ்க்கையில் கிடைக்கும் சீப்பு" அயர்லாந்துப் பழமொழி. முதியோருக்கு ஞான அறிவு உண்டு; எனினும் முதியோர் ஆனதால் மட்டும் அனுபவம் வருவதில்லை (காண். யோபு 32:6-10; சாஞா 47:8). இளைஞர்கள் அனுபவம் இல்லாததால் அறிவிலிகள் எனக் கருதப்படுகின்றனர். ஆனால் பெரியோர்களின் அறிவுரைப்படி நடப்பின் (நீமொ 1:4; திபா 119:9) ஞானம் பெறுவர். வாழ்வில் வெற்றி பெறும்பொருட்டுத் தந்தையர் தமது அனுபவத்தைத் தங்கள் குழந்தைகளோடு பகிர்ந்துகொள்வர். அதைப் பின் தலைமுறையினருக்கு விட்டுச் செல்வர் (நீமொ 1:8; 4:1-27; தோபி 4:1-21). தந்தையின் நற்பயிற்சியைப் பெறக் குழந்தைகள் முயலவேண்டும். **குடும்பமே ஞானத்தின் ஊற்று எனலாம். எனவே மக்கள் ஞானத்தைக் "குடும்ப ஞானம்" எனலாம்.**

மக்கள் ஞானத்தைப் பழைய ஏற்பாடு முழுவதிலும் காணலாம்.

- முதல் பெற்றோரின் வீழ்ச்சி (தொநூ 2,3)
- யோசேப்பின் கதை (தொநூ 37-50)
- தாவீது, சாலமோன் (2சாமு 9-20; 1அர 1-2)
- ஆமோஸ், ஓசேயா, தானியேல் (காட்சி ஞானம் என்ற பெயருண்டு)
- வரலாற்று நூல்கள் (1சாமு 24:13)
- இறைவாக்கு நூல்கள் (எசா 10:15; எரே 17:11; 31:29; எசே 16:14; 18:2)

இஸ்ராயேல் சட்டங்கள் மக்கள் ஞானத்தின் வளர்ச்சி பெற்ற நிலை என்பர். விப 23:8; இச 16:19; லேவி 18 இதைக் குல ஞானம் எனவும் கூறுவர்.

மனித ஞானத்தை அக ஞானம் (subjective) என்றும் புற ஞானம் (objective) என்றும் பிரிப்பர்.

அ) அக ஞானம்: இஸ்ரயேலரின் பழங்கால மக்கள் சட்டங்கள், தோராவில் தங்கள் ஞானத்தைத் தேடவில்லை.

"**மனித இதயம், வாழ்வு, இயற்கை, உலக நிகழ்வு இவைகளைக் கூர்ந்து கவனித்தனர். உளவியல் நுணுக்கங்களைப் படித்துத் தங்கள் வாழ்வுக்குத் தேவையானதைப் பெற்றுக் கொண்டனர்.**" எனவே இஞ்ஞானம்

இடம், காலம், வரையறைகளைக் கடந்து "எல்லோருக்கும் பொதுவானதாக" கருதப்படுகிறது,

ஆ) புற ஞானம்: வெளிப்படுத்தப்பட்ட சட்டம். சமயம் சார்ந்த கோட்பாடுகள் - இவைகளைப் புறஞானம் எனலாம். சீராக் 24, பாரூக் 34-41.

ஞான ஆசிரியர்கள் சட்டத்தையும் ஞானத்தையும் ஒன்றாக்கினர் எனலாம். சீராக் 24:1-12; 24:30-33: நீதி முறைகளைக் கற்பித்தேன். அதன்படி நடங்கள். இதுவே ஞானம் என்று இணைச்சட்டம் (4:5-8) கூறுகிறது.

அக ஞானத்தைக் கோட்பாட்டு ஞானம், செயல்முறை ஞானம் எனப் பிரிப்பர். **கோட்பாட்டு ஞானம்:** இறுதி விளக்கத்தை அறிய விரும்பும் முயற்சியாகும். ஆனால் அது வீணானது (சஉ. 1:12-18) யோபு **நீதிமானின் துன்பம் பற்றி** அலசுகிறார். இது ஓர் இறையியல் பிரச்சினை. இப்பிரச்சினைக்குக் கடவுள் ஒருவரே பதிலிறுக்க இயலும் (28:23-24). மனிதன் ஆண்டவருக்கு அஞ்சவேண்டும். தீமையை விட்டு விலக வேண்டும் (28:28). இப்பிரச்சினைகளுக்குப் பதில் காண்பதைவிட இப்பிரச்சினைகளோடு எப்படி வாழ்வது என்பதுதான் ஞானிகள் கூற விரும்பியது.

"பிறருடன் பழகுவது எப்படி? வெற்றிக்கு வழி என்ன என ஆய்வது. ஆனால் பகைமை, வெறுப்பு தோல்விக்கு வழியாகிறது. இச்சூழலில் எப்படி வாழ்வது என்ற அறிவியல் நுணுக்கம் சார்ந்த செயல்முறை இங்குக் கூறப்படுகிறது.

செயல்முறை ஞானம்

பாரம்பரிய செயல்முறை ஞானம் சமயக் குறிக்கோள்களை உள்ளடக்கியது (நீமொ 1-9). நம்பிக்கை இறைவார்த்தையை எப்படிச் செயல்படுத்துவது என்பதைச் செயல்முறை ஞானம் எனக் கொள்ளலாம். எல்லாச் சூழல்களிலும் இறைத் திருவுளம் ஏற்று எப்படி வாழ்க்கையை நடத்துவது என்பது கூறப்படுகிறது.

4.2. அரசவை ஞானம் (கி.மு. 1020-587)

இஸ்ரயேலில் மன்னராட்சி மலர்ந்த காலத்தில் கூறிய அறிவு, புலமை, நிர்வாகத் திறமை நாடுகளிடையே உறவு போன்றவை தேவைப்பட்ட போது ஞானிகள், ஆலோசகர்கள், அமைச்சர்கள், செயலர்கள், எழுத்தர்கள் தேவைப்பட்டனர் (காண் தானி 20:48-49). அகிதோபாவின் ஆலோசனைகள்

அரசவையில் கடவுள் வார்த்தைபோல் ஏற்றக்கொள்ளப்பட்டன (2சாமு 16:23). ஆட்சியும் ஞானமும் இணைந்து போயின. கல்விக் கூடங்கள் எழுந்தன (தானி 1:4-5 17-20). இஞ்ஞானிகள் பொதுமக்களின் பிரச்சினைகளில் ஆர்வம்காட்டி அறிவுரை வழங்கினார். (நீமொ 10:1-22:16; 25:1-29-27). முடியாட்சிக் காலத்தில் தோன்றிய யாவே மரபு ஞானத்தின் தாக்கங்கள் உள்ளன (தொநூ 2:4-3:24). அரசவை ஞானத்தில் தலை சிறந்தவர் "சாலமோன்". இவர் ஞான இலக்கியத்தின் "புரவலர்" (நீமொ 1:1-4) எனக் கருதப்படுகிறார். அரசர் சாலமோனின் நீதிமொழிகள் 3000, அவர் இயற்றிய பாடல்கள் 1005 (1அர 4:29-33; காண் 1அர 3:3-14,16-28; 4:34).

4.3. இறையியல் ஞானம் (கி.மு. 587க்குப் பின்)

யூதாவின் மேற்குடிகள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபின் (கி.மு. 587-537) அங்குக் கோவிலோ வழிபாடோ எதுவும் இல்லை. எரேமியா இறைவாக்கினர் (29:13-14), யூதா நாடுகடத்தப்பட்டதற்குக் காரணம் அது உடன்படிக்கை உறவை உதறியதால்; எனினும் மக்கள் மனம்மாறி இறைவனிடம் திரும்பினால் ஆண்டவர் மீட்டு வருவார் என அழைப்பு விடுத்தார். தண்டனையும் ஒரு விதத்தில் அருள்தான். இஸ்ரயேல் மக்கள் திருச்சட்டத்தில் ஆர்வம் காட்டத் துவங்கினர். அதைப் படித்து அதன்படி செயலாற்ற முனைந்தனர். திருச்சட்டத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறையை ஏற்கலாயினர் (நெகே 8:1-18). மறைநூல் அறிஞர்களும் குருக்களும் முன்வந்து மக்களை நன்னெறிக்கு இட்டுச் சென்றனர். எஸ்ரா இதில் தலைமைப் பொறுப்பை வகித்தார் (நெகே 8).

மக்கள் மெதுவாகக் கடவுளே ஞானத்தின் ஊற்று, அவரே அதை மானிடருக்கு வழங்குகிறார் என (சீஞா 1:1-10; யோபு 28:23-28; பாரூ 3:9-4:4) அறியலாயினர். இது கடவுள்பால் உள்ள அச்சமே ஞானத்தின் தொடக்கம் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது (நீமொ 1:17; 9:10; 15:33; யோபு 28:28; திபா 111:10; சீஞா 1:1-21; சஉ 3:14; 12:13). அதுவே ஞானத்தின் ஆணிவேராக (சீஞா 1:20); மணிமுடியாக (1:18); நிறைவாகப் (1:14) போற்றப்பட்டது.

இறைஅச்சம் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இது உயிருள்ள, ஆற்றலுள்ள தனித்தன்மை வாய்ந்த கடவுள் மனித உறவு. இது மக்களின் மொத்த சமய நம்பிக்கையை, கடவுளோடு மனிதகுலம் கொண்ட

ஒட்டுமொத்த உண்மை அன்பினை எடுத்துரைக்கிறது. ஞானம் பெற இந்த முறைமையைக் கையாள வேண்டும்.

வோன் ராட் (Von Rad) என்ற அறிஞரும் “மனிதன் கடவுளோடு கொண்டுள்ள சரியான மனநிலையைப் பொறுத்தே ஞானம் வாழ்கிறது அல்லது வீழ்கிறது” என்கிறார். மறைநூல் அறிஞர்களின் செல்வாக்கு திருச்சட்டத்தை ஞானமெனக் கருத உதவியது. ஞானத்தை நீ அடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைபிடி; அப்போது கடவுளே உனக்கு ஞானத்தை வாரி வழங்குவார் (சீஞா 1:26 24:23 பாரூ 4:1 இச 4:5-6). இறையியல் ஞானம் இதனால் இணைச்சட்ட ஞானம் என்று பெயர் பெற்றது.

இறையச்சம் என்பது கடவுளுக்கு மகிழ்ச்சியளிக்காத செயல்களைத் தவிர்த்து அவரது திருவுளத்திற்கு ஏற்ப வாழ்வது. இத்திருவுளம் தோரா வாழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கடவுள் நம்பிக்கை கொண்டு அவரது திருவுளப்படி நடக்கும் நேர்மையாளர் ஞானி எனப்பட்டார். கடவுள் நம்பிக்கையும் இறையச்சமும் அற்றவர் அறிவிலி எனக் கருதப்பட்டார் (சாஞா 3:1-2; 15:7-8; திபா 14:1; 53:1; 36:1).

இவ்வாறு ஞானத்தைச் சமயத்தின் இன்றியமையாக் கூறாகப் பார்க்கலாம். இறைவாக்குகள், குருக்களின் அறிவுரைகள் போல இதுவும் சிறப்பானது. எனவே ஞானம் மூன்று முக்கியமான வெளிப்பாடுகளில் ஒன்று. மூன்றில் ஒரு வழி. இதன் வழியாகக் கடவுள் மனிதனோடு உறவு கொள்கிறார் என A.R. செரெஸ்கோ கூறுகிறார். அதாவது சட்டநூல், இறைவாக்கு நூல்களைப் போல ஞானநூலும் புனிதமான ஒன்று.

ஞானநூலும் திருநூலும்

இஸ்ரயேல் திருநூலை அதிகமாக மதித்தது. எனினும் ஞான நூல்களை அதிகம் பயன்படுத்தவில்லை. ஞானநூல்கள் திருநூலில் உள்ளவை அல்ல என்றும் சாதித்தது. இந்நூல்கள் இஸ்ரயேல் மக்களின் உண்மைப் படைப்பல்ல எனும் கருத்தும் நிலவியது, ஆனால் புரூக்மான் ஞான நூல்கள் திருநூலின் இன்றியமையாத நூல்களே, உண்மையானவையே என்கிறார்.

1. ஞானநூல்கள் இறையியற் கருத்துக்களுக்கு ஓர் எச்சரிக்கையாக உளது. அவை புதிய பார்வைகளை, வாய்ப்புகளைத் தருகின்றன.

2. ஞான இலக்கியத்தில் நுழையும்போது இன்னொரு உலகில் நுழைவதான உணர்வு ஏற்படுகிறது. இங்கு விடுதலை, செங்கடல் கடத்தல், தோல்வி, மீட்பு, உடன்படிக்கை, வாக்குறுதி, இறை தலையீடுகள் ஆகியவைபற்றி அதிகமாகக் கூறப்படவில்லை.

3. ஞான இலக்கியங்களில் சமய உணர்வு குறைவு. வரலாற்று உணர்வு வலியுறுத்தப்படவில்லை. சிலை வழிபாடுகளை எதிர்க்கும் மொழி இங்கில்லை. இறைவன், ஆலயம், வழிபாடு, பலிகள், சட்டம் பிற்கால இலக்கியங்களில் கொஞ்சம் உண்டு. சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம் போன்ற பிற்கால நூல்கள் மீட்பின் வரலாற்றைத் தொடர்புப்படுத்திப் பார்க்கின்றன (சீஞா 44-50; சாஞா 10-19). குருக்கள் இறைவாக்கினர்களின் தடயங்கள் குறைவே. இறைவனை மையமாகக் கொண்டவையும் குறைவே. (சீனாய் உடன்படிக்கை, மூதாதையருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் விடுதலைப் பயணக் குறிப்புகள் சீராக் அதி 44-50; சாஞா அதி 11-19 காணலாம்).

ஞான இலக்கியத்தின் மையம் மனிதனும் அவனது வாழ்வும். மனிதனது வாழ்வை வளப்படுத்தும் வழிகள், நடத்தைகள் பற்றி இங்குக் கூறப்படுகின்றன. பொருளடக்கம், நடை வேறுபடுகின்றது. எனினும் ஞான இலக்கியம் சமய இலக்கியத்தின் பகுதிதான். கூர்ந்துநோக்கின் மீட்கும் கடவுளுக்கும் ஞானத்தின் கடவுளுக்கும் வேறுபாடு இல்லை.

ஞானிகளின் கண்ணோட்டத்தில் இஸ்ரயேல் கடவுள் மீட்பின் கடவுளாக, உடன்படிக்கைக் கடவுளாக நோக்கப்படவில்லை. அவர்கள் கடவுளைப் படைப்பின் தலைவராகக் கண்டு தியானித்தனர் (யோபு 38:1-42; சீஞா 16:26-17:14). படைப்பிலிருந்து பாடங்கள் பெற்றனர் (நீமொ 6:5-11; 30:18-19,24-33). படைப்பில் படைத்தவரைக் கண்டனர் (சீஞா 42:15; 43:33). ஆனால் படைப்பைக் கடவுளாகப் போற்றவில்லை.

> "இவ்வுலகை ஆக்கிவைத்தான்; இயற்கையையும் படைத்துவைத்தான்;
> விதவிதமாய்ப் படைத்துவிட்டுத் தன்னையதில் மறைத்துக் கொண்டான்"

ஞானத்தின் இறையியல் படைப்பு இறையியலை அடிப்படையாகக் கொண்டது. திருச்சட்டம், இறைவாக்கு நூல்கள் இறைவனை மையமாகக் கொண்டவை. இறைவெளிப்பாடு, இறைவார்த்தை அதற்கு அடித்தளம். ஏற்கனவே

கூறியிருப்பதுபோன்று நீதி நூல்களின் மையம் மனிதன், மனித அனுபவத்தைக் கொண்டே அவனது வாழ்வு வழிநடத்தப்படுகிறது. மனித நேயம் இங்கு மிகுதியாயிருக்கும்.

5. ஞானத்தின் பயன் (குறிக்கோள்)

5.1. ஞானத்தின் நற்செய்தி வாழ்வு

ஞானிகள் வாழ்வைப் பாராட்டினர், அன்பு செய்தனர், மதித்தனர், மகிழ்ந்தனர், போற்றினர், கொண்டாடினர், ஞானிகள் வாழ்வை முன்னிலைப்படுத்தினர்; பொது வாழ்வில் மகிழ்ந்தனர் (நீமொ 11:10-11). ஞானம் வாழ்வுக் களஞ்சியம். வாழ்வை வளப்படுத்த, வாழ ஞானம் உதவுகிறது.

அமென் எம் ஓபே (Amen Em Ope) என்ற எகிப்து ஞானி "சொல்வதற்குச் செவி கொடு, புரிதலுக்கு உன் இதயம் திற, அதற்கேற்பச் செயல்படு; வாழ்வில் வெற்றி கிடைக்கும். எனது வார்த்தைகள் வாழ்வுக் கருவூலமாகும். நீ செல்வத்தில் வாழலாம் என்கிறார்." இஸ்ரயேல் ஞான நூற்கள் வாழ்வை மையமாக வைத்தே எழுதப்பட்டன. என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர் (நீமொ 8:35).

ஞானம் அடைந்தவர்களுக்கு அது, வாழ்வெனும் மரமாக (நீமொ 3:18; 1:30; 15:4), வாழ்வின் வழியாக (நீமொ 2:19; 5:6; 10:17; 15:24), வாழ்வின் ஊற்றாக (நீமொ 10:11; 13:14; 16:22), நீடிய ஆயுள் தருவதாக (நீமொ 10:27; 3:13-18; சீரா 4:12) உள்ளது. ஞானம் உள்ளவர் நற்பேறு பெறுவர் (நீமொ 3:13-18). சமுதாயக் கட்டளைகளை விளக்கிக் காட்டுவது ஞானமே. கட்டளை என்பது ஒரு விளக்கு; அறிவுரை என்பது ஒளி; கண்டித்தாலும் தண்டித்தாலும் அது நல்வாழ்வுக்கு வழி (நீமொ 6:23); ஞானம் விருந்தும் அளிக்கிறது (நீமொ 9:1-12). ஞானம் எனும் சீமாட்டி வாழ்வை வழங்க வாக்குறுதி அளிக்கிறாள் (நீமொ 1:20-23 8:32-36) வாழ்வைப் பொதுவில் அனுபவிக்க ஞானம் அழைக்கிறது (நீமொ 11:10-11).

5.2. இம்மை வாழ்வு

இஸ்ரயேலர் மறுமை வாழ்வையல்ல இம்மை வாழ்வையே வலியுறுத்தினர். இம்மை வாழ்வு இங்கு, இப்பொழுது மனிதர் வாழும் மகிழ்வான நிறைவான, முழுமையான வாழ்வைச் சுட்டுகிறது (நீமொ 3:16; 13:25). நல்ல மனைவி, குழந்தைகள், நம்பிக்கையான நண்பர்கள், செல்வம், வளம், நல்ல சுகம், நோயற்ற

வாழ்வு, நீண்ட ஆயுள், வெற்றி, மதிப்பு, பேர், புகழ் எல்லாம் மனிதனைச் சிறப்புடன் வாழ உதவிடும் கூறுகள். இந்நலன்களையெல்லாம் நேர்மையாளர்களுக்கு இறைவன் வழங்கும் ஆசிகள் (யோபு 1:1-5; இச 28:1-4; காண் நீமொ 3:13-18; 8:32-36; 1017,27). மனித வாழ்வு சமூகத்தோடு தொடர்புடையது. நல்லவர் ஒருவரால் ஊரே மகிழும்.

5.3. இவ்வாழ்வு இப்பொழுதே இங்கே கிடைக்க வேண்டும்

ஏனெனில் நெடுநாள் எதிர்நோக்குவது சோர்வைத் தரும். இப்பொழுது வாழ்வதே நல்லது (நீமொ 13:12 13:25). ஆனால் இறையடியார்கள் இதை ஏற்கவில்லை. மனித வாழ்வின் இலட்சியம் அவனுக்கு வெளியிலுள்ளது என்பர். மனித நற்செயல்களில் காண அவர்கள் தயங்குகின்றனர். அவர்கள் பார்வையில் எல்லாமே கடவுளால் மனித வாழ்வில் புகுத்தப்பட்டிருக்கிறது. காலம் கடந்து வரும், காத்திருக்க வேண்டும் என்பர். கலைகள், மனித முயற்சிகள், மனித சாதனைகள், முன்னேற்றங்கள் மதிக்கப்படுவதில்லை. நன்மை, தீமை, கடவுள் செயல் இவைகளைப் புகுத்தி மனித சுதந்திரம், வாழ்வு, நீதி இவைகள் கவனிக்கப்படாது விடப்பட்டன.

சமயம் மனித உரிமைகளைப் பறித்துவிட்டு ஏழைகளுக்கு, "கீழ்ப்படிதல், பொறுமை, காத்திருத்தல் இவைகளைப் போதித்து, மறு உலக வாழ்வை எதிர்பார்க்கச் சொன்னது. மண்ணுலகுக்கு அப்பாலுள்ள இலட்சியங்களைக் கூறுவதை ஞானம் எதிர்க்கிறது" எனலாம்.

5.4. ஞானம் செயல்பாடுடையது

ஞானம் மனித வாழ்வை எது வளப்படுத்துகிறதோ அதை உடனே செய்யச் சொல்கிறது. It is pragmatic + impatient. ஞானம் மனிதப் பிரச்சினைகளில் அக்கறை காட்டுகிறது. அதை மூடத்தனத்தால் முடக்கி விடக் கூடாது. "வாழ்வுக்கு எது நல்லதோ அதை ஏற்றுக்கொள்." ஞானம் மனிதப் பிரச்சினைகளில் அக்கறை காட்டுகிறது. அதை மூடத்தனத்தால் முடக்கி விடக் கூடாது. "வாழ்வுக்கு எது நல்லதோ அதை ஏற்றுக்கொள்." **இறைத் திருவுளம் மனித வாழ்வைக் குறிக்காவிடில் சமூக நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லாவிடில் அது "சிலை வழிபாடு" என்கிறது ஞானம்.** ஒன்றே செய்; நன்றே செய்; இன்றே செய்.

ஞானம் மனிதன் பொறுப்புள்ளவன், முதிர்ந்தவன், அவனது முடிவுக்கு அவனே காரணம், அவனே தீர்மானிக்கிறான் என்கிறது. அகுஸ்தீனார் "உன்னைக்

கேட்காமல் படைத்த இறைவன் உன்னைக் கேட்காது மீட்கமாட்டார்'' என்கிறார். மனித ஆற்றல்கள் ஓர் எல்லைக்கு உட்பட்டது. எனினும் அந்த எல்லைக்கு முடிவில்லை. நேற்று இயலாதது என்பது இன்று இயல்வதாக உள்ளது.

அகுஸ்தினார், "Pray as if everthing depends on God

Work as if everything depends on you."

"நீ மன்றாடும்போது கடவுளை நம்பு. உழைக்கும்போது உன்னை நம்பு." ஞானிகள் மனித விரும்பிகள், மனித நலனில் அக்கறை உடையவர்கள் (ஈகை நீமொ 11:25; கனிவு 11:16; முயற்சி 12:24; கட்டுப்பாடு 13:24).

6. நன்னடத்தை

அறநூல்கள் அனைத்தும் அறத்தை நிலை நாட்டுவதுபோல நீதி நூற்கள் நீதியை நிலைநாட்டுகின்றன. ஞான நூற்கள் நீதி, நேர்மை, வாய்மை, பற்றுறுதி முதலிய விழுமியங்களை வளர்க்கத் தூண்டுகின்றன. படைப்பிலே மனிதன் ஒழுங்குமுறையை, முறைமையை, நியதியைக் காண்கிறான். சமூகத்தில் இவை தொடரவேண்டும். சண்டை, பிளவு, பூசல், மோதல், வர்மம், பகை, அநீதி போன்றவைகள் சகோதரத்துவம், சமத்துவத்திற்கு எதிராகச் செயல்படுகின்றன. முறைமையுடையவரே ஞானியாவார். அறநெறி வாழ்வு மனிதனை அமைதிக்கும் மகிழ்வுக்கும் இட்டுச் செல்லும். எனவே நன்னடத்தை மனிதனுக்கு முக்கியம். நன்னடத்தையாகக் கீழ்ப்படிதல் (நீமொ 6:20-23) அடக்கமுடைமை, நாவடக்கம் (நீமொ 13:3; 17:27) புலனடக்கம் (நீமொ 16:32) முதலியவற்றை ஞான நூற்கள் முன் வைக்கின்றன. இதற்கு உதவுபவள் நல்ல மனைவி (நீமொ 5:15-23; 31:10-31; சீஞா 26:1-27). நன்னடத்தையாக ஈகை (11:25); கனிவு (11:16); ஊக்கமுடைமை (12:24); கட்டுப்பாடு (13:24); மன அமைதி (14:30) போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

7. தீய நடத்தை

தீமை தீங்கை விளைவிக்கும். தீயவர்கள் தங்களையும் சமுதாயத்தையும் சீர்குலைப்பவர்கள். தீய செயல்களாக ஞானநூல் விபசாரம் (நீமொ 5:1-23; 6:20-

7:27) மது அருந்துதல் (நீமொ 23:29-35; 31:25-31). சோம்பல் (நீமொ 6:6-11; சீஞா 22:1-2) சினம் (சீஞா 7:28-30; நீமொ 29:22) புறணி (நீமொ 18:8; 25:9-10; சீஞா 28:13-16); கோபம் (நீமொ 19:17,29,30), அகந்தை (நீமொ 16:18) முதலியவற்றைக் குறிப்பிடுகிறது.

ஞானத்திற்கு எதிரிடையான மதிகேடும் சீமாட்டிபோல் வந்து இளைஞர்களைத் தீய நடத்தையிலும், பரத்தைமையிலும் இட்டுச் செல்கிறாள் (நீமொ 9:13-18; 7:6-27). இவர்கள் சாவையே கண்டடைவர் (நீமொ 17:19; 12:28; சாஞா 1:12).

8. வினைப்பயன் கோட்பாடு

மனிதன் முதிர்ந்தவன். தானே தீர்மானித்துச் செயல்படும் அனைத்திற்கும் அவன் பொறுப்பேற்க வேண்டும். அதற்கு அவனுக்கு உரிமையுண்டு. இவ்வாறுதான் அவன் "தினை விதைப்பவன் தினையை அறுபான்; தன் வினை தன்னைச் சுடும், தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற பழமொழிகளை முன்வைத்தான்.

இதன் அடிப்படையில் தோன்றியதுதான் "வினைக் கோட்பாட்டுக் கொள்கை." இக்கொள்கை நன்மை செய்தவர்க்குச் சன்மானம் கிடைக்கும், தீமை செய்தவர்க்குத் தண்டனை கிடைக்கும் என்கிறது. இதையே ஞான நூல்களும் கூறுகின்றன (காண். நீமொ 11:19 10:21 14:14 22:28 26:7 யோபு 4:7-9 8:11-22). துன்பத்திற்குக் காரணம் பாவமே (யோபு 3:3). ஞானியர்களும் இறைவாக்கினர்களும் இந்த நம்பிக்கை கணிதத் தன்மை கொண்டது, பிறழாது, பிசகாதது என நம்பினர்.

ஆனால் அன்றாட வாழ்வு அனுபவம் வேறுபாடாக உள்ளது. நீதிமான் துன்புறுவது அநீதன் செழித்தோங்குவது ஞானிகளுக்குப் புதிராக உள்ளது. நல்லாரின் அகால மரணம், துன்பம் கேள்விகளை எழுப்பியது (எரே 12:1; அபா 1:13; யோபு 3:26; திபா 73:3-5). யாவே மனிதக் கட்டுபாட்டிற்கு மறைந்திருப்பதுபோல இப்புதிர் மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாலிருக்கிறது,

நீதியும் இரக்கமும் இவ்வுலகிலே வாழ்ந்து அனுபவிக்க வேண்டும். ஆனால் அது உண்மையாகவில்லை (யோபு, சபை உரையாளர்). நல்லோர் துன்பம்

அடைதல் ஆண்டவர் அவர்களுக்கு அளிக்கும் பயிற்சி; ஏனெனில் ஆண்டவர் தாம் நேசிப்பவரைக் கண்டிக்கிறார் (நீமொ 3:11-12) என்பது சரியான பதிலைத் தரவில்லை. இக்கோட்பாட்டின் தோல்வி 'அழியாமை' கோட்பாட்டிற்கு வழிவகுத்தது (திபா 15:11; 48:72). சாலமோனின் ஞானம் இக்கருத்தை முன் வைக்கிறது (சாஞா 2:23; 3ஆம் அதிகாரம்).

9. இறப்பு

ஞானிகளுக்கு இறப்பு என்பது உடலைவிட்டு உயிர் பிரியும் நிலையைக் குறிக்கவில்லை; மாறாக நல்லபடியாக நிறைவாக வாழ்ந்து முடிந்த நிலையை உணர்த்தும். அறிவிலிகள் உயிர் வாழ்ந்தாலும் இறந்தவர்களே (சாஞா 2:1-5; 3:17 4:18-19).

ஞானிகள் கருத்துப்படி சாவு இயல்பானது. மனிதன் ஒருநாள் சாவை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இவ்வுடல் அழியும். அவனது வாழ்நாள் குறைந்ததே (திபா 90:10). இறந்தபின் 'ஷெயோல்' என்ற கீழுலகிற்குச் செல்கிறான் மனிதன் என யூதர்கள் நம்பினர் (யோபு 10:21-22; 7:7-18).

ஞானியர்கள் சாவைக் கண்டு அஞ்சவுமில்லை, அதிர்ச்சியடையவுமில்லை. தூயோர் சாவும் தொந்தரவு தரவில்லை (சாஞா 3:10-19; 21:1-5; 4:18-19).

ஞானிகளின் பிரச்சினை நல்லவர்கள் துன்புறுவது, கொடிய வன்முறைக்கு உள்ளாவது, கொல்லப்படுவது (சாஞா 2). நல்லவர் நீண்ட காலம் மனைவியோடு வாழ்ந்து குழந்தைகள் ஈந்து முதுமையடைந்து இயல்பாக இறக்காது குறைந்த வயதிலே இறந்துவிடுவது புதிராக இருந்தது (யோபு 42:16-17: சஉ 3:19-29: சாஞா 1-5).

இவ்வுலக வாழ்வையே வளப்படுத்திய ஞானியர் மறுமை வாழ்வில் சிறிது சிறிதாக நம்பிக்கை கொண்டனர். நல்லவன் என்றும் வாழ்வான் என்று நம்ப ஆரம்பித்தனர் (சாஞா 1:12-15; 2:13-14; 3:1-9; 4:7-16; 5:1-7,15,16; சீஞா 48:11; யோபு 19:25-27). உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கை அரும்பியிருக்கவில்லை.

10. ஆசிரியர்

ஞானநூல்களின் ஆசிரியர் சாலமோன் அரசர் எனப் பொதுவாகக் கூறுவர். ஞான நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன (நீமொ 1:1; 10:1; 25:10; சஉ 1:1,12; 2:26; சாஞா 8:9-15; 9:7-8).

இனிமைமிகு பாடலின் ஆசிரியர் சாலமோன் என்பர். திருமுறை சார நூல்களான சாலமோனின் திருப்பாடல்கள், சாலமோனின் எழுச்சிப் பாடல்கள் இவரை ஆசிரியராகக் கொண்டுள்ளன என்பர். நீதிநூல்கள் என்றாலே சாலமோன்தான் அனைவரின் நினைவுக்கு வருகிறார்.

11. காரணங்கள்

1. தாவீது தன் மகனின் ஞானத்திற்காக இறைவேண்டல் செய்கிறார் (1குறி 22:12).
2. ஞானத்தோடு நடந்து கெள்ள அறிவுரை தருகிறார் (1அர 2:6)
3. அ) சாலமோன் ஞானத்தை விரும்பினார்; அதற்காக வேண்டல் செய்தார், ஞானம் நிறைவாக அருளப்பட்டது (1அர 3:5-14; 4:29-34; 5:12; 2குறி 1:7-12; 2:12 (சாஞா 7-9). ஞானத்தைத் துணையாகக் கொண்டார் (சாஞா 8:2,9). ஒரு பிள்ளை இருதாய்மார்கள் நிகழ்வு (1அர 3:16-28). அவர் ஒட்டுமொத்தத்தில் ஞானத்தின் இருப்பிடம், நடமாடும் பல்கலைக் கழகம் எனலாம்.

   ஆ) பிறநாடு: சேபா நாட்டு இளவரசி சாலமோனின் ஞானத்தைக் கேட்க அவரைத் தேடி வந்தார் (1அர 10:1-10; 2குறி 9:1-8; 2குறி 11:31). மண்ணுலக மாந்தர் அனைவரும் மன்னன் சாலமோன் ஞானத்தைக் கேட்க ஓடோடியும் வந்தனர் (2குறி 1:22-23; 1அர 10:23-24; சீஞா 47:12-17).

இ) சாலமோன் தனது அரசவையைப் பல்வேறு அறிஞர்கள், அலுவலர்கள் அதிகாரிகளால் அலங்கரித்தார் (1அர 4:1-19). எகிப்திய ஆட்சி முறையைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. பயிற்றுவிக்கப் பள்ளிகளை நிறுவினார் (நீமொ 25:1). இவர் காலத்தில் அரசவை ஞானம் சிறப்புற்று விளங்கிற்று. ஞான

நூல்களும் இவருடைய பெயரை ஆசிரியரென முன்மொழிகிறது (1:1). இவரை ஞான இலக்கியத்தின் புரவலர் என்றும் நீதி இலக்கியத்தின் ஆசான் என்றும் ஞான மரபின் காவலர் என்றும் கூறுவர்.

இருப்பினும், சாலமோன் இஸ்ரயேலை ஆண்ட காலம் கி.மு. 961-922 வரை. இக்காலத்தில் நீதி நூல்கள் எழுதி முடிக்கப்படவில்லை. அவை கி.மு. முதல் நூற்றாண்டு வரையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் நீதி நூலிலுள்ள கருத்துகள் காலத்தால் பிந்தியவை. இவைகள் வாய்மொழியாக இருந்து - பாபிலோனிலிருந்து திரும்பிய பின்னரே எழுத்து வடிவம் பெற்றன. ஞான இலக்கியத்திலுள்ள இறையியல் ஞானம் காலத்தால் மிகப் பிந்தியது. எனவே சாலமோன் நீதி நூல்களை எழுதியிருக்க முடியாது என்பர்.

நீதிமொழிகளின் சேர்க்கைகளில் சில, வேறு சில ஆசிரியர்களால் எழுதப்பட்டவை (30:1; 31:1). மேலும் இந்த நீதிமொழிகள் சாலமோனுடையவை எனக் கூற மற்ற ஆதாரங்களில்லை.

சீராக்கின் ஞானம் தவிர மற்ற நீதி நூல்கள் அனைத்தும் இன்னொரு ஆசிரியர் சாலமோன் பெயரால் எழுதியதெனலாம்.

ஐநூலுக்கு மோசே
திருப்பாக்களுக்கு தாவீது
நீதி நூல்களுக்குச் சாலமோன் ஆசிரியர் என்பது மரபுச் சிந்தனை.

நீதிமொழிகள்

முன்னுரை

ஞானிகள் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்த, கண்ட, கேட்ட, சிந்தித்த நல்ல கருத்துகளை மக்களுக்குக் கருவூலமாக விட்டுச் சென்றனர். இவைகள் ஞான நூல்களெனக் கருதப்பட்டன. ஞான நூல்கள் பல இலக்கிய வகைகளைக் கையாளுகின்றன. எபிரேயம் இதை 'மஷால்' என அழைக்கிறது. மஷால் என்பதை 1. ஞானம் பற்றிய நீதிமொழிகள் என்றும், 2. ஞானம் பற்றிய விரிவுரைகள் என்றும் கூறலாம். நீதிமொழிகளில் ஒரு நாட்டின் அறிவு நுட்பத்தையும் புலமையையும் ஆன்மாவையும் கண்டு கொள்ளலாம் (பிரான்சிஸ் பேகன்).

1. மஷால்

இச்சொல்லைப் பொதுவாகப் பழமொழி என்று மொழிபெயர்க்கலாம். எனினும் இது ஞானப் பழமொழிக்கு உரிய ஆழ்ந்த பொருளைத் தருவதில்லை. இச்சொல்லின் மூலச்சொல் என்ன என்பது விவாதத்துக்குரியது. எனினும் இதற்கு இரு பொருள் கூறுவர். முதலில் மஷால் என்றால் 'ஆளுதல்' எனலாம். இதை எபிரேய வினைச் சொல்லாகக் கொண்டு இப்படிக் கூறுவர். அப்படியெனில் இதை ஆற்றல் வாய்ந்த சொல் அல்லது அதிகாரப்பூர்வமான கூற்று எனலாம்.

இரண்டாவதாக இதை 'போலிருத்தல்' (அரேபிய வேர்ச்சொல்லில் இருந்து) என்று பொருள் கொள்ளலாம். இது ஒப்புமையைக் காட்டுகிறது. எனவே இதை உவமை, பழமொழி எனவும் கொள்ளலாம். அறிஞர்கள் யாரும் இதன் 'துல்லியமான' பொருளை எடுத்துக் கூறவில்லை.

பழமொழி, கருத்தை வெளிப்படையாகக் கூறுவதில்லை. அறிஞர்கள் பலர் ஆளுதலைவிட, பழமொழி என்ற பொருளையே முன் வைக்கின்றனர். ஏனெனில் ஒப்புமை, அல்லது ஒத்துப் பார்த்தல் பழமொழியின் இன்றியமையாக் கூறு.

2. ஞானம் பற்றிய நீதிமொழிகள்

மேலும் 'மஷால்' என்னும் இலக்கிய வகைக்குள் பல துணை இலக்கியங்கள் உள்ளன. சான்றாகப் பொன்மொழி (11:22), பழமொழி (10:6) ஒப்புமை (26:11), உருவகம் (5:15-16). உவமை (நீமொ 25:4-5), விடுகதை (25:14) புதிர் (சஉ 12:1-7), முரண்தொடை (11:24 13:24), எண்ணிக்கைக் கூற்று (30:21-34; சீஞா 25:1-2) முதலியவைகளைக் கூறலாம். இவை ஒன்றொடு ஒன்று தொடர்பு உடையவை. இவைகளை ஞானம் பற்றிய நீதிமொழிகள் எனலாம்.

3. ஞானம் பற்றிய விரிவுரைகள்

இந்த இலக்கிய வகையில் ஞானம் தன் வரலாற்றைக் கூறுகிறது (நீமொ 7:6-27; 24:30-34); வரலாற்றின் வழி பாடம் கற்பிக்கிறது (சாஞா 10:19; சீஞா 44:50), மேலும் மன்றாட்டு (சாஞா 9:1-28). புகழ்பா (சீஞா 42:15-43), புலம்பல் (யோபு 4:6-7), அறிவுரை (யோபு 8:22; 27:13-23), உரையாடல் (யோபு 3-31). தொடர்வாதம் (யோபு 28; 36:27; 40:15 - 41:26) முதலியன இவற்றுள் அடங்கும்.

மேலும் ஞானப் பழமொழிகள் அறிவித்தல், எச்சரிக்கை வழி தங்கள் கருத்தைத் தருகின்றன. 1) அறிவித்தலில் (14:10; 10:5) வாழ்வனுபவம் கூறப்படுகிறது. படிப்பினை இல்லை. அது உன்னைத் தட்டி எழுப்புகிறது. நீ தான் முடிவு எடுக்க வேண்டும். 2) எச்சரித்தலில் (14:17): சான்றாக, 'மடையனை விட்டு அகன்று போ' எனும் எச்சரிக்கை கற்பிப்பதற்கல்ல, மாறாக வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்க உதவுகின்றது

4. நீதிமொழிகளின் சிறப்பியல்புகள்

1. அவை குறைந்த வார்த்தைகளில் ஆழ்ந்த அனுபவங்களையும் உண்மையையும் கூறுகின்றன. அவைகளில் ஓர் இனத்தின், மரபின் பெருமையைக் காணலாம் (திருக்குறள்).

2. நீதிமொழிகளின் செழுமை அதன் குறுகிய தன்மையே.
3. மொழியின் செழுமை புலப்படுகிறது. வேண்டியதை அழுத்தமாகச் சொல்லி விடுகிறது.
5. நீதிமொழிகள் உண்மையை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.
6. இவை இரு காலங்களை இணைக்கின்றன; மனிதனையும் இயற்கையையும் இணைக்கின்றன.
7. இவற்றில் மனித மதிப்பீடுகள் விஞ்சி வாழ்கின்றன.
8. இவை மனித ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், மதிப்பீடுகள், மொழியமைப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.
9. இவற்றில் வாழ்பனுபவங்கள் பரிசோதிக்கப்படுகின்றன.
10. இவற்றில் பழங்காலத்தில் பேணி வளர்த்த மதிப்பீடுகளைக் கண்டுபிடிக்கலாம்.

5. சூழல்

இஸ்ரயேல் மக்கள் நாடுகடத்தப்பட்ட பிறகு (கி.மு. 587) அகதிகளாகப் பாபிலோனில் வாழ்க்கை நடத்தலாயினர். அங்கே அவர்கள் குழப்பத்தோடு தெளிவற்ற நிலையில் சிக்கித் தவித்தனர். தங்களது முகவரி இழந்த நிலையில் தங்களது இனம், தனித் தன்மை மறுந்துவிடுமோ என அஞ்சினர். ஆதரிக்கவேண்டிய அரசர்கள் இப்போது இல்லை. தாவீதின் அரசு மறைந்தது. கோவில், வழிபாடு இல்லை. பாபிலோனியர், பாரசீகர், கிரேக்கர்கள் இறுதியில் உரோமையருக்குப் பயந்து வாழ்ந்தனர். ஆட்சிகள் மாறினும் சுதந்திரம் கிடைக்கவில்லை. மெசியா பற்றிய நம்பிக்கை குறையத் தொடங்கியது. வழிபாடு பொருளற்றதுபோல் ஆனது. இறைவாக்கினர் இல்லை. இந்நிலையில் மக்கள் தங்களைப் பற்றிச் சிந்தித்தனர். எனவே தங்கள் இனத்தைக் கண்டுகொள்ள அதைத் தூக்கி நிலைநிறுத்தச் சில செயல்பாடுகளைப் பல்வேறு குழுக்கள் செய்ய முனைந்தன. நீதிமொழிகள் அத்தகையவைகளில் ஒன்று.

பல்வேறு ஆட்சிகள் அவர்களுக்குப் பல்வேறு துன்பங்களைக் கொணர்ந்தன. அநீதி, ஏய்த்தல், ஏமாற்றுதல், ஊழல், பொருளாதாரச் சிக்கல்கள்

கட்டவிழ்த்துவிடப்பட்ட சிங்கம்போல் கர்ஜித்தன. மக்கள் அல்லல்பட்டு அங்கலாய்த்தனர். பொருளாதார நிலைமை குழப்பத்தையும் நம்பிக்கையற்ற நிலையையும் உருவாக்கியது. ஏழைகளை வஞ்சித்து செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தைப் பெருக்கினர். அது ஓர் இருள்படிந்த காலம்.

இச்சமயம் ஞானிகள் தோன்றி நல்லுரை தந்தனர். எப்படி மகிழ்வாயிருக்கலாம். பேரும் புகழோடும் எப்படி வாழலாம் என்ற விதி முறைகளைக் கூற முனைந்தனர். ஞானிகள், அனுபவசாலிகள் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தொடலாயினர். வாழ்வை அனுபவத்தின் வழியாகப் பார்த்தனர். ஞானம் மிக மதிப்புள்ளது.

உலகம் தன்னுள் ஓர் இசைவைக் கொண்டுள்ளது. மனிதன் அதற்கேற்ப தனது நடத்தையை, வாழ்வைத் தனது ஆற்றலின் உதவியோடு சரிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஞானிகள் மனித சுதந்திரத்தை மதித்தனர் (16:7,22-24). எனினும் யாவே உண்மைக் கடவுள். இஸ்ரயேலர் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். அவர் திருவுளத்திற்கு மக்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற நம்பிக்கையும் வளர்ந்தது. ஞானிகளால் “கடவுளை நம்புவதும் தம்மையே நம்புவதும்” (தன்னம்பிக்கை) வலியுறுத்தப்பட்டன.

இரு கொள்கைகளுக்கும் ஊற்று கடவுளே. ஞான இலக்கியத்தில் இந்த இரண்டுக்கும் முரண்பாடு இல்லை என்பதைக் காட்டவேண்டும்.

மக்கள் குருக்களிடமிருந்தும் இறைவாக்கினர்களிடமிருந்தும் ஞானிகளிடமிருந்தும் கற்றுக் கொண்டனர்.

நல்ல நடத்தை, சமய உணர்வுகள் இரண்டும் கலந்தன.

13:14 – ஞானமுள்ளவரது அறிவுரை வாழ்வளிக்கும் ஊற்று

14:27 – ஆண்டவரின் அச்சம் வாழ்வளிக்கும் ஊற்று

9:10 – ஆண்டவரின் அச்சம் வாழ்வளிக்கும் ஊற்று

இவ்வாறு ஞான இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியைக் காண முடிகிறது.

மனித முயற்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் ஞானிகள் முன்னுரிமை தர முயன்றாலும் அவர்களது இறைநம்பிக்கை அவைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடுகிறது. ஆழ்ந்த இறைநம்பிக்கையுடையோர் ஞான அறிவுரை

தருகின்றனர். இறையச்சமும் மனித ஞானமும் முரண்படாமல் இரண்டும் புதிய கண்ணோட்டத்தை முன்வைக்கின்றன.

6. இறையச்சம்

இறையச்சம் என்னும் கருப்பொருள் விவிலியத்தில் முக்கியமாக நீதிமொழிகளில் மைய இடம் பெறுகிறது. இதை நீமொ 1:7யிலும் 9:10யிலும் காணலாம். இறையச்சம் புத்தகத்திற்கு ஒரு முடிச்சுப் போடுகிறது. மர்பி இதை 1:7இல் துவங்கி 31:30இல் நிறைவு பெறுவதாகக் காண்கிறார். விவிலியம் முழுவதும் பரிணமிக்கிறது. இறைவனுக்கு முன்னால் நிற்கும் மனிதனின் அடிப்படை உணர்வு இது அல்லது மனநிலை இறையச்சம் எனலாம்.

இறையச்சத்தைச் சீனாய்மலை பின்புலத்தில் பார்க்கலாம். சீனாய் மலையில் தோன்றும் ஆண்டவர் அச்சம் தரும் நிகழ்வுகள் வழியாகக் காட்சியளிக்கிறார் (விப 19:16; 20:15-18). கடவுளைக் கண்டபின் மனிதன் வாழ இயலாது (விப 33:20).

கடவுள் தூயவர்

தூயவர் என்பவர் அப்பாற்பட்டவர், வேறானவர், அவரது தோற்றம் அச்சத்தைத் தரும் (எசா 6). இவ்வாறு கடவுள் முன்னால் தூய்மையற்ற மனிதன் அச்சத்தோடு வாழ வேண்டும் என்ற கருத்துத் தோன்றியது.

மேலும் கடவுளின் உடன்படிக்கை அன்புக்குத் தகுதியுடையோராய் வாழும் கருத்தைக் காணமுடிகிறது. அதேபோல தீமையை விலக்கி இறைவனை அன்புசெய்வது கடவுளின் கட்டளைகளைக் கடைபிடித்து வாழ்வதைக் குறித்தது.

இவ்வாறு கடவுளுக்குப் பணிந்து வாழ்வது ஞானத்தைப் பெறவும் அதில் முதிர்ச்சி பெறவும் உதவியாயுள்ளது என்பதை ஞான நூல்கள் பதிவு செய்கின்றன (நீமொ 1:7; 9:10; 15:33; யோபு 28:28; திபா 111:10). இறையச்சம் ஞானத்தின் துவக்கமே என்பதை ஆராய்கையில் இஸ்ரயேலர் ஞானத்தையும் அறிவையும் இறைவனோடு தொடர்புபடுத்திச் சிந்தித்தனர்; தங்களது மிகப் பெரிய சொத்தாகவும் கருதினர். கடவுளைப் பற்றிய அறிவும் அறிவுபற்றிய ஒரு கோட்பாட்டைக் கொண்டுள்ளது என்பது புலப்படுகிறது.

பிராய்ஸ் (Preuss) என்பவரின் கருத்துப்படி இறையச்சம் எல்லா ஞான இலக்கியங்களிலும் இடம்பெறுகிறது. அது இஸ்ரயேலருக்கு மட்டும் உரியதல்ல. அது

ஒரு பெரிய ஆழம் காணவியலாக் கடவுள் அஞ்சத்தக்கவரே; அனைத்தும்படைத்த, ஆற்றலுடைய கடவுள் அஞ்சத் தகுந்தவரே, மக்கள் அவருக்கு அஞ்சவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துகிறது.

எனினும், இறையச்சம் மற்ற ஞான இலக்கியங்களில் காணப்படுவதைவிட இஸ்ரயேல் ஞான இலக்கியத்திற்கு மையமாக உள்ளது. நீதி 1:7இல் துவங்கும் இக்கருத்து பல நிலைகளைத் தாண்டி இறுதியிலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது (31:30). இறையச்சம் வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது (8:35).

இறையச்சம்: இதன் பொருள்

இறையச்சத்தை விளக்குகையில் அறிஞர்கள் மிக ஆழமாக ஆராய்ந்து அதை விளக்குகின்றனர்.

மக்கள் ஞானம் துவக்கத்தில் சமயத்தோடு தொடர்பின்றி இருந்தது. பின்பு (ஞானம்) நீதிமொழிகள் புதிய கண்ணோட்டத்தில் அலசப்பட்டன. இறையச்சம் இறையியல் ஞானத்தின் ஒளியில் இன்னொரு பரிமாணம் பெறுகிறது. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் மிக நல்லது. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஞானத்தின் தொடக்கம் (1:7; 9:10; 15:33).

இதை ஞானியரும், இறையடியார்களும் கற்றுத் தேர்ந்தவர்களும் நமக்குக் கருவூலமாக விட்டுச் சென்றிருக்கின்றனர். அதைச் சிறிது நோக்குவோம்.

6.1. இறையச்சம் குறிக்கும் சொல்கள்

யிராத் என்ற சொல் இறையச்சத்தைக் குறிக்கிறது. கிரேக்கத்தில் இதை யுசேபெய்யா என்று மொழிபெயர்த்தனர். இதற்கு மதிப்பு, பக்தி மரியாதை, சங்கை (எசா 11:2) என்று பொருள் கொள்ளலாம். கிரேக்கத்தில் போபோஸ் என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது (1:7).

இன்னும் எபிரேயத்தில் பகத் (யோபு 3:11). அய்மா (தொநூ 15:2) என்னும் சொல்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றையும் போபோஸ் என்றே கிரேக்கத்தில் மொழிபெயர்த்தனர். மேலும் தெய்லியா என்னும் கிரேக்கச் சொல் பயம், அச்சம், நடுக்கம், கோழைத்தனம் என்ற பொருள்களைச் சுட்டுகிறது.

6.2. இறையச்சம் குறிப்பதென்ன?

'யிராத் யாவே' என்பது யூத மதத்தைக் குறிக்கப் பயன்பட்டது. நாடுகடத்தப்பட்ட பின்பு தாயகம் திரும்பிய யூத மதத்தைச் சார்ந்தவர்களை இவ்வாறு

அழைத்தனர். 'யிராத் யாவே' என்பதை அச்சத்திற்குரிய மறைபொருள் என்ற கோணத்தில் பார்க்க வேண்டும். இறை அச்சத்தை மதிப்பு, பக்தி, மரியாதை என்ற சொற்களில் மட்டும் விளக்கிட இயலாது.

அதை அச்சம் என்ற சொல்லாலும் தெளிவுபடுத்திட இயலாது. இதை யூதச் சமயப் பின்புலத்தில் பார்க்க வேண்டும். யூதச் சமயம் கடவுளை முழுமையாக அன்பு செய்யப் பணிக்கும் சமயம். இணைச்சட்டம் "உன் முழு இதயத்தோடும். உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும்" கடவுளை அன்பு செய்ய வேண்டுகிறது (6:4-5).

எனவே கடவுளை அன்பு செய்யும் இவ்வன்பு முழுமையான அன்பாக இருக்க வேண்டும். இந்த அன்பில் அச்சம் எப்போதும் கலந்தேயிருக்கும். அன்பை விளக்கும்போது இவை இரண்டும் கலந்தே வருகின்றன (காண். இச 6:2,13; 10:25,28; எரே 32:9). முழுமையான அன்பு முழுச் சரணாகதியைக் காட்டுகிறது.

முழுமையான அன்பில் உள்ள அழுத்தமும் ஆழமும் இணைந்த இப்பொருளில்தான் 'ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஞானத்தின் தொடக்கம்' என்று விவிலியம் பகர்கிறது (காண். யோபு 28:28; திபா 111:10).

அடுத்து, இறையச்சம் என்பது ஆண்டவரை அன்புடன் ஏற்று வழிபடுவது. அவருக்கு விருப்பமில்லாததைத் தவிர்ப்பது. தீமையின் நடுவே வாழ்வதால் பக்தியை, அன்பை, உண்மை உறவைக் குலைத்துவிடுவோமோ என்ற அச்சம் அடியாரை ஆட்கொள்கிறது. அன்பில் குறைந்ததுவிடுவோமோ என்று அடியாருக்கு அச்சம் என்றும் உளது.

உண்மையன்புடையோர்க்கு அறநெறி பிறழ்வோமோ, ஆண்டவரை எதிர்ப்போமோ, தீமையோடு சமரசம் செய்து விடுவோமோ என்ற அச்சம் வந்து விடுகிறது (திப 51:6-15). எனவே அச்சத்தைப் பயபக்தி எனலாம். இதுவும் குறைபாடுடையதே.

7. இறையச்சம் தரும் பயன்

ஆண்டவரோடு உள்ள உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதை நீதிமொழி எடுத்துரைக்கின்றது (3:5-12; 10:27-32; 14:26-27).

அ) முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு

ஆ) சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே

இ) ஆண்டவரை மனத்தில் வை

ஈ) செருக்கு வேண்டாம்

உ) தீமையை அறவே விலக்கு

இதைக் கடைபிடித்தொழுகினால் இறையச்சம் ஞானத்தின் தொடக்கமாக, முதல் விதியாக, சாரமாக, அடித்தளமாக மணி முடியாக விளங்கும் (சீஞா 1:11-21 யோபு 1:1-5). இதை இன்னொரு விதத்தில் ஆணவம் (அவித்யா) அகன்ற நிலை எனலாம். செருக்குடையோர் எதையும் தெரிந்துகொள்ள விளையார். ஞானம் அவர்களிடம் செல்லாது. இதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட அறிஞர் போன் ராட். "கடவுள்மீது மனிதர் கொள்ளும் சரியான மனநிலையைப் பொறுத்தே (சரியான உறவைப் பொறுத்தே) ஞானம் வாழும், இல்லையேல் வீழும்" என்கிறார்.

8. படைப்பு இறையியல்

"ஆளுருப்படுத்துதல்" விவிலிய உலகுக்குப் புதிதல்ல. இறைவனின் நீதி இஸ்ரயேலர் முன் செல்லும் (எசா 58:8) நீதியும் அமைதியும் முத்தமிடும், கனிவும் உண்மையும் சந்திக்கும் (திபா 8:11; மேலும் திபா 89:1; 97:2; 96:9).

நீமொ 20:1 திராட்சை இரசமும் போதை தரும் பானமும் குழப்பமூட்டும் நபர்களாகச் சித்தரிக்கப்படுகின்றன. திராட்சை இரசத்திற்குக் கண்கள் உண்டு (நீமொ 23:31). ஆளுருப்படுத்துதல் இலக்கியத்திற்கு மெருகூட்டுகிறது. ஞானத்தையும் 'ஆள்' வடிவத்தில் ஆசிரியர்கள் சித்தரிக்கின்றனர். ஞானநூல்களில் ஞானம் கடவுளாக இல்லை; ஆனால் அது கடவுளின் வெளிப்பாடாக அல்லது ஊடகமாகக் காட்டப்படுகின்றது.

இயற்கை ஞானத்தை நீதி நூல்கள் பெண்ணாக, சீமாட்டியாக ஆளுருப்படுத்துகின்றன. ஞானத்தின் வழியாக இறைவெளிப்பாடு அருளப்படுகின்றது. மனிதர் அதனை ஏற்று வழி நடந்தால் பயனுண்டு (நீநூ 1:20-33; 8:1-9:6; சாஞா 6:12-9:18; சீஞா 24:22; யோபு 28). கடவுள் இரு நூல்கள் எழுதினார்: ஒன்று இயற்கை, மற்றொன்று திருநூல். ஞானநூல் இயற்கையில் மறைந்துள்ள இறைவனைத் தியானிக்கிறது. ஞானநூலில் ஞானத்தின் செயல்பாடுகளும் பண்புகளும் விரவி வருகின்றன. தம் செயல்பாடுகளின் வழியாக

ஞானம் பெண்ணாக அல்லது சீமாட்டியாகக் கருதப்படுகிறாள். அவளது பண்புகள் வழியாக படைப்பு இறையியலைக் காண்கிறோம். விவிலிய இறையியலும் படைப்பு இறையியலும் முரண்பாடு உள்ளவையல்ல; மாறாக ஒன்றையொன்று நிறைவு செய்பவை.

8.1. ஞானம் அழைப்பு விடுக்கிறது

ஞானம் பொது இடங்களில், மக்கள் கூடுகின்ற இடங்களில் நின்று அழைப்பு விடுக்கிறது (8:2,3; 1:20-33; 9:3). அது தனது செய்தியில் உண்மையையும் (emet), நேர்மையையும் (sedeq) வலியுறுத்துகின்றது (8:7). ஆனால் தீய பெண் சாவுக்கு வழிகாட்டுகின்றாள்; அவளது வழிகள் இறப்பிற்கு இட்டுச் செல்கின்றன (2:16); அவ்வழிகள் மாறிக்கொண்டேயிருக்கும்; தேனொழுகும் அவருடைய வார்த்தைகள் கூரான வாள் வெட்டுதுலை ஒத்ததாய் இருக்கும் (5:3-6).

உண்மையும் நேர்மையும் இறைவனின் பண்புகள். ஞானம் தரும் அறிவுரை விலை மதிப்பற்றது (8:10-11). ஞானம் பசும் பொன்னைவிட, பவளத்தைவிட மேலானது (8:10-11). ஞானமுடையவர். கடவுள் அச்சத்தை உணர்வர்; கடவுள் அறிவைப் பெறுவர் (2:4-6; 3:12-14; சாஞா 7:8; 8:15).

8.2. படைப்பில் ஞானம்

ஞானம் கூறும் இறையியல் படைப்பு இறையியலாகும். இறைவன் உலகைப் படைக்கையில் ஞானம் சிறந்த பங்காற்றுவது பற்றி நீதிமொழி பேசுகிறது (8:22-31). படைப்பின் துவக்கத்திலேயே ஞானம் உள்ளது.

அ. ஞானம் முதலில் படைக்கப்பட்டது (8:22); முதலில் பிறந்தது (8:25-26).

ஆ. படைப்பின்போது கடவுளோடு இருந்தது (8:27-28).

இ. ஞானம் சிற்பியாயிருந்தது (30). அது படைப்பை வடிவமைக்க அற்புதத் திட்டம் தீட்டிக்கொடுப்பதைப் பார்க்கிறோம்.

ஈ. கடவுளுக்கு மகிழ்ச்சியூட்டியது (30). ஒரு நல்ல தோழியாக இருந்து ஆண்டவரின் அன்பை நனவாக்கியது (30).

உ. மனிதரோடு இருப்பதிலும் மகிழ்ச்சியாயிருந்தது (8:31). கடவுளது பண்பான ஞானம் அனைத்துப் படைப்புக்கும் முன்னாலுள்ளது.

ஊ. ஞானம் கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் படைப்புக்குமிடையே பாலமாக உள்ளது (சீஞா 24:1-22 சாஞா 7:22-37). இது கடவுளின்

வாயினின்று வெளிவந்தது (சீஞா 24:3). இது "உண்டாகட்டும் என்றார்; உண்டானது" என்ற படைப்பிலக்கியத்தை நினைவூட்டுகிறது (தொநூ 1,2), உன்னதரின் மன்றத்தில் பேசுகிறது (சாஞா 24:2).

8. 3. ஞானத்தைக் கண்டடைவோர் வாழ்வடைவர் (8:35)

ஞானம் வாழ்வு போன்றது. ஞானம் பெறுபவருக்கு ஆண்டவரின் கருணை கிடைக்கும் (18:35). சாஞா 18:22இல் நல்ல மனைவியை அடைவோர் நலமடைவர்; ஆண்டவரது நல்லாசியைப் பெறுவர். இதை ஞானக் கூற்று 8:35தோடு ஒப்பிடலாம் (காண் 31:10; 3:13). வாழ்வு அருள்பவர் கடவுள். அவரே அதன் ஊற்று. ஞானம் அதை நல்க முடிந்ததெனில் அது கடவுளைப் போல் உள்ளது எனலாம்.

இயேசு 'நானே வாழ்வு' என்றார். 'என்னை நம்புவோருக்கு நிலைவாழ்வு கிடைக்கும்' என்றார் (காண். யோவா 11:25; 6:54); ஞானத்தை இயேசுவின் முன்னடையாளமாகக் காணலாம்.

8. 4. பெண்ணாக உருவகிக்கப்படும் ஞானம் இறைவார்த்தை போல் செயல்படுகிறது (1:20-33)

ஞானம் என்னும் பெண், மக்களை குறிப்பாக இளைஞர்களைத் தனக்குச் செவிமடுக்க அழைக்கிறாள். அரசர் ஆட்சி செலுத்துவது, ஆட்சியாளர் சட்டம் இயற்றுவது அவளால்தான் (8:15); நீதித்தலைவர்கள் உண்மைத் தீர்ப்பு வழங்குவதும் அவளால்தான் (8:16). அவள் ஒரு கலைஞராக, சிற்பியாகக் கடவுளுக்குப் பணியாற்றுவது அவருக்கு மகிழ்ச்சியூட்டுகிறது.

நீதிமொழிகளில் தீய பெண்கள்: நீதிமொழிகள் ஞானச் சீமாட்டியைத் தவிர மடமைப் பெண் (9:13-18), நெறிதவறியவள் (இஸ்ஸா சாரா), மணமாகாதவள் (5:15-19), விலைமகள் (நோக்ரியா) (2:16-19; 5:1-14,20; 6:24-32). போன்றவர்களையும் பற்றிப் பேசுகின்றன. இவர்களை அறிமுகம் இல்லா மாது எனும்போது வேறு நாட்டவரா அல்லது இஸ்ரயேலரிலிருந்தே அறிமுகம் அற்றவரா என்ற கேள்வி எழும்புகிறது.

மக்கனே, ஸ்னிடர்ஸ் என்னும் அறிஞர்கள் இவர்கள் இஸ்ரயேல் இனத்திலிருந்தே புறந்தள்ளப்பட்டவர்கள் என்கின்றனர்.

இதை ஏற்கும்போது - இப்பெண் தன் இனத்திடமிருந்து உறவை அறுத்துக்கொண்டதால் அதில் நுழைய இயலாது தவிக்கிறாள், அதற்காக எதையும்

செய்யத் துணிகிறாள். அவள் சமூகத்திலிருந்து நீக்கிவைக்கப்பட்டவள். (எனவே அவளது வாழ்வின் வழிமுறைகள் அதைப் பொறுத்து அமைகின்றன). நோக்ரியா, இஸ்ஸா சாரா என்ற வார்த்தைகள் தள்ளிவைக்கப்பட்டவளையே குறிக்கின்றன. எனவே அவள் நம்பிக்கை இழக்கிறாள். அவளுக்குப் பாதுகாப்பில்லை, மதிப்பும் இல்லை. அவள் சமய, சமூக விதிகளை, சட்டங்கள், பாரம்பரியங்களைத் தூக்கி எறிகிறாள்.

இதனால் இளைஞர்களுக்கு அவள் கண்ணி வைக்கிறாள். ஒரு சிலர் பார்வையில் நோக்ரியா என்றால் கணவனை விட்டுப் பிரிந்து வேறு நகரத்தில் வாழ்பவள். அதிகம் பேரை அவளுக்குத் தெரியாது. இவள் குடும்ப, குல, சமூக விதிகளை மதிப்பதில்லை. அவள் தன் விருப்பம்போல் இழிவான வழிகளில் நடக்கிறாள். அவள் எந்த விதிகளையும் மதிப்பதில்லை. மனிதர்களுக்கு அவள் ஒரு கவர்ச்சியான புரியவியலாப் பெண். பெண்களும் அவளை கற்பு நெறி இல்லாதவள் எனக் கருதினர். அவளது கவர்ச்சிக்கு விழாதோர் அரிது. அவள் எதையும் எதிர்ப்பாள்; தனது ஆசையை நிறைவு செய்ய விருப்பம்போல் நடப்பாள்.

மணந்த கணவனைக் கைவிட்டவள். அல்லூப் என்றால் நண்பன், தோழன் – கணவன் எனலாம். அவள் கணவனைக் கைவிட்ட காரணத்தால் திருமணத்தின் அருமை பெருமைகளைக் கைவிட்டாள். சமூகத்தில் கட்டிக்காக்கப்பட்ட மதிப்பீடுகளையும் கடவுளிடம் செய்த உடன்படிக்கையையும் துச்சமென தூக்கி எறிகிறாள். கடவுள் திருமண நிகழ்வுகளுக்கு சாட்சி. மேலும் இவள் வேற்றுப் பெண். எனவே யாவே இவளது கடவுளில்லை. மாறாக வேறு கடவுளைக் கொண்டிருக்கிறாள். இவள் தேவதாசி எனக் கூறும் பிற இனத்து இனப்பெருக்க ஆச்சாரங்களுக்கு உட்பட்டவள் (நீமொ 7:5).

வேற்றினத்துப் பெண் – இவள் காதல் கடவுள் இஸ்தாரை வழிபடுபவள். எனவே விபசாரிபோல் இங்கு வாழ்வது ஒரு வழிபாட்டுச் செயல், இனப்பெருக்க வழிபாட்டுச் செயல். இவ்வாறு இவள் சமயச் சடங்குகளை நிறைவேற்றியதாகக் கருதலாம். வேறுதெய்வங்களை வழிபடுவது, வழிபாடுகளில் பங்கேற்பது கண்டிக்கத் தக்கது. சிலைவழிபாடு இஸ்ரயேலருக்குப் பெரும் துரோகச் செயல். எனவே விபசாரத்தைவிட இந்த இனப் பெருக்க வழிபாட்டில் தனது தூய்மையை வேற்றினத்தாரிடம் பறிகொடுத்துவிட்டவள் இப்பெண். ஒட்டுமொத்தமாகப்

பார்க்கையில் இந்தப் பெண் விபசாரம் செய்பவள், விலைமகள், தேவதாசியாகப் பிற இனத்து வழிபாட்டுத் தலங்களில் ஈடுபடுபவள்.

8.5. ஏழை – செல்வந்தன் ஒரு கண்ணோட்டம்

ஞான இலக்கியம் செல்வந்தர்களின் செல்வம் கடவுளின் ஆசீர் என்கின்றது. அப்படியெனில் ஏழைகளின் நிலை என்ன? ஏழைகளைக் குறிக்க பல சொற்கள் உள்ளன. ஆனால் ஒரே ஒரு சொல் மட்டும் செல்வந்தரைக் குறிக்கிறது.

செல்வரும் ஏழைகளும் கடவுளின் படைப்பு (14:31 17:5 22:2). எனவே ஏழைகளை ஏளனம் செய்வது கூடாது, அது கடவுளை நிந்திப்பதாகும். ஞான இலக்கியம் சமூக அவலங்களை இறைவாக்கினர் நூல்கள்போல் கண்டிக்கவில்லை. ஏனெனில் அது ஞானத்தின் வழிமுறையல்ல. ஆனால் மற்ற நல்ல கண்ணோட்டங்கள் உண்டு.

ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர்
ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்.
அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார் (19:17)

கடவுள் ஏழைகளுக்காக வாதாடுவார். அவர் உயிரைப் பாதுகாக்கத் துடிப்பவர்; உயிரை வாங்கப் பார்க்கிறவர்களின் உயிரை அவர் பறித்துக் கொள்வார் (22:23) எனும் போது கடவுள் கோயேல் (மீட்பர்) ஆகிறார். அவர் ஏழைகளையும் அனாதைகளையும் மீட்பார் (23:11). அடுத்திருப்பாரை இகழ்பவர் பாவி எனக் கருதப்படுவார் (14:21); ஆனால் ஏழைகளுக்கு இரங்குபவர் இன்பம் துய்ப்பர். ஏழைகளுக்குக் கொடுப்பவருக்குக் குறைவில்லை. அவர்களைக் கண்டு கொள்ளாதோர் சாபத்துக்குள்ளாவார் (28:29) இவை ஞானிகள் எவ்வாறு வறுமையையும் ஏழைகளையும் கண் நோக்கினர் என்பதைக் காட்டுகின்றன.

மேலும் ‘தீய வழியில் சம்பாதிக்கும் பெரும் பொருளைவிட நேர்மையோடு ஈட்டும் சிறு தொகையே மேல்’ (16:8).

தீயவருக்கு எதிர்காலமில்லை (11:28; 24:28) ஆனால் நேர்மையாளருக்கு நிலை மாறும். நீதி சாவிலிருந்து விடுவிக்கும் (10:2; 11:4). நன்மை கண்டிப்பாக வெல்லும் (28:6,18). என்ற கூற்றுகள் ஏழைகள் மீது ஞானிகளுக்கு உள்ள கரிசனையைக் காட்டுகின்றன.

செல்வம் கடவுளின் கொடை என்பதை நீதிமொழி எடுத்துக்காட்டுகிறது. 3:1-10; திபா 37 இவ்வுலகில் செல்வம் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்கின்றன.

ஏழை கெஞ்சிக் கேட்பார்;
செல்வரோ கடுகடுப்புடன் மறுமொழி கொடுப்பார் (18:23)
செல்வர் ஏழையை அடக்கி ஆளுவர்
கடன்பட்டவர் கடன் கொடுத்தவருக்கு அடிமை (22:7)
செல்வர்களுக்கு நண்பர்கள் நிறைய உண்டு (14:28; 19:4)
ஏழைகளை இகழ்ச்சியோடு பார்ப்பார் (19:7)

ஏழைகளுக்கு இழப்பதற்கோ, பிறர் அவரால் இலாபம் அடைவதற்கோ ஏதுமில்லை. இந்த அவல நிலை எப்போதும் நிலவுகிறது. செல்வருக்கு அவர்களது சொத்து அரண்; ஏழைகளின் வறுமை இன்றும் அவர்களை வறியோராக்கும்.

இதில் சரியா தப்பா என்பது கூறப்படாவிடினும்
'வலிமை வாய்ந்த நகரம் (18:11) அடுத்தக் கூற்றில்
இன்னுமொரு பொருளைப் பெறுகிறது. அதில் உயர்ந்த
மதிற்சுவர் இருந்தாலும் 'யாவே' தான் நீதிமான்களின்
மிகப் பெரிய கோபுரம். எனவே செல்வந்தரும் இறுதியில்
கடவுளிடம்தான் தஞ்சம் புகவேண்டும்.'

9. செல்வம் எப்படி வந்தது?

(1) அவர்களது கடின உழைப்பு, விவேகம், நேரிய வாழ்வு இவற்றால் செல்வம் வருகிறது. இருப்பினும் நல்வழியில் சம்பாதிக்கப்பட்டதா? என்பதை ஆய்கின்றனர். திடிரெனச் செல்வந்தரானால் அதைக் கேள்விக்குள்ளாக்கினர். தவறாக வந்த செல்வம் சீக்கிரம் சென்றுவிடும் (13:11). செல்வங்களுக்கு இறக்கைகள் உண்டு. அவை பறந்து சென்றுவிடும் (23:4-5). நேர்மையாகச் செல்வம் சேர்க்க வேண்டும்; பேராசை கூடாது.

உடனடி செல்வந்தனாவது தண்டனைக்கு உள்ளாக்கும் (28:206). தீய வழியில் சேர்த்த செல்வம் பயன்தராது (18:2அ).

(2) கையூட்டு வாங்குவது (20:14) பல தாக்கங்களை ஏற்படுத்தும். கைக்கூலி கொடுப்பவர் அதனால் வரும் பலனை அனுபவிக்கிறார் (17:18).

(3) வேண்டுதலில்: ஆகூரின் சொற்கள் ஒரு நம்பிக்கையும் ஆழ்ந்த பற்றுறுதியும் உள்ள செபமாக இருக்கிறது. "வஞ்சனையும் பொய்யும் என்னைவிட்டு அகலட்டும். வறுமை வேண்டாம், செல்வமும் வேண்டாம்; தேவையான உணவு மட்டும் போதும்" என்று ஆகூர் வேண்டுகிறார் (நீமொ 30:8). இதைப்போல் ஓர் உன்னத வேண்டுதலைக் காண்பதரிது. மிகப் பெரிய வறுமையும், அதிக செல்வமும் பல நெருக்கடிகளையும் ஆபத்தையும் தருவதை வெளிப்படையாகக் கூறுகிறார் நூலாசிரியர்.

செல்வத்தை கடவுளின் ஆசீர்வாதமாக நீதிமொழி நூல் பார்க்கிறது. எனினும் அது ஏற்புடைய முறையில் இருக்கவேண்டும் என வலியுறுத்துகிறது.

10. நீதிமொழிகளின் எல்லை

இஸ்ரயேலரின் ஞானிகள் தங்கள் நம்பிக்கையில் உறுதியாய் இருந்தனர். ஞானிகளின் படிப்பினையின்படி நடந்தால் செல்வம், அமைதி, வெற்றி, ஆசிர் அனைத்தும் கைகூடும் என்று கற்றுத் தந்தனர்.

ஆனால் கட்டுப்பாடோடு நடப்பினும் சிலவை புதிராகவே உள்ளன. சான்றாக நீமொ 3:11-12 கடவுள் யாரிடம் அன்பு கொண்டிருக்கின்றாரோ அவர்களைக் கண்டிக்கிறார் என்பது புரிந்து கொள்ளக் கடினமாய் இருக்கிறது.

பின்பு வந்த மாணாக்கர்களும் இந்தப் புதிரை ஆராய முற்படுகின்றனர் (சபை உரையாளர்); நீதிமொழிகளில் கூறப்படுபவை சரிதானா என்று கேள்வி எழுப்புகின்றனர்.

மனிதச் செயல்பாடுகளும் கடவுள் செயல்பாடுகளும் மறையுண்மைகள் நிறைந்தவையாய் உள்ளன. மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றனர். ஆனால் அதில் அவரை வழிநடத்துபவரோ ஆண்டவர் (16:9), காண் எரே 10:23.

'ஆண்டவரின் எதிரில் நிற்கக்கூடிய ஞானமில்லை, அறிவுரையுமில்லை' (21:30). மேலும் ஆகூரின் மொழிகளில் அவர் தனது அறியாமையை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். இவர் தன்னை மதிகேடன், கற்றுணராதவன்

என்கிறார் (30:2-3). இவையனைத்தும் நீதிமொழிகளின் உறுதியற்ற தன்மையை உரைக்கின்றன.

சில நீதிமொழிகள் வாழ்வின் இயலாமைகளை, அதில் மறைந்திருக்கும் உறுதியற்ற நிலையைப் பற்றிப் பேசுகின்றன. ஞானிகளுக்கு இவை எட்டாக்கனிகளாகவே உள்ளன என்பது தெளிவாகிறது.

எப்போது அமைதிகாப்பது எப்போது பேசுவது என்பதும் சர்ச்சையாகவே உள்ளது. ஒரு மனிதன் பேசாதிருந்தால் அவனிடம் பேச ஒன்றும் இல்லாததாலா அல்லது நல்ல, சரியான கருத்தை வெளிப்படுத்த முடியாது என்பதாலா? (காண். 17:24-28) என்பது தெளிவில்லை.

மேலும் மடையரின் கேள்விக்குப் பதில் தரலாமா? (26:4-5) என்பதற்கும் திட்டவட்டமாகப் பதில்சொல்ல இயலா நிலையைப் பார்க்கிறோம். இருப்பினும் பல நீதிமொழிகள் தங்கள் அறிவுரைகளை அழுத்தமாகவும் அதிகாரப்பூர்வமாகவும் எடுத்துக் கூறுகின்றன. எனினும் அவைகள் முடிவல்ல. அவை தூண்டுதல் தரவும் இன்னும் தொடர்ந்து சிந்தனை செய்யவும் சபை உரையாளர் கூறுவதுபோன்று (12:11) உதவுகின்றன.

நீதி நூல்களின் பல கூற்றுகள் நம் வாழ்வை வளப்படுத்துவதாகவும், நம் சிந்தனைகளைத் தூண்டுவதாகவும் உள்ளன என்பதை மறுக்கவியலாது. எனினும் உண்மையை ஓரளவுக்குத்தான் அவை எடுத்தியம்புகின்றன. 'தயங்குபவன் தன்னை இழப்பான்', 'குதிப்பதற்குமுன் பார்' போன்ற கூற்றுகள் நல்லவைதான். அவை பாதியளவு உண்மையைத்தான் கொண்டுள்ளன. அவற்றை நிறைவு செய்ய இன்னுமொரு கூற்றை எழுதவேண்டும்.

மேலும் வள்ளுவர் முயற்சி பற்றி "தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்" (619) என்கிறார். முயன்று தலைவிதியை மாற்றுபவர் உண்டு; ஆனால் முயன்று தோற்பவரும் உண்டே. மனித ஞானத்தைப் போற்றுகிறோம்; ஆனால் அதற்கும் ஓர் எல்லை உண்டு.

விளக்கவுரை

1. நூலின் நோக்கம் (1:1–9:18)

1.1. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் (1:1–7)

1:1 தாவீதின் மகனும் இஸ்ரயேலின் அரசனுமாகிய சாலமோனின் நீதி மொழிகள். 2 இவற்றைப் படிப்பவர் ஞானமும் நற்பயிற்சியும் பெறுவர்; ஆழ்ந்த கருத்தடங்கிய நன்மொழிகளை உணர்ந்து கொள்வர்; 3 நீதி, நியாயம், நேர்மை நிறைந்த விவேக வாழ்க்கையில் பயிற்சி பெறுவர்; 4 அறிவற்றோர் கூரறிவு பெறுவர்; இளைஞர் அறிவும் விவேகமும் அடைவர். 5 ஞானமுள்ளோர் இவற்றைக் கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர்; விவேகிகள் அறிவுரை கூறும் திறமை பெறுவர்; 6 நீதிமொழிகளையும் உவமைகளையும் ஞானிகளின் நன்மொழிகளையும் புதிர் மொழிகளையும் அவர்கள் உய்த்துணர்வர். 7 ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்; ஞானத்தையும் நற்பயிற்சியையும் மூடரே அவமதிப்பர்.

பின்புலம்

இஸ்ரயேலரின் ஞான நூல்களில் அண்டை நாடுகளில் காணப்பட்ட ஞான நூல்களின் தாக்கங்கள் உண்டு. எனினும் அவர்கள் கடவுளை நம்பியவர்கள். எனவே திருச்சட்டங்கள், இறைவாக்கு நூல்களின் பாதிப்பையும் அங்குக் காணமுடிகிறது. எனினும் ஞானிகள் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட நூல்களையும் வாழ்வில் கண்ட அனுபவங்களையும் கோர்த்து ஒரு புதிய வடிவம் தருகின்றனர். இந்த ஞானத்தில் யூத இளைஞர்கள் புலமை பெறவேண்டும் என ஞானிகள் விரும்புகின்றனர். திருச்சட்ட நூல்களைப் போற்றி, அதில் புலமை பெற்று, அதை உள்ளத்திலும் நாவிலும் வைத்துக்கொள்; உன் பிள்ளைகளுக்கு கற்பி; எல்லா இடத்திலும் அவற்றை வைத்துக்கொள் என்று இணைச் சட்டம் 6:6–9 கூறுவதுபோல் ஞானத்தில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற ஞான ஆசிரியர் அழைக்கிறார். மேலும் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் இஸ்ரயேலரின் நம்பிக்கையின் சாரமாக மாறிவிடுகிறது.

சொல்பொருள்

1 – நீதி மொழிகள் நூலின் தலைப்பு ஏற்கனவே உள்ள இரண்டு கோப்புகளின் தலைப்புகளை (10:1; 25:1) தழுவி எழுதப்பட்டுள்ளது. சாலமோன் ஞான இலக்கியத்தின் புரவலர் என்பதைப் பாரம்பரியமும் விவிலியமும் எடுத்துரைக்கின்றன.

சாலமோனின் நீதிமொழிகள்: சாலமோனின் ஞானம் பற்றிய குறிப்புகளை முதல் அரசர் நூலில் காணலாம். தனது ஞானத்தால் நீதியுடன் ஆண்டவருடனும் (3:9,16-28; 10:9), பிற நாடுகளுடனும் நல்லுறவு வைத்துக்கொள்ளச் சாலமோனால் முடிந்தது (5:7,12), அவர் இயற்கையை, உலகை நன்கு அறிந்திருந்தார் (4:33), ஆயிரக்கணக்கான நீதிமொழிகளும் பாடல்களும் புனைந்திருந்தார். இவரது ஞானத்தின் மேன்மை பற்றிய கூற்றை 1அர 4:30-34இல் காணலாம்.

சேபா நாட்டு அரசி "உமது ஞானத்தில் பாதிகூட எனக்குச் சொல்லப்படவில்லை" (1அர 10:7) என்கிறார். இது சாலமோனின் ஞானத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. சாலமோனைவிட மேலானவர் இங்குள்ளார் என இயேசு கூறுவதை நோக்கவும் (மத் 12:42; மேலும் காண் 1:18-30). எனினும் சாலமோன் அனைத்து நீதிமொழி நூலுக்கும் உந்துதலாயிருக்கலாம். ஆனால் ஆசிரியராய் இருக்க முடியாது. கீழை நாடுகளில் மிகைப்படுத்தும் கூற்றுகள் அதிகம் உண்டு. இதை இங்கு நினைவு கூரலாம். சாலமோன் ஞானத்தின் தாக்கம் வாழையடி வாழையாக யூதப் பாரம்பரியத்தில் இழையோடி அரசர்கள் காலத்தில் அது வளர்ச்சி பெற்றிருந்தது.

2 – நூலைத் தொகுத்த ஆசிரியர் தன் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். இவர் இளைஞர்களின் சிந்தனையைத் தட்டி எழுப்பவும் அவர்களுக்கு அறநெறி வழியில் பயிற்சியளிக்கவும் விரும்புகிறார். அத்தோடல்லாமல் படித்தவர்களும் பயனடைய விரும்பினார். இப்பகுதி எகிப்து நூலிலுள்ள ஞான இலக்கியத்தின் முன்னுரை போல் உள்ளது.

எகிப்து ஞானநூல் கற்றோருக்கும் ஆட்சியாளருக்கும் கூறப்படுவதாக உள்ளது. ஆனால் நீதிமொழிகளின் ஆசிரியரோ பலரைத் தன் கண்முன் வைக்கிறார். செல்வந்தர்களின் குழந்தைகளுக்குப் பயிற்சியும் கல்வியும் பெறுவதற்கு நேரமும் காசும் உண்டு; எனினும், யூத இளைஞர்கள், சாதாரண

மக்கள் அனைவருக்கும் இப்பயிற்சி வேண்டும் என ஆசிரியர் விரும்புகிறார். அறிவற்றோரும் இதில் அடங்குவர் (வச 4). விருப்பமுடையவர் அனைவரும் பயிலலாம்.

ஞானம், நற்பயிற்சி, நன்மொழிகளை உணர்தல்: இச்சொற்கள் பழைய ஞான இலக்கியத்தை நினைவுபடுத்துகின்றன. இவைகளைப் பெற மிகுந்த பயிற்சியும் முயற்சியும் தேவை. புத்தியைக் கூர்மைப்படுத்திக் கட்டுப்பாட்டுடன் முனைந்து செயல்படுவதால் இதைப் பெற முடியும்.

கற்பித்தலின் நோக்கமே 'ஞானம்,' பெறுவது. ஞானம் சிந்தனையைக் காட்டிலும் அனுபவத்திற்கு மதிப்பளிக்கிறது. விப 35:30-35 பெட்சலேல், ஒகொலியாப் இவர்களின் பல்வகைத் திறன்கள் ஞானமாகக் கருதப்படுகின்றன. பல திறமைகளை ஞானம் குறித்தாலும் நீதிமொழிகள் அமைதியான, மகிழ்ச்சியான, புகழ்நிறைந்த வாழ்வை ஞானத்தின் பலனாகக் காண்கிறது. எதை சாதித்துப் புகழ்பெற்றாலும் வாழ்க்கையில் வெற்றிபெறவில்லையெனில் என்ன பயன்? வாழ்வைத் திறமையுடன் கையாளும் திறனை ஞானம் எனலாம்.

அ. ஞானம்பெற: குருநாதரின் துணை தேவை. மாணாக்கர்களின் பணிவு மிகமிக அவசியம். பழங்காலத்தில் குருநாதர்களும் பெற்றோராக இருந்தனர், கற்றுத்தந்தனர் (வச 8). இங்கே சமய அதிகாரமல்ல, பெற்றோர்களே இயல்பான அதிகாரம் கொண்டிருந்தனர். இந்த அதிகாரத்தை இவர்களுக்குத் தங்களது வளமான வாழ்க்கை அனுபவம் தந்தது.

குருநாதர்கள் தலைமுறைகள் வழியாகப் பெற்ற நுண் கருத்துகளை வடிகட்டிப் புதிய வார்ப்புகளில் வார்த்து மாணாக்கர்களுக்கு அளித்தனர்.

ஆ. நற்பயிற்சி: முசார் என்ற எபிரேய வார்த்தை ஞானத்தைப் பெற மேற்கொள்ளும் வழியைக் குறிக்கிறது. இது ஞானப் பள்ளிக் கூடத்தில் பெறும் பயிற்சி. இதைப் பள்ளியிலோ, குருவிடமோ, பெற்றோரிடமோ கற்றுக் கொள்ளலாம். மாணாக்கர்கள் அனுபவத்திலிருந்தும் முதியோரின், ஞானிகளின் அறிவுரையிலிருந்தும் கற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும் இவ்வார்த்தை ஞானத்தைப் பெறுவதால் வரும் பலனைச் சுட்டுகிறது, கட்டுப்பாடான வாழ்வு மகிழ்வான வாழ்வு வாழத் துணை செய்கிறது. அறிவுரையும் கடிந்துரையும் கற்பிப்பதற்கு உகந்தவை என எபிரேயர் கருதினர் (13:24; 22:15). தன்னை வென்றவனே வாழ்விலும் வெற்றிபெறுவான்.

இ. உணர்ந்து கொள்ளல்: ஞான இலக்கியத்தில் புரிதலும் உற்றுணர்தலும் ஒரே பொருளை உணர்த்தும். இவை நெருக்கமானவை. ஞானத்தோடு தொடர்புடையவை (காண். நீமொ 2:2-3).

ஞானி புரிந்துகொள்பவர் (1:5), நல்லதற்கும் தீயதற்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டுணர்பவர் (1அர 3:9). ஞானம் நல்லதிலிருந்து தீயதை உய்த்துணரும் திறன் கொண்டது. அது நல்லதைத் தேர்ந்தெடுக்கும். ஞானம் நல்லது எது என அறிதல், மேலும் கடவுளின் பண்புகளை, குணநலன்களைச் செயல்பாடுகளைக் கூர்ந்து நோக்குதல், கூரிய அறிவோடு குருநாதர்களின் வார்த்தைகளை அல்லது கூற்றுகளை ஆய்ந்தறிதல், இத்தோடு உலகம் எப்படிச் செயல்படுகிறது, சமூகம் எப்படி நீதியோடு, நேர்மையாகச் செயல்படுகிறது என்பதை உணர்தல் போன்றவற்றை இக்கூற்றுக் குறிக்கிறது.

3 - நீதி, நியாயம், நேர்மை: இவைகள் யாவே கடவுள் மனிதனிடமிருந்து எதிர்பார்க்கும் அறநெறிகள். ஞானம் கற்கும் மாணாக்கர்களிடமிருந்து இவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 'விவேகமும் வாழ்க்கையில் பயிற்சியும்' ஆள்வோருக்கும் நீதியரசர்களுக்கும் உரியவை. அவர்கள் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் தீர விசாரித்து முடிவெடுக்க வேண்டும் (யோபு 34:34-37; நீமொ 21:16; எரே 3:15; தானி 1:17-21; 9:13). நேர்மை ஆள்வோருக்கும் நீதிசெலுத்துவோருக்கும் தேவை. சமூக மேம்பாட்டுக்காக இது சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது (8:15-16; 25:5; 31:9).

நீதி வழங்குதல்: சமநிலை தவறாது செயல்படுதல் நீதியரசருக்கு அழகு. நீதி வழங்க இது தேவை. ஞானத்திற்கும் விவிலியத்தின் மையக் கருத்தான நீதிக்கும் உள்ள நெருக்கம் மிக ஆழமானது. இறைவாக்கினர்களும் இதை வலியுத்துகின்றனர்.

4 - அறிவற்றோர் கூரறிவு பெறுவர்: நீதிமொழி நூலில் இது சிறப்பான திறமையைக் குறிக்கும். இதை விவேகம் என்றும் கொள்ளலாம். நீதி நல்ல முடிவெடுக்கவும் ஞானத்தோடு நியாயமாகப் பேசவும், நல்ல தீர்ப்பளிக்கவும் உதவுகிறது. மடமைக்கு இங்கு இடமில்லை. தொடக்கநூல் பாம்பின் சூழ்ச்சியைச் சிறந்த திறமை என்கிறது 3:1. விவேகம் நன்மைக்கோ தீமைக்கோ நம்மை இட்டுச் செல்லலாம்.

அறிவும் விவேகமும்: அறிவு ("மேசிம்மா") என்ற எபிரேயச் சொல்லுக்கு நுணுகி ஆய்வது, நடுநிலையானது எனப் பொருள்கொள்ளலாம். அறிவும்

(மேசிம்ம) விவேகமும் (ஒர்மா) இணைந்து வருகையில் அவை இழிந்த பொருளையும் சுட்டக்கூடும்.

கற்பித்தல் எப்போதும் முதிர்ந்த மனப்பான்மையை வளர்க்கிறது. அது நயமாகப் பேசுதல், நல்ல தீர்ப்பு வழங்குதல், மதிப்புக்குரிய ஒரு மனிதனை உருவாக்குதல், உலகில் வெற்றியோடு வாழ, மகிழ்வோடு வாழ உதவுதல் போன்றவற்றைச் சுட்டுகிறது.

இளைஞர்கள்: இளைஞரின் குறைபாடு அனுபவமின்மை அல்லது குறைந்த அனுபவம். எளிதில் இவர்களை ஏமாற்றிவிடலாம் (14:15). அதே நேரம் ஞானம் பெற ஏதுவான மனது இவர்களிடம் உண்டு. இளைஞர்கள் காலந் தாழ்த்தாது கற்றல் ஏற்புடையது (1:20-22; 8:1-5).

5 - ஞானமுள்ளோர்... தேர்ச்சியடைவர்; விவேகிகள் திறமை பெறுவர்: பயிலும் காலத்தில் மாணாக்கரிடமிருந்து குருநாதர் படைப்பாற்றலை எதிர்பார்பதில்லை. தேர்ச்சியடைவது வெறும் மனப்பாடம் செய்வதையும் குறிக்கவில்லை. எந்த மனிதனும் காலம் காலமாகப் பாரம்பரியத்தில் சேர்க்கப்பட்ட ஞானத்தில் மூழ்கிவிடுகிறான். இதனால் பாரம்பரியத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன. இந்த ஞானம் அவனில் ஒன்றாகிவிடுகிறது. இது அவனை எந்த மனிதனாக விரும்புகிறானோ அப்படிச் செதுக்கிவிடுகிறது. அவனில் கட்டுப்பாடு, சிறந்த மனநிலை, தீர்ப்பளிக்கும் திறன் மேலோங்குகின்றன.

6 - நீதிமொழிகள்... உய்த்துணர்வார்கள்: ஞானிகள் புலமை மிக்கவர்கள். தமது கூற்றுகளைக் குறுகிய அழகிய வடிவமிக்க வகையில் எளிதாக மனனம் செய்யும்படி எழுதுவார்கள்.

நீதிமொழிகள்: கருத்துகளைத் தெளிவாகக் கூறுகின்றன, சுடர்விட்டெரியச் செய்கின்றன, புரியும்படி சொல்கின்றன. ஆனால் புதிர்களும் அவைகளில் உண்டு. புதிர் என்றால் மறைந்திருப்பது, மறைபொருளானது, வெளிப்படையாய் இல்லாதது, எனவே கருத்துகளை முழுமையாக அவை வெளிப்படுத்துவதில்லை. நீதிமொழிகளைப் புரிந்து கொள்ள நல்ல அறிவு தேவை. நீதிமொழிகளைப் புரிந்துகொண்டால் அதன் ஆழமான கருத்துகள் புலப்படும். பல வழிகளில் நீதிமொழி கூற்றுகள் நமக்குத் தரப்படுகின்றன. உவமைகள், புதிர்மொழிகள் வாயிலாக ஞானிகள் நீதிமொழிகளை எழுதிச் செல்கின்றனர்.

ஒப்புமை செய்து விளக்கும் கூற்றுகள், அனுபவத்தைத் தாங்கிவரும் கூற்றுகள் இங்கு விஞ்சி நிற்கின்றன. இக்கூற்றுகளில் பல எல்லாருக்கும் ஏற்புடையவையாயுள்ளன. எப்படி நடக்கவேண்டும், எந்த மனநிலை வேண்டும் என்பதைக் கூறும் கூற்றுகளும் நீதிமொழிகளில் உள்ளன. கூற்றுகளின் உள் ஆழத்திற்குச் சென்று அதன் பொருளை உய்த்துணர்வது சாலச் சிறந்தது.

7 - ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்: இக்கூற்று ஞான நூல்களில் இழையோடி வருவதைக் காண முடியும் (நீமொ 1:29; 2:15; 9:10; 10:27; 14:26; யோபு 28:28; திபா 34:11; 111:10).

கடவுளச்சம் வெறும் கலக்கமடையச் செய்யும் வலிமையான கடவுளிடம் கொள்ளும் அச்சத்தைக் குறிக்கவில்லை. தூய கடவுள் முன் பாவிகள் அஞ்சி நடுங்கும் ஒரு நிலையையும் சுட்டவில்லை. மாறாகக் கடவுள் நம்மைப் படைத்து, பாதுகாப்பவர். அவரே நமக்கு ஞானத்தைக் கொடையாக அருள்கிறார் என்பதைப் பறைசாற்றுவதாகும். கடவுள் அச்சத்தினால் வரும் ஞானம் மேலானது. உண்மை அச்சம் கடவுளே ஞானத்தின் ஊற்று என்பதைக் கண்டுகொள்வதாகும். நன்கு கற்பதன் வழியாக ஞானம் பெற முயற்சிப்பதும் கடவுளிடம் கொள்ளும் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது.

துவக்கக்கால இஸ்ரயேலரின் ஞானம் சமயச் சார்புடையதாக இல்லை. அது மனிதனைப் பற்றியதாக இருந்தது. பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து திரும்பிய பின்பு சமயச் சாயம் பூசப்பட்டது. கடவுள் ஞானத்தின் மூலமாகக் கருதப்பட்டார்.

இவ்வாக்கை இஸ்ரயேலில் பல பள்ளிகள் தங்கள் விருது வாக்காக நுழை வாயில்களில் எழுதிவைத்தனர். இக்கூற்றில் இரு பரிமாணங்களைக் காணலாம் ஒன்று: கடவுள் தூயவர், கடந்தவர், அப்பாற்பட்டவர். அவரைத் தலைவணங்கி மதிக்கவேண்டும். இதை மோசேயின் எரியும் தணல் நிகழ்வில் காணலாம் (விப 3:6; தொநூ 28:16-17; காண் எசா 8:13).

மற்றொன்று: கடவுளின் உடன்படிக்கையை நம்பி ஏற்று சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, கடவுளை அன்பு செய்து, அவருக்குப் பணிசெய்வதுமாகும். அதாவது அவரது வழியில் வாழ்வது. இணைச் சட்டம் இதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது (இச 6:2; 8:6; 10:12-13; 31:12-13). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூத மதத்தைத்

தழுவிய பிற இனத்தார் 'கடவுள் அச்சம் உடையவர்' என அழைக்கப்பட்டனர் (கொர்னேலியு திப 10:2; காண் சஉ 12:13).

கடவுள் அச்சம்: இது இஸ்ரயேலரின் சமயப்பற்றை, வாழ்வை அதன் முழு வலிமையோடு எடுத்துரைக்கிறது. இது அவர்களின் இதயத் துடிப்பும், இரத்த நாளங்களின் அசைவுமாகும். கடவுளைப் பற்றி நின்று, அவருக்கு மதிப்புத் தருவதும், அவருக்குக் கீழ்படிந்து உண்மையுடையவராய் இருப்பதுமாகும்.

துவக்கம் அல்லது அடித்தளம்: துவக்கம் என்பது வெறுமனே ஆரம்பித்து விட்டுவிடுவதல்ல, மாறாக அடித்தளமிட்டு நிலைத்திருப்பது. அடித்தளத்தை அருமையான பகுதி எனவும் கூறலாம். ஆனால் கட்டிடம் அனைத்தையும் குறிப்பதில்லை. ஞானத்தின் கட்டிடம் மனித உலகு சார்ந்தது. நீதிமொழி அனுபவத்தின் நடைமுறைப் பாடங்களைத் தருகிறது (ஆன்மிகப் பாடங்களைவிட).

வாழ்வில் வெற்றி பெறுவது பற்றி நீதிமொழி கூறுகிறது, வெறும் ஆன்மிக வளர்ச்சியையல்ல. நீதிமொழிகளின் ஞானி இவ்வுலகைச் சார்ந்தவர்; இவர் வாழ்வில் மிகச் சிறந்ததைப் பெற வழிகளைக் காண்பவர்; முழுமையாக வாழத் துடிப்பவர்.

கட்டிடத்திற்கு அடித்தளம் வலிமையுடையதாக இருக்க வேண்டும்; இந்த அடித்தளம் நம்பிக்கையே. ஞானி நம்பிக்கையுடையோராயும் இவ்வுலக மனிதராயும் இருத்தல் வேண்டும். முட்டாள் இவ்வுலகை மட்டும் பார்க்கிறான். கடவுள் அவனுக்கு வெகுதொலைவில் உள்ளார்.

கடவுளுக்குப் பணிதலும் சட்டத்தைக் கடைப்பிடித்தலும் ஞானத்தைப் பெறத் தேவை என்பதை இறைவாக்குப் பாரம்பரியம் வலியுறுத்துகிறது. கடவுளின் அச்சம் என்பது ஞானத்தைப் பெறப் புதிய வழிமுறை. ஞானமும் அறிவும் பெறக் கடும் பயிற்சியும் கற்றலும் தேவை என்பது வலியுறுத்தப்படவில்லை. இங்கே குருநாதருக்குச் செவிமடுப்பதும் முயற்சிகள் மேற்கொண்டு மாணக்கர்கள் பெறும் பாரம்பரிய ஞானமும், அனுபவம் தரும் ஞானமும் கண்டுகொள்ளப்படவில்லை.

இங்குக் கற்பதைவிட கடவுளின் மீது பற்று வலியுறுத்தப்படுகிறது. யாவே தான் ஞானத்தின் மூலம். கடவுளுக்கு அஞ்சாது உண்மை ஞானம் பெறுவது கடினம். சீடர்களுக்குக் கடவுளச்சம் இல்லையெனில் ஞானமில்லை என்பது முன்வைக்கப்படுகிறது.

கெம்சர் என்ற அறிஞர் இங்கே ஒரு சிறிய யுத்தம் நடக்கிறது என்கிறார். இறைவாக்கினர்கள், குருக்கள் கூறும் ஞானத்திற்கும் ஞான ஆசிரியர்கள் கூறும் உலக ஞானத்திற்கும் ஒரு முரண்பாடு இருப்பதைச் சுட்டுகிறார். எனினும் யாவே பாரம்பரியத்திற்கு ஏற்ப இந்த ஞானம் வளைந்து கொடுக்கும் என்பதுதான் உண்மையாகிறது. யாவே அச்சம் ஞானத்தைத் தேட மனிதனை அழைக்கிறது. அதைச் சரியாக மதிக்கத் தூண்டுகிறது. யாவேயின் அச்சம் எனும்போது நிகழ்வது என்ன? அதாவது ஞானத்தை இன்னொரு வகையில் அணுக அது அழைப்புவிடுக்கிறது.

ஏழாவது வசனத்தை 8,9 வசனங்களோடு பார்ப்பதைவிட அதற்கு முன்னால் உள்ள வசனங்களோடு சேர்ப்பது சிறந்தது.

செம்பொருள்

கடவுளிடம் கொள்ளும் அச்சமே ஞானத் தேடலுக்கு அடித்தளமும் ஆணிவேருமாயுள்ளதை ஆசிரியர் விளக்குகிறார். திட்டமிட்டு ஆராய்ந்து கற்கும் கல்வி, தியானச் சிந்தனை அனைத்தும் சமயப் பக்தியோடு தொடர்புடையதாகக் காட்டப்படுகிறது. ஆண்டவரிடம் காட்டும் அச்சம் மிகச் சிறந்த பண்பு. கடவுளே ஞானத்தின் ஊற்றும் உச்சமும் ஆவார்.

ஆசிரியர் இந்தப் பக்தியைப் பின்வரும் தமது படைப்பில் காட்டுகிறார். ஒரு நீதியான கடவுள் உலகைப் படைத்து அதை ஆண்டு பராமரிக்கிறார். அற வாழ்வு ஞானத்தை ஆடையாக அணிவதாலே வாழப்படுகிறது என்ற கருத்தை முன்வைக்கிறார். படைப்பும் ஞானமும் இணைத்தே காட்டப்படுகின்றன. உலகின் வடிவும் எழிலும் ஞானத்தால் வருகிறது. நீதியுள்ள உலகில் மனிதர்களைக் கடவுள் நடமாடவிடுகிறார். கடவுள் மனித வாழ்வுக்கு ஒரு வடிவு கொடுக்கிறார்; அதை மாண்பாலும் உயர்ந்த இலட்சியத்தாலும் அணிசெய்கிறார். இதை மனிதன் பேணிக்காக்க வேண்டுமெனில் ஞானத்தைப் பெறவேண்டும், அதன் நெறிகளைக் கடைபிடிக்க வேண்டும்.

ஞானம் பணக்காரனின் சொத்து மட்டுமல்ல, பாமரனின் சொத்தும் கூட. அதில் பயிற்சி பெறுவது வாழ்வை வளமாக்குவதாகும். சாலமோன் ஞானத்தின் அடையாளமாகவும், அடிமைத்தளைக்குப்பின் இஸ்ரயேலரை ஒன்று சேர்க்கும் ஒரு கருவியாகவும் மாறிவிட்டார்.

1.2. இளைஞருக்கு நல்லுரை (1:8–19)

1:8 பிள்ளாய்! உன் தந்தை தந்த நற்பயிற்சியைக் கடைப்பிடி; உன் தாய் கற்பிப்பதைத் தள்ளிவிடாதே; 9 அவை உன் தலைக்கு அணிமுடி; உன் கழுத்துக்கு மணிமாலை. 10 பிள்ளாய்! தீயவர்கள் உன்னைக் கவர்ச்சியூட்டி இழுப்பார்கள்; நீ அவர்களுடன் போக இணங்காதே. 11 அவர்கள் உன்னைப் பார்த்து, "எங்களோடு வா; பதுங்கியிருந்து எவரையாவது கொல்வோம்; யாராவது ஓர் அப்பாவியை ஒளிந்திருந்து தாக்குவோம்; 12 பாதாளத்தைப்போல் நாம் அவர்களை உயிரோடு விழுங்குவோம்; படுகுழிக்குச் செல்வோரை அது விழுங்குவதுபோல, நாமும் அவர்களை முழுமையாக விழுங்குவோம்; 13 எல்லா வகையான அரும் பொருள்களும் நமக்குக் கிடைக்கும்; கொள்ளையடித்த செல்வத்தால் நம் வீடுகளை நிரப்புவோம். 14 நீ எங்களோடு சேர்ந்துகொள்; எல்லாவற்றிலும் உனக்குச் சம பங்கு கிடைக்கும்" என்றெல்லாம் சொல்வார்கள். 15 பிள்ளாய்! அவர்களோடு சேர்ந்து அவர்கள் வழியில் செல்லாதே; அவர்கள் செல்லும் பாதையில் அடிவைக்காதே; 16 அவர்கள் கால்கள் தீங்கிழைக்கத் துடிக்கின்றன; இரத்தம் சிந்த விரைகின்றன. 17 பறவையைப் பிடிக்க, அதன் கண்முன்னே அன்று, மறைவாகவே கண்ணி வைப்பார்கள். 18 அவர்கள் பதுங்கியிருப்பது அவர்களுக்கே ஊறுவிளைவிக்கும் கண்ணியாகி விடும்; அவர்கள் ஒளிந்து காத்திருப்பது அவர்களையே அழிக்கும் பொறியாகி விடும். 19 தீய முறையில் பணம் சேர்க்கும் அனைவரின் முடிவும் இதுவே; அந்தப் பணம் தன்னை வைத்திருப்போரின் உயிரைக் குடித்துவிடும்.

பின்புலம்

பத்து அறிவுரைகளில் இது (1:8–19) முதலாவது. இங்குப் பெற்றோர்கள் மகனுக்கு ஞானம் பற்றிய அறிவுரையை அளிக்கின்றனர். அறிவுரைகள் 1–9 அதிகாரங்களின் முதுகெலும்பு. இப்பகுதியில் காணப்படும் இலக்கிய வடிவம் அறிவுரை (முசார்). இது நூல் முழுவதும் இழையோடுகிறது. இது ஞானத்தைக் கற்பிப்பதை வலியுறுத்துவதைவிட கட்டுப்பாடுடைய கல்வி மனித பண்பை வடிவமைக்கிறது என்பதை வலியுறுத்துகிறது. கற்றவர் கற்பிக்கும் வேலைக்குச் செல்லலாம். இது தங்களையும் சமூகத்தையும் வளர்ப்பிக்கும்.

சொல்விளக்கம்

8 – பிள்ளைகளுக்குப் பெற்றோரே முதன்மையான ஆசிரியர்கள். குடும்பத்திலே தான் மனிதப் பண்பாடு, நற்பயிற்சி அளிக்கப்படுகிறது. குடும்பம்தான் இவைகளின் அடித்தளம். பெற்றோரிடமிருந்து முறையாகக் கற்பவன் தனது முரட்டுத்தன்மையை விட்டுவிட்டு அறியாமையை அகற்றுகிறான், தனது மென்மைக் கூறுகளை உலகுக்குத் தருகிறான். பெற்றோரின் அறிவுரைகள் குழந்தைகளுக்கு எழிலும் மெருகும் ஊட்டுகின்றன. அவர்கள் பக்குவப்படுகிறார்கள்.

பெர்துவின் கருத்துப்படி: அப்பா, அம்மா, மகன் என்று குடும்ப நபர்கள் கூறப்பட்டாலும் இது ஒரு பள்ளியைச் சுட்டலாம். ஆலயம் சார்ந்த பள்ளி, சமூகக் கல்விக்கூடம், குடும்பங்களில் கற்பிக்கும் ஞானிகள் குழுவாயிருக்கலாம். பள்ளிகளில் குருநாதர் மாணாக்கர் உண்டு. பெற்றோரில்லை. குருநாதர்கள் பெற்றோர்களாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் மணாக்கர்களைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேன்மையுறச் செய்பவர்கள்.

கடைப்பிடி: தமிழில் கடைப்பிடித்தல் என்று கூறப்படுவது சிறப்பான மொழிபெயர்ப்பு. கேட்பதோடு மட்டும் அல்ல, கீழ்ப்படிதலும் இதில் வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு தன்னிறைவைப் பெற்ற மாணாக்கர்களாக இவர்கள் சமூகத்தில் அனுப்படுகிறார்கள். 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது தமிழ்க் கூற்று.

பிள்ளாய்: 'என் மகனே' என்பது அக்காலத்திலுள்ள எல்லா ஞான நூல்களிலும் காணப்படுகிறது (எகிப்து, அசிரியர், பாபிலோனியர், யூதர். சஉ 12:12; தோபி 4:5; சீரா 2:1; 3:1). மகனைப் பயிற்றுவிக்கும் பொறுப்புத் தந்தையுடையது (இச 4:7; நீமொ 4:3-4) காண். தாவீது, சாலமோன்.

9 - தலைக்கு மணிமுடி: இந்த உருவகங்கள் செல்வந்தர் அணியும் அணிகலன்களைக் குறிக்கின்றன. ஆனால் ஞானத்தின் மாண்பு விலையுயர்ந்த பொருள்களால் என்பிக்கப்படுகிறது (வெள்ளி, பொன், ஆபரணம் காண் நீமொ 3:14-15; 8:11,19). இங்குக் கூறப்படுபவை இச 6:4-9 கூறப்படும் இறைச்சட்டம் கையில், நெற்றியில், வாயில் கதவுகளில் தொங்கவிடப்படுவதுபோலுள்ளது.

10 - கவர்ச்சியூட்டி: தீயவர்கள் இளைஞர்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்ய அழைப்பு விடுப்பார்கள். ஆனால் இளைஞர்கள் அதற்கு இணங்கக்கூடாது. ஜெம்சர் என்பவர் 'வன்முறையால் திருடுவதை' இது குறிக்கவில்லை என்கிறார். ஆனால் 11-19 வசனங்கள் இதையே சுட்டிக்காட்டுகின்றன. டாப் என்பவர் பெர்சியர்கள் கிரேக்கர்கள் காலத்தில் எருசலேம் அலெக்சாந்திரியா போன்ற பெரிய நகரங்களில் திட்டமிட்டுக் கொடுமைகள் செய்யும் குழு இருந்தது என்பதை இது எடுத்துரைக்கிறது என்கிறார். ஒருசிலர் இப்படிப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளை சந்தேகிக்கின்றனர் (ஜெம்சர், ரிங்ரென்).

தீயவர்கள்: இவர்கள் தவறுகளை வாடிக்கையாகச் செய்து குற்றம் புரிவதைத் தங்கள் மூச்சாகக் கொண்டவர்கள். இவர்கள் கூலிப்படைகளாகவோ

கொள்ளைக் கும்பலாகவோ இருக்கலாம் (காண் நல்ல சமாரியன் லூக் 10). தீயோரைப் பாவிகள் என்றும் மொழிபெயர்க்கலாம்.

பாவிகள்: இதன் தெளிவான பொருள் 'குறிதவறுவது' (நீமொ 8:36). பொதுவாக மார்க்கங்களைத் தவறுவது, குறிப்பாகத் தெய்வீக மார்க்கங்கள் (சஉ 26), வாழ்வின் சட்டங்களை மீறுவது எனலாம் (11:31) சமூகத்தில் இவர்கள் செய்த தவறுக்குத் தண்டனை அனுபவிப்பர் என்பது விவிலிய நம்பிக்கை (காண் நீமொ 14:21; 13:21).

11 – பதுங்கியிருந்து யாரையாவது தாக்குவோம்: தாக்கப்படுபவர்கள் எந்தத் தவறும் இழைக்காதவர்கள் அவர்களுக்கு எதிராக எந்தக் கோபமும் இல்லை. இவர்கள் கொள்ளைக் கும்பல்களின் திருடவேண்டுமென்ற ஆசைக்குப் பலியாகுவர்கள். சில அறிஞர்கள். (ஜெம்சர்) அக்காலத்திலிருந்த சமூகத் தீமைகளையும் திட்டமிட்டுச் செய்யும் ஊழல்களையும் இவை குறிக்கின்றன என்பர். இதற்கு எதிராக இறைவாக்கினர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

12 – மனிதரைக் கொன்று, கொள்ளையிட்டுத் தங்களது தணியாத ஆசையைத் தீர்க்க வெறிகொண்டு திரியும் இக்கொள்ளையர்களை விழுங்கும் பாதாளத்திற்கும் (ஷெயோல்) படுகுழிக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார் ஆசிரியர். இவற்றின் அடங்காப் பசி உயிருள்ளவரின் சதையை விழுங்குவது. இது அவர்களது இறப்பைக் குறிக்கிறது (காண். யோபு 18:13; எசா 5:14; அப 2:5). கனானேயரின் புராணங்களில் காணப்படும் மோத் (இறப்பின் இளவரசர்) விரிந்த தாடைகளையும் மிக அகலமான தொண்டையையும் உடையது. அடங்காப் பசியுடையது. இது அகப்பட்டவர்களை மிக வேகமாக ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்டுவதைக் குறிக்கிறது.

ஷேயோல்: இறந்தோரின் இல்லிடம், அச்சமூட்டும் இருளடைந்த இடம். பூமியின் ஆழத்தில் உள்ளது (யோபு 10:21-22; 17:13-16; திபா 88:3-12).

13-14 – தீயவழிக்கு இட்டுச்செல்லும் பாதை அகன்றது. தீயவர்கள் இளைஞரை வசப்படுத்தித் தங்கள் வழியில் எளிதாகக் கொணர முடியும் என்று ஆசிரியர் எச்சரிக்கிறார். தீயவர்களின் கவர்ச்சி நிறை வார்த்தைகள் இளைஞருக்கு எழுச்சியூட்டுகிறது (11-12); எளிதில் செல்வம் பெறும் ஆசையைத் தூண்டுகிறது (13); எல்லாவற்றிலும் பங்குகிடைப்பதும் அந்தக் கும்பலுடன் சேர்வதும் சோதனையைத்

தூண்டுகின்றன (14). இளைஞர்களை எளிதில் கவர்ச்சியூட்டி மயக்கவிடும் உபாயங்கள் இவை.

15 – குருநாதர் இளைஞர்களுக்குத் தெளிவான, உறுதியான நெறியைக் கூறுகிறார். தீயோரின் அழைப்புக்கு 'முடியாது' எனக் கூறு என்கிறார். ஏனெனில் தீயவர்கள் தீமை செய்யத் தூண்டுகின்றனர்.அது பெரும் தவறு (16). மேலும் தீயவர்களின் செயலே அவர்களுக்கும் பொறியாகிவிடும் (17-19). குற்றமும் வன்முறையும் செய்தவரைத் தாக்கும். அது தனக்கே வைக்கும் வேட்டு. தீய நண்பன் பாதகக் குழியில் உன்னை விழத்தாட்டுவான். நீ மறைந்து போவாய் என எச்சரிக்கிறார்.

> பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
> பிற்பகல் தாமே வரும் (குறள் 319)

16 - தீய முறையில் சேர்க்கும் பணம். இது பெர்சியர்களின் காலத்திலுள்ள தீயவர்களைக் குறிக்கலாம். இவர்கள் வலிமையற்றவர்களையும் ஏழைகளையும் அரசியல் சமூக அதிகாரங்களைப் பயன்படுத்தி அநீத முறையில் சொத்துகளைக் கவர்ந்தவர்கள் (எசா 10:2; எரே 6:13; 8:8-10), அல்லது திருடுதல், பணமோசடி செய்யும் குற்றவாளிகளைக் குறிக்கலாம் (திபா 10:3), அல்லது போர்வீரர்கள் அல்லது திருட்டுக் கும்பலைச் சார்ந்தவர்களாய் இருக்கலாம். இவர்கள் சண்டையில் கொள்ளையிட்டதைப் பகிரச் சண்டை செய்துகொண்டே இருப்பவர்கள். எனவே எதிர்காலக் குருநாதர்களை இவ்வழிகளில் செல்லவிடாமல் எச்சரிப்பது இதன் நோக்கமாகும். பெர்சியர்களின் அதிகாரத்தை எதிர்த்துப் போராடுபவருக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்கலாம்.

17, 18 – இக்கூற்று சற்றுத் தெளிவில்லாமல் உள்ளது. தீயோர்கள் தாங்கள் வைத்த கண்ணியிலே மடிவார்கள் என்று எளிதாகப் பொருள் கொள்ள முடியும். எனினும் இங்கு இரு விளக்கங்களைக் காண முடியும். முதலாவது. பறவை கண்ணியைக் கண்டதும் தப்பித்துவிடுகின்றது. இது வேடனுக்குத் தோல்வி. இரண்டாவது பறவை கண்ணியைப் பார்த்தும் சிக்கிக் கொள்கிறது. இது தீயோரின் மடமையைக் காட்டுகிறது. மேலும் இந் நீதிமொழி யாருக்குக் கூறப்படுகிறது? இது மகனைக் குறித்ததெனில் எவ்வளவு சதித் திட்டங்கள் தீட்டினாலும் நல்லுரைகளைக் கேட்டு நடந்தால் அவைகள் முறியடிக்கப்படுகின்றன. இல்லையெனில் இது நல்லுரை கேட்கும் மகன் கண்ணியிலிருந்து தப்பிவிடுவதைக் குறிக்கும்.

இது தீயோர் பற்றியதெனில் அவர்களே தங்கள் கண்ணியில் மாண்டு வீழ்வர் என்பதாகும். எந்த அறிவுரையும் பயனற்றதாய் விடும். ஏனெனில் அவர்கள் தங்கள் தீய திட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவர். இது மகனைச் சுட்டமுடியாது. ஏனெனில் அவன் எது வரினும் தப்பிவிடுவான். காரணம் ஞானிகளின் அறிவுரை அவனுக்குத் துணையாயிருக்கும்.

19 – தீய (வழியில்): 'வழி' என்பது 1-9 அதிகாரங்களின் ஒரு சிறப்பான கருப்பொருள். இது பொதுவாகத் தீயவரின் அநீத முறைமைகளையும், அவ்வாறு ஈட்டும் செல்வத்தையும், அதிலே அவர்கள் மாள்வதையும் குறிக்கிறது. வாழ்வும் சாவும் மனிதரால் வடிவமைக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து காணலாம்.

செம்பொருள்

பெற்றோர்கள்தான் பிள்ளைகளுக்கு முதல் ஆசான்கள். அவர்கள் ஞானிகள்போல் பிள்ளைகளுக்கு அறிவுரை தருகின்றனர். அவர்கள் வாழ்வின் சுகங்களை நீதியான, நேர்மையான முறையில் பெற்றுக்கொள்ளப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகின்றனர்.

தீயோரிடம் உறவு வேண்டாம், அவர்களின் தீய வழிகளைப் பின்பற்றவேண்டாம். ஏனெனில் அது பாதாளத்திற்கும் அழிவுக்கும் அவர்களைக் கொண்டு சேர்க்கும்.

நீ அறிவுரையைக் கேட்டால் அனைத்துக் கண்ணிகளிலிருந்தும் தப்பிவிடுவாய். பெற்றோரின் அறிவுரை உனக்கு மகுடமும் மணிமாலையுமாய் அமையும். பெற்றோர் அறிவுரை ஞானத்துக்கு ஈடாகக் கருதப்படுகிறது. ஞானம் என்பது ஆற்றலை, பண்பை, பக்குவத்தைப் பெறல். இதை 'மகன்' தன் செயல்களில் காட்ட வேண்டும்.

1.3. ஞானம் விடுக்கும் அழைப்பு (1:20–33)

1:20 ஞானம் வீதிகளிலிருந்து உரத்துக் கூறுகின்றது; பொதுவிடங்களிலிருந்து குரலெழுப்புகின்றது; 21 பரபரப்பு மிகுந்த தெருக்களிலிருந்து அழைக்கின்றது; நகர வாயிலிலிருந்து முழங்குகின்றது; 22 "பேதையரே, நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் உங்கள் பேதைமையில் உழல்வீர்கள்? இகழ்வார் இன்னும் எவ்வளவு காலம் இகழ்ச்சி செய்வதில் மகிழ்ச்சி காண்பர்? முட்டாள்கள் இன்னும் எவ்வளவு காலம் அறிவை வெறுப்புடன் நோக்குவார்கள்? 23 என் எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்வீர்களானால், நான் என் உள்ளத்திலிருப்பதை உங்களுக்குச் சொல்வேன்; என் செய்தியை உங்களுக்குத் தெரிவிப்பேன்.

24 நான் கூப்பிட்டேன், நீங்களோ செவிசாய்க்க மறுத்தீர்கள்; உங்களை அரவணைக்கக் கையை நீட்டினேன்; எவரும் கவனிக்கவில்லை. 25 என் அறிவுரைகளுள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை; என் எச்சரிக்கை அனைத்தையும் புறக்கணித்தீர்கள். 26 ஆகையால், உங்களுக்கு இடுக்கண் வரும்போது, நான் நகைப்பேன்; உங்களுக்குப் பெருங்கேடு விளையும்போது ஏளனம் செய்வேன். 27 பேரிடர் உங்களைப் புயல் போலத் தாக்கும்போது, இடுக்கண் உங்களைச் சுழற் காற்றென அலைக்கழிக்கும்போது துன்பமும் துயரமும் உங்களைச் சூழ்ந்து கொள்ளும்போது, நான் எள்ளி நகையாடுவேன். 28 அப்பொழுது, நீங்கள் என்னை நோக்கி மன்றாடுவீர்கள்; நான் பதிலளிக்க மாட்டேன். ஆவலோடு என்னை நாடுவீர்கள்; ஆனால் என்னைக் காணமாட்டீர்கள். 29 ஏனெனில், நீங்கள் அறிவை வெறுத்தீர்கள்; ஆண்டவரிடம் அச்சம் கொள்வதில் உங்களுக்கு விருப்பமில்லை 30 நீங்கள் என் அறிவுரையை ஏற்கவில்லை; என் எச்சரிக்கை அனைத்தையும் அவமதித்தீர்கள். 31 நீங்கள் உங்கள் நடத்தையின் பயனைத் துய்ப்பீர்கள்; சூழ்ச்சி செய்து நீங்களே சலித்துப் போவீர்கள். 32 பேதையரின் தவறுகள் அவர்களையே கொன்றுவிடும்; சிறுமதியோரின் தற்பெருமை அவர்களை அழித்துவிடும். 33 எவர் எனக்குச் செவி கொடுக்கின்றாரோ அவர் தீங்கின்றி வாழ்வார்; தீமை வருகையிலும் அச்சமின்றி அவர் மன அமைதியுடன் இருப்பார்."

பின்புலம்

இது ஓர் அறப் பாடல். இப்பாடல் தொகுப்பு நூல் முழுதும் இழையோடும். ஞானம் பெண்ணாக உருவகிக்கப்படுவது இப்பாடலின் மையம், மற்றும் 8,9 அதிகாரங்களின் மையம். இது தெய்வீகப் பண்பாகவும் தேடிக் கண்டடையக் கூடிய பண்பாகவும் குறிப்பாக மாணாக்கரும் குருநாதர்களும் பெறவேண்டிய பண்பாகவும் உள்ளது. உருவகம் விவிலிய உலகுக்குப் புதிதல்ல. எருசலேம் / சீயோன் கடவுளின் புதல்வி (எரே 6:22), இஸ்ரயேல் கடவுளின் மனைவி (எரே 2:2 ஓசே 2) எனப் பார்க்கிறோம்.

சிறந்த இறையியல் சமூக நோக்கங்களை ஞான இலக்கியத்தில் காணலாம். இங்கு ஞானியல்ல ஞானமே உரக்க அழைக்கிறது. கல்லாரையும் (பேதையரையும்) தன்னிடமிருந்து கற்றுக்கொள்ள அழைக்கிறது. ஞானம் இறைவாக்கினர்களைப்போல் வீதிக்கு வருகிறது. தனது மதிப்பு மிகுந்த பள்ளிகளை விட்டுவிட்டுத் தெருவுக்கும் பொதுவிடங்களுக்கும் வருகிறது. மனிதர்களைச் சந்தித்துச் சவால்களைச் சந்திக்க அழைப்பு விடுக்கிறது. மிகக் கடுமையான வார்த்தைகளில் எச்சரிக்கை விடுக்கிறது. இறுதியில் அறிவுரையாக மாறுகிறது (30-33). இது இரண்டாம் அறிவுரை.

சொல்விளக்கம்

21 – நகர வாயில்கள்: மக்கள் எங்குக் கூடுகிறார்களோ அங்கு ஞானம் வந்து அழைக்கிறது (இங்கே உழைப்போர், விற்போர், வாங்குவார், கலைஞர்கள், கைவேலைப்பாட்டினர் மற்றும் வாதாடுவோர், பிச்சை எடுப்போர் உள்ளனர்).

மக்கள் கூடும் பகுதிகளில் தங்கள் ஞானத்தை வெளிப்படுத்தி மக்களை அழைப்பது ஞான ஆசிரியர்களின் ஒரு வழக்கமாக இருக்கலாம். கண்டிப்பாக மக்கள் கூடும் இடத்தில் அவர்கள் கவனத்தை ஈர்ப்பது ஞானிகள் செயல்.

22 – மூன்று விதமான பேதையரைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்: (1) பேதையர்: கல்லாதவர், முதிர்ச்சி இல்லாதவர், அனுபவமிலார். (2) இகழ்வோர்: மற்றவர் கருத்துக்கு மதிப்பளிக்காத ஆணவக்காரர் (திபா 1:1), மூடர்கள், பாவிகளோடு அமர்கின்றவர். (3) முட்டாள்கள்: அறிவற்றவர், பிடிவாதமுடையவர், நடத்தை கெட்டவர், தீயதை நல்லதென்பவர், திருத்த முடியாதவர்.

23 – கவனத்தில் கொள்தல்: என்பதைச் சொல்வதைக் கேட்டுத் திரும்பிவருதல் எனலாம். இறைவனிடம் திரும்பி வாருங்கள் (எசா 44:22; எரே 3:22) என இறைவாக்கினர்கள் அழைப்பதுபோலுள்ளது.

உள்ளத்திலிருப்பதைச் சொல்வேன்: பொங்கிப் பாயும் சுனையாக ஞானம் தன்னைக் காட்டுகிறது. ஆவியானவர் நம்மீது பொழியப்படுவதை (எசா 44:3) இறைவாக்கினர் வாக்களிப்பது போலுள்ளது. விவிலியக் கருத்துப்படி ஞானம் ஆவியாரின் கொடை. அவர் தன்னை ஏற்பவர் மீது ஞானத்தை மாரிபோல் பொழிகிறார். அல்லது சுனைபோல் பொங்கியோடச் செய்கிறார்.

24 – நான் கூப்பிட்டேன், ... அரவணைக்கக் கையை நீட்டினேன்: ஞானப் பெண் ஒரு ஞானியாகப் பேசுகிறாரா? அல்லது ஓர் இறைவாக்கினராகப் பேசுகிறாரா? அவரது மொழியிலே 'அறிவுரை, எச்சரிக்கை' ஞான ஆசிரியர்போலும் அவரது அசைவிலே ('கையை நீட்டினேன்') இறைவாக்கினர் போலும் உள்ளார் (காண் எசா 65:1,2). எபிரேய இலக்கிய வழக்கின்படி வார்த்தைகளும் அசைவுகளும் இணைந்து செல்வன. மேலும் இக்கூற்றுக்குப் பின்னைய வசனங்களில் கடிந்துகொள்ளும் உரையையும் எச்சரிக்கை உரையையும் காணலாம்.

25 - ஞானம் எச்சரிக்கை தருவதற்குக் காரணம் அதன் அறிவுரைகளை மக்கள் பொருள்படுத்தவில்லை, எச்சரிக்கையைப் புறக்கணித்தனர்.

26-27 - இடுக்கண் வரும்போது நகைப்பேன்: ஞானம் தனது அறிவுரைக்குச் செவிமடுக்காதோரைக் கண்டு நகைக்கிறாள். இறைவாக்குகளில் யாவே கடவுள் நேரடியாகத் தீர்ப்பளிப்பது போல ஞானம் நேரடியாகத் தலையிட்டுத் தீர்ப்பளிப்பதில்லை. இடுக்கண் நேரத்தில் அவளைத் தேடினாலும் கண்டடைய முடியாது. காலம் சென்றுவிட்டது.

29 - நீங்கள் அறிவை வெறுத்தீர்கள் ஆண்டவரிடம் அச்சம் கொள்வதில்லை: இங்கு அறிவை வெறுப்பது யாவேயிடம் அச்சம் கொள்ளாததற்குச் சமமாகக் காட்டப்படுகிறது. இது ஒரு புதிய தெளிவை ஞானத்தைப் பொறுத்தவரையில் அளிக்கிறது,

ஆளுருவம் பெறும் ஞானம் தம் ஆசிரியரிடமிருந்து கற்ற, வாழ்வனுபவத்திலிருந்து பெற்ற, தனது சீரிய சிந்தனையில் வளர்ந்த ஞானாசிரியர் போலில்லை. இந்த ஞானம் வாழ்வில் கற்றவைகளிலிருந்தோ தனது அதிகாரப் பூர்வமான அறிவாற்றலிலிருந்தோ வருவதல்ல. மாறாக ஞானப் பெண் தனது ஞானம், அறிவுரை, போதனைகளை யாவேயின் அதிகாரத்தால் வழங்குகின்றாள். ‘ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்’ புதிய நியமனம் ஆகிறது. தன் சொந்த அதிகாரத்தை விடுத்து யாவேயின் அதிகாரத்தில் தம் அறிவுரைகள், போதனைகளை உள்ளாக்கும்போது அவள் ஓர் இறைவாக்கினரைப் போலாகிறாள். எனினும் ஞான குருவின் மொழி அவளிடம் உள்ளது.

இங்குக் கூறப்படும் ஞானம் அனுபவத்தில் கற்ற ஞானத்தைவிட சமயப் போதனைகளையும் அறிவுரைகளையும் கூறுகிறது. ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதையும் அவரது அதிகாரத்தையும் எடுத்துக் கூறுகிறது என்பதைக் கூர்ந்து நோக்கவேண்டும்.

31 - நீங்கள் உங்கள் நடத்தையின் பயனைத் துய்ப்பீர்கள்: ஆசிரியர் வினைப் பயன் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறார். நல்லது செய்தால் பரிசு தீயது செய்தால் துன்பம் என்பதைக் கூறுகிறார். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார். எதற்கும் ஓர் அளவு உண்டல்லவா?

32 - பேதையரின் தவறுகள் - இத்தவறுகள் குரு, ஞானிகளின் குரலுக்குச் செவிமடுத்து அதன்படி வாழாது, முன்னேற்றமோ அல்லது முதிர்ச்சியோ

அடையாததைக் குறிக்கும். கடவுளிடம் அச்சம் கொள்ளாது வாழும்போது அவரை மறுதலிப்பதை அல்லது கடவுள் கொடுத்த நியமனங்களைக் கடைபிடிக்காததைக் குறிக்கலாம்.

சிறு மதியோரின் தற்பெருமை: இது எனக்கு எல்லாம் தெரியும் என்ற வீண்பெருமை, யாரிடமும் நான் கற்றுத்தெரிய ஏதுமில்லை என்ற ஆணவம்.

33 - ஞானத்தின் அறிவுரையைக் கேட்டு நடப்போர் பாதுகாப்போடு நலமாயிருப்பர். தீமை அவர்களை நெருங்கினும் அச்சமின்றி அமைதியாய் வாழ்வர்.

செம்பொருள்

ஞானத்தை ஒரு போதனையாளராக இப்பகுதியில் பார்க்கிறோம். அவள் இறைவாக்கினர் பாவனையைக் (அதட்டியும் + எச்சரித்தும்) கையாள்கிறாள். யாவேயிடமிருந்து அதிகாரம் பெற்றவர்போல் பேசுகிறாள். ஆனால் அவள் இறைவாக்கினரல்லள். அவளது மொழி ஞானாசிரியரின் மொழி. அவள் 'மனந்திருந்த' வலியுறுத்துவதில்லை. அவள் அதிகாரமான ஞானப் போதனைகள் கொண்டவள். அவளுக்குக் கண்டிப்பாகச் செவிசாய்க்க வேண்டும். அவளது அதிகாரத்தை ஏற்கவேண்டும்.

ஞானம் கடவுளின் பிரசன்னமாயிருக்கிறது. அணுக முடியாத கடவுள் ஞானத்தின் வாயிலாக அண்மையில் வந்துள்ளார். ஞானம் கடவுளின் புண்ணியமாக வாழ்வுக்கு இட்டுச் செல்கிறாள். கடவுளின் பிரசன்னமாகிறாள். கடவுள் சமயப் பாரம்பரியத்தில் மட்டுமல்ல, மனித வாழ்வைக் கற்று நல்ல பண்புடைய மனிதனாக ஒருவனைச் செதுக்குகிறாள்.

இப்பகுதியில் கடவுள் அச்சமின்றி ஞானத்தைப் பெறுதல் அரிது என்று சொல்லும் முயற்சி உளது. எனினும் ஞானம் அறிவும் பண்பும் நிறைந்த ஓர் ஆசிரியராலே வழங்கப்படுகிறது. இது கடவுளே ஞானத்தின் ஊற்று, அவரிடமிருந்தே ஞானமும் அறிவொளியும் வருகின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டும் ஒரு முயற்சியாக உள்ளது. ஞானத்தைக் கடவுளாகவோ கடவுளின் ஒரு பகுதியாகவோ, காட்டும் முயற்சி உளது. எனினும் ஞானம் கடவுளின் ஒரு பகுதியல்ல; மாறாக அது பொது இடங்களில் உலா வருகிறது.

1.4. ஞானம் அளிக்கும் பயன் (2:1-22)

2:1 பிள்ளாய்! நீ ஞானத்திற்குச் செவி சாய்த்து, மெய்யறிவில் உன் மனத்தைச்
செலுத்தி, 2 என் மொழிகளை ஏற்று, என் கட்டளைகளைச் சிந்தையில் இருத்திக்கொள்.
3 ஆம், நீ உணர்வுக்காக வேண்டுதல் செய்து, மெய்யறிவுக்காக உரக்க மன்றாடு. 4
செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தை நாடி, புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு
அதைத் தேடு. 5 அப்பொழுது, ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் இன்னதென்பதை
உணர்ந்து கொள்வாய். 6 ஏனெனில், ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும்
விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே. 7 நேர்மையாளருக்கு அவர் துணை செய்யக்
காத்திருக்கின்றார்; மாசற்றோருக்குக் கேடயமாய் இருக்கின்றார்; 8 நேர்மையாளரின் பாதைகளை
அவர் பாதுகாக்கின்றார்; தம் அடியாரின் வழிகளைக் காவல் செய்கின்றார். 9 எனவே, நீ
நீதியையும் நியாயத்தையும் நேர்மையையும் நலமார்ந்த நெறிகள் அனைத்தையும்
தெரிந்துகொள்வாய். 10 ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும்; அறிவு உன் இதயத்திற்கு
இன்பம் தரும். 11 அப்பொழுது, நுண்ணறிவு உனக்குக் காவலாய் இருக்கும்; மெய்யறிவு
உன்னைக் காத்துக்கொள்ளும். 12 நீ தீய வழியில் செல்லாமலும், வஞ்சகம் பேசும்
மனிதரிடம் அகப்படாமலும் இருக்கும்படி, அது உன்னைப் பாதுகாக்கும். 13 நேர்மையான
வழியை விட்டு விலகி, இருளான பாதையில் நடப்போரின் கைக்கு உன்னைத் தப்புவிக்கும்.
14 அவர்கள் தீமை செய்து களிக்கின்றவர்கள். 15 அவர்களுடைய வழிகள் கோணலானவை.
அவர்களுடைய பாதைகள் நேர்மையற்றவை. 16 ஞானம் உன்னைக் கற்புநெறி
தவறியவளிடமிருந்தும், தேனொழுகப் பேசும் விலைமகளிடமிருந்தும் விலகியிருக்கச் செய்யும்.
17 அவள் இளமைப் பருவத்தில் தான் மணந்த கணவனைக் கைவிட்டவள்; தான் கடவுளோடு
செய்த உடன்படிக்கையை மறந்தவள். 18 அவளது வீடு சாவுக்கு
வழிகாட்டிக்கொண்டிருக்கின்றது; அவளின் வழிகள் இறந்தோரிடத்திற்குச் செல்கின்றன. 19
அவளிடம் செல்லும் எவனும் திரும்பி வருவதேயில்லை; வாழ்வெனும் பாதையை அவன்
மீண்டும் அடைவதில்லை 20 எனவே, நீ நல்லாரின் நெறியில் நடப்பாயாக! நேர்மையாளரின்
வழியைப் பின்பற்றுவாயாக! 21 நேர்மையாளரே உலகில் வாழ்வர்; மாசற்றாரே அதில்
நிலைத்திருப்பர். 22 பொல்லாரோ உலகினின்று பூண்டோடு அழிவர்; நயவஞ்சகர் அதனின்று
வேரோடு களைந்தெறியப்படுவர்.

பின்புலம்

இந்த அதிகாரம் இருபத்திஇரண்டு வரிகளுடையது. எபிரேயமும் இருபத்தி இரண்டு எழுத்துகள் கொண்டது. ஆலெப் (aleph) என்ற எபிரேய எழுத்தில் முதல் வசனம் துவங்கி நான்காம் வசனத்தில் முடிவடைகிறது. அதேபோல 5 இல் துவங்கி 8 இலும், 9 இல் துவங்கி 11இலும் முடிவடைகிறது. இரண்டாம் பகுதி (12-22) கிலாமெத் என்ற எழுத்தில் 12, 16, 20 துவங்கி 15, 19, 22 முடிவடைகிறது. இங்கு ஞானத்தின் நோக்கம் பற்றிப் பேசப்படுகிறது.

மேலும் 22 வரிகளையும் (4+4+3; 4+4,3) என்று பிரித்து இலக்கிய நயத்தோடு பார்க்கலாம். கருப்பொருளும் அமைப்பை ஒத்திருக்கிறது. வசனங்கள்

1-11 ஞானம் தரும் பயன்களையும் வசனங்கள் 12-22 தீயோர், விலைமகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் கூறுகின்றன. இது அறிவுரை இலக்கியம் சார்ந்தது. இலக்கிய நயத்தோடு சொற்களும் சிந்தனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் வரும் கருத்துகள் மெல்ல மெல்ல ஆழமும் வளர்ச்சியும் பெறுவதைப் பின்வரும் பகுதியில் காணலாம்.

2:1-8 - 3:1-12	-	ஆண்டவரே உறவு
2:9-11 - 3:13-26; 4:1-9	-	ஞானத்தோடு உறவு
2:12-15 - 4:10-27	-	தீயோரோடு உறவு
2:16-19 - 5:1-23, 6:20-7:27	-	பெண்ணோடு உறவு
2:20-22	-	முடிவுரை

2ஆம் அதிகாரம் நல்லதொரு இலக்கியத் தளமாகப் பின்வரும் அறிவுரைகளுக்கு அமைகிறது.

பலர் பலவகை அமைப்புகளை முன்மொழிந்தாலும் ஒவ்வொன்றிலும் ஒரு நல்ல கண்டுபிடிப்பைக் காணலாம்.

சொல்பொருள்

1 - இங்குக் கொடுக்கப்படும் அறிவுரைகள் அல்லது கட்டளைகள் தோரா சட்டமன்று, மாறாக ஓர் ஆசிரியருடையது. 'மசூர்' என்ற எபிரேயச் சொல்தான் இணைச் சட்டத்திலும் பயன்படுத்தப்படுகிறது. எனினும் இது பிற்காலத்தில் தந்தை அல்லது ஆசிரியர் கொடுத்த கட்டளை என்று புரிந்துகொள்ளப்பட்டது.

2 - இங்கு மாணவனின் படைப்பாற்றலோ, சிந்தனைத் திறனோ, தர்க்க முறையோ, சுயமாக ஆய்வுசெய்வதோ வலியுறுத்தப்படவில்லை. மாறாக, ஆசிரியருக்குச் செவிசாய்ப்பது அறிவுரைக்கு மனத்தைச் செலுத்துவது, அவைகளைச் சிந்தையில் இருத்துவது வலியுறுத்தப்படுகிறது. இதைச் செய், இதைச் செய்யாதே என்ற அறிவுரைகளும் இல்லை. மாறாக நீ கீழ்ப்படிந்தால் பல நன்மைகளும் ஆசிர்வாதங்களும் கிடைக்கும் என்பது கூறப்படுகிறது. மேலும் ஞானத்துக்குச் செவிமடுத்தல் என்பது அதற்குக் கீழ்ப்படிதலாகும். சிந்தனை என்பது இதயத்தைக் குறிக்கும்.

3 - ஞானம் பெறுவதற்கு வேண்டிய நிபந்தனையாக வேண்டுதலும் மன்றாட்டும் முன்வைக்கப்படுகின்றன.

4 - மேலும் செல்வத்தைத் தேடும் நாட்டமும் புதையலைத் தோண்டியெடுக்கும் ஆர்வமும் ஞானத்தைத் தேடுபவருக்கும் வேண்டும். ஞானம் பொன்னைவிட, பவளத்தைவிட மேலானது (3:14-15).

5 - ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் அவரைப் பற்றிய அறிவுக்கு இணையாகும் (ஒசே 4:1; 6:6). இரண்டும் ஒன்றுதான். 1-4 வசனங்களில் கூறப்படும் அனைத்திற்கும் உச்சத்தை இங்குக் காண்கிறோம். மேலும் எபிரேயத்தில் அறிவைக் குறிக்கும் சொல் தகாத். இது சிந்தனையால் புரிந்துகொள்வதையும் அதைக் கடைபிடிப்பதையும் குறிக்கும். மனித முயற்சி கண்டுகொள்ளப்படவில்லை. ஞானம் கடவுளின் கொடை.

6 - ஞானம் கடவுளின் கொடையாக வலியுறுத்தப்படுகிறது. இது கொஞ்சம் வினோதமாக உள்ளது. ஏனெனில் கேட்டலும் செவிமடுத்தலும் ஞானம் பெற வழியாகும் என்னும் ஆசிரியர் அது கடவுளின் கொடை என்கிறார். ஆண்டவரே அதன் ஊற்று என்கிறார் (காண். சீஞா 24:3; 8:22-24). நீதி மொழிகளைப் படிக்கப் படிக்க ஞானத்தின் பின்புறம் தெய்வ மறைபொருள் தொக்கி இருப்பதைக் காணமுடிகிறது. மனிதன் எவ்வளவு முயன்று ஞானத்தைப் பெற்றாலும் இறுதியில் அது கடவுளின் பரிசு என்பதை உணரவேண்டும்.

ஞானம் பெற மனித முயற்சியும் இறைவனின் துணையும் கைகோர்த்துச் சென்றாலும் கடவுளின் கொடை என ஞானம் சித்தரிக்கப்படுகிறது. இங்குச் சமயச் சாயம் ஞானத்திற்குக் கொடுக்கப்படுகிறது.

7 - நேர்மையாளரின் துணையும் காவலும் ஆண்டவரே கடவுள் அவர்களுக்குக் கேடயமாய் இருக்கிறார் (30:5): இனிமேல் அவர்களுக்கு எல்லாம் வெற்றியே. மாணாக்கன் ஞானத்தைப் புதையலாகச் சேர்ந்து வைக்கிறான். அது கடவுளை அறியவும் அறநெறியில் வாழவும் அவனைத் தூண்டுகிறது. கடவுளும் அவனுக்காகப் பாதுகாப்பைச் சேமித்து வைக்கிறார். கடவுளையும் வாழ்வையும் பிரிக்கவியலாது. கடவுளின் கேடயம், ஈட்டி, அம்பு ஆகியவற்றின் தாக்குதலை முறியடிக்கும்.

8 - நேர்மையாளரின் பாதைகளைக் காக்கின்றார்; வழிகளைக் காவல்செய்கின்றார்: கடவுள் இவர்களைக் காக்கின்றார். தீயவர்களிடமிருந்து (12-15), விலை மாதர்களின் கண்ணியிலிருந்து (16-19) பாதுகாக்கின்றார்.

நேர்மையாளர்கள் கடவுளை அன்பு செய்வோர், கனிவை, இரக்கத்தை மக்களுக்குக் காண்பிப்போர் (16:17).

9 - ஞானத்தை உள்வாங்குபவர் நீதியை, நியாயத்தை, நேர்மையை உணரும் தேர்ச்சி பெறுகின்றனர். இவை மாணக்கருக்கு வெற்றியை அளிக்கும். இங்குக் கூறப்படும் பண்புகள் கடவுளின் பண்புகள். அவை மாணாக்கரைக் காக்கிறது. திருப்பாக்கள் 33, 104 இவைகளை இரக்கம், மீட்பாகப் பார்க்கின்றன.

10 - கடவுளின் ஞானம் தந்தையின் அறிவுரை வழியாக (6, 10) மாணவனின் உள்ளத்தில் நுழைகிறது. இவ்வாறு மாணவனுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவு நெருக்கமாகிறது. இறைவாக்கினர் மொழியில் 'புதிய இதயம்' அருளப்படுகிறது (எசே 36:27). இயேசுவின் மொழியில் மறுபடியும் பிறப்பது (யோவா 3:7). கிறிஸ்துவின் சாயலைப் பெறுவது (உரோ 5:5; 12:2; 2கொரி 4:6,16).

11 - நுண்ணறிவு, மெய்யறிவு உன்னைக் காக்கும்: கடவுளின் பாதுகாப்பு தந்தையின் அறிவுரையைக் கேட்டு நடப்பதின் வழியாக மாணாக்கனில் ஒரு பெரும் ஆற்றலாக மாறுகிறது.

12 - 'வழி' என்ற முக்கிய வார்த்தை மறுபடியும் தோன்றுகிறது. (1:15, 21 காண் 4:10-27). நல்ல வழி / தீய வழி இரண்டும் தொடர்ந்து இந்த முதல் பகுதியில் கையாளப்படுகின்றன. கடவுள் இஸ்ரயேல் மக்களைப் பல இக்கட்டுகளிலிருந்து பாதுகாத்ததுபோல் உன்னை தீயவரிடமிருந்து பாதுகாப்பார். தந்தை தன் மகனுக்கு எச்சரிக்கையாக 'நீ ஆபத்தான சூழலில் உழலக் கூடும். அதிலிருந்து முழுமையாக தப்பித்துக்கொள்வது கடினம்' என்பதை இக்கூற்றுச் சுட்டுகிறது. கடவுளின் அருள் அனைத்து விடுதலைக்கும் அவசியமாகிறது (18:23).

13 - தீயவர் இருளான பாதையில் செல்வர்: இப்பாதையில் பாதுகாப்பு, சுதந்திரம், வெற்றி இவைகளுக்கு இடமில்லை (4:18-19; 7-9). இப்படிப்பட்டோர் தீய நோக்குடன் தங்கள் வழிகளை மறைத்துக்கொள்வர். இவர்களிடமிருந்து ஞானம் உனக்குப் பாதுகாப்புத் தரும்.

14 - தீயவரின் உள்ளம், உடல் முழுவதும் அழுகும் நிலையில் உள்ளது. நல்லோரின் நன்னெறியும் ஞானமும் எத்தகைய அக்களிப்பைத் தருகிறதோ அதேபோல தீயோரின் தீச்செயல்கள் அவர்களுக்கு மகிழ்வைத் தருவதைக்

காணமுடிகிறது. அவர்கள் 'தீமையே நீயே எனது நன்மையாயிரு' என ஒரு புதிய பாடல் பாடுகின்றனர்.

15 – தீயோரின் வழிகள் கோணலானவை, நேர்மையற்றவை. தீய வழிகள், நேரிய வழிகளின் எதிரிகள். அது சுயநலமும் பேராசையும் உடைய வழிகள், சமூகத்துக்கு எதிரானவை. இவர்கள் கடவுளை வெறுப்பவர்கள் (14:2), அவரை நம்ப மறுப்பவர்கள் (எசா 30:12). கடவுளுக்குத் தீயவை அருவருப்பானவை (3:32).

16 – கற்பு நெறியற்றவள், விலைமகள்: இத்தகையோரைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. எனினும் நாம் இளைஞர்களைத் தீய வழிக்குக் கவர்ந்திழுக்கும் இவரது தீக்குணத்தை இங்குப் பார்ப்போம். இப்பெண் இளைஞருக்கு ஓர் அச்சுறுத்தல். பால் உறவுகளைத் தூண்டுபவர். அது அவளது நயமான பேச்சில் விளங்கும் (6:24; 7:5,21). அப்பேச்சு ஏமாற்றும் பேச்சு (7:13-21). அது கண்ணிவைக்கும் பேச்சு (29:5). அது நயமானது, ஆனால் வஞ்சம் உள்ளது, வாள் போன்று கூர்மையுடையது, பொய்கள் நிறைந்தது. இவள் தனக்கும் தன்னை அண்டுவோருக்கும் 'சாவைக்' கொணர்பவள்.

17 – கணவனைக் கைவிடுவது: நம்பிக்கைத் துரோகம் செய்வது, பிரமாணிக்கத்தை கை நெகிழ்வது. இது கணவனுக்கும் பொருந்தும். இது விபசாரமாகும். இவள் கடவுளோடு செய்த உடன்படிக்கையை மறப்பதும் இதற்கொப்பதாகும். உடன்படிக்கை தந்த உரிமைகளை, உறவுகளை உதறித் தள்ளிவிடுவதாகும். திருமணத்தில் கடவுளும் சாட்சியாக இருக்கிறார் (மலா 2:14). எனவே திருமணம் ஒரு புனித உறவைத் தழுவி நிற்கிறது. இது ஒருவேளை கடவுளையும் இஸ்ரயேலையும் குறிக்கலாம்.

18 – அவளது வீடு சாவுக்கு: இது இன்னுமொரு அழிவை உருவகமாகக் கூறுகிறது. இது விலைமாதோடு உறவு வைப்பவனுக்குக் கிடைக்கும் தண்டனை. இது உடல் சாவை மட்டுமல்ல (6:33-35) ஆன்மிகச் சாவையும் சுட்டலாம். இந்த மாது பல சிந்தனைகளைத் தூண்டுகிறாள். அவளுக்கு வீடு உண்டு அதற்குச் சாவோடு தொடர்புண்டு. இதை யாவே கடவுளை விட்டுப்பிரிந்த இஸ்ரயேலுக்குப் பொருந்தும். மெவ்த் (mwt) என்ற எபிரேயச்சொல் மோத் (mot) என்ற கானானியச் சாவுக் கடவுளைக் குறிக்கலாம். மோத் வாயைத் திறந்து விழுங்கியதும் கிடைப்பது கல்லறையே. இது புராணக் கதையாக இருந்தாலும் விலைமாதுவின் வாய் ஓர்

ஆழமான குழி (22:14). அது மட்டுமல்ல அவள் அவளது கணவனைப் பழிவாங்கக் கூடியவள் (5:7-14; 6:29-35), கடவுளும் இதை ஆமோதிக்கிறார் (5:21-23). இதைத் தமிழ் மண்ணில் அடிக்கடிக் காண்கின்றோம். (காண் சாம்சன் தெயிலா நீதி 16:1-22). இஸ்ரயேல் சமூகம் விபசாரிகளைச் சாவுக்குத் தீர்ப்பிட்டது (லேவி 20:10; இச 22:22).

19 - மேலும் விலைமாதுவிற்கு வீடு உண்டு. அவளுடைய விருந்தினர் பாதாளத்தில் உள்ளனர் (9;14,18). பாதாளத்தில் உள்ளோருக்கு 'வாழ்வு' இல்லை. அதன் நிழல்தானுண்டு. அங்குச் செல்பவன் திரும்பி வருவதில்லை (யோபு 7:9-10; 10:21; 16:22). இஸ்தார் இந்த உலகுக்குச் சொல்வதைப் (ANET 107, 1-10) பழங்கால ஏடுகளில் காண்கிறோம். 'திரும்ப இயலா நிலம்,' 'இருள் நிறை வீடு,' 'போகலாம் திரும்பிவர இயலா சாலை' என்று இந்நிலையை அழைப்பர். இறப்புக்குப் பின்பு வாழ்வு பற்றிப் பேசப்படவில்லை. அவள் வழியாய் இறப்பைத் தழுவியவர்கள் தப்பவியலாது. வாழ்வு அவர்களுக்கு எட்டாக் கனி (1:19 2:8,13,15). ஆண் பெண் உறவிலுள்ள பிரமாணிக்கமின்மையை ஆன்மிக உறவுக்கும் சொல்லலாம். கடவுளுக்குத் துரோகம் செய்வதால் வரும் அழிவு விலை மாதரின் வழியாய் வரும் அழிவு, தீயோரால் வரும் அழிவைவிட மிகுதியானதாகக் கூறப்படுகிறது.

20 - இங்குள்ள மைய வார்த்தை டெரெக் (2:12,20), அல்லது 'ஒரோத்' (பாதை 8:13). நல்வழிகளையும் தீயவழிகளையும் இவை கோடிட்டுக் காட்டுகின்றன. நல்லோரின் வழி வாழ்வு, தீயோரின் வழியோ சாவு.

21 - நல்லோர் வாழ்வர் என்பது விவிலிய மொழி. நல்லோர் உலகில் வாழ்வர். உலகு (நிலம்) என்பதை வளமான நிலம் எனலாம் (தொநூ 27:28). ஆழ்ந்து நோக்கினால் இது வாழ்வைக் குறிக்கும். நல்நிலம் கல்லறையல்ல, தீயோர்கள் இல்லாத உலகையும் குறிக்கலாம்.

22 - பொல்லாரும் நயவஞ்சரும்: நல்லாருக்கும் பொல்லாருக்கும் உள்ள வேறுபாடான முடிவு கூறப்படுகிறது. பொல்லார் ஆண்டவரை நம்பாதவர், பேராசை உடையவர் (10:3; 21:10), வன்முறையாளர் (10:6). மாசற்றோரை வெறுப்பவர் (12:6), ஏமாற்றுபவர் (12:5) எனலாம். அவர்கள் உலகினின்று மறைவர். அவர் அழிந்துவிடுவர். காரத் (Kârat): என்ற எபிரேயச் சொல் ஒதுக்கிவைத்தல் என்ற பொருளைத் தருகிறது. இதைக் கொன்றொழித்து அகற்றிவிடுதல் என்றும் கூறலாம்.

ஏனெனில் பொல்லார் நிலத்தைத் தீட்டுப்படுத்துகின்றனர் நல்லோரைக் காயப்படுத்துகின்றனர். இவர்கள் உடன்படிக்கை சமூகத்தைக் கூறுபோடுபவர்கள். இவர்கள் எந்தத் தடயமுமில்லாது வேரோடு பிடுங்கி எறியப்படுவர்.

செம்பொருள்

ஞானத்தின் இன்றியமையா கருத்து யாதெனில் அது யாவேயின் கொடை. மனித சிந்தனை, ஆராய்ச்சி வழியாகப் பெற்றாலும் நம்முன்னோர்கள் தங்கள் அனுபவம், முயற்சி, ஆற்றல் வழியாகப் பெற்ற அனுபவத்தைப் பாரம்பரியத்திற்கு விட்டுச்சென்ற நுண்ணிய கருத்துகளை உய்த்துணர்ந்தாலும் ஞானம் இறுதியில் கடவுளின் கொடையாகக் கருதப்படுகிறது.

கடவுளிடம் அச்சமுடையோருக்கு அது கொடுக்கப்படுகிறது. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் ஞானம் என்றாலும் தவறில்லை (5). இந்தக் கொடை கட்டுப்பாடான வாழ்வைப் பெறவும் நல்ல மனிதப் பண்பை உருவாக்கவும் அடித்தளமாக உள்ளது. கடவுள் ஞானம் பெற்றோரும் கட்டுப்பாடான சான்றோரும் தங்களது அறிவின் வரம்பை அறிவர்.

கடவுளையும் உலகையும் முழுமையாகக் கற்க இயலாது. இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டவை அறிவுரை எனக் கூறுவதைவிட அறிவுறுத்தி இணங்கவைக்கும் ஓர் இலக்கியம் எனலாம்.

இவ்வதிகாரம் ஒரு கோர்வையான கருத்தைத் தாங்கி வருகிறது. இளைஞர்களுக்கு ஞானம் வாக்களிக்கப்படுகிறது. ஆண்டவரோடு நெருக்கமாக இருந்தால், அறநெறி வாழ்வை வாழ்ந்தால் அச்சுறுத்தும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்படையலாம். விலை மாதர்கள் விரிக்கும் கண்ணிகள், சாவுக்கு இட்டுச் செல்லும் வழிகள் உன்னை வீழ்த்திவிட இயலாது.

ஞான இலக்கியங்களை நாம் கடைபிடிக்கிறோமா? மேலும் விலைமகள் கொடுக்கும் தொல்லைகளுக்கு இன்னொரு விதத்தில் நாம் பொருள்காண முடியுமா? ஆசிரியர் தரும் அறிவுரை சமய அங்கீகாரம் பெற்றதாக உள்ளது.

1.5. ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை (3:1-12)

3:1 பிள்ளாய்! என் அறிவுரையை மறவாதே; என் கட்டளைகளை உன் இதயத்தில் இருத்திக்கொள்; 2 அவை உனக்கு நீண்ட ஆயுளையும் பல்லாண்டு வாழ்வையும் நிலையான

நலன்களையும் அளிக்கும். 3 அன்பும் வாய்மையும் உன்னிடம் குன்றாதிருப்பதாக! அவற்றைக்
கழுத்தில் அணிகலனாய்ப் பூண்டுகொள். 4 அப்பொழுது, நீ கடவுளுக்கும் மனிதருக்கும்
உகந்தவனாவாய்; அவர்களது நல்லெண்ணத்தையும் பெறுவாய். 5 முழு மனத்தோடு
ஆண்டவரை நம்பு; உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே; 6 நீ எதைச்
செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்துச் செய்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச்
செம்மையாக்குவார். 7 உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக்கொள்ளாதே; ஆண்டவருக்கு
அஞ்சித் தீமையை அறவே விலக்கு. 8 அப்பொழுது, உன் உடல், நலம் பெறும்; உன்
எலும்புகள் உரம் பெறும். 9 உன் செல்வத்தைக்கொண்டு அவரைப் போற்று; உன்
விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு. 10
அப்பொழுது, உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம்
வழிந்தோடும். 11 பிள்ளாய்! ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாமென்று
தள்ளி விடாதே; அவர் கண்டிக்கும்போது அதைத் தொல்லையாக நினையாதே. 12 தந்தை
தன் அருமை மகனைக் கண்டிப்பதுபோல், ஆண்டவர் தாம் யாரிடம் அன்புகொண்டிருக்கின்றாரோ
அவர்களைக் கண்டிக்கின்றார்.

பின்புலம்

மூன்றாம் அறிவுரையை இந்த முதல் பாகமாம் 1-9 அதிகாரங்களில் பார்க்கிறோம். இந்த அறிவுரை ஞானத்தைத் தேட விடுக்கும் அழைப்பன்று; மாறாக நல்லவைகளைத் தேர்ந்து தீயவைகளை விலக்கி நன்னெறியோடு வாழக் கொடுக்கப்படும் அழைப்பு. பொதுவாகவும் குறிப்பாகவும் இவ்வறிவுரை குருவின் போதனைக்குக் கீழ்ப்படியவும் யாவேக்கு நம்பகத் தன்மையோடும், நேர்மையோடும் பற்றுறுதியோடும் பணிபுரியவும், தற்பெருமையைத் தவிர்த்து விளைச்சலின் முதற்கனிகளைக் கடவுளுக்குக் காணிக்கையாக்கி வழிபாட்டின் கடமைகளை நிறைவேற்றவும் அழைக்கிறது. பொதுவாக இங்கு இறைப்பற்றும் பாரம்பரிய ஒழுக்கங்களும் நிலை நிறுத்தப்படுகின்றன. ஏனெனில் அடிமைத்தளையிலிருந்து திரும்பியவர்களில் ஆளும் வகையினருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் தெளிவாகப் புரிய முடிகிறது.

இப்பகுதி அறிவுரைப் பகுதியாகும். நல்லதைச் செய்; தீயதைச் செய்யாதே என்று கூறுகிறது (1-10). இப்பகுதியில் இரு வரிகளைக்கொண்ட ஆறு பகுதிகளைக் காண்கிறோம். (3-ஆம் வசனத்தில் மட்டும் 'அன்பை அணிகலனாய்ப் பூண்டுகொள்' என்ற வரி சேர்க்கப்படுகிறது.) அறிவுரைகளிலும் மறுப்புரைகளிலும் செய்யாதே என்ற கூற்றுகளிலும் குருநாதருக்குக் கீழ்படிவதால் வரும் நன்மைக்குக் காரணம் தெளிவாகிறது.

சொல்விளக்கம்

வச 1-2 - குருநாதரின் அறிவுரைக் கட்டளைகள் அவரது மொத்த அறிவுரையின் ஒரு பகுதியாகும் (1:8,23; 2:13:13). இவற்றைக் கடைப்பிடிப்பதால் வரும் பயன் பின்வரும் இரண்டாம் வசனத்தில் காணலாம். அவை நீண்ட ஆயுள் (3:16; 4:10), நிலையான நலன்கள் (3:17). குருநாதர் மாணவனுக்கு நல்வழி காட்டுகிறார். இது எகிப்திய ஞான இலக்கியத்தில் உள்ளது. ''சலோம்'' என்பது மன மகிழ்வு, நல்ல உடல்நிலை, சொத்து, பாதுகாப்பு முதலியவற்றைக் குறிக்கும். பரபரப்பின்றி அச்சமின்றி வாழும் நல்வாழ்வை இது உணர்த்துகிறது (தொநூ 29:6; நீத 4:17; திபா 4:19-10). நீண்டகால வாழ்வு நலமான வாழ்வால் அமையவில்லையெனில் அது ஆசிர்நிறை வாழ்வெனக் கூறவியலாது. நீண்டவாழ்வு ஒரு முதிர்ச்சியான வாழ்வு எனலாம். செல்வங்கள் பெற்றுக் குழந்தைகளின் குழந்தைகளைக் கண்டு அமைதியில் சுற்றங்கள் புடை சூழக் கண்மூடுவதாகும் (தொநூ 48-49).

3-4 - அன்பும் வாய்மையும் நீதிமொழிகளில் இரட்டைக் கிழவிகளாகின்றன (14:22; 16:6; 20:28). இவை இந்த வசனங்களின் மைய வார்த்தைகள். அன்பு இங்கு நெருக்கமான, பிரமாணிக்கமான உறவைச் சுட்டுகிறது. ஒரு தனி நபர் மீதோ அல்லது ஒரு குழுவின் மீதோ அது இருக்கலாம். இவருக்கு எதிரி யாருமில்லை (பெர்து - 97). மேலும் பொதுவாகச் சிந்தாமல் சிதறாமல் கடவுளுக்குக் காட்டும் பற்று (2:8; 16:6), அல்லது குருநாதரிடமும் பாரம்பரியத்திடமும் காட்டும் பற்றாக இருக்கலாம் (3:3). பிரமாணிக்கம் குருநாதருக்கும் மாணக்கருக்கும் உள்ள உறவை முத்திரையிட்டு உறுதிப்படுத்துதலாகும்.

வாய்மை: இதுவும் அன்பு அல்லது பிரமாணிக்கம் போன்றதே. இந்த இரண்டு புண்ணியங்களும் கடவுள் முன்னும் மனிதர்கள் முன்னும் சன்மானம் பெறும் ஒன்றாகும் (நீமொ 28:23; எரே 31:2) ஞானப் பள்ளியில் கொடுக்கப்படும் அறிவுரைப் புத்தகம் ஞானம் அல்ல, அனுபவத்தில் ஆய்ந்து தொகுத்த அறிவுரைகளும் அல்ல. இங்கு யாவேயிடம் காட்டும் பற்றுறுதி ஞானத்தின் இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. சமயம் நுழைந்துவிடுகிறது. வசனம் 11இலும் கடவுள் கண்டிக்கும்போதும் திருத்தும்போதும் தொல்லை எனக் கருதாதே என்பது இதை வலியுறுத்துகிறது. துவக்கத்தில் அறிவுரையாக இருந்தது பின்பு ஆண்டவரிடமுள்ள பக்தியாகச் சேர்க்கப்பட்டுவிட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கழுத்தில் அணிகலனாகப் பூண்டு கொள்: தோரா புத்தகமும் இறைவாக்குகளும் அறிவுரைகளைத் தங்கள் வயப்படுத்திக் கொண்டன. அதாவது ஞானத்தைப் பற்றிக் கூறுகையில் கடவுள் பற்றின் விளக்கங்களைப் பயன்படுத்தியுள்ளன. மேலும், உடன்படிக்கைச் சூழலில் பயன்படுத்தப்படும் இச்சொற்கள் யாவேயிடமுள்ள பற்றையும் அதனால் வரும் பயன்களையும் கூறுகின்றன.

இச்சொற்கள் அறிவுரையின் மதிப்பையும் மகத்துவத்தையும் எடுத்துக்கூறுகின்றன. (காண். நீமொ 1:9). இச்சொற்கள் இணைச்சட்டத்தை (6:4-9) நினைவு கூர்கின்றன. இறைவனின் சட்டங்களை உன் கையில் அடையாளமாகக் கட்டிக்கொள்... உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழை வாயில்களிலும் அவற்றை எழுது (காண். இச 6:4-9).

இந்த இரண்டிலும் உள்ள அழுத்தங்களைப் பார்க்கையில் ஞானநூல் ஆசிரியர்கள் இணைச்சட்டம் எழுதப்பட்டபோது தாங்களும் அதில் இணைந்து பணியாற்றியிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது.

5-6 - சொந்த ஆற்றல் = bina

குருநாதர் கடவுளை நம்ப அறிவுரை தருகிறார். சொந்த ஆற்றல்மீது நம்பிக்கையை வைக்காதே என்கிறார். நம்பிக்கை சமய வாழ்வுக்கு மையம். கடவுளை நம்புவது கடவுள் உண்மையுள்ளவர், நேர்மையானவர், சொன்னதைச் செய்பவர் என்பதைத் தயக்கமின்றி ஏற்பது. கடவுளை நம்பிச் செயல்படுபவரைக் கடவுள் காக்கிறார். கடவுளறிவு முதலில் அனுபவத்தில் விளைவது. தன்மீது நம்பிக்கை வைத்து தனது ஆற்றலைச் சார்ந்து செயல்படாது வாழ்வது, இவ்வாழ்வு இறைவனின் வழிகாட்டுதலால் நடைபெறுகிறது.

சொந்த ஆற்றல் யாவேயின் மீதுள்ள பற்றுக்கு ஏற்புடையதாக இல்லை. சொந்த ஆற்றல் தீமையென்ற பொருளைப் பெறுகிறது. இறைபற்றினால் வருவதே ஞானம். எகிப்தில் அறிவுரைகள் பள்ளிகளில் கற்றுத்தரப்பட்டன. இஸ்ரயேலில் ஞானத்தைக் கற்பது சமய வேண்டுகோளாகக் கருதப்பட்டது.

எனினும் ஞானத்தைக் கற்பவருக்குத் தனது வரம்பு என்னவெனத் தெரியும். தான் ஞானி என்பவன் மடையன் (26:12; எரே 9:22-23). மனிதனின் முயற்சிகளிலும் முன்னேற்றங்களிலும் கடவுள் செயல்படுகிறார்.

7-8 - உன்னை நீ ஒரு ஞானி என எண்ணிக்கொள்ளாதே. கடவுளுக்கு அஞ்சு, தீமையை விலக்கு. மனித முயற்சியால் வரும் ஞானம் தற்பெருமையைத் தருகிறது என்கிறது இறைவாக்கினர் இலக்கியம். இது பழங்கால ஞான இலக்கியத்தின் மீது நடத்தும் ஒரு பெரிய தாக்குதலாகும். மனிதன் சொந்த அறிவை வாழ்வுக்கு ஏதுவாகக் கொள்வது அபத்தம் என்று கூறுவதைக் காணலாம் (காண் 16:9; 19:21; 28:24; 21:30,31). தங்கள் பார்வையில் ஞானிகள் என்றும், தங்கள் கணிப்பில் கூர்மதி வாய்ந்தவர்கள் என்றும் தங்களையே கருதுபவருக்கு ஐயோ கேடு! (எசா 5:21) என்ற எசாயாவின் கூற்றை இது நினைவுறுத்துகிறது. நேர்மையும் கட்டுப்பாடும் குருநாதர்களின் பார்வையில் அறிவுத் திறமையாலும் சிந்தனைத் திறனாலும் வருகிறது என்பது ஆண்டவரிடம் அச்சம் கொள்வதற்கு எதிரான கூற்றாகக் காட்டப்படுகிறது. நீ ஞானி என நினைக்கையில் ஞானம் உன்னில் மறைகிறது, உன்னை சோதித்து அறிபவர் ஆண்டவர் (17:3; 27:21).

ஆண்டவருக்கு அஞ்சுபவர் தீமையை விலக்கி நெறிமுறையான பாதையில் செல்பவர். ஆனால் அறிவுத் திறனாலும் சிந்தனையின் மேன்மையாலும் ஞானத்தைப் பெறும் குருநாதர்கள் நல்லது கெட்டதைக் கண்டுகொள்வதில்லை. தங்கள் அறிவுத் திறனால் அறநெறித் தீர்ப்புகளை கேள்விக்குள்ளாக்குவர். கடவுளிடம் கொள்ளும் பற்றும், அறநெறி வாழ்க்கையும் நல்ல உடல் நலத்தை அளிக்கிறது. இது கடவுளின் செயலே (தொ.நூ 20:17; யோபு 5:18; திபா 41:4).

3:9-10 - செல்வத்தைக் கொண்டு அவரைப் போற்று; முதற்பலனை காணிக்கையாக்கு: நீதிமொழிகள் புத்தகத்தில் இந்த இடத்தில் மட்டுமே வழிபாட்டில் என்ன காணிக்கை கொடுக்கவேண்டும் என்பது பற்றிக் கூறப்படுகிறது. (மற்றவை விப 23:19 எண் 28:26 இச 26:7... காணலாம்). ஞான நூல் வழிபாடுகளில் அக்கறை கொள்வதில்லை. எனவே இங்குக் கூறப்படுவது வியப்பாக உள்ளது (9,10).

யாவே கடவுளை வணங்கி, அவருக்குப் பணிபவருக்கு (வச 11) நிறைவான செல்வமும் வளமான வாழ்வும் கிடைக்கும். முதற்கனிகளால், தமது செல்வத்தால் கடவுளைப் போற்றுபவர்க்கு எதுவும் குறைவுபடுவதில்லை.

இஸ்ரயேலர்

புளியாத அப்ப விழாவில் - பார்லி

அறுவடை வாரங்கள் விழாவில் - கோதுமை

கூடார விழாவில் - திராட்சை (காணிக்கையாகக்) கொடுத்தார்கள்.

11-12 - ஆண்டவர் கண்டிப்பது தொல்லையல்ல: கண்டிப்பு அன்பின் அடையாளம். ஆண்டவர் கண்டிப்பில் அன்புள்ளது; எனவே அதை வேண்டாமென்பது சரியல்ல. யாவே தாவீதைக் கண்டித்துத் திருத்தும் மேன்மையான மனநிலை பற்றி 2சாமு 7:14,15 கூறுகிறது. கடவுள் தந்தையைப் போல் செயல்படுகிறார். தந்தை கண்டித்துத் திருத்துவது அன்பின் செயலன்றோ (இச 8:5)! இங்கு யாவேயின் அதிகாரத்தைக் குருநாதர் குறிப்பிடுகிறார்; தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களை ஆண்டவர் கண்டிக்கிறார் (12). கடவுள் உடலளவில் தண்டிக்கிறார் என்பது ஒரு துணிவான கூற்று. பாவியின் தண்டனை மனந்திருந்தவே. கண்டிப்பும் தண்டனையும் வேதனைப்படுத்த அல்ல, அது ஓர் ஆசிரே.

செம்பொருள்

இங்கு யாவே ஞானத்தின் பணிகளைத் தம்மேல் ஏற்றுக்கொள்கிறார். ஞானத்தின் வழி யாவேயின் சமய வழியாகிறது. மேலும் காணிக்கைகள் செலுத்தும் போது பழைய ஏற்பாட்டின் முறைமை (வச 9,10) கையாளப்படுகிறது. செல்வமும் வளமையும் பெற காணிக்கைகள் கொடுக்கப்படுகின்றன. காணிக்கைகள் கொடுக்கப்படும்போது பழங்கால இஸ்ரயேலரிடம் பேராசையும் சுயநலமும் காணப்படுவதாக ஒய்பிரே என்ற அறிஞர் கூறுகிறார்.

எனினும் இதை உடன்படிக்கை உறவுச் சூழலில் நோக்கவேண்டும் என மார்பி என்ற அறிஞர் உரைக்கிறார்.

1.6. ஞானத்தின் மேன்மை (3:13-20)

3:13 ஞானத்தைத் தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; 14 வெள்ளியை விட ஞானமே மிகு நலன் தருவது; பொன்னைவிட ஞானத்தால் வரும் செல்வம் மேலானது. 15 ஞானம் பவளத்தைவிட விலைமதிப்புள்ளது; உன் அரும்பொருள் எதுவும் அதற்கு நிகராகாது. 16 அதன் வலக்கை நீடித்த ஆயுளை அருள்கின்றது. அதன் இடக்கை செல்வமும் மேன்மையும் கிடைக்கச் செய்கிறது. 17 அதன் வழிகள் இன்பம் தரும் வழிகள்; அதன் பாதைகள் யாவும் நலம் தருபவை. 18 தன்னை அடைந்தோர்க்கு அது வாழ்வெனும் கனிதரும் மரமாகும்; அதனைப் பற்றிக்கொள்வோர் நற்பேறு பெற்றோர். 19 ஆண்டவர் ஞானத்தால் பூவுலகிற்கு அடித்தளமிட்டார்; விவேகத்தால்

வானங்களை நிலைபெறச் செய்தார். 20 அவரது அறிவாற்றலால் நிலத்தில் அடியிலிருந்து நீர் பொங்கி எழுகின்றது; வானங்கள் மழையைப் பொழிகின்றன.

பின்புலம்

ஞானத்தின் மேன்மை பற்றி இப்பகுதி கூறுகிறது. இது கவிதை நடையில் உள்ளது (பாடம் புகட்டவல்ல). யாருக்கும் இது நேரடியாகக் கூறப்படவில்லை. எதுவும் யாரிடம் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஞானம் பற்றிய கருத்துத் தொடர்கிறது, அறிவுரையும் தொடர்கிறது. ஞானமுடையவருக்குக் கிடைக்கும் பேறு என்ன என்பது பற்றிக் குருநாதர் பேசுகிறார்.

ஞானம் ஆளுருப் பெறுகிறது. வசனங்கள் 19. 20 – இரண்டாம் எசாயாவை (40:12-17, 28-31) நினைவுகூர்கின்றன. குரு நாதர்கள் கடவுளை நேரடியாகப் புகழ்வதைவிட ஞானச் சீமாட்டியைத் தெய்வீக ஞானமாக, நீடித்த ஆயுளை (16, 18) தருவதாகப் பார்ப்பது கடவுளின் செயல்பாடுகளாகப் புகழ்வதற்குச் சமமானது. (காண். ஞானச் சீமாட்டி 1:20-33; 8:1-36; 9:1-18).

நான்கு முறை இரு வரிகளைக் கொண்டதாக இப்பகுதி பாடல் அமைகிறது.

13-14: ஞானத்தைப் பெறுவதால் வரும் மகிழ்வும் அதன் பேருமையும்

15-16: அவள் வாழ்வின் கடவுளாகக் காட்டப்படுகிறாள்

17-18: வாழ்வின் கடவுளைப் பற்றித் தொடர்ந்து பேசப்படுகிறது.

19-20: படைப்பில் அவளது பங்கு (காண். 8:1-11,17-21; திபா 19)

இது நான்காம் அறிவுரை.

சொல்பொருள்

13-14 - வச 13-இல் பேறுபெற்றோர் என்ற கூற்றும் வச. 14-இல் எது பெரிது என்ற கூற்றும் உள்ளது. **அஸ்ரே** என்ற எபிரேய வார்த்தை நலன்களைப் பெற்று வாழும் மகிழ்வான வாழ்வைக் குறிக்கிறது. நலன்களைப் பெறக் காரணமாயிருப்பது ஞானத்தைக் கண்டடைவதாகும்.

ஞானத்தைத் தேடி அடைந்தோர் என்ற குருநாதரின் கூற்று மனிதனின் தேடலில் ஞானம் கைக்கூடும் என்பதைக் குறிப்பிடுகிறது. அவனால் அது அடைய முடியாததல்ல. எனினும் யோபு நூல் யாரும் ஞானத்தைக் கண்டடைய முடியாது, அது கடவுள் கொடை (28:2,20) என்கிறது. ஞானம் வருவதால் அனைத்து செல்வமும் வருகின்றது. எனவே முதலில் தேடவேண்டியது ஞானமே.

14 – ஞானம் எந்தச் செல்வத்தையும்விட மேலானது.

15 – அனைத்து ஆபரணங்களும் ஞானத்திற்கு நிகராகா.

16 – ஆம் வசனம் ஞானத்தை வாழ்வின் கடவுளாகக் காண்கிறது. நீண்ட ஆயுள் (3:2; 22:4) செல்வம் (14:24) பெருமை (8:18) ஆகியவை ஞான இலக்கியத்தில் மிகுந்த மதிப்புடையவை (காண். 1அர 3:1–15) எனினும் இவைகள் ஞானத்தின் கொடைதான் எனக் குருநாதர் கூறுகிறார். பெண் கடவுள் மாத் (எகிப்தில்) வாழ்வின் அடையாளத்தை ஒரு கையிலும் செல்வம், பெருமைகளைக் காட்டும் செங்கோலை இன்னொரு கையிலும் கொண்டுள்ளாள். இங்குக் குருநாதர் மாத்தைப் பற்றித் தனது நூலில் (வச 16) பேசுகிறார். மக்கனே என்ற அறிஞர் கபோட் (புகழ், பெருமை) என்ற வார்த்தையைக் கபெட் (பளுவான) எனவும் கூறலாம். அப்படியெனில் ஞானமுள்ள மனிதன் சமூகத்தில் மதிப்பைப் பெற்றவனாவான் என்று பொருள் கொள்ளலாம் என்கிறார்.

17–18 – ஞானம் நலம் தரும் வழிகளைக் காட்டுகிறது: வச. 6இல் கடவுள் இதைச் சொல்கிறார். வழிகள் செம்மையானவையும் பாதுகாப்புமானவையுமாய் உள்ளன.

வாழ்வெனும் கனிதரும் மரம்: வாழ்வெனும் கனிதரும் மரம் என்பது புராணக் கதைகளில் வருகிறது. மெசபொடேமிய புராணங்களில் இது காணக் கிடக்கின்றது. மேலும் மத்திய தரைக்கடல் நாடுகளில் உள்ள இனப்பெருக்கத்திற்குரிய பெண்கடவுள் இங்கு அடையாளமாகத் தரப்பட்டுள்ளார். அஷேரா என்பது கானானேய நிலம். தாய்க் கடவுளை வாழும் மரமாக இணைச்சட்டம் (16:28) உரைக்கிறது. எனினும் புராணங்களை இஸ்ரயேல் ஞான இலக்கியங்கள் விலக்கிவைத்தன. எனவே 18இல் காணப்படுவதற்கு உருவக விளக்கம் தருவது நல்லது.

ஞானம் தரும் ஆற்றல் வாழ்வு தரும் மரமாக அடையாளமாக்கப்பட்டுள்ளது. வாழ்வுதரும் மரம் ஒருவேளை நிலை வாழ்வைக் குறிப்பதாக இருக்கலாம் (கயாட்ஸ்).

19–20 – ஆண்டவர் ஞானத்தால் பூவுலகிற்கு அடித்தளமிட்டார்: கடவுள் உலகைப் படைப்பதற்கு ஞானத்தை ஆற்றலாகவும் வரைபடமாகவும் கொள்கிறார். 19வது வசனத்தில் ஒரே பொருளைத் தரும் இரு சொல்லைப் பயன்படுத்துகிறார். 'பாதாத்' – அடித்தளமிடுதல் (காண் ஆமோ 9:6; எசா 24:18; 48:13; 51:13; செக் 12:17; நீமொ 8:25) 'குன்' நிலைபெறச் செய்தல் (நீமொ 24:3; திபா 93:1; 119:90;

யோபு 28:25,27; 8:25). இந்த வார்த்தைகள் கடவுளைச் சிற்பியாகவும் கட்டுபவராகவும் அடித்தளம் இடுபவராகவும் காட்டுகின்றன (யோபு 38:4-7).

20 - அவரது அறிவாற்றலால் நிலத்தின் அடியிலிருந்து நீர் பொங்கி எழுகின்றது: நிலத்தின் அடியிலிருந்து பொங்கி எழுதல்: 'தொகொமோத்' என்ற எபிரேய வார்த்தை அடித்தளம் உடைந்து அல்லது பிளந்து பொங்கியது என்ற பொருளைத் தருகிறது. இங்குப் பழங்காலப் புராணங்களில் தொடக்கத்தில் உலகம் உண்டானபோது குழப்பத்தின் கடவுளைப் படைக்கும் கடவுள் எப்படி வெற்றிகொண்டார் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

மார்துக் கடவுள் தியாமத் என்ற காட்டுமிராண்டிக் கடவுளை வெட்டிப் பிளந்து உலகை உண்டாக்குவது பற்றிப் பாபிலோனிய இலக்கியத்தில் காணப்படுகிறது. யாவே இஸ்ரயேலைக் காப்பாற்றக் கடலைப் பிளந்தார் (விப 7:16); இங்கும் அந்தப் புராணக் கதையின் தாக்கத்தைப் படைப்பின் தொடக்கத்தில் காணலாம்.

ஒய்பிரே ஞானத்தைக் கடவுளின் பண்பாகக் காண்கிறார்.

மக்கனே ஞானத்தை யாவே கடவுளோடு இணைத்துப் பேசும் ஒரு முயற்சியாகக் காண்கிறார்.

இரண்டாம் எசாயா (40:12-17,28-31) கூறும் படைப்பு இலக்கியம் ஞான இலக்கியத்தை நாட்டுடைமையாக்கும் ஒரு முயற்சியாகப் பார்க்கப்படலாம்.

ஞானிகள் திருநூலைத் தொகுக்கும் ஆசிரியர்களாயினர். யாவே கடவுளை வணங்கிய இவர்கள் தங்கள் கருவூலங்களைச் சேர்த்தனர்; ஞான இலக்கியத்தில் சிலவற்றை மாற்றியமைத்தனர்.

செம்பொருள்

ஞானத்தின் மதிப்புக்கு அளவில்லை. அதை எதோடும் ஒப்பிடமுடியாது. பல பிற இனத்துச் சமய, கலாச்சார இனப்பெருக்கப் பெண் கடவுள்களிடமிருந்து மாறுபட்டு ஞானம், வாழ்வு, செல்வம், பெருமை எல்லாம் தருகிறது.

கடவுள் இந்த ஞானத்தை உலகை உருவாக்க, தம் அடியார்களைக் காப்பாற்றப் பயன்படுத்துகிறார். இந்த ஞானம் மனிதருக்குக் கிடைக்கும் பாக்கியமாக உள்ளது.

ஞானிகள் தங்கள் அறிவுரைகளை வெறும் ஞானமாகக் காணவில்லை. மாறாகக் கடவுளின் படைப்பாற்றலாகக் கண்டனர். ஞானச் சீமாட்டி அன்பையும்

வாழ்வையும் அணிந்த கடவுளாகப் பிற கடவுளைத் தேடிச் செல்லும் சோதனையிலிருந்து காக்கிறாள். அதே நேரம் **சமயக் கலாச்சாரமாக உலக ஞானமும்** ஒரு புதிய கலவையைப் பெறகிறது.

1.7. ஞானாசிரியரின் நல்லுரை (3:21-35)

3:21 பிள்ளாய்! விவேகத்தையும் முன் மதியையும் பற்றிக்கொள்; இவற்றை எப்போதும் உன் கண்முன் நிறுத்தி வை. 22 இவை உனக்கு உயிராகவும், உன் கழுத்துக்கு அணிகலனாகவும் இருக்கும். 23 நீ அச்சமின்றி உன் வழியில் நடப்பாய்; உன் கால் ஒருபோதும் இடறாது. 24 நீ படுக்கப்போகும் போது உன் மனத்தில் அச்சமிராது; உன் படுக்கையில் நீ அயர்ந்து தூங்குவாய். 25 பொல்லார் திகிலடைவதையும் அவர்களுக்கு அழிவு வருவதையும் காணும்போது நீ அஞ்சாதே. 26 ஆண்டவர் உனக்குப் பக்கத்துணையாய் இருப்பார்; உன் கால் கண்ணியில் சிக்காதபடி உன்னைக் காப்பார் 27 உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின் தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய மறுக்காதே. 28 அடுத்திருப்பார் உன்னிடம் கேட்கும் பொருளை நீ வைத்துக் கொண்டே, 'போய் வா, நாளைக்குத் தருகிறேன்' என்று சொல்லாதே. 29 அடுத்திருப்பார்க்கு தீங்கிழைக்கத் திட்டம் தீட்டாதே; அவர்கள் உன் அருகில் உன்னை நம்பி வாழ்கின்றவர்கள் அல்லவா? 30 ஒருவர் உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருக்கும் போது அவரை வீண் வாதத்திற்கு இழுக்காதே. 31 வன்முறையாளரைக் கண்டு பொறாமை கொள்ளாதே; அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதே. 32 ஏனெனில், நேர்மையற்றோரை ஆண்டவர் அருவருக்கின்றார்; நேர்மையாளரோடு அவர் உறவுகொள்கின்றார். 33 பொல்லாரது வீட்டின்மேல் ஆண்டவரது சாபம் விழும்; அவருக்கு அஞ்சி நடப்போரின் உறைவிடங்களில் அவரது ஆசி தங்கும். 34 செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார் 35 ஞானமுள்ளவர்கள் தங்களுக்குரிய நன்மதிப்பைப் பெறுவார்கள்; அறிவிலிகளோ இகழப்படுவார்கள்.

பின்புலம்

அய்ந்தாம் அறிவுரை விவேகத்தையும் முன்மதியையும் பெற்றுக்கொள்ள அழைக்கிறது. ஏனெனில் உனக்கு வாழ்வு கிடைக்கும், பாதுகாப்பு இருக்கும், உன் நிம்மதி அகலாது. ஒரு சமூகத்தில் வாழ எது தேவையோ, குடும்பத்திலும் அயலாரோடும் நல்லுறவு கொள்ள எது நல்லதோ அது கிடைக்கும். இப்பகுதியில் வரும் அறிவுரை குடும்ப வாழ்வு பற்றியது. மக்கனேயின் கருத்துப்படி விவேகமும் முன்மதியும் கட்டளையாகக் கொடுத்தபின் அதனால் விளையும் பயன் (வச 22) உயிராகவும் அணிகலனாகவும் இருந்தாலும் பின்வரும் வரிகள் (வச 24-26) தெளிவாகத் தொகுக்கப்படவில்லை. விவேகமும் முன்மதியும் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இந்த வரிகள் பாதுகாப்பு அளிக்கும் யாவே கடவுளில்

நம்பிக்கை வைப்பதை அழுத்தமாக கூறுகிறது. இப்பகுதியில் ஆறு முறை செய்யாதே என்ற எதிர்மறைக் கூற்றும் அறிவுரையும் வருகின்றன.

சொல்பொருள்

21-24 - மறுபடியும் பிள்ளாய் எனத் துவங்கும் இக்கூற்றை இப்பகுதியின் முன்னுரையாகக் கொள்ளலாம். 21ஆம் வசனத்தில் அறிவுரையும் தடுப்புரையும் குருநாதர் தருகிறார். விவேகத்தையும் முன்மதியையும் பெற்றபின் அதை நழுவவிடாமல் காத்துக்கொள்ள மாணாக்கரை அழைக்கிறார். குருநாதரின் கணிப்பின்படி ஒருவர் பெற்றுக்கொண்ட ஞானம் எப்போதும் அவரோடு இருக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. கற்பதும் கற்றபடி நடப்பதும் தொடர வேண்டும். இல்லையெனில் எல்லாம் இழக்க நேரிடும். இது ஒரு தொடர் முயற்சி. வாழ்நாள் முழுதும் விழித்திருந்து கற்றதை மனதில் கொள்ளவேண்டும்.

22-23 - விவேகமும் முன்மதியும் (ஞானம்) வாழ்வை வளமாக்கி உயிரூட்டம் தரும். முன்மதி சரியான முடிவை எடுக்க உதவும் ஞானம் என்பர் (நீமொ 1:4; 5:2; 8:12).

22 - உனக்கு உயிராகவும்: எபிரேயத்தில் 'நெபெஸ்' என்ற வார்த்தை ஆன்மாவை, அதாவது உயிருள்ள வாழ்வைக் குறிக்கும்.

கழுத்துக்கு அணிகலன்: இது அழகு, எழில் என்பதை உருவகமாகக் கூறுகிறது. சிந்தனையும் அழகும் கைகோர்த்துச் செல்கின்றன. ஞானம் நிறைந்த வாழ்வு ஒரு சமுதாயத்தை ஞானம், அருள், ஒருங்கமைவு என்பவற்றால் அழகுசெய்கிறது.

24 - விவேகமும் முன்மதியும் அச்சம் அண்டாதபடியும் தூக்கம் கலையாதபடியும் பார்த்துக்கொள்ளும் என்பது தெளிவு.

25-32 - இந்தப் பகுதியில் (25-31) 6 எதிர்க்கூற்றுகள் தரப்பட்டுள்ளன. 32இல் நோக்கம் கூறப்படுகிறது. எதிர்க்கூற்றுகள் ஞானிகளுக்கும் மூடருக்கும் இடையே உள்ள முரண்பாடுகளைக் காட்டுகின்றன.

25 - எதிர்கூற்றாக முதலில் அஞ்சாதே என்கிறார் (காண் 1:26). தீயவர்களுக்கு வரும் அழிவு: போரில் தோல்வி, கொள்ளை நோய். (நீமொ 1:27; எசா 10:3; 47:11; எசே 38:9). தீயவர்களுக்கு வரும் அழிவினால் அச்சம் கூடாது. ஏனெனில் அவர்களை ஆண்டவர் எல்லா தீமையிலிருந்தும் காக்கிறார்.

கொடுமைகள் தீயவர்களை நெருப்பாகச் சுட்டெரித்து அழிக்கையில் ஞானிகளுக்கு யாவே பாதுகாப்பாக இருக்கிறார். பெர்து என்பவர் இதை ஏற்பது கடினமாக இருக்கிறது. ஏனெனில் பாபிலோனிய அடிமைத் தளையில் அனைத்தையும் இழந்து தங்களது முகவரியும் பெருமையும் மறையும் நிலையிலிருந்து வந்தபோது இப்படி எழுதுவதை ஏற்பது கடினமாயுள்ளது என்கிறார்.

எனினும் இது யாவே கடவுள்மீது கொண்டுள்ள பற்றை வலியுறுத்துகிறது. தீயோர்களை ஆட்டிப் படைக்கும் அனைத்துக் கொடுமையான வாதைகளும் நோய்களும் மாணாக்கரை அண்டுவதில்லை (காண். திபா 4:8; 139).

27-28 - அடுத்திருப்போருக்குக் கருணையை, நல் மனத்தைக் காட்ட இப்பகுதியில் அழைக்கிறது. இது யாவே குடும்பத்தில் குடும்ப உணர்வோடு வாழ அழைக்கும் இணைச்சட்ட நூலின் கருத்தைத் தாங்கி வருகிறது எனலாம்.

எனினும் வச 27-30இல் வரும் கருத்துகளுக்கும் சொற்களுக்கும் யாவே மரபைப் பின்பற்றிய விளக்கங்கள் தேவையில்லை, மாறாக உலக ஞான இலக்கிய விளக்கங்களோடு இவை ஒத்துப்போவதாக உள்ளன. உண்மை, ஒரு சமூகத்துக்குத் தேவையான அன்பு, உதவி, நல்மனம் போன்றவை ஒரு நல்ல அரசாங்க ஊழியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அடுத்திருப்பவரிடம் காட்டும் கனிவு ஏற்புடையது. அடுத்திருப்போர்க்குத் தேவைப்படுவதை அறிந்து உதவுவதும், (27) இருக்கும்போதே இல்லை என்று சொல்லாதிருப்பதும் (28) ஓர் அரசாங்க ஊழியரின் கடமை.

'போய் வா; நாளை தருகிறேன்' (28) என்பது தனது ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்துவதாகும்.

'நாளை தருகிறேன்' என்பது கொடுக்காமையைக் குறிக்கும். ஏனெனில் நாளைக்கு உனக்கு அடுத்திருப்பவருக்கு அந்தத் தேவை இருக்குமா? நாளை அவர் இருப்பாரா? இருந்தாலும் உன்னிடம் வருவாரா? மேலும் நாளை நீ வாழ்வாயா? வாழ்ந்தாலும் உன்னிடம் பொருள் இருக்குமா? பொருள் இருந்தாலும் கொடுக்கும் மனம் இருக்குமா?

மேலும் நாளை என்பது நம் கையில் இல்லை. நம்மிடம் இருப்பது 'இப்பொழுது மட்டுமே' காலம் கடத்துவது சிலருக்குக் கைவந்த கலையாகிவிடுகிறது.

அடுத்திருப்போர்: உறவினர், இஸ்ரயேலர், அந்நியர் தேவையில் இருப்போர் அனைவரையும் குறிக்கும்.

ஞான இலக்கியம் செல்வத்தை விடுத்து வறுமையான வாழ்வை வாழ அழைக்கவில்லை. ஆனால் தேவையில் இருப்போருக்கு உதவச் சொல்கிறது. குருநாதர்கள் தர்மம் செய்வதைப் போற்றினர். இங்கு ஒருவரிடம் செல்வம் உள்ளதா என்பதல்ல, தாராள மனம் உள்ளதா என்பதே கேள்வி!

29 - அடுத்திருப்பவருக்குத் தீங்கிழைக்காதே: இங்கு அடுத்திருப்பவர் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவராகவோ, வீட்டில் வாழ்பவராகவோ இருக்கலாம். இவர் உன்னை நம்பி வாழ்பவர்; உனக்குத் தீங்கிழைக்காதவர். எந்தச் சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டவருக்கு எதிராகத் தீய எண்ணத்தோடும் மனவெறுப்போடும் சதித் திட்டம் தீட்டுவதைக் குருநாதர் குறிப்பிடுகிறார்.

நம்பியவருக்குத் துரோகம் இழைப்பது மிகக் கொடிய செயல், இது குடும்ப நல்லுறவைக் கெடுக்கும். அமைதியான சமூக வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கும்.

30 - ஒரு தீங்கும் செய்யாதபோது தீங்கிழைப்பது: காரணமில்லாமல் பிறரோடு வாய்ச் சண்டையோ, மற்ற கலகங்களோ செய்வது தவறானது. இத்தகையோரது மூச்சிலும் பேச்சிலும் எப்போதும் சண்டைக்கு இழுக்கும் குணம் நடமாடுகிறது.

வீண் விவாதம்: இது நீதிமன்ற வழக்கை (விப 23:2,3,1; இச 6:15) அல்லது விவாதங்களை, சண்டையைக் குறிக்கலாம் (நீமொ 15:8; 17:14; 20:3; 26:17). சண்டையில்லா வாழ்வைக் குடும்பத்தில் அல்ல, சமூகத்தில் தவழவிட அறிவுரை தருகிறார்.

31 – வன்முறையாளர் தான் விரும்புவதை அடைய எந்த வன்முறையிலும் ஈடுபடுபவர். அவருக்கு என்ன விளைவு ஏற்படுகிறது என்பதில் அக்கறையில்லை. எந்தத் தண்டனையும் இல்லாதிருப்பதால் அவர் துணிவுடன் மேலும் தீமைகளைச் செய்கிறார். இவர்கள் மக்களின் எதிரிகள், துணிந்து கொலை செய்பவர்கள் (தொநூ 6:11,13; யோபு 16:17; 19:7).

பொறாமை கொள்ளாதே, அவர்களைப் பின்பற்றாதே என்னும் அறிவுரை நல்லதாக இருந்தாலும் அதைத் தட்டிக்கேட்க ஆசிரியர் கூறவில்லை. இது நல்லது செய்யத் தவறும் குற்றமல்லவா?

32 - நேர்மையற்றோர்: இவர்கள் தீய வழியில் செல்பவர்கள். கடவுள் அவர்களை வெறுக்கிறார் (காண் நீமொ 21:27; 28:9).இவர்கள் ஆணவம், பொய், மாசற்றோரின் இரத்தம் சிந்தும் கொடூரம் (6:16-19) கொண்டவர்கள் (6:16-19). இந்த மனிதர்களைப் பின்பற்றாதே (31) காரணம் கடவுள் அவர்களை வெறுக்கிறார்.

நேர்மையாளர்: எளிமை, உண்மை, திறந்த மனம் உடையவர்.

33-35 - பொல்லார் வீட்டின்மேல் சாபம்: சாபம் பொல்லார்க்கு மட்டுமல்ல குடும்பத்திலுள்ள எல்லாருக்கும் கிடைக்கும்; அதற்கு மாறாக நேர்மையாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆண்டவரின் ஆசிர் கிடைக்கும். குருநாதர்கள் குடும்பம் அல்லது சமூகம் ஒட்டுமொத்தமாக இந்தத் தீமை நன்மையின் விளைவுகளை அடையும் என நம்பினர்.

34 - செருக்குற்றோரை ஆண்டவர் இகழ்ச்சியுடன் நோக்குகிறார்: செருக்குக் கடவுளுக்குப் பிடிக்காது. இவர்கள் தங்கள் பேச்சிலும் செய்கையிலும் தங்களைப் பெற்றோரைவிடப் பெரியவர் எனக் கருதுகின்றனர். அவர்களுக்கு எந்த அறிவுரையும் எடுபடாது (நீமொ 1:22; 9:7-8; 15:12; 21:24).

தாழ்நிலையில் உள்ளவர்: கனிவுடையவர். இவர்கள் வன்முறைக்குப் பலியானவர்கள் (நீமொ 22:22; 30:14; 3:19,20).

35 - இறுதியில் ஞானிகள் நன்மதிப்பையும் அறிவிலிகள் இகழ்ச்சியையும் பெறுவர். எதிர்மறையான குணமுடையோரைக் காட்டித் தீயவர்களிடம் கடவுள் எப்படி கடுமையாகவும், நல்லோரிடம் எப்படி கனிவாகவும் நடந்துகொள்கிறார் என்பதைக் குருநாதர் முன்வைக்கிறார்.

செம்பொருள்

குருநாதர் மாணாக்கர்களுக்கு விவேகமும் முன்மதியும் இருக்க வேண்டும் என அறிவுரை தருகிறார். வாழ்வில் நல்ல முடிவுகளை எடுப்பதால் பாதுகாப்பும் சுகமும் அமையும்; கடவுளின் பாதுகாப்பான பார்வையை அனுபவிக்கவும் முடியும் என்கிறார்.

இந்த பண்புகள் நீதியோடும் நேர்மையோடும் வாழவும் எல்லோரோடும் இணைந்து வாழவும் உதவுகிறது. வன்முறையாளர்கள் யார் என்பது தெரியவில்லை. அது அறநெறிகளையும் நேர்மையான வழிகளையும் மறந்து எந்த வழியிலும் செல்வத்தையும் வலிமையையும் பெறும் கொள்ளையர்களையும்

குழப்பக்காரர்களையும் குறிக்கலாம். இவர்கள் சமூகத்திற்கு மிகப் பெரிய இழப்பையும் குழப்பத்தையும் தருகின்றனர்.

1.8. ஞானத்தினால் வரும் நன்மைகள் (4:1-27)

4:1 பிள்ளைகளே! தந்தையின் போதனைக்குச் செவிசாயுங்கள்; மெய்யுணர்வை அடையும்படி அதில் கவனம் செலுத்துங்கள் 2 நான் உங்களுக்கு நற்போதனை அளிக்கின்றேன்; நான் கற்பிப்பதைப் புறக்கணியாதீர்கள்; 3 நான் என் தந்தையின் அருமை மைந்தனாய், தாய்க்குச் செல்லப் பிள்ளையாய் வளர்ந்து வந்தேன். 4 அப்பொழுது, என் தந்தை எனக்குக் கற்பித்தது இதுவே; "நான் சொல்வதை உன் நினைவில் வை; என் கட்டளைகளை மறவாதே; நீ வாழ்வடைவாய். 5 ஞானத்தையும் மெய்யுணர்வையும் தேடிப் பெறு; நான் சொல்வதை மறந்துவிடாதே; அதற்கு மாறாக நடவாதே; 6 ஞானத்தை புறக்கணியாதே; அது உன்னைப் பாதுகாக்கும்; அதை அடைவதில் நாட்டங்கொள்; அது உன்னைக் காவல் செய்யும். 7 ஞானத்தைத் தேடிப் பெறுவதே ஞானமுள்ள செயல்; உன் சொத்து எல்லாம் கொடுத்தாயினும் மெய்யுணர்வைத் தேடிப் பெறு. 8 அதை உயர்வாய்க் கொள்; அது உன்னை உயர்த்தும்; அதை நீ தழுவிக்கொள்; அது உன்னை மாண்புறச் செய்யும். 9 அது உன் தலையில் மலர் முடியைச் சூட்டும்; மணிமுடி ஒன்றை உனக்கு அளிக்கும்." 10 பிள்ளாய்! கவனி; நான் சொல்வதை ஏற்றுக்கொள்; அப்பொழுது உன் ஆயுட்காலம் நீடிக்கும். 11 ஞானத்தின் வழிகளை உனக்குக் கற்பித்திருக்கின்றேன்; நேரிய பாதைகளில் உன்னை நடத்தி வந்தேன். 12 நீ நடக்கும்போது உன் கால் சறுக்காது; நீ ஓடினாலும் இடறி விழ மாட்டாய். 13 பெற்ற நற்பயிற்சியில் உறுதியாக நிலைத்துநில்; அதை விட்டுவிடாதே; அதைக் கவனமாய்க் காத்துக்கொள்; அதுவே உனக்கு உயிர். 14 பொல்லார் செல்லும் பாதையில் செல்லாதே; தீயோர் நடக்கும் வழியில் நடவாதே. 15 அதன் அருகில் செல்லாதே; அதில் கால் வைக்காதே; அதைவிட்டு விலகி உன் வழியே செல். 16 தீமை செய்தாலன்றி அவர்களுக்குத் தூக்கம் வராது; யாரையாவது கீழே வீழ்த்தினாலன்றி அவர்களுக்கு உறக்கம் வராது. 17 தீவினையே அவர்கள் உண்ணும் உணவு. கொடுஞ் செயலே அவர்கள் பருகும் பானம். 18 நேர்மையாளரின் பாதை வைகறை ஒளி போன்றது; அது மேன்மேலும் பெருகி நண்பகலாகின்றது. 19 பொல்லாரின் பாதையோ காரிருள் போன்றது; தாங்கள் எதில் இடறி விழுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது 20 பிள்ளாய்! என் வார்த்தைகளுக்குச் செவிகொடு; நான் சொல்வதைக் கவனி. 21 உன் கவனத்தினின்று அவை விலகாதிருக்கட்டும்; உன் உள்ளத்தில் அவற்றைப் பதித்து வை. 22 அவற்றைத் தேடிப் பெறுவோருக்கு அவை உயிரளிக்கும்; அவர்களுக்கு உடல் நலமும் தரும். 23 விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய்; ஏனெனில், அதனின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை உறுதிசெய்யும். 24 நாணயமற்ற பேச்சு உன் வாயில் வரக்கூடாது; வஞ்சகச் சொல் உன் வாயில் எழக்கூடாது. 25 உன் கண்கள் நேரே பார்க்கட்டும்; எதிரே இருப்பதில் உன் பார்வையைச் செலுத்து. 26 நேர்மையான பாதையில் நட; அப்பொழுது, உன் போக்கு இடரற்றதாயிருக்கும். 27 வலப்புறமோ இடப்புறமோ திரும்பாதே; தீமையின் பக்கமே காலெடுத்து வைக்காதே.

பின்புலம்

இந்த அதிகாரத்தை மூன்று பாகமாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். (1) 4:1-9 தந்தை தன் தந்தையிடமிருந்து தான் பெற்றதை மகனுக்குத் தருகிறார். (2) 4:10-19 அறிவுரை (3) 4:20-27 எச்சரிக்கை.

இங்கு ஒரே கருத்துக் கூறப்படவில்லை. முதலில் ஞானதோடு உள்ள அன்புறவு கூறப்படுகிறது. தாம் பெற்றதை மகனுக்குத் தந்தை தருகிறார். பின்பு நல் வழிகள், தீய வழிகள் பற்றிய அறிவுரை தருகிறார். வாய் வழியாகத் தாம் தந்தையிடமிருந்து பெற்றதைத் தம் மகனுக்குத் தருகிறார். வாய்மொழிகள் வழியா அல்லது இலக்கியம் வழியா என்று அறுதியிட்டுச் சொல்வது கடினம்.

இங்குச் சமய விளக்கம் இல்லை. மேலும் முன்னோர்களின் அறிவுரை முன்பே இருந்தது என்று கருத முடிகிறது. இங்கு இஸ்ரயேல் ஞான இலக்கியம் மற்ற நாடுகளிலிருந்த அறிவுரைபோல் அதிகாரப் போதனையாகக் கூறப்படுகிறது.

தாம் பெற்றதைத் தந்தை தனையனுக்குக் கொடுப்பதைத் தம் சுயசரிதைபோலக் கூறுகிறார். இது தந்தையின் போதனை என்றாலும் மரபுப் போதனை எனக் கொள்ளலாம். எனவே அதற்கு அதிகாரமும் தகுதியும் உண்டு. மரபு ஒரு வாழும் தொடர் அனுபவம். ஆசிரியருக்கும் அதில் பங்குண்டு மரபைக் கேள்விக்குள்ளாக்கி தாம் பெற்ற கல்வியாலும் அனுபவத்தாலும் அதைப் போதிக்கிறார். அதில் அவர் அதிகாரம் உள்ளவராகிறார். எல்லாவற்றிற்கும் இதயத்தையும் மனதையும் செலுத்திக் கிரகித்துக் கொள்வது மாணவனின் கடமை. 4:1-9 ஆறாம் அறிவுரை; 4:10-27 ஏழாம் அறிவுரை.

சொல்விளக்கம்

1 - தந்தையின் போதனை: தந்தையின் போதனை கடவுளிடமிருந்து வருகிறது (2:1-6), தந்தையின் அதிகாரத்தின் வழியாகக் கடவுள் தனது விருப்பத்தை எடுத்துரைக்கிறார். அதிகாரத்தின் இரண்டு ஊற்றுகளையும் நாம் காணமுடிகிறது. தந்தை தரும்போதனையில் தாய்க்கும் பங்குண்டு. எனவே இது பெற்றோரின் போதனை என்றும் கூறலாம். இதனால் தாயின் ஞானத்துக்கும் மதிப்புக்கொடுக்கப்படுகிறது.

மேலும் மரபு ஞானத்தையும் அதன் அதிகாரத்தையும் அறிவுறுத்துவோர் உண்டு.

2 – பிள்ளைகளே என்று பன்மையில் கூறுவது அது எல்லாருக்கும் உரியது என்பதைக் குறிப்பதாக இருக்கலாம். இவ்வாறு குடும்ப நலம் பேணப்படுகிறது. போதனையைக் கேட்பதும் கடைப்பிடிப்பதும் நல்ல மாணவர்களின் கடமை.

3 – பெற்றோரிடமிருந்து பெற்ற பயிற்சி பிற்காலத்தில் மகனையும் அந்நிலையை அடைய வழிவகுக்கும். அதைப் பெருமையோடு எடுத்துரைக்கிறார்.

4 – வசனங்கள் 4-9 தந்தையிடமிருந்து பெற்றது மேற்கோளாகத் தரப்படுகிறது. கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், ஞானத்தைத் தேடவும் தந்தை தொடர்ந்து தனக்கு அழுத்தம் கொடுத்ததைத் தனையன் எடுத்துரைக்கிறார். கீழ்ப்படிதல் ஞான அறிவுரைக்கு மிகமிகத் தேவையான பண்பு. நீ அடையும் வாழ்வு கடவுள் அருளும் பாதுகாப்புக்கு ஒத்தது.

5-9 – ஞானத்தையும் மெய்யணர்வையும் தேடிப் பெறுவது இப்பகுதியின் மையமான அறிவுரையாகக் கருதப்படுகிறது. மெய்யுணர்வை ஞானத்துக்கு ஒப்பிடலாம். கடினமான, குழப்பமான, புதிர்கள் நிறைந்த சூழலை நன்கு ஆய்ந்து நல்லது எது எனக் கண்டுணர்ந்து சீரிய முறையில் வாழ்வதை மெய்யுணர்வு எனலாம் (3:5 23:4 30:2). ஞானம் எல்லாவற்றிலும் முன்னிலையும் முதன்மை நிலையும் அடைகிறது. அதற்கு ஈடு இணை எதுவுமில்லை. ஞானம் மனித வாழ்வை வடிவமைக்கிறது.

ஞானம் தன்னை விரும்புவோரிடமிருந்து எதிர்பார்ப்பது நேர்மையும், அதையடைவதில் மிகுந்த நாட்டமுமாகும்.

'தேடிப்பெற்றுக்கொள்' என்ற சொல் 5ஆம் வசனத்தில் இரண்டு முறையும் 7-ஆம் வசனத்தில் இரண்டு முறையும் வருகிறது. இது திருமண ஒப்பந்தத்திற்குச் சீதனம் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுக்கொள்வதுபோல் உள்ளது. காரணம் ஞானத்தை அடைவதில் நாட்டங்கொள் (6), அதைத் தழுவிக்கொள் என்பது இக்கருத்தை அழுத்தமாக வலியுறுத்துகிறது. ஞானம் உன்னைப் பாதுகாக்கும் (6) உன் தலையில் மலர் முடியைச் சூட்டும், மணிமுடி ஒன்றை உனக்களிக்கும். ஞானம் அன்பு செய்யும் பெண்ணாக, மணமகனால் ஆரத் தழுவப்படும்போது அவனை மாண்புறச் செய்பவளாகக் காண்கிறோம். உன் சொத்தெல்லாம் கொடுத்தாயினும் மெய்யுணர்வைப் பெறு (6) என்பது திருமணத்தில் கொடுக்கப்படும் சீதனத்தைச் சுட்டலாம்.

ஞானத்தைத் தேடிப் பெறுவது பொருளாதாரச் சட்டம்போலும். அதன்மீது நாட்டம் கொள்வது பாலுறவைக் குறிப்பதுபோலும் உளது (மைன் கோல்ட்).

எனினும் பொருள் கொள்வதில் எச்சரிக்கை வேண்டும் என்றும் கூறப்படுகிறது. ஈசா சாரா எனும் தெய்வத்தோடு தகாத உறவில் ஈடுபடும் சடங்குகளை எதிர்ப்பதாகவும் உள்ளது (போஸ்ரேம்). மேலும் ஞானம் மாணக்கரின் மணவாட்டியாக இருக்கவேண்டும். மாற்றுப் பெண் கூடாது என்று கூறுவதாகவும் உள்ளது (ரிங்ரேன்).

6 – ஞானத்தைப் புறக்கணியாது அதன்மீது காதல் கொள்ளவேண்டும். இது எப்பாடு பட்டேனும் ஞானச் சீமாட்டியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதை அழுத்தமாகக் கூறுகிறது (வச 5). இது ஆண்டவரை அன்புசெய்ய மோசே இஸ்ரயேலருக்குக் கட்டளை இடுவதுபோலுள்ளது (இச 6:5..; 11:1; 13:22). பாதுகாப்பதும் காவல் செய்வதும் அன்பு செய்வதன் நோக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

7 – நீ வைத்திருக்கும் அனைத்தையும் கொடுத்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தயக்கம் எதுவும் தேவையில்லை.

8 – ஞானத்துக்கு மதிப்புக் கொடுத்து அதைத் தழுவிக்கொள்ளும் போது தக்க பரிசு உனக்குக் கிடைக்கும்.

9 – ஞானம் தரும் வெகுமதிக்கு அளவேயில்லை. அது உன்னை மணம்புரியும் அளவுக்குத் தன்னை மணப்பெண்ணாக்கிக் கொள்கிறது.

10 – பிள்ளாய்: என் மகனே என்று அழைப்பதால் தந்தையே இப்போது ஆசானாகிறார். சொல்வதை ஏற்றால் நீடிய ஆயுள் கிடைக்கும் என்கிறார் (வச 13; 3:2). இணைச்சட்டம் கூறும் இறையியலிலும் இது வலியுறுத்தப்படுகிறது (30:16,19).

11-12 – இறந்த காலத்தில் இது எழுதப்பட்டுள்ளது. எனவே தந்தை, ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் உள்ள உறவு முடிவுறுகிறது. மாணவரே இப்போது ஆசிரியராகிறார். தான் பெற்ற பயிற்சியில் முதிர்ச்சி பெற்று அந்த வழிகளில் நடக்கவும் பிறருக்குக் கற்பிக்கவும் தயாராகிறார். நல்ல பக்குவப்படுத்தப்பட்ட, தூய சமுதாயத்தை உருவாக்க முயல்கிறார்.

ஞானத்தின் வழிகள் – என்பது பாதை, அடியெடுத்து வைத்தல், வழிகாட்டுதல், ஓடுதல், தடுமாறுதல், நடத்தல் போன்ற பொருள்களைச் சுட்டும். இது

நடைமுறை வாழ்வைக் குறிக்கிறது. இது அறவாழ்வை, நேரிய வாழ்வையும் சுட்டுகிறது. இந்தப் பாதை அகலமான, நேரான பாதை, எனவே கால் சறுக்காது; நீ கீழே விழமாட்டாய் (4:12). நேர்மையாளர்கள் எல்லா தீமைகளிலிருந்தும் விடுபடுவார்கள்.

13 – ஞானத்தை உள் மனதில் பற்றிக்கொள்ள இரண்டு கட்டளைகளைக் கொடுத்தவர் இப்போது அதைக் காத்துக்கொள்ள மூன்று உபாயங்கள் தருகிறார். 1. பயிற்சியில் உறுதி. இது ஒரு தொடர் முயற்சியாக இருக்கவேண்டும் 2. அந்தத் தொடர்ப் பயிற்சியை விட்டுவிடாதே 3. பிறகு ஞானத்தைக் காத்துக்கொள். காரணம் 'அது உனக்கு உயிராகும்': இவ்வாறு ஞானம் வாழ்வோடு தொடர்புபடுத்தப்படுகிறது (3:22; 4:22; 8:35).

14 – நேரிய வழியில் நடக்கச் சொல்லும் ஆசிரியர் 'தீய வழிகளை'ப் பற்றி எச்சரிக்கிறார். தீமை எந்த அளவுக்கு மாணாக்கரைக் கெடுத்துவிடும் என்பது ஆசிரியருக்குத் தெரியும். எனவே தம் அழுத்தமான வார்த்தைகளால் அவைகளிடமிருந்து விலகி நிற்க வேண்டுகிறார். 'பொல்லாதார் பாதையில் செல்லாதே; தீயோர் வழியில் நடவாதே' என்கிறார். *டெரெக், ஓரா* இரண்டும் வழி, பாதையைக் குறிக்கின்றன.

15 – அதன் அருகில் செல்லாதே, அதில் கால் வைக்காதே, அதை விட்டு விலகு, உன் வழியில் செல் என்பது ஆசிரியரின் மிக அழுத்தமான அறிவுரையாகவும் அவரது எச்சரிக்கையாகவும் இருக்கிறது.

16 – பொல்லாரும் தீயோரும்: இவர்கள் சட்டத்தை மதியாதோர், நெறிமுறைகளை மீறுபவர்கள், வன்முறை செய்பவர்கள். இவர்கள் இதைச் செய்தே வாழ்பவர்கள். தீயதைக் கருத்தரித்து யாருக்காவது தீங்கு விளைவிக்காமல் இவர்களுக்குத் தூக்கம் வராது. இந்தத் தீமையைத் தொடர்ந்து செய்து இதனால் பிழைப்பு நடத்துபவர்கள் இவர்கள் (17). இவர்கள் தூங்கவேண்டுமெனில் நன்மை செய்யவேண்டும். அது அவர்களுக்கு வெகு தொலைவில் உள்ளது. இவர்கள் இரவில் வேலை செய்பவர்கள். மீக்கா கூறுவதுபோல "தங்கள் படுக்கையிலே அமர்ந்து அவர்கள் தீமை செய்யத் திட்டமிடுகிறார்கள்" (2:1). இது அவர்களில் உடற் கூறுகளில் ஒன்றாகிவிடுகிறது. பிறரை வீழ்த்தி வாழ்வதே இவர்களது பிழைப்பாகிவிடுகிறது. தீமையே இவர்களது சிந்தனையும் வாழ்வுமாகிறது. உருவகமாகப் பேசி கொடியோரின் கொடூரத்தை எடுத்துரைக்கிறார் (2:12-15) ஆசிரியர்.

17 – அவர்கள் உண்ணும் உணவு தீய வழிகளில் பெற்ற உணவு. எனவே தீமை அவர்களது அனுதின உணவாகிறது (யோபு 5:16). இன்னொருவர் இறப்பில் தன் வாழ்வை அமைத்துக்கொள்பவர்கள் இவர்கள். அவர்கள் பருகும் பானம் இரசம். உணவை உண்கையில் இரசம் பருகுவது உண்டு. இதை ஒட்டுமொத்தமாகச் சாப்பாடு என்பர். தீயோர் தங்கள் வாழ்வைத் தக்கவைக்கக் கொலை செய்வர், இரத்தம் சிந்துவர். இரசம் பலியானவரின் இரத்தத்தைக் குறிக்கலாம். நிறைய கிண்ணங்களில் இரசம் நிரப்பி விருந்து படைக்கும் இவர்கள் பல கொலைகள் புரிந்திருக்கவேண்டும் (காண் 1:10-19).

18 – ஒளி என்பது உண்மைப் பற்று, அறநெறி, இதனால் விளையும் பாதுகாப்பு, மீட்பு, வளமை அனைத்தையும் குறிக்கும் (திபா 43:3; யோபு 22:28; 29:2-3). 'கடவுளே ஒளி' (திபா 27:1). நேர்மையாளரின் பாதை இடையூறு எதுவுமின்றி, தீமைகளின் தொல்லை எதுவுமின்றிச் செல்லும் பாதையாகிறது. தொடர்ந்து நல்லோர் ஞானத்திலும் பண்பிலும், நீதியிலும் நேர்மையிலும் வளர்ந்து ஒளி வீசுவர் (மாற் 4:28).

19 – கண் தெரியாதவர் பகலிலும் தட்டுத்தடுமாறுவதுபோல் பொல்லார் இருளில் தடுமாறுவர் (இச 28:29). பாவத்திற்கும் சாவுக்கும் இடையே உள்ள தொடர்பு அவர்களுக்குத் தெரிவதில்லை. ஏனெனில் இவர்கள் மனசாட்சி மங்கிப்போயிற்று இறை வெளிப்பாட்டை இவர்கள் மூடிவிட்டனர் (காண் 5:6; 9:13; 7:23; 9:8; தீயோருக்குப் பாதை தெரிவதில்லை) இடறி விழுவது அவர்களுக்குத் தெரிவதில்லை. இதை இப்பகுதியில் அடிக்கடி காண்கிறோம்.

20-27 – இப்பகுதியில் உடலின் அங்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. காது (20), கண்கள் (21), இதயம் (உள்ளம்) (21,23), உடல் (22), வாயும், உதடுகளும் (24) கண்களும் விழிகளும் (25) கால்கள் (26,27). உடல் முழுதும் அறிவுரைக்குச் செவிமடுத்து நேரியவழியில் செல்லவேண்டும் என்று கூறப்படுகிறது.

20 – பிள்ளாய்: இது அறிவுரையைக் கேட்க மகனுக்குக் கொடுக்கும் ஒரு தனிப்பட்ட கட்டளை. முழுக் கவனத்துடன் செவிமடுக்க ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

21 – ஞானம் தொடர் கவனத்தையும் தேடலையும் முன்வைக்கிறது. கண் முன் வை என்பது எழுதப்பட்ட ஞான இலக்கியத்தைக் குறிக்கிறது. மேலும் பத்துக் கட்டளைகள் தூயகத்தின் மத்தியில் வைக்கப்பட்டதுபோல இதயத்தின் மத்தியில் அறிவுரைகளை வைப்பது ஞானத்தைக் கடைபிடிக்க மேற்கொள்ளும் முயற்சியை

வலியுறுத்துகிறது. ஆசிரியரின் அறிவுரையை உள்வாங்கி அதை மனத்தில் பதிக்கவேண்டும். கூர்ந்து கவனித்து, சிந்தித்து, உரையாடி தேர்ச்சி பெறவேண்டும்.

22 – தெளிவான அறிவுரை மனிதனுக்கு உயிரளிக்கும் என்பது இழந்த வாழ்வு மறுபடியும் உயிர்பெறும் என்பதைக் குறிக்கும். உடல் நலம் ஒவ்வொரு அங்கமும் நலமடையும் என்பதைச் சுட்டுகிறது; முழு நலத்தைப் பற்றிக் கூறுகிறது.

23 – ஞானத்தின் வழி என்பது அவ்வழியில் பயணிப்போரின் 'இதயம்' எனலாம். மாணவன் தந்தையின் அறிவுரையை மனத்தில் ஏற்று அதை எல்லாவற்றிலும் மேலாகக் காக்கவேண்டும். இதயம் மனிதனில் மையத்தில் உள்ள அங்கம். அதை 'மனது' என்றும் கூறுவர். செவிசாய்க்கும் இதயம் என்பதும் புரியும் மனது என்பதும் (1அர 3:9) பொதுவாக ஒரே பொருளைத் தருகிறது. இதுதான் மனித சிந்தனை, மனநிலை, மனிதனது பழக்க வழக்கங்களை நிர்ணயிக்கிறது.

மனது பாழ்பட்டால் வாழ்வும் பாழ்பட்டுவிடும் (1அர 11:3-4,9); தந்தையின் அறிவுரை மனதிலிருந்தால் அதுவே வாழ்வும் நலமுமாகும் (21). இதயம் வாழ்வின் ஊற்று, வாழ்வின் போக்கை உறுதிசெய்வதும் அதுதான். இதயத்தைக் காப்பது என்பது தீய வழிகளிலிருந்து காப்பதாகும்.

24 – இதயம் மட்டுமல்ல உடலின் மற்ற அங்கங்களும் அதனதன் பாதையில் நேராகச் செல்ல வேண்டும். இவை நேரிய வாழ்வை எவ்வளவு நேர்த்தியாக வாழவேண்டும் என்பதைக் குறிக்கின்றன. வாய்தான் மனதில் என்ன இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. 'ஒருவர் பேசுவதே அவர்' (லூக் 6:45 உரோ 10:10). உண்மையைத் திரிப்பதோ, கூறுபோடுவதோ, உருமாற்றுவதோ, மங்கலாக்குவதோ கூடாது. வாயும் நாவும் ஒன்றையே குறிக்கிறது. உதடுகளும் வாயைக் குறிக்கின்றன. பிறரைக் கெடுக்கும் வஞ்சகச் சொல் வாயில் எழக்கூடாது.

25 – கண்கள்: சாலையில் கவனம் சிதறாது நேரிய பாதையில் கண் வைத்து வாழ்வைச் செலுத்த வேண்டும். கண்கள் அறிவுரையைத் தக்கவைக்க உதவின. இப்போது அவை கால்கள் தடுமாறாது நடக்க உதவவேண்டும்.

நேர்வழியில் கண் வை: தடுக்கப்பட்ட மரத்தின் கனியை ஏவாள் முதலில் பார்த்தாள். பின்பு விழுந்தாள் (தொநூ 3:6).

26 – நேர்மையின் பாதையில் கால்கள் செல்லக் கவனம் செலுத்த வேண்டும். இடறிய கால்கள் இறப்புக்கும் உன்னைக் கொண்டு செல்லக்கூடும்.

27 - வலப்புறமோ இடப்புறமோ திரும்பாதே என்பது கவனத்தைச் சிதறிடித்துவிடாதே எனப் பொருள்படும். தீமை எனும் நெருப்பின் பக்கம் சென்றால் இழப்பே என்று எச்சரிக்கிறார் ஆசிரியர். மேலும் இக்கூற்று இணைச்சட்ட நூலைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது (இச 5:32; 17:11; 28:14). கடவுளின் கட்டளைகளை விட்டுவிட்டு வேறுபக்கம் திரும்பாதே என்று கூறப்படுகிறது.

செம்பொருள்

அறிவுரைகளைக் கேட்பதும் மனதில் பதிப்பதும் ஞான இலக்கியங்கள் வலியுறுத்தும் ஒன்று. பதாஒதெப் (Ptahhotep) என்னும் எகிப்திய ஞானி: கடவுளுக்குச் செவிமடுப்பவர் கடவுளின் பேரன்புக்குரியவர், கடவுள் யாரை வெறுக்கிறாரோ அவர் செவிமடுக்காதவர் என்கிறார். இதயமே தன்னை வைத்திருப்போரைக் கேட்பவராகவோ கேட்காதவராகவோ மாற்றுகிறது. மனித இதயமே அவனது வாழ்வின் செல்வமும் உடல் நலமும் ஆகும். ஞானம் நாவை, உதட்டை, வாயைக் காத்துக்கொள்ள வேண்டும் என அழுத்தமாகக் கூறுகிறது. வாயிலிருந்து உண்மைதான் வெளிவர வேண்டும், பொய் அல்ல.

ஞானிகளின் ஈடு இணையற்ற பண்பு சுயக்கட்டுப்பாடு; சுயக் கட்டுப்பாடு நாவடக்கத்தில் வெளிப்படுகிறது.

ஞானத்தை அன்புசெய்ய ஆசிரியர் பணிக்கிறார். ஞானம் குடும்ப வாழ்வில் நம்பகத் தன்மையோடு இருக்க அழைக்கிறது. பின்வரும் அதிகாரத்தில் இதைக் காணலாம். ஞானத்துக்கு நம்பகத் தன்மையோடு இருப்பவன் தனது மனைவியோடும் அவ்வாறிருப்பான். இறுதியில் கடவுளுக்குப் பற்றுறுதியுடன் இருப்பதை இது படம்பிடித்துக் காட்டுகிறது.

கடவுளின் பெயர் கூறப்படாவிட்டாலும் அவர் கூற்றுகளின் பின்னால் உள்ளார். ஞானத்தை மனத்தில் கொள்பவன் நல்லனச் செய்வான் வாழ்வைப் பரிசாகப் பெறுவான். தீமையும் அதனால் வரும் சாவும் ஞானிகளுக்கில்லை.

1.9. கற்பு நெறி தவறாமை (5:1-14)

5:1 பிள்ளாய்! என் ஞானத்தில் உன் கவனத்தைச் செலுத்து; என் அறிவுரைக்குச் செவிகொடு. 2 அப்பொழுது, விவேகத்துடன் நடந்துகொள்வாய்; அறிவு உன் நாவைக் காவல்செய்யும். 3 விலைமகளின் பேச்சில் தேன் ஒழுகும்; அவள் உதடுகள் வெண்ணயினும் மிருதுவானவை. 4 ஆனால் அவள் உறவின் விளைவோ எட்டியினும் கசக்கும்; இருபுறமும்

கூரான வாள் வெட்டுதலை ஒக்கும் 5 அவள் கால் சாவை நோக்கிச் செல்லும்; அவள் காலடி பாதாளத்திற்கு இறங்கிச் செல்லும்; 6 வாழ்வுக்குச் செல்லும் பாதையை அவள் கவனத்தில் கொள்வதில்லை; அவளுடைய வழிகள் மாறிகொண்டே இருக்கும்; அதைப்பற்றி அவளுக்குக் கவலையே இல்லை. 7 ஆகையால், பிள்ளாய்! எனக்குச் செவிகொடு; நான் சொல்வதற்கேற்ப நடக்க மறவாதே. 8 அவளிடமிருந்து நெடுந்தொலையில் இருந்துகொள்; அவன் வீட்டு வாயிற்படியை மிதியாதே. 9 இல்லையேல், பிறர் முன்னிலையில் உன் மானம் பறிபோகும்; கொடியவர் கையில் உன் உயிரை இழப்பாய். 10 அன்னியர் உன் சொத்தைத் தின்று கொழுப்பார்கள்; நீ பாடுபட்டுச் சம்பாதித்தது வேறொரு குடும்பத்திற்குப் போய்ச் சேரும். 11 நீ எலும்பும் தோலுமாய் உருக்குலைந்து போவாய்; உன் வாழ்க்கையின் இறுதியில் கலங்கிப் புலம்புவாய். 12 "ஐயோ, அறிவுரையை நான் வெறுத்தேனே! கண்டிக்கப்படுவதைப் புறக்கணித்தேனே! 13. கற்பித்தவர்களின் சொல்லைப் கேளாமற் போனேனே! போதித்தவர்களுக்குச் செவி கோடாமல் இருந்தேனே! 14 இப்பொழுது நான் மீளாத் துயரத்தில் மூழ்கியவனாய், மக்கள் மன்றத்தில் மானமிழந்து நிற்கிறேனே" என்று அலறுவாய்.

பின்புலம்

இது ஓர் அறிவுரை இலக்கியம். விலைமகளின் பேச்சு எனத் துவங்கும் 3-ஆம் வசனம் கொஞ்சம் மாறுபட்ட அறிவுரையைத் தருகிறது. எனினும் இதுதான் இந்த அதிகாரத்தின் கருப்பொருளாய் அமைகிறது. இது விலைமகளிடமிருந்து விலகி நிற்க எச்சரிக்கிறது. இத்தகையச் செயலில் ஈடுபட்டு அவதிப்படும் மனிதரின் அனுபவம் ஓர் எச்சரிக்கையாகக் கூறப்படுகிறது. இந்த அதிகாரம் ஒரே ஒரு கருப்பொருளைக் கொண்டிருந்தாலும் பல பாகங்களாகப் பிரித்துப் படிப்பது ஏற்புடையதானது.

கவர்ச்சியான பெண்ணின் மயங்க வைக்கும் வார்த்தைகள் விவிலியத்தில் மட்டுமல்ல உலக இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இது உலகிலுள்ள ஒட்டுமொத்த மனித பலவீனங்களை ஆய்கிறது. இளைஞர்கள் இந்த விதமான செயல்களில் ஏமாறி விழும் பலவீனம் எல்லா இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன (எகிப்திய, பாபிலோனிய) வேசித்தனத்தில் வாழும் மங்கையருடன் உறவு வைப்பதால் வரும் கொடிய விளைவுகளை இப்பகுதி காட்டி எச்சரிக்கிறது.

இப்பகுதியில் ஆன்மிக அறநெறியாகவன்றித் தகாத உறவுகளால் மனித வாழ்வில் ஏற்படும் விபரீதமான விளைவுகள் என்ன என்பது கூறப்படுகிறது. ரிங்ரன் போன்ற அறிஞர்கள் இது வழிபாட்டுத் தலங்களில் பணிபுரியும் விலைமாதுகளோடு கொள்ளும் புணர்ச்சியை நினைவுபடுத்துகிறது என்கின்றனர்.

சமயத் தலங்களில் காணும் தேவதாசிகளைப் பற்றி நீதிமொழிகள் கூறினாலும் இங்கே கூறப்படுவது வெறும் விலைமாதுகளே. ஒருவேளை இவர்கள் தேவதாசிகளிடமிருந்து பயிற்சி பெற்றிருக்கலாம்.

21-23 - வசனங்களில் ஆண்டவரின் பெயர் கூறப்படுகிறது. மற்ற வசனங்களில் இது காணப்படவில்லை. கடவுள் தன்னைப் பார்க்கிறார் என்ற எண்ணமில்லாது, இளைஞன் தனது பாவமெனும் மயக்க வலையில் வீழ்ந்து தனக்கே அழிவைத் தேடிக்கொள்கிறான். இது கண்டிப்பாக யாவே மரபு விளக்கத்தைக் கொண்டுள்ளதாகக் கூறலாம்.

5ஆம் அதிகாரம் நீமொ 2ஆம் அதிகாரத்தை நினைவுபடுத்துகிறது. இந்த விநோதப் பெண் விலைமகள், இனப்பெருக்கத் தேவதை, வேசி, இனப் பெருக்க தெய்வத்தை வழிபடுபவர், மயக்கி இழுக்கும் பெண் என்றெல்லாம் கூறலாம். கவர்ச்சிக்கும் மயக்கத்திற்கும் இடம் தராது குருநாதரின் வழிகளைக் கடைபிடிக்க மாணக்கருக்கு அறிவுரை தருவதாக இப்பகுதியுள்ளது.

அமைப்பு

1-2 - குரு நாதரின் அறிவுரை
3-6 - விலைமாதின் தீய வழிகள்
7-14 - விலை மகளை விட்டுவிடு
15 -19 - மனைவியோடு மகிழ்வாயிரு
20 -23 - சொல்கேளாதவர் அழிவர்

இது எட்டாவது அறிவுரை.

சொல்விளக்கம்

1-2 - குருநாதர் அல்லது தந்தை தனது அறிவுரைக்குச் செவிமடுக்க மாணாக்கரைப் பணிக்கின்றார். மாணக்கர் ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம்.

2 - விவேகம், அறிவு: இவை அறிவுரையைக் கேட்பதால் வரும் பயன் எனலாம். இதைக் குறிக்கோள் என்றும் கூறலாம். விவேகம் நல்லதைத் தேர்ந்து தீர்மானிக்கும். அறிவு எதைப் பேச வேண்டுமென நாவைக் கட்டுப்படுத்தும். விவேகமும் அறிவும் விலைமாதின் மயக்கமூட்டும் பேச்சிலிருந்து உன்னைக் காக்கும் எனக் கொள்ளலாம். அறிவுரையைக் கேளாதோர் பின்னார் நொந்து அழ நேரிடும்.

3-5 - விலைமகள்: அவளது பேச்சில் மயக்கமளிக்கும் கவர்ச்சியுண்டு, தேனொழுகும்; ஆனால் எட்டியிலும் கசப்பானது (3, 4) விலைமகள் ('இசா சாரா') பளிங்குக் கல் போன்றவள். அவளது பிழைப்புக்கு ஏற்றாற்போல் அவள் வாழ்கிறாள். எனவே அவளிடம் உண்மை உறவை எதிர்பார்க்க முடியாது. அவளிடம் இரக்கத்தையோ புரிதலையோ பார்க்கமுடியாது. அவளோடு மிருகத்தனமாகப் புணர்ச்சியில் ஈடுபட்டவன் அவளது கோபக் கணைகளால் தண்டிக்கப்படுகிறான்.

அவள் பேச்சில் தேனொழுகும்: இது இனிமையான முத்தங்களையல்ல (இப 4:11). மாறாகச் சுண்டி இழுக்கும், கயமை நிறை வார்த்தைகள் (7:5,14-21).

உதடுகள்: இது காதல் வெறியூட்டும் அங்கம், அமுதூட்டும் இனிமை எனலாம்.

கூரான வாள்: இது வீரன் ஏந்தும் வாள், ஆனால் உருவகமாக விலைமாதின் வாயைக் குறிக்கிறது.

எட்டியிலும் கசப்பான - பழைய ஏற்பாட்டில் இது துயரத்தை, பெரும் கசப்பைக் குறிக்கிறது (இச 29:18; மத் 29:17). இது பாலஸ்தீனாவில் வளரும் ஒரு கசப்பான செடி.

உதடுகள் வெண்ணையிலும் மிருதுவானவை: ஏமாற்றும் வார்த்தைகள் (திபா 55:22).

6 – விலைமாதுவின் வாழ்வு கடினமானது; அது பிணியும் புயலும் நிறைந்த வாழ்க்கை, நிலையில்லாதது, கடவுளை மறந்த வாழ்வாகிறது; அவள் வீட்டிலல்லாமல் வீதியில் நிற்பவள்; மதுவருந்தி வண்டி ஓட்டுபவர் போலுள்ளது; அமைதியில்லை, அவளது வழிகள் மாறிக்கொண்டிருக்கும்.

7 – விலைமாது அழகானவள். எனவே ஆபத்து நிறைந்தவள். அவளோடு மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவளது கவர்ச்சிக்கு இடம் கொடுத்தால் இறப்புதான் மிச்சம்.

8 - இது கட்டளைபோல அழுத்திச் சொல்லப்படுகிறது: அவளிடமிருந்து வெகு தொலைவில் இருந்துகொள்: பபிலோனிய, எகிப்திய ஞான இலக்கியங்களுள் இக்கருத்து உண்டு (காண். மத் 5:28-29). மனித உடல் ஆசைகளும் சமூகப் பொறுப்புகளும் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. மனிதனின் இயல்பான ஆசைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

வாசற்படி: இது அவள் வாழும் இடத்தைக் குறிக்கலாம். தீய வழிகளைக் குறிக்கலாம் (நீமொ 2:18; 7:8).

9-11 - விலைமாதிடம் உறவு வைத்திருந்தால் பின்வரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். உனது மதிப்பை இழப்பாய்; உனது உயிரை இழப்பாய்; உனது சொத்தைப் பிறர் அனுபவிப்பர்; உனது நிலைமை பரிதாபமாகும்; நீ புலம்பி அழுவாய்.

மதிப்பை இழப்பது உடல் ஆற்றலை இழப்பதாகும் (தானி 10:8), எனினும் மதிப்பை இழப்பதெனக் கூறுவதே சரியானது. விலைமாதோடு கூடும்போது நீ மானம் இழப்பாய். இஸ்ரயேலின் இளைஞன் தனது விந்தை வீணாக்கக் கூடாது (சீஞா 26:19).

உன் உயிரை இழப்பாய்: பாதிக்கப்பட்ட கணவன் பணத்தை ஏற்காதபோது மரணம்தான் மிஞ்சும். அவன் இரவில் பதுங்கி இருந்து பழி தீர்ப்பான் (6:29,33-35; 7:19). பழிவாங்குபவர் கணவராகவோ அல்லது அந்தக் குடும்பத்தில் ஒருவராகவோ இருக்கலாம்.

10 - சொத்தைத் தின்று கொழுப்பார்கள்: இது விலைமாதுக்குக் கொடுக்கும் பணம். விலைமாது பணத்தை உறிஞ்சும்போது அது மிகுந்த செலவைத் தரும். விலைமாது மணமானவளாய் இருந்தால் அவள் கணவருக்கு அவள் இழப்பைச் சரிகட்டப் பணம் தரவேண்டும். ஏனெனில் இவனது உறவால் கணவன் தன் மனைவியின் அன்பை (உறவை) இழக்கிறான். அவனது மனவேதனை அதிகமாகிறது, திருமணத்தின் புனிதமும் மறைகிறது. விலைமாது அந்நியப் பெண்ணாயிருந்தால் அவள் குடும்பத்தார் தொடர்புடைய மனிதனின் சொத்துக்கு உரிமை கொண்டாடுவர். அவளைத் திருமணம் செய்தாலும் அந்தக் கணவருடைய சொத்தை அனுபவிப்பாள்.

11 - எலும்பும் தோலும்: 'கோசு' என்ற சொல் மனித பலத்தையோ அல்லது சொத்தினால் வரும் செல்வாக்கையோ குறிக்கும். ஆசிரியரின் சொல் மீறுபவரின் உடம்பும் தோலும் விழுங்கப்படும். இது மரண தண்டனையாலோ அல்லது தீய வாழ்வு வாழ்ந்ததால் வந்த நோயாகவோ இருக்கலாம் (எய்ட்ஸ் நோய்).

நீ புலம்புவாய்: நீ பணத்தை இழந்து வறுமையின் பிடியில் தவிப்பாய்; தரைமட்டமாக்கப்பட்ட நீ புலம்புவதைத் தவிர ஒன்றுமில்லை.

12 - அறிவுரையைக் கேட்க மறுத்தேனே புறக்கணித்தேனே: தந்தையின் அறிவுரையைப் புறக்கணித்ததை நினைத்து வருந்திப் புலம்புவது அவனது உள்ளார்ந்த வெறுமையைக் காட்டுகிறது. அவன் இவ்வாறு புலம்புவது அவனின் பாவ அறிக்கைபோலுள்ளது. இதற்கு மனத்தாழ்ச்சி வேண்டும். அது கண்டிப்பாக மனவருத்தத்திற்கும் மனம் திருந்துதலுக்கும் அவனைக் கொண்டு சேர்க்கும். அவன் தந்தையின் அறிவுரையைக் கேட்கத் தயராகிறான்.

13 – மனவருத்தம் தொடர்கிறது.

14 - மீளாத்துயரம், மக்கள் மன்றத்தில் மானம் இழத்தல்: மீளாத் துயரத்துக்குக் காரணம்: சொத்தை இழந்திருக்கலாம்; பகிரங்கக் குற்றச்சாட்டாக இருக்கலாம், ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கலாம், அல்லது சாட்டையடி கொடுக்கப்பட்டிருக்கலாம் (6:33). மேலும் குற்றம் சாட்டப்பட்டு மக்கள் மத்தியில் நிற்பது கேவலம் (26:26; சீஞா 7:7). மக்கள் வந்து செல்லும் நுழைவாயிலில் நிறுத்தப்படலாம் (எரே 26:9-10). நீதி செலுத்தக் கூட்டப்பட்ட குழுவுக்கு முன்னால் நிறுத்தப்படலாம். பகிரங்கமாக விபசாரம் செய்த குற்றத்திற்காக நிறுத்தப்படுவது அந்நபருக்கு அவமானம். அக்குடும்பத்திற்கு இகழ்ச்சி, அந்த ஊருக்கும் தலை குனிவே.

செம்பொருள்

விலைமகளின் குணங்கள் பற்றிப் பேசும் ஆசிரியர் அவளது அழகு, கவர்ச்சியூட்டும் அவருடைய வார்த்தைகள், அவளது கயமை, சாவுக்கே இட்டுச் செல்லும் அவளது உடல் உறவு பற்றி எச்சரிக்கை விடுக்கிறார்.

அவள் அழகானவள் ஆனால் ஆபத்து நிறைந்தவள்; அவளில் மயங்கி அவளிடம் உறவு கொண்டால் இளைஞன் தனது மதிப்பை இழப்பான்; மன வேதனை அதிகரிக்கும்; புனிதத்தை இழப்பான், அவன் சொத்துச் சூறையாடப்படும். அவன் தனது உயிரையே இழக்க நேரிடும்.

அவன் குருநாதரின் அறிவுரை கேட்டுத் தவறுக்காக மனம் வருந்தி மனந்திருந்துதல் நல்லது என்று குருநாதர் அறிவுரை தருகிறார்.

1.10. பிறன் மனைவி நயவாமை (5:15-23)

5:15 உன் சொந்த நீர்த்தொட்டியிலுள்ள நீரையே குடி; உன் வீட்டுக் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரையே பருகு. 16 உன் ஊற்றுநீர் வெளியே பாயவேண்டுமா? உன் வாய்க்காலின்

நீர் வீதியில் வழிந்தோடவேண்டுமா? 17 அவை உனக்கே உரியவையாயிருக்கட்டும்; அன்னியரோடு அவற்றைப் பகிர்ந்துகொள்ளாதே; 18 உன் நீரூற்று ஆசி பெறுவதாக! இளமைப் பருவத்தில் நீ மணந்த பெண்ணோடு மகிழ்ந்திரு. 19 அவளே உனக்குரிய அழகிய பெண் மான், எழில்மிகு புள்ளிமான்; அவளது மார்பகம் எப்போதும் உனக்கு மகிழ்வூட்டுவதாக! அவளது அன்பு உன்னை எந்நாளும் ஆட்கொண்டிருப்பதாக! 20 மகனே! விலைமகளைப் பார்த்து நீ மயங்குவதேன்? பரத்தையை நீ அணைத்துக் கொள்வதேன்? 21 மனிதரின் வழிகளுள் ஒன்றும் ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை; அவர்களுடைய பாதைகளையெல்லாம் அவர் சீர்தூக்கிப் பார்க்கின்றார். 22 பொல்லார் தம் குற்றச் செயல்களில் தாமே சிக்கிக்கொள்வர்; தம் பாவ வலையில் தாமே அகப்பட்டுக்கொள்வர். 23 கட்டுப்பாடு இல்லாததால் அவர்கள் மடிந்து போவர்; தம் மதிகேட்டின் மிகுதியால் கெட்டழிவர்.

பின்புலம்

அறிஞர்கள் கருத்துப்படி இந்த அதிகாரம் பல மாற்றமைப்புகளுக்கு உட்பட்டிருக்கிறது. மனைவியோடு நல்லுறவு ஏற்படுத்த ஆசிரியர் வேண்டுகிறார். மேலும் கணவன் மனைவியர் உறவு பற்றி இதன்பிறகு நீதிமொழிகளில் அதிகம் கூறப்படவில்லை. இது இனிமைமிகு பாடலை நினைவுபடுத்துகிறது. அனுபவமிக்க கற்றுத்தேர்ந்த ஞானி ஒருவர் திருமண வாழ்வில் இருக்கவேண்டிய நம்பிக்கையான, சுவையான, இன்பம் துய்க்கும் வாழ்வை வலியுறுத்துகிறார். இன்றைய குடும்பங்களுக்கும் இது ஓர் அறிவுரையாக அமையும்.

சொல்விளக்கம்

15 – சொந்த நீர்த்தொட்டி (உன் வீட்டுக் கிணறு) = இது தெளிவாகக் கணவன் மனைவியோடு கொள்ளும் பாலியல் உறவைக் குறிக்கிறது (18). பால் உணர்வை நிறைவு செய்வது நல்ல உணவை உண்பதாகும் (30:20), நீரும் உணவுமாகும் (9:17). அவர்கள் ஒருவர் ஒருவருக்கு உரியவர்கள் (2கொரி 7:4-5).

16 - உன் ஊற்று நீர் வெளியே பாய வேண்டுமா?: உன் வாய்க்காலின் நீர் வீதியில் வழிந்தோட வேண்டுமா? பலர் பல கருத்துகளை முன்மொழிகின்றனர். எனினும் தன் மனைவியோடு உறவுகொள்வதால் வரும் தலைமுறைகளைக் (குழந்தைப் பேற்றினை) இது குறிக்கின்றது எனலாம்.

1. வாய்க்கால் நீர் - கடவுளின் கொடையாக வரும் பிள்ளைகளைக் குறிக்கிறது.

2. தண்ணீர் என்பது மனைவியைக் குறிக்கிறது (சாஞா 4:15) இவரே 16,17 வசனங்களின் எழுவாய் ஆகிறார். எனவே மனைவி வேசித்தனத்தில் ஈடுபடும்

எதிர்வினைச் செயலாகக் கூறலாம். இதையும் ஏற்பதற்கில்லை. ஏனெனில் ஓரிடத்தில் ஒருமையிலும் (15) மற்றொரிடத்தில் பன்மையிலும் (16) எப்படிக் கூறமுடியும்?

3. மேலும் மாணாக்கன் சொந்த நீரைப் பருகாது மனைவியோடு மகிழ்ந்து வாழாதபோது அது வீணாகிறது. இது மனைவியின் பிரமாணிக்கமின்மையைக் குறிப்பதாகாது. மாறாகக் கணவன் மனைவியோடு உடலுறவு கொள்ளாது வேற்றுப் பெண்களோடு விபசாரம் செய்வதாகக் கூறலாம். ஒருவேளை இந்தச் செயல் மனைவியையும் தவறான உடலுறவில் ஈடுபடக் காரணமாகலாம். கணவன் மனைவியோடு மகிழ்ந்து குழந்தைகள் பெற்று நிறைவான வாழ்வை வாழ முயல வேண்டும்.

17 - எனினும் வச 17 கூறும் ஊற்று நீர், வாய்க்கால் நீர் (அவை) உனக்கே உரியவையாக இருக்கட்டும்: இவை இரண்டும் மனித விந்தைக் குறிக்கின்றன; மனித விந்து தகாத உறவால் வீணடிக்கப்படாமல் கட்டிய மனைவியோடு உறவுகொண்டு குழந்தைகளைப் பெறப் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிறார். இது சரியானதாகத் தெரிகிறது (காண். சீஞா 26:19-21). மரபு தூய்மை காப்பதும், திருமண நம்பிக்கையை மதித்து நடப்பதும் நல்லது. தகாத உறவில் மாட்டிக்கொண்டு உயிருக்கு உலைவைக்கும். இழிநிலையை முழுமையாக அகற்ற வேண்டும்.

18 – உன் நீர் ஊற்று ஆசிர் பெறுவதாக: இது பல குழந்தைகளைப் பெற்றுப் பிரமாணிக்கமும் பேறும் பெற்றவராகக் கருதப்படும் மனைவியோடு மகிழ்ந்து வாழ்வதாகும். இது மனைவியோடு பெறும் அனைத்து உடல் சுகங்களையும் குறிக்கிறது.

19 - அவள் அழகிய பெண்மான் எழில்மிகு புள்ளிமான்: இது விலங்குகளின் அழகோடு மனைவின் அழகை ஒப்பிடுகிறது (திபா 2:9; 4:2,5; 6:6; 7:3). பெண்ணின் மார்பகம் உணர்வுகளைத் தூண்டுவதோடு மனிதனைத் திருப்திப்படுத்தும் ஓர் அங்கம்.

20 - விலைமாது, பரத்தை: வேற்றுப் பெண்களில் மதிமயங்காமல் கட்டிய மனைவியின் அழகில் மனதைப் பறிகொடு. 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' அழகானது என்பது அறிஞர் அண்ணாவின் கூற்று. அதையே ஆசிரியர் கூறி மாணாக்கரை எச்சரிக்கிறார். இங்கு வலியுறுத்தப்படுவது பிரமாணிக்கம். தவறான

உறவு மனைவி மீதுள்ள அன்பையும் ஞானத்தின் மீதுள்ள ஆவலையும் கெடுத்துவிடுகிறது.

21-23 - ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை: இந்த அதிகாரத்தின் மற்ற பகுதியில் ஆண்டவர் பற்றிக் கூறப்படவில்லை. குறிக்கோள்கள் அடங்கிய கூற்றுகளில் யாவே கடவுளைப் பயன்படுத்தி மறு வாசிப்புச் செய்யும் முயற்சி தொடர்கிறது (மக்கனே). கடவுளின் கவனமிகு பார்வை மனிதன் மீதுள்ளது. அவன் அதனிடமிருந்து தப்பவியலாது. இதை உணராது தம் குற்றச்செயல்களிலும் பாவச் செயல்களிலும் சிக்குண்டு மூடன் மடிந்துபோகிறான்.

கற்பிக்கும் முயற்சி மனிதனுடையது. தான் கற்ற கல்வியும் பெற்ற அனுபவமும் முயன்று பெற்ற ஞானமும் குருநாதரை அதிகாரமும் ஞானத் திறமையும் வாய்ந்தவராக மாற்றுகிறது. எனவே அவரது கூற்றுக்கும் பிளவுபடாக் கவனம் செலுத்த வேண்டும். அதையே குருநாதர் விரும்புகிறார்.

கற்றோரின் சொல்லில் கருத்திருக்கும், தெளிவும் கட்டுப்பாடும் தேவையான யாவும் கலந்திருக்கும். எனவே அவை அதிகாரமிக்கவை.

வச. 2 விவேகமும் அறிவும் உன்னைக் காவல் செய்யும்

வச. 7 செவிகொடு, சொற்கேட்டு நாட.

அவ்வாறு நடவாமல் போனால், (வச 13,14) புலம்புவாய், மானம் இழப்பாய்.

செம்பொருள்

திருமணத்தின் தூய்மையைப் பேண ஆசிரியர்அழைப்பு விடுக்கிறார். கட்டிய மனைவியை அன்புசெய்து அவளோடு உறவுகொண்டு பிள்ளைகளை ஈன்றெடுத்து மகிழ்வாக வாழ அறிவுரை தருகிறார் குருநாதர். இவர் குடும்பத்தில் தூய்மை, கணவன் மனைவியரிடையே பிரமாணிக்கம் ஆகியவற்றை வலியுறுத்துகிறார். தவறான உறவு மனைவி மீதுள்ள அன்பையும் ஞானத்தின் மீதுள்ள ஆவலையும் கெடுத்துவிடும் என ஆசிரியர் எச்சரிக்கிறார்.

1.11. சில நல்லுரைகள் (6:1-5)

6:1 பிள்ளாய்! உன் அடுத்திருப்பவரின் கடனுக்காக நீ பொறுப்பேற்றிருந்தால், அல்லது அன்னியர் ஒருவருக்காகப் பிணையாய் நின்றால், 2 அல்லது உன் வார்த்தைகளை முன்னிட்டு ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டால், அல்லது உன் வாய்ச் சொல்லிலேயே நீ

பிடிபட நேரிட்டால், 3 பிள்ளாய்! உன்னை விடுவித்துக் கொள்ள இப்படிச் செய்; நீ அடுத்திருப்பவரின் கையில் அகப்பட்டுக்கொண்டதால், விரைந்தோடிச் சென்று, அவரை வருந்தி வேண்டிக்கொள். 4 அதைச் செய்யும் வரையில் கண்ணயராதே; கண் இமைகளை மூடவிடாதே; 5 நீ வேடன் கையில் அகப்பட்ட மான் போலிருப்பாய்; கண்ணியில் சிக்கிய குருவிக்கு ஒப்பாவாய்; உன்னைத் தப்புவித்துக் கொள்ளப் பார்.

பின்புலம்

கொடுக்கல் வாங்கல் சமூகத்தில் தவிர்க்க இயலா ஒன்று. தேவை நேரத்தில் கடன் பெறுவதும் பின்பு திருப்பிக் கொடுப்பதும் அன்றாட வாழ்வின் நிகழ்வுகள். ஆனால் அதில் திருட்டும் புரட்டும் வந்திடாதிருக்கப் பத்திரம் எழுதிக்கொடுப்பது, பிணை நிற்பது முற்கால வழக்கங்களில் ஒன்று. இங்குப் பிணையாய் நின்று மாட்டிக்கொள்ளும்போது என்ன செய்யவேண்டும் என்ற அறிவுரைகளை ஆசிரியர் முன்வைக்கின்றார்.

சொல்விளக்கம்

1 – பொறுப்பேற்றிருந்தால், (பிணையாய் நின்றால்): பிறருடைய கடனுக்காகவோ வாக்குறுதிக்காகவோ ஒருவர் தானாக முன்வந்து தன்னைப் பிணையாக வைக்கிறார். பிணை நிற்பது ஒரு சட்டபூர்வமான செயல். அடுத்தவருக்காகவோ அல்லது அந்நியருக்காகவோ ஒருவர் பிணைநிற்பது அவரது நெருக்கடி நேரத்தில் பிணை நிற்பதைக் குறிக்கிறது. இவர் ஓர் அடிமையாகவோ அல்லது கடனாளியாகவோ இருக்கலாம் (காண். தொநூ 43:9; 44:32-34; யோபு 17:30). அடுத்திருப்பவர்தான் இங்கு கடன் கொடுப்பவர்; அந்நியர் கடன் வாங்குபவர்.

பிணை நிற்பவர் இதற்காக தன் சொத்து, நிலம், திராட்சைத் தோட்டம், குழந்தைகளைப் பிணையாக வைக்கிறார் (விப 22:5-6; இச 24:6,10-13) வாக்குப் பத்திரம் கை குலுக்கியோ, வாய்மொழியாலோ கொடுக்கப்படுகிறது (யோபு 17:3; நீமொ 6:1; 17:18).

நீதிமொழிகளும் சீராக் ஞானமும் அயலாருக்கு இரக்கத்தையும் பாசத்தையும் காட்டும் அக்கறையைக் கொண்டுள்ள நூல்கள். விவேகமும் ஞானமும் இதில் கடைபிடிக்க வேண்டும் என்றாலும் இன்னொரு கருத்தும் இழையோடி வருவதைக் காண முடிகிறது.

நிலத்தில் உழுதலும் பயிர்த்தொழில் செய்தலும் உயர்வானது. ஆனால் வியாபாரமும் பேரம் பேசுதலும் வரும்போது ஏய்த்தலுக்கும் ஏமாற்றத்திற்கும் வாய்ப்புண்டு. இத்தகைய சூழலில் பிணைநிற்பது ஆபத்து என ஆசிரியர்

எச்சரிக்கிறார். ஆழம் தெரியாமல் காலை விடாதே. ஆசிரியர் உன்னையே பிணையாக வைத்திருந்தால் (நீமொ 11:15; 17:18; 22:26; 27:13) அது மடமை, அப்படிச் செய்வது நல்லதல்ல என்கிறார். ஏனென்றால் பிணை நிற்பவரின் நல்ல நிலை இன்னொருவரின் அதிகாரத்தின் கீழ் வந்துவிடுகிறது. இஸ்ரயேலில் வட்டி வாங்கக்கூடாது (விப 22:24) என்கிறது திருநூல். பிணை நிற்றலுக்குரிய சட்டங்கள் இவர்களிடம் உண்டு (இச 24:6,11).

2 - சிக்கலில் மாட்டிக் கொண்டால்: பிணையாக நிற்பதில் சுயலாபம் தேடினால் நீ மாட்டிக்கொள்வாய் (சீஞா 29:19). நீ கண்ணியில் மாட்டினால் சாவுதான் மிஞ்சும். நீ உனக்கு அடுத்திருப்பவரின் கையில் மாட்டிக்கொள்கிறாய்.

3 - நீ கடன் கொடுத்தவருக்கு முன்னால் குனிந்து பணிந்து செயல்படு. கடனைத் திருப்பிக்கொடுக்கக் காலக்கெடு கேட்டு வாங்கிக்கொள். உனது மானத்தையும் மதிப்பையும் தூக்கி எறிந்துவிடு.

4 - கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை ஓய்வெடுக்காதே. எந்த முயற்சியையும் கைவிடாதே. தொடர்ந்து செயல்படு.

5 - இயற்கையிலிருந்து எடுக்கும் ஒப்பீடுகள் அல்லது உவமைகள் கூற்றுக்கு மெருகூட்டுகின்றன. சிக்கல்கள் இயற்கையில் எப்படி ஏற்படுகின்றன, அவை எப்படி வாழ்வின் எதார்த்தங்களைச் சித்தரிக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

செம்பொருள்

பிணை நிற்பது சமூக நியதி, நீதியும் கூட. ஏழைகளுக்காக அல்லது இக்கட்டான நிலையில் உள்ளவர்க்காகப் பிணைநிற்பது ஏற்புடையது. ஆனால் பொய்யும் புரட்டும் திருட்டும் ஏய்தலும் ஏமாற்றுதலும் வரும்போது கவனம் தேவை. ஓர் ஏழையின் பொருட்டு நீ படும் அவமானம் தகுதியும் நீதியுமானது.

1.12. சோம்பேறியாயிராதே (6:6-11)

6:6 சோம்பேறிகளே, எறும்பைப் பாருங்கள்; அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள்; 7 அதற்குத் தலைவனுமில்லை, கண்காணியுமில்லை, அதிகாரியுமில்லை. 8 எனினும், அது கோடையில் உணவைச் சேர்த்துவைக்கும்; அறுவடைக் காலத்தில் தானியத்தைச் சேகரிக்கும். 9 சோம்பேறிகளே, எவ்வளவு நேரம் படுத்திருப்பீர்கள்? தூக்கத்திலிருந்து எப்போது எழுந்திருப்பீர்கள்? 10 இன்னும் சிறிது நேரம் தூங்குங்கள் இன்னும் சிறிது நேரம் உறங்குங்கள்; கையை முடக்கிக்கொண்டு இன்னும் சிறிது நேரம்

படுத்திருங்கள். 11 வறுமை உங்கள் மீது வழிப்பறிக் கள்வரைப்போல் பாயும்; ஏழ்மை நிலை உங்களைப் போர்வீரரைப்போல் தாக்கும்.

பின்புலம்

எறும்பு கட்டுப்பாட்டுக்கும் அயராத உழைப்புக்கும் எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. எறும்பு மற்ற இடங்களில் அழிவின் சக்தியாகவும் காட்டப்படுகிறது. பண்டங்கள் தானியங்களைத் தின்றுவிடுகின்றன. சில நாட்டுப்புறக் கதைகளில் மனித நடவடிக்கைகள் மரஞ்செடி கொடிகளோடும் விலங்குகளோடும் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. சில சூழல்களில் மனித நடவடிக்கைகள் நேரிய நடவடிக்கையிலிருந்து மாறுபட்டிருப்பதை நகைச் சுவையாகச் சொல்லும் இலக்கியங்கள் உண்டு.

இங்கு எறும்பை எடுத்துக்காட்டாகக் கூறுவது மெருகூட்டுவதாக இல்லை. ஆனால் பல பாடங்களை எறும்பு கற்பிக்கிறது. கட்டுப்பாடு, விழிப்பு, கடின உழைப்பு.

சொல்பொருள்

6–7 – குருநாதரின் பார்வையில் எறும்பு – அதற்குத் தலைவனில்லை; இருப்பினும் தங்களது வேலையைத் தாங்களாகவே ஒருங்கிணைந்து செய்கின்றன.

8 – அவைகள் பஞ்ச காலத்திலும், குளிர் காலத்திலும் தேவையான உணவைச் சேகரித்து வைக்கின்றன. இயற்கையில் காணக் கிடக்கும் உண்மைக் குருநாதருக்கு நல்ல எடுத்துக்காட்டைத் தருகிறது. கவனத்தோடு செயல்படுதலும் கடின உழைப்பும் வலியுறுத்தப்படுகின்றன.

9 – சோம்பலும் தூக்கமும்: சோம்பேறி விழிப்பாயிருப்பதில்லை. அவரிடம் முன்மதியில்லை.

10–11 – தூங்குபவன் தரித்திரத்தைப் பரிசாகப் பெறுகிறான் சாப்பிட்டுத் தூங்கிக்கொண்டே இருப்பவன் அனைத்தையும் இழப்பான். அவன் புத்தியும் மதியும் இழந்தவனாகிறான். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல் இதற்கொரு எடுத்துக்காட்டு “தூங்காதே தம்பி தூங்காதே நீ சோம்பேறி என்ற பெயர் வாங்காதே.” ‘தூங்குவோர் நாட்டைக் கெடுப்பர், தானும் கெடுவர்.’

செம்பொருள்

ஏறும்பு பற்றிய கூற்றுகள் தொடர் கூற்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுக் கடின உழைப்புக்கும் முன்மதிக்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

1.13. கயவனின் போக்கு (6:12-15)

6:12 போக்கிரி அல்லது கயவன் தாறுமாறாகப் பேசிக்கொண்டு அலைவான். 13 அவன் கண் சிமிட்டுவான்; காலால் செய்தி தெரிவிப்பான்; விரலால் சைகை காட்டுவான். 14 அவன் தன் வஞ்சக உள்ளத்தில் சதித் திட்டம் வகுப்பான்; எங்கும் சண்டை மூட்டிவிடுவான். 15 ஆகையால் அவனுக்கு எதிர்பாராத நேரத்தில் கேடு வரும்; திடீரென்று அழிந்துபோவான்; மீளமாட்டான்.

பின்புலம்

சோம்பேறியிடமிருந்து (6-11) கயவனிடம் (12-19) தனது கவனத்தைச் செலுத்துகிறார் ஆசிரியர். கயவனின் இழிவான ஏழு செயல்களைப் பற்றிக் கூறுகிறார் (12-15) தன் உடலின் அங்கங்களைக் கொண்டு அருவருக்கும் செயல்களைக் கயவன் செய்கிறான். இந்த மனிதன் தீயகுணங்களின் மொத்த உருவமாகச் சித்தரிக்கப்படுகிறான்.

சொல்பொருள்

12 - கயவன்: நீதி மொழிகள் மக்களை அவர்களுடைய செயல்களை வைத்து அழைக்கின்றன (16:21; 21:24; 24:8). இங்கு 'ஆதாம் பேலியால்' அதாவது அவனைத் தீங்கு செய்கிறவன், உபயோகமற்றவன் என்றழைக்கிறது. தீயமனிதனின் செயல் கடவுளையும் அவர்தம் மக்களையும் எதிர்த்துத் தீங்குசெய்வது (இச 13:13; 1சாமு 2:12). அவன் சமூகத்தின் அமைதியைக் குலைத்துப் பிளவுகளை உண்டாக்குகிறான். இவனின் நடவடிக்கைகள் அறநெறி தவறியவையாக, மாறாட்டமும் அழிவும் உள்ளவையாக இருக்கும் (1சாமு 25:25; 2சாமு 16:7; 20:1; 1அர 21:13).

மேலும் கயவன் சண்டை மூட்டுபவன், தீமை செய்பவன் (10:29; 21:15; எசா 55:7). இவன் தனக்கும் பிறருக்கும் பெரும் குழப்பத்தைக் கொணர்வான். இவன் தீமையின் மொத்த உருவம். தனது ஆற்றல் அனைத்தையும் அழிவுக்குச் செலவிடுபவன். அவன் சொற்களில் காயமும் நோயும் இருக்கும்.

13 – இவன் உண்மையைத் தனது கயமை நிறைந்த உடல் அசைவுகளால் சிதைப்பான். பேச்சின்றி அசைவுகளால் இவன் தரும் செய்தியை ஆதரித்துச் சதிசெய்யும் இவனுக்கு ஆதரவாளர்கள் உண்டு (1:10-14; 16:30). அறிஞர் பெர்துவின் கருத்துப்படி கண், கால், விரல் இவைகளின் அசைவு கொண்டு மறைந்திருக்கும் உண்மைகளைத் தீய செயல்களுக்கு உடன் போவோருக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறான்.

ஒருவேளை இச் சைகைகளால் சொல்லும் செய்தி சமூகத்துக்கு எதிராகச் செய்யும் மாய வித்தைகளைக் குறிக்கலாம். மாய வித்தைகளை ஒருசிலர் ஏற்காவிட்டாலும் இந்த அசைவுகள் நயவஞ்சகமான, கபடமான, சமூகத்திற்கு எதிரான செயல்களைக் குறிக்கின்றன.

14 – அசைவுகளிலிருந்து ஆசிரியர் அகத்திற்குச் செல்கிறார். உள்ளத்தில் கயவன் சதித் திட்டம் தீட்டுகிறான். உள்ளம் தீமையை உருவாக்குகிறது (தொநூ 6:5). இவன் சண்டைகளையும் பிளவுகளையும் உண்டாக்குகிறான் (15:18).

15 – கயவனின் செயலுக்குத் தகுந்த தண்டனை கிடைக்கும்.

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும் (குறள் 319)

யாவேயின் தண்டனை தவறிழைத்தோருக்குத் தவறாமல் கிடைக்கும் என்பது ஞான இலக்கியக் கூற்று (காண் யோபு 21:19 31:3). கப்பல் உடைந்து சிதறுவதுபோல கயவனின் கதியும் இருக்கும் (1அர 22:48) இது கயவனின் கொடூரங்களால் விளைந்த கடவுளின் கோபம். அவன் தண்டனையிலிருந்து தப்பமுடியாது.

செம்பொருள்

பொல்லாார் செய்யும் தீங்குகள் எல்லை தாண்டிச் செல்கிறது. நல்லவர்கள், கடவுளின் அடியார்கள் அவதிக்குள்ளாகின்றனர். நீதியின் தேவன் இது கண்டு கோபமுறுகிறார். துன்புறுத்துபவனுக்கு அழிவு உண்டு. எனவே தீயதை விலக்கி நன்மை செய்தலே அறம்.

1.14. கடவுள் வெறுப்பவை (6:16-19)

6:16 ஆண்டவர் வெறுப்பவை ஆறு. ஏழாவது ஒன்றும் அவரது வெறுப்புக்கு உரியது. 17 அவை இறுமாப்புள்ள பார்வை, பொய்யுரைக்கும் நாவு, குற்றமில்லாரைக் கொல்லும்

கை, 18 சதித்திட்டங்களை வகுக்கும் உள்ளம், தீங்கிழைக்க விரைந்தோடும் கால், 19 பொய்யுரைக்கும் போலிச் சான்று, நண்பரிடையே சண்டை மூட்டிவிடும் செயல் என்பவையே.

பின்புலம்

இந்த அறிவுரைகள் 16-19 இடையில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கருதுவர். இது எண்ணிக்கை அமைப்பில் உள்ளது. திரிகடுகம், நான்மணிக்கடிகை போன்ற தமிழ்இலக்கியத்திலும் இந்த அமைப்பைக் காணலாம். யாவே கடவுளுக்கு ஏழு பண்புகள் வெறுப்புக்குரியனவாக உள்ளன. இதில் ஏழாவது பெரும் கொடியது.

எண்ணிக்கை அறிவுரைகள் பொதுவாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவைகளாக இருக்கும். இங்கு ஆறு தீய பண்புளைக் கூறி ஏழாவதும் வெறுப்புக்குரியது என்ற பொதுவான பண்பு எடுத்துரைக்கப்படுகிறது.

சொல்விளக்கம்

16-19 - இறுமாப்புள்ள பார்வை: தற்பெருமையைக் குறிக்கிறது (திபா 13:11; நீமொ 10:15). இது கடவுளை எதிர்க்கும் குணம் (யோபு 21:22; 38:15; திபா 101:5). மனிதனை மதியாத மூர்க்கம், தற்பெருமை மற்றவரை இழிவுபடுத்தும் (8:13; 16:5). கடவுளிடம் கொள்ளும் அச்சத்தை இறுமாப்பு ஏளனம் செய்கிறது (எசா 211-17). இதற்கு எதிரானது எளிமை அல்லது தாழ்ச்சி.

பொய்யுரைக்கும் நாவு: இது பிறருக்குத் தீங்கிழைக்கக் கூசாமல் பேசும் பொய். நீதிமன்றத்தில் கூறும் பொய்ச் சான்று (விப 20:16; இச 19:8; நீமொ 14:5) குற்றமில்லாரைக் கொல்லுதல். ஒருவரது இறைத் தன்மையை ஏன் அவரது புனித உயிரையே வெறுத்து ஒதுக்கி அழிக்கும் ஒரு செயல் (காண் இச 21:8,9; எசா 59:7). கொலை செய்து நீதி வழங்கப்படாத போது, கொலைசெய்யப்பட்டவனின் அருகில் உள்ள நகரம் குற்றமற்றது என்று சடங்கு செய்து தூய்மைப்படுத்தவேண்டும்.

இவ்வாறு அந்நகரம் அக்குற்றத்திற்குப் பொறுப்பாகமாட்டாது. அந்த நிலம் மாசற்றவனின் இரத்தத்தில் கறைபடாது.

சதித் திட்டங்களை வகுக்கும் உள்ளம்: உள்ளமும் மனமும் சிந்தனைகளைத் தாங்குவன. சிந்தனைகள் வழியே செயல்கள் நடக்கின்றன. அவை சதித் திட்டங்கள் உருவாக்குபவரையும் அதற்கு பலியாபவரையும் புண்படுத்தும் (எசா 59:7 எரே 4:4 நீமொ 15:26).

தீங்கிழைக்க விரைந்தோடும் கால்கள்: சிந்திப்பதற்கு முன்னே தீமையைச் செய்து முடிக்கும் துரிதத் தன்மையைக் குறிக்கிறது. இது ஒரு மிகைப்படுத்திக் கூறும் கூற்று.

பொய்யுரைக்கும் போலிச்சான்று: இது பிறரைக் காயப்படுத்தப் பொய்யுரைப்பதைக் குறிக்கும்.

நண்பரிடையே சண்டை மூட்டிவிடுவது: இந்தப் பண்பு கொடியதாகக் கருதப்படுகிறது. மற்ற கொடிய பண்புகளை இணைத்துக் கூறும் பண்பு. சண்டை மூட்டுவது சமுதாயத்தில் மிகப் பெரிய கேடுகளை விளைவிக்கும். இந்தக் கொடிய பண்புகளைக் கொண்டுள்ள மனிதர்கள் தங்கள் சக்திகளை, பொது வாழ்வின் அடித்தளத்தையே அழிக்கும் சக்தியாக மாற்றுகின்றனர். இத்தகைய செயல் சமூகத்துக்குப் பெரும் தொல்லைகளைத் தருகிறது.

செம்பொருள்

கயவனிடம் காணப்படும் கொடுஞ் செயல்கள் இங்குத் தொடர்கின்றன. கடவுளுக்கு வெறுப்பான இத்தீய பண்புகள் மக்களை வதைக்கின்றன. மனிதர்களிடையே பிளவுகளையும் நம்பிக்கைச் சிதைவுகளையும் ஏற்படுத்துகின்றன.

1.15. கற்பு நெறி வழுவாமை (6:20-35)

6:20 பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளையைக் கடைப்பிடி; தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே. 21 அவற்றை எப்போதும் உன் இதயத்தில் இருத்தி வை; உன் கழுத்துக்கு மாலையென அணிந்து கொள். 22 நீ நடந்து செல்லும்போது அவை உனக்கு வழிகாட்டும்; நீ படுத்திருக்கும்போது அவை உன்னைக் காவல் காக்கும்; விழித்திருக்கும்போது உன்னுடன் உரையாடும். 23 கட்டளை என்பது ஒரு விளக்கு; அறவுரை என்பது ஒளி; கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி. 24 அவை உன்னை விலைமகளிடமிருந்து, தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து விலகியிருக்கச் செய்யும். 25 உன் உள்ளத்தால் அவளது அழகை இச்சியாதே; அவள் கண்ணடித்தால் மயங்கிவிடாதே. 26 விலைமகளின் விலை ஒரு வேளைச் சோறுதான்; ஆனால், பிறன் மனையாளோ உயிரையே வேட்டையாடி விடுவாள். 27 ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால், அவனது ஆடை எரிந்துபோகாமலிருக்குமா? 28 ஒருவன் தழல்மீது நடந்து சென்றால், அவன் கால் வெந்துபோகாமலிருக்குமா? 29 பிறன்மனை நயப்பவன் செயலும் இத்தகையதே; அவளைத் தொடும் எவனும் தண்டனைக்குத் தப்பமாட்டான். 30 திருடன் தன் பசியைத் தீர்க்கத் திருடினால், அவனை மக்கள் பெருங்குற்றவாளியெனக் கருதாதிருக்கலாம். 31 ஆனால், அவன் பிடிபடும்போது ஏழு மடங்காகத் திருப்பிக்கொடுக்க வேண்டும்; தன் குடும்பச்

சொத்து முழுவதையுமே கொடுத்துவிட நேரிடும். 32 கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக்கொள்கின்றான். 33 அவன் நைய நொறுக்கப்படுவான், பழிக்கப்படுவான்; அவனது இழிவு ஒருபோதும் மறையாது. 34 ஏனெனில், தன் மனைவி தனக்கே உரியவள் என்னும் உணர்ச்சி ஒரு கணவனிடம் சினவெறியை உண்டாக்கும்; பழி தீர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் நாளில் அவன் இரக்கம் காட்டமாட்டான்; 35 சரியீடு எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டான்; எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அவன் சினம் தணியாது.

பின்புலம்

இந்தப் பகுதி இணைச்சட்டத்தை ஒத்திருப்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இச 6:7 அல்லது 11:9இல் காணப்படும் பகுதி பெற்றோர்கள் தரும் அறிவுரையாகக் கூறப்படுகிறது. நீமொ வச. 20 இதைக் கையாண்டிருக்கலாம். ஏனெனில் இதுவும் பெற்றோரின் அறிவுரையாக உள்ளது. பள்ளி ஆசிரியரின் அறிவுரையல்ல. கெம்சர், ரிங்கிரன், பெர்து போன்ற அறிஞர்கள் இது பள்ளியில் குருநாதர் கொடுக்கும் அறிவுரைதான். பெற்றோர் கொடுக்கும் அறிவுரையாகக் காட்டப்படுகிறது என்பர். பிள்ளாய் உன் தந்தையின் கட்டளைகளைக் கடைபிடி; தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே (வச 6:20). பெற்றோர்களின் அறிவுரையையும் ஞான அறிவுரையாக நீதிமொழிகள் புத்தகம் கருதுகின்றது. கட்டளைகள், சட்டங்கள் எனப் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் காண்கிறோம். ஞானத்தின் அதிகாரத்தை வலியுறுத்த இவை பயன்படுத்தப்படுகின்றன. இது ஒன்பதாம் அறிவுரை.

சொல்விளக்கம்

21,22 - அவை எப்போதும் உன் இதயத்தில் இருத்தி வை: நீமொ 6:21-23; இச 6:4-9; 11:18-20 இந்த மூன்று அறிவுரைக் கூற்றுகளிலும் இதயத்தைச் சட்டத்தின், ஞான அறிவுரையின் இருப்பிடமாக யூத இலக்கியங்கள் கருதுகின்றன.

இச 6:8; 11:18 ‘உன் கையில் அடையாளமாகக் கட்டிக்கொள்’ என்கின்றன. நீமொ 6:21. அதை எப்போதும் ‘உன் இதயத்தில் இருத்தி வை’ என்கிறது. மேலும் இப்பகுதிகள் குழந்தைகளுக்கு வீட்டிலிருக்கும்போதும் வழிப் பயணத்தின் போதும், படுக்கும்போதும் எழும்போதும் சட்டங்கள் பற்றிப் பேசு என்கிறது; காண் நீதிமொழி 6:22. நீ நடந்து செல்லும்போது சட்டங்களும் அறிவுரைகளும் உனக்கு வழிகாட்டும், காவல் செய்யும். இவ்வாறு காணப்படும் ஒற்றுமைகள் ஞான

இலக்கியத்தைப் படைத்தவர்கள் இணைச்சட்ட நூலையும் உருவாக்க உதவியிருக்க வேண்டும் என வைன்பீல்டு என்ற அறிஞர் கூறுகிறார்.

தந்தை தாயின் கட்டளைகளை இதயத்தில் இருத்திவைத்து கழுத்தில் மாலையென அணிந்துகொள்ள வேண்டும் என்னும் கட்டளைகள் மாணாக்கரின் விலைமதிப்பற்ற புதையலாகவும், மிகச்சிறந்த மதிப்புடையதாகவும் இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

23 - கட்டளை 'மிஸ்பா' ஒரு விளக்கு. அறிவுரை 'தோரா' என்பது ஒளி (காண் யோபு 18:6; 29:3; நீமொ 13:9) சட்டங்களில் காணப்படும் இறைப்பற்றை இங்கும் காணலாம். திருப்பாடலும் (119:105) இறைவனின் வார்த்தை விளக்காகவும் ஒளியாகவும் உருவகிக்கிறது. சட்டமும் ஞானமும் கைகோர்த்துச் சென்றாலும் திருத்தும் அறிவுரைகள் கற்பிக்கும் அறிவுரையாக உள்ளன. இந்த இரு உருவகங்களும் சட்டப் பற்றுதியிலிருந்து கையாளப்பட்டிருந்தாலும் இவற்றிற்குப் பழைய ஞானத்தோடும் சிறப்பான தொடர்பு உண்டு. ஒய்பிரே என்பவர் இந்த வசனத்தைக் கருத்தில் கொள்ளக் கூடாது என்கிறார். ஏனெனில் இது இருபதாவது வசனத்திலுள்ள குருநாதரின் அறிவுரையைக் கடவுளின் வார்த்தையோடு (திபா 119:105) சமமாக்குகிறது. மக்னே என்பவர் கடவுளின் வார்த்தை என்பது இப்பகுதியில் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படவில்லை. மேலும் இங்கே கூறப்படும் உருவகங்கள் நல் வழியில் வாழக் கூறப்படுபவையாகக் கொள்ளலாம் என்கிறார்.

இப்பகுதி வச 20-35 ஒரு பொருளைப் பேசும் பகுதியாக இல்லை

20-26ல் நாம் பார்ப்பது பரத்தைமையில் ஈடுபடும் பெண்

27-35இல் காணப்படுவது பிறன் மனைவி.

பரத்தைமையில் ஈடுபடுவோரை ("இஸ்ஸா சாரா") என்ற பதம் குறிக்கிறது. 'இஸ்ஸா சாரா' என்ற சொல் விபசாரத்தைச் சுட்டாது. அச்சொல் வழிபாட்டுத் தலங்களில் பரத்தைமையில் ஈடுபடும் பெண்ணைக் குறிக்கிறது.

25 - உள்ளத்தால் அவளது அழகை இச்சியாதே: இந்த வசனம் கூறுவது பரத்தைமையில் ஈடுபடுவோரைவிட விபசாரியை அதாவது திருமணமான பெண்ணைக் குறிக்கிறது. பெண்ணின் அழகும் கவர்ச்சியும் பேச்சும் அவள் மேல் மையல் கொள்ளும் ஆண்களைத் தள்ளாட வைக்கிறது.

26 - விலைமகள் விலை ஒரு வேளைச் சோறு, பிறன் மனையாளோ உயிரையே வேட்டையாடி விடுவாள்: விலை மகளுக்காக ஒருவர் செலவு செய்வது ஒரு வேளை சோறு. ஆனால் பிறன் மனையாளோடு கொள்ளும் உறவு மிகமிக ஆபத்தானது.

ஒருவேளைச் சோறு பிச்சைக்காரனுக்கு நீ இடும் பிச்சைபோன்றது. ஆனால் பிறர் மனையாளை வைத்துச் சோறுபோடுவதும் அவளது உல்லாச ஆடம்பரங்களுக்குச் செலவு செய்வதும் மிகப் பெரிய பணச் செலவு ஆகும். அவள் கொஞ்சம் கொஞ்சமாக உன் செல்வத்தைப் பறித்துக்கொள்வாள். உனது உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். இதனால் அவள் உனது உயிரையே வேட்டையாடி விடுவாள் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பிறன் மனையாளோடு ஒருவர் கொள்ளும் உறவு எவ்வளவு தொல்லையும் ஆபத்தும் நிறைந்தது என்பதை இது கூறுகிறது.

விலைமகள்கள் தங்களோடு உறவு கொள்வோரிடம் காசு வாங்குவது இஸ்ரயேலில் பரவலாக உள்ளது. ராகாபும் (யோசு 2) தாமாரும் (தொநூ 38:14-18) இதற்குச் சான்று. இவை அதிகமாகப் பெரிய தவறு எனக் கொள்ளப்படவில்லை. எனினும் இவை ஒத்துக்கொள்ளப்படாதவை. ஆனால் விபசாரம் (பிறன் மனையாள்) செய்வது வெறுக்கப்பட்டது. கண்டிக்கப்பட்டது (இச 22:22-24). இருவருக்கும் மரண தண்டனை வழங்குகிறது. ஆனால் தண்டனை கொடுக்கப்பட்டதாகப் பழைய ஏற்பாட்டில் சான்றில்லை.

27-31 - மடியில் நெருப்பை வைத்திருப்பது தழல்மீது நடப்பது: விபசாரம் செய்பவரின் தண்டனையை ஆசிரியர் விளக்குகிறார். அது நெருப்போடு விளையாடும் விளையாட்டு; சாவு எந்த நேரத்திலும் உன்னை அண்டும்.

திருடன் - பசி - பிடிபடுதல்: பசியைக் காட்டித் தண்டனையைக் குறைப்பதுபோல் ஆசிரியர் கூறுவதாகச் சிலர் பொருள்கொள்கின்றனர். பசித்தால் திருடுவதற்கும் திட்டமிட்டுத் திருடுவதற்கும் வேறுபாடு உண்டு. திட்டமிடுபவர் ஏழு மடங்குத் திருப்பித் தர வேண்டும். இது விப 21:37-22:8இல் 4 மடங்கு என்று கூறப்பட்டிருப்பதைவிடக் கண்டிப்பானது.

32 - கற்பு நெறி தவறுகிறவன்: பிறன் மனையாளைப் பயன்படுத்திக் கொள்வது புத்திகெட்ட செயல், அவன் தன்னையே அழித்துக்கொள்கிறான்.

33-35 - கணவனிடம் சினவெறியை உண்டாக்கும்: எவ்வளவு காசு கொடுத்துச் சரிப்படுத்த நினைத்தாலும் தனது மனைவியைப் பயன்படுத்தியவன் மீது ஏற்படும் கோபவெறியும் வெறுப்பும் பழி தீர்த்துக்கொள்ளவேண்டுமென்ற உணர்வைத் தூண்டிவிட்டுவிடுகிறது. அவன் இத்தகைய கொடிய செயல் செய்வதனைக் கொன்று அவன் மீது அழியா அவமானத்தைக் கொட்டி தனது வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்வான்.

செம்பொருள்

குருநாதரின் நலமிக்கப் போதனைகள் விளக்கும் ஒளியுமாகும். வாழ்வெனும் பாதையில் அவனுக்குப் பாதுகாப்பும் வழிகாட்டியுமாக அவை உள்ளன. அவை மாணாக்கனை விபசாரப் பெண்ணிடமிருந்து பாதுகாக்கும்.

ஞானம் வாழ்வின் பாதையில் வழிநடத்துகிறது.

விபசாரியோடு வழிதவறி நடந்துவிடாமல்

குடும்ப வாழ்வில் நம்பகத் தன்மை இழக்காது வாழவேண்டும். சமூகக் கட்டுப்பாடுகளைக் காக்கவேண்டும். ஆண்பெண் உறவு வெகுவாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. குடும்ப வாழ்வில் நிலைத்த தன்மை சமூக வாழ்வின் நிலைப்பாட்டிற்கு அழைத்துச் செல்கிறது. குடும்ப வாழ்வுக்குத் துரோகம் செய்வது திருமணத்தின் மதிப்பை, புனிதத்தை, நிலையான குடும்ப வாழ்வைச் சீர்குலைத்து விடும். குழந்தைகள் வாழ்வும் சிதையும்.

1.16. இளைஞருக்கு எச்சரிக்கை (7:1-27)

7:1 என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனத்தில் இருத்து; என் கட்டளைகளைச் செல்வமெனப் போற்று; 2 என் கட்டளைகளைக் கடைப்பிடி, நீ வாழ்வடைவாய்; என் அறவுரையை உன் கண்மணிப்போல் காத்துக்கொள்வாய். 3 அவற்றை உன் விரல்களில் அணியாகப் பூண்டு கொள்; உன் இதயப் பலகையில் பொறித்துவை. 4 ஞானத்தை உன் சகோதரி என்று சொல்; உணர்வை உன் தோழியாகக் கொள். 5 அப்பொழுது நீ விலைமகளிடமிருந்து தப்புவாய்; தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து காப்பாற்றப்படுவாய். 6 ஒரு நாள் நான் என் வீட்டின் பலகணியருகில் நின்றுகொண்டு, பின்னல் தட்டி வழியாகப் பார்த்தபோது, 7 பேதைகளிடையே ஓர் இளைஞனைக் கண்டேன்; மதிகேடான அவனை இளைஞரிடையே பார்த்தேன். 8 அவன் தெரு வழியாக நடந்துபோய், அதன் கோடியில் அவள் வீட்டை நோக்கிச் சென்றான். 9 அது மாலை நேரம், பொழுது மயங்கும் வேளை; அந்த இரவிலே, இருட்டும் நேரத்திலே, 10 அங்கே ஒரு பெண் அவனைக் காண வந்தாள். அவள் விலைமகளைப் போல உடுத்தி, வஞ்சக நெஞ்சினளாய் வந்தாள். 11 அவள்

வெளிப்பகட்டு மிகுந்தவள்; வெட்கத்தை ஒழித்தவள்; வீட்டில் அவளது கால் தங்காது. 12
அவள் நடுத்தெருவிலும் நிற்பாள்; முச்சந்தியிலும் நிற்பாள்; மூலைமுடுக்குகளிலும்
பதுங்கியிருப்பாள். 13 அவள் அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு, நாணமிலாத் துணிவுடன்
அவனைப் பார்த்து, 14 "நான் பலிகளைப் படைக்க வேண்டியிருந்தது; இன்று நான் என்
பொருத்தனைகளை நிறைவேற்றிவிட்டேன்; 15 அதனாலேதான் உன்னைக் காணவந்தேன்;
உன்னை ஆவலோடு தேடினேன்; கண்டுகொண்டேன். 16 என் மஞ்சத்தை மெத்தையிட்டு
அழகு செய்திருக்கின்றேன்; எகிப்து நாட்டு வண்ணக் கம்பளம் விரித்திருக்கின்றேன். 17
வெள்ளைப்போளம், சந்தனம், இலவங்கக் கலவையிட்டு, என் படுக்கையை மணம் கமழச்
செய்திருக்கின்றேன். 18 நீ வா; விடியற்காலம் வரையில் இன்பத்தில் மூழ்கியிருப்போம்;
இரவு முழுவதும் காதலாட்டத்தில் களித்திருப்போம். 19 என் கணவன் வீட்டில் இல்லை.
நெடுந்தொலைப் பயணம் செய்யப் புறப்பட்டுப் போய் விட்டான். 20 அவன் பை நிறையப்
பணம் கொண்டுபோயிருக்கின்றான்; முழுநிலா நாள்வரையில் திரும்பிவர மாட்டான்" என்று
சொன்னாள். 21 இவ்வாறு பல இனிய சொற்களால் அவனை அவள் இணங்கச் செய்தாள்;
நயமாகப் பேசி அவனை மயக்கிவிட்டாள். 22 உடனே அவனும் உணர்வு மழுங்கினவனாய்
அவள் பின்னே சென்றான்; வெட்டுவதற்காக இழுத்துச் செல்லப்படும் காளைமாட்டைப்
போலவும், வலையில் சிக்க கொள்ளப்போகும் கலைமானைப் போலவும், 23 கண்ணியில்
விழப்போகும் பறவையைப் போலவும் சென்றான். ஓர் அம்பு அவன் நெஞ்சில் ஊடுருவிப்
பாயும் வரையில் தன் உயிர் அழிக்கப்படும் என்பதை அறியாமலே சென்றான். 24
ஆகையால் பிள்ளைகளே! எனக்குச் செவிகொடுங்கள்; நான் சொல்வதைக் கவனியுங்கள்.
25 உங்கள் மனத்தை அவள் வழிகளில் செல்லவிடாதீர்கள்; மயக்கங்கொண்டு அவள்
பாதைகளில் நடவாதீர்கள். 26 அவள் பலரைக் குத்தி வீழ்த்தியிருக்கின்றாள்; வலிமை
வாய்ந்தோரையும் அவள் கொன்றிருக்கின்றாள். 27 அவள் வீடு பாதாளத்திற்குச் செல்லும்
வழி; சாவுக்கு இட்டுச் செல்லும் பாதை.

பின்புலம்

விலை மாதோடு கொள்ளும் உறவைத் தவிர்க்கவேண்டுமென்ற அறிவுரையைக் குருநாதர் தொடர்கிறார். இத்தகைய எச்சரிக்கைகளை ஆசிரியர் 2:16-15; 5:1-23; 6:20-35 பகுதிகளில் தந்துவிடுகிறார்.

இங்கு நாம் பார்க்கும் விலைமாது இனப்பெருக்கக் கடவுளின் அடியாளாக இருக்கவேண்டும். இத்தகைய பெண்களோடு கொள்ளும் உறவு இஸ்ரயேலின் சமூக, சமய, குடும்ப அடித்தளத்தையே அசைத்துவிடும் ஒன்றாகக் குருநாதர்கள் கருதினர். பிற சமயக் கலாச்சாரத்தின் மீது நாட்டங்கள் இஸ்ரயேல் சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் ஒரு பெரிய சவாலாக இருந்தது. குருநாதரின் அறிவுரைகள் பாலியல் குற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதாக இருந்தாலும் இத்தகைய வாழ்வு சமயத்தை நிராகரித்த அந்தக் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்ட ஒன்றாக பழைய ஏற்பாட்டில் கருதப்பட்டது (காண் எரே 3:2-4, 12-13,20; 4:30-31; எசே 16; ஓசே 1-3).

எனினும் 7:1-5இல் குருநாதர் மாணாக்கரை ஞானத்தைத் தங்கள் காதலராகக் கொள்ள அழைப்புத் தருகிறார். இந்த ஞானம் உருவகமாகக் காட்டப்படுகிறது. அது ஞானப் பாரம்பரியமும் ஞானிகள் தரும் அறிவுரையுமாகும்.

இப்படி ஞானமும் காதல் கடவுளாக இருந்து வேறு பெண்கள் தரும் கவர்ச்சிகளை எதிர்த்துச் செயல்பட உதவுகிறது.

குருநாதரின் இத்தகைய இலக்கியக் கூறுகள் மாணாக்கருக்கு வழிகாட்டியாக அமைந்து பிற இனத்து இனப்பெருக்கத் தேவதைகளை, கலாச்சாரத்தை, அவர்கள் வாழ்க்கை முறைகளை எதிர்கொள்ள உதவுகிறது.

ஞானம் தேவதையாக நேரடிப் பொருளில் கூறப்படாவிட்டாலும் ஞானப் போதனைகளில் அவள் ஆள் உருப்பெற்றுத் தேவதையாகக் கருதப்படுகிறாள். இவ்வாறு குருநாதர்கள் தங்கள் வாழ்வையும் பணியையும் தங்களது பாரம்பரியத்துக்கு அர்ப்பணமாக்கினர்.

இந்தப் பகுதியில் ஆசிரியர் தன்னிலையைப் பயன்படுத்திப் பேசுகிறார். தனது சுயசரிதையாக எழுதுகிறார். அதில் இளைஞனொருவன் விலைமாதால் எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படுகிறான் என்பதும் கூறப்படுகிறது. இது பத்தாம் அறிவுரை.

சொல்விளக்கம்

7:1 - பிள்ளாய் வார்த்தைகளை மனத்திலிருத்து; செல்வமெனப் போற்று: குருநாதர் ஞானப் போதனைகளைக் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்துகிறார்; தனது அதிகாரத்தை நிலை நிறுத்துகிறார். குருநாதரின் போதனைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அவை வழிகாட்டுவனவாக உள்ளன. கற்கும் முறையில் ஞாபகம், மனதைச் செலுத்துதல், கவனம் தேவை.

2 - என் கட்டளைகளைக் கடைப்பிடி வாழ்வடைவாய்: குருநாதரின் கட்டளைகள் (மிஸ்பா) வாழ்வுக்கு இட்டுச்செல்கின்றன. இது விலைமாது தரும் இறப்புக்கு எதிரானது. நீதிமொழிகளில் காணும் வாழ்வு புராண இலக்கியத்தில் காணும் வாழ்வெனும் மதம் (3:18) வாழ்வளிக்கும் ஊற்று (10:11) இவைகளோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

இறப்பு கனானேயக் கடவுளான திறந்த வாய் உள்ள
மோத் கடவுளைக் குறிக்கிறது.

வாழ்வு வெறும் மூச்சல்ல; இறப்பு இரத்த ஓட்டம் நிற்பதல்ல. மாறாக வாழும்போதே இறந்து வாழ்வது ஆகும். அதேபோல வாழ்வு என்பது வெறும் உடலோடு வாழும் வாழ்வல்ல. வாழ்வு பண்புகளால், பெருமைகளால் மாண்புகளால் அலங்கரிக்கப்பட்டது. இவ்வாழ்வு கட்டளைகளைக் கடைபிடித்து வாழ்வதால் வரும் வாழ்வை, உரமும் உற்சாகமும் நிறைந்த வாழ்வைச் சுட்டுகிறது.

அறிவுரையைக் கண்ணின் மணிபோல் காப்பது: குருநாதரின் அறிவுரை இதயத்தின் ஒளி. அது வாழ்வுக்கு வழிகாட்டுகிறது (காண் 6:23). இஸ்ரயேலின் சட்டநூல்கள் கடவுளிடமிருந்து வருபவை. அவற்றை மனத்தில் வைப்பது போன்று குருநாதரின் அறிவுரைகளை மனத்தில் கொள்ளவேண்டும். இது கடவுள் சட்டம் அவரது உடன்படிக்கைக்குக் கொடுக்கும் மதிப்பை ஞாபகப்படுத்துகிறது (காண் இச 6:4-9; எரே 31:33).

கண்மணி 'இஷ்ஷோன்' என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு. விலைமதிப்புள்ள என்ற பொருளும் இதற்கு உண்டு (இச 3:10; திபா 17:8)

3 - உன் இதயப் பலகையில் பொறித்து வை: இது வெறும் கட்டாயப்படுத்துதலை மட்டுமல்ல; உள்வாங்கித் தன்மயமாக்குதலைக் குறிக்கிறது. இவ்வாறு ஞானம் அதிகார முடையதாகவும்; இதயத்தில் போற்றித் தியானிக்கக் கூடிய பண்பையும் பெறுகிறது.

4 - ஞானம் சகோதரி, உணர்வு தோழி: ஞானத்தை உன் சகோதரி என்று சொல்வது ஞான இலக்கியத்தில் மணமகள் அல்லது மணவாட்டியைக் குறிக்கும் (இபா 4:9,11,12; 5:1) தோழி நம்பிக்கையான காதலி (தொநூ 19:8; நீத 11:39; 21:11) ஞானத்தை ஆளுருப்படுத்துவதற்கும் அதை உள் வாங்குவதற்கும் (வச 3 இதயத்தில் பொறித்தல்) உள்ள தொடர்பைப் பார்க்கலாம். ஞானம் விலைமாதுக்கு எதிரியாகச் சித்தரிக்கப்படுகிறது. விலைமாதின் தொடர்பு இறப்பைத் தரும் ஞானத்தின் உறவு உன்னை மீட்டு வாழ்வளிக்கும்.

ஞானத்தை நேசிப்பது மனைவியை நேசிப்பது போலாகும். அதுவே வாழ்வை வளப்படுத்தும், நிலை நிறுத்தும், பெருமை தரும். ஞானத்தோடு கொள்ளும் உறவு தனிப்பட்டது. மனைவியை அறிவதுபோல் ஞானத்தை அறியவேண்டும். அது கூட்டுறவையும் சொந்தபந்த உறவையும் தரும்.

5 - ஞானம் உடையவன் விலைமாதுவின் எல்லாவித சோதனைகளிலிருந்தும் காப்பாற்றப்படுவான்.

6-8 - நான் என் வீட்டின்: நான் என்பது ஆளுருப்பெற்ற ஞானத்தைக் குறிக்கிறது. அல்லது ஞானத்தைக் கற்பிக்கும் குருநாதரைச் சுட்டுகிறது. அவர் விலைமாதின் கண்ணியில் விழத்தாட்டும் திட்டங்களைக் கவனிக்கிறார்.

பலகணியில்... பார்த்தபோது: இஸ்ரயேலைச் சுற்றியுள்ள நாடுகளின் இலக்கியங்களில் அப்ரோடைட் அல்லது அஸ்தார்தே கடவுள் சாளரங்களின் (ஜன்னல்) கடவுளாகச் சைப்ரஸ், பொனீசிய வழிபாடுகளில் சித்தரிக்கப்படுகிறார். பபிலோனிய இஸ்தாரும் (இன்னொரு பெயர் கிலிலூ) சாளரங்கள் வழியாகப் பார்க்கும் தேவதையாகக் காட்டப்படுகிறார். இந்தத் தேவதையிடம் படைக்கும் ஆற்றலும் அழிக்கும் ஆற்றலும் உண்டு. இந்தக் குணம் இத்தேவதையின் அடியார்களிடமும் உண்டு. மேலும் பலகணிவழியே பார்ப்பது இனப்பெருக்கத் தேவதைகளோடு தொடர்புடையது (கனானேய அனத், அஷேரா, பொனீசிய அர்சலான்தாஷ். நிர்முத் கோர்சபாத் தேவதைகள்).

பலகணி – பாலஸ்தீனாவின் வீடுகளில் பலகணி ஒரு கதவை உடையதாக இருக்கும். அது வெளிப்புறம் நீண்டுள்ளது. அதில் ஒரு திறந்த துளை உள்ளது. அதன் வழியாகப் பார்க்கலாம். பலகணி வெளிச்சம், வெப்பத்திலிருந்து பாதுகாப்பும் தன்னை மறைத்துக்கொள்ள உதவும் ஒரு கருவியாகவும் உள்ளது. இந்தத் தேவதை போல ஞானச் சீமாட்டி செயல்படுகிறாள். ஞானத்திடம் வராது உடல் பசியால் தூண்டப்பட்டு மாணவன் விபசாரியிடம் அல்லது தேவதையின் அடியாளிடம் செல்கிறான்.

ஆறாவது வசனம் ஒரு சுயசரிதை வடிவத்தைக் கொண்டுள்ளது. ஆசிரியர் எப்படி ஓர் இளைஞன் விலைமாது ஒருவரால் கெடுக்கப்படுகிறான், எப்படி அவள் அவனை வஞ்சித்துத் தன் வலையில் மாட்டவைக்கிறாள், இறுதியில் இறப்பு அவனது விதியாகிறது என்பதைக் கூறுகிறார்.

ஞான இலக்கியத்தில் இத்தகைய இலக்கியக் கையாடல்கள் யூதாவில் மட்டுமல்ல மற்ற சுற்றுப்புற இடங்களிலும் காணப்படுகின்றன. சபையுரையாளரில் இதைக் காணலாம் (காண் யோபு 3:29-30; திபா 32:35-36).

9 - அது மாலை... அந்த இரவில்: மாலை இருளாவதும் இருட்டு நேரத்திலும் என்பது அந்த இருளின் நிலையை வலியுறுத்துவதாக உள்ளது. அந்த இரவை "இருளின் கண்" என்றும் கூறுவர். போஸ்திரோம் எனும் அறிஞர் நிலவை நான்கு பெயரிட்டு அழைப்பார். அதிலொன்று 'யாவேயின் கண்' என்பதாகும்.

மேலும் செக் 9:9இல் கதிரவனும் நிலவும் யாவேயின் கண்கள் எனக் கூறப்படுகின்றன.

எனவே இரவின் கண்களை யாவேயின் கண்ணுக்கு ஏற்றிச் சொல்வது இலக்கிய வழக்கு. இரவின் கண் என்பது இங்கு அமாவாசையைக் குறிக்கும்.

10-12 - அங்கே ஒரு பெண்: இந்தப் பெண்ணின் உடையும் கவர்ச்சியும் அவளை ஒரு விலைமாதாகக் காட்டுகிறது. அவளிடம் ஒருவரைக் கெடுப்பதற்குரிய அனைத்துத் திட்டங்களும் உண்டு. அவற்றைச் செயல்படுத்தும் ஆற்றல் அவளிடம் உண்டு. அவளுக்கு வீடு உண்டு, நல்ல குடும்பம் இல்லை. அவளுடைய கால்கள் சமூகத்திலோ குடும்பத்திலோ ஊன்றி நிற்கவில்லை. அவள் சுற்றித்திரிபவள்; அமைதியான சமூக வாழ்க்கைக்கும் குடும்ப வாழ்வுக்கும் புறம்பானவள். அக்காதிய மொழியில் சராரு என்றால் உறுதியில்லாத, எதிர்க்கின்ற என்ற பொருள் உண்டு.

இங்குக் குறிப்பிடப்படும் பெண் 'இஸ்ஸா சாராவோ' அல்லது இனப் பெருக்கக் கடவுளின் பக்தையோ அல்லது வேற்றுப்பெண்ணோ அல்ல; ஏனெனில் இங்கு நாம் பார்க்கும் ஒரு தேர்ந்த விலைமாதின் குணம் 'இஸ்ஸா சாரா'விடம் இல்லை.

13-14 - பொருத்தனைகளை நிறைவேற்றிவிட்டேன்: பெர்து எனும் அறிஞர் இவளை இனப்பெருக்கக் கடவுளாகப் பார்க்கிறார். ஏனெனில் அவள் "நான் பலிகளைப் படைக்கவேண்டியிருந்தது. பொருத்தனைகளை நிறைவேற்றிவிட்டேன்" (வச 14) எனக் கூறுகிறாள். இந்த பொருத்தனைகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை லேவி 17:11-21, 1 சாமு 9:11-13இல் காணலாம். பலிப்பொருளின் முக்கிய பகுதி கடவுளுக்குப் பின்பு பலி நிறைவேற்றும் குருக்களுக்குச் சதைப் பகுதி. ஏனைய சதை மற்றும் பகுதிகள் பலி ஒப்புக்கொடுப்பவருக்கு. பலி ஒப்புக்கொடுப்போர் பெற்ற காணிக்கைப் பகுதியைச் சமைத்து தம் விருந்தினரோடு உண்பார். இவ்வாறு தம் நேர்ச்சிக் கடனை நிறைவேற்றுவார்.

இங்குக் குறிப்பிடப்படும் பெண் இந்த நேர்ச்சைக் கடனை நிறைவேற்ற நீ என்னோடு வந்து உல்லாசமாக இருக்கலாம் என இளைஞனை அழைக்கிறாள். இந்தச் சந்திப்பு நேர்ச்சைக் கடனை நிறைவேற்ற அவளுக்கு ஒரு வாய்ப்பு. படைக்கப்பட்ட உணவை இளைஞனுக்குப் பகிர்ந்தளிப்பது அவனோடு உடலுறவு

கொள்வது. இவ்விரண்டும் நேர்ச்சைக் கடனை நிறைவேற்றத் துணைபுரிபவை. இவ்வாறு தம் கடவுளுக்குச் செலுத்த வேண்டியதை அவள் நிறைவேற்றுகிறாள்.

ஞானதேவதை தம் பக்கமும் காதல் தேவதை தம் பக்கமும் இளைஞரைக் கவர்ந்திழுப்பதை ஞானாசிரியர் கூறுகிறார்.

15-18 - மேலும் இன்று பொருத்தனை செலுத்தவேண்டியுள்ளது என்று நிகழ்காலத்தில் மொழிபெயர்த்தால் இளைஞனோடு உணவு அருந்துவது மட்டுமல்ல உடலுறவு கொள்வதும் பொருத்தனையை நிறைவேற்ற மேற்கொள்ளும் ஒரு வழிபாட்டுச் சடங்காகும். இதனால் இந்தப் புனிதச் சடங்குகளை நிறைவேற்றி உடலுறவால் அதை நிறைவு செய்ய அப்பெண் மஞ்சத்தை அழகு செய்கிறாள்.

19-20 - மக்கனே எனும் அறிஞர் இதை வெறும் வழிபாட்டுச் சூழல் வழியாக விளக்கமளிப்பது நல்ல விளக்கத்தை அளிக்க முடியாது என்கிறார். ஒருவேளை அப்ரோடைட் தெய்வத்தை இப்பெண் வணக்கத்துடன் வழிபடுவதாகக் கொண்டாலும் கணவன் இல்லாத நேரத்தில் இவ்வாறு நடப்பது அவனுக்கு இழைக்கும் துரோகமாகக் கருதுகிறார். இவ்வாறு நடப்பது மரபையும் சமூக நெறியையும் மதிக்கவில்லை என்பதும் தெரியும். எனவே அவளது காதல் (காம) வேட்கைக்கு இந்தச் சமயச் சடங்குகள் தனக்குச் சாதகமாயிருப்பதை உணர்கிறாள் என்பது அவர் கருத்து. இப்பெண்ணைப் பற்றிய நமது மதிப்பீடு இதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் பெண் ஒரு வேற்று இனத்துப் பெண். அவருடைய கணவரும் வேற்றினத்தார். அவள் இன்னொரு சமூகத்திலுள்ள மக்கள் மத்தியில் வாழ்கின்றாள். அவளது வாழ்வும் வழிமுறைகளும் நன்நெறிகளுக்கு அப்பாற்பட்டது. அவள் கணவர் வியாபாரியாகையால் பல காலம் வீட்டில் இல்லை. எனவே அவள் தொல்லையில்லாது எல்லா விபசாரச் செயல்களிலும் ஈடுபடமுடியும்.

20 - முழுநிலா வரையில் திரும்பி வரமாட்டான். அப்படியென்றால் அமாவாசையில் அவள் தனித்திருப்பாள். அது இளைஞனைக் கவர்ந்து உல்லாசமாயிருக்கத் தகுந்த நேரம். மேலும் வழிபாட்டுச் சடங்கு முறைப்படி அமாவசையில் சந்திரனும் சூரியனும் கூடி மகிழ்கின்றன. அதை வழிபாட்டிலும் கொண்டாடி மகிழ்வது கண்கூடு.

மெக்கனேயின் கருத்தில் இங்கே எச்சரிக்கையாகக் கூறப்படும் பெண் வழிபாட்டில் தொடர்புடைய பெண்மட்டுமல்ல, மாறாக திருமணமான விபசாரப் பெண். அவள் அப்ரோடைட் தேவதையின் பக்தையாக இருப்பினும், அவ்வாறு அப்பெண்ணோடு தொடர்பு கொள்வது பாதகமான செயல் என்று இணைச்சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும் இந்தக் கொடூரங்கள் பற்றி எகிப்திய ஞான இலக்கியம் கூறுவதை மனதில் கொள்ளவேண்டும்.

மேலும் இப்படிப்பட்ட பெண்கள் இளைஞர்களின் உயிருக்கு நஞ்சாக இருப்பார்கள் அதற்குச் சமயம் காரணம் அல்ல. மாறாக அவர்கள் ஆபத்தை உண்டாக்கும் விலைமாதுகளாய் இருப்பதே காரணம்.

இங்கு மையக் கருத்தாக ஆசிரியர் முன்வைப்பது சமய விலைமாதுகளாய் இருப்பதால் மட்டும் அவர்கள் உயிர்கொல்லிகளல்ல; மாறாக, எந்த விலைமாதும், குறிப்பாகத் திருமணமான விலைமாதும் தவிர்க்கப்பட வேண்டியவர்களே. தகாத உறவு சமய விலைமாதுவினடத்தில் திருத்தமுடியாத ஒரு பாதிப்பை ஏற்படுத்திவிடும். எனவே அவர்களைப்பற்றி ஆசிரியர் கூறுவது வியப்புக்குரியதல்ல.

21-22 - ஆசை வார்த்தைகள் மயக்கிவிடுகின்றன: அவள் அவனை வேரோடு பிடுங்கிவிடுகிறாள். அவன் தன்னிலை மறக்கிறான். அவள் பின்னே செல்கிறான். அவனுக்கு ஏற்படும் தீங்கை ஆசிரியர் இரண்டு உருவகத்தில் தருகின்றார். வெட்டப்படும் காளைமாடு, வலையில் சிக்கிய கலைமான். இதைக் "கொல்வதற்குக் கழுத்தில் கயிற்றைக் கட்டிக் கொண்டுபோகப்படும் கலைமான்" எனலாம்.

23 - கண்ணியில் விழப்போகும் பறவை: கண்ணியில் அகப்பட்ட பறவைபோல் இளைஞனால் தப்பவியலாது. அவனது நெஞ்சை அம்புகள் துளைத்துவிடும். இந்தக் கொடூர நிலையை அவன் அறியவில்லை. அவனது இந்தத் தவறு அவனது 'உயிரால்' ஈடுசெய்யப்படுகிறது.

24 - ஆகையால் பிள்ளைகளே எனக்குச் செவிகொடுங்கள். மறுபடியும் தம் ஆலோசனைகளுக்குச் செவிமடுக்கப் பணிக்கின்றார் ஆசிரியர். கவனம் சிதறாது கருத்துரைகளைக் கடைபிடிக்க அழைப்பு விடுக்கின்றார்.

25 - உங்கள் மனத்தை அவள் வழிகளில்: வழிகள் என்பது இங்கு அழிவுக்கு இட்டுச்செல்லும் வழி. கனானியப் புராணக் கதைகளில் மோத் தேவதை இறப்புக்கான பாதையில் கொண்டுசெல்லும் ஒரு பெண்ணின் உருவத்தைப்

படம்பிடித்துக்காட்டுவதாக உள்ளது. அவளிடம் மையல் கொள்ளும் எவரும் பாதாளத்திற்குச் செல்லும் வழியில் உள்ளார். இதிலிருந்து மீளமுடியாது. இது சாவோடு செய்யும் உடன்படிக்கை, இதிலிருந்து மீள்வது கடினம்.

26 – எந்த வலிமை வாய்ந்த மனிதரையும் அவளால் வீழ்த்த முடியும். தப்புவார் யாருமில்லை. சாவே அவர்கள் கதி.

27 – பாதாளம் சாவு: மோத் தேவதை தனது வாயைத் திறப்பது போன்ற கருத்து இங்குளது. எனினும் அதற்கு மறு விளக்கம் தரப்பட்டுள்ளது. அந்த விலைமாதுவின் வீடு பாதாளத்திற்கு இட்டுச்செல்கிறது; இறப்பு அறையாக அது மாறிவிடுகிறது; அவளது வீடு மோத் தெய்வத்தின் திறந்த தொண்டை, அதாவது இறப்பின் வாயிலாகிறது.

செம்பொருள்

இந்த அறிவுரை விலைமாதர்களிடம் எச்சரிக்கையாக இருக்கத் தூண்டுகிறது. ஞானச் சீமாட்டிக்கும் விலைமாதுக்கும் உள்ள முரண்பாடுகளைப் பார்க்கிறோம். இது விலைமாதோடு கொள்ளும் உடலுறவைப் பற்றியும் கூறுகிறது. ஞான ஆசிரியர் ஞானத்தைப் பற்றிக் கூறுகையில் தம் காலத்துப் பிற இனத்தாரின் இலக்கியத் தாக்கங்களிலிருந்து விடுபடமுடியவில்லை. ஞானச் சீமாட்டி ஓர் அழகான கவர்ந்திழுக்கும் பெண்ணாகச் சித்தரிப்பது பிற நாட்டு மரபுகளிலும் உண்டு. அவர் அன்பான காதலர் எனவும் கூறப்படுகிறது. இத்தாக்கங்களைப் பெற்ற யூத ஞான ஆசிரியர் இனப்பெருக்கத் தேவதை தனது அடியார்களுக்கு நல்ல நலன்களான வாழ்வு, வளமை, செல்வம், கூர்மதி, ஞானம் போன்றவற்றைக் கொடுக்கும் கூறுகளை மனதில் கொள்கிறார்.

எனினும் வேற்றினத்துப் பெண்ணிடம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனெனில் அவர் அழிவையும் சாவையும் கொணர்பவர் எனக் கூறுகிறார் ஆசிரியர். இந்த வேற்றுப் பெண் இனப் பெருக்கத் தேவதையின் பக்தை மட்டுமல்ல அவள் விபசாரி, தன் கணவனுக்குத் துரோகம் செய்பவள். அவள் இளைஞர்களைத் தன் காம வலையில் சிக்கவைத்து வீழ்த்திவிடுபவர். மோத் என்ற பிளந்திருக்கும் வாயை உடைய கனானியத் தேவதையை இது நினைவுபடுத்துகிறது.

இங்கு ஞான ஆசிரியர் விபசாரத்தை விட்டுவிட வேண்டும்; அதேநேரம் இனப்பெருக்கத் தேவதையோடு எந்த உறவும் கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

1.17. ஞானத்திற்குப் புகழுரை (8:1-23)

8:1 ஞானம் அழைக்கின்றதன்றோ? மெய்யறிவு குரல் எழுப்புகிறதன்றோ? 2
வழியருகிலுள்ள உயரமான இடத்திலும், தெருக்கள் கூடும் இடத்திலும் அது நிற்கின்றது.
3 நகருக்குள் நுழையும் வாயிலருகே, நகர வாயிலை நெருங்கும் இடத்திலே, அது நின்று
கொண்டு இவ்வாறு உரத்துச் சொல்லுகிறது; 4 மானிடரே! உங்களுக்கே நான் இதை
உரைக்கின்றேன்; ஒவ்வொரு மனிதருக்கும் சொல்லுகின்றேன். 5 முன்மதியற்றோரே!
விவேகமாயிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; மதிகேடரே! உணர்வைப் பெறுங்கள். 6 நான்
சொல்வதைக் கவனியுங்கள்; மிகத் தெளிவாகச் சொல்கின்றேன்; நான் ஒளிவு மறைவின்றிக்
கூறுகின்றேன். 7 ஏனெனில், என் வாய் உண்மையே பேசும்; பொல்லாங்கான பேச்சு என்
நாவுக்கு அருவருப்பு. 8 என் வார்த்தைகளெல்லாம் நேர்மையானவை; உருட்டும் புரட்டும்
அவற்றில் இல்லை. 9 உணர்வாற்றல் உள்ளோர்க்கு அவை யாவும் மிகத் தெளிவு;
அறிவை அடைந்தோர்க்கு அவை நேர்மையானவை. 10 வெள்ளியைவிட மேலாக என்
அறிவுரையை ஏற்றுக்கொள்ளுங்கள்; பசும் பொன்னைவிட மேலாக அறிவை விரும்புங்கள்.
11 பவளத்திலும் ஞானமே சிறந்தது; நீங்கள் விரும்புவது எதுவும் அதற்கு நிகராகாது. 12
நானே ஞானம்; நான் விவேகத்தோடு வாழ்கின்றேன்; அறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும்
கொண்டுள்ளேன். 13 ஆண்டவருக்கு அஞ்சுவது தீமையைப் பகைக்கச் செய்யும்; ஆணவத்தையும்
இறுமாப்பையும் தீமையையும் உருட்டையும் புரட்டையும் நான் வெறுக்கின்றேன்.14 திட்டம்
இடுவதும் நானே; இட்டதைச் செய்வதும் நானே. உணர்வும் நானே. வலிமையும் எனதே. 15
அரசர் ஆட்சி செலுத்துவதும் என்னால்; ஆட்சியாளர் சட்டம் இயற்றுவதும் என்னால். 16
அதிகாரிகள் ஆளுவதும் என்னாலே; உலக நீதிபதிகள் அனைவரும் உண்மைத் தீர்ப்பு
வழங்குவதும் என்னாலே. 17 எனக்கு அன்பு காட்டுவோருக்கு நானும் அன்புகாட்டுவேன்;
என்னை ஆவலோடு தேடுகின்றவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள். 18 என்னிடம் செல்வமும்
மேன்மையும், அழியாப் பொருளும் அனைத்து நலமும் உண்டு. 19 என்னை அடைந்தவர்கள்
பெறும் பயன் பசும்பொன்னைவிடச் சிறந்தது; என்னை அடைந்தவர்களுக்குக் கிடைக்கும்
விளைச்சல் தூய வெள்ளியை விட மேலானது. 20 நான் நேர்மையான வழியைப்
பின்பற்றுகின்றேன்; என் பாதை முறையான பாதை. 21 என்மீது அன்புகூர்வோருக்குச்
செல்வம் வழங்குகின்றேன்; அவர்களுடைய களஞ்சியங்களை நிரப்புகின்றேன். 22 ஆண்டவர்
தம் படைப்பின் தொடக்கத்திலேயே தொல்பழங்காலத்தில் எதையும் படைக்கும் முன்னரே,
என்னைப் படைத்தார். 23 தொடக்கத்தில், பூவுலகு உண்டாகுமுன்னே, நானே முதன்முதல்
நிலைநிறுத்தப்பெற்றேன். 24 கடல்களே இல்லாத காலத்தில் நான் பிறந்தேன்; பொங்கி
வழியும் ஊற்றுகளும் அப்போது இல்லை. 25 மலைகள் நிலைநாட்டப்படு முன்னே, குன்றுகள்
உண்டாகுமுன்னே நான் பிறந்தேன். 26 அவர் பூவுலகையும் பரந்த வெளியையும்
உண்டாக்குமுன்னே, உலகின் முதல் மண்துகளை உண்டாக்குமுன்னே நான் பிறந்தேன்.
27 வானத்தை அவர் நிலைநிறுத்தினபோது, கடல்மீது அடிவானத்தின் எல்லையைக்
குறித்தபோது, நான் அங்கே இருந்தேன். 28 உலகத்தில் மேகங்களை அவர் அமைத்தபோது
ஆழ்கடலில் ஊற்றுகளை அவர் தோற்றுவித்தபோது, நான் அங்கே இருந்தேன். 29 அவர்
கடலுக்கு எல்லையை ஏற்படுத்தி அந்த எல்லையைக் கடல் நீர் கடவாதிருக்கும்படி
செய்தபோது, பூவுலகிற்கு அவர் அடித்தளமிட்டபோது, 30 நான் அவர் அருகில் அவருடைய
சிற்பியாய் இருந்தேன்; நாள்தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்; எப்போதும் அவர்
முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன். 31 அவரது பூவுலகில் எங்கும் மகிழ்ந்து
செயலாற்றினேன்; மனித இனத்தோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டேன். 32 எனவே, பிள்ளைகளே,

எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைப் பின்பற்றுகின்றோர் நற்பேறு பெற்றோர்! 33 நற்பயிற்சி பெற்று ஞானத்தை அடையுங்கள்; அதைப் புறக்கணியாதீர்கள். 34 என் வாயிற்படியில் நாள்தோறும் விழிப்புள்ளோராய் நின்று, என் கதவு நிலையருகில் காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கின்றோர் நற்பேறு பெற்றோர்! 35 என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர்; ஆண்டவரின் கருணை அவர்களுக்குக் கிடைக்கும். 36 என்னைத் தேடி அடையாதோர் தமக்குக் கேடு வருவித்துக் கொள்வர்; என்னை வெறுக்கும் அனைவரும் சாவை விரும்புவோர் ஆவர்!

பின்புலம்

நீதிமொழிகளில் அலகு எட்டு அறிவுரைகளை அதிகமாகக் கூறவில்லை. நேரடியாக அறிவுரைகளில் கொடுக்கப்படும் கட்டளைகளோ விதிகளோ இவ்வதிகாரத்தில் இல்லை. 8:1-11,32-36 இந்த விதிகளைக் கொண்டிருந்தாலும் அவை இன்னொரு இலக்கிய விதிகளைச் சார்ந்தவை.

மேலும் ஞானாசிரியர் இறைவாக்கினர்களைப்போல மக்கள் கூடும் அல்லது நடமாடும் இடங்களில் அவர்களைச் சந்திக்கிறார். (பொதுக் காரியங்களுக்காக / வியாபாரங்களுக்காகக் கூடுகின்ற இடங்கள்). அங்குக் குரலெழுப்பி அழைத்து அவர்களோடு பேசுகிறார். ஜெஸ்மர் என்பவர் ஞானம் விலைமாதுகள் இரவில் யாரும் பாராத நேரத்தில் கவர்ந்திழுக்கும் வார்த்தையால் பேசிக் கெடுப்பதைப் போலல்லாமல் இளைஞரை நல்வழிப்படுத்துகிறார் என்கிறார். ஏழாம் நாயகியாக இளைஞரை நல்வழிப்படுத்துகிறார் என்கிறார். ஏழாம் அலகுவில் பலகணி வழியாகப் பார்த்த ஞானச் சீமாட்டி தெருக்களில், சந்தியில் மக்கள் நடமாடும் இடங்களில் உள்ளார்.

இளைஞர்களுக்குச் சிறப்பாகக் கற்றுத்தேறாத, சரியான பயிற்சி பெறாவர்களுக்குக் கற்றுத் தருகிறார். மேலும் ஞான ஆசிரியர் அதிகாரத்தோடு அழைத்துப் பண்போடு கற்பிக்கிறார், அவர் கொடூரரல்லர்.

மேலும் ஞானம் தன்னைப் புகழ்வதாகக் காண்கிறோம். மத்தியதரை நாடுகளிலே காணப்படும் ஞான இலக்கியங்களிலும் இதைக் காணமுடிகிறது. ஞானச் சீமாட்டி விண்ணக அரசியாக மிளிர்கிறாள்.

இரண்டு வகைகளில் ஞானம் தமது பெருமையை ஏற்படுத்திக் கொள்கிறாள். ஒன்று (வச 12): ஞானம் விவேகமும் சிந்திக்கும் ஆற்றலையும் கொண்டு உலகத்தில் ஆட்சிபீடத்திலுள்ளவருக்கு உதவுகிறார். அரசர்களுக்கு ஆலோசனை தந்து வெற்றிபெறச் செய்கிறாள்.

மற்றொன்று: உலகம் தோன்று முன்பே தனது அலுவல்களைக் கூறித் தனது உயர்நிலையை உறுதிப்படுத்துகிறாள் (22-31). நாம் தெரியவேண்டிய இன்னொன்று என்னவெனில் ஞானத்தின் ஆற்றலை வாழ்வில் அனுபவித்த தொகுப்புகளைக்கொண்டு அதன் உலகில் கொண்டுள்ள ஈடுபாட்டைக் கண்டுணர்கிறோம்.

காலங்களுக்கு முன்பே இருந்த வரலாற்றுக்கு அப்பாற்பட்ட ஞானத்தின் உடனிருப்பு ஞானத்தில் உள்ள ஆற்றலுக்கு அடித்தளமாகிறது. ஞானம் நாடுகளின் விதிகளை வடிவமைக்கிறது; மனிதனில் வாழ்கிறது. ஞானமே நேர்மையும் உலகச் செல்வமும் அடைய துணையாயுள்ளது. இதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இவ்வாறு பார்க்கையில் இந்த அலகு பழங்கால ஞானத்தில் வேரூன்றியுள்ளதைக் காணலாம்.

வச 22-31 - பட்டறிவிலிருந்து புறப்படும் வியூகங்கள் ஞானம் எப்படி உலகம் உண்டாவதற்கு முன்னே இன்னொரு வரலாற்றைக் கொண்டிருந்தது என்பதை எடுத்துரைக்கிறது. இவ்வாறு பட்டறிவால் வந்த ஞானத்தின் மேன்மைக்கு இறையியல் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

கயாட்ஸ் என்ற அறிஞர்: எகிப்திய மாத் தெய்வம் உலகம் உண்டாவதற்கு முன்னால் இருந்தது; ஒரு தெய்வீகக் குழந்தையாக விளையாடியது, ஒரு காதலியாக இருந்தது, வாழ்வும் பாதுகாப்பும் அளித்தது, அரசரின் அரசாட்சிக்கு ஆற்றல் தந்தது போன்ற குணங்களை ஞான இலக்கியம் கையாண்டிருக்கலாம் என்கிறார். ஒரு சில மாறுபாடுகள் இருப்பினும் எகிப்திய பூராணக் கருத்துகள் இஸ்ரயேல் ஞானத்தைப் பாதித்திருக்க வாய்ப்பு உண்டு.

நீதிமொழிகள் அலகு எட்டில் பின்வரும் பகுதிகளைக் காணலாம்.

8:1-3	-	ஞானச் சீமாட்டி அறிவுரை தருபவள்
8:4-11	-	சாதாரண மனிதரை அழைக்கிறாள்
8:12-21	-	ஞானம் விண்ணக அரசி.
8:22-31	-	ஞானமும் படைப்பும்
8:32-36	-	வாழ்வை அடைய அறிவுரை

சொல்விளக்கம்

1 – ஞானச் சீமாட்டி கால்நடையாகச் சென்று மக்களை அழைத்து அறிவுரை தருகிறாள். சந்தைத் தெருக்கள், அங்குள்ள ஒலி நிரம்பிய மக்கள் நடமாட்டங்கள் ஞானச்சீமாட்டிக்குப் பரிச்சையமானது. அறிவாளிகளோ, கற்றோரோ மட்டுமல்ல கல்லாதோரும் பாமரரும் இதில் அடங்குவர்.

உரத்த குரலில் சொல்வது கற்றோர் நிறைந்த சபையில் அல்ல, கோவிலில் வழிபட வந்த கூட்டத்திற்கும் அல்ல, உயர் மட்டத்தவர்க்கும் அல்ல மாறாக எந்த அலுவலைச் செய்தாலும் அவர்கள் திறந்த வெளியில் நடக்கும் கூட்டத்திற்கு அழைக்கப்படுகிறவர்கள்.

ஞானச் சீமாட்டி தரும் அறிவுரையைக்கேட்க
ஒரு மக்கள் கூட்டம் தயாரிக்கப்படவில்லை
விளம்பரமும் செய்யப்படவில்லை

வேறு எந்த முன் தயாரிப்புமின்றி ஞானச் சீமாட்டிச் செல்கிறாள் அவளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்ற உத்தரவாதமில்லை. ஞானச் சீமாட்டி போட்டி வலுவாக இருக்கும் இடத்தில் உள்ளார். இந்தப் போட்டி மற்ற பேச்சாளர்கள் அங்கிருந்தார்கள் என்பதல்ல, மாறாக வியாபாரத்தில் கவனம் கொண்டிருப்பவர் நல்ல இலாபம் ஈட்டவும் பேரம் பேசவும் பணம் சேர்க்கவும் சொந்த ஊர் அரசியல் பேசவும் – நேரம் செலவிடுபவர் இவர்கள் எப்படி பேச்சைக் கேட்க முடியும்?

இத்தகைய சூழலில் அவள் உரத்த குரலெழுப்புகிறாள். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில், சாலை ஓரத்தில் அல்லது சந்தி ரோட்டில், நகர வாயிலில் தனது அறிவுரை மேடையை அமைக்கின்றாள்.

நகரம் – அங்குள்ள பல இடங்கள்.

இங்கு வந்து ஆசிரியர்கள் கல்லாதோரை ஞானத்தைக் கற்றுக்கொள்ள அறிவுறுத்தினர். எனவே பழங்காலத்தில் இந்த இடங்களில் ஞானப் பள்ளிகள் இருந்திருக்கவேண்டும் என்றும் பெர்து கருதுகிறார். இக்காலக் கட்டங்களில் தத்துவ ஞானிகள், ஆசிரியர்கள் நகரங்கள், பட்டணங்கள் சென்று மாணாக்கரை கற்க அறிவுறுத்தினர்.

ஆசிரியர்களுக்கு இதற்காகச் சன்மானம் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

மாணாக்கர்களைக் கற்கப் பணிப்பது வருந்திக் கூப்பிடும் ஓர் அழைப்பு.

அறிவுரை தருதல்: நல்ல புத்திமதி தந்து அறநெறியில் மாணாக்கர்களை வாழப் பணிப்பது.

யூத ஞானிகள் இப்படிச் செய்தார்களா என்பது தெளிவு இல்லை. எனினும் ஞானச் சீமாட்டி பயணிக்கிறாள் (1:20-33; 8:2-3).

சீராக் ஞான நூல் ஞானிகள் மற்ற நாடுகளுக்கு ஞானம் கற்கப் பயணிப்பதைப் பற்றிக் கூறுகிறது (சீரா 39:4).

2 - வழியருகிலுள்ள உயரமான இடத்தில்: நகரம் ஞானம் கற்கும் இடம் மட்டுமல்ல, படைப்பின் நகரமாகச் சித்தரிக்கப்படுகிறது. ஞானச் சீமாட்டி பயணித்து அறிவுரை தருகிறாள். ஞானச் சீமாட்டி, உயரமான (காண் நீமொ 3,14) நுழைவாயிலிருந்து கூப்பிடுகிறாள். இந்த உருவகத்தில் கடவுளின் அருகாமை ஞானம் வழியாக நிஜமாகிறது. உலகமே மக்கள் வாழும் நகரமாகப் புராணங்களில் சித்தரிக்கப்படுகிறது, மிக முக்கியமான அரசியல் அல்லது சமயத் தலைநகரங்கள் மைய இடத்தைப் பிடிக்கின்றன. இங்குப் பெரிய தேவர்கள் குடியிருந்தார்கள். பராமரிப்பின் தேவர்கள் தெய்வீக ஆட்சி, கோயில்வழிபாடு, மனித ஆசாரங்கள் வழியாகப் படைப்பை ஒருங்கமைத்தனர்.

குழப்பமூட்டும் (வரலாற்று, புராண) ஆற்றல்களைக் கட்டுக்குள் வைத்திருந்தனர் (திபா 46, 48, 76). தூய நகரமான எருசலேமில் கோவில், அரசர்கள், குருக்கள் இருந்தனர். இது வானுக்கும் மண்ணுக்கும் பாலமாக இருந்தது.

உயரமான இடம் (8:2; காண் 1சாமு 9:12-25; 10:5,13; 1அர 3:2-4; எரே 19:5,32-35). நகரத்தின் உயரமான இடத்தில் கோவிலிருந்தது. இது கடவுளின் கடந்த தன்மையைக் காட்டுகிறது. நுழைவாயில் தேவர்கள் வாழும் இடம்.

கோவில்கள், அரண்மனைகள் உயரமான இடத்தில் இருந்தன. இவை பாதுகாப்பையும் சிறப்பாக அரசரின் அதிகாரத்தையும் குறித்தன. அரசர்கள் கோவிலுக்கு அருகாமையில் இருந்தனர். இங்கிருந்து அதிகாரம் பெற ஏதுவானதாக இது இருந்தது (1அர 5-9).

எருசலேம் கோவில் உயர்ந்த இடத்தில் இருந்தது (எசா 18:12; 31:12; எசே 20:40). சாலமோனின் அரண்மனையும் அருகிருந்தது. ஞான ஆசிரியர் (8:1-3) புராண உருவகத்திலிருந்து குறிப்பிடும் நகரத்தை உலகமெனப் பாவித்து ஞானச் சீமாட்டி ஞானத்தைக் கற்க விடுக்கும் அழைப்பைக் காட்டுகிறார்.

ஞானத்தைக் கற்பது: வாழ்வளிக்கும் ஆற்றலைப் பெறுவதும் உலகத்தைச் சீராகக் கண்காணிப்பதும் அதன் நோக்கமாகும். வாயில்களில் பயணிகள் நெருக்கடி.

3 - நுழையும் வாயிலருகே: வியாபாரம், சட்ட வழக்குகள் அங்கு நடந்தேறின (2சாமு 18:24,33) இறைவாக்குகளை முழங்கினர் (ஆமோ 5:12,15) நீதிமன்றங்கள் வழக்குகளைத் தீர்த்து வைத்தன (2சாமு 15:2; யோபு 29:7). அங்குப் பயணிகளுக்கு வியாபாரிகள் தங்கள் பொருள்களை விற்றனர். குருநாதர்கள் மாணாக்கருக்கு அறிவுரை தந்தனர்.

ஞானம் நுழைவாயிலில் நின்று ஞானம் கற்க விடுக்கும் அழைப்பின் உருவகம் மனித செயல்பாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. (வியாபாரம், நீதிசெலுத்தல், கற்பித்தல்) - இறை மனித சமூக அமைப்பு வாழ்க்கைக்கு இன்றியமையாதது. கல்வி சமூகத்திற்கும் மனித வாழ்வுக்கும் இன்றியமையாதது. ஞானம் இதற்கு உதவுகிறது.

ஞானச் சீமாட்டி: மக்களோடு மக்களில் கலந்து கற்பிக்கிறாள். அவள் வாழ்வுக்கான அறிவுரை தருகிறாள். ஒற்றுமையாக இசைவாக வாழ, வாழ்வில் எல்லாத் துறைகளிலும் வெற்றிபெற உதவுகிறாள். இவ்வாறு ஞானம் விண்ணுக்கும் மண்ணுக்கும் கடவுளுக்கும் மனிதருக்கும் உறவுப் பாலமாகிறாள்.

5 - இது சிறப்பாக இளைஞர்களுக்குக் கொடுக்கப்படும் அறிவுரை என்றாலும் பயிற்சி பெறாத, நல்லது தீயது அறியாத அனைவருக்கும் கூறப்படுகிறது. இவர்கள் திருத்தப்பட முடியாதவர்கள் (நீமொ 27:22) எனினும் சிந்தனை ஆற்றலைப் பெருக்க அழைப்புவிடுக்கிறாள். அவள் கற்பிப்பது அறிவு மட்டுமல்ல மிக சிறப்பான நன்னெறி. வார்த்தைகள் கடுமையாக உள்ளன. கற்பிப்பதற்கு ஏதுவாக இருக்கலாம். அதிகாரக் கட்டடளையாக உள்ளது.

6 - இங்கு ஞானம் தமது நேர்மையை, உண்மையைப் பதிவு செய்கிறது. மேலும் இப்பண்புகள் முரணான பண்புகளைக் கொண்டு தெளிவாக்கப்படுகின்றன. உண்மையும் நேர்மையும் உருட்டும் புரட்டும் என்ற பண்புகளுக்கு எதிரான பண்புகளாகக் கூறப்படுகின்றன. உணர்வாற்றல், அறிவாற்றல் உள்ளோருக்கு இவை எளிதாய்ப் புலப்படும்.

7-9 – ஞானத்தால் தீமையைத் தாங்கவியலாது. அது அதை வெறுக்கிறது. ஞானத்தால் உருட்டையும் புரட்டையும் சகிக்க முடியாது. சமுதாயத் தீங்குகளை

ஞானம் வெறுக்கிறது. ஏமாற்றுதல், பொல்லாங்கு பேசுதல் ஞானத்துக்கு இயைந்தவையல்ல. நேர்மையும் தெளிவும் ஞானமுடையவரின் பண்புகள். இது (இச 32:4-5) யோசேப்பின் அறிவுரையை பிரதிபலிக்கிறது.

10-11 – ஞானத்தின் முன் வெற்றி, பொன், பவளம் அனைத்தின் மதிப்பும் பின்தங்கிவிடுகிறது (காண் 2:4; 3:14-15) ஞானம் அனைத்தையும் விஞ்சுகிறது. ஞானம் இருப்பின் மற்றவைக்கும் மதிப்புண்டு.

12-14 – இப்பகுதியில் ஞானம் ஒரு தேர்ந்த நாட்டுத் தலைவர் போல் செயல்படுகிறாள். உலக நிர்வாகங்களில் மூழ்கியிருக்கிறாள். ஞானம் விவேகமும் சிந்திக்கும் ஆற்றலும் கொண்டவள். ஞானத்துக்கு உலக நடப்புகள் உலக நிர்வாகச் சிக்கல்கள், அனைத்தும் அத்துபடி. இப்பகுதி தன்னிலைக் கூற்றாக அமைகிறது.

விவேகம், அறிவு, சிந்திக்கும் ஆற்றல், திட்டமிடுவது, இட்டதைச் செய்வது, உணர்வு, வலிமை நானே: ஞானம் ஒரு கைதேர்ந்த உலக ஞானியாக இருக்கிறாள். அவளது பலவித கூர்மையான நுட்ப மதியையும் அறிவுத்திறனும் நிர்வாகத்தில் காட்டும் விவேகமும் அவளை ஒரு நாட்டு நிர்வாகியாகக் காட்டுகிறது.

13 – ஆண்டவருக்கு அஞ்சுவது: இது இடைச்செருகலாகவும் கருத்து ஓட்டத்தை குலைப்பதாகவும் உள்ளது என அறிஞர் கூறுவர். பழமை ஞானத்தில் இல்லாதது, பின்பு யாவேயின் அச்சம் என்று சேர்க்கப்பட்டுள்ளது. ஞானம் இறுமாப்பையும் தீமையையும் புரட்டையும் பகைக்கிறது. பின்பு அது யாவேயின் அச்சமாகச் சேர்க்கப்பட்டுப் புதிய விளக்கம் தரப்படுகிறது. யாவே மீதுள்ள பற்றுப் பிற்கால ஞான இலக்கியத்தில் நுழைந்து மாறுபட்ட விளக்கத்தைத் தருகிறது. ஞானம் கல்வி சார்ந்ததாக அன்றிச் சமயம் சார்ந்ததாகக் காட்டும் முயற்சி உள்ளது.

விவேகமும் அறிவும் மனநுட்பத்தோடு தொடர்புடையது. கிரவுஸ், மக்கனே அறிஞர்களின் கருத்துப்படி ஞானம் சிறந்த மதிநுட்பத்தையும் அரசியல் உலகில் காட்டும் சாணக்கியத்தையும் கொண்டிருக்கிறாள்.

15-16 – ஞானச் சீமாட்டி தன் ஆற்றல்களை உலகிலுள்ளோர்க்குப் பகிர்ந்தளிக்கிறாள். இந்த ஆற்றல் அரசர்கள், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், நீதிபதிகளுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. பழங்கால அண்டைக்கிழக்கு நாடுகளில் மட்டுமல்ல, இஸ்ரயேலிலும் ஞானம் அரசர்களோடு தொடர்புடையதாயுள்ளது (சாலமோன் அரசர் 1அர 39-14). மேலும் அரசர்களுக்கும்

ஆலோசனை வழங்கப்படுவதை 2 சாமு 16:23னுடன் ஒப்பிட்டுச் சொல்லலாம். அகிதோபால் தாவீதின் ஆலோசகராக இருந்தார். அவரது ஆலோசனை கடவுள் சொல்போல் ஏற்கப்பட்டது.

ஆளுருப்பெற்ற ஞானம் இங்கு மட்டுமே தன்னைவிட மேலான யாவே கடவுளைக் குறிப்பிடுகிறது. மற்ற இடங்களில் தாமளிக்கும் கொடைகளாக அனைத்தும் கூறப்படுகின்றன.

17-21 - பெர்து இப்பகுதியில் ஞானத்தை விண்ணக அரசியாக அல்லது இனப்பெருக்கத் தேவதையாகப் பார்க்கிறார் ஆசிரியர். ஞானம் விண்ணிலிருந்து மண்ணை ஆள்கிறது. அவள் வாழ்வு, செல்வம், புகழ், நலம் அனைத்தும் அருள்பவள். பழைய கட்டுக் கதைகளில் காணப்படும் ஞானத்தின்மீது அன்பு கூர்தல், அதை ஏங்கித் தேடுதல் அதனால் வரும் பயன்கள் அக்காலத்தவர்களுக்குத் தெரிந்திருந்தது.

17 - கயாட்ஸ் என்பவர் ஞானம் காதலியாகவும் அன்புக்குரியவளாகவும் மாத் என்ற எகிப்தியத் தேவதையை வைத்துப் புனையப்பட்டுள்ளது என்கிறார். மர்பி மாத் தெய்வம் இவ்வார்த்தைகளைக் கூறுவதாக இல்லை என்கிறார். இங்குக் காட்டப்படும் செல்வம் வாழ்வில் இலட்சியம் என்றால் அது அழிந்துவிடும். அதனால் அது ஞானத்துக்கும் சற்றுக் குறைந்தது. எனவே அதை வாழ்வின் நலனாக, மதிப்பாகக் காண்பது நலம்.

இது காமத்தைத் தூண்டும் கூற்றாக இருந்தாலும் (4:5; 7:4). மனிதர் ஞானத்தை அன்பு செய்கின்றனர். ஞானத்தின் அன்பும் வலியுறுத்தப்படுகிறது. தேடுவோர் கண்டுபிடிப்பர் என்னும் கூற்று இனிமைமிகு பாடலில் உள்ளது (3:1-4; 5:6). கண்டுபிடிப்பது: மனையாள் ஒருத்தியைக் கண்டுபிடித்தலாகும். (நீமொ 18:22; 31:10). ஞானத்தைக் கண்டுபிடித்தலையும் கூறலாம். (3:18; 8:35). கெடுக்கும் நோக்குடனும் கண்டுபிடித்தலும் (7:15) குறிப்பிடப்படுகிறது. எனினும் பின்வரும் வசனங்களை நோக்குகையில் தெளிவு பிறக்கும்.

18, 19 - ஞானம் தான் வழங்கும் கொடைகளைப் பற்றிக் கூறுகிறது. அவை நீதியும் செல்வமும் ஆகும். இவை பொன் வெள்ளியைவிட மேலானவை.

20 - ஞானத்தின் பாதை நீதியின் பாதை, நேர்மையின் பாதை. ('மிஸ்வா' / 'செதகா') நீதி நேர்மை கடவுளின் பண்புகள் (காண். எசா 5:16; எரே 9:23-24).

21 - ஞானமுடையோருக்கு எல்லா நலன்களும் உண்டு: இதற்குப்பின் யுகங்களுக்கு முன்னே என்ன நடந்தது என உரைப்பேன் என்று எண்பதின்மர் நூலில் உள்ளது. அடுத்து என்ன வரப்போகிறது என்பதையும் அது வலியுறுத்துகிறது. அதன் தோற்றம் செயல்படுகளைப் பற்றி ஞானம் கூறுகிறது.

22-31 - படைப்போடு தொடர்புடைய ஞானம் ஞான மரபில் உள்ள வேறுபட்ட பண்புகளைச் சித்தரிக்கிறது. வரலாற்று வழியாக ஞானம் அரசர்கள், அமைச்சர்களுக்குத் தரும் அறிவுரைகளையும் நல்வாழ்வு அமைக்க மற்றோருக்குத் தரும் அறிவுரைகளையும் குறிக்கிறது. மேலும் அவள் அண்டங்கள், மகான்கள், படைப்புகளோடு உள்ள தொடர்பையும் கூறுகிறாள்.

படைப்பின் நுட்பக் கலைஞராக ஞானம் சித்தரிக்கப்படுகிறாள்: இது ஞானத்தின் மேன்மையைக் கூற விழையும் ஒரு முயற்சி. இரண்டாம் எசாயா 40:12-17,28-31 காண் நீமொ 3:19-20வில் கடவுளின் படைப்பு, கலைத்திறன் கூறப்படுகிறது. கடவுளையும் ஞானத்தையும் இணைத்துப் படைப்பைச் சித்தரிப்பது இஸ்ரயேல் ஞான மரபின் வளர்ச்சி என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். நீமொ 8:12-21ம் நீமொ 22-31ம் கூறுபவை ஞானம் பற்றிய வேறுபாடான கருத்துகள். அவைகளுக்கு உள்ளார்ந்த தொடர்பு இல்லை.

இவை இரண்டும் இரண்டு சூழ்நிலைகளைக் கொண்டவை. இரண்டாவது (22-31) ஞான மரபின் ஒரு புதிய திருப்பம் எனலாம். முன்னால் கூறப்பட்டதற்கு (12-21) இது ஒரு வளமான சிந்தனையையும் புதிய வளர்ச்சியையும் தருகிறது.

புதிய சூழலில் புதிய நபர்களுக்கு ஞானம் பற்றிக் கூறவேண்டிய நிலையில் ஆசிரியர் உள்ளார். புதிய வாசகர்க்குத் தகுந்தவாறு புதிய கோணத்தில் ஞானத்தின் கூறுகளை முன்வைக்கிறார். ஞானம் அறிவிற்சிறந்த கற்றோருக்கு ஏற்றவாறு கூறப்படுகிறது.

ஞானம் தன்னைப்பற்றிக் கூறுகிறாள். தான் படைப்புக்கு முன்னால் உள்ளவளாக, கடவுளின் பேரன்புமிக்கக் குழந்தையாக, கடவுளுக்கும் படைப்புக்கும் இடையாளராக இருப்பது பற்றிப் பெருமைப்படுகிறாள். இந்தப் பகுதியில் 'தெய்வீகக் குழந்தை' என்பது மனதை ஈர்க்கிறது.

22 - என்னைப் படைத்தார்: ஞானம் படைக்கப்பட்டதா? உருவானதா? பெற்றுக்கொண்டதா?

பெற்றுக்கொண்டது: "கானானி" என்ற சொல் தரும் இப்பொருளின்படி படைப்புப் பொருள்களுக்கு முன்னே ஞானம் இருந்தது. கடவுள் அதைத் தனதாக்கிக்கொண்டார். இப்பொருளை ஏற்பது கடினம்; ஏனெனில் ஞானம் உருவானது எப்படி என்பது பற்றித்தான் இங்கு பேசப்படுகிறது.

உருவானதா அல்லது படைக்கப்பட்டதா என்பதை ஆராய்கையில் உகரிடிக் ஏடுகள் 'படைக்கப்பட்டது' என்று கூறுகின்றன. மேலும் காண். வச 23 - நிலை நிறுத்தப்பெற்றேன். அவ்வாறே **24-25** - பிறந்தேன் என்றும் முறையே கூறுகின்றன. இதனால் பிறந்தேன் என்பதே சரியானது என்பது மக்கனேயின் கருத்து. வச. 30இல் ஞானத்தை ஒரு சிறப்பான பொருளில் கடவுளின் குழந்தை எனலாம்: மேலும் இச 32:6 கடவுள் இஸ்ரயேலுக்குத் தந்தையானார் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு ஞானம் படைக்கப்பட்டது என்பதைவிட உருவானது (begotten) என்பது சரியானது. கடவுள் ஞானத்தை ஈன்றெடுத்தார் என்பதும் ஏற்புடையதாக உள்ளது (இச 32:18 யோபு 39:7 திபா 51:5); யாவே ஞானத்தின் தந்தையாக, தாயாக இருக்கிறார், படைப்பின் தலைமகன்.

மேலும் இது ஞானம் சிறந்த மாண்புடையது; அதே சமயம் காலத்துக்கு உட்பட்டது என்பதைத் தெளிவாக்குகிறது. ஞானம் ஒரு தெய்வீகப் பண்பைக் கொண்டுள்ளது.

மேலும் எகிப்தில் மாத் தெய்வும் 'ரே' என்ற கடவுளின் தோழியாகக் காட்டப்படுகிறாள். இந்த எகிப்திய புனைக் கதை இஸ்ரயேல் ஞான மரபை பாதித்திருக்க இடமுண்டு.

ஞானம் கடவுளின் தலைப்பேறு: இதை மிகச் சிறந்தது, முதன்மையானது எனலாம். இஸ்ரயேலின் தலைப்பேறானவர் முதன் மையானவராவர் (தொநூ 43:33). அவருக்குக் குடும்பத்தின் உரிமைச் சொத்தில் இரண்டு பங்கு உண்டு. தந்தையின் இறப்பிற்குப்பின் அவரே இஸ்ரயேல் குடும்பத்தில் தலைவர். ஞானம் ஒரு பெண். இஸ்ரயேலில் ஆணுக்குக் கிடைக்கவேண்டிய மரபை ஞானநூல் மாற்றியமைக்கிறது.

23 - நிலை நிறுத்தப் பெற்றோன்: இது இரு செயல்பாடுகளைக் குறிக்கின்றது. ஒன்று: உடைத்து வெளிவருவது; இது ஞானம் கருவறையிலிருந்து உடைத்துக்கொண்டு வருவதைக் குறிக்கிறது. இரண்டு: நிலைநிறுத்தப்படுவது.

அரசாள்வதைக் குறிக்கிறது. முதலாவது பிறப்பையும் இரண்டாவது, மாண்பையும் கூறுகிறது. இரண்டும் தெய்வீகப் பிறப்பு, பராமரிப்புப் பற்றிக் கூறுகின்றன.

இக்கருத்து எகிப்து, பாபிலோனியப் படைப்பிலக்கியங்களில் காணப்படுகின்றது. கனானியப் படைப்பிலக்கியங்கள் ஞானத்தின் துவக்கம் பற்றிக் கூறுகின்றன. ஞானத்தைக் கடவுள் பெற்றார் என்ற பொருளில், படைப்பிற்கு முன்னமே ஞானம் இருந்தது. பின்பு அதை யாவே தமதாக்கிக் கொண்டார் எனலாம்.

24,25 - இவை ஞானம் பிறந்ததைக் குறிக்கின்றன. எனினும் 22 - படைத்தார் 23 - நிலை நிறுத்தப் பெற்றேன். 24, 25 - பிறந்தேன் போன்ற வார்த்தைகள் ஞானம் தெய்வீகத்தின் பண்பை, அதிகாரத்தை வரிசையாகக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவாக்குகின்றன. இது எகிப்திய மாத் தெய்வம் போலுள்ளது எனத் தோனர் என்ற அறிஞர் கூறுகிறார்.

ஞானம் மாத் கடவுளின் சமூகத்தில் உள்ளவள்; ஒரே கடவுளின் அருகிருப்பவள். கண்டிப்பாக நீதிமொழிகள் இலக்கியம் எகிப்திய பாதிப்பைப் பெற்றிருக்க வேண்டும். எனினும் இது ஒரு வியூகமே.

எதையும் படைக்கு முன்னரே (25,26) இது காலத்தால் முன்னையது என்பதையும் படைப்புகளிலே மேலானது என்பதையும் குறிக்கும்.

24-26 - அக்காலத்துப் புராணங்களிலும் புனை கதைகளிலும், ஞானிகளின் கற்பனையிலும் படைப்புக்கு முன்னிருந்த நிலை உயிரற்ற ஒரு குழப்பமாகவும், வடிவமோ உருவமோ இல்லாததாகவும் இருந்தது. எனவே ஒன்றுமில்லாமையிலிருந்து படைப்பு வரவில்லை. மாறாகக் கடவுளின் படைப்பு, வடிவமைத்தல், உருமாற்றுதலுக்கு முன்பாக இருளும் நீர்த்திரளும் உயிரற்ற நிலையும் இருந்தது (தொநூ 1:1-2).

உலகமும் படைப்புகளும் உண்டாகுமுன்பே நான் படைக்கப்பட்டேன் (22), நிலை நிறுத்தப்பெற்றேன் (23), பிறந்தேன் (24, 25, 26) இருந்தேன் (27, 28, 30) என்னும் கூற்றுகள் புராணக் கதைகளின் தாக்கத்தை உறுதிப்படுத்துகின்றன. எனினும் இதற்கான விளக்கங்களில் அறிஞர்கள் மாறுபடுகின்றனர்.

எல் என்ற கனானியக் கடவுள் தெகோமையும்
பாபிலோனியக் கடவுள் மார்துக் தியாமத்தையும்

வென்றார்கள் எனப் புராண இலக்கியங்கள் கூறுகின்றன. மூல எதிரிகளைக் கடவுள் படைப்பின்போது கொன்று படைப்பை உண்டாக்கியதுபோல யாவே கடவுளும் நீர்த்திரள்கள், இருள், ஆழம் போன்ற எதிரிகளைத் தமது வார்த்தையால் அடக்கிப் படைப்புகளை ஒழுங்குபடுத்துவது பற்றி தொநூ 1:1-2 கூறுகின்றது. தாக்கங்கள் இருப்பினும் யாவேயின் படைப்பு முற்றிலும் மாறுபடுகிறது.

மேலும் இப்பகுதி கடவுளுக்கும் ஞானத்திற்கும் உள்ள உறவைப் பற்றிக் கூறுகிறது. எல்லாமே ஒரு விந்தையாக உள்ளது. ஞானத்தின் தோற்றம் அதன் காலம் கூறப்படுகிறது. இங்கே அமைந்துள்ள மொழி நடை மாறுபடுகின்றது. தொடக்கத்திலே / முன்னரே / இல்லாத காலத்திலே / ஞானம் இருந்தது என்பது புதிரான தொடக்கத்தைக் குறிப்பிடுகிறது. அது கடவுளோடு இருந்ததெனக் கூறப்படுகிறது. அவருக்கு மகிழ்ச்சியூட்டித் தாமும் மகிழ்ந்து செயலாற்றியதாகக் கூறப்படுகிறது (30); அத்தோடல்லாமல் மனிதனோடு இருப்பதிலும் அதற்கு மகிழ்ச்சியுண்டு என்பது இதன் மறைபொருளை ஆழப்படுத்துகிறது.

28 - இங்குக் கடவுளின் செயல்பாடுகள் வானத்து மேகங்களிலிருந்து கடலின் அடியாழத்திற்குச் செல்கின்றன.

29 - கடல் கடவுளின் சொல்லால் கட்டுப்பாட்டிற்கு வருகிறது. பழைய புராணத் தாக்கங்கள் தொடக்க நூலில் உள்ளதை நினைவுபடுத்துகின்றன.

30 - அவருடைய 'சிற்பியாய்' இருந்தேன்: அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்; அவர் முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன். இப்பகுதி கொஞ்சம் அதிர்ச்சி தருகிறது. ஞானம் கடவுளின் சிற்பியாய்ச் சித்தரிக்கப்படுகிறது. இங்கு ஞானம் எவ்வாறு படைக்க வேண்டும் என்ற வரைபடத்தைத் தயாரிக்கிறது. சா.ஞா 7:22 இந்தக் கருத்தை அமோதிக்கிறது. அறிஞர் *ஆமோன்* (கலைஞர்), *அம்மாம்* (இபா 7; மத் 7:2) கைதேர்ந்த கலைஞர் என்று பொருள் தருகின்றன. இது 27:29 வசனத்துக்கு ஒத்துப்போகிறது (காண். சாஞா 7:22); ஆனால் *ஆமான்* என்பதைக் *குழந்தை* என்றும் மொழிபெயர்க்கலாம். 25, 26 வசனங்களில் காணப்படும் நான் பிறந்தேன் இவ்வாறு பொருள் கொள்வதை ஒத்துக்கொள்கிறது. குழந்தையிடம் யாவே கடவுள் மகிழ்ச்சியடைகிறார் (எசா 66:12; எரே 3129) ஞானமும் ஒரு குழந்தையாகத் தன் தெய்வீகப் பெற்றோரிடம் மகிழ்ந்து விளையாடுவதாகப் பொருள் கொள்ளலாம்.

31 – இந்தக் ஞானக் குழந்தை கடவுள் முன்னும், அவர் படைத்த உலகிலும் மகிழ்ந்து நடமாடுகிறது. ஞானக் குழந்தை இவ்வாறு கடவுளுக்கும் மனிதனுக்கும், வானுக்கும் மண்ணுக்கும் இணைப்புப் பாலமாக உள்ளது எனக் கற்பனையாகக் கூறலாம். ஞானம் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்குகிறது.

32-33 – ஞானம் தனது பழமைப் புகழைச் சொல்லிவிட்டாள். அவள் அனைத்துப் படைப்புக்கு முன்னிருந்தவள்; மனிதரோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டவள்; இப்போது தன்னைக் கேட்போரிடம் கவனத்தைத் திருப்புகிறாள் (32, 33). ஆணையிட்டு, ஆசிர்வதித்து நல்லுரை கூறுகிறாள். இறுதி எச்சரிக்கையை (36) தவிர மீதம் ஆசிராக உள்ளது. மர்பி பிள்ளைகளே என்று பன்மையில் ஞான உரைகளில் இங்குதான் கூறப்படுகிறது என்கிறார்.

34 – வாயிற்படியில் நாள்தோறும் விழிப்புள்ளோராய் நின்று: தனது இதயக் காதலியின் வீட்டு வாயிலில் நாள்தோறும் செல்லும் இளைஞனைச் சுட்டுகிறது (சீரா 14:23; இபா 2:8-10). ஞானத்தின் வாயிலருகே அதைத் தேடுவோர் நிற்கவேண்டும்.

35 – என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர்: ஞானம் அருளும் வாழ்வு பற்றிப் பேசப்படுகிறது. ஞானத்தைக் கண்டடைந்தவர் வாழ்வடைகிறார் (வச 17). இங்கே தேடல் என்பது வெறும் ஒரு செயலல்ல, மாறாக ஒரு சாதனை. மர்பியின் கருத்துப்படி ஞானமும் வாழ்வும் நெருக்கியிருப்பதுபோல வேறு எந்தக் கருத்தியலிலும் இல்லை. ஞானத்தின் இலக்கே வாழ்வு தான் (4:13,23; 10:17).

கருணை: இது கடவுளின் வெறும் உளப்பாங்கு அல்ல, மாறாக கடவுளின் கொடை.

36 – என்னைத் தேடாதோர் கேட்டையும் வெறுப்போர் சாவையும் தழுவுவர்: மனிதன் வாழ்வில் வாழ்வை அல்லது சாவைச் சந்திக்கின்றான். ஞானம் கிடைப்பின் வாழ்வு. அதை வெறுத்தால் சாவு. யாவே ஞானத்திற்கு அதிகாரம் தந்துள்ளார். ஞானத்தை மதிப்பது யாவே கடவுளை மதிப்பதாகும், சமயக் கட்டளைகளைக் கடைபிடிப்பதாகும். ஞானத்தைக் காண்பது வாழ்வைக் காண்பதாகும். ஞானத்தை இழப்பது வாழ்வுக்குச் செய்யும் தீங்காகும்.

செம்பொருள்

இந்தப் பகுதி சிந்தனையைப் புடமிடுகிறது எனலாம். ஞானத்தின் கூற்றுகள் நமக்கு வியப்பைத் தருகின்றன. ஞானம் உண்மையை உரைக்கும்; அறிவும் ஆற்றலும் அதற்கு உண்டு. ஆணவம், தீமை விலகும். அனைத்து ஆட்சியாளர்களும் அலுவலர்களும் நீதிபதிகளும் உண்மைத் தீர்ப்பு வழங்குவது ஞானத்தால். ஞானத்தோடு நல்லுறவு உடையவர்க்குப் பவளம், பொன்னைவிட மேலான நலன்கள் கிடைக்கும்; அவர்களுக்குச் செல்வம் உண்டு, களஞ்சியங்கள் குறைவுபடாது. அது கடவுளிடமிருந்து பிறந்தது; காலம், படைப்புக்கு முற்பட்டது. அது கடவுளோடும் மக்களோடும் மகிழ்வடைகிறது. அது கலைஞனாகவோ அல்லது குழந்தையாகவோ கடவுள்முன் மகிழ்வுடன் வலம் வருவதை போன் ராடு என்பவர் யோபு 28, சீரா 24இல் உள்ள கருத்துகளைப் பயன்படுத்தி "ஞானம் படைப்பின் வெளிப்பாடு" என்கிறார்.

1.18. ஞானமும் மதிகேடும் (9:1–18)

*9:1 ஞானம் தமக்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கின்றது; அதற்கென ஏழு தூண்களைச்
செதுக்கியிருக்கின்றது. 2 அது தன் பலி விலங்குகளைக் கொன்று, திராட்சை இரசத்தில்
இன்சுவை சேர்த்து, விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது; 3 தன் தோழிகளை அனுப்பி
வைத்தது; நகரின் உயரமான இடங்களில் நின்று, 4 "அறியாப் பிள்ளைகளே! இங்கே
வாருங்கள்" என்று அறிவிக்கச் செய்தது; மதிகேடருக்கு அழைப்பு விடுத்தது; 5 "வாருங்கள்;
நான் தரும் உணவை உண்ணுங்கள்; நான் கலந்துவைத்துள்ள திராட்சை இரசத்தைப்
பருகுங்கள்; 6 பேதைமையை விட்டுவிடுங்கள்; அப்பொழுது வாழ்வீர்கள்; உணர்வை அடையும்
வழியில் செல்லுங்கள்" என்றது. 7 இகழ்வாரைத் திருத்த முயல்வோர் அடைவது ஏளனமே;
பொல்லாரைக் கண்டிப்போர் பெறுவது வசைமொழியே. 8 இகழ்வாரைக் கடிந்து கொள்ளாதே;
அவர்கள் உன்னைப் பகைப்பார்கள்; ஞானிகளை நீ கடிந்து கொண்டால் அவர்கள்
உன்னிடம் அன்புகொள்வர். 9 ஞானிகளுக்கு அறிவுரை கூறு; அவர்களது ஞானம் வளரும்;
நேர்மையாளருக்குக் கற்றுக் கொடு; அவர்களது அறிவு பெருகும். 10 ஆண்டவரிடம்
கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்; தூயவராகிய அவரைப்பற்றிய உணர்வே
மெய்யுணர்வு. 11 என்னால் உன் வாழ்நாள்கள் மிகும்; உன் ஆயுட்காலம் நீடிக்கும். 12
நீங்கள் ஞானிகளாய் இருந்தால், அதனால் வரும் பயன் உங்களுக்கே உரியதாகும்;
நீங்கள் ஏளனம் செய்வோராய் இருந்தால், அதனால் வரும் விளைவை நீங்களே துய்ப்பீர்கள்.
13 மதிகேடு என்பதை வாயாடியான, அறிவில்லாத, எதற்கும் கவலைப்படாத ஒரு பெண்ணுக்கு
ஒப்பிடலாம். 14 அவள் தன் வீட்டு வாயிற்படியிலோ, நகரின் மேடான இடத்திலோ
உட்கார்ந்துகொண்டு, 15 தம் காரியமாக வீதியில் செல்லும் வழிப்போக்கரைப் பார்த்து, 16
"அறியாப் பிள்ளைகளே, இங்கே வாருங்கள்" என்பார்கள்; மதிகேடரைப் பார்த்து 17
"திருடின தண்ணீரே இனிமை மிகுந்தது; வஞ்சித்துப் பெற்ற உணவே இன்சுவை தருவது"*

என்பாள். 18 அந்த ஆள்களோ, அங்கே செல்வோர் உயிரை இழப்பர் என்பதை அறியார்; அவளுடைய விருந்தினர் பாதாளத்தில் கிடக்கின்றனர் என்பது அவர்களுக்குத் தெரியாது.

பின்புலம்

இந்த அலகு மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

9:1-6 – ஞானத்தின் அழைப்பு

9:7-12 – நல்லார் பொல்லாரைத் திருத்துதல்

9:13-18 – அறிவிலாப் பெண்ணின் அழைப்பு

முதலாவதும் மூன்றாவதும் இரு பெண்களின் அழைப்புப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் 7-12 கூற்றுகள் இதில் இடம்பெறுவது அறிஞர்களுக்கும் புதிராக உள்ளது.

மேலும் முதல் ஆறு கூற்றுகள் (1-2) இரண்டாந்தரமானது; ஏனெனில் அவை "இஸ்ஸா சாராவை" (காண் அலகு 7) பின்னணியாக வைத்து எழுதப்பட்டுள்ளதாக மக்கனே, போஸ்த்ரோம் போன்றோர் கூறுவர். மர்பி இதை மறுக்கிறார். இரண்டு பெண்களின் அழைப்புகளிலும் முந்தைய அலகின் (7) தாக்கமுள்ளது. இந்த அழைப்புகள் ஒன்றுக்கொன்று எதிரானவை; அவை இணைகோடுகளாகச் செல்கின்றன என்கிறார். ஞானச் சீமாட்டியின் அழைப்பை ஏற்போர் வாழ்வர், அறிவிலிப் பெண்ணின் அழைப்பை ஏற்போர் உயிரை இழப்பர் (6, 18).

இவ்வாறு பல இணையான கூற்றுகள் இருப்பினும் ஞானத்தின் அழைப்பே ஏற்புடையது. இரு பெண்களும் ஒரு வியத்தகு விருந்தைப் படைக்கின்றனர். ஞானச் சீமாட்டியளிப்பது சிறந்தது என எல்லோருக்கும் தெரியும். விருந்து படைப்பது பழங்காலத்தில் சிறப்பான ஒன்று. ஆனால் அதற்கு ஒரு நோக்கமும் உண்டு. இந்த விருந்தின் அழைப்பை எசா 55:1-2, 65:11-14இல் காணலாம். மேலும் 9:7-12இல் 7,9 இறுமாப்பு ஞானமுடைய நபர்களையும், 14இல் ஞானம் இறுமாப்புடைய நபர்களையும் பற்றிப் பேசுவது மையமாக அமைகிறது.

சொல்விளக்கம்

1 – ஏழு தூண்கள்: ஏழு தூண்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பது பற்றி கிரீன்மீல்டு என்ற அறிஞர் விளக்குகிறார். 1) ஏழு ஆகாயங்கள், 2) ஏழு கோள்கள், 3) ஏழு காலங்கள் அல்லது இடங்கள், 4) படைக்க எடுத்துக்கொண்ட ஏழு நாள்கள்,

5) தூய ஆவியாரின் ஏழு கொடைகள், 6) திருஅவையின் ஏழு யுகங்கள், 7) ஏழு திருஅடையாளங்கள். இது மெசபொதாமிய புராணத்திலுள்ள ஏழு சான்றோரைக் குறிக்கலாம். எனினும் ஞானத்தின் வீடு நீதிமொழிகளே. இதை நீமொ 14:1இல் காணலாம். "ஞானமுள்ள பெண்கள் தங்கள் இல்லத்தைக் கட்டி எழுப்புகின்றனர். ஆனால் அறிவற்றவரோ தம் கைகளைக் கொண்டே அதை அழித்துவிடுகின்றனர்". மேலும் காண் 24:3. ஞானத்தின் தூண்கள் அலகுகள் 1-8 வரையுள்ள நீதிமொழிகளையும், ஏன் மொத்த நூலையும் குறிக்கலாம்.

2 - விருந்துக்கு ஏற்பாடு: இந்த விருந்தில் பலி விலங்கும் திராட்சை இரசமும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இங்கு ஏய்த்தல், ஏமாற்றங்கள் உள்ளன. அது வாழ்வா சாவா என்ற நிலைக்கு வந்து விடுகிறது. அது பற்றி இங்கே கூறப்படவில்லை. மேலும் இங்கே பலிப் பொருள்களைக் (இறைச்சி) காணும்போது அதை ஆன்மிக உணவாகக் கொள்ளலாம். மக்கனே இதுக் கிறிஸ்தவத் திரு அடையாளத்தைப் பிரதிபலிக்கிறது (அப்பம் / இரசம்) என்கிறார். போன்ராட், சிம்மர்லி போன்றவர்கள் எருசலேம் தேவாலயத்தையும் அங்கே 'வாழ்வு' வாக்களிக்கப்படுவதையும் குறிப்பிடுகின்றனர். திபா 36:9 வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது எனக் கூறுகிறது. யாவே வழிபாட்டில் தரப்படும் விருந்தையும் ஞானம்தரும் அறிவுரையைப் பெற்று அதன்படி வாழ்வதால் வரும் நலன்களையும் நீடிய அமைதியான மகிழ்வான வாழ்வையும் இது குறிக்கலாம்.

3 - ஞானத்தின் தோழியர்கள் உயரமான இடங்களில் நிற்பது நகர வாயில்களைக் குறிக்கலாம் (8:3)

4 - ஞானம் தரும் விருந்து: அறியாப் பிள்ளைகள், மதிகேடர்களுக்கு விடுக்கும் அழைப்புச் செழுமையைச் (அடையாளமாய்) சித்தரிக்கிறது (காண். எசா 55:1-2); மேலும் 55:3இல் ஞானத்தினர் அழைப்பாக "என்னிடம் வாருங்கள், கேளுங்கள் அப்பொழுது வாழ்வடைவீர்கள்" என்ற கூற்றையும் காணலாம். இ.பா 5:1இல் காதலர்கள் உண்டு களித்து இன்பமயக்கத்திலிருக்கவும் கட்டளை தரப்படுகிறது. மேலும் அழைப்பு எல்லாருக்கும் தரப்படுகிறது. ஏனெனில் மனிதர்களோடு இருப்பதில் ஞானத்திற்கு மகிழ்ச்சியுண்டு (8:31).

5 - அழைப்பு ஒரு சிறிய கட்டளைபோல விடப்படுகிறது. அப்பமும் இரசமும் வச 9:17இல் காட்டப்படும் திருடிய தண்ணீருக்கு எதிர்மறையாக உள்ளது.

6 – விருந்தின் அடையாளம் பேதமை நீங்கி, நல்வழியில் வாழ்ந்து நல் வாழ்வு பெற விடுக்கும் அழைப்பு. உணவு வாழ்வைத் தரும்; ஞானமும் வாழ்வு தரும் மரம் (3:18; 11:30; 13:12; 15:4).

7 – ஏழாவது வசனத்தில் ஞானத்தின் அறிவுரைக் கருத்துத் தடைபடுகிறது. பொல்லாரையும் இகழ்வாரையும் திருத்துவதில் பயனில்லை. இகழ்ச்சியும் பரிகசிப்புமே மிச்சம். எனவே அவர்களைத் தவிர்ப்பது பற்றிப் பேசப்படுகிறது (8-3).

8 – இச்சொற்றொடரின் முதல் பகுதியில் காணப்படும் தடை மற்ற சமகால இலக்கியங்களில் காணக்கிடக்கிறது. பழங்கால எகிப்திய இலக்கியங்கள் ஞான இலக்கியத்தின் மிக அருமையான சான்று. ஞானிகள் திறந்த மனதும், ஏற்கும் தன்மையும் உடையவர்கள். கடிந்து கொள்வதையும் ஏற்பவர்கள்.

9 – ஞானிகளும் நேர்மையாளர்களும் இணையாகக் கருதப்படுகின்றனர்.

10 – ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் அதைப்பற்றிய உணர்வு: இவை ஞான உரையின் சுருக்கம் எனலாம். (காண். 1:7). கதோஷிம்: தூயவர், சிறப்புப் பன்மையில் எழுதப்பட்டுள்ளது.

11 – ஞானம் வாழ்வோடு தொடர்புடையது என வலியுறுத்தப்படுகிறது. (காண் 6; 3:16; 18; 4:13ஆ; 8:35). ஞானமுடையோர்க்கு வாழ்வுண்டு. இது ஞானத்தின் வாக்குறுதி. வாழ்வு ஞானம் அருளும் கனி. இந்த வாக்குறுதியை ஞானம் மட்டுமே வாக்களிக்க முடியும்.

12 – ஞானம் ஒரு கொடை. அதைக் கேட்போர் பலனடைவர். இறுமாப்பு உடையவர் அதன் விளைவை அனுபவிப்பர்.

13-15 - மதிகேடு எனும் பெண்: இவள் நடத்தை தவறிய பெண், அவள் /குழம்பிய நிலையில் உள்ளாள், தவறு செய்பவள், மடமையானவள், இச்சையுடைய காதலர்கள் உடம்பை விரும்புபவள் (7:13; 9:17), சாவை வருவிப்பவள் (2:18-19; 7:27; 9:13). நல்லறிவு, நன்னடத்தை இல்லாதவள், விவேகமும், பகுத்துணர்தலும் இல்லாதவள். நல்ல இலக்குகளோ, மதிப்பீடுகளோ இல்லாதவள். இதையே பிறருக்கு ஊட்டி வருகிறாள். இவள் அறியாமையை அகற்ற முயல்வதில்லை.

14-15 - வீட்டு வாயிற்படி / நகரின் மேலான இடம்: மடமைப் பெண்ணின் வீடு நகரச் சுவர்களின் மேல் கட்டப்பட்டதாக இருக்கலாம். அங்கே

உயரமான இடத்தில் அவளது இருப்பிடம் உள்ளது. அங்கே ஆசனத்தில் அமருகிறாள். ஆசனத்தில் அமர்வது மதிப்புக்குரியது (16:12; 20:8,28; 25:5). இது அரசருக்கோ ஆசான்களுக்கோ கொடுக்கப்படும் இடம்.

மடமைப் பெண் ஆசனத்தில் அமர்வதும் அழைப்பதும் அவள் ஓர் அரசியைப்போல் செயல்படுவதைக் காட்டுகிறது எனலாம். ஏமாறுவோரை அவள் தன்வயப்படுத்துகிறாள்.

இவளது வீட்டுக்கும் ஞானப்பெண்ணின் வீட்டிற்கும் வேறுபாடுள்ளது. இவள் வீதியில் செல்வோரை அழைக்கிறாள். வழியில் செல்வோரது கவனத்தைச் சிதைத்துத் தன் பக்கம் இழுப்பது இவள் செயல். இது அவளது மயக்கும் மாயவித்தை எனலாம்.

16-17 - மடமைப் பெண்ணும் ஞானப் பெண்ணும் ஒத்த அழைப்பைத் தருகின்றனர். ஆனால் அழைப்பின் உட்பொருளில் வேறுபாடுள்ளது. ஞானப் பெண் அப்பமும் இரசமும் அளிக்கிறாள். மடமைப் பெண்ணோ தீமையையும் வன்முறையையும் உண்ண அழைக்கிறாள்.

திருடிய தண்ணீர் இனிமை மிகுந்தது: இது இன்னொருவரோடு தவறுதலாகக் கொள்ளும் உடலுறவைச் சுட்டுகிறது. திருமணமான ஒருவரைத் திருடி அனுபவிப்பது (2:17; 5:9; 6:30-35). திருடியது இனிப்பது போல விலக்கப்பட்டதும் இனிக்கும் (மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் அதிகமே என்பது தமிழ்க் கூற்று). இனிமை பற்றிக் கூறும் மடமைப் பெண் இறப்பை மறைத்து விடுகிறாள். (சாத்தானும் ஏவாளிடம் பாவம் இறப்பைக் கொணரும் (தொநூ 3:6) என்பதை மறைத்துவிடுகிறது).

18 - விபசாரமும் திருட்டும் இறப்பைத் தண்டனையாகப் பெறுகின்றன. ஞானாசிரியர் வாசிப்போருக்கு ஒரு தீவிர எச்சரிக்கை விடுக்கிறார்.

அறிவுரை அன்போடு இருக்க வேண்டும். அச்சுறுத்தியும் சொல்லப்பட வேண்டும். ஞானம் வாழ்வையும் மடமை அழிவையும் தருகின்றன.

செம்பொருள்

ஞானம் தரும் வாக்குறுதிகள் நடைமுறைக்கு ஒத்துவருமா? இதை யோபு புத்தகமும் சபை உரையாளர் நூலும் கேள்விக்குள்ளாக்குகின்றன. நன்மை

செய்தால் பலனும் தீயது செய்தால் தண்டனையும் என்பது இன்று ஒரு சவாலாக உள்ளது.

மனித இயல்பு நல்லவைகளை ஏற்கிறது. துன்பங்கள் வரும்போது துடிக்கிறது. இதை நீதிமொழிகள் அதிகமாகப் படம் பிடித்துக் காட்டவில்லை. ஓரிடத்தில் மட்டும் இதைக் காணமுடிகிறது (3:11-12).

துன்பம் மறைபொருளாகவே உள்ளது. ஆழமாகச் செல்லச் செல்ல அது நழுவிச் செல்கிறது. கடவுள் இரக்கமே இறுதி நிலைப்பாடு. ஞானத்தின் சீடன் அதை விரும்பிப் பெற வேண்டும். அது துரத்துவதில்லை. 8,9 அதிகாரங்கள் நாம் ஞானத்தின் வீட்டில் வாழமுடியும் என்கின்றன.

2. சாலமோனின் நீதிமொழிகள் (10:1-32)

10:1 சாலமோனின் நீதிமொழிகள்; ஞானமுள்ள பிள்ளைகள் தம் தந்தையை மகிழ்விக்கின்றனர்; அறிவற்ற மக்களோ தம் தாய்க்குத் துயரமளிப்பர். 2 தீய வழியில் ஈட்டிய செல்வம் பயன் தராது; நேர்மையான நடத்தையோ சாவுக்குத் தப்புவிக்கும். 3 நல்லாரை ஆண்டவர் பசியால் வருந்தவிடார். ஆனால் பொல்லார் விரும்புவதை அவர்களுக்குக் கொடுக்க மாட்டார். 4 வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும்; விடாமுயற்சியுடையோரின் கையோ செல்வத்தை உண்டாக்கும். 5 கோடைக் காலத்தில் விளைச்சலைச் சேர்த்துவைப்போர் மதியுள்ளோர்; அறுவடைக் காலத்தில் தூங்குவோர் இகழ்ச்சிக்குரியர். 6 நேர்மையாளர்மீது ஆசி பொழியும்; பொல்லார் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும். 7 நேர்மையாளரைப்பற்றிய நினைவு ஆசி விளைவிக்கும்; பொல்லாரின் பெயரோ அழிவுறும். 8 ஞானமுள்ளோர் அறிவுரைகளை மனமார ஏற்பர்; பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர். 9 நாணயமாக நடந்து கொள்வோர் இடையூறின்றி நடப்பர்; கோணலான வழியைப் பின்பற்றுவோரோ வீழ்த்தப்படுவர். 10 தீய நோக்குடன் கண்ணடிப்போர் தீங்கு விளைவிப்பர்; பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர். 11 நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்றாகும்; பொல்லாரின் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும்; 12 பகைமை சண்டைகளை எழுப்பிவிடும்; தனக்கிழைத்த தீங்கு அனைத்தையும் அன்பு மன்னித்து மறக்கும். 13 விவேகமுள்ளவர்களின் சொற்களில் ஞானம் காணப்படும்; மதிகெட்டவர்களின் முதுகிற்குப் பிரம்பே ஏற்றது. 14 ஞானமுள்ளோர் அறிவைத் தம்மகத்தே வைத்திருப்பர்; மூடர் வாய் திறந்தால் அழிவு அடுத்து வரும். 15 செல்வரின் சொத்து அவருக்கு அரணாயிருக்கும்; ஏழையரின் வறுமை நிலை அவர்களை இன்னும் வறியோராக்கும். 16 நேர்மையாளர் தம் வருமானத்தை வாழ்வதற்குப் பயன்படுத்துகின்றனர்; பொல்லாதவரோ தம் ஊதியத்தைத் தீய வழியில் செலவழிக்கின்றனர். 17 நல்லுரையை ஏற்போர் மெய் வாழ்வுக்கான பாதையில் நடப்பர்; கண்டிப்புரையைப் புறக்கணிப்போரோ தவறான வழியில் செல்வர். 18 உள்ளத்தின் வெறுப்பை மறைப்போர் பொய்யர். வசை மொழி கூறுவோர் மடையர். 19 மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்; தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர். 20 நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்குச் சமம்; பொல்லாரின் எண்ணங்களோ பதருக்குச்

சமம். 21 நல்லாரின் சொற்கள் பிறருக்கு உணவாகும்; செருக்கு நிறைந்தோரின் மதிகேடு அவர்களை அழித்துவிடும். 22 ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்; அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம். 23 தீங்கிழைப்பது மதிகெட்டோர்க்கு மகிழ்ச்சிதரும் விளையாட்டு; ஞானமே மெய்யறிவு உள்ளோர்க்கு மகிழ்ச்சி தரும். 24 பொல்லார் எதற்கு அஞ்சுவரோ, அதுவே அவர்களுக்கு வரும்; கடவுளுக்கு அஞ்சி நடப்போர் எதை விரும்புகின்றனரோ, அது அவர்களுக்குக் கிடைக்கும். 25 சுழல் காற்றுக்குப்பின் பொல்லார் இராமற்போவர்; கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களோ என்றுமுள்ள அடித்தளம் போல நிற்பார்கள். 26 பல்லுக்குக் காடியும் கண்ணுக்குப் புகையும் எப்படி இருக்குமோ, அப்படியே சோம்பேறிகள் தங்களைத் தூது அனுப்பினோர்க்கு இருப்பர். 27 ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஆயுளை நீடிக்கச் செய்யும்; பொல்லாரின் ஆயுட்காலம் குறுகிவிடும். 28 நல்லார் தாம் எதிர்பார்ப்பதைப் பெற்று மகிழ்வர்; பொல்லார் எதிர்பார்ப்பதோ அவர்களுக்குக் கிட்டாமற் போகும். 29 ஆண்டவரின் வழி நல்லார்க்கு அரணாகும்; தீமை செய்வோர்க்கோ அது அழிவைத் தரும். 30 கடவுளுக்கு அஞ்சி நடப்போரை ஒருபோதும் அசைக்க இயலாது; பொல்லாரோ நாட்டில் குடியிருக்கமாட்டார். 31 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் வாயினின்று ஞானம் பொங்கி வழியும்; வஞ்சகம் பேசும் நா துண்டிக்கப்படும். 32 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் சொல்லில் இனிமை சொட்டும்; பொல்லாரின் சொற்களிலோ வஞ்சகம் பொங்கி வழியும்.

பின்புலம்

இந்தக் கோப்பு எதிர்மறை இணையணியாலானது. இங்குச் சிறந்த கூற்றாக 'அழிவு' (14-15), வாழ்வு (16-17), இதயம் (20-27) வஞ்சகம் (31-32) போன்றவைகளைக் காணலாம். அலகுகள் 10-15 நேர்மையாளர் மூடர் பற்றிய இரட்டைக் கருத்தைப் பற்றிப் பேசுகின்றன. இதுவே அலகு முழுவதையும் ஆக்கிரமிக்கிறது. மேலும் நாவு, உதடு, வாய் தங்கள் அலுவலைச் செய்கின்றன (11-13; 18-2).

சொல்விளக்கம்

10:1 – பிள்ளைகள் 13:1, 15:20ம் காணலாம்.

சாலமோனின் நீதிமொழிகள்: இத்தலைப்பு 10:1-22:17 பகுதிகளை உள்ளடக்கியது எனலாம். இப்பகுதி ஒரு குடும்ப நூலாக உள்ளது. அங்குதான் ஞானம் ஆரம்பமானது. தந்தைக்கு மகிழ்வும் தாய்க்குத் துயரமும் பற்றிப் பேசப்பட்டாலும் – இது இருவருக்கும் மாறி மாறி வரக்கூடியதே (காண் 17:21;25).

2 - தீய வழியில் ஈட்டிய செல்வம்: இது கடவுள் பற்றுள்ள இஸ்ரயேலருக்கு ஒரு சவால் (திபா 37; 73; எரே 12:1). ஊழலற்ற வாழ்வு செழுமை பெறும். நேர்மையும் உண்மையும் வாழ்வின் கவசம். அவை சாவுக்கும் அழிவுக்கும்

இட்டுச்செல்லா. தொபி 4:10 தர்மம் சாவிலிருந்து விடுவிக்கும், நீதிக்கு இறப்பு என்பது இல்லை (சாஞா 1:15). போன்ற கருத்துகள் காலந்தோறும் உள்ள வளர்ச்சியைக் காட்டுகின்றன.

3 - நல்லாரை: நல்லதுக்குப் பரிசு கெட்டதுக்குத் தண்டனை என்ற வினைப்பயன் கோட்பாடு இங்கு உள்ளது. நல்லோரைக் கடவுள் காப்பார் (10:29 12:2). இது ஒரு நம்பிக்கைக் கூற்று என்றாலும் உண்மை மாறுபாடாக உளது. எனினும் இறுதிக் காலத்தில் நல்லோருக்குச் சன்மானம் உண்டு (திபா 48:14-15). எந்த நீதிமொழியும் எல்லாம் சொல்வதில்லை.

4-5 - வேலை செய்யாத கை: சோம்பி இருப்பவனை வறுமை வந்து தழுவும். சுறுசுறுப்பாயுள்ளோரிடம் செல்வம் வந்து சேரும் என்ற முரண்பாடுகளைத் தெளிவாக்குகிறார்.

4, 5 வசனங்களில் நடைமுறை இறையியல் கூறப்படுகிறது. இது நன்னெறி இறையியலை (காண் வச 2,3) ஈடு செய்கிறது. விவேகம் செல்வம் கொணரும், சோம்பல் வறுமையை, அவமானத்தைக் கொணரும். மனிதர்களுடைய செயல்கள் அவர்களுக்கு இந்த விளைவுகளைத் தருவதை நீதிமொழிகளில் பரவலாகக் காணலாம் (12:24,27; 21:5). எனினும் நடைமுறையில் வறுமைக்குக் காரணம் எப்போதும் சோம்பல் எனக் கூறவியலாது. உழைப்பவன் உணவின்றித் தவிப்பதையும் காண்கிறோம். ஒய்பிரே இதைத் தெளிவாக ஆராய்கிறார்.

6 - ஆசி பொழியும், கொடுமை மறைந்திருக்கும்: ஆசி என்பது குழந்தைப் பேறு, செல்வம், பகைவரை வெல்வது. ஆசிர் கடவுளால் கொடுக்கப்படுகிறது. இருப்பினும் இனத்தின் தலைவர் (தொநூ 27:7), குரு (லேவி 9:23), அரசர் (2சாமு 6:18), சாவின் விளிம்பில் உள்ளவர் (யோபு 29:13) ஆசிர் வழங்குவதைக் காண்கிறோம். இங்கே செபிக்கும் மக்கள் நேர்மையாளர் மீது கொடுக்கும் ஆசிரைக் குறிக்கலாம். நேர்மையாளர் இவ்வாறு தனது குழுமத்தை வளமுறச்செய்வார். இணையாக வரும் கூற்றுப் பொல்லாரின் பேச்சிலுள்ள வஞ்சம், ஏய்த்தல் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது.

7 - நேர்மையாளர் நினைவு ஆசிர்: நேர்மையாளர் நினைவில் நிற்பர். அவர்களது பெயர் நினைவுகூரப்படுகிறது. அவர்களது நற்செயல் அறிவிக்கப்படுகிறது. இன்னொருவர்மீது ஆசிர் வழங்க நேர்மையானவரின் பெயர்

குறிப்பிடப்படுகிறது. தீயோர்களைப் பற்றிக் கூறுகையில் அவை காற்றில் மாயமாகிவிடுன்றன.

8-9 - ஞானமுள்ளோர்: ஞானி கற்றுக்கொண்டே இருப்பார். எல்லாம் எனக்குத் தெரியும் என்பவன் மூடத்தனத்தில் காலடி வைக்கிறான். ஞானி தாழ்ச்சியுடன் குருவின் அறிவுரையை ஏற்கிறார். அது அவரது ஆன்மிக வளர்ச்சியைத் தூண்டுகிறது. தாழ்ச்சி ஞானியைக் காக்கிறது (4:10-19). அவனது நாவை அவனது இதயம் வழிநடத்துகிறது (16:23). மூடரோ முறைகேட்டால் தம் அழிவை தாமே தேடிக்கொள்கின்றனர்.

9 - நாணயமாக நடந்துகொள்வோர்: நல்வழி நடப்போருக்குப் பாதுகாப்பு இருக்கும். தனிமனிதருடைய செயல்களுக்கும் அவர்வாழும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. நல்வழி நடப்போர் சமுதாயத்தின் எடுத்துக்காட்டுகள்.

10 - தீயநோக்குடன் / கண்டிப்போர்: இதில் வஞ்சகம், சூழ்ச்சி நஞ்சுத்தன்மை அடங்கியிருக்கின்றன. எனவே அதன் விளைவுகள் பிறருக்குத் துன்பத்தையும் பேசுபவருக்கு அழிவையும் கொணர்கின்றன. உண்மையாகக் கண்டித்துத் திருத்துவோர் சமூகப் புண்களை ஆற்றுவோராவர் (லேவி 19:17; நீமொ 25:12 27:5 28:23) இயேசுவும் நல்லுள்ளத்தோடு, உதவும் பொருட்டுதான் நமது கண்டிப்பு அமையவேண்டும் என்கிறார் (18:15-18).

11 - நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்று: ஞானக் கூற்றுகள் வாழ்வளிப்பவை. வாழ்வளிக்கும் ஊற்று என்பதைப் பொங்கி வழிந்தோடும் சுனை எனலாம். இங்கு அது அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது ஞானத்தின் வாழ்வளிக்கும் பண்பைக் குறிக்கும் (13:14 14:27 16:22). நல்லாரின் சொற்களும் ஞானக் கூற்றுகளும் நேர்மையான செயல்களையும் குறிக்கும் (காண். 6:6; 11:6). இது இணையணிக் கூற்றாகவும் உள்ளது. பொல்லாரின் பேச்சு அழிவுக்கு இட்டுச் செல்கிறது.

12 - பகைமை அன்பு: இந்த இரண்டும் முரண்பாடானவை. அன்பு சண்டையைத் தீர்த்துவைக்கிறது. பகைமை அதை வளர்க்கிறது. பகைமை மனிதனின் இடத்தில் ஆழமாய் வேரூன்றிப் பல வன்முறைகளுக்குக் காரணமாகிறது. அன்பு தனிப்பட்ட காயத்தை மன்னிக்கிறது, மறக்கிறது. அன்பு எதையும் மறைக்காது. யாக் 5:20 நல்லவர் ஒருவர் திரளான பாவங்களைப்

போக்குவார் (காண். 1பேது 4:8). இது கடவுளின் மன்னிப்பையும் சாவிலிருந்து மீட்புப் பெறுவதையும் சுட்டுகிறது.

13 - ஞானம் காணப்படும்: ஞானிகள் தாம் எப்போது பேசவேண்டும் எதைப் பேசவேண்டுமென்ற நுட்பத்தைக் கொண்டவர்கள். ஆனால் மூடருக்கு பிரம்படிதான் காத்திருக்கும் (காண். 19:29).

14 - ஞானமுள்ளோர் அறிவை தம்மகத்தே வைத்திருப்பர்: இதைப் "பிறரோடு பகிர்வது" என்று மொழிபெயர்ப்பது சிறந்தது. அப்படியெனில் ஞானிகள் பிறரோடு பகிர்ந்து ஞானத்தைப் பொது நன்மைக்காகப் பயன்படுத்துகின்றனர். (10:21,31; 11:10,11; 15:7; 26:5).

15 - இந்த வசனத்துக்கும் முன்புள்ள வசனத்துக்கும் உள்ள தொடர்பை 'அழிவு' எனும் சொல்லைக் கொண்டு அறியலாம். இந்த நீதிமொழி பொருளிலும் நடையிலும் சிறிது வேறுபட்டது. செல்வரின் சொத்து அரணாயிருக்கும். ஆனால் ஏழைகள் நிலையோ பரிதாபமானது. இது ஓர் அனுபவ உண்மை. எனினும் செல்வரின் உணர்வு இறுமாப்புக்கு இட்டுச் சென்றுவிடக் கூடாது (காண். 18:11,12).

16 - 17 இந்த இரண்டு வசனங்களிலும் வாழ்வு பற்றியும் தீமை பற்றியும் கூறுவது வியப்பாக உள்ளது. பொதுவாக வாழ்வுக்கு முரணானது இறப்பு. ஆனால் இங்குத் தீமை முரணாக்க காட்டப்படுகிறது. பாவத்தின் தண்டனை இறப்பு என்பது விவிலியக் கூற்று. நேர்மையாளரின் சொத்து நன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் சொத்தே சொர்க்கமாகிவிடக் கூடாது. மாறாகக் கடவுளை நினைக்க வேண்டும்.

17 - நல்லுரை வாழ்வுக்கு இட்டுச் செல்லும். எனவே அதை ஏற்றுச்செயல்பட வேண்டும். மர்பி "நல்லுரை கேட்டு வாழ்வோர் பிறரை வாழ்விக்கும் பாதையாக அமைவர்" என்கிறார். நல்லுரை கண்டிப்புரையாகவும் மாறலாம். கண்டிப்புரையையும் கேட்டு அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் (குறள் 448).

18 - இந்த வசனம் பொய்கூறுவோரையும் வசைமொழி கூறுவோரையும் இணைத்துப் பார்க்கிறது. வெறுப்பு வசைமொழியைத் தூண்டுகிறது. வசைமொழி அரைகுறை உண்மைகளால், மிகைப்படுத்தப்பட்ட பேச்சுகளால் திரிபுபடுத்தப்படுகிறது. மடையன் பொய்களால் வெறுப்பை மறைத்து வசைமொழி

கூறுகிறான். இதனால் நல்லவன் பலியாக்கப்படுகிறான். மடையன் புகழையும் குடும்பத்தையும் அழித்துவிடுகிறான். பொய்யன் மறைக்கிறான்.

19 - மட்டுக்கு மிஞ்சின பேச்சு: வார்த்தைகளை அடுக்கிக் கொண்டேபோவதால் பாவம் பெருகுகிறது. குறைத்துப் பேசுபவரே விவேகமுள்ளவர் (காண். 10:14; 13:3; 17:27-28; 21:3; சஉ 5:2-7). ஞான இலக்கியம் மிகைப்படுத்துதல், வஞ்சப் புகழ்ச்சி, கண்மூடித்தனமாகப் பேசுதல் பற்றி எச்சரிக்கிறது (10:9; 14:15,23; 18:8,13; 22:12; 26:22; சஉ 5:2). பாவத்தை மழுப்பும் வார்த்தைகளால் மறைக்க முடியாது. மாறாகக் குற்றம் பெருகும் (ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்யைச் சொல்வது நமக்குத் தெரியும்). மேலும் ஒரு முறை சொன்னதை மறைக்க முடியாது. மாறாகக் கட்டுப்பாட்டுடன் பேசுபவர் விவேகமாகப் பேசுவார்; தன் மீது அதிக நம்பிக்கை வைக்காது கடவுளிடம் நம்பிக்கை வைத்துப் பேசுவார் (16:1).

யூதப் பாரம்பரியமும் முதுபெரும் தந்தையர்களின் கூற்றுகளும் எண்ணிக்கை நிறைந்த வார்த்தைகளில் தவறுகள் இருப்பதை எச்சரிக்கின்றன. மௌனம் காப்பது ஏற்புடையதா என்ற கேள்வி எழும்பினும் (17:27-28) வார்த்தைகள் குழப்பத்தை அதிகம் உருவாக்குவதில்லை.

20 - நல்லாரின் சொற்கள் தூய வெள்ளி; பொல்லாரின் எண்ணங்கள் பதர்: நல்லாரின் சொல் என்பது அவரது நல்லது பேசும் நாவைக் குறிக்கிறது. அது அவரின் முழுத் தன்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது. நல்லாரின் வார்த்தை தூய வெள்ளி போன்றது. தூயவெள்ளி நெருப்பில் புடமிடப்பட்டது. அதன் மதிப்பு உயர்ந்தது. ஏனெனில் அதில் துருவோ, மாசோ இல்லை. அவர் சொல்லை நம்பலாம். பொல்லாரின் எண்ணங்களில் தீமை கலந்திருப்பதால் அவைகளுக்கு மதிப்பில்லை.

21 - நல்லாரின் சொற்கள் பிறருக்கு உணவாகும்: நேர்மையாளர் பிறருக்கு நலம் தரும் சொற்களில் உணவளித்து உதவுவதால் 'ஆயர்' என்று உருவகிக்கப்படுகிறார். ஆயர் ஆண்டவரை, அரசனைக் குறிக்கும். ஆயர் உணவளிக்கிறார், வழிநடத்துகிறார், புத்துயிர் ஊட்டுகிறார், கோலால் பாதுகாக்கிறார் (காண் எசே 34:23-25; திபா 23). இப்போது அது நேர்மையாளருக்கும் சுட்டப்படுகிறது. செருக்கு நிறைந்தவர் நல்லவைகளை ஏற்பதில்லை. அவர் பசித்துச் சாகிறார்.

22 - ஆண்டவரின் ஆசி: மனித வளமைக்கு ஆண்டவரின் ஆசியே காரணம் என்பது ஆசிரியரின் ஆழமான நம்பிக்கை. மனிதனின் விடாமுயற்சியும் சுறுசுறுப்பும் கடவுளின் கண்காணிப்பிலேதான் நிலையான செல்வத்தைத் தருகின்றன (10:1-4; 11:22-27; 21:17; 23:4; 28:20). கடவுளேதான் அனைத்துச் செல்வங்களின் அடித்தளம் (1சாமு 2:7) என்பது இங்கே குறிப்பிடப்படுகிறது. மனிதனாலல்ல, அனைத்தும் கடவுளின் செயல்.

அதே நேரத்தில் கடின உழைப்பும் வருந்தி எடுக்கும் முயற்சியும் இல்லாது கடவுளாசியாலே எல்லாம் கிடைக்கிறது என்று தவறாகப் பொருள்கொள்வதை இது மறுக்கிறது. ஏனெனில் சோம்பேறிக்கு இந்த ஆசி இல்லை (10:4). மனித ஆற்றல் ஓர் எல்லைக்கு உட்பட்டது. வேலை கடினமாவதும் கொடியதாவதும் சொந்த உள்நோக்கால், பேராசையால் எழுவதாகும். இது கடவுளின் ஆசிரல்ல; தீர்ப்புக்கு உள்ளாகும் (திபா 127:1; நீமொ 20:21; 28:22; திவெ 6:9,10; யாக் 3:1-16) செல்வமிருப்பதால் துயரம் வராது என்றும் இங்கே கூறப்படவில்லை. தெய்வத்தால் ஆகாததெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்.

23 - தீங்கிழைப்பது மகிழ்ச்சி தரும் விளையாட்டு: கடவுள் கண்காணிப்பில் வாழ்வது தீமைகளைத் தவிர்ப்பதாகும். மதிகேடரது தீங்கு மக்களுக்கு எதிரானது. மேலும் சிம்மா (Zimma) என்ற எபிரேயச் சொல் நல்ல அல்லது தீய திட்டத்தைக் குறிக்கும். தீய திட்டங்களாகப் பாலியல் தவறுகள், கொலைகள் (ஓசே 6:9), மற்றும் பலவற்றைக் கூறலாம் (திபா 26:10; நீமொ 21:27). இத் தீச்செயல்களெல்லாம் மதிகேடருக்குக் கேளிக்கையும் கேலிச் சிரிப்புமாகும். அவனிடம் நல்லது எதுவும் இல்லை. மெய்யறிவு உள்ளவர் ஞானத்தில் மகிழ்கிறார். இந்த மகிழ்ச்சியை ஞானப் பெண் கொள்ளும் மகிழ்வோடும் அக்களிப்போடும் சேர்த்துப் பார்க்கலாம் (8:30-31); நல்லோரின் உண்மை மகிழ்ச்சி நல்லதைச் செய்வதே (21:15).

24 - பொல்லார் அஞ்சுவது - பல காரணங்களுக்காகப் பொல்லார் அஞ்சலாம்; அவை பற்றிக் கூறப்படவில்லை. அறிஞர்கள் கருத்துப்படி

1. தீச்செயல்களால் திடீரென ஏற்பட்ட பேரிழப்பாக, மகிழ்வு பறிபோனதாக இருக்கலாம்.
2. தீமைசெய்ததால் எதிரிகள் செய்த சதியாக இருக்கலாம்.

3. வினைப்பயன் கோட்பாட்டின்படி செய்த தீமைக்கு வரும் தண்டனையாக இருக்கலாம்.

மனசாட்சி துன்புறுத்துவதால் வருகின்ற அச்சம் இங்கில்லை. கடவுளிடம் கொள்ளும் அச்சமும் இல்லை.

கடவுளுக்கு அஞ்சுவோர்: கடவுளை நாடுபவர், அவருக்காக ஏங்குபவர், நீதியை நிலைநாட்டுபவர். இவர்களுக்குக் கடவுளின் ஆசி கிடைக்கும் (2:6; 10:22; திபா 37:4).

25 – இந்த வசனத்தின் நல்ல விளக்கத்தை மத் 7:24-27இல் காணலாம். இறுதிக்காலத் தீர்ப்பை இது படம்பிடித்துக் காட்டுகிறது.

26 – நீதிமொழி 10:26: காடி பல்லையும், புகை கண்ணையும் தாக்கி உடம்புக்கு வேதனையை உண்டாக்குவது போல சமூகஉறவைப் பாதித்து சீர்குலைக்கும் சோம்பேறியின் செயலும் அமையும். சோம்பேறி தனது வெறுப்பைக் காற்றில் பறக்கவிடுகிறான். அவன் அவனை அனுப்புகிறவர்களுக்கு சலிப்பை, கோபத்தை, வேதனையை உண்டாக்கிவிடுகிறான். தூதுவன் மிகமிக நம்பிக்கைக்கு உரியவனாய் இருக்கவேண்டும். சோம்பேறி அதற்கு எதிராகச் செயல்பட்டால் எல்லாமே ஆபத்துக்கு உள்ளாகும்.

27-32 – நேர்மையாளருக்கும் பொல்லாருக்கும் உள்ள முரண்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

27 – 'ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்' முதன் முறையாக இப்பகுதியில் தோன்றுகிறது. மற்ற இடங்களிலும் காணலாம் (14:26-27; 15:16,33; 16:6; 19:23; 24:4). ஞானிகள் கடவுளுக்கு அஞ்சுபவர்கள். எனவே நேர்மையாளர் என்றும் கூறப்படுவர். நீண்டநாள் வாழ்வு ஞானம் காட்டும் ஆசிகளில் ஒன்று (3:2,16; 19:23). இது நிறைவான நீண்ட ஆயுள். பொல்லாருக்கு ஆயுள் குறுகியதே.

28 – நல்லாரின் எதிர்பார்ப்பு: வாழ்வுக்குப் பொருளும் வழியும் தருவது நம்பிக்கை. இஸ்ரயேலரின் வாழ்வே நம்பிக்கையில் சுழலும் வாழ்வு. நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அடிக்கடி காணக்கூடியவை (11:7; 28ஆ).

29 – நல்லார்க்கு அரண்; தீயோர்க்கு அழிவு: ஆண்டவரின் வழி என்பது படைப்பில் அவரது வேலைப்பாடு எனலாம். ஆனால் இந்த இடத்தில் இது கடவுளிடம் பற்றையும் கடவுளின் பண்புகளையும் வழிமுறைகளையும்

நேர்மையாளருக்கு ஆசிரையும் பொல்லாருக்குத் தண்டனையை வழங்கும் அவரது திட்டத்தையும் குறிக்கும் (திபா 27:11; 67:2; 119:27; 143:8; மத் 22:16; திப 9:2; 18:25-26; 24:14). மேலும் இது கடவுளின் நன்னெறியையும் அவரது பிழையில்லா ஆட்சியையும் சுட்டுகிறது. அவரது ஆற்றல்மிக்க அரசாட்சி நல்லார்க்கு அரணும் பொல்லார்க்கு அழிவுமாகும்.

30 - ஒரு போதும் அசைக்க முடியாது: இந்தக் கருத்து திருப்பாக்களைப் படிப்போருக்கு எளிதாகப் புரியும். நாட்டில் குடியிருப்பது, நிலத்தை உரிமையாக்கிக் கொள்வது திருப்பாக்களில் பரவலாகக் காணப்படும் கருத்து (15:5; 21:8; 27). கடவுளுக்கு அஞ்சுவோர் வாழ்வோரின் நாட்டில் ஒருவராகக் கருதப்படுவார்,

31 - ஞானம் இன்னொரு வகையில் நேர்மையாளருக்குக் கடவுளோடும் அவரது அரசோடும் நல்லுறவு ஏற்படுத்துகிறது; நிலை வாழ்வைத் தருகிறது. மேலும் இது மரத்தின் கனிபோல உள்ளது. நேர்மையாளர் ஞானத்தைக் கனியாகத் தருகிறார். ஞானம் மனித வாழ்வை வெற்றியடையச் செய்கிறது.

32 - இனிமை கொட்டும்: நல்லாரின் சொற்கள் இனியவையாக இருக்கும். அவை கடவுளும் மக்களும் உவப்புடன் ஏற்று மகிழும் சொற்கள். தீயோருடைய சொற்களோ மாறாட்டங்கள் கொண்டதாயிருக்கும்.

செம்பொருள்

இந்த அதிகாரத்தின் மையப்பொருள் என்று ஒன்று இல்லை. ஆனால் வறுமையும் செல்வமும் சோம்பலும் சுறுசுறுப்பும் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

மர்பியின் கருத்துப்படி 'நல்லார், பொல்லார்' இந்த அதிகாரத்திலும் பின்வரும் பகுதியிலும் அடிக்கடி வருகின்றனர். அதேபோல் ஞானிக்கும் மூடருக்கும் உள்ள முரண்பாடுகளும் குறிப்பிடப்படுகின்றன. ஞானியும் மூடனும் குடும்பத்தில் காணப்படுபவர்கள். ஆசிரியர் இவர்களை இனம் கண்டு போதனை தருகிறார்.

வினைப் பயன் கோட்பாடும் இழையோடுவதைக் காணலாம். நல்வழியைக் காட்டுவதே ஞானிகளின் கடமை. ஞானிகளின் போதிக்கும் அதிகாரத்தை இஸ்ரயேல் பாரம்பரியம் சீனாய் மலை நிகழ்வுகளிலிருந்தே ஏற்றுக்கொண்டது. அது இறைவாக்கினர் அதிகாரத்தையும் தாண்டியது என்றால் மிகையாகாது.

3. அறநெறிகளைக் கடைபிடி (11:1-31)

11:1 கள்ளத் துலாக்கோல் ஆண்டவருக்கு அருவருப்பானது; முத்திரையிட்ட படிக்கல்லே
அவர் விரும்புவது 2 இறுமாப்பு வரும் முன்னே, இகழ்ச்சி வரும் பின்னே; தன்னடக்கம்
இருக்குமாயின் ஞானமும் இருக்கும். 3 நேர்மையானவர்களின் நல்லொழுக்கம் அவர்களை
வழிநடத்தும்; நம்பிக்கைத் துரோகிகளின் வஞ்சகம் அவர்களைப் பாழ்படுத்தும். 4 கடவுளின்
சினம் வெளிப்படும் நாளில் செல்வம் பயன்படாது; நேர்மையான நடத்தையோ சாவுக்குத்
தப்புவிக்கும். 5 குற்றமில்லாதவர்களின் நேர்மை அவர்களின் வழியை நேராக்கும்; பொல்லார்
தம் பொல்லாங்கினால் வீழ்ச்சியுறுவர். 6 நேர்மையானவர்களின் நீதி அவர்களைப் பாதுகாக்கும்;
நம்பிக்கைத் துரோகிகள் தங்கள் சதித்திட்டத்தில் தாங்களே பிடிபடுவார்கள். 7 பொல்லார்
எதிர்நோக்கியிருந்தது அவர்கள் சாகும்போதும் கிட்டாமலே மறைந்துபோகும்; அவர்கள்
எதிர் நோக்கியிருந்த செல்வம் கிடைக்காமற்போகும். 8 கடவுளுக்கு அஞ்சி நடப்போர்
துயரினின்று விடுவிக்கப்படுவர்; பொல்லார் அதில் அகப்பட்டு உழல்வர். 9 இறைப்பற்று
இல்லாதோர் தம் பேச்சினால் தமக்கு அடுத்திருப்பாரைக் கெடுப்பர்; நேர்மையாளர் தம்
அறிவாற்றலால் விடுவிக்கப்பெறுவர். 10 நல்லாரின் வாழ்க்கை வளமடைந்தால், ஊரார்
மகிழ்ந்து கொண்டாடுவர்; பொல்லார் அழிந்தால் அவர்களிடையே ஆர்ப்பரிப்பு உண்டாகும்.
11 நேர்மையாளரின் ஆசியாலே, நகர் வளர்ந்தோங்கும்; பொல்லாரின் கபடப் பேச்சாலே
அது இடிந்தழியும். 12 அடுத்திருப்போரை இகழ்தல் மதிகெட்டோரின் செயல்; நாவடக்கம்
விவேகமுள்ளோரின் பண்பு; 13 வம்பளப்போர் மறைசெய்திகளை வெளிப்படுத்திவிடுவர்;
நம்பிக்கைக்குரியோரோ அவற்றை மறைவாக வைத்திருப்பர். 14 திறமையுள்ள தலைமை
இல்லையேல், நாடு வீழ்ச்சியுறும்; அறிவுரை கூறுவார் பலர் இருப்பின், அதற்குப் பாதுகாப்பு
உண்டு. 15 அன்னியருக்காகப் பிணை நிற்போர் அல்லற்படுவர்; பிணை நிற்க மறுப்போர்க்கு
இன்னல் வராது. 16 கனிவுள்ள பெண்ணுக்குப் புகழ் வந்து சேரும்; முயற்சியுள்ள ஆணுக்குச்
செல்வம் வந்து குவியும். 17 இரக்கமுள்ளோர் தம் செயலால் தாமே நன்மை அடைவர்;
இரக்கமற்றோரோ தமக்கே ஊறு விளைவித்துக் கொள்வர். 18 பொல்லார் பெறும் ஊதியம்
ஊதியமல்ல; நீதியை விதைப்போரோ உண்மையான ஊதியம் பெறுவர். 19 நீதியில்
கருத்தூன்றியோர் நீடு வாழ்வர்; தீமையை நாடுவோர் சாவை நாடிச் செல்வர். 20 வஞ்சக
நெஞ்சினர் ஆண்டவரின் இகழ்ச்சிக்குரியவர்; மாசற்றோர் அவரது மகிழ்ச்சிக்கு உரியவர். 21
தீயோர் தண்டனைக்குத் தப்பமாட்டார்; இது உறுதி; கடவுளுக்கு அஞ்சி நடப்போரின்
மரபினருக்கோ தீங்கு வராது. 22 மதிகெட்டு நடக்கும் பெண்ணின் அழகு பன்றிக்குப் போட்ட
வைர மூக்குத்தி. 23 கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் விருப்பங்கள் எப்போதும் நன்மையே
பயக்கும்; எதிர்காலம் பற்றிப் பொல்லார் கொள்ளும் நம்பிக்கை தெய்வ சினத்தையே
வருவிக்கும். 24 அளவின்றிச் செலவழிப்போர் செல்வராவதும் உண்டு; கஞ்சராய் வாழ்ந்து
வறியவராவதும் உண்டு. 25 ஈகைக் குணமுள்ளோர் வளம்பட வாழ்வர்; குடிநீர் கொடுப்போர்
குடிநீர் பெறுவர். 26 தானியத்தைப் பதுக்கி வைப்போரை மக்கள் சபிப்பர்; தானியத்தை
மக்களுக்கு விற்போரோ ஆசி பெறுவர். 27 நன்மையானதை நாடுவோர், கடவுளின் தயவை
நாடுவோர் ஆவர்; தீமையை நாடுவோரிடம் தீமைதான் வந்தடையும். 28 தம் செல்வத்தை
நம்பி வாழ்வோர் சருகென உதிர்வர்; கடவுளை நம்பி வாழ்வோரோ தளிரெனத் தழைப்பர்.
29 குடும்பச் சொத்தைக் கட்டிக் காக்காதவர்களுக்கு எஞ்சுவது வெறுங்காற்றே; அத்தகைய
மூடர்கள் ஞானமுள்ளோர்க்கு அடிமையாவர். 30 நேர்மையான நடத்தை வாழ்வளிக்கும்
மரத்திற்கு இட்டுச் செல்லும்; ஆனால், வன்செயல் உயிராற்றலை இழக்கச் செய்யும். 31

நேர்மையாளர் இவ்வுலகிலேயே கைம்மாறு பெறுவர் எனில், பொல்லாரும் பாவிகளும் தண்டனை பெறுவது திண்ணமன்றோ!

பின்புலம்

எதிர்மறை இணையணிகளால் பின்னப்பட்டதாக இங்குள்ள நீதிமொழிகள் உள்ளன. நேர்மையாளர், பொல்லார் (வச. 4-11; 8-21,30-31) பற்றி கூறுபோடுகிறது. ஒரு தெளிவான மையக் கருத்தைக் காண்பதரிது. ஆங்காங்கே வரும் கருத்தை விளக்குதல் நல்லது. ஒரு நல்ல சமுதாயத்தைக் கண்முன் நிறுத்தி நல்லன செய்து தீயன களைய ஆசிரியர் பாடுபடுகிறார்.

சொல்விளக்கம்

1 - கள்ளத் துலாக்கோல்: விவிலியம் வியாபாரத்தில் நாணயத்தை அழுத்திச் சொல்கிறது. ஏமாற்றுதல், ஏய்த்தல் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது (லேவி 19:35; இச 25:13-16), இறைவாக்கினர்களும் இதை வலியுறுத்துகின்றனர் (ஆமோ 8:5; காண் நீமொ 16:11; 28:10,23). இது ஒருவேளை பரவலாகக் காணப்பட்டிருக்கலாம். இதை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை.

'எடையில் ஒருபக்கம் சாயாதே, கள்ளத் தராசு போடாதே, அளவின் குறிப்பை மாற்றிவிடாதே' என்று அமெனமோபெ என்ற நூல் கூறுகிறது. ''திருவள்ளுவரும் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்'' செயல்பட அழைக்கிறார் (குறள் 118). அது நீதிக்கும் வியாபாரத்துக்கும் பொருந்தும். கள்ளத்தராசு ஒரு தெய்வத் துரோகமாகும். அது ஒரு பெரிய தண்டனைக்குரியது. அது குறிப்பாக ஏழைகளை வஞ்சிக்கிறது. மொட்ட அளப்பவனுக்கு குட்டம் (குஷ்டம்) வரும் என்பது தமிழ்ப் பழமொழி.

2 - சதோன் என்ற எபிரேயச் சொல்லுக்குப் பொருள் இறுமாப்பு. இறுமாப்பு தன்னைப் பற்றி மிகப் பெருமையாய் நினைப்பது. அது உண்மைக்கு ஒத்துப்போவதில்லை.

இகழ்ச்சி: கடவுளின் இடத்தைப் பிடித்துக்கொண்டு தம்பட்டம் அடித்துக் கொள்வதால் வரும் வீழ்ச்சி. இது கடவுளை எதிர்ப்பதும் பணிய மறுப்பதும் ஆகும் (13:10; 21:24; 6:17; 16:18-19). இதில்வரும் எதுகைமோனை இந்த நீதிமொழியைச் சிறந்த ஒன்றாக மாற்றிவிடுகிறது. (சடோன், கலோன் இவை எதுகை மோனையாக வருவதைக் காண்.) தமிழிலும் 'அழிவுக்கு முன்னானது அகந்தை' என்பர் (காண் 15:33; 16:18; 18:12).

தன்னடக்கம்: தன்னைப் பற்றிய தெளிவான அறிவு, தெளிவான மதிப்பு. அது ஞானத்தாலே வருவது.

3-6 - இந்த வசனங்கள் நேர்மையாளரின் வெற்றியும் பொல்லாரின் தோல்வியும் பற்றிப் பேசுகின்றன. நேர்மையாளர்களும் நம்பிக்கைத் துரோகிகளும் முரண்பாடான பண்புகளை உடையவர்கள். நேர்மை என்பதற்கான எபிரேயச் சொல் தும்மத். இது தம்செயல்களில் முழுமையை, நிறைவை, ஒட்டுமொத்தத்தைச் சுட்டுகிறது.நேர்மையாளர் கடவுளுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை உரியவராய் இருப்பார். அவரது பாதை தடுமாறாது. அவர்களுக்குப் பாதுகாப்பும் மீட்பும் கிடைக்கும். யோசேப்பின் நேர்மை எகிப்திய அரச பீடத்தைப் பிடித்தது. இயேசுவின் நேர்மை விண்ணகத்தைப் பரிசாக்கியது. முறைகேடாக நடப்பது இழிவுக்கும் அழிவுக்கும் இட்டுச் செல்கிறது (காண். யோபு 12:19; 13:6; 19:3; 21:25). பொல்லார் தாம் வெட்டிய குழியில் தாமே விழுவர்.

4 - கடவுளின் சினம்: இது இயற்கை அழிவையோ, சாவையோ, பொருள் இழப்பையோ குறிக்கும். இதற்கு யாரும் தப்ப இயலாது. திபா 49:14 இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது. தவறான வழியில் ஈன்ற பணம் அப்போது உதவ இயலாது. அவர்கள் உதிர்ந்து போவார்கள் (28). ஆனால் நல்லவர்க்குக் கடவுள் துணையிருப்பார்.

கடவுளின் சினம் முழு அழிவைக் குறிக்கிறது (15:9; காண் எசே 22:21,31) இங்கு இயேசுவின் கூற்றை நினைவு கூரலாம். மத் 6:24 (கடவுளுக்கும் பணத்திற்கும் பணிவிடை செய்யமுடியாது).

5-6 - குற்றமில்லாதவர்கள்: இவர்களின் பிறப்புரிமையாக உள்ளது நேர்மை. இவர்களின் வழி நேரானதாக இருக்கும். பொல்லாதவரின் தீமை அழிவுக்கு இட்டுச் செல்லும். இது ஞானக் கூற்று, நம்பிக்கைக் கூற்று.

7 - பொல்லார்... மறைந்துபோகும்: பொல்லார் சாகும்போது அவர்களிடம் நம்பிக்கை அற்றுப்போகிறது. செல்வத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையும் பயன்தராமறபோகும் எனக் கூறலாம். செல்வத்திலோ, மனிதரிலோ நம்பிக்கை வைப்பதைவிட கடவுளில் நம்பிக்கை வைப்பதை இது வலியுறுத்துகிறது (திபா 33:17,18).

8 - இது வினைப்பயன் கோட்பாட்டை வலியுறுத்துவதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நல்லாருக்கு நல்லதே கிடைக்கும். விடுதலை, ஆறுதல், மகிழ்ச்சிக்கு

அவர்கள் சொந்தக்காரர்கள். மாறாகப் பொல்லாருக்கு மிஞ்சுவது துன்பமே. நல்லாருக்குத் தோண்டிய குழியில் தானே மாட்டிக் கொள்கிறான் தீயோன் (26:27; திபா 7:16). இது எப்போதும் நிகழ்வதில்லை என்பது ஒரு சிலர் வாதம். எனினும் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது சான்றோர் வாக்கு.

9 – இந்த வசனம் தெளிவாயில்லை. இதில் கூறப்படும் முரண்பாடும் சிறிது வேறுபாடாக உள்ளது. இறைப்பற்றில்லாதோர் தம் பேச்சால் அடுத்தாரைக் கெடுப்பர். இது சரியாக உள்ளது. ஆனால் நேர்மையாளர் தமது அறிவாற்றலால் மற்றோரை விடுவிப்பர் என்பதற்குப் பதிலாக அவர்களே விடுவிக்கப்பெறுவர் என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் அறிவாற்றல் என்ற வாய்ச் சொல்லால் அழிவும் வரலாம் ஆக்கமும் வரலாம் என்பது தமிழ் மரபில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்று (10:11). எனவே அறிவாற்றல் என்பது உலக அறிவு எனலாம்.

10–11 – இந்த இரண்டு வசனங்களும் ஒரே கருத்தைச் சொல்கின்றன. வச 11 – வச 10க்கு வித்திட்டதென அறிஞர்கள் கருதுகின்றார். நல்லார் ஒருவர் பொருட்டு ஊரே மகிழ்கிறது. காரணம் அவர்கள் பொது நன்மைக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் உழைக்கின்றனர். தீயோர் மறைந்து நல்லோர் தங்கள் பொதுத் தொண்டு செய்கையில் ஊரே பயனடைகிறது (காண் 29:2).

ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு (குறள் 215).

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் (குறள் 216)

நல்லாரின் ஆசி என்பது அவர்கள் தரும் நல்லுரைகள், பாராட்டுகள், ஆசிர்கள். அவர்கள் தங்கள் சமூகத்திற்காகச் செய்து முடிக்கும் நற்செயல்கள்.

12–13 – மௌனமாயிருப்பது ஒருவர் தனது நாவைக் கட்டுப்படுத்துவது எனலாமா! பிறருக்கு எதிராக அவதூறு உரைப்பவன் நேர்மையற்றவன்; அவன் பாவி (14:21) என்று கருதப்படுகிறான். யாரைப் பற்றி அவன் பழி சொல்கிறான் என்று தெரியாது; எனினும் பக்கத்திலுள்ள ஏழைகளும் நோயாளிகளும் தான் அதிகம் தொல்லைக்கு உள்ளாபவர்கள்.

13 – இரகசியங்களைக் காக்க இயலாதவர் நம்பிக்கையுடையவராய் இருக்க இயலாது. இவர் தீய எண்ணத்துடனே பிறருக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்றோ,

சிறிய காரியத்துக்காகவோ செய்யலாம் (காண். 20:19). இவர்களோடு இரகசியங்களைப் பகிர எச்சரிக்கை தேவை. இரகசியங்கள் காக்கப்படவேண்டும் (25:9). நம்பிக்கைக்குரியோர் அதைச் செய்வர். அவர் நல்ல மனிதர். நம்பிக்கைக்குரிய இரகசிய வார்த்தைகளை வெளிப்படுத்துபவர் நம்பகத் தன்மை அற்றவர், அவர் பொய்யர், ஏமாற்றுபவர்; நல்லாரைப் பலிகடாக்களாக்குகிறவர் (எரே 6:28; 9:3; ஒசே 22:9). இவர்களைப் பற்றிப் புறணிபேசுவோர் தீய எண்ணங் கொண்டோர் என்கிறது விவிலியம் (லேவி 19:18); இவர்கள் எதிரிகளுக்கு இரகசியங்களைக் கூறிப் பேராபத்து விளைவிப்பவர்கள். நீதிபதி முன்னால் கூட இரகசியத்தைச் சொல்லாதே (25:9). இவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்து எதிரிக்கு உதவி, நண்பர்களைக் காட்டிக் கொடுத்துப் பிளவுகள், குழுமச் சண்டைகள் ஏற்படுத்துபவர்கள் (16:28 17:9).

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும் (குறள் 183)

14 - திறமையுடைய தலைமை இன்மை; அறிவுரை கூறுபவர் இருப்பின்... பாதுகாப்பு உண்டு: அரசர்கள் ஆண்டவரால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களைக் கடவுள் வழிநடத்துகிறார் (21:1). அவர்களுக்கு யாருடைய அறிவுரையும் தேவையில்லை என எண்ணுபவர் பலர். ஆனால் அவர்களுக்கும் ஆலோசனை தேவைப்படுகிறது. ஞான இலக்கியத்தில் முக்கிய நோக்கமே ஆலோசனை கூறி வழிநடத்துவதுதானே (காண் நீமொ 24:6; 1:5). யாரும் தவற முடியும். எனவே அறிவுரை தருதல் அல்லது திருத்துதல் இன்றியமையாதது.

15 - பிணை நிற்போர், பிணை நிற்க மறுப்போர்: அந்நியருக்காகப் பிணை நிற்பதை நீதிமொழிகள் எச்சரிக்கின்றன. (6:1-5; 17:18). செல்வத்திலும் நாணயத்தோடு இருக்கலாம். ஆனால் பிணை நிற்பது பல இன்னல்களைத் தரும்.

விளைவு

- நீ பணத்துக்கு உத்தரவாதமாய் இருந்தால் அதைச் செலுத்தவேண்டும்.
- நீ போண்டியாக நேரிடும்.
- நட்பு உடையும்; நம்பிக்கை இழக்கநேரிடும்; உன்னை இழக்கவேண்டி இருக்கும்.
- நீ பாதுகாப்போடும், உறுதிப்பாட்டோடும் இல்லை.

16 - கனிவுள்ள பெண்; முயற்சியுள்ள ஆண்: கனிவுள்ள பெண் புகழுக்குச் சொந்தக்காரர். இந்த புகழ் ஆண் பெறும் செல்வத்திலும் மதிப்பு மிக்கது. கனிவுள்ள என்பது உடல் அழகைக் குறிக்கலாம் (31:30; 4:9; 5:19), எனினும் உள்ளழகு எனப் பொருள்கொள்வது நன்று. நீதிமொழிகள் வெளியழகைவிட உள்ளழகுக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்கின்றன (31:31; 11:22) தன் கணவனுக்கு நம்பிக்கையான பெண்ணை ஊரே போற்றுகிறது. புகழுடையவருக்குச் செல்வமும் உண்டு. புகழ் கொடுக்கப்படுகிறது; செல்வம் ஈட்டப்படவேண்டும்.

முயற்சியுள்ள மனிதனைவிட, கொடூரமான மனிதன் என்பதே எதிர்மறை இணையணியைத் தெளிவுபடுத்தும். விவிலியம் பல இடங்களில் கொடிய மனிதர்கள் பற்றிப் பேசுகிறது (காண். எசா 49:25; எரே 15:21; எரே 20:11; எசா 11; 13:11).

இம்மனிதர்கள் எளிதில் பணம் சம்பாதித்துவிடுவர். பணம் பாராட்டப்பட்டாலும் (3:16 8:18 13:8) சமூகம் இவருக்கு மதிப்புத் தருவதில்லை (11:28), பணம் கடவுளிடமிருந்தும் பிரித்துவிடும் (30:8). புதிய ஏற்பாட்டில் இந்த எச்சரிக்கைகள் பல உள்ளன.

17 - இரக்கமுடையோர், இரக்கமற்றோர்: இரக்கமுள்ளோர் தங்கள் செயல்களால் நன்மையையும் தீமையையும் விளைவிக்கின்றனர். அது எப்படி? நல்லவர் ஒருவர் தனது இலக்கை அடைய நல்ல வழிகளையும் தீயவர் தீய வழிகளையும் பயன்படுத்துகின்றனர்.

18 - பொல்லார், நீதியுடையோர்: பொல்லார் என்பவர் ஏமாற்றுபவர்; தன் பாதுகாப்பான வாழ்வு, அமைதி, செல்வம் இவற்றிற்காகத் தன்னலத்தோடு செயல்படுபவர் (1:10-18; 10:2,25; 11:4); பாரவோன் நைல் நதியில் யூதக் குழந்தைகளை மூழ்கடித்தான் (விப 1:22); ஆனால் அவனது படைகள் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டன (விப 14:28). நீதியை விதைப்பவர் ஓர் உழவரைப்போல விதைத்துவிட்டு தனது ஊதியத்திற்காகக் காத்திருக்கிறார்.

புரூஸ் கேவால்ட்கே என்ற அறிஞர் இதில் 6 நற்குணங்களைக் காண்கிறார்.

1. முயற்சியும் முதலீடும்
2. பொது நன்மை
3. நூறு மடங்கு பலன் (மத் 19:29)
4. நல்ல விதை பற்றிய அறிவிப்பு - பலருக்கு உதவியாயிருக்கும்

5. கடவுளை நம்பியிருக்கிறார் விதைப்பவர்

6. சன்மானத்திற்குக் காத்திருக்கணும்.

19 – நீதியில் கருத்தூன்றியோர் நீடு வாழ்வர், தீமையை நாடுவோர் சாவை நாடிச் செல்வர்: இவை இரண்டிற்கும் உருவகமாகவோ அதன் பண்பை வைத்தோ பொருள் காணவேண்டும்.

20 – எதிர்மறை இணையணியை இங்குக் காண்கிறோம்.

வஞ்சக நெஞ்சினர்க்கு எதிர்மறையாக மாசற்றோர்

இகழ்ச்சிக்கு உரியவர்க்கு எதிர்மறையாக மகிழ்ச்சிக்குரியவர்.

வஞ்சகர் கடவுளை எதிர்ப்பவர், சமூகத்தை தமக்குப் பயன்படுத்துவர். மாசற்றவர் கடவுளிடம் தம் நம்பிக்கையை வைப்பவர்.

21 – தலைமுறை தலைமுறையாய்க் கடவுளின் ஆசிர் மாசற்றவருக்கு இருக்கும். வஞ்சகருக்குக் குழந்தைகள் இல்லாமல் போகும் (விப 34:7). அவர் தண்டனைக்குத் தப்பமாட்டார்; காரணம் தீர்ப்பு வழங்குபவர் கடவுளே.

22 – இந்த நீதிமொழி: இது ஒரே வரியுடையது; வசைமொழியில் இது ஓர் இணையணி. இதை உருவக இணையணி என்றும் கூறலாம். ஏனெனில் தங்க மூக்குத்தி நாற்றமடிக்கும் பன்றிக்குப் போடப்படுகிறது. அழகுடைய பெண் என்றாலும் ஒழுக்கம் அவனிடம் மறைந்துபோனால் அவளும் பன்றிபோன்றவளே. அவளது அழகும் பன்றிக்கு இட்ட மூக்குத்தியே. அழகு கடவுளின் கொடை (2:16; 1சாமு 25:3; எஸ்ரா 2:7; யோபு 42:15) அதை நன்னெறிகளால் காப்பது பெண்ணின் கடமை.

23 – நல்லார் பொல்லாரின் முடிவுகள் எப்படியிருக்கும் என இந்த நீதிமொழி கூறுகிறது. நல்லாருக்குச் செல்வமும் பொல்லாருக்குத் தண்டனையும் தரப்படுகிறது. சினம்: இது கடவுளின் சினமாகவோ அல்லது எதிரிகளின் சினமாகவோ இருக்கலாம்.

24 – இந்த நீதிமொழி ஒரு புதிரான மொழி. இதைப் பல வகைகளில் மொழி பெயர்க்கலாம். இது செலவிடுபவர் செல்வராய் இருப்பது பற்றியும் குறைத்துச் செலவிடுபவர் வறியவராவது பற்றியும் கூறுகிறது. இவர் ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடுப்பவரா? தெளிவில்லை. எனினும் நன்றாக விதைப்பவர் நன்றாக அறுவடைசெய்வார் கவனமின்றி விதைப்பவருக்கு அதிகப் பலன்

கிடைக்காது என்பதற்கு ஒப்பிடலாம். இன்னும் தாராள மனதுடையவர்க்கு எதுவும் குறைவுபடாது. கஞ்சத்தனமுடையவர்க்கு நலமானது எதுவும் கிடைக்காது. இதற்குப் பொருள் கொள்வதில் பலர் மாறுபடுகின்றனர்.

25 – இது ஒரு நேர்முக இணையணி. இது வசனம் 17ஐ பிரதிபலிக்கிறது. ஈகைக் குணமும், நீர்கொடுப்பதும் ஆசிரைக் கொணரும் செயல்களாக கருதப்படுகின்றன. பகிர்ந்து உண்டால் பசி தீரும். ஈகை வள்ளுவர் விரும்பும் குணம்.

26 – இது அடிக்கடி நம் நாட்டில் காணும் ஒன்று. இவ்வசனம் ஆசிபெறுவதைக் குறிக்கிறது. அது முந்தைய நீதிமொழியோடு தொடர்பாயுள்ளது. மழைபெய்து குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அதன் விலையை ஏற்றி விற்று இலாபம் பெற்றோர் உண்டு. ஆனால் தண்ணீரைப் பாட்டில் பாட்டிலாகக் கொண்டு வந்து இலவசமாகக் கொடுத்து மக்களின் குறைபாட்டைத் தீர்த்து மகிழ்ச்சியடைந்தோரும் உண்டு. இக்கட்டான நிலையில் மக்களுக்கு உதவுபவருக்கு 'ஆசிர்' கிடைக்கும். அது கடவுளிடமிருந்து வரும்.

27 – 'நாடுவோர்' என்ற சொல் மூன்றுமுறை வருகிறது. நல்லதை நாடுவது கடவுளை நாடுவதாகும் என்பது ஒரு பக்தனின் கூற்றாக அமைகிறது.

28 – செல்வமும் கடவுளும் விவிலியத்தில் வரும் ஆழமான ஒரு கருத்து. செல்வம் நல்லதுதான் (10:15). ஆனால் கடவுளை ஒட்டுமொத்தமாய் ஒதுக்கி வைத்ததெனில் செல்வமே உனக்கு ஒரு கண்ணியாகிவிடும் (28:25 23:25 1திமோ 6:17). செல்வத்தை நம்புவோர் கருகிவிடுவர். கடவுளை நம்புவோர் தளிரெனத் தழைப்பர் (காண். திப 1:3; எரே 17:7-8).

29 – சொத்தைக் கரிசனையோடு காக்காதவன் தானும் வெறுமையாகித் தனக்குப் பின்னால் வருகின்ற ஞானமும் விவேகமும் உடைய புதிய தலைவனுக்கு ஊழியனாய் இருப்பான்.

30 – இந்தச் சொற்றொடர் தெளிவற்றதாயுள்ளது. வாழ்வளிக்கும் மரத்திற்கு இட்டுச்செல்லும் என்பதன் பொருள் தெளிவாய் இல்லை. மைன்கோல்ட் என்பவர் நேர்மையாளரின் சொல்லும் செயலும் பிறருக்கு வழிகாட்டும் நற்போதனையாக அமைவதால் அவை வாழ்வின் ஊற்றாகக் கருதப்படுகின்றன என்கிறார் (காண் 13:14).

31 - இந்த நீதிமொழி இப்பகுதிக்கு ஒரு முடிவுரையாக உள்ளதாகத் தெரிகிறது. இவ்வுலகிலேயே கைம்மாறு கிடைக்கும் என்பது ஒரு தீர்க்கமான முடிவு. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இவ்வசனம் தீயோருக்குக் கிடைக்கும் தண்டனைத் தீர்ப்பை வலியுறுத்துகிறது. ஏனெனில் நீதிமானும் தவறித் தண்டனை பெறும் வாய்ப்பு இருந்தாலும் (சஉ 7:20) தீயவர் தண்டிக்கப்படுவது உறுதி என்பது வலியுறுத்தப்படுகிறது.

செம்பொருள்

ஞானமுடையோர் நல்லன செய்வர் என்பது ஒரு பொதுவான நோக்கு. ஞான நூல்கள் மட்டுமல்ல திருப்பாக்களும் இப்படிப்பட்டோரை அடையாளம் காட்டுகின்றன. ஞானிகளும் நேர்மையுடையோரும் தீயோரும் அறிவிலிகளும் இங்கு எதிர்மறையாகக் காட்டப்படுகின்றனர்.

மேலும் நீதிமொழிகள் நாவடக்கம் பற்றிக் (11:12) கூறுகின்றன. பேச்சு ஆக்கமுடையதாகவோ அழிவுக்குரியதாகவோ இருக்கலாம்.

எனவே நாவடக்கம் நல்லதாக முன்வைக்கப்படுகிறது. நாவடக்கத்தால் பல நன்மைகள் உண்டெனினும் அது எந்தச் சூழ்நிலையில் உதவும் என்பதைக் கவனிக்க வேண்டும். நாவடக்கம் அல்லது பேசாதிருத்தல் பிறரின் நன்மைக்காக; தவறு செய்துவிட்டோமென்றால் பேசாதிருப்பது நல்லது (11:12, காண் 30:32-33).

கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். அற நெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும் (22:19 3:5-6). வெறும் பணத்தை அல்லது செல்வத்தின் மேல் கண்வைத்து முழுமூச்சாக அதைப்பெற அறநெறிகளை விட்டுவிட்டால் எதிர்பார்த்த செல்வமும் கைநழுவிவிடும், வாழ்வும் கேள்விக்குறியாய்விடும் (11:7).

தாராளத்தோடு கொடுப்பவன் நிறைவுபெறுவான். அவன் மேலும் செல்வனாவான் (11:24). பவுலும் கொடுப்பவனுக்குக் குறைவுபடாது என்கிறார் (2கொரி 9:7,8).

4. நல்லாரும் பொல்லாரும் (12:1-28)

12:1 அறிவை விரும்புவோர் கண்டித்துத் திருத்தப்படுவதை விரும்புவர்; கண்டிக்கப்படுவதை வெறுப்போர் அறிவற்ற விலங்குகள் ஆவர். 2 நல்லார் ஆண்டவரது கருணை பெறுவர். தீய சூழ்ச்சி செய்வோரை அவர் கண்டிப்பார். 3 பொல்லாங்கு செய்து எவரும் நிலைத்ததில்லை; நேர்மையாளரின் வேரை அசைக்கமுடியாது. 4 பண்புள்ள

மனைவி தன் கணவனுக்கு மணிமுடியாவாள்; இழிவு வருவிப்பவள் அவனுக்கு எலும்புருக்கி போலிருப்பாள். 5 நேர்மையானவர்களின் கருத்துகள் நியாயமானவை; பொல்லாரின் திட்டங்கள் வஞ்சகமானவை. 6 பொல்லாரின் சொற்கள் சாவுக்கான கண்ணிகளாகும்; நேர்மையாளரின் பேச்சு உயிரைக் காப்பாற்றும். 7 பொல்லார் வீழ்த்தப்பட்டு வழித் தோன்றலின்றி அழிவர்; நல்லாரின் குடும்பமோ நிலைத்திருக்கும். 8 மனிதர் தம் விவேகத்திற்கேற்ற புகழைப் பெறுவர்; சீர்கெட்ட இதயமுடையவரோ இகழ்ச்சியடைவர். 9 வீட்டில் உணவில்லாதிருந்தும் வெளியில் பகட்டாய்த் திரிவோரைவிட, தம் கையால் உழைத்து எளிய வாழ்க்கை நடத்துவோரே மேல். 10 நல்லார் தம் கால்நடைகளையும் பரிவுடன் பாதுகாப்பார். பொல்லாரின் உள்ளமோ கொடுமை வாய்ந்தது. 11 உழுது பயிரிடுவோர் மிகுந்த உணவு பெறுவர்; வீணானவற்றைத் தேடியலைவோர் அறிவு அற்றவர். 12 தீயோரின் கோட்டைக் களிமண்ணெனத் தூளாகும். நேர்மையாளரின் வேரோ உறுதியாக ஊன்றி நிற்கும். 13 தீயோர் தம் பொய்யுரையில் தாமே சிக்கிக்கொள்வர்; நேர்மையாளர் நெருக்கடியான நிலையிலிருந்தும் தப்புவர். 14 ஒருவர் தம் பேச்சினால் நற்பயன் அடைகிறார்; வேறொருவர் தம் கைகளினால் செய்த வேலைக்குரிய பயனைப் பெறுகிறார். 15 மூடர் செய்வது அவர்களுக்குச் சரியெனத் தோன்றும்; ஞானிகள் பிறருடைய அறிவுரைக்குச் செவி கொடுப்பர். 16 மூடர் தம் எரிச்சலை உடனடியாக வெளியிடுவர்; விவேகிகளோ பிறரது இகழ்ச்சியைப் பொருட்படுத்தார். 17 உண்மை பேசுவோர் நீதியை நிலைநாட்டுவோர்; பொய்யுரைப்போரோ வஞ்சகம் நிறைந்தோர். 18 சிந்தனையற்ற பேச்சு வாள் போலப் புண்படுத்தும்; ஞானிகளின் சொற்களோ புண்களை ஆற்றும். 19 ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும்; பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே. 20 சதித்திட்டம் வகுப்போர் தம்மையே ஏமாற்றிக்கொள்வர்; பொது நலத்தை நாடுவோர் மகிழ்ச்சியோடிருப்பர். 21 நல்லாருக்கு ஒரு கேடும் வராது; பொல்லாரின் வாழ்க்கையோ துன்பம் நிறைந்ததாய் இருக்கும். 22 பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கின்றார்; உண்மையாய் நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கிறார். 23 விவேகமுள்ளோர் தம் அறிவை மறைத்துக் கொள்வர்; மதிகேடரோ தம் மூட எண்ணத்தை விளம்பரப்படுத்துவர். 24 ஊக்கமுடையோரின் கை ஆட்சி செய்யும்; சோம்பேறிகளோ அடிமை வேலை செய்வர். 25 மனக்கவலை மனிதரின் இதயத்தை வாட்டும்; இன்சொல் அவர்களை மகிழ்விக்கும். 26 சான்றோரின் அறிவுரை நண்பர்களுக்கு நன்மை பயக்கும்; பொல்லாரின் பாதை அவர்களைத் தவறிழைக்கச் செய்யும். 27 சோம்பேறிகள் தாம் வேட்டையாடியதையும் சமைத்துண்ணார்; விடாமுயற்சியுடையரோ அரும் பொருளையும் ஈட்டுவர். 28 நேர்மையாளரின் வழி வாழ்வு தரும்; முரணானவரின் வழி சாவில் தள்ளும்.

பின்புலம்

நல்லோரை வாழ்க்கை நிலையில் பல்வேறு செயல்கள்வழியாக நீதிமொழிகள் முன்வைக்கின்றன: நல்ல குடும்பத் தலைவர் (12:7), விவேகமுள்ளோர் (8, 23), நேர்மையான விவசாயி (11) உண்மை பேசுபவர் (12, 17, 19, 22). ஊக்கமுடையவர் (24) விடாமுயற்சியுடையோர் (27) ஆகியோர். அதேபோல் பொல்லாரை வஞ்சகர் (5), சீர்கெட்ட இதயமுடையோர் (8), பகட்டாய்த் திரிவோர் (9), பொய் பேசுவோர் (13, 22), சதிசெய்வோர் (20), மதிகேடர் (23), சோம்பேறிகள் (27) போன்ற சொற்களால் நீதிமொழிகள் (12ஆம் அதிகாரம்)

காட்டுகின்றன. இப்படிப்பட்ட முரண்பாடான செயல்களை ஆசிரியர் கவனித்திருக்க வேண்டும்.

சொல்விளக்கம்

12:1 - கண்டித்துத் திருத்தப்படுவது: அறிவுரை எல்லோருக்கும் தேவையானது. அறிவு புத்தகங்கள், அனுபவங்கள், இயற்கையிடமிருந்து தானாகக் கற்பது மட்டுமல்ல, ஆசானிடமிருந்து கற்றுக் கொள்வதுமாகும். ஞானி ஞானத்தைப் பெற்றுக்கொள்ள விட்டுக் கொடுப்பான், தவறுகளைச் சுட்டி காட்டிக் கண்டிக்கப்படும்போது அதை ஏற்றுக் கொள்வான். முட்டாள் கண்டிப்பதை வெறுப்பவன் மட்டுமல்ல, அவன் ஒரு விலங்கு போலாவான் (32:9).

2 – நீதிமொழிகளின்படி (2, 8:35ஆ) ஞானம் பெற்றவருக்குக் கடவுளின் கருணை தேடிவரும்.

3 - வேலை அசைக்க முடியாது: நல்லார் வாழ்வதும் பொல்லார் அழிவதும் ஒரு பொதுவான கருத்து (7; 10:7,25,30). ஒருவர் புதியவற்றைக் கற்காதிருப்பினும் கற்றவற்றைத் திருப்பிப்பார்க்கையில் ஒரு புதிய ஈர்ப்பும் புதுமையும் தோன்றும். திருப்பித் திருப்பிக் கற்பதுதான் ஞானத்தின் உறுதுணை.

4 - பண்புள்ள மனைவி பண்பற்ற மனைவி: ஒருவர் மணி முடியாகிறார், மற்றவர் எலும்பை உருக்குபவராகிறார்.

பண்புள்ள மனைவி: உயர்ந்தவள், சமூகத்தில் ஒளி வீசுபவள். தன் கணவனின் ஆற்றல், அவனின் மதிப்பு, அவன் சமுகத்தை ஆள உதவும் ஆற்றல் (31:23). இவருடைய அணிகலன்கள் உயர்ந்த பண்பு, உயரிய புண்ணியம், இவை இவளது உள்ளழகு, புறஅழகு (ஆன்மிக உடல்) இரண்டையும் சுட்டும் (ரூத் 3:11; நீமொ 14:1; 31:10).

மணிமுடி: மனைவி கணவனின் மணிமுடியாவாள். கணவனின் சமூக நிலைகளில் அவனின் ஆற்றலும் அழகும் ஆளுமையுமாகிறாள். கணவனின் அரும்பெரும் குணநலன்களை இந்த நீதிமொழி கூறுகிறது. அவர் இறைப்பற்று உடையவர், வேண்டுதல் செய்பவர் (18:22; 19:14) ஞானி, நேர்மையாளர், கனிவு, இரக்கம் கொண்டவர், தன் மனைவிக்காகத் தியாகம் செய்பவர் (1பேது 3:7)

பண்பற்ற மனைவி: கணவனுக்கு இழுக்குத் தேடித் தருபவள். குடும்பத்தில் கணவனின் மதிப்பையும் மாண்பையும் சூறையாடுபவள் (10:5) நம்பிக்கைத்

துரோகம் செய்பவள் (2:19), கேள்விக்குரியவள் (19:13 21:9,19), இறைப்பற்றற்றவள், பலவீனமானவள் (31:10-31). அவனது எலும்பில் இவர் ஒரு புற்றுநோயாவாள். ராகாப் (râqâb) என்ற எபிரேயச் சொல்லில் பொருள் எலும்பைத் துளைக்கும் (12:4; 14:30; அப 3:16), அரிக்கும் கறையான் பூச்சி (எசா 40:70). இது கணவனின் வாழ்வு இறுதியில் அழிந்துபோகுமளவுக்கு அரித்துத் தொந்தரவு தருவதைக் குறிக்கிறது.

ஆவதும் பெண்ணாலே! அழிவதும் பெண்ணாலே.

"மனைக்கு விளக்கம் மடவாள்."

5 - நியாயமானவை; வஞ்சகமானவை: நேர்மையாளர், பொல்லாரது திட்டங்கள் முழுதும் வேறுபாடானவை. நல்லோரிடமிருந்து நீதியும் நியாயமுமானவையும் தீயோரிடமிருந்து ஏய்த்தலும் ஏமாற்றமும் வருகின்றன (காண். எரே 17:9; மத் 15:19).

6 - பொல்லாரின் சொற்கள்: ஏமாற்றும் சொற்களும் திட்டங்களும் கொலைவெறியானவை (2:12-15; 4:14-19; 6:12-19; 10:32) அவைகள் பொய்க் குற்றச்சாட்டுகள், ஊழல்கள், கையூட்டுகள் (1:11-14; 10:11,18) மாசற்றோரைக் கொல்வதற்காக ஏற்படுத்தும் திட்டங்கள். இவைகள் எல்லாம் மறைந்திருந்து கண்ணிவைத்துத் தாக்கும் கொடூரச் செயல்கள். அவர்கள் நேர்மையாளரைச் சிக்கவைத்துத் தாக்கிக் கொல்கிறார்கள். நீதிமான்களிடம் அவைகளை எதிர்த்துத் தகர்க்ககூடிய விதிமுறைகள் உண்டு. அவர்களின் நேர்மையான பேச்சும் நடவடிக்கைகளும் அவர்களை விடுவிக்கும் (காண். லூக் 21:14,15; திப 4:13,14; மேலும் காண் 10:11; 11:30; 18:21). நன்மை தீமையை வெல்லும் என்ற உறுதி தரப்படுகிறது.

7 - பொல்லாரை ஏழாவது சீரழிவு வந்து அழித்துவிடும். ஆனால் நல்லாருக்கு வரும் துன்பங்கள் நெருக்கடிகள் மத்தியிலும் அவர்களது குடும்பம் நிலைத்திருக்கும்.

குடும்பம் என்பது வீட்டில் உள்ள எல்லா நல்லவற்றையும் குறிக்கும். மிகச் சிறப்பாக ஒரு மகிழ்ச்சியான நல்ல வாழ்வு (14:11).

8 - விவேகம்: 'சிக்லோ' என்ற எபிரேயச் சொல் நடைமுறைச் செயல்பாடுகளில் விவேகிகள் காட்டும் வியூகங்களைக் குறிக்கும். விவேகம்

உடையோர்க்கு உண்மைப் புகழ் பிறரிடமிருந்து வரும் (27:2). மக்களின் மதிப்பே மனிதனை நடைபோட உதவுகிறது (27:21ஆ). ஞானமுள்ளவனைச் சுற்றியிருப்போர் கண்டிப்பாக மனதாரப் புகழ்ந்து ஏற்றுக்கொள்வர் (13:5). ஞானமில்லாரை யாவரும் வெறுப்புடன் நோக்குவர்.

9 - பகட்டு கூடாது. தன்னிடம் இருப்பதைவிட மேலானவர் என்று வேடமிடுவதை ஏற்க இயலாது. மாறாக எளிய உண்மையான வாழ்க்கை நடத்துவதே போற்றற்குரியது. உயர்வான சமூக நிலையில் உண்மைத் தன்மை வேண்டும்.

10 - கால்நடைகளையும் பரிவுடன் பாதுகாப்பர்: கால்நடைகளைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் இலாபத்திற்காக மட்டுமல்ல (27:23,29). அது இரக்கத்தின்பாற்பட்டது. கடவுள் படைத்தவர் (கால்நடைகள் விலங்குகள் மீது பரிவு கொள்கிறார் கடவுள் (இச 11:15; திபா 36:6; 104:17; யோனா 4:11). கடவுள் கால்நடைகளுக்குக்கூட ஓய்வு கொடுக்கவேண்டுமென இஸ்ரயேல் மக்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார் (விப 20:10; 23:11-21; லேவி 25:1-7). விலங்குகளுக்கே கருணை காட்டவேண்டுமெனில் மனிதருக்குக் காட்டவேண்டாமா? (இச 25:4; 1கொரி 9:9-10). இது ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்யல் வேண்டும் என்ற வள்ளலார் கூற்றைப் பிரதிபலிக்கிறது. அடிமைகளை வைத்திருப்போர் எப்படி அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்பது இங்குப் புலனாகிறது.

தீயோர் கொடுமையாய் தங்கள் கால்நடைகளிடம் நடந்துகொண்டால் தங்கள் உழைப்பாளிகளிடம் எப்படி நடந்து கொள்வார்கள் (காண். மத் 25:23).

கால்நடைகளிடம் காட்டும் பரிவை 'ரெகெம்' என்ற எபிரேயச் சொல் சுட்டுகிறது. இது அன்னை தன் கருவில் இருக்கும் சிசுவுக்காகக் காட்டும் அன்பை, இரக்கத்தை, பரிவைக் குறிக்கிறது. நமக்கு உதவும் வீட்டு விலங்குகளிடம் கருணையோடு நடப்பது ஒரு புண்ணியம்.

11 - உழுது பயிரிடுவோர்: நிலத்தைப் பண்படுத்தி, உழுது பயிரிடுவோர் பற்றி இந்த நீதிமொழி கூறுகிறது. இவர்கள் தேவைக்கும் அதற்கு அதிகமாகவும் உணவுப் பொருளைப் பெறுவர். ஒருவேளை வாழ்வின் தேவையை நிறைவுசெய்ய உழவுத் தொழிலை தேர்ந்துகொள் என்று அறிவுறுத்துவதாகக் கொள்ளலாம் (28:19). மேலும் எறும்பைப்போல சுறுசுறுப்பாகச் செய் என்பதையும் இது குறிக்கலாம் (6:6-8).

இயற்கையை, நிலத்தை (11), கால்நடைகளை (10) பராமரிப்போர் இயற்கையால் பராமரிக்கப்படுவர்.

இதற்கு மாறாக அறிவற்றோர் வீணானதையே பெறுவர். அவர்கள் எதற்கும் தகுதியற்றோராவர். நீமொ 28:19 இதே கருத்தை இன்னும் தெளிவாகக் கூறுகிறது. அமெனமோப்பே அறிவுரையும் (8:17-18; AEL, 2:152) இதைப் பிரதிபலிக்கிறது.

12 - தீயோரின் கோட்டை களிமண்; நேர்மையாளரின் வேர் உறுதியானது: தீயோர் தங்கள் தீய செயல்களை (ஏழைகளை வஞ்சித்து, ஊழல்கள் செய்து) கொண்டு (1:10-19, 11:16) தங்களைப் பாதுகாக்கும் அரணைக் கட்டி எழுப்புகின்றனர். ஆனால் அவை தூளாகிவிடும்; காற்றைப் பிடிப்பது போலாகும் (சஉ 1:14). ஆனால் நேர்மையாளர் செயலோ ஆலம் வேரின் விழுதுபோல் ஊன்றி நிற்கும், மேலும் தளிர்த்துப் பரவும்.

13 - தீயோர்... சிக்கிக்கொள்வர்; நேர்மையாளர் தப்புவர்: நல்லவர்களுக்கு எதிராகப் புண்படும் வார்த்தைகளைப் பேசுவது குறித்து இந்த நீதிமொழி எச்சரிக்கிறது. பிறர்க்குச் செய்யும் தீமைகளிலோ, கண்ணியிலோ நாமே சிக்கிவிடுவோம். பிறர்க்கு இன்னா முற்பகல் செய்தல். ஆனால் இத்தகைய இடுக்கண்கள், சிக்கல்கள் அனைத்திலிருந்தும் நல்லோர் தப்பிவிடுவர். (3:34; 1அர 2:22,23; தானி 6:7-9,24; மத் 27:25).

14 - இங்கு நேர்முக இணையணியைக் காண்கிறோம். நல்லோர் நலன் பெறுவர் என்பதைச் சுருக்கமாகப் பார்க்கிறோம் (காண். சஉ 11:1; கலா 6:5). நல்லவர் நற்போதனை, நல்ல அறிவுரை கூறுவர். சமாதானதிற்கான வழிகளையும் ஆறுதல் தரும் உற்சாகத்தையும் தந்து வழி நடத்துவர். இத்தகைய பண்புகள் இவரை அணிசெய்கின்றன (10:20,21). இவை கடவுள் செயல் (12:2;22; காண் 19:17; மத் 12:37). எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம். எனினும் ஏமாற்றத்திற்கும் இடமுண்டு. இதன் எழுவாய் கடவுளா? என்ற கேள்வி எழுகிறது.

15 - மூடர்... சரியெனத் தோன்றும் ஞானிகள்.. செவி கொடுப்பர்: செவிமடுப்பது நல்ல கருத்துகளைப் பெறவும் நல்ல முடிவு எடுக்கவும் ஏதுவாயிருக்கும். ஒருவரின் தனிப்பட்ட கருத்து ஏமாற்றலாம். எனவேதான் ஞானிகள் பற்றிய அறிவுரைக்குச் செவிமடுக்கத் தூண்டுகின்றனர் (காண். 3:7; 26:12; 13:10).

16 – ஞானி தன்னைக் கட்டுப்படுத்துபவன். தீயவன் தன் உணர்வுகளைக் கட்டவிழ்த்து விட்டுவிடுகிறான். அவை அவனைக் கொன்றுவிடும் (யோபு 5:2). சினத்தைக் கட்டுப்படுத்துபவன் தன்னையே வென்றவனாகிறான். எதிரியின் கைகளில் அவன் அகப்படமாட்டான்.

17 – நீதிமன்றத்தில் உண்மை பேசி நீதியை நிலைநாட்டும் நல்லோர்பற்றி இங்குக் காண்கிறோம் (காண் 12:19). உண்மை பேசுபவர் உயிரைக் காப்பவர். இக்காலத்தில் அறிவியல் ஆராய்ச்சி வழியாக உண்மையைக் கண்டு பிடிக்க இயலும். அக்காலத்தில் இவைகள் இல்லை. எனவே நல்ல தீர்ப்பு வழங்க உண்மைபேசும் சாட்சிகளைத் தான் நீதிமன்றம் நம்பியிருக்கவேண்டும். மாற்றிப் பேசுபவர் நீதித் தீர்ப்பை தொலைத்துவிடுவர். நல்லோர் இதனால் தண்டிக்கப்படுவர். உண்மை பேசுவோர் என்பதை உண்மையைச் சுவாசிப்பவர் என்று மொழிபெயர்க்க வேண்டும். உண்மை பேசுவது ஒவ்வொருவரின் உயிர்மூச்சாய் இருக்கவேண்டும்.

18 – சிந்தனையற்ற பேச்சு: இது ஆறாப் புண்ணை ஏற்படுத்தும் நாவினால் சுட்ட வடு என்று வள்ளுவர் உரைப்பார் (காண். நீமொ 11:24; லேவி 5:4). சுடுசொற்கள் கூரான அம்புகளாகும். அவைகள் மனித உயிரைக் கொல்லும் ஆற்றல் கொண்டன (5:4; 15:16). மனிதாபிமானமின்மை கொல்லும் செயலைக் குறிக்கிறது.

இதற்கு மாறாக ஞானிகளின் சொல் குணமளிக்கும் மருந்தாகக் கருதப்படுகிறது (4:22). இது ஒப்புரவுக்கு இட்டுச்செல்கிறது, புண்பட்ட மனத்தை குணப்படுத்தி, காயங்களை ஆற்றுப்படுத்துகிறது (12:20). வேண்டா விவாதங்களை ஞானிகள் ஏற்கமாட்டார்.

19 – உண்மை என்றும் நிலைக்கும்: பொய் இமைப்பொழுதே என்ற எதிர்மறை கவனிக்கத் தக்கது. சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாததே உண்மை. உண்மை பேசுபவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர். பொய் உரைப்பது கடவுளுக்கு எதிரானது (12:2,22; எசா 57:4).

20 – சதித் திட்டம், பொது நலம்: உலகில் சதிசெய்து துயரம் வருவிப்போரையும் நல்லவை செய்து அமைதியை ஏற்படுத்துவோரையும் இந்த நீதிமொழி குறிப்பிடுகிறது. சதித் திட்டம் இதயத்தில் உருவாகிறது அது மாசற்றவரை வதைக்கிறது (1:16). பொது நலம் தேடுவோருக்கு மகிழ்ச்சி உண்டு. அது ஒப்புரவை

ஏற்படுத்துவோருக்கு மகிழ்ச்சியையும் (10:28), மனமகிழ்வையும் (காண். உரோ 7:22) உண்டாக்கும்.

21 – நல்லாருக்குக் கேடு இல்லை; பொல்லாருக்குத் துன்பம் உண்டு: நல்லாரோடு கடவுள் ஒத்துழைக்கிறார். அது நல்லது நடப்பதற்காகவே (காண். உரோ 8:28). அவர்களைச் சோதனை நேரத்தில் உடனிருந்து அவர்களை மீட்டுப் புனிதப்படுத்துகிறார். பொல்லாரின் பொல்லாச் செயல் துன்பத்தை அவர்களுக்கு விளைவிக்கிறது.

22 – பொய்யுரைக்கும் நாவு; உண்மை பேசும் நாவு: பொய்யுரைத்தல் இறைவனுக்கு எதிரான ஒரு பாதகச் செயல் (3:32). பொய்யுரைப்போர் உண்மையைத் திரித்துரைப்பர் (12:17,19).

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் (244).

23 – விவேகமுள்ளோர், மதிகேடர்: விவேகமுடையோருக்கு எங்கே, எப்போது பேச வேண்டும் என்பது தெரியும் (16; 10:14; 17:27; சீஞா 21:26). மூடரோ தகாத சொற்களால் குழப்பம் ஏற்படுத்துகிறார் (12:16; 13:16). ஞானி ஆணவம் இல்லாதவர்; தனக்கு எல்லாம் தெரியும் எனக் காட்டிக் கொள்ளாதவர் (3:7; 10:14அ; 11:13).

மறைப்பது: அறிவைத் தேடுவோரிடமிருந்து மறைப்பதல்ல, மாறாக கேட்க மனநிலை இல்லாதபோது, துன்பம் விளைவிக்கும் போது (காண் மத் 7:6; 16:20; 17:9) மறைப்பது.

24 – ஊக்கமுடையோர் கை – ஆட்சிசெய்யும்; சோம்பேறி அடிமை வேலை செய்வான்: இந்த நீதிமொழியைப் பல்வேறு விதமாக மொழிபெயர்க்கலாம். ஏராளமாகச் செலவு செய்பவர் செல்வராவார். குறைவாகச் செலவு செய்வோர் ஏழையாவர். எப்படி என்பது பற்றிக் கூறப்படவில்லை. இதை புரிந்துகொள்வது கடினம் என்றாலும் இது ஒரு நிகழ்வாகக் கூறப்படுகிறது. ஒருவேளை இதை அதிகம் விதைப்பவர் அதிகம் அறுவடை செய்வார், குறைவாய் விதைப்பவர் குறைவாய் அறுவடை செய்வார், என மொழிபெயர்க்கலாம். இன்னொரு வகையிலும் மொழிபெயர்க்கலாம். தாராளமாகக் கொடுப்பவனுக்குக் குறைவுபடாது; குறைவாகக் கொடுப்பவனுக்கு இருப்பதும் குறையும் என்று ஆன்மிக வழியில் கூறலாம்.

மேலும் ஊக்கமுடையோர் கையை: கடினமாக உழைப்பவர் எனக் கூறலாம். இவர் தம்மை ஆள்பவர், தம் காலில் நிற்பவர். யாருக்கும் அடிபணியத் தேவையில்லாதவர். இவர் அதிகாரம் பெற்று ஆள்பவர். ஆள்வது அரசியல் ஆட்சிமட்டுமல்ல (தொநூ 37:8) மனிதனை, படைப்பை ஆள்வதுபோல் (திபா 8:6), ஓர் அடிமைப் பெண்ணை ஆள்வதுபோல (விப 27:8) ஆள்வது. கடின உழைப்பும் விவேகமும் உன்னை உயர்த்தும்.

சோம்பேறி: வேலை செய்ய மறுப்பவன் அல்லது சுறுசுறுப்பாயில்லாது காலத்தை வீணடிப்பவன். இவன் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுவான். இவன் தன்னை ஆள்பவனில்லை; இவன் தன் சொந்தக் காலில் நிற்கவும் முடியாது (காண். மத் 24:45-46; 25:21).

25 - மனக்கவலை - வாட்டும்; இன்சொல் - மகிழ்விக்கும்: அரசியல், உடல் தொடர்புடைய அழுத்தத்தை விவேகத்தால் வென்றுவிட்டு உள்மன அழுத்தத்தை நல் வார்த்தையால் குணப்படுத்துவதைப் பற்றி இந்த நீதிமொழி கூறுகிறது. மனக் கவலை மனத்தை வாட்ட இன்சொல் அதை நீக்கி மகிழ்வை உண்டாக்கும். மனக் கவலை வாழ்வில் மிகத் தேவையான ஒன்றை இழந்து விடுவோமோ என்ற பயத்தால் வருகிறது (காண். 1சாமு 9:5; 10:2; எரே 38:19; 49:23). இக்கவலை மனிதனின் மையத்தைப் பாதிக்கிறது, மனிதன் தடுமாறுகிறான்.

வாட்டுதல் என்றால் மனிதன் முகம் குப்புறத் தூசியில் வீழ்வதைச் சுட்டும். அது மானம், மரியாதை இழப்பாகும். அந்த நேரம் இன்சொல் மனிதனைத் தூக்கிவிடும், ஊக்கம் தரும், நம்பிக்கையை உருவாக்கும் (15:30; 25:25; 1சாமு 2:24) மகிழ்வு ஊட்டுவதை சீஞா 30:21-24ல் காணலாம்.

26 - சான்றோரின் அறிவுரை; பொல்லாரின் பாதை: நல்லோர் அறிவுரை, நம்பிக்கைக்குரிய நண்பனின் வழிகாட்டுதல் வாழ்வின் வழியில் நடக்க உதவும். மெரெயா ;(mçrça) என்ற எபிரேயச் சொல் நம்பிக்கையான தோழனைச் சுட்டும் (காண். தொநூ 26:26; 2சாமு 3:8). நல்லார், திருந்தாதோர், ஏமாற்றுவோர், கொடியோர் நம்பமுடியதோர் யார் என்பதைத் தம் நண்பர்களில் இனம் காண்பர். ஆனால் தீயோர் ஞானத்தை, அதன் வழிகாட்டுதலை வெறுப்பர் (1:10-15; 12:1) இறுதியில் தவறில் வீழ்வர்.

27 - சோம்பேறிகள்; விடாமுயற்சியுடையோர்: இங்கு நாம் காணும் சோம்பேறிகள் எப்படிப்பட்டவர்கள் என்பது தெளிவாக இல்லை. இவர்கள் காட்டில் சென்று வேட்டையாடுபவர்கள். இவர்கள் நிலத்தில் வேலை செய்யவில்லை (12:11), கால்நடைகளையும் பராமரிக்கவில்லை (27:23-27). இவை எல்லாவற்றிற்கும் கடின உழைப்புத் தேவைப்படுகிறதல்லவா.

சமைத்துண்ணார்: வேட்டையாடியவர் அதைச் சமைக்கவில்லை. காரணம் அவர் சோம்பேறி. எனவே அறிஞர்கள் சோம்பேறி உண்டு தன்னைக் காப்பாற்றுமளவுக்கு வேட்டையாடுவதுமில்லை, சமைப்பதுமில்லை என்கின்றனர். எத்தனை அறிவுரை கேட்டும் (10:21) ஆன்மிகப் பசியாலும் எவ்வளவு உணவு இருந்தும் உடற்பசியாலும் வாடுவோர் இவர்கள். ஆனால் முயல்வோர் கடவுள் தரும் அன்பின் கொடைகளை நன்றாகப் பயன்படுத்தி ஊக்கம் பெறுவர்.

28 - நேர்மையாளரின் வழி வாழ்வு தரும்; முரணானவர் வழி சாவில் தள்ளும்: நேர்மையாளர் இறைவனோடு நெருங்கிய உறவு கொள்பவர். அவரைச் சாவு அண்டுவதில்லை. இங்கு வாழ்வே அவரது பரிசாகிறது. இவ்வாழ்வு இவ்வுலக வாழ்வு என்பது கடவுளோடும் அயலாரோடும் கொள்ளும் கனிவும் பற்றும் நிறைந்த வாழ்வு. இது கடவுள் செயல்.

தமிழ் மொழிபெயர்ப்பு எதிர்மறை இணையணியாக இந்த நீதிமொழியைக் காட்டுகிறது. ஆனால் NRSV இதை நேர்முறை இணையணியாகக் காட்டுகிறது. இந்த மொழிபெயர்ப்பில் நேர்மையானவர் வழி வாழ்வுவரும். அதே வழியில் நடந்தால் சாவு இல்லை. நேர்மறை இணையணி அழியாமையை இன்னும் வலியுறுத்துகிறது. இது நீதிமொழிகளின் படிப்பினை (2:19; 10:2; 16; 11:14,19; 12:3,7,12,19, காண் சாஞா 1:15; 2:23).

செம்பொருள்

ஞானமுடையோர் அறிவிலிகள், நேர்மையாளர் தீயோர் என்ற முரண்பாடு தொடர்ந்து விளக்கப்படுகிறது. நல்லவர் வாழ்வுக்கான, மகிழ்வுக்கான, வளர்ச்சிக்கான செயல்களில் கண்ணும் கருத்துமாயிருப்பர். தீயோர் அதற்கு மாறான செயல்களில் ஈடுபடுவர். அவர்கள் கொணர்வது அழிவு, துயரம், இழிவு போன்றவையாகும். பண்புள்ள மனைவி தன் கணவனுக்குப் பாதுகாப்பும், பேரும் புகழுமாக இருக்கிறாள், பண்பற்றவள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் எலும்புருக்கி நோய்போன்றவள் (12:4).

அறிவுரைகள் வாழ்வை வளப்படுத்தவே; உண்மை, உழைப்பு, விவேகம் எப்போதுமே ஞானத்தால் போற்றப்படுகின்றன.

5. அறநெறியும் செல்வமும் (13:1-25)

*13:1 ஞானமுள்ள மகன் தந்தையின் நற்பயிற்சியை ஏற்றுக்கொள்வான்;
இறுமாப்புள்ளவனோ கண்டிக்கப்படுதலைப் பொருட்படுத்த மாட்டான். 2 நல்லோர் தம்
சொற்களின் பலனான நல்லுணவை உண்கிறார்; வஞ்சகச் செயல்களே வஞ்சகர் உண்ணும்
உணவு. 3 நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார்; நாவைக் காவாதவன்
கெட்டழிவான். 4 சோம்பேறிகள் உண்ண விரும்புகிறார்கள், உணவோ இல்லை;
ஊக்கமுள்ளவரோ உண்டு கொழுக்கிறார். 5 நல்லார் பொய்யுரையை வெறுப்பர்; பொல்லாரோ
வெட்கக்கேடாகவும் இழிவாகவும் நடந்துகொள்வர். 6 நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும்,
பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும். 7 ஒன்றுமில்லாதிருந்தும் செல்வர் போல
நடிப்போருமுண்டு; மிகுந்த செல்வமிருந்தும் ஏழைகள் போல நடிப்போருமுண்டு. 8
அச்சுறுத்தப்படும்போது செல்வர் தம் பொருளைத் தந்து தம் உயிரை மீட்டுக்கொள்வர்.
ஏழையோ அச்சுறுத்துதலுக்கு அஞ்சான். 9 சான்றோரின் ஒளி சுடர்வீசிப் பெருகும்; பொல்லாரின்
விளக்கோ அணைக்கப்படும். 10 மூடன் தன் இறுமாப்பினாலே சண்டை மூட்டுவான்;
பிறருடைய அறிவுரைகளை ஏற்போரிடம் ஞானம் காணப்படும். 11 விரைவில் வரும் செல்வம்
விரைவில் கரையும்; சிறிது சிறிதாய்ச் சேர்ப்பவனின் செல்வமே பெருகும். 12 நெடுநாள்
எதிர்நோக்கியிருப்பது மனச்சோர்வை உண்டாக்கும்; விரும்பியது கிடைப்பது சாகாவரத்தைப்
பெறுவது போலாகும். 13 அறிவுரையைப் புறக்கணிக்கிறவர் அழிவுறுவார்; போதிக்கிறவரின்
சொல்லை மதிக்கிறவர் பயனடைவர். 14 ஞானமுள்ளவரது அறிவுரை வாழ்வளிக்கும்
ஊற்றாகும்; அது ஒருவரைச் சாவை விளைவிக்கும் கண்ணிகளிலிருந்து தப்புவிக்கும். 15
நல்லறிவு மக்களின் நல்லெண்ணத்தை வருவிக்கும்; நம்பிக்கைத் துரோகமோ கேடு அடையச்
செய்யும். 16 கூர்மதிவாய்ந்த எவரும் நல்லறிவோடு நடந்துகொள்வார்; மூடர் தன் மடமையை
விளம்பரப்படுத்துவார். 17 தீய தூதர் தொல்லையில் ஆழ்த்துவார்; நல்ல தூதரோ அமைதி
நிலவச் செய்வார். 18 நல்லுரையைப் புறக்கணிப்பவர் வறுமையும் இகழ்ச்சியும் அடைவார்;
கண்டிப்புரையை ஏற்பவரோ புகழடைவார். 19 நினைத்தது கிடைப்பின் மனத்திற்கு இன்பம்;
மூடர் தம் தீமையை வெறுக்காதிருப்பதும் இதனாலேயே. 20 ஞானமுள்ளவர்களோடு
உறவாடுகிறவர் ஞானமுள்ளவராவார்; மூடரோடு நட்புக்கொள்கிறவர் துன்புறுவார். 21 பாவிகளைத்
தீங்கு பின்தொடரும்; கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு நற்பேறு கிட்டும். 22 நல்லவரது
சொத்து அவருடைய மரபினரைச் சேரும்; பாவி சேர்த்த செல்வமோ கடவுளுக்கு அஞ்சி
நடப்போரை வந்தடையும். 23 தரிசு நிலம் ஏழைக்கு ஓரளவு உணவு தரும்; ஆனால்
நியாயம் கிடைக்காத இடத்தில் அதுவும் பறிபோகும். 24 பிரம்பைக் கையாளாதவர் தம்
மகனை நேசிக்காதவர்; மகனை நேசிப்பவரோ அவனைத் தண்டிக்கத் தயங்கமாட்டார். 25
கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு வயிறார உணவு கிடைக்கும்; பொல்லாரின் வயிறோ
பசியால் வாடும்.*

பின்புலம்

இந்த நீதிமொழி பெற்றோரின் அறிவுரையைக் கேட்க அழைக்கிறது (10:1,17; 12:1,15). நல்லவற்றைக் கடைபிடித்தால் எதுவும் குறைவுபடாது, ஆன்மிகமும் பெறலாம், உலகில் பொருள்களும் கைகூடும். இந்த அதிகாரத்தின் முதல் பாகம் 2-6ஐ ஒரு பகுதியாகவும் 7-11ஐ மற்றொரு பகுதியாகவும் பிரித்துப் பார்க்கையில் அறநெறி பற்றிய கூற்றாகவும் செல்வம் பற்றிய கூற்றாகவும் காணலாம். இவ்வாறு அறநெறியும் செல்வமும் மைய இடத்தைப் பிடித்துக்கொள்கின்றன.

இறுதிப் பகுதி அறிவிலிகளையும் (19,20) தீமையையும் பற்றிப் பேசுகிறது. ஆயினும் நேர்மையாளருக்கு அவர்கள் வேண்டுவது நிறைவேற்றப்படுகிறது (வச 20).

சொல்விளக்கம்

13:1 - அறிவை விரும்புவோர்: தந்தை தனயனுக்குத் தயங்காது அறிவுரை தருகிறார். நல்ல மகன் தந்தையின் அறிவுரையை ஆர்வத்தோடு கேட்டுப் பக்குவமடைகிறான். மற்றவனோ கடிந்துரைப்பதைப் பழித்துரைக்கிறான். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பதைப்போல் நல்ல மகன் அறிவுரையை ஏற்கிறான். தீயவனே மறுக்கிறான் (30:17). தீயவன் ஆயிரம் அடிப்பட்டாலும் திருந்தான் (17:10; 19:25). இறைமகனான இயேசுவும் துன்பங்கள் வழியாகவே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபி 5:8). திட்டுதல் கற்பித்தலின் ஒரு பகுதி.

2 - தம் சொற்களின் பலனாக: இந்தக் கூற்றை 12:14; 18:20இலும் காணலாம். அலொன்சோ ஷெக்கெல் என்ற அறிஞர். "வாய் மரத்தின் அல்லது நிலத்தின் கனிகளை உண்கிறது. வாயும் மரம் போன்றதுதான். அது தரும் கனிகளை அது சாப்பிடவேண்டும். மொழி மலடானது அல்ல. அதன் மூலத்திற்கே அது வந்துவிடும். இதற்கு விதிவிலக்கு இல்லை" என்கிறார். நல்ல வார்த்தைகள் நல்லவற்றை விளைவிக்கும், தீயவை தீயதை விளைவிக்கும் (18:21). நெபெஷ் (nepec) என்ற எபிரேயச்சொல் இங்குப் பேராசையைக் குறிக்கும். பேராசை உடையவர் வஞ்சகத்தையும் உணவாகக் கொள்வர். இங்கு வார்த்தைகளல்ல, தகாத ஆசைகளே வஞ்சகத்தை அல்லது வன்முறையை உருவாக்குகிறது.

3 - நாவைக் காப்பவர் உயிரைக் காப்பார்: கட்டுப்பாட்டுடன் வாழ்பவரே யாவரும் விரும்பும் மனிதர் (10:19,21; 21:23). காலம், இடம் அறிந்து எதைப் பேச

வேண்டுமோ அதைப் பேச வேண்டும். நாவைக் காவாதவர் இதைக் கடைபிடிப்பதில்லை.

யாகாவராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு (குறள் 127)

நேர்மையற்ற சொற்கள் வஞ்சகம்மட்டுமல்ல (வச. 2) அது உயிரையே பறித்துவிடும் (3).

4 – வஞ்சகரது ஆசை சமூகத்தைச் சீர்குலைக்கிறது (வச. 2). அவர்கள் வீணாக உண்டு இருப்பதை விழுங்கிடுகிறார்கள். உழைப்பின்றி உண்பது உழைப்போரது உணவைப் பறிப்பதுபோலாகும். ஆனால் ஊக்கமுடையவரோ உண்டு மகிழ்வர் (11:25) அவர்களது கடவுளைத் தேடும் பசியும் நிறைவுபெறும் (திபா 42:1; 63:1)

5 – பொய்யுரை எப்போதும் உண்மைக்குப் புறம்பானது. அது சமூகத்திற்குக் கேடு விளைவிக்கும், உறவைக் கெடுக்கும். பொய்யுரைப்பவரைப் பொய்யன் என்று அழைக்கும்போது அதுவே அவரது பண்பாகிறது. கடவுள் பொய்யுரைப்போரை வெறுக்கிறார் (12:22). மாறாகக் கடவுள் உண்மையில் மகிழ்கிறார். பொய்யுரைப்பவர் அவமானம் அடைகிறார் (19:26; எசா 33:9).

6 – நீதி பாதுகாக்கும்; பாவம் வீழ்த்தும்: நேர்மையாளரின் மாசற்ற வாழ்வு போற்றப்படுகிறது. அவர்கள் இதயம் இறைவனை நாடும். பொல்லார் எல்லாவற்றையும் ஏமாற்றி, திரிபுபடுத்தித் தீமைக்கும் அழிவுக்கும் கூட்டிச் செல்வர். இவர்களிடம் நன்னெறியில்லை. நல்லவருக்குப் பரிசும் பொல்லாருக்குத் தீர்ப்பும் வழங்குபவர் கடவுளே.

7 – இந்த நீதிமொழி புதிராயுள்ளது. இந்தப் புதிர் உண்மைக்கும் உண்மைபோல் காட்சியளிக்கும் செயல்களுக்கும் இடையே உள்ளது. உண்மையில் செல்வந்தர் ஆனால் பார்ப்பதற்கு அவ்வாறில்லை. அதே போல் ஏழை ஆனால் பார்ப்பதற்குச் செல்வராயிருக்கிறார். இதைக் காண்பதும் காட்சியாகிவிடுகிறது. இதில் எந்த அறநெறிநோக்கமும் இல்லை. எனினும் நடிப்பது ஏமாற்றுவதாக இருக்கத் தேவையில்லை. ஆனால் உண்மையை மறைத்து நடிப்பதன் நோக்கம் என்ன என்பது தெரியவேண்டும்.

நடிப்பது (உண்மையை மறைப்பது) கண்டனத்துக்குரியதுதானே. நேரடிப் பொருளைத் தாண்டி என்ன பொருளைத் தரமுடியும்? புதிராகவே இருக்கிறது. ஏழை

சமூக மதிப்பைப் பெறச் செல்வந்தன் என்றாலும் (12:9) ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று செல்வன் ஏழை எனக் காட்டிக் கொண்டாலும் (13:7ஆ) இவ்விருவருமே பொய்யர், பொல்லாதவர். அவர்கள் சமூகத்தையும் கடவுளையும் ஏமாற்றுபவர்கள்.

8 – செல்வந்தன், ஏழை பற்றி இக்கூற்றில் பார்க்கிறோம். ஆனால் யார் நல்லவர் என்பது குறிப்பிடப்படவில்லை. செல்வந்தர் ஆபத்து நேரத்தில் தப்பித்துக்கொள்ளத் தனது செல்வத்தைப் பிணையம் வைக்கின்றார். ஏன் பிணையம் வைக்கவேண்டும்? செல்வந்தரை யாரும் அச்சுறுத்திப் பணம் பறிக்க இயலும். இன்றும் தமிழகத்தில் முதலாளிகளின் பிள்ளைகளைக் கடத்திச் சென்று பணம் பறிப்பதைக் காண்கின்றோம். ஏதாவது இக்கட்டில் மாட்டிக்கொண்டால் அதிலிருந்து வெளிவரப் பணம் கொடுக்கவேண்டும். இந்தச் செல்வன் தவறிழைத்தவன், அச்சுறுத்தப்படுகிறான். ஏழைகளிடம் கொடுக்க ஒன்றுமில்லை. எனவே ஏமாற்றியோ அச்சுறுத்தியோ பணம் வாங்க இயலாது. பணத்தினால் வரும் கவலை அவரிடம் இல்லை. இழப்பதற்கென்று அவர்களிடம் எதுவும் இல்லை.

மேலும் ஏழையோ அச்சுறுத்துதலுக்கு அஞ்சான் (8ஆ) என்பதை, கண்டிக்கப்படுதலை ஒரு பொருட்டாகக் கொள்ளான் (வச. 1ஆ) என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

9 – சான்றோரின் ஒளி: ஒளி என்பது விவிலியத்தில் ஓர் அடையாளச் சின்னம் (4:8-9; சஉ 11:7-8; யோபு 29:3). இது வாழ்வு, நம்பிக்கை, பாதுகாப்பு, வெற்றி போன்ற பல பொருட்களைக் கொண்டுள்ளது (காண் 2சாமு 21:17; எஸ்ரா 8:13; யோபு 18:5-6; 21:17; 22:28; நீமொ 24:20; ஆமோ 5:18) சான்றோரின் ஒளி பெருகும் என்பது மகிழ்ச்சி, அக்களிப்பைக் குறிக்கிறது (காண். 6:23).

பொல்லாரின் விளக்கு: குறைந்த வெளிச்சத்தைக் குறிக்கிறது. அணைக்கப்படும் என்பது அவர்களது இழப்பு, அவநம்பிக்கையைக் குறிக்கிறது.

10 – இறுமாப்புடையவனுக்கும் அறிவுரை கேட்பவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு காட்டப்படுகிறது. இறுமாப்புடையவன் எனக்கெல்லாம் தெரியும், யாருடைய அறிவுரையும் தேவையில்லை என்று மாற்றங்களை ஏற்க மறுப்பான். பிறரது அறிவுரை கேட்பவன் மாற்றங்கள், வளர்ச்சிகள், செழுமையான எண்ணங்களுக்குத் திறந்த மனத்துடன் இருப்பான் (காண். 19:20).

11 – விரைவாக வருவது விரைவில் கரையும்: இது செல்வத்துக்கும் பொருந்தும். அதிக இலாபம் அல்லது செல்வம் பெறுவது பொதுவாக நேரான வழியிலன்று. பிறரை ஏமாற்றியோ, கலப்படம் செய்தோ, அதிக இலாபத்திற்குப் பொருளை விற்றோ சம்பாதித்ததாக இருக்கலாம் (20:21; 28:20ஆ; 22அ). "அர்ப்பனுக்குச் செல்வம் வந்தால் அர்த்த இராத்திரி குடைபிடிப்பான்' என்பது தமிழ்க் கூற்று". வருத்தப்படாது விரைவில் சேர்த்த செல்வம் உடனே சென்றுவிடும். வருத்தப்பட்டுச் சேர்த்தது நிலைக்கும்.

12 – இக்கூற்றை மற்ற நீதிமொழிகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் இது நேர்மையாளர் செல்வம் சாகாவரத்திற்கும் மதிகேடரது செல்வம் மனநோய்க்கும் இட்டுச்செல்லும் என்பதாக அறிஞர்கள் கருதுவர். ஆனால் இங்கே கூறப்படுவது மனநிலை. இதை உளவியல் பார்வையில் நோக்கவேண்டும். எனவே இது எதிர்பார்த்த நம்பிக்கை கலைந்துவிடும்போது வரும் சோர்வை, மனக்கலக்கத்தை, நம்பிக்கை இழப்பைக் கூறுகிறது. ஆனால் எதிர்பார்த்து கிடைப்பது வாழ்வின் மரம் கிடைத்ததுபோலாகும். காலம் தாழ்த்தும் நீதி மறுக்கப்பட்டதாகவே இருக்கும்.

13 – கடவுள் வார்த்தையை எதிர்ப்பவர் அழிவையும் கடைப்பிடிப்பவர் வாழ்வையும் பெறுவர் என்று கூறப்படுகிறது. அறிவுரை அல்லது வார்த்தை இது முதல் முதலாக ஞானிகளின் அறிவுரையைக் குறிக்கிறது. மோசேயின் பத்துக்கட்டளைகளை அல்ல.

14 – இந்தக் கூற்று 14:27ஐப் பிரதிபலிக்கிறது. ஞானிகளின் அறிவுரை (14ஆ) ஆண்டவரின் அச்சமாகக் (14:27ஆ) கருதப்படுகிறது. ஞானிகளின் அறிவுரையைக் கேட்பவர் கடவுளின் கட்டளைகளுக்கு அஞ்சுபவர். இந்த நீதிமொழி நூல் தரும் படிப்பினைகள் வாழ்வின் ஊற்றாக அமைகிறது என்பதை வலியுறுத்துகிறது (14). 'வாழ்வளிக்கும் ஊற்று' ஞானத்திற்குக் கொடுக்கப்படும் ஓர் உயர்ந்த மதிப்பீடு (10:11; 16:22).

15 – நல்லெண்ணத்தை விடுவிக்கும்: நல்லறிவு பெரியயோர்களின், வாழ்வு தரும் மரத்தை நல்கும் ஞானிகளின் போதனையைக் கேட்பதால் வருகிறது. அதைக் கொண்டிருப்பவர் கடவுளுக்கும் சமூகத்திற்கும் உகந்தவராய் இருப்பார். நல்லறிவு நல்வினைகளைக் கொணர்கிறது. நல்லறிவு நேர்மையையும் அதற்கு எதிரான நேர்மையற்ற நிலையையும் குறிக்கிறது. நம்பிக்கை இழப்பவன் அனைத்தும் இழக்கிறான்.

16 – இக்கூற்று கூர்மதியுடையோர் எப்படி பண்போடு நடப்பர் என்பதையும் மூடர் அதற்கெதிரான பண்பை வெளிப்படுத்துவர் என்ற முரண்பாட்டையும் கூறுகிறது. ஞானத்தின் உயர்வைக் குருக்கள் தங்கள் போதனையில் விளக்கத் தவறுவதில்லை (12:23; 5:2).

17 – தூதர் பணி மிக மிக நம்பகமானது, இன்றியமையாதது. (10:26; 25:13; 36:6). இங்கு தூதர் செய்தியைத் திரித்துக் கூறுகிறார், ஏன் சொல்பவரின் கூற்றுக்கு எதிரானதைக் கூறுகிறார். மெய்யான தூதர் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் ஏற்புடையவர். தனது பணிக்கு மேலாகவே தூதனுப்புபவருக்கு இவர் நன்மை புரிகிறார். மற்றவரோ தீமை புரிகிறார்.

18 – நல்லுரையில் கண்டிப்பும் இருக்கும். கண்டித்தலும் அறிவுரையே. அவை நடைமுறையில் பிரிக்க முடியாதவை. கண்டித்தலும் கடிந்துரைத்தலும் இரட்டைக் கிழவியாகப் பாவிக்கலாம் (10:17; 15:5,32) கேட்பவர் புகழ்பெறுவார். கேளாதோர் இகழ்ச்சியும் அவமானமும் அடைவர்.

19 – இக்கூற்றில் இருக்கும் முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் அதிக தொடர்பு இருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால் 13:2; 29:17 வாசித்தால் அது புரியும். இந்த நீதிமொழி முதல் பகுதியில் மனித இயல்பு பற்றிக் கூறுகிறது. ஆனால் பின்பகுதி அறநெறியைப் பயன்படுத்துகிறது. தீமையை வெறுக்காதவன் கடவுளுக்குத் தீட்டானதைச் செய்கிறான். எனவே கடவுளின் அருவருக்கும் செயல் அறநெறி நிலையை எட்டிவிடுகிறது.

20 – ஞானம் பற்றிப் பயிற்சி எடுப்பது (13:1, 24) குறித்துப் பல இடங்களில் பேசப்படுகிறது (காண் வச. 10,14). இதை ஞானிகளோடு பழகுகிறவன் ஞானியாகிறான் என்றும், ஞானம் பெற ஞானியர்களைத் தேடு என்றும் மொழிபெயர்க்கலாம். இங்கே ஞானிகளின் அறிவுரை அதைக் கேட்டு ஞானமுடையோராய் வாழ்வது வலியுறுத்தப்படுகிறது.

21 – தீமை பாவியிடமிருந்து வருகிறது. அது அவனைப் பின்தொடர்கிறது. அது ஆளுருப்பெறுகிறது. அது பாவியைத் துன்புறுத்தும் எதுவாகவும் இருக்கலாம். அது செல்வம் என்று 22ஆ கூறுகிறது. பாவிக்குச் செல்வமும் தொல்லைதரும். நல்லோருக்கு கடவுள் சன்மானம் அளிப்பார்.

22 – நல்லோரை இறப்பு எதுவும் செய்யவியலாது, இறந்த பின்பும் அவரது நல்லவற்றிற்கு ஊறுவிளைவிக்க இயலாது. அது அவரது பின்

தலைமுறையினருக்குச் சென்று சேரும். நல்லவற்றிற்கு நல்லது கிடைக்கும் ஆனால் தீயவருக்குச் செல்வமிருந்தாலும் அது அவரை நழுவவிடும். அவர் அதனால் பயனடைய இயலாது. இதில் இன்னும் சிறப்பு என்னவெனில் தீயவரின் செல்வம் நல்லவரை வந்தடையும் (காண். 28:8; யோபு 27:16-17)

23 - இந்த நீதிமொழி தெளிவாக இல்லை. எனினும் தரிசு நிலம் ஓரளவு உணவுதரும் என்பது சொற்பநிலம், விளைச்சல் அதிகம் தரா நிலம், உழுது பண்படுத்தாத நிலம் என்றெல்லாம் கூறுவர். ஆனால் ஏழைகளின் அந்நிலம் அதிக விளைச்சல் தருகிறது. ஏழைகள், ஏழைகளானது அநியாயத்தாலும் அநியாய அமைப்புகளாலும். ஏழை கடின உழைப்பு உடையவராய் இருக்கிறார். காரணம் கொடியோர், ஏமாற்றுவோர், வதைப்போரால் அந்த உணவும் கிடைக்காது போகலாம்.

24 - தந்தையரின் முதல் கடமையே நல்ல குழந்தைகளைச் சமூகத்துக்குத் தருவது. தன் மகனுக்கு நல்ல அறிவுரை பயிற்சிதந்து சான்றோனாக்க வேண்டும். பிரம்புவைத்து அடித்தல் இன்று ஏற்கப்படுவதில்லை. ஆனால் அன்று அது திருத்தும் ஓர் உபாயம் (10:13). பிள்ளையைத் திருத்த விரும்பும் தந்தைக் கண்டிப்புடன் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அறிவியலும் உளவியலும் வளர்ந்துவிட்ட இக்காலத்திலும் அடித்துத் திருத்தாமலிருந்தாலும் கண்டிப்புடன் வழிநடத்துவது நல்லதே. குழந்தைகளைப் பாதிக்காதவாறு நல்ல வழிமுறைகள் கையாளவேண்டும்.

25 - கடவுளுக்கு அஞ்சுவோருக்கு உணவு கிடைக்கும்: இதைப் பசி தீர்க்கும் உணவு, ஆன்மீக உணவு, உள்ளத்துக்கான உணவு, உணர்வுக்கான உணவு என நாம் பொருள் கொள்ளலாம் (13:2,4,19). தாராள குணம் உணவளிக்கும், தன்னலம் பசி உண்டாக்கும். நல்லுணர்வு நல்லுறவை, சொந்த பந்தங்களை உருவாக்கும்.

செம்பொருள்

இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குவதும் அவர்களிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வதும் இந்த அதிகாரத்தில் இழையோடிவரும் கருத்து (1, 13, 18, 20, 24). வசனங்கள் 1ம் 24ம் குழந்தைகளுக்கு ஊட்டும் கல்வியைத் தொடக்கமும் முடிவுமாகக் கொண்டுள்ளன.

வான் லூவன் என்ற அறிஞர் நீதிமொழிகளின் ஆழமான கருப்பொருள் குடும்பத்திலும் சமூகத்திலும் காட்டப்படும் புதிரான 'கடின அன்பு' ('tough love') என்கிறார். அறிவுரை தருகையில் அரவணைப்பும் தேவை, கண்டித்துத் திருத்துவதும் தேவை. எனினும் மனிதத்தன்மையில்லா கொடிய தண்டனை கேள்விக்குள்ளாகிறது. மேலும் உண்மை அன்போடும் அதிகாரத்தோடும் தண்டனை வழங்கத் தவறுவது தவறுவோரை மனிதனாக மதிக்காத குற்றத்திற்கு உள்ளாக நேரிடும் என்பதையும் மறக்கக்கூடாது. எனினும் தண்டனை கொடியதாக இல்லாமல் இருப்பது மிகமிகத் தேவை.

6. ஞானிகளும் அறிவிலிகளும் (14:1–35)

14:1 ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர்; அறிவற்றவரோ தம் கைகளைக் கொண்டே அதை அழித்துவிடுகின்றனர். 2 நேர்மையாக நடப்பவர் ஆண்டவரிடம் அச்சம் கொள்வார்; நெறி தவறி நடப்பவன் அவரைப் பழிப்பான். 3 மூடனது இறுமாப்பு அவனை மிகுதியாகப் பேசச் செய்யும்; ஞானமுள்ளவருடைய சொற்களோ அவரைப் பாதுகாக்கும். 4 உழவு மாடுகள் இல்லையேல் விளைச்சலும் இல்லை; வலிமைவாய்ந்த காளைகள் மிகுந்த விளைச்சலை உண்டாக்கும். 5 வாக்குப் பிறழாத சாட்சி பொய்யுரையான்; பொய்ச்சாட்சியோ மூச்சுக்கு மூச்சு பொய் பேசுவான். 6 ஒழுங்கீனன் ஞானத்தைப் பெற முயலுவான்; ஆனால் அதை அடையான்; விவேகமுள்ளவரோ அறிவை எளிதில் பெறுவார். 7 மூடனைவிட்டு விலகிச் செல்; அறிவுடைய பேச்சு அவனிடம் ஏது? 8 விவேகமுள்ளவரது ஞானம் அவரை நேர்வழியில் நடத்தும்; மதிகேடர் மடமை அவனை ஏமாறச் செய்யும். 9 பாவக்கழுவாய் தேடுவதை மூடர் ஏளனம் செய்வர்; மூடரின் இல்லத்தில் குற்றப்பழி தங்கும்; நேர்மையாளரின் இல்லத்தில் மகிழ்ச்சி தவழும். 10 ஒருவரது இன்பமோ, துன்பமோ அது அவருடையதே; வேறெவரும் அதைத் துய்க்க இயலாது. 11 பொல்லாரின் குடி வேரோடழியும்; நேர்மையாளரின் குடும்பம் தழைத்தோங்கும். 12 ஒரு பாதை ஒருவருக்கு நல்வழி போலத் தோன்றலாம்; முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகிவிடும். 13 நகைப்பிலும் துயரமுண்டு; மகிழ்ச்சியை அடுத்து வருத்தமும் உண்டு. 14 உண்மையற்றவர் தம் நடத்தையின் விளைவைத் துய்ப்பார்; நல்லவர் தம் செயல்களின் பயனை அடைவார். 15 பேதை தன் காதில் விழும் எதையும் நம்புவார்; விவேகமுள்ளவரோ நேர்வழி கண்டு அவ்வழி செல்வார். 16 ஞானமுள்ளவர் விழிப்புடையவர்; தீமையை விட்டு விலகுவர். மதிகேடரோ மடத்துணிச்சலுள்ளவர்; எதிலும் பாய்வார். 17 எளிதில் சினங்கொள்பவர் மதிகேடானதைச் செய்வார்; விவேகமுள்ளவரோ பொறுமையோடிருப்பார். 18 பேதையர் அறியாமையுடையோர்; விவேகமுள்ளவர்கள் சூடும் மணிமுடி அறிவாகும். 19 தீயவர் நல்லார்முன் பணிவர்; பொல்லார் சான்றோரின் வாயிற்படியில் காத்து நிற்பர். 20 ஓர் ஏழையை அடுத்திருப்போர் அவரை அருவருப்பானவர் எனக் கருதுவர்; செல்வருக்கோ நண்பர் பலர் இருப்பர். 21 அடுத்திருப்பாரை இகழ்தல் பாவமாகும்; ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார். 22 தீய சூழ்ச்சி செய்பவர் தவறிழைப்பர் அன்றோ? நலம் தரும் திட்டம் வகுப்போர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர். 23 கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும்;

வெறும் பேச்சினால் வருவது வறுமையே. 24 ஞானிகளுக்கு அவர்களது விவேகமே மணிமுடி; மதிகேடருக்கு அவர்களது மடமைதான் பூமாலை. 25 உண்மைச் சான்று உயிரைக் காப்பாற்றும்; பொய்ச் சான்று ஏமாற்றத்தையே தரும். 26 ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஒருவருக்குத் திடநம்பிக்கை அளிக்கும்; அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு அடைக்கலமாயிருப்பார். 27 ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் வாழ்வளிக்கும் ஊற்றாகும்; சாவை விளைவிக்கும் கண்ணிகளுக்கு அது மனிதரைத் தப்புவிக்கும். 28 மக்கள் தொகை உயர, மன்னரின் மாண்பும் உயரும்; குடி மக்கள் குறைய, கோமகனும் வீழ்வான். 29 பொறுமையுள்ளவர் மெய்யறிவாளர்; எளிதில் சினங்கொள்பவர் தம் மடமையை வெளிப்படுத்துவார். 30 மன அமைதி உடல் நலம் தரும்; சின வெறியோ எலும்புருக்கியாகும். 31 ஏழையை ஒடுக்கிறவர் அவரை உண்டாக்கினவரை இகழ்கிறார்; வறியவருக்கு இரங்குகிறவர் அவரைப் போற்றுகிறார். 32 பொல்லார் தம் தீவினையால் வீழ்ச்சியுறுவார்; கடவுளுக்கு அஞ்சி நடப்பவர் சாகும்போதும் தம் நேர்மையைப் புகலிடமாகக் கொள்வார். 33 விவேகமுள்ளவர் மனத்தில் ஞானம் குடிகொள்ளும்; மதிகேடரிடம் அதற்கு இடமேயில்லை. 34 நேர்மையுள்ள நாடு மேன்மை அடையும்; பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும். 35 கூர்மதியுள்ள பணியாளனுக்கு அரசர் ஆதரவு காட்டுவார்; தமக்கு இழிவு வருவிப்பவன்மீது சீற்றங்கொள்வார்.

பின்புலம்

இந்த அதிகாரம் ஞானிகளையும் அறிவிலிகளையும் தனது கருப்பொருளாக எடுத்துக்கொள்கிறது. அறிவிலிகளின் இறுமாப்பும் தற்பெருமையும் பற்றி இங்குக் காண்கிறோம். ஞானிகளின் கூற்றுகள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்; அறிவிலிகள் தங்களுக்குத் தாங்களே குழப்பத்தையும் வெறுப்பையும் தேடிக்கொள்வர் (காண். வச 6, 7, 16, 24).

மனிதாபிமானம் பெரிதாகப் போற்றப்படுகிறது. ஏழைகள் மீது இரக்கம் கொள்பவர் பேறுபெற்றவர். கடவுளை மதிப்பவரும் இத்தகையவர்களே (21) ஏழையைத் துன்புறுத்துபவன் அவரைப் படைத்தவரை நிந்திக்கிறான் என்ற சிறந்த வரிகளின் சொந்தக்காரார் இந்த ஆசிரியர்.

ஞான ஆசிரியரின் அறிவுரை வாழ்வின் ஊற்று. அது சாவின் தளைகளிலிருந்து மீட்கிறது. ஞானியின் அறிவுரை யாவேயின் சட்டமாகக் கருதப்படுகிறது. ஏழைகளின் அவல நிலையைப் பரிசோதித்துப் பார்க்கும் அதிகாரமாக அமைகிறது.

ஞானமுள்ளபெண்ணுக்கும் அறிவிலியான பெண்ணுக்குமுள்ள வேறுபாடுகளை தனது நூல் முழுவதும் ஆசிரியர் தவழ விடுகிறார்.

சொல்விளக்கம்

1 - ஞானமுள்ள பெண்கள்: ஞானமுள்ள பெண்களிடம் பல சிறப்புப் பண்புகள் உண்டு ஞானச் சீமாட்டி கட்டியெழுப்புவாள், சுவையான உணவு தருவாள் (9:2), கனிவு அவளை அணிசெய்யும் (11:16), கணவனுக்கு அவள் மகுடமாவாள் (12:4). ஞானமுள்ள பெண் குடும்பக் குலவிளக்காகி இறையச்சத்தில் வாழத்துடிப்பாள் (31:10-31). அவள் தனது குடும்பப் பொருளாதாரத்தையும், அகத்தில் ஆன்மிகத்தையும் தூக்கிப்பிடிப்பாள். அவள் சமூக நலன்களில், பாரம்பரிய மதிப்பீடுகளில் பெருமையுடன் செயல்படுவாள். அறிவற்றவள் தனது சீர்குலைந்த வாழ்வால் (5:23) அதை அழித்துவிடுவாள். ஞானமற்ற பெண் வீடுகள் கட்ட இயலுமா? தம் முன்னோரிடமிருந்து பெற்றதை, கடவுள் தம் அருளால் வழங்கியதை அவள் அழித்துவிடுகிறாள். நல்ல வீடு எப்போதும் நல்ல மனையாளோடு தொடர்புடையது (ரபிக்கள் கூற்று). குடும்பத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பெண்களின் கையிலே.

2 - ஆண்டவரிடம் அச்சம்: முதன்மையிடம் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சத்திற்கா அல்லது நேர்மையாக நடப்பவருக்கா? நேர்மையாளராயிருந்ததால் ஆண்டவருக்கு அஞ்சுகிறாரா அல்லது ஆண்டவருக்கு அஞ்சுவதால் நேர்மையாளராய் உள்ளாரா? நல்ல மரம் நல்ல கனி தருவதுபோல் ஆண்டவருக்கு அஞ்சுபவர்தாம் நேர்மையாளராய் இருப்பர். (காண். 16:6; 14:2-27). நேர்மையற்றவரின் கடவுள் பக்தியை, வழிபாடுகளை, சடங்குகளை நிறைவேற்றுவதாலல்ல நன்னடத்தையால் அறியலாம்.

3 - மூடனின் இறுமாப்பு: மூடனது நாவு ஒரு கம்பிபோன்றது. அதைத் தண்டனை தரும் கருவியாகவோ பேசுபவரின் இறுமாப்பாகவோ பொருள்கொள்ளலாம். மூடரின் இறுமாப்பு அவரைப் புண்படுத்தும்.

4 - உழவு மாடுகள் இல்லையேல்: தொழுவத்தில் காளைமாடுகள் இல்லையெனில் அதைக் கவனிக்க வேண்டுமென்ற கவலையில்லை. செலவும் இல்லை. இதை மறுக்கிறது. இங்குள்ள கூற்று (4). காளை மாடுகள் இல்லாது அதிக விளைச்சலுக்குச் சாத்தியமில்லை (12:10; 27:23-27). உழவுத்தொழிலில் விலங்குகள் பங்கு முக்கியமானது. ஏனெனில் அவையில்லாமல் நல்ல விளைச்சல் இல்லை.

5 – இக்கூற்று சாட்சியம் கூறுவதைப் பற்றி உரைக்கிறது. (விப 20:16; இச 19:18). நம்பிக்கையான, உண்மையுள்ள சாட்சி (13:17) பொய் கூறான். பொய் சாட்சியோ பொய் கூறிச் சண்டையை மூட்டிவிடுவான். கூலிப்படைகளாக மாறி உண்மையைத் திரிவுபடுத்துவோரை நம் நீதிமன்றங்களிலும் பஞ்சாயத்துகளிலும் காண்கிறோம்.

6 – ஒழுங்கீனன் ஞானம் பெற இயலாது. ஏனெனில் அவன் இறுமாப்பும் நல்லவற்றை கேவலமாக நோக்கும் மனதும் கொண்டவன். அவனிடம் தாழ்ச்சி இல்லை (11:2), கடவுளச்சமில்லை, நன்னெறியில்லை. ஞானம் அவனிடம் ஒட்டாது. அவன் ஞானத்தைத் தேடுகிறான் என்பதே ஒரு வினோதம். அது அவனுக்கு எட்டாத கனி. நல்லோர் நேரிய உள்ளத்தோடும் தாழ்ச்சியான மனதோடும் கடவுளைத் தேடுவதால் அது எளிதாகிவிடுகிறது.

7 – இது ஒரு கூர்மையான அறிவுரை. எதிர்மறையணி இங்கில்லை; இது ஞானியின் ஒரு சிறந்த அனுபவம். மூடரிடமிருந்து அறிவு பெற இயலாது. மூடர்களைத் தவிர்ப்பது அறியாமையை விலக்குவதாகும்.

8 – ஞானம் என்பது ஒருவர் தான் நடக்கவேண்டிய பாதையை விவேகத்தோடும் தொலைநோக்குப் பார்வையோடும் கண்டுபிடிப்பது (15). எனினும் ஞானிக்கும் தன் குறைபாடுகள் உண்டு (12). எது எப்படியெனினும் மூடரின் மதிக்கேட்டை விட ஞானி காட்டும் வழியேமேல். மூடரின் பாதை ஏமாற்றம் நிறைந்தது. மூடரின் மதிகேடும் ஞானிகளின் விவேகமும் முரண்பாட்டைக் கூறுகிறது.

9 – பாவக் கழுவாய்: ஒரு வழிபாட்டுச் சொல் நேர்மையாளர் இல்லத்தில் வந்து தங்கும். மகிழ்ச்சி கடவுள் அருள்வது. எனவே மூடர் செய்யும் ஏளனம் கடவுள் மீதும் அவர் நேர்மையாளர் மீதும் காட்டும் மூடத்தனமாகும். மூடரின் ஏளனமும் கடவுள் நேர்மையாளருக்குக் கொடுக்கும் மகிழ்ச்சியும் முரணாகக் காட்டப்படுகிறது.

10 – மனித இதயத்தில் இருக்கும் மகிழ்ச்சியையோ துயரத்தையோ யாரும் நிறைவாகக் கண்டுபிடிக்க முடிவதில்லை. சில உள்ளுணர்வுகள் வெளிப்படுத்தபட முடியாதவை. சிலவற்றைக் கண்டுபிடித்தாலும் அவை ஓரளவே. அது கடவுளுக்கே வெளிச்சம் (18:11). ஒருவர் தன்னை அறிவதைவிட கடவுளே எல்லாம் அறிவார் (புனித அகுஸ்தின்). பாஸ்கால் என்ற பிரஞ்சு அறிஞரும் உள்ளத்தில் காரணங்கள் உள்ளன அவற்றை சிந்தனையால் அறிய முடியாது என்கிறார்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா! என்ற பூங்குன்றனார் கூற்றும் சிந்திக்க ஏற்றது.

11 – அழியும் குடும்பமும் தழைக்கும் குடும்பமும் முரண்பாடாகக் காட்டப்படுகின்றன: குடும்பம் என்பது கூடாரம், அதுவும் நாடோடிகள் அமைக்கும் கூடாரத்தைச் சுட்டும். குடியிருப்போரது கூடாரம் பலமாக அமைக்கப்பட்டிருக்கும். கூடாரம் தழைத்தோங்கும் என்ற உருவகம் வினோதமாக உள்ளது. ஆனால் இங்கே கூடாரம் அங்குக் குடியிருக்கும் குடிகளைக் குறிக்கும். நிலைத்து நிற்கமுடியாத கூடாரங்கள் நேர்மையாளரது சந்ததி வழியாகத் தழைத்து நிற்பதை அறிவுறுத்துகிறது (யோபு 14:19; திபா 1:3; 92:12-14; யோவா 15:1-17).

12 – இந்தக் கூற்று 16:25இல் மறுபடியும் கூறப்படுகிறது. மனிதன் காட்டும் வழி தெளிவாகவும் சரியாகவும் இருப்பதாகவும் தோன்றும். ஆனால் அது தவறாகவும் விவேகம் இல்லாததாகவும் இறப்பிற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கலாம். இறப்பு என்பது இக்கட்டுகள், இளமையில் சாவு போன்றவற்றைக் குறிக்கிறது. ஞானம் காட்டும் வழியிலும் தவறுகள் உண்டு என்பதைக் காண்கிறோம். மனித வாழ்வில் எதையும் துல்லியமாகக் கணிக்கமுடியாது என்பதை ஞானிகள் உணர்வார்கள். ஞானிகளின் இலக்கு குறைவானதுதான். சிலவை தவறினும் பலவகைகளில் வெற்றி என்பது ஞானம் தரும் உறுதி.

13 – இதுவும் ஓர் உளவியல் கூற்று. முன்னைய (12) கூற்று கூறுவதுபோல் இறுதி தொடக்கத்தைவிட வேறுபாடானதாக இருக்கலாம். எதிர்பாராததை இக்கூற்றுச் சொல்கிறது. சிரிப்பிலும் அழுகை மறைந்திருக்கும். இது தீர்க்கமான கூற்றல்ல. மாறாகத் தன் சொந்த உணர்வுகள் உறுதிப்பாடற்ற நிலையில் இருப்பதைக் கூறுகிறது. வெளிப்படுத்தும் உணர்ச்சி உள்ளிருப்பதைப் பிரதிபலிப்பதில்லை என்பது தெளிவாகிறது. எனினும் காரணங்கள் கூறப்படவில்லை. காண்பவை ஏமாற்றலாம்.

14 – வினைப்பயன் கோட்பாடு கூறப்படுகிறது. இதுவே இறைப்பற்றுடையோரின் நம்பிக்கையாயினும் இதைத் தாண்டியவை வசனங்கள் 12, 13இல் கூறப்படுகின்றன.

15 – எதையும் உடனே நம்புவதை எச்சரிக்கிறது இக்கூற்று. கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் போதாது. தீர விசாரிப்பதுவே நலந்தரும் வழி. உண்மை நாம் கேட்பதற்கும் காண்பதற்கும் மாறாக இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து எடுக்கும் முடிவு நலம்பயக்கும்.

16 - ஞானமுள்ளவர் விழிப்புடையவராய் இருப்பர். பலவற்றிலும் எச்சரிக்கையாயிருப்பர். அவர்கள் எப்போதும் தீமையை விலக்குவதில் கவனமாய் இருப்பர். மதிகேடர் இறைவனை எதிர்க்கவும் துணிச்சலுடையவர் தம்மீது அலாதியான நம்பிக்கை வைப்பதால் அது உதவுவதில்லை. இவர்களது தவறு பெரிது.

17 - எளிதில் சினங்கொள்பவர் யார்: கட்டுப்பாடு இல்லாதவர், தன்னை அடக்க இயலாதவர். பொறுமை இழப்பவர். அதிகமாகத் தனது உணர்வுகளைக் கொட்டுபவர். இவர் தனக்கும் தனது சமூகத்திற்கும் அழிவு தேடித் தருபவர்.

பொறுமை: அனைத்து இலக்கியங்களிலும் சமயங்களிலும் போதிக்கப்படுகிறது.

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப்படும் (குறள் 154)

கொதிக்கும் கொதிகலன் தண்ணீரைத் தன்மீதே கொட்டிவிடும். மேலும் சினம் கொடூரமானது (27:4), வம்பை உண்டாக்குவது (20:33), அது உடனே சரிசெய்யப்படவேண்டும் (15:1;29:8, மேலும் காண். திபா 37:8; நீமொ 16:32; சஉ 7:9; யோபு 36:18).

18 - பேதையர் என்பவர் தீயதைத் திட்டமிடுபவர். இவர்கள் அறியாமையை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். அது அவர்களின் இழுக்காகிவிடுகிறது. உரிமைச் சொத்து ஒருவரின் பெருமை. ஆனால் இங்கு ஏளனமாகக் கருதப்படுகிறது (11:29). விவேகமுடையோர் அறிவெனும் மகுடம் பெறுவர்.

19 - இது நேர்மறை இணையணி. இது ஞானிகள் மூடரை வெற்றிகொள்வர் என்ற பாரம்பரியக் கருத்தை நிலைநாட்டுகிறது. வாயில்படியில் காத்திருப்பது மதிப்பும் வணக்கமும் பெறுவதைச் சுட்டுகிறது. பணிவர் என்பது கையேந்துதலைக் காட்டுகிறது.

20 - இக்கூற்று செல்வம் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகிறது என்று கூறுகிறது (காண். 10:15; 19:4-7). வசதிபடைத்தோர் ஏழைகளை ஆணவத்தோடு பார்ப்பதும், விருப்பு வெறுப்புமின்றி அடிக்கடி அவர்களை வெறுப்பதும் வெகு எளிது. இது நிராகரிப்பைக் கைவிட்டுவிடுதலை எடுத்துரைக்கிறது. செல்வரை ஒருவர் நேசிப்பதும் எளிதானது. செல்வரை நேசிப்பதால் நிறைய சலுகைகள் கிடைக்க ஏதுவாயிருக்கும் (சீரா 6:10-12; 13:21-24). பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை.

21 - ஏழைகள் மட்டில் நமது மனப்பான்மை என்ன? இக்கூற்று மனிதாபிமானத்தைப் போற்றுகிறது. ஏழையென்று இகழ்வது பாவம் என்னும் இக்கூற்று எந்த அளவுக்கு ஞானியின் கூர்ந்த நன்னெறியை வலியுறுத்துகின்றனர் என்பதைக் கூறுகிறது. உள்ளும் புறமும் கனிவு காட்டவேண்டும். அத்தகையோர் ஆசிர் பெறுவர் (14:31; 17:5; 19:17). உன்னைப்போல் உன் அயலானை நேசி (லேவி 19:18; மத் 22:39-40; உரோ 13:9-10).

22 – பிறருக்கு இன்னல் செய்யச் சூழ்ச்சி செய்பவர் தவறுமட்டுமல்ல அந்த சூழ்ச்சியில் தாமே மடிவர் என்கிறது தமிழ் மரபு (பிறர்க்கு இன்னா முற்பகன் செய்யின் தமக்கு இன்னா / பிற்பகல் தானே வரும் (குறள் 319). இது கேள்வியாக அமைவதால் முன்னாலுள்ள வசனங்களோடு தொடர்புடையதைக் காணலாம், அதாவது ஏழைகளை மதியா மனப்பான்மை ஒரு தொடரும் நிகழ்வு.

நல்ல திட்டம் வகுப்போர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராவர். இதை ஒரு பொருள் இருசொல் எனலாம். மேலும் கடவுளிடமிருந்தும் மனிதரிடமிருந்தும் இந்த ஆசிர் வரும்.

23 - கடும் உழைப்பும்: நல்லதைத் திட்டமிடுவோர் உண்மையாக உழைத்துப் பயன்பெறுவர் (10:4-5 எசா 49:4). கடின உழைப்பு நல்ல வருமானம் தரும். எனவே நல்ல வாழ்க்கை வாழலாம். இது ஏழைகளுக்கு ஒரு பாடம். ஏழை ஏழையென்று சொல்லி உழைக்காமலிருப்பது தவறு. உழைப்பு இருந்தால் ஏழ்மை மறையும்.

24 – மணிமுடி என்பது மதிப்பை மட்டுமல்ல செல்வத்தையும் சுட்டுகிறது. தந்தையின் அறிவுரை நகைகள் (ஆபரணங்கள்) எனக் காண்கிறோம். (1:9; காண் 8:18). ஞானிகளுக்குச் செல்வமும் வளமையும் உண்டு. மாறாக மடமை தான் மதிகெட்டவருக்குச் சன்மானம்.

25 – உண்மைச் சான்று: இக்கூற்று வசனம் 5ஐ பிரதிபலிக்கிறது. மேலும் 19:5,9 வசனங்களிலும் இக்கூற்றிலுள்ள சொற்களைக் காணலாம். உண்மைச் சான்று மாசற்ற மனிதனின் உயிரைக்காக்கும் (25), அச்சமில்லா உறுதியான மனம் உள்ளதால் உண்மை சாட்சி உண்மையைத் தவிர எதையும் பேசுவதில்லை. நல்ல தீர்ப்பு வழங்க நல்ல சாட்சியங்கள் தேவை (நாபோத் 1அர 25).

26 – "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம்" இந்நூலின் மையக் கூற்றாக அமைகிறது. கடவுளை நம்புவோர் கைவிடப்படார். கடவுளை நம்புவோர் சாவின்

கண்ணியிலிருந்து பாதுகாக்கப்படுவர் (27); இன்னொருவருக்கு அஞ்சத் தேவையில்லை (29:25). கடவுளுக்கு ஏற்புடைய வாழ்வு இவ்வுலக வாழ்வைத் தாண்டிய பயனைப் பெறுகிறது. குழந்தைகளுக்கும் அவர் நல்ல எடுத்துக்காட்டாயிருந்து உதவிடுவார். நேர்மையாளரின் குழந்தைகள் பேறுபெற்றோர் (20:7ஆ).

27 - இக்கூற்றும் 13:14இல் வரும் கூற்றும் ஒத்தவையாக உள்ளன. ஞானிகளின் கூற்று ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமாகக் கருதப்படுகிறது. ஞானமும் யாவே பக்தியும் ஓர் அருமையான கலவை. இரண்டும் ஒன்றே. இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து பாரம்பரியத்தில் நுழைந்துவிட்டன எனலாம். ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் உண்மை ஞானமும் பிரிக்க இயலாதது. கடவுள் பற்று சாவிலிருந்து மீட்டு நிறை வாழ்வுக்கு இட்டுச்செல்லும்.

28 - இது அரசர்கள் பற்றிய இரண்டு கூற்றுகளில் முதலானது (35). மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற இக்காலத்தில் இக்கூற்று ஏற்பதற்குக் கடினமாக இருக்கலாம். ஆனால் கிமு 9-5 நூற்றாண்டுகளில் மக்கள்தொகை வைத்து அரசர்களது அருமை பெருமை கணிக்கப்பட்டது. மக்களிடமிருந்து அரசு ஆற்றல் பெறுகிறது எனும்போது அது மக்கள் தொகையைக் குறிக்கிறது.

நீமொ 30:27 வெட்டுக்கிளிகள் அரசன் இல்லாமலே தங்களது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வதால் அரசர்கள் இன்றியமையாதவர்கள் என்பது கேள்விக்குறியாகிவிடுகிறது.

29 – பொறுமை எனும் பண்பு ஞானிகளுக்கு வலியுறுத்தப்படுகிறது (19:11). பொறுமை கடவுளின் பண்பு (விப 34:6-7; எண் 14:18; 2குறி 30:9; எரே 15:15). 'பொறுத்தார் பூமி ஆள்வார்' இது உலகப் பழமொழி, எல்லாருக்கும் அது பொருந்தும். குறள்கள் (151-160) பொறையுடமையில். பொறுமையின் மேன்மைபற்றிக் கூறுகின்றன.

30 - நீதிமொழிகள் 29,30 இக் கருத்துக்கு ஒத்துப்போகிறது. மன அமைதியும் சினவெறியும் ஒத்துப்போகா. அமைதியாய் வாழ்பவர் உடல் நலனை சுவைப்பர். சினவெறி மனிதனைக் கொல்லும் நஞ்சு. (உடல் உள்ள தொடர்புகளை, காண் வச 10, 13). வாழ்வுக்கு அடித்தளமும் ஆதாரமும் இதயம். இதயத்தின்

துடிப்பைப் பொறுத்தே முழு உடல்வாழ்வும் இயங்குகிறது. சினம் உள்ளத்தையும் உடலையும் ஏன் எலும்புகளையும் புற்று நோய்போல் கொன்றுவிடும்.

31 – நீதிமொழி ஏழைகளை எப்படிக் கவனிக்கவேண்டுமென்று பேசுகிறது (17:5; 22:2; 19:17). ஏழைகளில் தன்னை மறைத்துக்கொள்ளும் கடவுளை இங்குக் காண்கிறோம். ஏழைகளின் மாண்பை, மதிப்பை, ஆற்றலை அவமதிப்பது கடவுளுக்கு எதிராகச் செயல்படுவதாகும், அது தெய்வ நிந்தை. மனிதன் கடவுளின் சாயல். ஏழையென்றாலும் கடவுளின் மாண்பும் அழகும் அவனிடம் உண்டு. ஏனெனில் அவரே அவனைப் படைத்தவர். ஏழைகளுக்குக் காட்டவேண்டிய தாராளம் பற்றி (காண் 14:21,31; 19:17; 22:9; 28:27) நீதிமொழிகள் கூறுகின்றன.

32 – கடவுள் தமக்கு அஞ்சி நடப்போருக்கு எப்படி பாதுகாப்பு அளிப்பார் என்பது தெளிவில்லை. நேர்மையாளர் தனது நேர்மைத் தனத்தில் நம்பிக்கை வைப்பது இறுமாப்பல்ல. நம்பிக்கையைக் காப்பதும் கடவுளுக்கு உண்மையாக இருப்பதும் ஞானிகளின் பண்பாகக் கூறப்படுகிறது (யோபு). நேர்மையில் கொள்ளும் நம்பிக்கை கடவுளின் உதவியையும் அவர் கண்டிப்பாகப் பதிலளிப்பார் என்பதையும் காட்டுகிறது.

33 – ஞானத்திற்கும் மதிகேடருக்கும் முடிச்சுப் போட இயலாது. மதிகேடருக்கு ஞானம் பற்றிய அறிவு இருக்குமா? என்று மொழிபெயர்ப்புகள் சந்தேகங்களை எழுப்புகின்றன. ஆனால் நீதிமொழி (33) அதைத் தெளிவுபடுத்துவதில்லை. எதிர்மறை இணையணியும் கேள்விக்குள்ளாக்குகிறது. ஞானம் மதிகேடரிடம் தங்குவதில்லை என்று மொழிபெயர்ப்பது சரியானது. இதைத் தமிழ் மொழிபெயர்ப்பில் காணமுடிகிறது.

34 – தனிப்பட்ட உறவை எழுதிய ஆசிரியர் இப்போது சமூகத்திற்குச் சொல்கிறார். ஞானி தனது சமூகம்பற்றி நினைத்தாலும் இது எல்லாருக்கும் பொருந்தும் (காண் 8:15-16). இந்த நீதிமொழி வச 28டோடு தொடர்புடையது. மக்கள் தொகை மட்டுமன்று நீதியும் நேர்மையும், நாட்டை அலங்கரிக்கும் பண்புகள் (16:12). நீதியும் நேர்மையுமற்ற நாடுகளின் நிலையைச் சொல்லிமாளாது.

35 – அரசர் பொறுப்புப் பெரிது. நேர்மையும் திறமையும் உடைய ஆட்சி நிலவ நல்ல பணியாளர்கள் அவருக்கு வேண்டும். பணியாளர்கள் நேர்மை,திறமை, உண்மையுள்ளவர்களாக இருப்பின் நல்லாட்சியை நிறுவ இயலும். எனவே அரசர் பணியாளர்களை விவேகமாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

செம்பொருள்

இந்த அதிகாரம் ஒருசில உண்மைகளை வெளிப்படையாக ஒத்துக் கொள்கிறது. 14ஆம் கூற்று மனிதத் திட்டங்கள் அவர்கள் எடுக்கும் முடிவுகள் நல்லவையாகத் தோன்றினும் அவை இறுதியில் தவறாகலாம், ஏன் சாவுக்கும் அவை இட்டுச்செல்லலாம். மனித முடிவுகள் ஆசிரியர் தனது நூலில் கோர்த்து எழுதிய அனைத்தையும் குறிக்கும். ஞானிகள் தங்களது ஞானமும் ஒரு வரம்புக்குள்தான் உள்ளது என்பதை ஒத்துக்கொள்கின்றனர்.

ஞானிகள் வாழ்வின் எதார்த்தங்களை எளிய முறையில் நோக்கினும் எப்படி மக்களை நடத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தனர். எனினும் மனிதத் தடுமாற்றங்கள், வாழ்வில் உள்ள நெருக்கடியான சூழ்நிலைகள் அவர்களைச் சிக்கலுக்குள்ளாக்கின. எந்த ஞானக் கூற்றும் சில நெளிவு சுளிவுகளில் சிக்கிக்கொள்கிறது. கூற்றுகளிடையே சில நேரங்களில் வேறுபாடுகள் இருப்பதால் இதுதான் சரியான கூற்று என்பதில் சிக்கலுள்ளது.

ஆண்டவரிடம் அச்சம் உடையவர் நேர்மையாளர் எனக் கூறப்படுகிறார் (14:2). ஞானிகளோடு சான்றாண்மையை இணைத்துக் கூறுவது ஏற்றக்கொள்ளப்பட்ட ஒன்று (காண் வச. 2, 26). மேலும் அச்சமும் நம்பிக்கையும் (26) இணைந்து வருவதால் தவறாகப் புரிதல் நீக்கப்படுகிறது. இணைச்சட்டம் கூறும் அச்சம் (காண் இச 10:12,20) அன்பாகவும் கீழ்ப்படிதலாகவும் மலர்வதைக் காண்கிறோம். ஞானிகளின் அறிவுரைகளுக்குச் சிறந்த மதிப்புக் கொடுக்கப்படுகின்றது (14:27; 13:14)

7. வாழ்க்கைப் பண்புகள் (15:1-35)

15:1 கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும்; கடுஞ்சொல்லோ சினத்தை
எழுப்பும். 2 ஞானமுள்ளவர்களின் நா அறிவை வழங்கும்; மதிகேடரின் வாயோ மடமையை
வெளியிடும். 3 ஆண்டவருடைய கண்கள் எங்கும் நோக்கும்; நல்லாரையும் பார்க்கும்.
பொல்லாரையும் பார்க்கும். 4 சாந்தப்படுத்தும் சொல், வாழ்வளிக்கும் மரம் போன்றது;
வஞ்சகப் பேச்சாலோ மனமுடைந்து போகும். 5 தன் தந்தையின் நல்லுரையைப் புறக்கணிப்பவர்
மூடர்; கண்டிப்புரையை ஏற்பவர் விவேகமுள்ளவர். 6 நல்லாரின் வீட்டில் நிறைசெல்வம்
நிலைத்திருக்கும்; பொல்லாரின் வருவாயால் விளைவது தொல்லையே. 7 ஞானிகளின்
பேச்சு அறிவை வளர்க்கும் தன்மையது; மதிகேடரின் உள்ளம் அத்தகையதல்ல. 8
பொல்லார் செலுத்தும் பலி ஆண்டவருக்கு அருவருப்பைத் தரும்; நேர்மையானவர்களின்
மன்றாட்டு அவருக்கு உகந்ததாயிருக்கும். 9 பொல்லாரின் செயல்கள் ஆண்டவருக்கு

அருவருப்பு; நீதியைப் பின்பற்றுவோரிடம் அவர் அன்புகொள்கிறார். 10 நெறி தவறிச் செல்பவருக்குத் தண்டனை கடுமையாயிருக்கும்; கண்டிப்பை வெறுப்பவர் மரணம் அடைவார். 11 பாதாளமும் படுகுழியுமே ஆண்டவர் பார்வையில் இருக்க, மனிதரின் உள்ளம் அவர் பார்வைக்கு மறைவாயிருக்குமா? 12 ஏளனம் செய்வோர் தம்மைக் கடிந்து கொள்பவரை விரும்புவார்; ஞானமுள்ளவரிடம் செல்லவும் மாட்டார்; 13 அகமகிழ்ச்சியால் முகம் மலரும்; மனத்துயரால் உள்ளம் உடையும். 14 விவேகமுள்ளவர் மனம் அறிவை நாடும்; மதிகேடர் வாய்க்கு மடமையே உணவு. 15 ஒடுக்கப்பட்டோருக்கு ஒவ்வொரு நாளும் தொல்லை நாளே; மனமகிழ்ச்சி உள்ளவருக்கோ எல்லா நாள்களும் விருந்து நாள்களே. 16 பெருஞ்செல்வமும் அதனோடு கவலையும் இருப்பதைவிட, சிறுதொகையும் அதனோடு ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் இருப்பதே மேல். 17 பகை நெஞ்சம் கொண்டோர் படைக்கும் நல்ல இறைச்சி உணவைவிட, அன்புள்ளம் உடையவர் அளிக்கும் மரக்கறி உணவே மேல். 18 எளிதில் சினங்கொள்பவர் சண்டையை மூட்டுவார்; பொறுமை உடையவர் சண்டையைத் தீர்த்து வைப்பார். 19 சோம்பேறிக்கு எவ்வழியும் முள் நிறைந்த வழியே; சுறுசுறுப்பானவர்கள் செல்லும் பாதையோ நெடுஞ்சாலையாகும். 20 ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விப்பான்; அறிவற்ற மகனோ தன் தாயை இகழ்வான். 21 மூடன் தன் மடமை குறித்து மகிழ்ச்சியடைகின்றான்; மெய்யறிவுள்ளவன் நேர்மையானதைச் செய்வான். 22 எண்ணிப் பாராமல் செய்யும் செயல் தோல்வியடையும்; பலர் திட்டமிட்டுச் செய்யும் செயல் வெற்றியடையும். 23 தக்க மறுமொழி அளிப்பவன் மிக்க மகிழ்ச்சி அடைவான்; காலமும் வேளையும் அறிந்து சொல்லும் சொல்லால் வரும் மகிழ்ச்சி இன்னும் பெரிது. 24 விவேகமுள்ளவன் செல்லும் பாதை பாதாளத்திற்குச் செல்லும் பாதை அல்ல; அது வாழ்விற்குச் செல்லும் பாதையாகும். 25 இறுமாப்புள்ளவர் வீட்டை ஆண்டவர் இடித்துத் தள்ளுவார்; கைம்பெண்ணினது நிலத்தின் எல்லைகளைப் பாதுகாப்பார். 26 தீயோரின் எண்ணங்களை ஆண்டவர் அருவருக்கிறார்; மாசற்றோரின் சொற்களே உவப்பளிப்பவை. 27 வன்முறையில் செல்வம் சேர்ப்பவர் தம் குடும்பத்திற்குத் தொல்லை வருவிப்பார்; கைக்கூலி வாங்க மறுப்பவர் நீடித்து வாழ்வார். 28 சான்றோர் எண்ணிப் பார்த்து மறுமொழி கூறுவர்; பொல்லாரின் வாய் தீய சொற்களைப் பொழியும். 29 ஆண்டவர் பொல்லாருக்கு நெடுந்தொலைவில் இருக்கிறார்; தமக்கு அஞ்சி நடப்போரின் மன்றாட்டுக்குச் செவிசாய்க்கிறார். 30 இன்முகம் மனத்திற்கு மகிழ்ச்சி தரும்; நல்ல செய்தி உடம்புக்கு உரமளிக்கும். 31 நலம் தரும் அறிவுரையைக் கவனமாகக் கேட்பவர், ஞானிகளோடு உறவு கொண்டிருப்பதை விரும்புவார். 32 கண்டிக்கப்படுவதைப் புறக்கணிக்கிறவர் தமக்கே கேடு வருவித்துக் கொள்கிறார்; அறிவுரையைக் கவனமாகக் கேட்பவர் உணர்வை அடைவார். 33 ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதல் ஞானத்தைத் தரும் பயிற்சி; மேன்மை அடையத் தாழ்மையே வழி.

பின்புலம்

இந்த அதிகாரத்தில் எதிர்மறை இணையணிகள் சிறிது சிறிதாக மறைகின்றன எனலாம் (காண் 10-11,12, 23-24). இதில் உரைகளே கருப்பொருளாக வருகின்றன (1, 2, 4, 23, 26, 28). ஒப்பிரே அறிஞரின் கருத்துப்படி யாவே கூற்றுகள் இங்கு அதிகமாக உள்ளதால் இறையியல் தாக்கம் உள்ளது.

யாவே கூற்றுக்கள் 15, 16, 17களில் அதிகமாக உண்டு. இறையியல் காரணங்களுக்காகவே இவை சேர்க்கப்பட்டன என்ற கருத்து தரப்படுகிறது. இன்னும் சிலர் இது கூற்றுகளைத் தொகுத்த ஆசிரியரின் கைவண்ணம் என்பர். இந்தப் பகுதியிலுள்ள 10-15 அதிகாரங்களையும் 16:1-22:16 அதிகாரங்களையும் இரண்டு பகுதிகளாக அறிஞர்கள் காண்பர். அதிகாரங்கள் 1-9இல் காணப்படும். அறிவுரைகள் இன்னொருவகையில் 10-15இல் தரப்படுகின்றன. 15ஆம் அதிகாரத்தில் அறிவுரைகளைவிட பண்பை மனிதன் பெற்றுவாழ கொடுக்கப்படும் உவமைக் கூற்றுகள் அதிகம் உண்டு.

சொல்விளக்கம்

1 - **சினத்தை எவ்வாறு சமாளிப்பது?:** ‘இனிய நா எலும்பையும் நொறுக்கும்’ (25:15) என்பது இன்னொரு நீதிமொழி. இது ஒரு புதிரான கூற்று எனினும் ஞானிகளின் கவனமான அனுபவம். எனவே மனிதரைக் கருத்தோடு கவனமாக நடத்தவேண்டும். தவறான உணர்வுகள் நல்ல உறவை அறுத்துவிடும் (14:17). சினம் நேர்மையாளரையும் கொன்றுவிடும் (சஉ 10:4). சுடுசொல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலாகும் (காண் குறள்கள் 304, 305, 302). திருவள்ளுவர் சினத்தால் வரும் விளைவுகள் பற்றி அகல ஆய்கிறார்

“இன்சொலால் அன்றி இருநீர்வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே” என்று நன்னெறி கூறுகிறது. (18).

2 - ஞானமுள்ளவர் ஆய்ந்து அறிந்து சொல்லும் அறிவுரைகள் அறிவை வழங்குகின்றன. இயேசுவின் மலைப்பொழிவு எண்ணிவியலா மனிதர்களை மலைக்கவும் மயங்கவும் வைக்கின்றது, மனமாற்றத்திற்கும் இட்டுச்செல்கிறது (25:1).

3 - நீக்கமற நிறைந்திருக்கிறார் இறைவன். அவரது கண்கள் எங்கும் நோக்கும் என்பது கடவுளின் முழு அறிவு, ஆற்றல், பிரசன்னம் என்பதைக் குறிக்கிறது. அவரது பிரசன்னம் பாதாளத்திலும் உள்ளது (11). கடவுளின் பார்வை அச்சம் தருவது (5:21). அமெனமோப்பே எகிப்திய இலக்கியத்திலும் (15:10-14; 19:14) இதைக் காணலாம். இங்குள்ள பிரசன்னம் நடுநிலையானது. பொல்லாரையும் பார்ப்பது மறைமுக எச்சரிக்கை (காண். 16:2; 24:12 மேலும் 72:12; 24:18).

4 - **சாந்தப்படுத்தும் சொல் வஞ்சகப் பேச்சு:** வார்த்தை ஆற்றலுடையது. அது உயிரூட்டமும் தரும். குணமும் அளிக்கும். அதே நேரம்

வஞ்சகப் பேச்சு கவிழ்த்துப்போடும், உடைத்து விடும். அது சொல்வோரையும் உடைக்கலாம் கேட்போரையும் உடைக்கலாம். அது இருபுறமும் கூர்மையானது. உதவியும் செய்யும், உபத்திரமும் உண்டாக்கும்.

5 - வார்த்தைக்குக் கட்டுப்படுதல் இளைஞனுக்கு நன்று. அந்த வார்த்தையையும் கேட்டு ஒருவர் தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும். கேட்காதோர் மூடரே (காண் 12:1; 13:1).

6 – வினைப்பயனைத் தொடர்ந்து அலசுகிறது நீதிமொழிகள். நல்லாருக்குப் பாதுகாப்பும் பொல்லாருக்குத் தொல்லையும் கிடைக்கும்.

7 – ஞானிகளுக்கும் மூடருக்கும் எப்போதும் வேறுபாடு உண்டு. மனது நினைப்பதை உதடு பேசும். ஞானிகள் சிந்தித்துப் பேசுவர். மூடரது உள்ளமும் நாவும் அப்படியல்ல.

8 - 9 - இது விவிலியக் கருத்து: சிறப்பாக இறைவாக்கினர்கள் அனைவரும் பலிகள் பற்றி அப்பட்டமாக உரைக்கின்றனர் (எசா 1:10-20) நல்மனதும், நல் வாழ்க்கையுமின்றிச் செலுத்தும் பலியால் எப்பயனும் இல்லை. இந்தக் கூற்றை வசனங்கள் 29; 21:3,27 பின்புலத்தில் அலசுவது நல்லது. பலியும் செபமும் முரண்படுகள் அல்ல. மாறாகப் பலி செலுத்துபவர்தான் இங்கு ஆய்வுக்கு உட்படுபவர். பலி அல்ல, கடவுள் அகத்தைப் பார்க்கிறார். மனித மனநிலை அவருக்கு வெட்டவெளிச்சம். கடவுளன்பு கண்டிப்பையும் உள்ளடக்கியது. அதைத்தான் 9வது கூற்று அறிவுறுத்துகிறது.

10-12 - இந்த மூன்று வசனங்கள் இறைவனின் கண்டிப்புப் பற்றிய கருத்தைத் தம்முள் கொண்டுள்ளன. அறிவுரையைக் கேளாது கண்டிப்பை மதியாது வாழ்வோர் கடினமான கொடிய தண்டனை பெறுவர் 'சாவுக்கும்' தப்பமாட்டார்.

11 – இந்தக் கூற்று நெறிதவறிச் செல்வோர் மிகுந்த தண்டனை (சாவை) பெறுவர் என்பதை வலியுறுத்துகிறது. இறப்புக்குப் பின்னால் உள்ள பாதாளமும் படுகுழியும் ஆண்டவருக்கு மறைவாயில்லை. மனித இதயமும் அவருக்குத் தெரியும்; எனவே தவறிழைத்தோருக்குத் தண்டனை உண்டு (காண். யோபு 26:6).

12 – ஏளனம் செய்வோரின் மனநிலையும் செயல்பாடும் வேறு. இவர்களது நிலை மிக நம்பிக்கையற்றதாய் உள்ளது. ஏனெனில் தம் சிக்கல்கள் தீர இவர்கள்

ஞானிகளை நாடுவதில்லை; ஏனெனில் அவர்களது அறிவுரைக்குக் செவிமடுப்பதில்லை.

13 – உள்ளத்தைச் சார்ந்தது இக்கூற்று: அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உள்ளத்திற்கும் உடலுக்கும் அகத்திற்கும் புறத்திற்கும் இணைபிரியா உறவு உண்டு (காண் 17:22; 7:3). இக்கூற்று சீஞா 13:25ஐ பிரதிபலிக்கிறது. உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் மகிழ்ச்சி அல்லது வேதனை உடலையும் பாதிக்கிறது. உள்ளமும் உடைகிறது, அகமும் வேதனையால் வாடுகிறது.

14 – இங்கு மனதும் வாயும் முரணாகக் காட்டப்படுகின்றன. விவேகமுள்ள மனம் ஆழ்ந்த ஆர்வத்துடன் ஞானத்தை நாடுவதுபோல் மதிகேடர் மடமையை ஆர்வத்துடன் நாடுகின்றனர் (காண் 14:33; 15:12).

15 – இந்த நீதிமொழியைப் பல கோணங்களில் அறிஞர்கள் காண்கின்றனர். ஒடுக்கப்பட்டோர் எல்லா விதத்திலும் எல்லாராலும் புறக்கணிக்கப்படுபவர்கள். இவர்களைத் தீட்டு, கடவுளின் சாபக்கேடு என்ற நோக்கிலும் ஏழை என்பதால் வெறுக்கப்படும் நிலையிலும் சமூகம் பார்க்கிறது. இவர்கள் வாழ்வு துயரமும் தொல்லையுமே. மகிழ்வு என்பது இவர்கள் அகராதியில் இல்லை.

எனினும் இவர்கள் தங்கள் இதய ஆழத்தில் எதையும் தாங்கும் குணநலம் பெற்றால் மகிழ்வை அடையலாம் என்ற ஒரு கருத்துள்ளது (மகனே, பிலேஜர்) ஆனால் ஒய்பிரே இதை முரண்பாடான நீதிமொழியாகக் கொள்கிறார்.

16 – ஞானம் தரும் மேலான படிப்பினை இது. மிகுந்த செல்வம் இருந்தால் மகிழ்ச்சி. குறைந்த செல்வம் இருந்தால் தொல்லை என்பதை ஞானம் மாற்றியமைக்கிறது. அமெனமோப்பெ நூலும் இந்தக் கருத்தைக் கூறுகிறது. ஆண்டவர் கையில் வறுமையிலும் மகிழ்வே, சேமித்து வைத்திருக்கும் செல்வத்தைவிட அது மேலானது. செல்வத்தின் மன உளைச்சலைவிட ரொட்டித் துண்டு தரும் மகிழ்ச்சி மேலானது.

செல்வம் வறுமையைவிட நல்லது. ஆனால் எப்போதுமல்ல. செல்வம் எப்போதும் மகிழ்வைத் தரவியலாது. செல்வமே தொல்லையாகவும் மாறலாம் (சஉ 5:9-10). உண்மை மதிப்பு (மகிழ்வு) எதிலுள்ளது என்பதை இந்நீதிநூல் கூறுகிறது (காண் 16:8).

17 – பண்பும் நல்ல மனநிலையும் ஞானத்தைவிட மேலானவையாகக் கருதப்படுகின்றன. காணும் பொருள்களைவிட காண இயலாப் பொருள்களே மேன்மையாகக் கருதப்படுகின்றன. அகத்தில் அன்பிலாச் செயல் விலை உயர்ந்தாயினும் ஏற்புடையதன்று. பொருளல்ல பொன்மனமே தேவை. அலென்ஸோ ஷேக்கல் 15, 16, 17 வசனங்களை 'தோப்' (நல்ல) என்ற சொல் இணைக்கிறது. மகிழ்வான மனது, ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம், நண்பர்கள் பாசம். இம்மூன்றும் தன்னோடும் கடவுளோடும் நண்பர்களோடும் அமைதி வாழ்வு வாழ உதவுகின்றன.

18 – இங்கே சினம், பொறுமை பண்புகள் பற்றிக் கூறப்படுகின்றன. சினமுடையவன் சண்டையை மூட்டுவான் (காண் 28:25; 21:22) எகிப்திய இலக்கியங்கள் இவை பற்றிக் கூறுகின்றன.

19 – சோம்பல் சுறுசுறுப்பு இரண்டும் முரண்பாடுடையவை. மலையும் சுறுசுறுப்புடையவர்க்கு ஒரு மடுவாகும். சோம்பேறி வழிகூடத் தேடமாட்டான் அப்படியிருக்க வழிபற்றி எப்படிப் பேசமுடியும். சோம்பேறிக்கு எல்லாமே இடையூறாக இருக்கும் (காண் 16:17).

20 – பெற்றோருடைய சொற்களுக்குப் பணிந்து நடப்பது பற்றி இங்குக் கூறப்படுகிறது (10:1; 13:1; 29:3,15). இக்கூற்று நீதிமொழிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. மகிழ்ச்சி பற்றி 21,23 இலும் கூறப்படுகிறது.

21 – நன்னெறியில் வாழாது, நல்வழியிலிருந்து பிறழ்பவன் கொள்ளும் மகிழ்ச்சி வீணே. மாறாக நேரிய வழியில் நடப்பவன் தன் பெற்றோருக்கும் தனக்கும் மகிழ்ச்சியைக் கொணர்கிறான் (20, 21).

22 – எண்ணித் துணிக கருமம் என்ற வள்ளுவர் வாக்கை இக்கூற்றுப் பிரதிபலிக்கிறது (குறள் 447). சிந்தனை செய்து செயலில் ஈடுபடுவது, நல்லாரின்அறிவுரை கேட்பது எப்போதும் வரவேற்கப்படும் செயல். அறிவுரை கேட்க மறுப்பது இறுமாப்பாகும் (13:10). மனித சிந்தனையும் ஓர் எல்லைக்கு உட்பட்டது. கடவுளின் துணை நாடு (19:21). "தெரிந்து செயல்வகை", குறள்கள் 461 – 470 இதுபற்றி விளக்கமாக உரைக்கின்றன.

23 – தக்க மறுமொழி தருவதும், காலமறிந்து சொல்வதும் மகிழ்ச்சியை தருகின்றன. முதல் வரிக்கு இன்னும் ஒரு கருப்பொருளை இரண்டாவது வரி முன்வைக்கிறது. பொறுப்புக்களிலிருப்போர் மிக விழிப்பாக இருக்கவேண்டும். சில

சூழ்நிலைகளில் மாட்டிக்கொண்டு சொல்லவும், மெல்லவும் முடியாமல் இருப்போர் சிலருண்டு. இடமும் காலமும் அறிந்து சொல்லும் சொல் பெரியவர்களுக்கு கைவந்த கலை (10:11).

24 - ஞானமுடையவனின் பாதை வாழ்விற்கு இட்டுச் செல்லும்: எனினும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வை இது குறிக்கவில்லை. ஞானநூல் உணர்த்தும் வாழ்வு இவ்வுலக வாழ்வு. கசப்பான வாழ்வு, இளமைச் சாவா போன்றவற்றைத் தாண்டிய வாழ்வு; இது இறப்புக்கு முரணானது.

25 - 25-33 - இந்நீதிமொழிகளில் 'யாவே' என்ற சொல் அடிக்கடி வருகிறது. இஸ்ரயேல் சமூகத்தில் விதவைகளின் வாழ்வு இக்கட்டானது. விதவைகள் எதிரிகளையும், அவரது நிலபுலன்களின் மீது கண் வைப்போரையும் தனித்து நின்று போராடவேண்டும் (எசா 9:23; எரே 7:6). இந்த எதிரிகள் இறுமாப்பும் ஆற்றலும் உடையவர்கள். இவர்களின் ஒரே கதி 'யாவே' கடவுளே. நிலம் யாருடையது என நிரூபிப்பதே இவர்களது பெரும் போராட்டம் (23:10).

26 - தீயோரின் செயல்களை இக்கூற்று உள்வாங்கி வைத்திருக்கிறது. அவர்களின் எண்ணங்களும் வழிகளும் (9) கடவுளுக்கு அருவருப்பானவை (தெய்வ நிந்தை). மாசற்றோரின் சொற்கள் எந்த தீமையும் கலவாதவை. 16:24இல் நாம் காணும் இன்சொற்கள் பிறரையும் தன்னையும் வெகுவாகக் குணப்படுத்தும் ஆற்றல் உடையவை.

27 - கைக்கூலி: பரிசாகக் கொடுக்கப்படும் பொருள் கைக்கூலி. (17:18; 18:16). பொருளாசையே கைக்கூலி வாங்கத் தூண்டுகிறது. திருட்டுவழியில் சேர்க்கும் செல்வம் குடும்பத்தை அழிக்கும் (11:29). 'பேராசை பெரு நட்டம்' (காண். 1திமோ 6:10).

28 - சான்றோரின் சொற்கள் யோசித்துப் பேசப்படுகின்ற சொற்கள். வள்ளுவர் 191-200 குறள்களில் இதை அலசுகிறார்.

29 - ஆண்டவர் நீதிமான்களின் வேண்டுதல்களுக்குச் செவிமடுக்கிறார். ஏனெனில் அவர்கள் ஆண்டவருக்கு நெருக்கமானவர்கள். அவர்களது மன்றாட்டு கடவுளுக்கு மகிழ்ச்சியூட்டுகிறது (8). பொல்லாரை விட்டு நெடுந்தொலையில் இருப்பது அவர்களது வேண்டுதலை அவர் கேட்கவில்லை என்று அடையாளமாகச் சொல்கிறது (திபா 10:1). பொல்லாரின் வேண்டுதல் ஆண்டவருக்கு அருவருப்பானது.

30 – இன்முகம் காண்பது மகிழ்ச்சி. உள்ளத்தில் ஊறும் மகிழ்வை கண்கள் காட்டுகின்றன. நல்ல செய்தியைக் கேட்பது உற்சாக மூட்டுகிறது (25:25; 29:13).

நல்லாரைக் காண்பதுவும் நன்றே

நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே.

31 – நல்லுரையைக் கேட்பது ஞானிகளோடு நல்லுறவை ஏற்படுத்துகிறது.

32 – இக்கூற்று 5,10 வசனங்களைப் பிரதிபலிக்கிறது. இது 31இல் கூறியதற்கு எதிர்மறை இணையணியாக உள்ளது. உணர்வை அடைவார் என்பது ஞானம் பற்றி நன்றாகப் புரிதலைக் கொண்டிருப்பதாகும் (19:8).

33 – மறுபடியும் ஆண்டவரிம் கொள்ளும் அச்சம் கூறப்படுகிறது (1:7; 9:10). தாழ்மை ஞானம்பெறச் சிறப்பான பண்பு. தாழ்மையுடையார் கடிந்து பேசுகையில் தன்னைக் கட்டுப்பாடோடு வைத்துக்கொள்வார். அதுவே ஞானம் பெற சிறந்த தகுதி.

செம்பொருள்

இந்த அதிகாரம் புதியனவும் பழையனவும் உடையதாகக் காணலாம். புதியதென நாம் காண்பது யாவே கூற்றுகள். பழையவை எனும்போது அறிவுரையும் கண்டிப்பும் எனலாம். இவை இதயத்திற்கும், நடக்கும் பாதைக்கும், மற்ற உடல் அவயங்களுக்கும் கூறப்படுகின்றன. எலோகிம் அல்லது யாவே இஸ்ரயேலரின் கடவுள் எனப் பறைசாற்றப்படுகிறார்.

8. ஆண்டவரும் அரசரும் (16:1-33)

16:1 எண்ணங்களை மனிதர் எண்ணலாம்; ஆனால், எதற்கும் முடிவு கூறுபவர்
ஆண்டவர். 2 மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் களங்கமற்றதாய்த்
தோன்றலாம்; ஆனால், ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். 3
உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை; அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவாய். 4
ஆண்டவர் படைத்த ஒவ்வொன்றிற்கும் குறிக்கப்பட்ட ஒரு முடிவு உண்டு; பொல்லாத
மனிதரை அழிவு நாளுக்கென்று குறித்து வைத்திருக்கிறார். 5 இறுமாப்புள்ளவர்
யாராயிருந்தாலும் அவரை ஆண்டவர் அருவருக்கிறார்; அவர் தண்டனைக்குத் தப்பவேமாட்டார்;
இது உறுதி; 6 அன்பும் வாய்மையும் தீவினையைப் போக்கும். ஆண்டவரிடம் கொள்ளும்
அச்சம் ஒருவரைத் தீமையினின்று விலகச் செய்யும். 7 ஒருவருடைய செயல்கள் ஆண்டவருக்கு
உகந்தவையாயிருக்குமானால், அவர் அவருடைய எதிரிகளையும் அவருக்கு நண்பராக்குவார்.
8 தீய வழியில் சம்பாதிக்கும் பெரும் பொருளைவிட, நேர்மையோடு ஈட்டும் சிறு தொகையே
மேல். 9 மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றார்; ஆனால், அதில் அவரை வழிநடத்துபவரோ
ஆண்டவர். 10 அரசன் வாயினின்று பிறக்கும் வாக்குப் பொய்க்காது; தீர்ப்பு வழங்கும் போது

அவன் தவறு செய்யமாட்டான். 11 நிறைகோலும் துலாக்கோலும் ஆண்டவருக்கே உரியன; பையிலுள்ள எடைக்கற்களெல்லாம் அவரால் உண்டானவை. 12 தீச்செயலை அரசர்கள் அருவருப்பார்கள்; ஏனெனில், நீதியே அரியணையின் உறுதியான அடிப்படையாகும். 13 நேர்மையான பேச்சை அரசர் வரவேற்பார்; நேரியவற்றைச் சொல்லுகிறவரிடம் அவர் அன்பு செலுத்துவார். 14 அரசரின் சீற்றம் மரண தூதன் போன்றது; ஆனால் ஞானமுள்ளவர் அதைத் தணித்துவிடுவார். 15 அரசரின் முகமலர்ச்சி வாழ்வளிக்கும்; அவரது கருணை பருவமழை பொழியும் மேகம் போன்றது. 16 பொன்னைவிட ஞானத்தைப் பெறுவதே மேல்; வெள்ளியைவிட உணர்வைப் பெறுவதே மேல். 17 நேர்மையானவர்கள் செல்லும் பாதை தீமையை விட்டு விலகிச் செல்லும்; தன் நடையைக் குறித்து அவ்வாறு விழிப்புடனிருப்பவன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வான். 18 அழிவுக்கு முந்தியது அகந்தை; வீழ்ச்சிக்கு முந்தியது வீண்பெருமை. 19 மேட்டிமையானவர்களோடு கொள்ளையடித்த பொருளைத் பகிர்ந்து மகிழ்வதைவிட மனத்தாழ்மையுடன் சிறுமைப்படுகிறவர்களோடு கூடியிருப்பது நலம். 20 போதனைக்குச் செவிகொடுப்பவன் வாழ்வடைவான்; ஆண்டவரை நம்புகிறவன் நற்பேறு பெற்றவன். 21 ஞானமுள்ளவர் பகுத்துணரும் ஆற்றல் பெற்றவர் என்று கொள்ளப்படுவார்; இனிமையாகப் பேசினால் சொல்வதை எவரும் ஏற்பர். 22 விவேகமுள்ளவர்களுக்கு அவர்களது விவேகமே வாழ்வளிக்கும் ஊற்றாகும்; மூடருக்கு அவரது மடமையே போதிய தண்டனையாகும். 23 ஞானமுள்ளவரின் மனம் அவரது பேச்சை விவேகமுள்ளதாக்கும்; அவருடைய சொற்களை எவரும் ஏற்பர். 24 இன்சொற்கள் தேன்கூடு போன்றவை; மனத்திற்கு இனிமையானவை. உடலுக்கு நலம் தருபவை. 25 ஒரு பாதை ஒருவருக்கு நல்ல வழிபோலத் தோன்றலாம்; முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகிவிடும். 26 உழைப்பவர் பசி அவரை மேலும் உழைக்கச் செய்கிறது; உண்ண விரும்பும் அவரது வயிற்றுப்பசி அவரை அதற்குத் தூண்டுகிறது. 27 பிறர் குற்றங்களைக் கிண்டிக் கிளறித் தூற்றுபவர் கயவர்; எரிக்கும் நெருப்புப் போன்றது அவரது நாக்கு. 28 கோணல் புத்திக்காரர் சண்டையை மூட்டிவிடுவர்; புறங்கூறுவோர் நண்பரைப் பிரித்துவிடுவர். 29 வன்முறையாளர் அடுத்தவரை ஏமாற்றி, கெட்ட வழியில் அவரை நடக்கச் செய்வார். 30 கண்ணை மூடிக்கொண்டிருப்போர் முறைகேடானதைச் சிந்திப்பர்; வாயை மூடிக்கொண்டிருப்போர் தீமை செய்யத் திட்டமிடுவர். 31 நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி; அது நேர்மையான நடத்தையால் வரும் பயன். 32 வலிமை உடையவரைவிடப் பொறுமை உடையவரே மேலானவர்; நகரை அடக்குகிறவரைவிடத் தன்னை அடக்குகிறவரே சிறந்தவர். 33 மடியிலுள்ள திருவுளச் சீட்டை ஒருவர் குலுக்கிப் போடலாம்; ஆனால் திருவுளச் தீர்ப்பை வெளிப்படுத்துபவர் ஆண்டவரே.

பின்புலம்

இவ்வதிகாரம் கருத்திலும் அமைப்பிலும் விஞ்சி நிற்கிறது. 1ம் 33ம் உட்படுத்துதல் என்ற இலக்கிய வகை சார்ந்தது. யாவே கூற்றுகள் இங்கு அதிகம் உள்ளன. இதையடுத்து அரசர் கூற்றுகள் (10-15) உள்ளன. ஒய்பிரே இதில் இரண்டுவகைக் (யாவே, அரசர்) கூற்றுகள் அருகாமையில் அமைந்திருப்பது இரண்டு நோக்கங்களைக் கொள்வதாகக் கூறுகிறார். முதலில் அரசர்கள் யாவேயால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் கடவுளின் பிரதிநிதிகள். இரண்டாவது இந்த

அரசர்கள் நீதி நேர்மையோடு ஆட்சிசெலுத்தி யாவே கடவுளுக்குப் பணிந்திருத்தல் வேண்டும். யாவே கூற்றுகள் இந்த அதிகாரத்தில் ஒரு சிறப்பான இறையியல் பண்பைக் கொண்டுள்ளது. தீய செயல்கள் கடவுளுக்கும் அரசருக்கும் அருவருப்பானவை. (16:12 15:9). தீர்ப்பு வழங்குவகையில் அரசன் தவறமாட்டான் (10). மேலும் மசோரா என்ற அறிஞர் 16:17ஐ இந்நூலின் மையக்கருத்தாகக் கொள்கிறார். எதிர்மறை இறையணியை இங்கு அதிகமாக இல்லை.

சொல்விளக்கம்

1 – மனித ஞானம் எல்லைக்கு உட்பட்டது. அனைத்தும் ஆண்டவரின் உதவியால் செயல்படுகிறது. மனிதன் முன்மொழியலாம் கடவுள் நிராகரிப்பார். இக்கூற்றில் அடங்கியுள்ள ஆழ்ந்த கருத்து அலசப்படவேண்டும். மனிதக் கூற்று மனிதனுடையதா? அல்லது கடவுளுடையதா? மனிதன் தன் கருத்தை வெளிப்படுத்துவது அவனுடையது. ஞானத்தால் அவன் கூறும் வார்த்தையும் சிறப்பானதுதான். ஆனால் இதற்கும் கடவுள் உதவி வேண்டும். முடிவு கூறுபவர் கடவுளே. வசனம் 1ஆ கூறுவதுபோல ஞானம் கடவுளின் பரிசு (2:6). இறுதியில் முடிவு எடுப்பவர் முற்றிலும் கடவுளே. அவர்களுக்கு தார்மீகப் பொறுப்புண்டு. எனினும் மனிதர் கடவுளைச் சார்ந்தே செயல்படுவர். அமெனமோப்பெ இலக்கியத்தில் இக்கருத்து காணப்படுகிறது (19:16–17).

2 - 14:12; 21:2 இக்கருத்தைக் கூறுகின்றன: நல்ல நோக்கம் இருப்பினும் மனித தீர்ப்புகள் குறைபாடுகள் உடையன. கடவுளே மனித உள் நோக்கம் அறிவார். கடவுளச்சம் உடையோரும் தாம் தவறுவோம் என்பதை மறக்கக்கூடாது. மனிதத் தீர்ப்பு மனிதம் சார்ந்தது. கடவுள் தீர்ப்பு நடுநிலையுடையது; இறுதித் தீர்ப்பு கடவுளைச் சார்ந்ததே. கடவுள் இதயத்தை எடைபோடுகிறார் (17:3; 24:12; திபா 7:10; 17:3).

3 – நீதி நூல்கள் நம்பிக்கையை வலியுறுத்தினும், இங்கு இது ஒரு கட்டளையாகக் கொடுக்கப்படுகிறது. செயல்களுக்குப் பின் சிந்தனை வருகிறது. இவ்வாறு அனுபவம் நமக்குப் பாடம் கற்பிக்கிறது. ஞானமும் ஏட்டுச்சுரக்காயல்ல மாறாக அனுபவத்தின் வழிதானே. எனினும் கடவுளிடம் நம்பிக்கை வைப்பது இன்றியமையாதது, கடவுளே எல்லாவற்றையும் வெற்றிக்குத் திருப்புவார் (திபா 127:1–2).

4 – கடவுளது நோக்கம் பல முடிவுகளைக் கொண்டுள்ளது, அது தீயோரின் தண்டனையாகவும் இருக்கலாம், தீயோர் தப்ப முடியாது. **அழிவுநாள்:** இது வாழ்நாளிலே வரும் அழிவு அல்ல சாவின்போது வருவது (காண் சீஞா 33:7-15; 39:12-31).

5 – இக்கூற்றை 11:21இல் காணலாம். இறுமாப்பு உடையவரின் கதி என்ன என்பதை ஆசிரியர் கூறுகிறார். அவர்கள் தெய்வநிந்தனை செய்பவர்கள். கடவுள் அவர்களை வெறுக்கிறார். இறுமாப்புள்ள பார்வையைக் கூறும் நீதிமொழிகள் 6:16-17 இதே காட்டமுள்ள வார்த்தைகளால் அவர்களைக் கண்டிக்கின்றன.

6 – அன்பும் வாய்மையும் ஆண்டவரின் அச்சத்தோடு தொடர்புடையது. எனவே இப்பண்புகள் இன்னும் ஆற்றலைப் பெறுகின்றன. **தீமை:** இது நெறிமுறை தவறிய வாழ்வு அல்லது உடல் தீங்கைக் குறிக்கலாம். அன்பும் வாய்மையும் கடவுளின் பண்புகள் (விப 34:6 நீமொ 2:3). அன்பு தீயோரின் தீச்செயல்களை மன்னித்துவிடுகிறது. மனிதரின் அன்புச்செயல் கடவுளின் மன்னிப்பை இன்னும் அதிகமாகத் தூண்டுகிறது.

7 – நற்செயல் புரிபவர் எதிரிகளையும் நண்பர்களாக்கிக்கொள்ள முடியும். இது கடவுளின் செயல். பகைவர்கள் நண்பர்களாவது நற்செயல் செய்த பயன்.

8 – வறுமை தன்னிலே நல்லதல்ல. செல்வமும் தன்னிலே தீமையானதல்ல. இங்குள்ள கேள்வி மனிதனிடம் நீதியுளதா? என்பதுதான்; ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் அதுவே (15:16).

9 – இந்தக் கூற்றுக்கும் நீதிமொழிகள் 16:1-3க்கும் கருத்துக் கோப்புகளில் தொடர்பு உண்டு. எனினும் முன்னையது மனது, மனிதன் பற்றிப்பேச இக்கூற்று மனிதத் திட்டங்கள் பற்றியும் கடவுளின் வழிமுறைகள் பற்றியும் கூறுகிறது. வாழ்வுப் பயணத்தில் பல முடிவுகளை எடுத்தாகவேண்டும். கடவுள் துணையால் இவைகள் வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கையும் வேண்டும். முதல் கூற்றுக்கும் இரண்டாம் கூற்றுக்கும் முரண்பாடு இல்லை 'ஆனால்' என்று கூறப்படுவதால் முரண்பாடு உளது என நினைப்பர். மனிதத் திட்டங்களுக்கும் கடவுளின் வழிநடத்துதலுக்கும் ஒரு நல்ல இசைவு உளது. அது வெற்றியைத் தரும்.

எனினும் இது எப்போதும் நிறைவேறுவதில்லை. பல நேரங்களில் தெளிவற்ற நிலை உள்ளது (நீதிமொழிகள் 19:21; 20:24). ஒன்று மட்டும் நிச்சயம்.

கடவுள் தரும் முடிவில் மனிதருக்கு எந்த அதிகாரமும் இல்லை. எதிர்பார்க்கும் வெற்றி கிடையாதிருக்கலாம், கடவுள் முன் மனிதர்கள் கதியற்றவர்களே (எரே 10:23).

10-15 - இந்த நீதிமொழிகள் ஒரு சிறந்த அரசர் யார், அவரது பண்புகள் யாவை என்பதை முன்வைக்கின்றன. அரசனின் வாக்குப் பொய்க்காது என்பது தெய்வச் சொல்லாக அதை மதிக்கவேண்டும் என்பதாகும். இங்கு குறிசொல்லும் வார்த்தையைக் (oracle) குறித்தாலும் அரசருக்கு மதிப்பு சேர்ப்பதாகப் பயன்படுத்தப்படுகிறது. இதை ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனலாம். தாவீதின் ஞானம் தேவதூதரின் ஞானமாகக் கருதப்படுகிறது (2சாமு 14:20). நீதி கடவுளுடையது அதை அரசருக்கும் கூறுவர். நீதி செலுத்துதல் அரசனின் தலையாய பணி. வள்ளுவர் செங்கோன்மை (குறள்கள் 541-550) என்ற தலைப்பில் அரசனின் பண்பாக நீதி பற்றிக் கூறுவது மெய்சிலிர்க்க வைக்கிறது.

அரசனுக்கு வெற்றியைத் தருவது கூரிய வேலன்று
மாறாக நீதி செலுத்துவதாகும் (குறள் 546)

11 - இது அரசு பற்றிய கூற்று இல்லையெனினும் நீதியை மையமாகக் கொண்டது. வியாபாரத்தில் நாணயம் வேண்டும். அதில் கடவுளுக்கு அக்கறை உண்டு. எடைக்கற்கள் அவரால் செய்யப்படுகின்றன. இது நீதியின்பால் அவர் கொண்டுள்ள (ஏக்கத்தை) ஆவலை எடுத்துக்காட்டுகிறது. இது தெய்வீக நீதியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. கள்ளத் தராசு கடவுளுக்கு அருவருப்பானது (11:1; 20:23). அளவிலும் எடைகளிலும் திருட்டுத்தனம் செய்வது பரவலாகக் காணக்கிடக்கும் ஒன்று.

12 - அநீதம் அருகில் இல்லாதவாறு அரசர் ஆளவேண்டும். அநீதம் ஆண்டவருக்கு மட்டுமல்ல அரசருக்கும் அருவருப்பானது. நீதியே அரசரின் மகுடமாகும் (20:8; 25:5; 29:14). நீதியை உயிருக்கும் மேலாகப் போற்றி அரசர்கள் வாழவேண்டும் என்பதை எல்லா இலக்கியங்களிலும் காண்கிறோம். (மெசபொதோமியா, எகிப்து; காண் திபா 89:15; 97:2).

13 - 'நீதியே' சிறப்பான சொல்லாக நீதிமொழிகளில் இருப்பினும் நேர்மையும் இணைத்துக் கூறப்படுகிறது. அரசருக்கும், அரசவையில் உள்ளோர்க்கும் நேர்மை தேவை (காண் 22:11; திபா 101).

14-15 - அரசருக்குரிய இன்னொரு பண்பு வாழ்வுக்கும் இறப்புக்கும் மேல் அவருக்குள்ள அதிகாரம். அரசரது சீற்றத்தைப் பற்றி 19:12; 20:2இல் பார்க்கலாம்.

அரசருக்கு இழிவு தேடித் தருபவருக்கு (14:35) அவர் தண்டனை வழங்குவார். எனினும் ஞானிகளால் அரசனின் சீற்றத்தைத் தணிக்க முடியும் (15:1,4; 29:8).

15 – கடவுளின் திருமுகம் ஆசிர் அளிக்கும் (எண் 6:25). அரசனின் மலர்ந்த முகமும் (15:9) வாழ்வளிக்கும். அரசனின் கருணை பருவமழை பொழியும் மேகத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி (குறள் 542, 545).

16 – மர்பி என்ற பழுத்த அறிஞர் அருமையான விளக்கத்தை முன்வைக்கிறார். இந்தக் கூற்று நீதிமொழி நூலின் மையத்தில் வருகிறது என்பது அவர் கருத்து. இந்தக் கூற்று ஞானத்தின் மேன்மையை இரண்டு கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்களைக் கொண்டு கோடிட்டுக் காட்டுகிறது என்கிறார்.

பொன்னை விட மேலானது எது? ஞானம்;

வெள்ளியை விட மேலானது எது? புரிதல். (காண் 3:14-15; 8:10-11) ஞானமும் புரிதலும் எல்லாச் செல்வங்களையும் விட மேலானவை.

17 – இக்கூற்று 4:9-19 நீதிமொழிகளைப் பிரதிபலிக்கிறது. நீதி வழியில் நடப்பவர் பெறும் நலன் என்ன? உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று வச 17ஆ கூறுகிறது. இந்த நீதிமொழியின் முதல் பகுதி 'தீமையை' விட்டு விலகி நேர்மையில் செல்லும் நன்னெறி வழி பற்றிக் கூறுகிறது. மேலும் தம் வாழ்வைக் காத்து கொள்பவர் திருச்சட்டம் கடைபிடிப்போர் (19:16அ); நாவை காப்பவர் (21:23); ஆண்டவரிடம் அச்சமுடையவர் (22:4) ஆவர்.

18 – இறுமாப்பும் தாழ்ச்சியும் நீதிமொழிகளில் அடிக்கடி வரும் கருப்பொருள் (காண். 11:2; 15:33 29:23). இக்கூற்றை இன்னொரு வடிவில் 18:12இல் காணலாம். அகந்தை இறைவனுக்கு நிந்தையானது.

19 – செல்வமும் புகழும் கடவுளின் ஆசிராகக் கருதும் ஞானிகள் அவற்றை இறுமாப்புடையாரிடம் கண்டால் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இங்குப் பகிரப்படும் பொருள் கொள்ளையடித்த அல்லது திருடிய பொருள். மேலும் அது அகந்தையுடைவரிடம் உள்ளது. தாழ்ச்சியுடையவர் பொதுவாக ஏழைகளாயிருப்பர் என்பதை இது மறைமுகமாகக் கூறுகிறது.

20-24 – இக்கூற்றுகள் 'வார்த்தை,' 'ஞானம்' பற்றிக் கூறுகின்றன.

20 – போதனை இங்கு ஞானிகளின் வார்த்தையா (4:4) அல்லது ஆண்டவரின் போதனையா? ஆண்டவர் வார்த்தையைக் கேட்பவர் என்பது ஞானிகள் வார்த்தையை விட அது மேலான வார்த்தை (காண் 13:13) என்பதைக் குறிக்கிறது. 'வாழ்வடைவான்,' 'நற்பேறு பெற்றவன்' என்ற சொற்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. ஆண்டவரிடம் நம்பிக்கை வைப்பதுவும் இங்கு வலியுறுத்தப்படுகிறது (28:25; 29:25)

21 – இந்த வசனத்தில் முரண்பாடு கூற்றுகள் இல்லை. இரண்டாம் கூற்று முதற்கூற்றுக்கு உறுதியளிக்கும் கூற்றாகக் கொள்ளலாம். இனிமையாகப் பேசுதல் ஞானிகளின் பண்புகளில் ஒன்று (24; 27:9). இனிப்பு இங்கு சர்க்கரையை அல்ல மாறாகப் பாராட்டியும் பக்குவத்தோடும் பேசுவதையும் குறிக்கிறது.

சரியான சொற்கள் கற்கும் ஆற்றலை அதிகரிக்கும்.
ஞானமும் சொற்களின் இனிமையால் அது உயர்வைப் பெறுகிறது.

22 – கூரிய சிந்தனையுடைய ஞானிகளுக்கு அவர்களது விவேகம் வாழ்வளிக்கும் ஊற்றாகும் என்பது பாரம்பரியக் கருத்து (10:11; 13:14; 14:27). மடமை என்பது மூசுர் என்ற எபிரேய வார்த்தையின் மொழிபெயர்ப்பு. ஆனால் இங்கு மூடர்களைக் கட்டுப்படுத்தும் அறிவுரையாகும். எனவே மூடர்களைத் தண்டிக்கவோ அல்லது மூடர்களுக்கு அறிவுரை கூறித் திருத்த முயல்வது வீண் என்று கொள்ளலாம்.

23 – இக்கூற்று வச 21ஐ பிரதிபலிக்கிறது. நல்ல பேச்சில் ஞானமும் அறிவும் கமழ்ந்திருக்கும். அவரது சொற்கள் மகிழ்ந்து ஏற்கப்படும். ஏற்காதோரையும் ஏற்கவைப்பது எனவும் சிலர் பொருள்கொள்வர். ஏனெனில் அவை உள்ளத்தில் ஊற்றெடுப்பவையாகும்.

24 – இன்சொற்கள் என்பது இன்சொல்லின் ஆற்றலைக் குறிக்கிறது. இவை தேன்போல் இனிக்கும், உடலுக்கும் உள்ளத்திற்கும் நலந்தரும். ஆனால் வள்ளுவர் வாய்ச் சொல்லில்.

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொலினிதே அறம் (93) என்பதாகும்.
மேலும் காண் குறள் 92, 96, 98, 99, 100

25 – இக்கூற்று 14:12ஐப் போலுளது. ஞானமுடையவரும் தவறக்கூடும். இறுதியில் கடவுளே தஞ்சம்.

26 – உழைப்பது எதற்காக? பசி தீர்ப்பதற்காகத்தானே. இவ்வாறு பசியின் காரணத்தால் வாழ்வே ஒரு போராட்டமாகிறது. சபை உரையாளர், உழைப்பது பேராசையால் (4:7–8), எனவே அதுவும் வீண் என்கிறார். ஆனால் ஆசிரியர் இதைத் தனது அனுபவமாகக் கூறுகிறார். 'நெபெஷ்' என்பது பசியைக் குறிக்கிறது. ஆனால் இங்கு பசி எடுக்கும் வயிறைச் சுட்டுகிறது. நேர்மையாளருக்கும் பசியுண்டு. அவருடைய உணவோ ஆன்மிக உணவாகும் (யோவா 6:27).

27 – கயவர் நிலை குட்டையைக் கிளப்பி மீன்பிடிப்பதாகும். சமூக வாழ்வில் ஒரு சிலருக்கு வேலை இதுதான். இம்மனிதர்கள் நாவு நெருப்புத் தணலை அள்ளி வீசுகிறது. இம்மனிதனைப் 'பேய் மனிதன்' என்பதில் தவறில்லை.

28 – இக்கூற்றையும் 2:12; 6:19ஐயும் ஆய்ந்தால் வார்த்தைகள் ஒன்றித்து வருவதைக் காணலாம். சண்டையை உருவாக்குவது புத்தி மாறாட்டம் உடையவனின் செயல். புறங்கூறுவது நண்பர்களைப் பிரித்துவிடுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் கூற்றில் புறங்கூறுதல் ஒரு பயங்கரவாதமாகும்.

29 – வன்முறையாளரின் தீயச்செயல்களாகப் பிறரை ஏமாற்றுவதும் தீயவழியில் நடக்கச் செய்வதும் கூறப்படுகிறது. ஆனால் வன்முறையாளன் பிறரைக் கெடுத்துவிடுபவன் (1:10–16) இன்றைய அனுபவத்தில் புத்தி மாறாட்டம் செய்பவன் ஆவான்.

30 – இந்தக் கூற்று மேலே கூறப்பட்ட தீயோரைப் பற்றிய கூற்றின் (27–28) சுருக்கம் எனலாம். கண்களை மூடுவது முறைகேடானதைச் சிந்திக்க வாயை மூடுவது தீமையைத் திட்டமிட என்று இவ்வசனம் கூறுகிறது.

31 – நரை திரை முதிர்ந்த வயதைச் சுட்டுகிறது. முதியோர் அதே நேரம் ஞானம், முதிர்ச்சி, நேர்மை உடையவர் என்றும் கடவுள் ஆசி பெற்றவரென்றும் கருதப்படுகிறார். இரண்டாம் பகுதி இதை உறுதிப்படுத்துகிறது (காண். வச 17).

32 – தன்னை அடக்கக் கற்றோரே வலிமை மிக்க போர்வீரனை விட ஆற்றலுடையவர் (காண் 24:5–6). தன்னைக் கட்டுப்படுத்த முடிந்தவர் ஞானிகளால் புகழப்படுகிறார் (14:29; 15:18). எகிப்தியரிடையேயும் யூதரிடையேயும் பொறுமை போற்றப்படுகிறது. பொறுமை பற்றி வள்ளுவர்:

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (126) எனக் கூறுகிறார்.

33 – திருவுளச் சீட்டுப் போடுவதைப்பற்றி விவிலியம் கூறுகிறது (18:18; 1சாமு 14:40-42) நோக்கம் வெவ்வேறாயினும் பொதுவாகக் கடவுள் என்ன சொல்கிறார் என்பதறிந்து செயல்படுவதாகும். கடவுளே அனைத்தையும் செய்து முடிப்பார் என்பது யூதரின் ஆழ்ந்த நம்பிக்கை. திருவுளச் சீட்டை மடியிலுள்ள துணியில் வீசுவர், பின்பு கடவுள் திருவுளம் கண்டுபிடிப்பர் (காண் திப 1:26).

செம்பொருள்

அறிஞர்கள் கணிப்பின்படி 16ஆம் அதிகாரம் நீதிமொழி நூலின் ஒரு திருப்புமுனை. அதிகாரங்கள் 10-15 வரை ஒரு தனித்த கூட்டுச் சேர்க்கை. 16ஆம் அதிகாரம் அதன் நடையிலும் குறைவான எதிர்மறை கூற்றுகளிலும் அதன் இறையியலால் கருப்பொருளிலும் வேறுபட்டு நிற்கிறது.

இதற்கு முன்னால் உள்ள கூற்றுகளில் கடவுள் பற்றிப் பேசப்பட்டாலும் இங்குதான் அவரது எல்லாம் வல்ல ஆற்றல் வலியுறுத்தப்படுகிறது. முதல் ஒன்பது கூற்றுகள் மிக அழுத்தமானவையாக உள்ளன. இந்த இரண்டு பகுதிகளையும் எப்படி அறுதியிட்டுக் கூறுவது என்பதில் இன்னும் இறுதி முடிவு இல்லை.

மர்பி கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள பொறுப்பைப் பின்வருமாறு கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் கடவுளே அனைத்திற்கும் காரணர், அவரே அதிபதி. மனித மறைமுகமான செயல்களுக்கும் அவரே காரணம். எனினும் மனிதன் தனது செயல்களின் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. கடவுளைக் குறை கூறுதல் சரியல்ல. இதை இறைவாக்கினர்களின் மனித செயல்களுக்கு உரிய தண்டனைக் கூற்றுகள் வெளிப்படுத்துகின்றன. மனித சுதந்திரம், அவனது முடிவெடுக்கும் ஆற்றல் பற்றிக் கூறாவிடினும் சீஞா 15:11-14

'ஆண்டவரே என் வீழ்ச்சிக்கும் காரணம்' எனச் சொல்லாதே; தாம் வெறுப்பதை அவர் செய்வதில்லை. .. .. அவர் தொடக்கத்தில் மனிதரை உண்டாக்கினார்; தங்கள் விருப்புரிமையின்படி செயல்பட அவர்களை விட்டுவிட்டார்" என உரைக்கிறது.

இதையே இணைச்சட்டமும் (30:19) வலியுறுத்துகிறது. யூதர்களுக்கு இது ஒரு பிரச்சினை இல்லை. பின்வு வந்த யூதக் கிறிஸ்தவ இறையியலார்கள் இதை ஆய்ந்தும் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. கடவுளது பொறுப்பும் மனித பொறுப்பும் பற்றி விவிலியம் பேசுகிறது. ஆனால் அதில் உள்ள சர்ச்சையை விவிலியம் அறியவில்லை.

இறப்பிற்குப் பின்பு பாதாளம் பற்றிக் கூறப்படுகிறது. யார் எப்படி இருப்பார்கள் என்பது தெளிவில்லை. சபை உரையாளர் (9:10 12:7) மண்ணினின்று வந்த உடல் மண்ணுக்குத் திரும்பும், கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பும் என்கிறார். பாதாளத்தில் உள்ளது யார்? என்பது கேள்வியாகவே உள்ளது.

9. குடும்பம் பற்றிய கூற்றுகள் (17:1-28)

*17:1 சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட மன அமைதியோடு பழஞ்சோறு
சாப்பிடுவதே மேல். 2 முதலாளியின் மகன் ஒழுக்கங்கெட்டவனாயிருந்தால், அறிவுள்ள
வேலைக்காரன் அவனை அடக்கி ஆள்வான்; ஏனைய சகோதரர்களோடு உரிமைச் சொத்தில்
பங்கு பெறுவான். 3 வெள்ளியை, உலைக்கலமும் பொன்னைப் புடக்குகையும் சோதித்துப்
பார்க்கும்; உள்ளத்தைச் சோதித்துப் பார்ப்பவர் ஆண்டவர். 4 தீங்கு விளைவிக்கும்
பேச்சைத் தீயவன் விருப்பத்தோடு கேட்பான்; அவதூறான கூற்றினைப் பொய்யன் ஆவலோடு
கேட்பான். 5 ஏழையை ஏளனம் செய்கிறவர் அவரை உண்டாக்கினவரையே இகழுகிறார்;
பிறருடைய இக்கட்டையைப் பார்த்து மகிழ்கிறவர் தண்டனைக்குத் தப்பமாட்டார். 6
முதியோருக்கு அவர்களுடைய பேரப்பிள்ளைகள் மணிமுடி போன்றவர்கள்; பிள்ளைகளின்
பெருமை அவர்கள் தந்தையரே. 7 பயனுள்ள பேச்சுக்கும் மதிகேடனுக்கும் தொடர்பேயில்லை;
பொய்யான பேச்சும் அரசனுக்குப் பொருந்தவே பொருந்தாது. 8 கைகூலி கொடுப்பவர்
அதை ஒரு மந்திரத் தாயத்தைப் போலப் பயன்படுத்துகிறார்; அதைக் கொண்டு அவர்
எடுத்த காரியமனைத்தையும் நிறைவேற்றுவார். 9 குற்றத்தை மன்னிப்பவர் நட்பை நாடுகிறவர்;
குற்றத்தைத் திரும்பத் திரும்ப நினைப்பூட்டுகிறவன் நட்பை முறிப்பான். 10 சொரணை
கெட்டவனுக்கு நூறு அடி கொடுப்பதைவிட உணர்வுள்ளவருக்கு ஒரு சொல் சொல்வது
மிகுந்த பயனைத் தரும். 11 தீயவர் கலகம் செய்வதையே நாடுவர்; அவர்களை அழிக்கக்
கொடிய தூதர் அனுப்பப்படுவார். 12 மடமையில் மூழ்கிக் கிடக்கும் மதிகேடனுக்கு
எதிர்ப்படுவது குட்டியைப் பறிகொடுத்த கரடிக்கு எதிர்ப்படுவதைவிடக் கேடானது. 13
நன்மை செய்தவருக்கு எவர் தீமை செய்கிறாரோ, அவர் வீட்டை விட்டுத் தீமை அகலாது.
14 வாக்குவாதத்தைத் தொடங்குவது மதகைத் திறந்துவிடுவது போலாகும்; வாக்குவாதம்
மேலும் வளருமுன் அதை நிறுத்திவிடு. 15 குற்றம் செய்தவரை நேர்மையானவரென்றும்
நேர்மையானவரைக் குற்றம் செய்தவரென்றும் தீர்ப்புக் கூறுகிறவர்களை ஆண்டவர்
அருவருக்கிறார். 16 மதிகேடர் கையில் பணம் இருப்பதால் பயனென்ன? ஞானத்தைப்
பெற்றுக்கொள்ளச் செலவிடுவாரா? அவருக்குத் தான் மனமில்லையே! 17 நண்பன் எப்போதும்
அன்பு காட்டுவான்; இடுக்கணில் உதவுவதற்கே உடன் பிறந்தவன் இருக்கின்றான். 18
அடுத்தவர் கடனுக்காகப் பொறுப்பேற்று, அவருக்காகப் பிணையாய் நிற்பவன்
அறிவில்லாதவனே. 19 வாதத்தை நாடுகிறவன் குற்றப் பழியை நாடுகிறான்; இறுமாப்பான
பேச்சு இக்கட்டை வருவிக்கும். 20 கோணல் மதியுள்ளவர் நன்மையைக் காணார்; வஞ்சக
நாவுள்ளவர் தீமையில் சிக்குவார். 21 மதிகேடனைப் பெற்றவர் கவலைக்குள்ளாவார்.
மூடருடைய தகப்பனுக்கு மகிழ்ச்சியே இராது. 22 மகிழ்வார்ந்த உள்ளம் நலமளிக்கும்
மருந்து; வாட்டமுற்ற மனநிலை எலும்பையும் உருக்கிவிடும். 23 கயவர் மறைவாகக்
கைக்கூலி வாங்கிக்கொண்டு, நியாயத்தின் போக்கையே மாற்றிவிடுவார். 24 உணர்வுள்ளவர்*

ஞானத்திலேயே கண்ணாயிருப்பார்; மதிகேடரின் கவனமோ நாற்புறமும் அலையும். 25 மதிகெட்ட மகனால் தந்தைக்குக் கவலை; பெற்ற தாய்க்குத் துயரம். 26 நேர்மையானவருக்கு அபராதம் விதிப்பதும் நன்றல்ல; மேன்மக்களுக்குக் கசையடி கொடுப்பதும் முறையல்ல. 27 தம் நாவைக் காத்துக்கொள்பவரே அறிவாளி; தம் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்பவரே மெய்யறிவாளர். 28 பேசாதிருந்தால் மூடனும் ஞானமுள்ளவன் என்று கருதப்படுவான்; தன் வாயை மூடிக்கொள்பவன் அறிவுள்ளவன் எனப்படுவான்.

பின்புலம்

இந்த அதிகாரம் பல கருத்துகளை கூற்றுகளிடையே படர விடுக்கின்றது. அலென்சோ ஷெக்கல் என்ற அறிஞர் விவாதக் கூற்றுகளாக 1, 3, 9, 14, 15, 19, 23, 26 வசனங்களையும், குடும்பம் பற்றிய கருத்தைக் கொண்டதாக (வீடு, சகோதரர், நண்பர்கள், தந்தை, மகன்) 1, 2, 6, 9, 13, 17, 18, 19, 21, 25 வசனங்களையும் காண்கிறார். இரண்டு கருத்துகளுக்கும் தொடர்பு உண்டு என்கிறார். எதிர்மறை இணியணி குறைவு.

அதிகாரத்தை இணைக்கும் பொருள் இல்லை என்ற குறைபாடு உண்டு. ஞானிகள் அளிக்கும் 'பயிற்சிகள் பயனற்றுப் போகின்றன' என்பதும் இவ்வதிகாரத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது (காண். 1-6, 7-15). ஓய்பிரே போன்றோர் நல்லதொரு அமைப்பு இவ்வதிகாரத்தில் இல்லை என்கின்றனர்.

சொல்விளக்கம்

1 – 'அதைவிட இது நல்லது' எனக் கூறும் நீதிமொழிகளுள் ஒன்று (15:16-17; 16:18) சுவையான விருந்தை சண்டை சச்சரவுகள் உள்ள வீட்டில் உண்பதைவிட அமைதியாக பழஞ்சோறு சாப்பிடுவது மேலானது. அன்பு அமைதியையும் குழப்பம் பகைமையையும் விளைவிக்கின்றன (10:12). இந்த நீதிமொழி அமைதியில் எளிய உணவு உண்பது மிகமேன்மையானது என்ற படிப்பினையைத் தருகிறது.

அமெனமொப்பெ என்ற இலக்கியமும் இவ்வுணர்வு பற்றிக் கூறுகிறது (9:7-8). சிலர் 'குழப்பம் நிறைந்த பலி' அதாவது பலியிடுவோரிடையே உள்ள சச்சரவுளைக் குறிக்கிறது என்பர். இங்குள்ள இறைச்சி வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உண்ணப்படும். பற்றுள்ள குடும்பம் ஆனால் சண்டைகள் நிறைந்தது என்பது ஒரு விளக்கமே.

2 – இங்கு ஒழுக்கங்கெட்டவனாய்த் தனது கடமைகளை உதறித்தள்ளும் உதாரி மைந்தனைப் பார்க்கிறோம். பொதுவாக மகன்களுக்கிடையே பகிரப்படும்

சொத்தில் மூத்தவருக்கு இருமடங்கு கிடைக்கும் (இச 21:17). ஊழியர் மதிப்போடு நடத்தப்பட்டாலும் சொத்தில் பங்கு இல்லை (19:10; சஉ 10:7).

3 - பொன்னைப் புடமிடுவர்; வெள்ளியை உலையிடுவர்: இரண்டும் தூய்மை பெறவே. மனிதனும் புடமிடப்படவேண்டும். மனிதக் கணிப்பிலல்ல (22:21); ஆண்டவரே அவனை புடமிடுவார். ஏனெனில் அவனது உட்புறம் அவருக்கே வெளிச்சம் (எரே 17:9-10; 20:10; 15:11).

4 – பேச்சு, கூற்று என்ற வார்த்தைகள் கட்டுக்கடங்காத நாவின் வேலையைக் குறித்துக் காட்டுகின்றன. பொய்யனும் தீயவனும் இவைகளின் கர்த்தாக்கள். இவைகள் விளைவிக்கும் காயங்கள் மிக வேதனை தருபவை (16:27). இவர்களின் தீயசெயல்களை நீதிமொழி முன்வைக்கிறது.

5 - ஏழைகளை ஒடுக்குவது ஒருசிலருக்கு கைவந்தகலை. இங்கு ஏழைகளுக்கு எதிராகக் கொள்ளும் மனநிலையைக் காண்கிறோம். இதனால் ஏழைகளுக்கு ஏற்படும் பேரிடர் கொஞ்சநஞ்சமல்ல; அயலானுக்கு (ஏழைக்கு) அளிக்கும் மதிப்பே ஆண்டவருக்களிப்பது. அயலானை இகழ்பவன் ஆண்டவனை இகழ்கிறான். ஏழைக்கு இரங்குபவன் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறான் (19:17). ஏழைகளை இறைவன் தன்னோடு சேர்த்துப் பார்க்கிறார் (மத் 25:25).

6 – மூன்று தலைமுறையினர்களின் உறவு பற்றிப் பேசப்படுகிறது. இந்த உறவு நீண்ட கால மதிப்பையும் இனப்பெருக்கத்தையும் காட்டுகிறது. முதியோரும் பேரப்பிள்ளைகளும், பிள்ளைகளும் பெற்றோர்களும் மதிப்போடும் மாண்போடும் வாழுகின்ற முறையை இந்த நீதிமொழி குறிக்கின்றது. முதியோருக்கு பேரப்பிள்ளைகளோடு வாழ்வது நீண்ட ஆயுளையும் அழியாமையையும் எடுத்துக்காட்டுகிறது. தந்தையை மதிப்பதே பிள்ளையின் மதிப்புமாகும் (காண் நீமொ 3:11).

7 – இக்கூற்றிலுள்ள இரண்டாம் பகுதி முதல் பகுதிக்கு வலுவூட்டுகிறது. இங்குப் பயனுள்ள பேச்சு பொய்யான பேச்சுக்கு எதிராகவும் அரசன் மதிகேடனுக்கு எதிராகவும் காட்டப்படுகின்றனர். அவனுக்குப் பயனுள்ள (உண்மையுள்ள) பேச்சுதான் நீதியானது. மூடனிடமிருந்து பயனுள்ள பேச்சை எதிர்பார்க்க இயலாது. சான்றோர்களிடம் பொய்யின் நிழல் இருக்கக் கூடாது.

8 – கைக்கூலியால் நினைத்தைச் சாதிக்கமுடியும் என்ற உண்மை இங்குக் குறிப்பிடப்படுகிறது. இதைக் கொடுப்பவருக்கு நிறை சலுகைகளும் சாதகமான

தீர்ப்பும் வழங்கப்படும். கைக்கூலி வெற்றியைத் தரும் ஒரு மயக்க மருந்துதான். வசனம் 18:16 கூறும் அன்பளிப்பும் வசனம் 17:23இல் கூறப்படும் கைக்கூலியும் வேறுபாடானவையா? பெயர் வேறு என்றாலும் அதன் குறிக்கோள் சலுகைகள் பெறுவதுதானே. ஞானிகளின் சிந்தனையில் என்ன கருத்து நிலவுகிறது என்பதைச் சொல்வது கடினம். வசனம் 21:14 தவறான விளைவுகளைக் கொடுக்கும் அன்பளிப்புப் பற்றியும் கூறுகிறது. இதை வெறும் கைக்கூலி பற்றிய கூற்று என்பதா? அல்லது புதிரானது அல்லது நடக்க இயலானது என்பதா?

9 – இக்கூற்றின் குறிக்கோள் நம்மைப் பாதுகாப்பது, குற்றங்களை மன்னிப்பது. குற்றங்களை மறப்பது நாட்டைப் பாதுகாக்க உதவும் (காண். 10:12,18). குற்றத்தை இன்னும் கூர்மைப்படுத்திப் பேசினாலோ அல்லது மறுபடியும் அடிக்கடி ஞாபகப்படுத்தினாலோ நல்ல நட்பு சிதைந்துவிடும். இதை லேவி 19:18; சீஞா 19:16இல் காணலாம் "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்பது தமிழ்ப் பழமொழி.

10 – தவறைச் சுட்டிக்காட்ட அதை ஒத்துக்கொள்வதற்கும், திருத்தும்போது அதை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கவேண்டும். சொல்வதற்குச் செவிமடுத்தால் அடிப்பதை நிறுத்திக்கொள்வது நல்லது. திருந்தாதவனைக் கண்முன் கொண்டு நூறு அடி என்று கூறுவது ஒரு மிகைப்படுத்தலாகும். (இச 12:3 கூறும் தண்டனையைவிட இது இரு மடங்குக்கும் பெரிது). அடிகொடுப்பது பொதுவாகக் குழந்தைகளுக்குத்தான். இங்கு வயதுவந்தவருக்குக் கொடுப்பதாகக் கூறுப்படுகிறது. நூறு அடி கொடுத்திருக்க வாய்ப்பில்லை. ஞானமுடையோர் எப்போதும் நல்லவற்றிற்குச் செவிமடுக்கவேண்டும் என்பதை இக்கூற்று விளக்குகிறது. 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்லவனுக்கு ஒரு சொல்.'

11 – தீயவர் செய்யும் கலகம் யாரை எதிர்த்துச் செய்யப்படுகிறது. கடவுளையா? அரசனையா? அல்லது சமூகத்தையா? இவர்களை அடக்க அனுப்பப்படும் கொடிய தூதர் யார்? அத்தூதரை அனுப்புவது யார்? தெளிவில்லை. ஆனால் ஒன்று குழப்பம் செய்பவருக்குத் தண்டனை உண்டு.

12 – இக்கூற்றில் உள்ள நகைச்சுவை நன்றாக உள்ளது. மதிகேடர்கள் கரடியைப்போல் ஆபத்தானவர்கள். ஏனெனில் அவர்களது மடமை காயப்படுத்தும். மடயரை விட்டு (14:7) ஞானியரிடம் உறவு (13:20) வைப்பது பற்றி ஞானநூல் கூறுகின்றது. மடமை ஞானத்தைவிட சீக்கிரம் தொற்று நோய்போல் பரவுகிறது. மடமை செய்யும் தீமையைக் காட்டும் கூற்றுகள் அதிகம். ஞானம் தரும்

நன்மைகளைக் காட்டும் கூற்றுகள் அதிக அளவுக்குக் காட்டப்படுவதில்லை. இது மனித இயல்பு பற்றிய எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் அழிவைப்பற்றி எச்சரிப்பது, நல்லது செய்யத் தூண்டும் அறிவுரையைவிட எளிதாக உள்ளது. எனினும் அதிகாரங்கள் 1-9 நல்வழியைக் காட்டுகின்றன என்பதை மறுக்க முடியாது. ஞான நூல்களும் ஞானத்தைக் கண்டடைவதையே தங்களது குறிக்கோளாகக் கொண்டன.

13 – தீமை பல விளைவுகளைத் தருகிறது. தீமை மனிதரைவிட்டு விலகுவதில்லை. இன்னொருவருக்குத் தீமை செய்தாலும் அது தொடர்கிறது. நன்மை செய்பவருக்குத் தீமை செய்தால் அதன் விளைவு இருமடங்காகிறது. செய்வினை (வினைப்பயன்) தீமை செய்தவரைமட்டுமல்ல அவர் குடும்பம் முழுவதையும் ஆக்கிரமித்துவிடுகிறது. இது கடவுள் செயலா? அல்ல மனித மதிகேட்டின் விளைவா?

14 – விவாதம் துவாரம் வழியே பீறிட்டுப்பாயும் மதகுக்கு ஒப்பிடப்படுகிறது. புதைந்து கிடக்கும் மனத்தாங்கல்களை விவாதம் தீர்த்துவைக்க இயலாது. மாறாக அது முற்றும், அது சண்டைக்கு இட்டுச் செல்லும். எதைப்பற்றி விவாதத்தாலும் விவாதம் பலன் தருவதில்லை. அதை நிறுத்திவிடுவதே நலம்.

15 – நீதியைச் சிதைத்துச் சின்னாப்பின்னமாக்குவதுதான் நீதிமானைக் குற்றவாளி எனத் தீர்ப்பிடுவது. இது நீதியுள்ள கடவுளைக் கன்னத்தில் அறைவதுபோலாகும். அது ஆண்டவருக்குச் செய்யும் துரோகம். கடவுள் அதை அருவருக்கிறார் (காண். இச 25:1; எசா 5:23).

16 – மதிகேடரின் நம்பிக்கையற்ற சூழலை இந்தக் கூற்று வலியுறுத்துகிறது. ஞானியாவதற்கு வழிமுறைகள் இருப்பினும் அவைகளை இவர் பயன்படுத்தமாட்டார். இதில் ஒரு நகைப்புக்குரிய நிலையைக் காணலாம். மதிகேடன் ஞானத்தைப் பெறுவது செல்வம் ஈட்டுவதுபோல்தான் என நினைக்கிறான். ஞான வகுப்புகளில் கற்றுக்கொள்ளக் கொடுக்கப்படும் பணத்தை இது குறிக்கவில்லை. ஏனெனில் ஞானத்தைக் காசு கொடுத்து வாங்க இயலாது. 'செல்வம் கொடுத்து ஞானம் பெறுவது' ஓர் உருவகச் சொல்; இங்கு மதிகேடனிடம் காசு இருந்தும் மனம் இல்லை, ஞானத்தைப் பெறவேண்டுமென்ற இலக்கு இல்லை (மேலும் காண். 17:24; 26:7).

17 – இந்தக் கூற்றை இருவகையாகக் கொள்ளலாம். நேர்மறை இணையணியாக அல்லது எதிர்மறை இணையணியாகக் கொள்ளலாம். நேர்மறையாகக் கூறும்போது நண்பனின் நம்பகத் தன்மை பற்றிக் கூறுகிறது. துன்பம் வரும்போது அவன் உடன்பிறந்த சகோதரனாகிவிடுகிறான் (காண். 18:24 27:10). உற்ற நண்பன் உயிர்த் தோழன். எதிர்மறை இணையணியாகப் பார்க்கும்போது உற்ற நண்பரைவிட சகோதரன் மேலானவன் என்று கூறலாம். துன்ப நேரத்தில் சகோதரனில் உதவி உறுதியானது. சகோதரன் எந்த இடுக்கண், இடர்பாடுகள் வரும்போதும் தனது உண்மையான உறவில்நிலை நிறுத்துகிறான். இரத்தம் தண்ணீரைவிட கெட்டியானதுதானே.

18 – இக்கூற்று பிறருக்காகப் பிணையம் வைப்பது ஆபத்தானது என்பதைக் கூறுகிறது. நீதி 6:1-5 கூறும் கூற்றுகளை இங்கு நினைவில் கொள்வது சிறப்பானது. இயேசுவின் பொன்மொழி உன்னிடம் கேட்கிறவனுக்குக் கொடு, உன்பொருளை எடுத்துக்கொள்பவனிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதே (லூக் 6:30) என்பது எல்லைதாண்டிய அன்பைக் காட்டுகிறது. பிணையம் நிற்பது ஆபத்து என்றாலும் ஆபத்து நேரத்தில் உதவுவது நல்லது.

19 – விவாதத்தில் இறங்குவதால் பயனைவிட தொல்லையே அதிகம். விவாதத்தில் வெற்றிபெறுபவர் யாருமில்லை. நண்பர்களும் விவாதத்தால் பகைவர்களாவது உண்டு. விவாதம் தனது வீண் பெருமையை காட்ட, நீ அறிவாளி என்று காட்ட உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறது. உன்னை எதிர்ப்பவர் உனது விவாதத்தில் நியாயம் இருந்தாலும் அதை ஒத்துக்கொள்வதில்லை.

20 – வஞ்சக நெஞ்சினர் 11:20இல் கூறப்படுவது இங்கே கோணல் மதியுள்ளவர் என்று கூறப்படுகிறது. வஞ்சக நெஞ்சு கடவுளுக்கு அருவருப்பானது. இப்படிப்பட்டவர்கள் தடம்புரண்டவர்கள், நம்பமுடியாதவர்கள், நல்லது எது என அறிய முடியாதவர்கள். இவர்களோடு இணையானவர்களே வஞ்சக நாவினர். பொய்யும் புரட்டும் திரட்டும் அவர்கள் நாவில் நடமாடும் நஞ்சுகள். இவர்களது முடிவு தீமையில் சிக்கிமடிவதுதான்.

21 – மதிகேடன், மூடன் இருவரும் மகிழ்ச்சியைக் கலைக்கக் கூடியவர்கள். குடும்பங்களின் மகிழ்வே குழந்தைகள், மிகச்சிறப்பாக நல்வழி நடக்கும் புதல்வர்கள். அவர்களுக்கு அளிக்கும் பயிற்சி முக்கியமானது. பயிற்சி பெறாக் குழந்தைகளால் குடும்பத்தின் அமைதி கலைந்து விடுகிறது. இந்தக் கருத்தை நீமொ

10:1; 15:20; 19:13களில் காணலாம். வசனங்கள் 21-25 ஒரே கருத்தை வலியுறுத்துவதாக உள்ளன என்று ஒய்பிரே கூறுகிறார். மைன்ஹோலட் என்பவர் இது 27 வசனம் வரை செல்கிறது என்கிறார்.

22 - மகிழ்ச்சி நலம் அளிக்கம் மருந்தாகும் (15:13). இந்த நீதிமொழி மனதுக்கும் உடலுக்கும் உள்ள நெருங்கிய உறவைப் பற்றிப் பேசுகிறது. ஒன்றை ஒன்று தாங்கி நிற்கிறது. திருமந்திரம் 'உடம்பால் அழியின் உயிரால் அழிவர்' எனக் கூறுகிறது. அதேபோல உள்ளம் அல்லது மனது மகிழ்வாயிருப்பின் உடம்பும் குணமடையும் (காண் 14:13, 30).

23 - கைக்கூலி வாங்குவது மிகமிக கண்டனத்துக்குரியது. இந்தக் கூற்று தீர்ப்பு வழங்கும் சூழலைக் கூறுகிறது. நீதித் தீர்ப்பு வழங்குகையில் பெறப்படும் கைக்கூலியை 'மனமகிழ்ந்து ஏற்கும் கைக்கூலி' என்று மர்பி கூறுகிறார். இது கைக்கூலி கொடுப்பவரது மனதையும் குறிக்கும்.

கைக்கூலியை அன்பளிப்பு என்ற பெயரிலும் கூறுவர். அன்பளிப்பு நல்ல மனதோடு நல்லவை செய்ததற்காகக் கொடுப்பது. அது கைக்கூலி எனக் கூறவியலாது (18:16). ஆனால் தவறான செயலுக்காக தவறாகப் பெரிய பேறுகள் கிடைக்கவேண்டி நன்கொடை கொடுப்பதும் கைக்கூலியே என்பதை மறக்கக்கூடாது (காண் வ. 8).

24 - ஞானத்தின் ஆழத்தை அல்லது அதன் இல்லாமை பற்றி இங்குப் பேசப்படுகிறது. ஞானத்தைத் தேடுபவர் அதைத் தன் இலக்காகத் தேடலின் நிறைவாகத் தேடிக்கொண்டே இருப்பார். ஆனால் மூடன் பரபரப்பாகக் கவனமும் நோக்கமும் எதுவுமின்றி எதைத் தேடவேண்டுமோ அதை விட்டுவிட்டு மற்ற எல்லாவற்றிலும் தனது மனதைப் பறிகொடுத்துவிடுகிறான். மூடனைப்பற்றி ஞானம் கடினமாகவே பேசுகிறது. ஞானம் மூடனுக்கு எட்டாக் கனி.

25 - மதிகெட்ட புதல்வர்கள் பெற்றோருக்குத் தொல்லை மட்டுமல்ல, இழுக்கும் அவமானமுமாவர் (வச 21).

26 - தீர்ப்பளிக்கும் நீதிமன்றச் சூழலை இங்கே காணலாம். கொடுக்கப்படும் தண்டனை நஷ்ட ஈடாகவோ, கசையடியாகவோ (இச 25:1-2) இருக்கலாம். நேர்மையானவர்களுக்கு அநீதியாக வழங்கப்படும் தண்டனை மனவருத்தத்திற்குரியது. மேன்மக்கள் என்பதை நேர்மையாளர்கள் எனக்

கொள்ளவேண்டும் (வச 7). மேலும் இது அநீத முறையில் வழங்கப்படும் தீர்ப்பாகக் கொண்டால் வச 15ஐ வாசிப்பதும் நல்லது.

27-28 - நாவு காப்பவர் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்பவர்: இந்த இரண்டு கூற்றுகளை இணைத்துப் பார்த்தல் நல்லது. பேச்சு, பேசாதிருத்தல் இவை இரண்டுக்கும் உள்ள அறிவு சார்ந்த வேறுபாடுகள் உண்டு. நாவை, உணர்ச்சிகளை பக்குவமாக அடக்கிக் கொள்பவர் ஞானிகள் என்கிறது வசனம் 27. அதே சமயம் பேசாத மூடனையும் அறிவாளி என்பது ஏற்புடையதல்ல (வச 28). எகிப்திய இலக்கியங்கள் பொறுமை, அமைதி, சினத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பண்புடையோரை 'வெப்பமுடையவர்' எனக் கூறுகின்றன (காண் 14:29). வாய் திறந்தால் தவறுகளே வெளிப்படுவதால் மூடர் அமைதி காக்கின்றனர் (சஉ 10:12-14; சீஞா 28:5-8; யோபு 13:5). அவரது அமைதி பற்றி எல்லோரும் அறிவர். மூடனும் அமைதி காத்தால் அவனும் தத்துவஞானி எனப்படுவான் (இலத்தீன் பழமொழி).

செம்பொருள்

பல கருத்துரைகளைக் கொண்டதாக இந்த அதிகாரம் அமைகிறது. மையக் கருத்துரையாக ஏதுமில்லை. எனவே ஒரு சில நல்ல கருத்துகளைப் பார்த்தால் 'உள்ளத்தைச் சோதித்துப் பார்ப்பவர் ஆண்டவர்' என்பது விவிலியக் கருத்தாக வருகிறது (வச 3). இது இறையியல், உளவியல் தாக்கம் கொண்டுள்ளது.

அடுத்தது ஏழைகளிடம் நாம் வைத்திருக்கும் மனப்பாங்கு. அவர்கள் கடவுளின் படைப்புகள். கடவுள் அவர்கள் மீது கரிசனை உடையவர். எனவே கைக்கூலி கொடுத்து நீதியைக் கவிழ்ப்பது, ஏழைகளை வஞ்சிப்பது ஏற்புடையதல்ல (வசனங்கள் 5, 8, 23). மதிகேடனுடைய மடமை அப்பட்டமாக வெளிப்படுத்தப்படுகிறது. மதிகேடன் திருத்த முடியாதனாயிருக்கிறான். எந்த முயற்சியும் பயனளிப்பதில்லை (காண் 17:10, 12, 16, 24, 25). மேலும் பேசாது அமைதிகாப்பது, சரியானதா இல்லையா என்பது ஞனிகளின் விவேகத்தை வெளிப்படுத்துகிறது. நல்ல நேரத்தில் நல்ல சொல் வரவேற்கத்தக்கது (சீஞா 20:5-7).

10. நட்பும் நாவடக்கமும் (18:1-24)

*18:1 பிறரோடு ஒத்துவாழாதவர் தன்னலத்தை நாடுகின்றார்; பிறர் கூறும் தக்க
அறிவுரையும் அவருக்கு எரிச்சலை உண்டாக்கும். 2 மதிகேடர் எதையும் அறிந்து கொள்ள
விரும்பமாட்டார்; தம் மனத்திலுள்ளதை வெளியிடவே விரும்புவார். 3 கயமையும் இழிவும்
சேர்ந்தே வரும்; மதிப்பை இழப்பவர் இழிசொல்லுக்கு ஆளாவார். 4 மனிதரின் சொற்கள்
ஆழ்கடல் போன்றவை; அவை பாய்ந்தோடும் ஒரு நீரோட்டம், ஞானம் சுரக்கும் ஊற்று. 5
பொல்லாருக்குக் கருணை காட்டுவது முறையல்ல; நேர்மையானவருக்கு நீதி கிடைக்காமல்
தடுப்பது நேரியதல்ல. 6 மதிகேடர் பேசத் தொடங்கினால் வாக்குவாதம் பிறக்கும்; அவரது
பேச்சு அவருக்கு அடிவாங்கித் தரும். 7 மதிகேடர் தம் வாயால் அழிவார்; அவர் பேச்சு
அவர் உயிருக்கே கண்ணியாகிவிடும். 8 புறணி கேட்பது பலருக்கு அறுசுவை உண்டி
உண்பதுபோலாம்; அதை அவர்கள் பேராவலோடு விழுங்குவார்கள். 9 தன் வேலையில்
சோம்பலடைகிறவன் அழிவை உண்டாக்குகிறவருக்கு உடன் பிறந்தவன். 10 ஆண்டவரது
திருப்பெயர் உறுதியான கோட்டை; அவருக்கு அஞ்சி நடப்பவர் அதனுட்சென்று அடைக்கலம்
பெறுவார். 11 செல்வர் தம் செல்வத்தை அரண் என்றும் உயரமான மதில் என்றும்
எண்ணிக்கொள்கிறார். 12 முதலில் வருவது இறுமாப்பு; அதனை அடுத்து வருவது அழிவு;
மேன்மை அடையத் தாழ்மையே வழி. 13 வினாவைச் செவ்வனே கேட்பதற்கு முன்
விடையளிப்பவர்களுக்கு அச்செயலே அவர்களுக்கு மடமையும் இகழ்ச்சியும் ஆகும். 14
மன வலிமை நோயைத் தாங்கிக்கொள்ளும்; மனம் புண்பட்டால் அதைக் குணப்படுத்த
யாரால் இயலும்? 15 உணர்வுள்ளவர் மனம் அறிவைப் பெருக்கிக்கொள்ளும்; ஞானமுள்ளவர்
செவி அறிவுபெறுவதில் நாட்டங்கொள்ளும். 16 ஒருவர் கொடுக்கும் அன்பளிப்பு அவருக்கு
நல்வழி பிறக்கச் செய்யும். அவரைச் பெரியோர்முன் கொண்டு போய்ச் சேர்க்கும். 17
வழக்கில் எதிரி வந்து குறுக்குக் கேள்வி கேட்கும் வரையில் வாதி கூறுவது நியாயமாகத்
தோன்றும். 18 திருவுளச் சீட்டு விவாதத்தை முடிவுறச் செய்யும்; வாதிடும் வலியோரின்
வழக்கைத் தீர்க்கும். 19 உன் இனத்தானுக்கு உதவி செய், அவன் உனக்கு அரணாயிருப்பான்;
அவனோடு நீ சண்டையிட்டால் அவன் கதவைத் தாழிட்டுக் கொள்வான். 20 ஒருவர்
நாவினால் எதை விதைக்கிறாரோ அதையே உண்பார்; தம் பேச்சின் விளைவையே அவர்
துய்த்தாக வேண்டும். 21 வாழ்வதும் நாவாலே, சாவதும் நாவாலே; வாயாடுவோர் பேச்சின்
பயனைத் துய்ப்பர். 22 மனைவியை அடைகிறவன் நலமடைவான்; அவன் ஆண்டவரது
நல்லாசியையும் பெறுவான். 23 ஏழை கெஞ்சிக் கேட்பார்; செல்வரோ கடுகடுப்புடன் மறுமொழி
கொடுப்பார். 24 கேடு வருவிக்கும் நண்பர்களுமுண்டு; உடன் பிறந்தாரைவிட மேலாக
உள்ளன்பு காட்டும் தோழருமுண்டு.*

பின்புலம்

எதை முன்னிறுத்த இந்த அதிகாரம் எழுதப்பட்டது என்பது தெளிவாக இல்லாவிட்டாலும் ஆங்காங்கே குறுகிய கருத்துகள் பேசப்படுவதை அறிஞர்கள் கண்டு கொள்கின்றனர். மைன்கோல்ட் உடன் பிறந்தவன் என்ற கருத்தை மையமாகக் கொண்டு (9, 19, 24) இந்த அதிகாரத்தை மூன்றாகப் பிரிக்கிறார்.

1- 9	-	திசை மாறும் கூற்றுகள்
10-19	-	ஞானிகளுக்கு உரிய வலிமை
20-24	-	நட்பும் நாவடக்கமும்

இன்னும் சிலர் சொல்லலும் கேட்டலும் என்ற கருத்துப் பற்றிப் பேசப்படுகிறது என்பர் (2, 4, 6, 7, 8, 13, 15, 20, 21, 23).

சொல்விளக்கம்

1 – பிறரோடு ஒத்து வாழாதவர்: சமூகத்திலிருந்து பிரிந்து செல்பவர்கள் ஒரு குடும்பமாகவோ ஒரு இனமாகவோ இருக்கலாம். இவர்கள் தங்கள் விருப்பப்படி தம் வழிகளில் நடப்பர். இங்கு தனி நபரைப் பற்றிக் கூறப்படுகிறது. இது இஸ்ரயேல் குடும்ப உணர்வுக்கு மாறுபட்டது. இப்படிப்பட்டவர் சமூகத்திற்கு எதிராகச் செயல்படுகிறார். சமூக விழுமியங்களை, நன்னெறிகளை இவர் ஏற்பதில்லை. என்பதின்மர் நூல் இவர் நன்னெறிகளை ஏற்க மறுக்கிறார், எனவே அவர் ஒரு குற்றவாளியாகிறார் என்கிறது.

2 – மதிகேடர்: இவர் பொருளற்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருப்பார். நல்ல அறிவுரையைக் கேட்கமாட்டார். தனக்கு எல்லாம் தெரியும் என்ற செருக்கே அவரை மூடராக்கிவிடுகிறது. பொதுவாக இதயமும் வார்த்தையும் ஒத்திசைக்கும் நாதமாகக் கொள்வோம். இங்கு இதயமும் அவரது வார்த்தையும் வேறுபட்டு நிற்கின்றன (2ஆ).

ஒருவர் கூறும் வார்த்தை அவர் யார் என்பதைக் காட்டிவிடும். மூடர் ஞானமுடையவருக்கு மாறுபாடாக இருக்கிறார் (வச 15).

3 – இழிந்த செயல் இழிவைக் கொணரும். மதிப்பை இழப்பவர் எல்லாம் இழந்துவிடுவார். ‘ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.’ ஒருவர் தன் பண்பை இழந்தால் அனைத்தையும் இழந்து விடுவார்.

4 – ஆழ்கடல் என்பதை ஆழமான நீர்நிலை எனலாம். ஆழமான நீர்நிலை என்பது நாம் கொள்ளும் பொருளைப் பொறுத்து அமைகிறது. ஆழமான நீர்நிலை தேங்கி நிற்கும் ஆழம் காணமுடியாத நீர் நிலை எனலாம். எனவே குழம்பியும், பிரிய முடியாததாகவும் உள்ளது. இது பாய்ந்தோடும் நீரோட்டம், ஞானம் சுரக்கும் ஊற்றுக்கு மாறுபாடாக உள்ளது (வச 4ஆ). ஞானத்தைப் பொங்கி வழியும் நீரூற்றுக்கு ஒப்பிடுவர் (10:11; 13:14; 14:27; 16:22) எனவே ஆழமான நீர்நிலை

20:5 கூறுவதுபோல் நேர்மறையான பொருளைக் கூறினால் இது உயர்ந்த பொருளைத் தருகிறது. ஞானிகளின் வார்த்தைகளில் செறிந்த ஞானம் உலாவரும்.

5 - இது ஒரு நல்ல கூற்றாகக் கொள்ள முடியவில்லை (காண் 16:29; 17:26) குற்றம் செய்தவருக்குச் சார்பாகச் செயல்படுவது ஒருதலைச் சார்பாகத் தீர்ப்புச் சொல்வதாகும். அது குற்றவாளியை மகிழ்விக்கும். அவன் நிமிர்ந்த நடைபோடுவான். இங்கு நடப்பது ஓர் அவலம். மேல் நிலையில் உள்ளோர் கீழ்நிலையில் உள்ளோரை தலை குனியவைத்து, போராடும் ஆர்வத்தை அடக்கிவிடுகிறார். நீதி வழங்குபவர் அநீதியாகச் செயல்படுகிறார்.

6 - இக்கூற்றுகள் மதிகேடர்களின் கூற்றுகளையும் அதனால் வரும் தீய விளைவுகளையும் எடுத்துக் கூறுகின்றன. வள்ளுவரும் நாவைக் காக்காவிட்டால் தண்டனை கிடைக்கும் என்கிறார். "தீய வார்த்தைகளால் ஒருவருக்கு அடி கிடைக்கிறது. இது தீர்ப்புச் சூழலைக் காட்டுகிறது. இல்லையெனில் கவனமாகப் பேசாத வன்மையான விவாதம் வேதனையில் முடியும் நிலையைக் குறிக்கிறது.

7 - இக்கூற்று மதிகேடர்களின் கட்டவிழ்த்துவிடும் பேச்சால் வரும் தண்டனையையும் அதற்காக அனுபவிக்க வேண்டிய வேதனையையும் குறிக்கிறது.

8 - புறணி பேசுவதைக் கேட்பதைப்போல் மகிழ்வான செயல் வேறு ஏதும் இல்லை என்பது போன்று பலர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அனுபவமும் அதை எடுத்துரைக்கிறது. பிறரைப் பற்றிப் பேசிக் கொக்கரித்துச் சிரிப்பது வயிறு குலுங்கச் சிரிப்பதைவிட பிறர் வயிறெரியச் சிரிப்பதாகும். இது ஒரு மனிதனில் ஆழமாகச் செல்கிறது. அதை விழுங்குவது என்பது முழுக் கவனமும் புறணிகேட்பதிலும் அதைக் கேட்டு மகிழ்வதில் இருக்கிறது எனலாம்.

9 - சோம்பேறியும் மந்த புத்தியுடைய வேலைக்காரனும் ஒரே விளைவை உண்டாக்குகின்றனர். இவர்களை நம்பி வேலை தருவது அழிவை உண்டாக்கும். இவர்கள் அழிவை உண்டாக்குபவனின் சகோதரனாவான் என்று இக்கூற்று எடுத்துரைக்கிறது. இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாயினும் சொல்ல வந்த பொருள் தெளிவாக உள்ளது (காண். 28:24).

10-11 - உறுதியான கோட்டை, உயரமான மதில் என்ற இரண்டு வார்த்தைகளாலும் இக்கூற்றுகள் இணைகின்றன. ஆனால் அவை தாங்கிவரும்

கருப்பொருள் மாறுபாடானது. நீதிமானும் செல்வந்தனும் இருவரும் கடவுள் மீதும் செல்வத்தின் மீதும் முறையே நம்பிக்கை வைக்கின்றனர் (காண். திபா 52:9).

10 – கடவுள் மீது வைக்கும் நம்பிக்கை பற்றித் திருப்பாக்கள் 20:8; 124:8 பேசுகின்றன. கடவுள் கோபுரமாகக் கணிக்கப்படுகிறார் (திப 61:8). முற்றுகையில்படும் நகரம் உறுதியான சுவர்களைத் தனது பாதுகாப்புக்கு நம்பியிருப்பதுபோல நீதிமான் கடவுளிடம் தஞ்சம் புகுகிறான் (29:25; 28:25).

11 – செல்வம் பாதுகாப்புத் தருகிறது (10:15). செல்வந்தர்கள் செல்வத்தின் மீது மட்டும் வைக்கும் நம்பிக்கை இறுதியில் தவறாக முடிகிறது. ஏனெனில் கடவுள் நகரத்தைக் காக்காவிடில் செல்வத்தாலும் மதில்களாலும் எந்த பயனும் இல்லை (திபா 127:1) என்ற எச்சரிக்கையை மறக்கக் கூடாது.

12 – இக்கூற்று 16:18; 15:33 கூற்றுகளில் காணப்படுகிறது. தாழ்மையும் மதிப்பும் மாண்பைத் தருகின்றன. இறுமாப்பு அழிவுக்கு இட்டுச் செல்கிறது (காண். 11:2; 29:23; 17:19). இறுமாப்பு என்றால் தன்னைப் பெருமையாக உயர்வாக நினைப்பது. எனவே எச்சரிக்கை.

13 – வினாவைக் கேட்பது: நீமொ 18:7இல் மதிகேடன் மற்றவர் கூறுவதைக் கேட்கமாட்டான். அவனே பேசிக்கொண்டிருப்பான். தனது கருத்தை வலியுறுத்தும் ஒருவர் மற்றவர் கருத்தைக் கேட்பதில்லை. எனவே உரையாடல் நடப்பதில்லை (காண் சீஞா 11:8). இது நீதிமன்றத்தில் மட்டுமல்ல எல்லாச் சூழ்நிலைகளிலும் கடைபிடிக்கவேண்டியது. செவிமடுப்பதும் பின்பு பேசுவதும் ஞானிகளுக்கு அழகு.

14 – இந்தக் கூற்றின் முதல் பகுதி மனவலிமையால் உடல்நோயைக் கட்டுப்படுத்தலாம் என்கிறது. புண்பட்ட மனம் மன அழுத்தத்தாலும் அதிர்ச்சியாலும் உடம்புக்குக் கேடுவிளைவிக்கிறது. நீதிமொழிகள் 15:13; 17:22 புண்பட்ட மனது பற்றிக் கூறினாலும் அம் மனது மகிழ்வான இதயத்தோடு ஒப்பிடப்படுகிறது. இங்கு உடல் நலம் பற்றிப் பேசப்படுகிறது. புண்பட்ட மனதால் உடல் நலனைக் காப்பது கடினம்.

15 – மைன்கோல்ட் என்ற அறிஞர் இதயத்தை அகமாகவும் காதுகளைப் புறமாகவும் கொள்கிறார். இதற்கு ஆதாரமாக வசனங்கள் 12, 13ஐக் காட்டுகிறார். அறிவைப் பெருக்கிக்கொள்ளுதலும் அதிலே நாட்டங்கொள்வதும் ஞானிகளின்

ஏக்கத்தைக் காட்டுகிறது. அவரது தேடலின் தாகத்தை அதிகரிக்கிறது (காண். 1:5; 15:14).

16 – அன்பளிப்பு நல்வழி பெரியோர்முன் கொண்டு சேர்க்கும். பல கேள்விகளை இக்கூற்று உள்ளத்தில் கிளறிக் கொண்டிருக்கிறது. இது வெறும் அன்பளிப்பா அல்லது கையூட்டா? (காண் 15:27; 17:8,23) எபிரேய வார்த்தைகள் *மதன், சகத்* இதைத் தெளிவுபடுத்தவில்லை. இக்கூற்றில் வரும் *அன்பளிப்பு* என்பது பல உள் நோக்கங்களைக் கொண்டதில்லை எனக் கூற முடியாது. இதனால் பல அனுகூலங்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. இதைத் 'தீர்ப்பைக் கவிழ்த்துப்போடும் கையூட்டு' என்று கூற முடியாது எனினும் தீர்வு எடுக்கையில் அத்தகைய தாக்கங்களைக் கொணரும் என்பதை மறுக்க முடியாது. 'அன்பளிப்பு' எப்போதும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அதை நாம் அடிக்கடி காணமுடிகிறது. எனினும் இக்கூற்று ஒரு பார்வைதான் அதைச் செய் என்னும் அறிவுரையல்ல. அறிஞர்கள் பலர் (ஒய்பிரே, மைன்ஹோல்ட், பேக்லர்) இதை நீதிமன்றச் சூழலில் பார்க்கலாம் என்கிறனர். எனினும் இச் சூழலையும் தாண்டி இதற்கும் பொருள் கூறலாம் (மர்பி).

17 – வாதி கூறுவது நியாயமாகத் தோன்றும்: வாதி பிரதி இருவரின் நியாயங்களைக் கேளாது பல நியாயமற்ற தீர்வுகளை அளித்துப் பழகிய நமக்கு இக்கூற்று ஒரு சிறந்த பாடமாகும். எப்போதும் முதலில் கூறுபவரை நம்புவது பழக்கமாகிவிட்டது. பிரதியிடம் உண்மையுள்ளதா என்பதையும் கேட்க வேண்டும். இணைச்சட்ட நூல் (1:16 தொடரும்) இதைத் தெளிவுபடுத்துகிறது.

18 – திருவுளச் சீட்டு கடவுளின் திருவுளத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக இஸ்ரயேலர் கருதினர் (16:3). விவிலியத்தில் இது காணப்பட்டாலும் இஸ்ரயேலர் சமூகத்தில் இது வழக்கத்தில் இருந்ததை அதிகமாகப் பார்க்க முடியவில்லை. மேலும் தீர்ப்பை அறிய திருவுளச் சீட்டு போடப்பட்டதாகச் சாட்சியம் இல்லை. இது மனிதன் தீர்ப்புச் சொல்ல இயலாத நிலையில் நீதிமன்றத்தில் இதை இறுதியாகப் பயன்படுத்தியிருக்கலாம். எனினும் ஏன் இது 'வலியோரின் வழக்கு' எனக் கூறப்படுகிறது? பெரியோர் இருவர் வாதிடுகையில் நியாயம் இருவர் பக்கமும் இருப்பது போல் தோன்றும். இந்நிலையில் ஒரு நல்ல சூழலை (குழப்பத்தை ஏற்படுத்தாதிருக்க) ஏற்படுத்த இதற்குத் தள்ளப்பட்டிருக்கலாம். இதை ஒரு நல்ல தீர்ப்பென்றும் கருதியிருக்கலாம்.

19 - சகோதரர்களிடையே உள்ள சண்டைகளைச் சுமூகமாகத் தீர்த்து வைப்பது நல்லது (இச 1:16-17). ஒருவேளை விட்டுக்கொடுப்பதும் நல்லது. ஏனெனில் வழக்கை வெல்வதைவிட நட்பும் உறவும் முக்கியமானது. வழக்கு அல்லது சண்டை தொடர்ந்தால் அதனால் பாதிக்கப்பட்டவர் தனக்குத் தவறு இழைக்கப்பட்டதாக உணர்ந்து மனதிலே கோபத்தைத் தொடர்வார் (வச 1). இது சகோதரர்களிடத்திலும் காணப்படும் ஒன்று. பின் அவர்களை அரவணைப்பது கடினமாகிவிடும். அவர்களது கதவு தாழிட்டுக் கொள்ளும். தாழிட்டக் கதவு திறக்கப்படுவது இயலாததாகவிடும். இயேசுவும் நீதிமன்றம் செல்லும் வழியிலே ஒப்புரவாகிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

20-21 - இந்த இரண்டு நீதிமொழிகளும் விளைவு, பயன் பற்றி கூறுவதால் இணைந்து வருகின்றன எனலாம் (காண் 12:14; 13:2).

20 - இங்குக் கூறப்படும் பேச்சு பொதுவானது (நல்லதுஅல்லது கெட்டது) எனலாம். ஆனால் ஒருவர் தனது பேச்சுக்குப் பொறுப்பேற்க வேண்டும்; விளைவை உண்டு களிப்பது என்பது நல்ல வார்த்தைகளைக் குறிக்கிறது. எதை விதைக்கிறாரோ அதை உண்பார். இது இனிய சொற்களைச் (இன்னாச் சொற்களன்று) சுட்டுகிறது. நல்ல சொற்களால் வரும் நற்கனிகளைச் சுவைத்து மகிழ்வடைவதைப் பற்றிப் பேசுகிறது.

21 - வார்த்தை வாழ்வளிக்கலாம் அல்லது சாவைக் கொணரலாம். வாழ்வும் சாவும் கடவுளுடையது. அத்தகைய ஆற்றலை நாவு கொண்டிருக்கிறது. இது பேசுபவருக்கு மட்டுமல்ல கேட்பவருக்கும் பொருந்தும் (சீஞா 37:18).

22 - நல்லது பேசுவோர் நலனையும் தீயவை பேசுவோர் தீமையையும் அறுப்பர் (காண் 13:2). மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று தமிழ் பாடல் உண்டு. இது விவிலியக் கூற்றை வலுப்படுத்துகிறது. வசனங்கள் 18:22, 19:14 மனைவியை நல்லவராகக் காண்கிறது. நல்ல மனைவியைத் தேர்வது கணவனின் முயற்சி என்றாலும் நல்ல மனைவியைப் பெறுவதில் அவனது பங்கு சிறிதே. மனைவி ஒரு கடவுளின் கொடை (12:2). நலமடைவான், நல்லாசி பெறுவான் என்பவை கருத்துக்கு வலு கொடுக்கிறது (மேலும் காண். 8:35).

23 - இந்த நீதிமொழி எப்படி செல்வந்தர்கள் ஏழைகளைவிட அதிக சலுகைகள் அனுகூலங்கள் பெறுகிறார்கள் என்பது பற்றிக் கூறுகிறது. பணம், பதவி, பட்டம் பற்றிப் பேசுகிறது. மிக நம்பிக்கையோடு தங்கள் உணர்வை இவர்கள்

வெளிப்படுத்த முடியும் (வச 11). ஏழைகள் பயந்து, மரியாதையோடு பேச வேண்டும். இல்லையெனில் அவர்களை அவர்களது பேச்சிலே மடக்கிவிடுவர். அவர்கள் பேச்சே அவர்களை எந்த வகுப்பைச் சார்ந்தோர் எனக் காட்டிக் கொடுக்கும். இது வெறும் கூற்றா அல்லது ஏழைகளின் சார்பாகக் கூறப்படுவதா? நீதிமொழியார் ஏழைகளின் நண்பர் (10:15; 14:20). இக்கூற்றும் ஏழைகளின் சார்பாகக் கூறப்படுகிறது. கடவுள் தான் இருவரையும் படைத்தார் (14:13; 17:5; 22:2).

24 – இந்த நீதிமொழியை இருவிதமாக மொழிபெயர்க்கலாம். கேடு வருவிக்கும் நண்பர்கள் என்றோ அல்லது மேலோட்டமான நண்பர்கள் என்றோ கூறலாம். மர்பி பின்னயதை ஏற்கிறார். விளக்கமும் நீதிமொழிக்குத் தருகிறார். மேலோட்டமான நண்பர்களை உயிர்த்தோழருக்கு ஒப்புமையிடுகிறார். இவ்வாறு உயிராய் அன்பு கூரும் நண்பருடைய பண்பை மேலோட்டமான நண்பரின் நட்பைவிட உயர்த்திப் பேசுகிறார். உயிர்த்தோழர்கள் சகோதரனைவிட மேலானவர்கள். இது ஏற்புடையதாகக் கருதப்படுகிறது.

செம்பொருள்

கையூட்டும் அன்பளிப்பும் 5, 16 வெவ்வேறானதா? மேலும் நாம் காணும் உண்மையையும் அதன் ஆழத்தையும் பாராட்டுகிறோமா? செல்வந்தர் ஏழைகளிடையே இடைவெளி சமூகத்தில் குறைந்தபாடில்லை. வசனங்கள் 10, 11 கூறும் கூற்றுகளின் உண்மை தெளிவாக நமக்கு இதை வலியுறுத்துகிறது. கேட்பதற்கு முன்பே பதில் தருவது (13) நம்மையும் திருத்தமுடியாதவர் பட்டியலில் சேர்த்துவிடுவதில்லையா? இதேபோல காண் 17.

வசனங்கள் 20, 21 நா, உதடுகள் பற்றிப் பேசுகின்றன. வாழ்வும் சாவும் நாவின் கைகளில் உள்ளன. நாவை விரும்புபவர் அது தரும் கனியை உண்பர். அந்தக் கனி எது? இதை ஜெ. ஜி வில்லியம், கையில் கனியை ஏந்தி நிற்கும் ஏதேன் தோட்டத்துப் பெண்ணில் காண்கிறார். இப்பெண் நன்மை, தீமை அறியும் ஆற்றலைக் கொடுக்கிறாள்.

இங்கு இந்த ஆற்றல் எல்லாருக்கும் கொடுக்கப்படுகிறது. வாழ்வு அல்லது சாவு, அல்லது வாழ்வும் சாவும் வச 21இல் கூறப்படும் வாழ்வா, சாவா என்பது நாவின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. நாவு எந்த வழியிலும் மனிதத்தை இட்டுச்செல்லலாம்.

11. ஏழையும் செல்வந்தரும் (19:1-29)

19:1 முறைகேடாய் நடக்கும் செல்வரைவிட மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல்.
2 எண்ணிப் பாராமல் செயலில் இறங்குவதால் பயனில்லை; பொறுமையின்றி நடப்பவர்
இடறிவிழுவார். 3 மனிதர் தம் மடமையாலேயே வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வர்;
ஆனால் அவர்கள் ஆண்டவர்மீது சினங்கொண்டு குமுறுவர். 4 பணம் உடையவருக்கு
நண்பர் பலர் இருப்பர்; ஏழைக்கு இருக்கும் ஒரே நண்பரும் அவரை விட்டுப் பிரிவார். 5
பொய்ச் சான்று சொல்பவர் தண்டனைக்குத் தப்பமாட்டார்; பொய்யுரையே கூறுபவர் தப்பித்துக்
கொள்ளமாட்டார். 6 வள்ளலின் தயவை நாடி வருவோர் பலர்; நன்கொடையாளருக்கு
எல்லாருமே நண்பர். 7 வறியவரை அவருடைய உடன்பிறந்தோரே வெறுப்பர்; அவருடைய
நண்பர் அவரைவிட்டு அகலாதிருப்பாரோ? அவர் கெஞ்சி வேண்டினாலும் அவர்கள்
ஓடிவிடுவார்கள். 8 ஞானத்தைப் பெறுதலே உண்மையான தன்னலமாகும்; மெய்யறிவைப்
பேணிக்காப்பவர் நன்மை அடைவார். 9 பொய்ச் சான்று சொல்பவர் தண்டனைக்குத்
தப்பமாட்டார்; பொய்யுரை கூறுபவர் அழிந்து போவார். 10 அரண்மனை வாழ்வு அறிவிலிக்கு
அடுத்ததல்ல; மேலானோரை ஆளும் பதவி அடிமைக்குச் சற்றும் ஏற்றதல்ல. 11
விவேகமுடையோர் எளிதில் சினமடையார்; குற்றம் பாராதிருத்தல் நன்மதிப்பைத் தரும். 12
அரசரின் சீற்றம் சிங்கத்தின் முழக்கம் போன்றது; அவர் காட்டும் கருணை பயிர்மீது
பெய்யும் பருவ மழைக்கு ஒப்பாகும். 13 மதிகெட்ட மகனால் அவன் தந்தைக்குக் கேடு
வரும்; மனைவியின் நச்சரிப்பு ஓட்டைக் கூரையினின்று ஓயாது ஒழுகும் நீர் போன்றது. 14
வீடும் சொத்தும் ஒருவனுக்கு வழிவழிச் சொத்தாய் வரலாம்; ஆனால், விவேகமுள்ள
மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை. 15 சோம்பல் ஒருவரை தூங்கிக் கொண்டே
இருக்கச் செய்யும்; சோம்பேறி பசியால் வருந்துவார். 16 திருக்கட்டளைகளைக்
கடைப்பிடிக்கிறவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார்; ஆண்டவருடைய வழிகளைக்
கவனியாது நடப்பவர் அழிந்து போவார். 17 ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர்
ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்.
18 மகன் திருந்துவான் என்கிற நம்பிக்கை இருக்கும்போதே அவனைக் கண்டித்துத்
திருத்து; இல்லாவிடில், அவன் கெட்டழிந்து போவதற்கு நீ காரணமாயிருப்பாய். 19
கடுஞ்சினங்கொள்பவர் அதற்குரிய தண்டனையைப் பெறவேண்டும். இக்கட்டினின்று அவரை
விடுவிப்பாயானால், மீண்டும் அவ்வாறே செய்ய வேண்டியிருக்கும். 20 அறிவுரைக்குச்
செவிகொடு, கண்டிப்பை ஏற்றுக்கொள்; பின்வரும் காலமெல்லாம் ஞானமுள்ளவனாய் வாழ்வாய்.
21 மனிதர் மனத்தில் எழும் எண்ணங்கள் ஏராளம்; ஆனால் ஆண்டவரது திட்டமே
நிலைத்துநிற்கும். 22 நற்பண்பாளர் வாக்குப் பிறழாமையை நாடுவர். பொய்யராயிருப்பதைவிட
ஏழையாயிருப்பதே மேல். 23 ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் ஆயுள் நீடிக்கும்; அவ்வாறு
நடப்பவருக்கு மனநிறைவு கிட்டும்; தீங்கும் அவரை அணுகாது. 24 சோம்பேறி உண்கலத்தில்
கையை இடுவார். ஆனால் அதை வாய்க்குக் கொண்டுபோகச் சோம்பலடைவார். 25 ஏளனம்
செய்வோரை அடி; அதைக் காணும் பேதையராவது படிப்பினை பெறுவர்; உணர்வுள்ளவரைக்
கடிந்துகொள், அவர் மேலும் அறிவுடையவராவார். 26 தந்தையைக் கொடுமைப்படுத்தித்
தாயைத் துரத்திவிடும் மகன், வெட்கக்கேட்டையும் இழிவையும் வருவித்துக்கொள்வான். 27
பிள்ளாய், நல்லுரை கேட்பதை நிறுத்தாதே; நிறுத்தினால் அறிவுதரும் நன்மொழிகளைப்
புறக்கணிக்கிறவன் ஆவாய். 28 தீக்குணமுள்ள சாட்சி நியாயத்தை மதிக்காதவர். பொல்லாரின்
சான்று குற்றத்தைப் பெருகச் செய்யும். 29 இகழ்வாருக்குத் தண்டனை காத்திருக்கிறது;
முட்டாளின் முதுகுக்குப் பிரம்பு காத்திருக்கிறது.

பின்புலம்

ஆசிரியர் பல கருத்துகளை ஆங்காங்கே தூவிவிட்டுச் செல்கிறார். ஞானம், அறிவுரை இவைகளின் சிறப்பினை 2, 8, 13, 16, 18, 20, 25, 26, 27 வசனங்களில் இவர் கூறுகிறார். எனினும் நல்லது, நண்பர், ஏழை, செல்வந்தர் பற்றியும் எழுதுகின்றார் (1-2, 4-7). நான்கு வசனங்கள் யாவே கூற்றுகள் (3, 14, 17, 21) , 23இல் ஆண்டவரின் அச்சம் பற்றிப் பேசப்படுகிறது. நேர்முறை இணையணியை அதிகமாக இங்குக் காணலாம்.

சொல்விளக்கம்

1 - **ஏழையான நீதிமான், முறைகேடாய் நடக்கும் செல்வர்:** இவர்களின் எதிரிடையான நடைமுறைகள் பற்றிக் கூறப்படுகின்றன (28:6) முறைகேடாய் நடப்பவர் பொய் கூறுபவராய் இருக்கலாம் (வச 5); அவர் செல்வந்தராகவோ தன்னை ஞானியாகக் கருதுபவராகவோ இருக்கலாம் (28:11); அவர் மதிகேடராகக் காட்சியளிக்கிறார் (26:5,12); அவர் ஏழையாயிருப்பினும் தீயவழியில் செல்வம் ஈன்றவராய் இருக்கலாம் (22); எல்லா நிலைகளிலும் அவர் மதிகேடராகவே உள்ளார். ஏழைகளின் நிலையோ பரிதாபமானது, வேறுபாடானது. வறுமையை விட மனிதனாக வாழாததே ஏழை என்பவர் நிலை. வறுமை பேறுடைதென்றோ, கடவுள் பற்று என்றோ போற்றப்படவில்லை. எனினும் அவர் நன்மை நிறைந்தவர். ஏழ்மையிலும் தவறான முறையில் செல்வம் ஈட்ட மறுத்துவிடுகிறார். இவரே சிறந்தவர்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (குறள் 297)

2 - எண்ணிப்பாராமல் செயலில் இறங்குவது பயனைத் தர முடியாது. வள்ளுவரும், எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவமென்பது இழுக்கு (குறள் 467)

என அருமையாகக் கூறுகிறார். எதையும் திட்டமிட்டுச் செய்தல் பயனளிக்கும். இயேசுவும் இதுபற்றிக் கூறுகிறார். அடுத்து, அவசரமாகச் செயல்படுபவர் இவர் பல தொல்லைகளுக்கு உள்ளாவார். அவசரத்தை ஞானிகள் கண்டிக்கின்றனர் (2:15; 29:20) நொபஷ் என்ற எபிரேயச் சொல்லை நபர், வாழ்வு, ஆசை என்றெல்லாம் மொழிபெயர்க்கின்றனர். எனவே ஞானமோ அறிவோ இல்லாது செயல்படும் எதுவும் தோல்வியில் முடியும்.

3 – கடவுள் மீது சினம் கொண்டு தமது பொறுப்பை மறுப்பவர் மடையராவார். மடமையான மனிதர் எதில் தோல்வியைச் சந்தித்தார் என்று கூறப்படவில்லை. தோல்வி சிறிதாகவோ பெரிதாகவோ இருக்கலாம். ஆனால் கடவுளிடம் சினம் கொள்வது கடவுளோடு உள்ள உறவை துண்டித்து விடுகிறது (சீஞா 15:11).

4 – ஏழைகளுக்கு இருக்கும் ஒரே நண்பரும் அவரை விடடுப் பிரிவார். இது ஒரு சிறந்த அனுபவ உண்மை. 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பது வள்ளுவர் வாக்கு (குறள் 247). ஏழைகளின் இக்கட்டான நிலையை இந்த நீதிமொழி எடுத்துரைக்கிறது (காண் 19:7; 14:20). நீதிமொழிகள் நம் விளக்கங்களைத் தாண்டுகின்றன (17); பணம் பத்தும் செய்யும். பணம் பல நண்பர்களை உருவாக்கும். ஆனால் எப்படிப்பட்ட நண்பர்கள் என்று கூறப்படவில்லை (காண். 6).

5 – பொய்ச் சான்று நீதியைக் கொன்றுவிடும். இது ஒரு சமூகக் குற்றம். நீதிமான் இதனால் தண்டனை பெறுவான். எனவே நீதிமொழி தரும் எச்சரிக்கை நியாயமானதே (மேலும் காண் வச 9; 12:17; 14:5,25; 21:28).

6 – வள்ளல் என்பவர் கொடுப்பவர். அவரிடம் எல்லோரும் வருவர். இது சமூகத்தில் நாம் காண்பதே. வள்ளலிடம் வருபவர் அவரிடமிருந்து ஏதாவது அனுகூலம் பெறுவதற்காக வருகின்றார் (வச 4). மனிதர்கள் பொதுவாக அனுகூலம் பெறப் போலிப்புகழ்ச்சியைப் பயன்படுத்துகின்றனர். அது ஏதாவது ஒரு கொடையைக் கொணரும். ஆனால் உண்மை நட்பு இதுதானா? என்றக் கேள்வி எழும்புகிறது.

7 – ஏழைகளைப் பற்றிய இக்கூற்று மனத்தை நெருடுகிறது. இக்கூற்று 14:20ஐ நிறைவுபடுத்துகிறது. இதைப் பணம் படைத்தவருக்கு எடுத்துக் கூறுவதில் ஆசிரியருக்கு ஒரு காரணம் இருக்கலாம். ஏழைகளுக்கு ஆண்டவரைத் தவிர யாரும் இல்லை. அவர்களது நிலமை அவருடைய நண்பர்களும் உறவினர்களும் அவர்களைக் கைவிடுவதால் இன்னும் அவலம் அடைகிறது. 'வெறுப்பது' வெறும் உணர்வு சார்ந்ததைவிட எப்படி வெறுக்கப்படுகிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

கெஞ்சி வேண்டினும்: நீதிமொழியின் மூன்றாம் பகுதியாக இது வருகிறது. இதற்கிணையான மற்ற இன்னொரு கூற்று இல்லை. ஏழைகளது கெஞ்சலுக்கும் மதிப்பில்லை. அவர்களுக்கு இரங்குவார் யாருமில்லை.

8 - முதன்மையும் முழுச் சிறப்புமுடையதாக ஞானமும் புரிதலும் போற்றப்படுகின்றன. இதற்கு முன் மேலே கூறப்பட்ட மடமையின் இழிநிலையும் தெளிவாகிறது. ஞானத்தைப் பெறுதல் தன்னைக் கண்டடைதலாகும். “தன்னலம்” என்பது எதிர்மறைப் பொருளை வெளிப்படுத்துகிறது.

8ஆ - நன்மை அடைவர் என்பது மகிழ்வு, அமைதி போன்ற மதிப்புடைய கொடையைப் பெறவதைக் குறிக்கிறது.

9 - இது வச 5ஐ ஒத்திருக்கிறது. பொய் சொல்பவர் இல்லாமல் அழிந்துபோய்விடுவர் என்ற தண்டனையை இன்னும் பலமாக்குகிறது.

10 - அடுத்ததல்ல, ஏற்றதல்ல என்பது (காண் 17:7) குறுகிய கூற்று என்றாலும் கருத்துத் தெளிவாக உள்ளது. மூடர் தவறான வழியில் செல்வங்களை ஈட்டுவர். அதுவே சரியான வாழ்வு என்ற முடிவுக்கும் வருவர். ஆனால் அது ஏற்புடையதல்ல. இதே கருத்து ‘மூடர்கள் ஆள்வதும் அதனால் வரும் இடர்களும்’ 30:21-22இல் கூறப்படுகிறது. மூடர் செல்வந்தராவது சரியற்றது; அதுபோல் அடிமை மேலானோரை ஆள்வது அழிவைக் கொணரும். வேலையாள் ஆளுநருக்கு ஆணை பிறப்பிக்கலாமா? வேலையாள் ஆட்சியில் அமரும்போது தனது ஆற்றலைத் தனது பாணியில் காண்பித்துத் தனது இருப்பிடத்தை வலுப்படுத்திக் கொள்வான். (பணியாள், அடிமைகள் காண் 33:25-33).

11 - கடவுள் சினம் கொள்ளத் தாமதிப்பவர் (விப 34:6). சினத்தைக் கட்டுப்படுத்துவது பல காயங்களைத் தவிர்க்க உதவும். நமது வேலைகளைத் திறம்பட ஆற்றவும் உதவும் (14:29 15:18). ஆள்பவருக்கு இது தேவை (வச. 12). சினத்தைக் கட்டுப்படுத்துவது உளவியல் நன்னெறி போன்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது. எனினும் மனப்புண் ஆற காலம் தேவைப்படுகிறது. இறுதியில் மன்னிப்பதே சிறந்தது (10:126; 17:9)

12 - ஆள்பவர்களைப் பற்றிய பரபரப்பும் அவர்களை கூர்ந்து கவனித்தலும் இயல்பான ஒன்று. இந்த நீதிமொழி அரசரின் சினம் பற்றியும் கருணை பற்றியும் இயம்புகிறது. அரசரின் கோபம் பொல்லாதது, அச்சம் ஏற்படுத்துவது (16:4; 20:2); அவரது கோபம் சிங்கத்தின் கர்ஜனைக்கும் அவரது கருணை பருவமழைக்கும் ஒப்பிடுவது நீதிமொழிக்கு வலுகொடுக்கிறது.

13 - மதிகெட்ட மகனால் வரும் தொல்லைகளையும் துயரங்களையும் 10:1; 17:21, 25 இலும் மனைவியால் வரும் துயரங்களை 21:19; 25:24; 27:15-

16இலும் காணலாம். ஒழுகும் கூரையுடைய வீட்டில் குடியிருத்தல் இயலாத ஒன்று. குடும்பம் குலைந்துவிடும் என்பதை குறிக்கிறது.

14 – விவேகமுள்ள மனைவி பற்றி நீதிமொழிகள் மிகச் சிறப்பாக உரைக்கின்றன (காண். 18:22; 31:10–31). மர்பி எனும் அறிஞர் சொத்துரிமைக்கும், நல்ல மனைவி அமைவதற்கும் உள்ள வேறுபாடுகளை ஆழ்ந்த ஞானத்தோடு எடுத்துரைக்கிறார். பங்காளிக்குச் சொத்தில் உரிமை உண்டு. அதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் நல்ல மனைவி அமைவது ஒரு பெரிய வரம். தந்தை சொத்தைப் பங்கிட்டுத் தருவதால் தந்தைக்கு விருப்பமுடையவனாய் நடந்து அதைப்பெற்றுக் கொள்வதா அல்லது தனது துணையைப் பெற கடவுளை நம்புவதா என்ற குழப்பத்தில் புதல்வன் உள்ளான். தந்தையின் சொத்தைச் சட்டபூர்வமாகப் பெற வழியுண்டு. வாழ்க்கைத் துணைவியோ ஒரு சூதாட்டம் போல் அழைகிறார். விவிலியத்தின் திருமணங்களைப் பெற்றோர் நிச்சயம் செய்கின்றனர். இந்த நிலையில் இன்றைய இளைஞன் எப்படி செயல்படவேண்டும்? இறைவனை நம்பிச் செயல்படுவதா? இதனால் பெற்றோருக்குக் கீழ்படியாதிருக்க வேண்டும், தனது உரிமைச் சொத்தையும் இழக்கவேண்டியிருக்கும் இது ஏற்புடையதுதானா? என்று கேள்வி எழுப்புகிறார் மர்பி.

நீதிமொழியையும் தாண்டி நமது கருத்துகள் செல்லலாம். இந்த நீதிமொழியில் சட்டப்படி சொத்துரிமை கிடைக்கிறது. மனைவி அமைவதோ ஆண்டவரின் கொடை (காண். சீஞா 26:3; 26:23ஆ; 26.). நீதிமொழி இதில் ஒரு முடிவெடுக்க இளைஞனைத் தூண்டாவிடினும் அதைப் பற்றிச் சிந்திக்க அழைக்கிறது.

19:13 – நல்ல பெண்ணாகப் பார்த்து முடிவு எடுக்காததைப் பற்றி இங்குப் பேசப்படுகிறதா? வசனம் 14 ஆண் பெண் உறவின் மறைபொருளைப் பற்றிக் கூறுகிறது. (காண். 30:18–19). ஞானி சொத்துரிமை பற்றித் தெளிவாக முடிவெடுக்க இயலும். ஆனால் நல்ல மனைவி அமைவது அவரது ஞானத்துக்கு அப்பால் செல்கிறது. மேலும் நல்ல மனைவியைத் தேர்வது முழுவதுமாகக் கடவுள் கரத்திலே உள்ளது என்பது சிந்திக்க வேண்டியது.

15 – சோம்பேறிக்கு வரும் கேடு: சோம்பல் ஆழ்ந்த உறக்கத்திற்கு இட்டுச் செல்கிறது (தொநூ 22:27) அது புத்துணர்வை அளிக்காது. அது சோம்பேறியை வலுவிழக்கச் செய்கிறது. சோம்பல் சாவுக்கு அழைத்துச் செல்லும் (21:25). பசி

வாட்டினாலும் சோம்பேறி வேலை செய்வதில்லை (19:24; தூக்கம் பற்றிக் காண் 20:31).

16 - திருக்கட்டளைகள் என்றதும் பத்துக் கட்டளைகளை அல்லது தோராவை (சட்ட நூல்களை) நினைத்துவிடுவோம். ஆனால் இங்குக் கூறப்படுவது ஞானிகளின் கூற்றைக் குறிக்கலாம். வாழ்வையோ சாவையோ ஞானத்தின் வழியிலே தேர்ந்தெடுக்க ஞானம் இளைஞருக்கு வேண்டுகோள் கொடுக்கிறது. ஞானத்தின் இதயமோ செவிமடுப்பதும் (20) கீழ்ப்படிவதுமாகும். அது வாழ்வைக் கொணரும். மடமை சாவுக்கு இட்டுச்செல்லும் (10:21; 10:15) மேலும் காண். 4:4; 7:2; 13:3,13). ஆண்டவருடைய வழிகள் என்பது ஞானிகளின் வழிகள் என்றும் கொள்ளலாம்.

17 - இது ஓர் அருமையான பொன்மொழி. இது ஏழைகளைக் கவனிக்க எல்லோருக்கும் தூண்டுதலாய் உள்ளது (இச 5:1-11). ஏழைகளுக்கு உதவுபவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார். இது ஒரு சிறந்த விவிலிய வாக்கு. விளைவு கடவுள் அதைத் திருப்பித் தருவார் (14:3; 17:5; சீஞா 29:8-13).

18 - உடல் தண்டனை அக்காலத்தின் பழக்கம் (13:24; 23:13-14). எதிர்காலத்தில் நம்பிக்கை இருக்கும்போது கண்டித்துத் திருத்துவது நல்லது. சரியான நேரத்தில் கண்டித்துத் திருத்தினால் நம்பிக்கைக் கட்டாயமாய் உண்டு. சாவு இல்லாமல் கண்டிப்பு அமைவது மிகமிக முக்கியமானது (வச. 23:13). உடல் சாவு, இளமையில் சாவோ, ஆன்மிக வெறுமையோ அல்ல. மாறாகச் சொல்கேளாமல் எதிர்க்கும் மகனுக்குத் தண்டனை தருவது பற்றியதாகும் (இச 21:18-21).

19 - சினம் கொள்பவனுக்கு விமோசனம் இல்லை. அவனுக்குத் தண்டனை கிடைக்கும். கடும் சினம் கொள்பவருக்கு உதவிப் பயனில்லை. மீண்டும் அதே நிலைதான் நீடிக்கும். இச்சினம் கொள்பவர் தந்தையாக இருக்கலாம் அல்லது மகனாக இருக்கலாம். (கடுஞ்சினம் கொள்பவர் ஏதாவது தவறு செய்வது தண்டனை பெற்றவராக இருக்கலாம்). வச 19ஆ - அப்படிப்பட்டவரைத் திருத்த முயலாதே. எந்த மாற்றமும் கிடைப்பதில்லை (காண். 11).

20 - ஞானிக்குச் செவிமடுத்தலும் கண்டிப்பை ஏற்றலும் நீதிமொழியின் சிறப்பான கூறு (12:15; 23:12). நன்றாகப் பயிற்சி பெறுபவர் ஞானமுடையவராய் இருப்பார். இவர் தற்பெருமையின்றி (26:12) தொடர்ந்து ஞானத்தைத்

தேடிக்கொண்டேயிருப்பார். ஞானம் வாழ்வின் தொடர் தேடல். ஞானி நான் 'முழுஞானமும் பெற்றுவிட்டேன்' என்று கூறார்.

21 – மனிதத் திட்டங்கள் பல எனினும் கடவுளது விருப்பமே அனைத்தையும் வழிநடத்தும். மனிதன் நினைப்பவைகள் பல. அவைகளில் பல நல்லவையல்ல. ஆனால் கடவுள் ஒன்றை நினைத்தாலும் அது உருப்படியானது (16:1-9).

கண்ணதாசன்: மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்கு மென்று
கடவுள் நினைப்பதுண்டு
பாவம் மனிதனென்று

22 – எபிரேயத்தில் ஹெசத் என்பது அன்பு அல்லது கனிவைக் குறிக்கும். ஆனால் அவமானம் என்ற பொருளும் அதற்கு உண்டு. நற்பண்பாளர்கள் எப்போதும் வாக்குப் பிறழாமையை நாடுவர். ஏழைகளிடம் அந்த உன்னதப் பண்பு உண்டு. அவர்கள் ஏய்த்துச் செல்வம் சேர்ப்பவர், நல்லோராக நடிப்பவரைவிட மேலானவர்கள். ஆனால் ஆசையை பேராசை என்ற தீய பொருளில் கொண்டால் நீதிமொழி ஏழைகளின் சார்பாக அமைக்கிறது. அப்படியெனில் தவறாகச் செல்வம் சேர்ப்பவருக்குத்தான் அவமானம் நல்லோர்க்கு (ஏழைகளுக்கல்ல) அல்ல எனலாம்.

23 – ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் வாழ்வை நீடிக்கச் செய்யும் (காண் 14:27). கடவுளிடம் கொள்ளும் அச்சம், ஞானம் இவைகளின் இலக்கு 'வாழ்வு' என்பது தெளிவாக்கப்படுகிறது. கடவுளை நம்புவோரிடம் மனநிறைவு இருக்கும். தீங்கு அவர்களை அணுகாது. நம்பினால் கெடுவதில்லை. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" (தமிழ் பழமொழி)

24 – இதுவும் 26:15இம் ஒன்றுபோல் இருக்கிறது. சோம்பேறி பற்றி நீதிமொழிகள் நகைச்சுவையாகவும் பேசுகின்றன. சோம்பேறி எந்த அளவுக்கும் தனது சோம்பலைப் பயன்படுத்துவான். சாப்பிடவும் அவனுக்குச் சோம்பலென்றால் சாப்பிடும்போதே தூங்கிவிடுவான் என்பதை நகைச்சுவையாக இந்த நீதிமொழி கூறவிழைகிறது.

25 – ஏளனம் செய்வோர் திருத்தாவர். பேதையர் அறிவுரைகளைக் கேட்டு நேரிய பாதையில் நடப்பவர்கள். ஏளனம் செய்வோரை 13:1; 15:12 இலும் காணலாம். இவர்களது வாழ்க்கையிலிருந்து பேதையர் பாடங்களாகக் கற்றுக்கொள்கின்றனர். உணர்வுள்ளோர் என்பது அறிவுடையோரைக் குறிக்கும்.

அறிவுடையோரும் கடிந்துகொள்வதால் கற்றுக்கொள்கின்றனர். பேதையரும் கற்றுக்கொள்வர் என்றும் கூறப்படுகிறது. மேலும் அறிவுடையோர் திருந்த வேண்டும் அல்லது மனம் மாற வேண்டும் என கூறப்படுகிறது. ஏளனம் செய்வோருக்கு அது சாத்தியமில்லை.

26 – பெற்றோரைக் கவனிக்கவேண்டிய மகன் அதற்கு எதிராகச் செயல்படுவது கண்டனத்துக்குரியது. இவனது கொடிய செயல் என்னவெனில் சொத்தை அபகரித்துவிட்டுப் பெற்றோரைத் துரத்தி அனுப்பிவிடுவது. தாயைத் துரத்துவது பற்றிக் கூறப்படுகிறது. வயதான பெற்றோரைப் பராமரிக்கிற பொறுப்புக் குடும்பத்தைச் சார்ந்தது. கவனியாதபோது கண்டனங்கள் எழுகின்றன (இச 5:15; நீமொ 20:20; 28:24; 30:11).

27 – நல்ல அறிவுரையைக் கேட்கத் தந்தை மகனுக்கு அறிவுறுத்துகிறார். இல்லையெனில் புறக்கணிப்பு எனும் குற்றத்திற்கு ஆளாவான்.

28 – நீதிமன்ற வழக்கு பின்புலமாக அமைகிறது. அங்குத் 'தீயகுணமுள்ள சாட்சி' நியாயத்தைக் கவிழ்த்துவிடுவது பற்றிப் பேசப்படுகிறது (காண். 1அர 21:10). பொல்லார் தீமைகளை உண்டுகளிப்பர். தீமைகள் பெருகிக் கொண்டிருக்கும்.

29 – திருந்தாதவர்களும் திருத்தமுடியாதவர்களும் உண்டு (17:10; 26:3). அவர்களுக்கு எந்தத் தண்டனை கொடுத்தாலும் பயனில்லை. இருப்பினும் தண்டனைதான் அவர்கள் கதி. செய்த தவறுகளுக்குரிய தண்டனையிலிருந்து அவர்கள் தப்பமுடியாது.

செம்பொருள்

கடவுளிடம் சினம் கொள்வது மடையர் மட்டுமல்ல அவரின் அடியவர்களும் தான். தாங்கள் நினைத்தபடி நிகழ்வுகள் நடக்காதபோது, தங்கள் திட்டங்கள் வெற்றிபெறா நிலையில் கடவுள்மீது வருத்தம் கொள்வது இயல்பு. ஞானிகள் மதிகேடரிடம் தவறு உள்ளது என்பர். ஆனால் எச்சரிக்கைத் தேவைப்படுகிறது. யோபுவின் நண்பர்கள் யோபுவை மடையர் என்று மட்டுமல்ல, பிடிவாதக்காரன், தீயவன் என்றனர். கடவுளை வைதவன் என்றபோதும் அவர்கள் தவறு நிலைநிறுத்தப்பட்டது (யோபு 42:8).

மேலும் துன்பம் ஒரு மறைபொருள். அதை ஆராய்வது இன்னும் ஆழமான உண்மைக்கு நம்மைக் கொண்டுசேர்க்கும். பல கேள்விகளுக்குப் பதில்

சொல்லவியலாது. எனினும் வாழ்வின் நிகழ்வுகளுக்கும் நம்பிக்கைக்கும் உள்ள முரண்பாடுகள் நமக்கு ஒரு பாடமாய் அமையலாம்.

நட்புப் பற்றி நீதிமொழி கூறினாலும் சீராக்கின் ஞானம் இதை விரிவாக எடுத்துக் கூறுகிறது. நீதிமொழி நட்பைச் செல்வத்தோடு தொடர்புபடுத்திப் பேசுகிறது. ஏழைகளுக்கு நண்பர்கள் ஒரு சிலரே. உண்மை நட்பு பணத்திலல்ல என்பதையும் எதுதான் இதற்கு உதவும் என்பதையும் நாம் கண்டுபிடிக்க ஆசிரியர் விட்டுவிடுகிறார்.

12. கடவுளை நம்பியிரு (20:1-30)

20:1 திராட்சை இரசம் ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும்; போதை தரும் குடி
அமளியைத் தோற்றுவிக்கும்; அவற்றில் நாட்டங்கொள்பவர் மடையரே. 2 அரசரின் சினம்
சிங்கத்தின் முழக்கத்திற்கு நிகர்; அரசருக்குச் சினமூட்டுகிறவர் தம் உயிரை இழப்பார். 3
விவாதத்தில் ஈடுபடாதிருத்தல் மனிதருக்கு அழகு; ஏனெனில், மூடராயிருக்கும் எவரும்
விவாதத்தை விரும்புகின்றனர். 4 சோம்பேறி பருவத்தில் உழுது பயிர் செய்யமாட்டார்;
அவர் அறுவடைக் காலத்தில் விளைவை எதிர்பார்த்து ஏமாறுவார். 5 மனிதர் மனத்தில்
மறைந்திருக்கும் எண்ணம் ஆழமான நீர்நிலை போன்றது; மெய்யறிவுள்ளவரே அதை
வெளிவரச் செய்வார்? 6 பலர் தம்மை வாக்குப் பிறழாதவரெனக் கூறிக்கொள்வர்; ஆனால்,
நம்பிக்கைக்குரியவரைக் கண்டுபிடிக்க யாரால் இயலும்? 7 எவர் களங்கமற்ற நேர்மையான
வாழ்க்கை நடத்துகிறாரோ, அவருடைய பிள்ளைகள் அவரின் காலத்திற்குப்பின் நற்பேறு
பெறுவார்கள். 8 மன்னன் நீதிவழங்கும் இருக்கையில் வீற்றிருக்கும்போது, தன் பார்வையாலேயே
தீமையான யாவற்றையும் சலித்துப் பிரித்துவிடுவான். 9 “என் இதயத்தைக் தூயதாக்கி
விட்டேன்; நான் பாவம் நீக்கப்பெற்றுத் தூய்மையாயிருப்பவன்” என்று யாரால் சொல்லக்கூடும்?
10 பொய்யான எடைக் கற்களையும் பொய்யான அளவைகளையும் பயன் படுத்துகிறவரை
ஆண்டவர் அருவருக்கின்றார். 11 சிறுவரையும் அவருடைய செயல்களைக் கொண்டே
அறியலாம்; அவர் உண்மையும் நேர்மையானவரா என்று சொல்லிவிடலாம். 12 கேட்கும்
காது, காணும் கண், இவ்விரண்டையும் ஆண்டவரே படைத்தார். 13 தூங்கிக்கொண்டேயிருப்பதை
நாடாதே; நாடினால் ஏழையாவாய். கண் விழித்திரு; உனக்கு வயிறார உணவு கிடைக்கும்.
14 ஒரு பொருளை வாங்கும் போது, தரம் குறைவு, விலை மிகுதி என்று ஒருவர் சொல்வார்;
வாங்கிச் சென்றபின், தாம் திறம்படச் செய்ததாக நினைத்துத் தம்மையே மெச்சிக்
கொள்வார். 15 பொன்னையும் முத்துகளையும் விட, அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த
அணிகலன். 16 அன்னியருடைய கடனுக்காகப் பிணை நிற்கிறவருடைய ஆடையை
எடுத்துக்கொள்; அதை அந்தக் கடனுக்காகப் பிணையப் பொருளாக வைத்திரு. 17
வஞ்சித்துப் பெறும் உணவு சுவையாயிருக்கும்; ஆனால் பின்னர் அது வாய் நிறைய மணல்
கொட்டியது போலாகும். 18 நல்ல அறிவுரை கேட்டுத் திட்டமிட்டால் வெற்றி பெறுவாய்;
சூழ்ச்சி முறையை வகுக்குமுன் போரைத் தொடங்காதே. 19 வம்பளப்போன் மறைசெய்திகளை
வெளிப்படுத்திவிடுவான்; வாயாடியோடு உறவாடாதே. 20 தாயையும் தந்தையையும்
சபிக்கிறவனின் விளக்கு, காரிருள் வேளையில் அணைந்துபோகும். 21 தொடக்கத்திலே
விரைவில் கிடைத்த உரிமைச் சொத்து, இறுதியிலே ஆசி பெற்றதாய் இராது. 22 “தீமைக்குத்

தீமை செய்வேன்" என்று சொல்லாதே; ஆண்டவரையே நம்பியிரு; அவர் உன்னைக் காப்பார். 23 பொய்யான எடைக் கற்களைப் பயன்படுத்துகிறவரை ஆண்டவர் அருவருக்கிறார்; போலித் துலாக்கோலைப் பயன்படுத்துவது முறையற்றது. 24 மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை ஆண்டவர் அமைக்கின்றார்; அப்படியிருக்க, தன் வழியை மனிதனால் எப்படி அறிய இயலும்? 25 எண்ணாமல் ஒன்றைக் கடவுளுக்குப் படையல் என நேர்ந்து விட்டு, அப்பொருத்தனையைப்பற்றிப் பிறகு எண்ணுவது கண்ணியில் கால் வைப்பதாகும். 26 ஞானமுள்ள அரசன் பொல்லாரைப் பிரித்தெடுப்பான்; அவர்கள் மீது சக்கரத்தை ஏற்றி நசுக்குவான். 27 ஆண்டவர் மனிதருக்குத் தந்துள்ள ஆவி ஒரு விளக்கு; அது அவர்களின் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் ஆய்ந்தறியும். 28 அன்பும் உண்மையும் மன்னவனை ஆட்சியில் நீடித்திருக்கச் செய்யும்; அன்பாகிய அடிப்படையிலே தான் அவனது அரியணை நிலைத்து நிற்கும். 29 இளைஞருக்கு உயர்வளிப்பது அவர்களது வலிமை; முதியோருக்குப் பெருமை தருவது அவர்களது நரைமுடி. 30 நையப் புடைத்தலே மனத்தின் மாசகற்றும்; கசையடி கொடுத்தலே உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்.

பின்புலம்

இந்த அதிகாரத்தில் கட்டளையிடுவதுபோல் கூறும் கூற்றுகளைக் காணலாம். எதிர்மறை இறையணிக் கூற்றுகளும் குறைவே. யாவே கூற்றுகளும் (வசனங்கள் 10, 12, 22-25, 27) அரசன் பற்றிய கூற்றுகளும் (2, 8, 26, 28) உள்ளன. மனிதன் முழுவதுமாகக் கடவுளை நம்பி வாழவேண்டும் என்ற கருத்து இருந்தாலும் இக்கருத்து அதிகாரம் முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது எனக் கூறவியலாது.

சொல்விளக்கம்

1 – திராட்சை இரசமும் போதை தரும் குடியும் ஆண் உருவம் பெறுகின்றன. பின்பு அவைகள் செய்யும் தீய விளைவுகள் பற்றிக் கூறப்படுகின்றன. குடிப்பது கண்டனத்துக்குரியது (23:25-35). அதிகமாகக் குடிப்பதால் வறுமை தொத்திக் கொள்வதும் சுட்டிக்காட்டப்படுகிறது (21:17; 23:21). ஞானச் சீமாட்டியும் திராட்சை இரசம் பரிமாறுவது பற்றி 9:5இல் கூறப்படுகிறது. எனினும் போதையுறுவது ஞானிகளுக்கு அழகல்ல.

2 – இந்த நீதிமொழியின் கருத்தை 19:12இல் காணலாம் (காண் 20:8,28). அரசனது கோபம் நீதியோ அநீதியோ ஆபத்தானது.

3 – ஞானமுடையோர் வேண்டாத விவாதத்தில் ஈடுபடுவது அழகல்ல. அது தொடர்ந்தாலும் முடிவுக்குக் கொணர்வது நன்று. மூடன் விவாதத்தை விலைகொடுத்து வாங்குவான். அவன் தற்பெருமை உடையவன், தற்கட்டுப்பாடு இல்லாதவன்.

4 – சோம்பேறி பருவத்தே பயிற்செய்யாது விட்டுவிடுவான். சிலவேளை உழுவதற்குமுன்பே நிலத்தைப் பண்படுத்தாது விதைகளை விதைத்து வருவதால் நல்ல விளைச்சல் கிடைப்பதில்லை. சோம்பேறி உழுவதில்லை (10:5). சோம்பல் கண்டனத்துக்குரியது என இக்கூற்றுக் கூறுகிறது.

5 – மனதில் மறைந்திருக்கும் எண்ணங்கள் (காண் 18:4). ஆழமான நீர்நிலை என்பது மனதின் ஆழத்தில் புதைந்திருக்கும் உண்மை ஞானத்தின் அடையாளம். ஆனால் அதை வெளிக்கொணர ஒரு ஞானியின் கூர்நோக்கு வேண்டும். இது தமக்கா அல்லது பிறருக்கா எனக் கேள்வி எழுந்தால் இருவருக்குமே என்ற பதிலே கிடைக்கிறது.

6 – உண்மையுள்ள பணியாளனைக் கண்டுபிடிப்பது அரிது. அதேபோல நம்பிக்கைக்குரியவரைக் கண்டுபிடிப்பது அரிது. இக்கூற்றின் முதல் பகுதி உண்மையான வாக்குப் பிறழாதவர் யார் எனக் கண்டுபிடிக்க அழைக்கிறது. தம்மை உண்மையானவர் எனக் கூறுபவர் பலர் இருப்பினும் உண்மை நிலை வேறுதானே. 'நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்' என்ற கூற்று நினைவுக்கு வருகிறது.

7 – களங்கமற்றவர் பற்றித் திபா 15 கூறுகிறது. அத்தகைய நேர்மையாளர் யார் என்பதை வச '9' இன்படி ஆய்ந்துணர வேண்டும். நல்ல மனிதரை ஊர் போற்றும். அவர் நற்கனி தரும் மரமாயிருப்பார். அவரின் நற்பேறு தலைமுறைக்கும் கிடைக்கிறது. இங்கே நல்லதொரு ஆன்மிகக் கூட்டுத்தன்மையையும் (10:7) உண்மையாகச் செயல்படும் நன்மைத்தனத்தையும் (13:22) காணமுடிகிறது. ஆனால் இது நடந்தேறுகிறதா என்ற கேள்வி இஸ்ரயேலரை விட்டபாடில்லை (எரே 31:29; எசே 18:2).

8 – சலித்துப் பிரிப்பது வச 26 இலும் கூறப்படுகிறது. அரசன் கூறும் நீதித் தீர்ப்பைச் செய்துமுடிக்கப் பலர் துணைநிற்பர். அரசனே அனைத்துத் தீர்ப்பிற்கும் பொறுப்பேற்க வேண்டும். திருப்பா 101இல் அரசனது நேர்மையும் நீதியும் பற்றி மிக அற்புதமாகப் பேசப்படுகின்றது.

9 – மனிதன் பலவீனன், விவிலியமும் மனித அனுபவமும் அதுபற்றிப் பேசுகின்றன (திபா 51:7). இக்கூற்று எழுப்பும் கேள்வி 'இல்லை' என்ற பதிலை முன்மொழிகிறது. ஞானப் பாரம்பரியத்தில் மனிதச் செயல்களும் நிலைப்பாடுகளும் பலவீனத்தால் நிறைந்துள்ளன (16:2; 21:2). எனினும் மனித பலவீனம்

நம்பிக்கையற்ற நிலைக்குக் ஒரு பெரிய காரணம் என்ற கண்ணோட்டம் இல்லை. மற்ற கூற்றுகளை ஆய்ந்தால் இதற்குப் பதில் கிடைப்பதாக உள்ளன. சான்றாக நீதியை மனிதனால் எட்டிப்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கைக் கூற்றுகளும் உண்டு.

10 - பொய்யான எடைக் கற்கள்; பொய்யான அளவைகள்: இவைகளில் மாற்றங்கள் செய்வது பரவலாகக் காணப்பட்டது. அவைகளை நீதிமொழிகள் கண்டிக்கின்றன (11:1; 16:1 காண் இச 25:13-16; லேவி 19:35). மிகப் பெரிய கண்டனம் 'கடவுளுக்கு அருவருப்பானது' அல்லது 'தெய்வநிந்தனை' என்பதாகும்.

11 – குழந்தைகள் பெறும் பயிற்சியும் வழிகாட்டுதலும் அவர்களைப் பண்பாடும் நற்குணமுடைய சான்றோராகவும் மாற்றும் (22:6). அவர்கள் செயல்பாடுகளைக் கொண்டே நல்லவரா அல்லது அல்லாதவரா என அறிந்துவிடலாம்.

12 – கேட்கும் செவிகள், காணும் கண்கள்: இந்த நீதிமொழி மிகமிக எளியது எனினும் கருத்தாழமுடையது. இது கண்ணையும் காதையும் அதன் செயல்பாடுகளையும் கடவுள் படைத்தார் என்கிறது. ஆனால் இதை ஞானத்தை அழுத்திக் கூறும் பகுதியாகக் காணலாம். ஞானம் பெற்றிடக் காதும் கண்ணும் இன்றியமையாதவை. ஞானம் காண்பதைவிட கேட்பதையே மேலாகக்கொள்கிறது. கண்கள் முன்னாலிருப்பதைத்தான் காண முடியும் காதுகளால் முற்காலத்தில் நடந்ததை, நடப்பவை, நடக்கின்றவை அனைத்தையும் கேட்க முடியும். மேலும் கேட்பது என்பது கீழ்ப்படிவதாகும் (15:31; சீஞா 17:6; திபா 94:9). ஞானத்தின் பாதையைத் தெரிவதும் அதைக் கடப்பதும் செவிமடுப்பதால் வரும் பயனே.

13 - தூங்குதலும் கண்விழித்திருத்தலும்: சோம்பேறி தூக்கத்தை விரும்புவான். எனவே எல்லாவற்றிலும் அவனுக்கு இழப்பு ஏற்படலாம். பட்டுக்கோட்டையாரின் தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடல் இதற்கு ஓர் உதாரணம். தூங்குவோர் தங்கள் குடும்ப உரிமைச்சொத்தைத் தனது வீட்டு ஊழியனிடம் இழப்பதையும் பற்றி 11:29; 12:24 கூறுகின்றன. நகைச்சுவையை விட இங்கே கூறப்படும் கட்டளைகள் மிகுந்த தாக்கமுடையவை, "கண்விழித்துக் கவனமாய் இருப்பதே உனது விடுதலையின் பரிசு."

14 – ஒரு பொருளை விலைக்கு வாங்கியபின் அது நல்லது எனக் கூறுவது எப்படிச் சரியாகும். வாங்குவதற்கு முன் அது தரம் குறைந்தது எனவே விலை

அதிகமாக இருக்கிறது எனப்பேரம் பேசி வாங்குவது உண்மையான வெற்றியல்ல. இதில் கவனமாக இருக்கவேண்டும். இந்த வெற்றி கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும் (25:14; 27:1-2).

15 – ஞானம் ஈடு இணை இல்லாதது. எந்தப்பொருளும் பொன்னோ வெள்ளியோ அதற்கு ஈடாகா (10:20; 25:11-12). ஞானமுடைய பேச்சு எல்லாச் சொத்துகளையும் விடமேலானது. கல்வி எல்லாவற்றையும்விட மேலானது. அது பற்றிப் 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று நாலடியார் கூறுகிறார்.

16 – இக்கூற்றும் 27:13ம் ஒன்றே. இது ஓர் ஆணையிடுதல் கூற்று. இன்னொருவருக்குப் பிணையாக நிற்பதுபற்றிப் பல நீதிமொழிகள் பேசுகின்றன (10:20; 25:11-12). பிணையாக நிற்பதால் வரும் ஆபத்து ஏராளம். கடன் வாங்கியதற்குப் பிணையாக நிற்பவருக்குத் தகுந்த வாக்குறுதி (24:10-13) தர வேண்டும். ஆடையைக் கடனுக்காகப் பிணையம் வைப்பது கடன் வாங்கியவருக்கு ஒரு கடினமான பாடம். அவரிடம் கவனமாகச் செயல்பட வேண்டும். அவர் திருப்பிச் செலுத்த இயலாமல் போகலாம். அவர் ஓர் அந்நியராக இருக்கலாம். எனவே பிணையாக நிற்பவருக்கு இது ஒரு சிக்கல்.

17 – இது வஞ்சித்துத் தவறாக ஏமாற்றிப் பெறும் உணவையோ அல்லது பொதுவாகத் தீயது செய்வதையோ குறிக்கலாம். இவ்வுணவு நாவில் இனிக்கும்; பின்பு மணலாகும். அப்படியென்றால் வஞ்சித்துப் பெறுவது தீய பின் விளைவுகளை விளைவிக்கும்.

18 – திட்டமிட்டுச் செயல்பட ஞானம் அழைக்கிறது (11:14; 15:22). 24:6இல் சண்டையிடல் பற்றிக் கூறுகிறது. போரில் வெற்றிபெறச் சரியாகத் திட்டமிடல் வேண்டும். ஆனால் திட்டமிடுவது எல்லாச் செயல்களுக்கும் பொருந்தும் (18அ). சூழ்ச்சி செய்வது இங்கு நல்ல திட்டமிடுவதைக் குறிக்கும். ஏனெனில் இது போர் யுக்திகளைத் திட்டமிடுவதாகும்.

19 – இதன் முதல் பகுதி 11:13 போலுள்ளது. வம்பளப்பவன் எதை எங்கே பேச வேண்டும் என்பதறியாதவன். இவனிடம் மறைவானவைகளைக் கூறினால் ஆபத்து. எனவே கவனம் தேவை.

20 – பெற்றோரைச் சபிக்கிறவரை முன்னைய காலம் தண்டிக்காமல் விடுவதில்லை. அவர்களின் தண்டனை சாவு (விப 21:17 லேவி 20:9 நீமொ 30:11). அவனது முடிவு காரிருளில் அணைந்துவிடும் விளக்கு என உருவகமாகச்

சொல்லப்படுகிறது. உலகின் ஒளிக்குக் கொண்டு வந்த அன்னையைப் பழிப்பவன் ஒளியில்லாதவனாகிவிடுவான். "தாயைப் பழிப்பவன் தரங்கெட்டுச் சாவான்" (7:9அ).

21 – துரிதம் இங்குத் தவறாக, தீய வழியில் பெற்ற சொத்தைக் குறிக்கும் (13:11; 28:20). வாரிசாக வரும் சொத்துபற்றி சீஞா 33:20-24இலும் வாசிக்கலாம். தொடக்கத்தில், இறுதியில் என்ற கால இடைவெளி தவறாகச் சொத்தை உரிமையாக்கியவர்க்கு ஓர் எச்சரிக்கையாக அமைகிறது.

22 – 'சொல்லாதே' என்பது ஒரு முக்கியக் கூற்று (3:28 24:29); காண் சஉ 5:5 சீஞா 5:34). இதற்குச் செவிமடுப்பவர் ஆபத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஒருவர் கடவுளை நம்புகிறார், நீதிமன்றத்திற்குச் செல்வதில்லை. அல்லது இன்னொருவர் எந்த வன்முறையையும் கையாண்டு தனது நீதியை நிலை நாட்டுகிறார். முதலாமவர் பல சிக்கல்களுக்கு உள்ளாவார் (காண். லேவி 24:19-22). ஆனால் கடவுள் அநீதியை வெல்ல விடமாட்டார் (திபா 37:5-7) என்பது சிலரின் நம்பிக்கை. (மேலும் காண் சீஞா 38:2-7). ஆனால் அன்றாட வாழ்வில் இது நடைபெறுகிறதா என்பது ஒரு கேள்வி.

23 – (காண் 11:1). வியாபாரத்தில் நேர்மை மிக முக்கியமானது. இஸ்ரயேலில் இது பற்றிய கூற்றுகள் ஏராளம் உள்ளன. வியாபாரத்தில் நேர்மையாக நடக்க வேண்டும் என்று கூறினாலும் 16:11இல் கூறப்படும் 'நிறைகோலும் துலாக்கோலும் ஆண்டவருக்கு உரியன' என்பதைக் கண்ணோக்க வேண்டும். மனிதப் பொறுப்பு இதன் ஒளியில் அலசப்படுவதும் நேர்மை ஓர் உயர்பண்பு எனக் கருதப்படுவதும் ஞானிகள் மீது பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது.

24 – நற்கூற்றுகள் பல விவிலியத்தில் உள்ளன. ஆனால் அரிதான நல்வாக்குகளில் மிகக் கருத்தாழமிக்க வாக்கு இது (காண் எரே 10:23; திபா 37:23; நீமொ 16:1, 9). மனிதன் தன் செயல்களுக்கும் வாழ்வுக்கும் பொறுப்பு ஏற்கவேண்டும் என்பது ஞானத்தின் அரிதான படிப்பினை (14:8). எனினும் இதில் உள்ள இடர்பாடுகளை ஞான இலக்கியம் அலச மறக்கவில்லை (11:2; 21:12; 14:8). மனிதப் பெருமையே அவனது சுதந்திரம் (சீரா 15:11-20).

இக்கருத்துக்கு மேலே கடவுளே அனைத்தையும் வழிநடத்துகிறவர் என்ற கருத்தை விவிலியம் முன்வைக்கிறது. இவை இரண்டின் இறையியல் உண்மைகள்

இன்னும் சரியாக விளக்கப்படவில்லை. இக்கூற்றின் இரண்டாம் வரி இந்தப் பேருண்மையை வலியுறுத்துகிறது.

முதல் பகுதி மனித முயற்சியின் எல்லையை ஆய்ந்து எவ்வாறு அவன் இறுதியில் நம்பிக்கை இழப்புக்குத் தள்ளப்பட்டு அவதியுறுகிறான் என்பதைக் காட்டுகிறது. இது மனித ஞானத்தின் குறைபாடுகளையும் இரகசியங்களையும் சுட்டிக்காட்டுகிறது.

சபை உரையாளரின் இறையியலே கடவுளின் செயல்பாடுகள் மனிதனுக்கு மறைவானது, முழுவதுமாகப் புரிந்துகொள்ள இயலாதது (3:11; 7:12; 8:17; 11:5). அறியாமையை அறிந்து செயல்படுவதுதான் ஞானம் என்பது ஞானிகள் கருத்து.

25 – கடவுளுக்கு நேர்ந்தளித்தல் இஸ்ரயேல் வாழ்வில் மட்டுமல்ல, நம் மக்கள், குறிப்பாக இந்து சகோதரர்கள் மத்தியிலும் பரவலாகக் காணப்படுகிறது. ஞானிகளும் இதைப் பெரிதாக எடுத்துக் கொண்டனர் (சஉ 5:4). நேர்ந்தளித்த பொருள் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதால் அது அரும்பொருளாகிறது, புனிதமாகவும் கருதப்படுகிறது. நேர்ந்தளிப்பு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ளது. எனவே கடவுளுக்கு நேர்ச்சை செய்யும்போது மிகக் கவனம் தேவை. எந்தச் சூழலில் நேர்ச்சை வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பது பெரிதல்ல, ஆனால் நேர்ந்ததை கடவுளுக்குச் செலுத்தத் தவறுவது கண்ணியில் சிக்குவதாகும். ஞானம் 'எண்ணித் துணிகக் கருமம்' என்பதை வலியுறுத்துகிறது.

26 – பொல்லாரை நீதியுள்ள அரசன் பிரித்தெடுப்பது வச.8ல் பேசப்படுகிறது. தவறு செய்தவரைச் சக்கரத்தில் நசுக்குவதைப் பற்றித் தமிழ் இலக்கியம் பேசுகிறது. மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர் ஏற்றிக் கொன்ற வரலாறு ரீங்காரம் செய்வதைக் காணலாம் (புறநானூறு) சக்கரத்தை ஏற்றி நசுக்குவது என்பது அறுவடை செய்யும் கருவியைத் தாங்கிச் செல்லும் சக்கரங்களையும் கொடிய தண்டனைகளையும் குறிக்கலாம். ஆனால் அது இயந்திரங்களைக் குறித்தால் அவை தானியங்களிலிருந்து பதரைப் பிரித்தெடுக்கும் (திபா 1:4). இது பற்றி எசாயா 28:27-28இல் தெளிவாகக் கூறுகிறார்.

27 - ஆண்டவர் தரும் ஆவி ஒரு விளக்கு - ஆய்ந்தறியும்: மனிதருக்கு ஆண்டவர் தந்துள்ள ஆவி வாழ்வின் ஆவி 'நிஷ்மா' (தொநூ 2:7). இதனால் ஒரு மனித வாழ்வு உருவாகிறது. இந்த ஆவி ஒரு விளக்கு என்று கூறப்படுகிறது. இந்த ஒளி மனிதனின் உள்ளாழத்தில் ஒளிர்கிறது. கடவுள்

மனிதனை முழுவதுமாக அறிகிறார் (15:11 திபா 39). கடவுள் மனிதனை அறிவது மனிதனுக்கு ஒரு மன திருப்தியாகவோ ஓர் எச்சரிக்கையாகவோ இருக்கலாம். இந்த விளக்கு கடவுள் கொடுத்த அறிவு, துய்த்துணரும் அறிவு எனவும் கொள்ளலாம். நம்மைப்பற்றி நாம் அறிய வருகிறோம். இது கடவுளின் ஆவி மனிதனுக்கு அருளும் புரிதல் (யோபு 32:8). கடவுள் மனிதனை அறிந்திருக்கிறார். கடவுளின் கொடையாக மனிதன் தன்னை அறிகிறான் என்று இருவகையாகவும் புரிந்து கொள்ளலாம்.

28 – வாக்குப் பிறழாமையும் பேரன்பும் கடவுள் அரசருக்குக் கொடுக்கும் பண்புகள் (திபா 89:24). இந்த இரண்டு பண்புகளும் அரசனின் ஆட்சியை நிலைத்தும் நீடித்தும் இருக்கச் செய்கின்றன (காண் 25:5). இப்பண்புகளைச் செயல்படுத்தும் அரசன் 'தனது' அரியணையை உறுதிப்படுத்துகிறான்.

29 – இளைஞனின் வலிமை என்பது அவனது உள்ள, உடல் வலிமையைக் குறிக்கிறது. அவனது எதிர்காலத்தை அவன் சந்திக்க வேண்டும். எனவே அதை மதிக்க வேண்டும். நரைமுடி நீண்ட ஆயுளையும் பண்பான வாழ்வையும் குறிக்கிறது.

30 – நீதிமொழி இளைஞர்களின் கட்டுப்பாடான வாழ்வைச் செயல்படுத்த உடல் தண்டனையை முன்மொழிகிறது (13:24; 22:15). மனத்தையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்த அடிகொடுப்பது பற்றி இங்குப் கூறப்படுகிறது. துன்பம் மனிதனைத் தூய்மைப்படுத்தும் என்ற கருத்து இங்குள்ளது. திருந்த வேண்டும் என்பதற்காகக் கடிந்து கொள்ளலாம் என்பது இயேசுவின் கருத்து (மத் 18:14-17; லூக் 17:3).

செம்பொருள்

பழமொழிக் கூற்றுகளில் வார்த்தைக்கு வார்த்தை உள்ள தொடர்பு, கூற்றுகளுக்கு இடையே உள்ள தொடர்பு ஆகியவை அதன்பொருளை விளக்குவதற்கு மிகுந்த உதவியாயிருக்கின்றன. வச 21இன் விரிவுரையாக வச 22 உள்ளது என ஒய்பிரே கூறுகிறார். குற்றமோ பாவமோ தண்டனைக்குத் தப்பாது என்பதை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம். அதோபோல் மனித இயல்பு பற்றி எதிர்மறையாக வச 7,8,9இல் வலியுறுத்தப்படுவதும் கவனத்தை ஈர்க்கிறது.

மேலும் "பழிவாங்குவதை விட்டுவிட்டு ஆண்டவரிடம் நம்பிக்கையாயிரு; அவர் உன்னைக் காப்பார்" (22) என்பது பொறுமையைக் கடைப்பிடிக்க விடுக்கும்

அழைப்பு, ஓர் அற்புதமான நற்பண்பு. இது மனிதனை எளிய வாழ்வுக்கு அழைக்கிறது.

"மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை ஆண்டவர் அமைக்கிறார்" (24) என்பது இன்னோர் ஆழமான சிந்தனை (காண். 16:1,9; 19:21). கடவுளின் செயல்களையும் மனிதனின் முறைகளையும் அறிபவர் யார்? எல்லாமே மறைபொருள்தானே. மனிதன் தனக்கு எல்லாம் தெரியுமென்று நினைக்கிறான். துன்புறுகையிலும் கையறு நிலையிலும் யார் நமக்கு உதவ முடியும் என்று ஏங்குவது எரேமியாவை (23:10) பிரதிபலிக்கிறது.

கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள நெருங்கிய உறவை வச 27இல் காணலாம் (காண் 15:11; 16:2; 21:2). உயிர் ஆவி கடவுள் தந்தது. இதைவிட ஆழமாக இறைமனித உறவைக் கூற எதுவுமில்லை எனலாம். தோரவும் இறைவாக்குகளும் இதை அதிகம் ஆராயவில்லை.

13. ஆண்டவர் மன்னனை வழிநடத்துகிறார் (21:1-31)

21:1 மன்னவன் மனம் ஆண்டவரின் கைக்குள் அடங்கியிருக்கிறது; வாய்க்கால்
நீரைப்போல அவர் அதைத் தம் விருப்பப்படி திருப்பி விடுகிறார். 2 மனிதருடைய
நடத்தையெல்லாம் அவர் பார்வையில் குற்றமற்றதாய்த் தோன்றலாம். ஆனால் ஆண்டவர்
அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். 3 பலிசெலுத்துவதைவிட நேர்மையாகவும்
நியாயமாகவும் நடப்பதே ஆண்டவருக்கு உவப்பளிக்கும். 4 மேட்டிமையான பார்வை,
இறுமாப்புக்கொண்ட உள்ளம் இவை பொல்லாரிடம் பளிச்சென்று காணப்படும் பாவங்கள்.
5 திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவரிடம் செல்வம் சேரும் என்பது திண்ணம்; பதற்றத்துடன்
வேலைசெய்பவர் பற்றாக்குறையில் இருப்பார். 6 ஒருவர் பொய் பேசித் சேர்க்கும் பொருள்,
காற்றாய்ப் பறந்துவிடும்; அவரது உயிரையும் அது வாங்கி விடும். 7 பொல்லார்
நேர்மையானதைச் செய்ய மறுப்பதால், அவர்களது கொடுமை அவர்களையே வாரிக்
கொண்டுபோகும். 8 குற்றம் செய்பவர் வழி கோணலானது; குற்றமற்றவர் செய்கை
நேர்மையானது. 9 மாடி வீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட குடிசை வாழ்க்கையே
மேல். 10 பொல்லார் மனம் தீமை செய்வதில் நாட்டங்கொள்ளும்; தமக்கு அடுத்திருப்பாரை
அவர்கள் கனிவுடன் பார்ப்பதும் இல்லை. 11 ஏளனம் செய்வோரை அடிக்கும்போது அதைக்
காணும் பேதையராவது படிப்பினை பெறுவர்; உணர்வுள்ளவருக்கு அறிவு புகட்டும் போது
அவர் மேலும் அறிவுடையவராவர். 12 நீதிமிகு இறைவன் பொல்லாருடைய வீட்டைக்
கவனித்துக் கொண்டிருக்கிறார்; அவர்களைத் தீச்செயல் காரணமாகத் தூக்கி எறிந்து
அழித்துவிடுகிறார். 13 ஏழை கூக்குரலிடும்போது எவன் காதைப் பொத்திக்கொள்கிறானோ,
அவன் தானே உதவிக்காக மன்றாடும்போது எவரும் அவனுக்குச் செவி கொடுக்கமாட்டார்.
14 மறைவாக நன்கொடை கொடுத்து சினத்தைத் தணிப்பார்கள்; மடியில் கைக்கூலி
திணித்துச் சீற்றத்தை ஆற்றுவார்கள். 15 நீதி நிலைநாட்டுவது நேர்மையானவருக்கு

மகிழ்ச்சியளிக்கும்; தீமை செய்வோருக்கோ் அது திகிலுண்டாக்கும். 16 விவேகம் காட்டும் வழியை விட்டு விலகிச் செல்பவர், செத்தாரிடையே தங்க விரைபவர். 17 ஒய்யாரமான வாழ்க்கையை நாடுகிறவர் ஏழையாவார்; மதுவையும் நறுமணப் பொருள்களையும் விரும்புகிறவர் செல்வராகமாட்டார். 18 நல்லவருக்குப் பொல்லாங்கு செய்யப் பார்ப்பவர் தாமே அவருக்குப் பதிலாள் ஆகிவிடுவார்; நேர்மையானவரை வஞ்சிக்கப் பார்ப்பவர் அவருக்குப் பதிலாகத் தாமே வஞ்சனைக்கு ஆளாவார். 19 நச்சரிப்பவளும் சிடுசிடுப்பவளுமான மனைவியுடன் வாழ்வதை விட, பாலை நிலத்தில் தனியே வாழ்வதே மேல். 20 ஞானமுள்ளவர் வீட்டில் செல்வமும் அரும்பொருள்களும் இருக்கும்; மதிகேடர் தம் செல்வத்தைக் கரைத்துவிடுவார். 21 நேர்மையையும் இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பவர், நீடித்து வாழ்வார், மேன்மையும் அடைவார். 22 வீரர் நிறைந்த பட்டணத்தையும் நல்வாழ்வையும் ஞானமுள்ளவர் கைப்பற்றுவார்; அவர்கள் நம்பியிருந்த அரணையும் இடித்துக் தள்ளுவார். 23 தம் வாயையும் நாவையும் காப்பவர், இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக்கொள்வார். 24 ஏளனம் செய்யும் செருக்குடையோரின் பெயர் இறுமாப்பு; அளவு கடந்த பெருமையுடன் நடப்பதே அவர் போக்கு. 25 சோம்பேறியின் அவா அவரைக் கொல்லும்; ஏனெனில், அவர் கைகள் வேலை செய்ய மறுக்கின்றன. 26 அவர் நாள் முழுதும் பிறர் பொருளுக்காக ஏக்கங்கொண்டிருப்பார்; ஆனால் சான்றோர் தம் பொருளை இல்லையென்னாது வழங்குவர். 27 பொல்லார் செலுத்தும் பலி அருவருக்கத்தக்கது; தீய நோக்கத்தோடு அவர்கள் செலுத்தும் பலி இன்னும் அருவருக்கத்தக்கதன்றோ? 28 பொய்ச்சான்று கூறுபவன் கெட்டழிவான்; உன்னிப்பாய்க் கேட்பவன் பேச்சோ என்றைக்கும் ஏற்புடையதாகும். 29 பொல்லார் முகத்தில் போலி வீரம் காணப்படும்; நேர்மையானவர் தம் நடத்தை சீரானது என்னும் உறுதியுடனிருப்பார். 30 ஆண்டவரின் எதிரில் நிற்கக் கூடிய ஞானமுமில்லை, விவேகமுமில்லை, அறிவுரையுமில்லை. 31 போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம்; ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே.

பின்புலம்

இந்த அதிகாரத்தில் எதிர்மறை இணையணிகள் தங்கள் தாக்கத்தைப் பதிக்கின்றன. மூன்றில் ஒருபகுதி வசனங்கள் இதைச் சார்ந்தவையே. யாவே கூற்றுகள் ஐந்தை (1, 2, 3, 30, 31) சுட்டிக்காட்டி அதை வலியுறுத்துவோர் உண்டு (பிலேஜர், ஒய்பிரே). கூற்றுகளிடையே நெருங்கிய தொடர்பு இல்லையெனினும் தொகுப்பாசிரியர் தனது கைவண்ணத்தில் இத்தொடர்பை ஏற்படுத்த முயன்றுள்ளார். மன்னனென்றாலும் ஆண்டவர் முன் அவன் மண்டியிடவேண்டும். ஆண்டவரே மன்னனை வழி நடத்துகிறார் (1, காண் 31).

மேலும் செல்வத்தின் பயனையும் நிலையாமையையும் (5, 6), மனித ஆசையின் பண்பையும் பற்றி (25, 26) ஆசிரியர் பேசுகின்றார்.

சொல்விளக்கம்

1 – ஆண்டவரே அனைத்திற்கும் அதிபர் என்பது நீதிமொழிகள் கூற்று. கடவுள் எல்லாவற்றையும் அறிவார். மனித இதயங்கள் அவருக்குத் திறந்த நூல். பிறருக்கு அறிவுரை தரும் ஞானிகளும் ஞானமும் அறிவும் உடைய அரசர்களும் கடவுள் விருப்பப்படி திருப்பிவிடப்படும் நீரோடைபோன்றவர். அரசர்களும் அமைச்சர்களும் நீருடைய வாய்க்கால்போலிருப்பர் என எசாயா (32:2) கூறுகிறார். வாய்க்கால்கள் பயிர்களின் பசுமைக்குப் பயன்படுத்தப்பட்டவை. அரசனையும் ஆட்டுவித்த நாபோததையும், இறைவாக்கினறையும் இங்கே நினைப்பது நல்லது (2 சாமு 12) இக்கூற்று அரசரைப் போற்றுவதாக அறிஞர்கள் கூறினாலும் போற்றியும் புகழ்ச்சியும் கடவுளுக்கே, அரசருக்கல்ல (மர்பி 158).

2 – இக்கூற்று எல்லா மனிதருக்கும் ஏன் அரசருக்கும் ஏற்புடையதாய் உள்ளது. இது தங்களையே ஏமாற்றிக்கொள்ளாதவாறு எச்சரிக்கையாக இருக்க ஞானிகளுக்கு அழைப்பு விடுக்கிறது. இதில் அச்சமுறுத்தல் இல்லை. பளேஜர் என்ற அறிஞர் கூறுவதுபோல் அறிவுரையும் ஊக்கமும் இணையாகச் செல்கின்றன (காண். 16:2).

3 – நேர்மையும் நியாயமும் கடவுளுக்குகந்தவை, பலியல்ல. இது விவிலியப் படிப்பினை (15:8 21:27). எசாயா தனது முதல் அதிகாரத்தில் (10-18) இதைத் தெளிவாக்குகின்றார் (காண். 1சாமு 15:22). மேலும் 27ம் வசனம் பொல்லார் செலுத்தும் பலி தெய்வ நிந்தனையாகும் என்ற கூரான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது. உண்மையான பலி தூய உள்ளமே; நொறுங்கிய உள்ளம் இன்னும் மேலானது (திபா 51:17).

4 – வெறுப்பான பார்வை, இறுமாப்பு கடவுளுக்கு பிடிக்காதவை. கடவுளுக்கு எதிரானவை பாவங்கள்தானே. இவை பொல்லாரிடம் அதிகம் காணப்படும்.

5 – திட்டமிடுதல், செயல்படுதல் வெற்றியை நிச்சயம் கொணரும், செல்வத்திற்கும் பஞ்சமில்லை. பரபரப்பும் பராக்கும் செயல்பாட்டுக்கு இடையூறானவை. எனவே பற்றாக்குறைதான் அப்படிப்பட்டோரின் நிலையாகும். இக்கூற்று குறைந்த சொற்களில் நிறைந்த பொருளைக் கொண்டுள்ளது.

6 – பணம் சேர்க்கப் பொய் சொல்வதும் ஏமாற்றுவதும் மிகமிகக் கண்டனத்துக்குரியது. தவறாகச் சேர்த்த செல்வம் ஒன்றுமில்லாது போய்விடும். இதைவிட மேலான தண்டனை ‘சாவு’ (காண் 10:2).

7 – பொல்லார் செய்வது கொடுமை. கொடுமை ஆளுரு பெறுகிறது. அது பொல்லாரை வலையில் அகப்பட்ட மீனைப்போல வாரிக்கொண்டு போய்விடும். காரணம் அவர்கள் நல்லது செய்ய மறுக்கின்றனர். நல்லது செய்வோருக்கு மகிழ்ச்சி கிடைக்கும் (15).

8 – குற்றம் செய்பவர், குற்றமற்றவரின் வழிகளில் உள்ள வேறுபாடு பற்றிக் கூறப்படுகிறது. குற்றம் செய்பவரது வழி நேர்மையற்றது, தீய வழிகளில் செல்வது. குற்றமற்றவரது வழியோ நீதியானது நியாயமானது.

9 – இக்கூற்றை மீண்டும் 25:24இல் காணலாம் (காண். 21:19). நச்சரிக்கும் மனைவி (காண் 19:13 27:15). இந்த நச்சரிப்புக்குத் தீர்வு குடிசை வாழ்வு. குடிசையில் வாழ முடிவெடுப்பது கசப்பான ஒன்று. மர்பி இக்கூற்றுகள் பெண்களுக் கெதிரானவையாகக் காண்கிறார் (சீஞா 25:16). நச்சரிக்கும், அடிமைப்படுத்தும், கொடுமை செய்யும் ஆண்கள் உண்டல்லவா (அவர்கள்தானே அதிகம்); அது பற்றிக் கூறாது பெண்களின் குறைகள் பற்றிக் கூறுவது சிறப்புடையதாயில்லை.

10 – பொல்லார் தீமை செய்வதில் கொண்டுள்ள நாட்டத்தை வார்த்தைகளில் விவரிக்க இயலாது. அவர்களது முழு நேரமும் பிறருக்குத் தீங்குசெய்வதையே நோக்கமாகக் கொண்டது. அவர்கள் கடவுளின் இரக்கத்தை உணர்ந்ததில்லை. எப்படி பிறருக்கு அதைக் காட்ட முடியும் (காண். வச 13, 36).

11 – இதற்கு ஈடான கூற்றை 19:25ல் கண்டோம். ஞானத்தின் தலையாய நோக்கமே அறியாரை, பேதையரை ஞானத்திற்கு ஈர்ப்பது. பேதையருக்குத் அடிகொடுப்பதாலும் உணர்வுள்ளவர்களுக்கு அறிவுரை தருவதாலும் ஞானம் சாத்தியமாகும் என்பது ஞானிகளின் கருத்து. உணர்வுள்ளவர்கள் பேதையருக்குக் கொடுக்கப்படும் தண்டனையால் பாடம் கற்கத் தேவையில்லை, அறிவுரையே போதும். அது இயல்பாக மாறிவிடுகிறது.

12 – நீதிமிகு இறைவனுக்குப் பொல்லாருடைய தீச்செயல் அருவருப்பானது. அவர் அவர்களை அழித்தே விடுகிறார்.

13 – இக்கூற்றின் முதல் பகுதி கனிவற்றவனுடைய தீய இயல்பைக் காட்டுகிறது. கனிவு காட்டாதவனுக்குக் கனிவு இல்லை என்ற சட்டம் தானாகச் செயல்படுகிறது.

உதவிக்காகக் குரல் எழுப்புதல் செவிமடுத்தல்: இவை அயலார் மட்டுமல்ல, ஆண்டவரும் செவிமடுக்கமாட்டார் என்பதைக் குறிக்கிறது (காண். மத் 18:23-35).

14 – மறைவான நன்கொடை, மடியில் கைக்கூலி இரண்டும் கையூட்டைக் குறிக்கின்றன (17:8,23 18:16). இவை கண்டனத்துகுரியவை. ஆனால் இவை கண்டு வருந்துவதுபோல் கூறப்படுகிறது. இது எல்லாரும் தெரிந்திருக்க வேண்டும். இதைக் கடைபிடிக்கக் கூடாது எனக் கூறப்படவில்லை.

15 – நீதியை நிலைநாட்டுவது நேர்மையாளருக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது (வச 3); தீயவருக்கு அது அழிவை உண்டாக்கும் (வச. 7).

16 – நல்ல குறிக்கோளின்றித் திரிபவர் சாவுக்குத் தப்பமுடியாது. சாவு எல்லாருக்கும் உரியதுதான். ஆனால் இது இளமையில் சாவதை அல்லது கேவலமாகச் சாவதைக் குறிக்கிறது. இவர்கள் தகுதியான வாழ்வைத் தேர்ந்தெடுக்காது இலக்கைத் தவறவிட்டவர்கள். (காண். நீமொ அதிகாரங்கள் 1-9; 7:17; 9:18). செத்தாரின் இடம் இங்கே பாதளத்தைக் குறிக்கிறது.

17 – ஏழையாயிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. இங்கு வீண்செலவு செய்து ஒய்யாரமாக வாழ்வதும் மதுவும் நறுமணப் பொருள்களுக்காக அதிகம் செலவு செய்வதும் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

18 – 11:8 வசனத்தில் தீயவருக்குத் தண்டனையும் நீதிமான்கள் விடுவிக்கப்படுவதையும் காண்கிறோம். இங்குக் கூறப்படும் கூற்று நல்லவர்கள் தவறிழைத்தால் அவர்கள் அதற்கு பரிகாரம் (கழுவாய்) செய்ய வேண்டும். அது பணமாக இருக்கலாம் (விப 21:30). எனினும் நேர்மையாளர் எந்த ஈடும் செய்யத் தேவையில்லை. ஏனெனில் நேர்மையாளர் தவறாகக் குற்றம் சாட்டப்படவோ நடத்தப்படவோ இல்லை. எனவே தீயோர் நல்லோருக்காக எந்த ஈடும் செய்யவேண்டியதில்லை. இக்குறிப்புகள் இங்கில்லை. வக்காரி என்ற அறிஞர் கடவுளின் தண்டனை ஒரு குழுவுக்குக் கொடுக்கப்பட்டால் தண்டனை பெறுவார் பொல்லாரே நல்லாரல்லர். ஆனால் இது நீதிமொழி கூறும் பொருளா? எனவே இது ஒரு புதிராகவே இருக்கிறது.

19 – ஏற்கனவே வச 9ம் இதைக் கூறுகிறது. அதன் விளக்கம் காண்க.

20 – ஞானிகள் செல்வமுடையோராயிருப்பர். ஆனால் அவர்களிடமிருக்கும் அரும்பொருள் விலை உயர்ந்த பொருள்களா அல்லது தங்க

நகைகளா என்ற வியூகத்திற்கு இட்டுச் செல்கிறது. மதிகேடர் அதைக் கரைப்பதிலே கண்ணாயிருப்பர். எனவே எதுவும் மிஞ்சாது.

21 – நேர்மையும் இரக்கமும் கடைபிடிப்பவருக்குக் கிடைக்கும் பரிசு நீண்ட வாழ்வு, புகழ் (காண். 8:19).

22 - ஞானிகளுக்கு விவேகமும் வியூகமும் உண்டு. இதை வைத்து அவர்கள் வீரத்தை வெல்கின்றனர் (தாவீது கோலியாத் நிகழ்வு) (காண். 16:32; 24:5-6; சஉ 9:16).

23 - எபிரேயத்தில் இக்கூற்று எதுகை மோனைகளாலும் ஒலிச் சந்தங்களாலும் அழகுபட இயற்றப்பட்டுள்ளது. ஞானம் வாயையும் நாவையும் அடக்கி வாசிக்கக் கூறுகிறது. எச்சரிக்கையில்லா வார்த்தைகள் எத்தனை சண்டைகளை உருவாக்குகின்றன என்பதை மனித அனுபவம் சொல்கிறது. (10:19; 13:3; 18:21).

24 - பிறரை நையாண்டி செய்யும் மனிதர் செருக்குடையோர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் இந்த ஒரு சொல் மட்டுமல்ல மற்ற சொற்களும் நீதிமொழிகளில் இடம்பெறுகின்றன (1:22; 3:34; 9:7-8; 19:25).

25 - சோம்பேறியின் அவா அவரைக் கொல்லும் என்பது ஒரு மிகைப்படுத்தும் கூற்றாக உள்ளது. எனினும் அவனுக்கு ஆசையிருந்தாலும் சோம்பல் வீழ்த்திவிடும். வேலை செய்ய மறுப்பதால் அவனுக்குச் சாவு முன்னதாகவே வந்துவிடுகிறது (வச 25; 19:24; 26:15).

26 - பிறர் பொருளுக்காக ஏங்குபவன் பேராசைக்காரன். அவனது ஆசையும் நோக்கமும் நிறைவுறாது. விரும்புவது கிடைத்ததும் இன்னும் ஆசை வரும், அது அவனது இயல்பாகிறது) இல்லையென்று வருவோருக்குத் தம் பொருளை வழங்குபவர் ஞானிகள் மட்டுமல்லர் பெரிய உள்ளம் கொண்டவர்களும்தான்.

27 - பொல்லார் செலுத்துவது பலியல்ல. அது தெய்வ நிந்தனை ஏனெனில் அவர்கள் உள்ளம் கள்ளமானது. அவர்களது தீய நோக்கம் என்ன. கடவுளுக்குக் கையூட்டுத் தருவது என்பது. இதை நான் தருகிறேன் நீ எனக்கு இதை கொடு. இவ்வாறு அவரிடம் அநுகூலம் தேடுவது. இல்லையெனில் செய்த தவறை மறைக்கவும் அதைத் தொடர்ந்து செய்தாலும் கண்டுகொள்ளாதே எனவும் கூறுவது. இது ஒரு கபடத்தனம் அல்லவா? (15:8).

28 - இக்கூற்றுப் பொய்சான்று கூறுபவனுக்கு நேர்வதைப் பற்றிப் (19:5, 9) பேசுகின்றது. பொய்சான்று கூறுபவனின் வார்த்தைகளை உன்னிப்பாகக் கேட்பவன் பதிலளிக்கவேண்டும். அவன் பதில் தீர்க்கமானதாகவும் நீடித்த பெருமை உடையதாகவும் இருக்கும். ஏனெனில் அவை சிந்தனை செய்து கூறப்பட்டவை, உண்மையானவை. கேட்டுப் பேசுபவனே முடிவானதைப் பேசுவான்.

29 - பொல்லார் காண்பிக்கும் வீரம், திடம், காட்டும் பலம் எல்லாம் போலியானது. நேர்மையானவர் பதறுவதில்லை. தமது நடத்தையில் குற்றமில்லை என்பது தெரிவதால் அவர்கள் உறுதியுடனிருப்பர்.

30 - மனித ஞானம் கடவுளது கொடை (2:6). அவர் கொடுத்த ஞானத்தோடு அவரின் ஞானத்தை ஒப்பிடுதல் சரியல்ல. கடவுளின் ஞானம் ஒப்பு உயர்வற்றது. மனித ஞானம் அதற்குக் குறைந்ததுதான். எனினும் மனித வளர்ச்சியை ஆண்டவர் எதிர்ப்பதாகக் கருதத் தேவையில்லை. தன்னைப் போன்ற அளவுக்கு மனிதன் வளர்ந்துவிட்டான் என்று பெருமைப்படும் கடவுள் உன்னதமானவரல்லவா? (காண். 3:5; 15:33).

31 - கடவுளை நம்புபவர் ஞானி. எத்தனை படைகள், எத்தனை போர்வீரர்கள் இருந்தாலும் எவ்வளவு பயிற்சி பெற்றிருந்தாலும் வெற்றி கடவுளிடமிருந்துதான் வருகிறது என்பது பற்றுடையாரின் நம்பிக்கை. வெற்றி ஆண்டவருடையது. அப்படியென்றால் தோல்வி யாருடையது?

செம்பொருள்

மனித ஞானம் குறையுள்ளது. மனிதன் கடவுளைச் சார்ந்து வாழவேண்டும் என்ற இறையியல் கருத்து வச 30இல் இழையோடுகிறது. ஞானத்தின்படி வாழ்த்தால் பலனுண்டா, வெற்றியுண்டா, ஏன் தோல்விகளில் துவழ்கின்றோம் என்ற கேள்விகள் எழும்புகின்றன? பதிலிறுப்பது கடினமே.

வச.30 கடவுள் முன்னால் மனித ஞானம் தனது பலவீனத்தை உணர்கிறது. சபை உரையாளர் இதைத் தனது நூலில் பதித்திருக்கிறார். யோபுவிலும் இதைக் காணலாம். அறிஞர் போன்ராட் கருத்துப்படி மனித ஞானத்திற்கு எல்லையுள்ளது; என்றாலும் வச.30 மனித ஞானத்துக்கு எதிரானதல்ல. மனிதன் ஞானம் பெறவும் அதைப் பயன்படுத்தவும் வேண்டாம் என அது உரைக்கவில்லை. இப்படிப்பட்ட கருத்தை எடுத்துவிட்டால் அது அழுத்தமான, இறையியல் சந்தேகக் கொள்கைக்கு இட்டுச் சென்றுவிடும்.

இக்கூற்று மனித முயற்சிகளும் ஞானமும் வெற்றிக்குத் தரப்படும் உத்தரவாதம் என்பதை மறுக்கிறது. மனிதன் கடவுளுக்குத் தன் உள்ளத்தைத் திறக்கவேண்டும். கடவுளின் செயல்பாடுகளைக் கணக்கிட்டுச் சொல்லவியலாது. மனித ஞானமும் கடவுள் திட்டமும் பல அறியவியலா உண்மைகளை எடுத்துரைக்கின்றன.

14. செல்வம், வறுமை (22:1-17)

22:1 திரண்ட செல்வத்தைவிட நற்பெயரைத் தெரிந்துகொள்வது மேல்; வெள்ளியையும் பொன்னையும்விடப் புகழைப் பெறுவதே மேல். 2 செல்வருக்கும் வறியவருக்கும் பொதுவான ஒன்று உண்டு; ஏனெனில் அனைவரையும் உண்டாக்கியவர் ஆண்டவரே. 3 எதிரில் வரும் இடரைக் கண்டதும் விவேகமுள்ளவர் மறைந்து கொள்வார்; அறிவற்றோர் அதன் எதிரே சென்று கேட்டுக்கு ஆளாவர். 4 தாழ்மையுள்ளவர்களுக்கும் ஆண்டவரிடம் அச்சம் உடையவர்களுக்கும் கிடைக்கும் பயன் செல்வமும் மேன்மையும் நீடித்த ஆயுளுமாகும். 5 நேர்மையற்றவர் வழியில் முள்ளும் கண்ணியும் இருக்கும்; விழிப்புடன் இருப்பவர் அவற்றினருகில் செல்லமாட்டார். 6 நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார். 7 செல்வர் ஏழையை அடக்கி ஆளுவார்; கடன்பட்டவர் கடன் கொடுத்தவருக்கு அடிமை. 8 அநீதியை விதைப்பவன் கேட்டை அறுப்பான்; அவனது சீற்றம் அவனையே எரித்துவிடும். 9 கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பார்; அவரே ஆசி பெற்றவர். 10 ஏளனம் செய்வோனை வெளியே துரத்து, சண்டை நின்றுவிடும்; சச்சரவும் பழிச்சொல்லும் ஒழியும். 11 ஆண்டவர் தூய உள்ளத்தினரை விரும்புகிறார்; இன்சொல் கூறுவோர் அரசனது நட்பைப் பெறலாம். 12 அறிவுடையோரைக் காப்பதில் ஆண்டவர் கண்ணாயிருக்கிறார்; கயவனின் வழக்கைத் தள்ளுபடி செய்கிறார். 13 "வெளியே சிங்கம் நிற்கிறது; வீதியில் கால் வைத்தால் கொல்லப்படுவேன்" என்கிறான் சோம்பேறி. 14 பரத்தையின் வாய் ஓர் ஆழமான படுகுழி; ஆண்டவரின் சினத்திற்காளானவர் அதில் போய் விழுவார். 15 பிள்ளையின் இதயத்தில் மடமை ஒட்டிக்கொண்டிருக்கும்; கண்டித்துத் திருத்தும் பிரம்பால் அதை அகற்றி விடலாம். 16 செல்வராகும் பொருட்டு ஏழைகளை ஒடுக்கிறவனும், செல்வருக்குப் பொருள் கொடுக்கிறவரும் ஏழையாவார்கள். 17 ஞானிகள் போதித்ததை நான் உனக்குக் கூறுகின்றேன், செவி கொடுத்துக் கேள்; நான் புகட்டும் அறிவை மனத்தில் ஏற்றுக்கொள்.

பின்புலம்

சாலமோனின் நீதிமொழிகள் எனப்படும் இப்பகுதி அதி 10:1-22:16 வரை 375 வசனங்களை உடையன. இது சாலமோனின் பெயரில் அடங்கிய 375 எண் மதிப்புக்களைக் கொண்டு எழுதப்பட்டது என்பர். இந்த அதிகாரத்தின் 16வது வசனத்தோடு இப்பகுதி முடிவடைகிறது. இந்தப் பகுதியில் நான்கு யாவே கூற்றுகளும் (2, 4, 12, 14) ஆறு செல்வம் வறுமை பற்றிய உரையாடலும் (12),

இரண்டு குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டிய பயிற்சியும் (6, 15) காணப்படுகின்றன.

சொல்விளக்கம்

1 - சான்றோர் தம் உயிரையும் கொடுப்பர். விவிலியம் இக்கருத்துக்கு விதிவிலக்கல்ல (சஉ 7:1; சீஞா 41:11-13). செல்வம் எல்லாரும் விரும்புவது. அதையும் தாண்டி நற்பெயருடன் வாழ மிகுந்த தியாகம் வேண்டும். இங்கு வரும் நற்பெயர் ஞானத்தைக் கைப்பிடித்துத் தொடர்கிறது (நீமொ 3:3-4; 13:15). எந்த உலகப் பொருளும் ஞானத்துக்கு ஈடானதில்லை. இதுவே ஞானிகள் நிலை (8:10; 16:16).

2 – செல்வரையும் வறியோரையும் உண்டாக்கியவர் கடவுளே எனும்போது ஞானி எங்கோ போய் விடுகிறார். செல்வர் வறியோரைச் சந்திப்பது தற்செயலான ஒன்றல்ல. அது கடவுளின் செயல். இதன் உண்மைப் பொருள் இருவருக்கும் உள்ள இடைவெளியும் ஏற்றத்தாழ்வும் நீங்கவேண்டும். ஏற்றத்தாழ்வு சமூக அவலம் மட்டுமல்ல, அது மனித மாண்பைப் பற்றியது. கடவுள் இரு சாராரையும் உண்டாக்கியவர். எனவே செல்வந்தர் இதை மனதில் கொள்ள வேண்டும்.

3 – இக்கூற்றை 27:12லும் காணலாம் (காண். 14:15,15). ஞானி இடர் வரும்போது தன்னை மறைத்துக் கொள்வார் அல்லது அதைவிட்டு அகன்றுவிடுவார். இது அவரது விவேகமாகும். அறிவற்றவர் எல்லா எச்சரிக்கைகளையும் தூக்கி எறிந்துவிட்டு ஆபத்தில் மாட்டிக்கொள்வர். கவனமின்மைக்குக் கிடைக்கும் பரிசு இதுதான்.

4 – இதுபோன்ற கூற்றுகளை வச 4; 21 ஒளியில் காணலாம். கடவுள் பற்றும் அச்சமும் நல்வாழ்வையும் நற்பெயரையும் நல்கும் (21:21).

5 – தீயோரைப் பயமுறுத்தும் முள் நிறைந்த பாதைகள் ஞானிகளை அச்சுறுத்துவதில்லை. அவர்கள் விழிப்புடன் இருக்கிறார்கள். ஞானிகள் வாழ்வைக் காப்பதிலே கருத்தாயிருக்கிறார்கள்.

6 – ஞானத்தின் உன்னத நோக்கத்திற்குச் சரியான நல்வாக்கை இந்த நீதிமொழி கூறுகிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. இளமையில் கொடுக்கும் பயிற்சி இறுதிவரை துணை நிற்கும்.

7 – செல்வர் ஏழைகளை அடக்கி ஆள்வதை ஒரு சமூகச் செயலாகப் முதல் பகுதி பார்க்கின்றது. ஆனால் இரண்டாம் பகுதி செல்வந்தருக்கு ஓர் எச்சரிக்கை.

ஏனெனில் கடன் வாங்கியவர் பொதுவாக ஏழையாயிருப்பர். அவர்களுக்குக் கொடுக்கப்படும் எச்சரிக்கையாகவும் உள்ளது. அவர்கள் கடனை எப்படியாவது திருப்பிச் செலுத்திச் சுதந்திரம் பெறவேண்டும் இல்லையேல் அடிமையாக இருக்கவேண்டும்.

8 – விதைப்பதும் அறுப்பதும் பயிர்த்தொழிலோடு தொடர்புடையது (திபா 126:5-6 கலா 6:7). இப்பகுதி வினைப் பயனைப் பற்றிப் பேசுகிறது. சீற்றமும் சினமும் கொள்வதால் எப்பயனும் இல்லை. மாறாக எந்தச் சினத்தால் வெல்ல முடியும் என நினைத்தாரோ அதுவே அவருக்குக் கேடாய் முடியும்.

9 – கருணை நிறைந்த உள்ளம் பகிரும் உள்ளமாகும். அது உணவை மட்டுமல்ல உடமைகளையும் பகிரும். அவரை ஆண்டவர் மட்டுமல்ல, ஏழைகளும் புகழ்வார்கள்.

10 – ஏளனம் செய்வோர் அமைதியைக் குலைத்துச் சண்டையிடுபவர். சமூகத்தையும் குழப்பிவிடுவர் (21:24). இப்படிப்பட்டவரை வெளியே துரத்திவிட வேண்டும் என்ற கட்டளை உள்ளது. அதனால் சச்சரவும் பழிச்சொல்லும் ஒழியும். இது நமது சமூகத்தில் சாத்தியமா?

11 – ஆண்டவர் தூய உள்ளத்தினரைக் காக்கிறார். அப்படிப்பட்டவர் நாவில் நல்ல வார்த்தைகள் உதிக்கின்றன. அவரது தாக்கம் அரசன் வரைக்கும் செல்கிறது. அவர் அரசனது நண்பனாகிறார். மேலும் தூய உள்ளமும் இன் சொல்லும் (இதயம் + வார்த்தை) இணைந்து ஒருவனை அரசன் மட்டும் கொண்டு செல்கிறது.

12 – அறிவுடையோர் என்பவர் எல்லாம் தெரிந்தவர் எனலாம். கடவுளுக்கு எதிராகப் பேசுபவரை இவர் எதிர்க்கிறார். எனவே கடவுளால் நேசிக்கப்படுகிறார். இது வெறும் ஞானம் என்றாலும் இந்த ஞானம் கயவனின் வார்த்தையைக் கவிழ்த்துப் போடுகிறது.

13 – சோம்பேறியின் வார்த்தைகள் நகைச்சுவையாகவும் வெறுக்கத்தக்கனவாகவும் உள்ளன. வெளியில் கால் வைப்பதற்கே சோம்பேறியாக இருப்பவன் சிங்கத்தை ஒரு காரணமாகக் காட்டுகிறான் (காண். 26:1-3; 26:14-15 19:24).

14 – மயக்கமூட்டும் வார்த்தைகளால் பிறரைக் கெடுப்பது பரத்தையின் திறமை. அவளது வாய் ஆழமான படுகுழியாகச் சித்தரிக்கப்படுகிறது (23:27).

ஆண்டவரின் கோபம் யாரிடம் உள்ளதோ அவன் அதில் வீழ்ந்துவிடுகிறான். இந்தப் பெண் யார்? இன்னொருவர் மனைவியா, பரத்தையா அல்லது அறியா ஒரு பெண்ணா? (மதியிலாப் பெண்களால் வரும் கெடுமதி 1-9 அதிகாரங்களில் கூறப்படுகிறது.)

15 - இளைஞர்களுக்கு அறிவுரை அளித்து பயிற்றுவிப்பதே ஞானத்தின் நோக்கம் (1:7; 13:24). இங்கு நாம் காண்பதோ பிறவியிலிருக்கும் அறியாமை. அவனிடமிருந்து அதை பயிற்சி கொடுத்து அகற்றவியலும். பொதுவாக மடையரைத் திருத்துவது கடினம் (27:22). ஆனால் இளமையிலே அறிவுரை தந்தால் அவனை மாற்றும் நம்பிக்கை உண்டு (வச 6). மாற்றம் வேண்டுமெனில் பயிற்சி தேவை.

16 - ஏழைகளை ஒடுக்கி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலியை மறுப்பவன் கொள்ளைக்காரன். அவன் செல்வந்தனாகலாம். ஆனால் அவன் வைத்திருப்பது ஏழைகளிடமிருந்து வஞ்சித்த பொருள், அது நீடிக்காது. செல்வந்தருக்குச் செல்வமிருக்க அவருக்கும் பொருள் கொடுக்கிறவன் கையூட்டுக் கொடுக்கிறான். இது தவறு. இவ்வாறு சலுகைகள் பெறுபவனும் பிறரை வஞ்சிக்கிறான். இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகளே. ஆனால் தண்டனை அவர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் ஏழையாவார்கள்.

செம்பொருள்

செல்வம் வறுமை பற்றி இந்த அதிகாரத்தில் (1-16) நாம் காண முடிகிறது. செல்வம் பொதுவாக ஞானத்தின் பலன் என்ற கருத்து நீதிமொழிகளில் உண்டு (3:14; 8:10-11). இப்பொழுது நற்பெயரும் சொந்த நேர்மையும் எல்லாவற்றிலும் மேலாகக் கருதப்படுகிறது. செல்வரும் வறியவரும் கடவுளின் பிள்ளைகள். அவர்களுடைய மதிப்பும் மாண்பும் ஒன்றே. எனவே செல்வம் ஒருவருக்குத் தனிப்பட்ட சிறப்புத் தருவதாகக் கூறப்படவில்லை. எனினும் வேறுபாடு இருப்பதை வச 7 கூறுகிறது. கடன் வாங்கி அதைக் கொடுக்க இயலாதவர் பின்பு கடன்காரரிடம் அடிமையாக்கப்படுவது படம்பிடித்துக் காட்டப்படுகிறது.

எனினும் தாராளம், கருணை காட்டுவதற்கு முன் வைக்கப்படுகிறது (9) ஏழைகளை ஒடுக்குகிறவரும் ஏழையாவர் (16) என்பதில் ஆசிரியரின் கூர்மையான சிந்தனையைப் பார்க்கின்றோம். ஆசிரியர் சோம்பேறித்தனத்தால் வரும் வறுமையையும் விட்டுவைக்கவில்லை. சோம்பேறியையும் சாடுகிறார் (13).

15. முப்பது முதுமொழிகள் (22:18-29)

22:18 அவற்றை நீ உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு, தேவைப்படும்போது எடுத்துரைக்கக் கூடுமானால் உனக்கு மகிழ்ச்சியுண்டாகும். 19 நீ ஆண்டவரை நம்ப வேண்டுமென்று அவற்றை நான் உனக்கு இன்று தெரியப்படுத்துகிறேன். 20 அறிவும் நல்லுரையும் தரக்கூடிய முப்பது முதுமொழிகளை நான் உனக்கென்றே எழுதி வைத்திருக்கிறேன் அல்லவா? 21 அவற்றைக் கொண்டு மெய்ம்மையை உன்னால் விளக்கக் கூடும். 22 ஒருவர் ஏழையாய் இருக்கிறார் என்று அவரை வஞ்சிக்காதே; ஒருவர் ஆதரவின்றி இருக்கிறார் என்று அவரை நீதிமன்றத்தில் சிறுமைப்படுத்தாதே. 23 ஏனெனில், ஆண்டவர் அவர்களுக்காக வாதாடுவார்; அவர்களது உயிரை வாங்கப் பார்க்கிறவர்களின் உயிரை அவர் பறித்துக்கொள்வார். 24 கடுஞ்சினங்கொள்பவனோடு நட்புக்கொள்ளாதே; எரிச்சல்கொள்பவனோடு தோழமை கொள்ளாதே. 25 அப்படிச் செய்தால் அவர்களின் போக்கை நீயும் கற்றுக்கொள்வாய்; உன் உயிர் கண்ணியில் சிக்கிக் கொள்ளும். 26 பிறருக்காக ஒருபோதும் பிணையாய் நில்லாதே; பிறர் கடனுக்காக ஒருநாளும் பிணையாய் நிற்காதே; 27 அந்த கடனை திருப்பி கொடுக்க உனக்கு ஒரு வழியும் இல்லாதிருந்தால், நீ படுத்திருக்கையில் உன் படுக்கையும் பறிபோய்விடுமன்றோ? 28 வழிவழிச் சொத்துக்கு உன் மூதாதையர் குறித்து வைத்த எல்லையை நீ மாற்றி அமைக்காதே. 29 தம் அலுவலில் திறமை காட்டுகின்ற ஒருவரைப் பார்; அவர் பாமர மனிதரிடையே இரார்; அரசு அவையில் இருப்பார்.

பின்புலம்

இந்தப் புதிய முதுமொழிகள் ஒரு புதிய கோர்வை. இதற்குக் காரணங்களாகப் புதிய ஓர் அழைப்பு மாணக்கர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் குருநாதர்களுக்குச் செவிமடுக்க வேண்டும். இவைகளின் நடை முன்னையவைகளைவிட வேறுபாடானது. இக்கூற்றுகளில் அறிவுரையும் அதற்கான காரணங்களையும் காணலாம். இவைகளில் கூற்றுகள் உண்டு, அறிவுரைகள் உண்டு, எடுத்துக்காட்டான கதைகளும் உண்டு.

இந்த முதுமொழிகளை எகிப்திய அமெனமோப்பே இலக்கியத்தோடு ஒப்பிட்டு 22:17-24:22 உள்ள கூற்றுகள் முப்பது முதுமொழிகள் என ஏற்றுக்கொள்வதை மற்ற விளக்கவுரைகளும் ஆமோதிக்கின்றன.

ஆனால் மர்பி என்ற அறிஞர் முப்பது என்பதை மறுக்கிறார். ஏனெனில் முப்பதாகக் கூற்றுகளை பிரிப்பதில் ஒத்த கருத்து அறிஞர்களிடையே இல்லை.

மேலும் அமெனமொப்பே நூலின் பகுதி 23:11 எபிரேயப் பழமொழிகளில் முடிந்து விடுகிறது என்கிறார். நீதிமொழிகள் ஆசிரியர் அமெனமோப்பெவைச் சார்ந்ததிருந்தாலும் கண் மூடித்தனமாகப் பின்பற்றாமல் தனது சுய ஞானத்தையும் அறிவாற்றலையும் பயன்படுத்தத் தவறவில்லை.

மற்ற கருப்பொருள்கள் குழந்தைகளைக் கண்டித்தல் (23:13-14), குடிப்பழக்கம் (23:31-35) போன்றவைகள் பொதுவானவை. இவை மற்ற இலக்கியங்களில் காணப்படுவதால் அதைப் பார்த்து எழுதினார் என்பதைவிட, அதன் தாக்கமும் ஆசிரியரின் சொந்த அனுபவமும் அறிவாற்றலும் இந்த நீதிமொழிகளுக்குக் காரணமாகின்றன எனலாம்.

சொல்விளக்கம்

17 – காதும் இதயமும் கேட்டு மனதில் பதிய வைக்கத் துணை செய்பவை (2:1-2, 5:1). எந்த ஆசிரியரும் இதைத்தான் முதலில் எதிர்பார்ப்பார்.

18 – உள்ளமும் உதடும் இரண்டு கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளன. உள்ளம் கேட்டுப் பதிய வைக்கிறது. இயேசுவின் கூற்றுப்படி நல்ல நிலத்தில் விழுந்த விதை (இறைவார்த்தை மத் 13:8). எனவே இது உள்ளாழத்தைக் குறிக்கும். உதடுகள் அதை எடுத்துரைப்பது என்பது பெற்ற ஞானத்தை எல்லா இடத்திலும் எடுத்துக் கூறுவது. ஞானம் மறைத்து வைக்கப்படவேண்டியதல்ல. அது கூரைமீதிருந்து அறிவிக்கப்படவேண்டியது. மக்களுக்குப் பயன்படா ஞானத்தால் என்னபயன்?

19 – 'கடவுளை நம்புதல்' ஞானிகளின் தலையாயக் கூற்று. இதில் மற்ற ஞான இலக்கியங்களைவிட இஸ்ரயேல் இலக்கியம் தனித்து நிற்கிறது.

20 – முப்பது முதுமொழிகள் என்பதில் அமெனமொப்பெ என்ற எகிப்திய இலக்கியத்தின் தாக்கத்தைக் காணலாம். அமெனமொப்பெ தனது முப்பது அதிகாரங்கள் பற்றிக் கூறுகிறார் (அதி 30).

21 – மாணாக்கன் ஞானி விளக்குவதைத் தெளிவாகக் கற்க வேண்டும். (21அ) அதன் பின்பு அதன் பதிலை அவருக்குத் தெளிவாகக் கூறவேண்டும்.

22 – ஏழைகள் மீதுள்ள கரிசனை இங்கே விளக்கப்படுகிறது (காண் விப 22:20-26; நீமொ 14:31; 17:5). ஞானி இங்கு ஓர் இறைவாக்கினரைப்போல் பேசுகிறார்.

23 – ஏழைகள் நிலமை பரிதாபமானது. அவர்களை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றால் யார் அவர்களுக்காக வாதாடுவார்? அவர்கள் ஒரு வழக்கறிஞரை அமர்த்துவது இயலாததல்லவா. அவர்கள் அநியாயமாகத் தோற்றுப்போவர்கள். அப்போது அநீதி வெற்றி பெறும். ஆண்டவரே தோல்வியைத் தழுவிவிடுவர். ஆனால் அப்படி விடாமல் அவர்களுக்காகவே ஆண்டவர் வாதாடி

அவர்களைக் கொல்ல விழைகிறவர்களைக் கொன்றுவிடுவார். ஏழைகள் சார்பாக உள்ள இறைவன் எப்படிக் காக்கிறார் என்பதை இங்குக் காணலாம்.

24 – கடுஞ்சினம் கொள்பவன், எரிச்சல்படுபவன் பற்றி நீதிமொழிகள் பேசுகின்றன (15:18). இப்படிப்பட்டவர்கள் பற்றி அமெனெமொப்பெ கூறுகிறார். இவர்களின் அடிப்படை பலவீனம் தங்களை அடக்க முடியாததே. தன்னை வெல்லமுடியாதவன் யாரையும் வெல்லமுடியாது. இவர்களோடு தொடர்புவைத்துக் கொண்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அடுத்தக் கூற்றில் காணலாம்.

25 – தீயோரோடு நட்பு வைத்துக்கொள்வதும் தீதே. பொறுமை இழப்பவனோடு தொடர்பு வைத்துக்கொண்டாயென்றால் நீயும் அவனின் போக்கைக் கற்றுக் கொள்வாய்; ஆபத்தில் சிக்கிக்கொள்வாய்.

26 – பிணையாய் நிற்பது நல்லதல்ல என்றும் அதனால் வரும் விளைவு என்னவென்றும் 26, 27 நீதிமொழிகள் கூறுகின்றன. (மேலும் காண். 6:1 11:15 17:8). பிணையாக நிற்பதில் பல பின்விளைவுகளை ஞானிகள் அனுபவித்திருக்கவேண்டும். பிணையாக நிற்பது பொதுவாக ஆபத்துகள் நிறைந்ததுதானே.

27 – கடனைச் செலுத்தவில்லையெனில் நீ ஆபத்தில் மாட்டிக் கொள்வாய். அந்த ஆபத்தை நகைச்சுவையோடும், கேலியாகவும் சிறப்பாக விளக்குகிறார் ஆசிரியர். நீ எல்லாம் இழந்துவிடுவாய். படுக்கை பொதுவாக இஸ்ரயேல் மக்களிடையே சொகுசானது அல்ல. பொதுவாக போர்வையை அடமானமாக வைத்திருந்தால் அதை அந்தி இருளுக்குமுன் அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது யூதச் சட்டம் (விப 22:25-26; 24:10-13). படுத்திருக்கும்போதே உன் படுக்கைப் பறிபோய்விடும் எனும்போது எவ்வளவு ஆபத்து அதில் உள்ளது என்பதை ஆசிரியர் கூற விரும்புகிறார்.

25 – மூதாதையர் சொத்தை எப்படிப் பராமரிக்க வேண்டும், எப்படி சட்டத்தை மீறக்கூடாது என்பதெல்லாம் (இச 19:14; 27:17) கூறப்பட்டிருக்கிறது. மீறிச் செயல்படுவதெல்லாம் பொல்லாதப் பேராசையாலும், நிலத்தையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற தீய நோக்கத்தாலும் எழுகின்றன. வசதிபடைத்தோர் வசதியில்லாதவரிடமிருந்து கவர்ந்துகொள்ளும் செயலை இக்கூற்றுத் தடுக்கிறது.

ஆனால் சட்டங்களே அநீதியாக இருப்பின் அதை மாற்றியமைத்தல் முறையல்லவா? சான்றாக பெண்களுக்குச் சொத்தில் உரிமை இல்லை என்பது எப்படிப் பொருந்தும்!

29 – செய்யாதே என்ற கூற்றிலிருந்து இன்னொரு கூற்றுக்கு வருகிறோம். பல திறமைகளைக் கொண்டவரை அடையாளம் காண வேண்டும். அவர்களின் திறமைகள் அவர்களை அரசரவையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அரசர்கள் இல்லா இக்காலத்தில் ஓர் ஆளுநராகவோ துணை ஆளுநராகவோ, பணிசெய்து தனது திறமைகளைப் பயன்படுத்தலாம்.

செம்பொருள்

ஏழைகள் மீது ஆண்டவருக்குள்ள கரிசனையை ஆசிரியர் தெளிவாக விளக்குகிறார். கடவுளை நம்பிய ஏழை தோல்வியடைந்தால் கடவுளே தோற்றுப்போய்விடுவார். எனவே ஏழைகளைக் காக்கும் கடவுளாகச் சித்தரிப்பது ஆசிரியரின் இறைப்பற்றைக் காட்டுகிறது.

16. நல்ல, தீய பண்புகள் (23:1–35)

23:1 ஆளுநர் வீட்டில் நீ உணவு கொள்ள உட்காரும்போது, உனக்குமுன் இருப்பதை நன்றாய்க் கவனித்துப் பார். 2 உனக்கு அப்போது அடங்காப் பசி இருந்தாலும், உன் தொண்டையில் கத்தி இருப்பதாக நினைத்துக்கொள். 3 அவர் தரும் சுவையான உண்டியை உண்ண ஆவல் கொள்ளாதே; அது உன்னை வஞ்சிக்க விழையும் உணவாயிருக்கலாம். 4 செல்வராக வேண்டுமென்று பாடுபட்டு உருக்குலைந்து போகாதே; அதனால் உனது அறிவை இழந்து விடாதே; 5 இல்லாமற்போகும் பொருள் மேல் நீ கண்ணும் கருத்துமாய் இருப்பானேன்? கழுகுபோல் அது தனக்குச் சிறகுகளை வளர்த்துக்கொண்டு வானத்தில் பறந்து போகுமன்றோ? 6 கஞ்சர் தரும் உணவை உண்ணாதே; அவரது அறுசுவை உண்டியை உண்ண ஆவல் கொள்ளாதே. 7 அவர் தமக்குள் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்; "உண்டு பருகு" என்று அவர் சொன்னாலும் அவருக்கு உன்மீது அக்கறை இல்லாதிருக்கலாம். 8 நீ உண்ட உணவை வாந்தியெடுக்க நேரிடும்; நீ உரைத்த புகழுரை பயனற்றதாகும். 9 மதிகேடர் காதில் விழும்படி எதையும் பேசாதே; உன் அறிவுரைகளை அவர் மதிக்கமாட்டார். 10 வழிவழிச் சொத்தின் எல்லையை மாற்றி அமைக்காதே; உன் நிலத்தின் எல்லையைத் தள்ளித் தள்ளி திக்கற்றவர்களின் நிலத்தை எடுத்துக்கொள்ள முயலாதே; 11 ஏனெனில், அவர்களின் மீட்பர் வல்லவர்; அவர் அவர்கள் சார்பில் உனக்கு எதிராக வழக்காடுவார். 12 நல்லுரை கேட்பதில் சிந்தனையைச் செலுத்து; அறிவூட்டும் மொழிகளுக்குச் செவிகொடு. 13 பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்தத் தயங்காதே; பிரம்பினால் அடித்தால் சாகமாட்டார்கள். 14 பிரம்பினால் அவர்களை அடித்தால் நீ அவர்களைப் பாதாளத்துக்குத் தப்புவிக்கிறவனாவாய். 15 பிள்ளாய், நீ ஞானமுள்ளவனாயிருந்தால் நான் மனமகிழ்ச்சி அடைவேன். 16 உன் நாவு நேர்மையானவற்றைப்

பேசினால் என் உள்ளம் களிகூரும். 17 வளமுடன் இருக்கும் பாவிகளைப்போல நீயும் இருக்கவேண்டுமென்று ஏங்காதே; ஆண்டவரிடம் எப்போதும் அச்சம் உள்ளவனாயிரு. 18 அப்பொழுது, உன் வருங்காலம் வளமானதாயிருக்கும்; உன் நம்பிக்கையும் வீண்போகாது. 19 பிள்ளாய், இதைக் கவனி; ஞானமுள்ளவனாயிரு; உன் மனத்தை நன்னெறியில் செலுத்து. 20 குடிகாரரோடு சேராதே; பெருந்தீனியரோடு சேர்ந்து கொண்டு அவர்களைப் போலப் புலால் உண்ணாதே. 21 குடிகாரரும் பெருந்தீனியரும் முடிவில் ஏழைகளாவர்; உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்தும். 22 பெற்ற தந்தைக்குச் செவிகொடு; உன் தாய் முதுமை அடையும்போது அவளை இழிவாக எண்ணாதே. 23 மெய்ம்மையை விலைகொடுத்தாயினும் வாங்கு; ஆனால் அதை விற்பனை செய்யாதே; அவ்வாறே ஞானத்தையும் நல்லுரையையும் உணர்வையும் விலை கொடுத்துப்பெறு. 24 நேர்மையான பிள்ளையின் தந்தை மிகவும் களிகூர்வார்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சி அடைவார். 25 நீ உன் தந்தையையும் உன் தாயையும் மகிழ்விப்பாயாக; உன்னைப் பெற்றவளைக் களிகூரச் செய்வாயாக. 26 மகனே, நான் சொல்வதைக் கவனி; என் வழிகளில் உன் கவனத்தைச் செலுத்து. 27 விலைமகள் ஒரு படுகுழி; பரத்தை ஓர் ஆழ்கிணறு. 28 அவள் கள்வனைப்போலப் பதுங்கி இருப்பாள்; அவள் ஏராளமான பேரை வஞ்சிப்பவள். 29 துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள், கலங்கிச் சிவந்திருக்கும் கண்கள்-இவை அனைத்தையும் அனுபவிப்பவர் யார்? 30 திராட்சை இரச மதுவில் நீந்திக் கொண்டிருப்பவர்களே, புதுப்புது மதுக் கலவையைச் சுவைத்துக் களிப்பவர்களே, 31 மதுவைப் பார்த்து "இந்த இரசத்தின் சிவப்பென்ன! பாத்திரத்தில் அதன் பளபளப்பென்ன!" எனச் சொல்லி மகிழாதீர். அது தொண்டைக்குள் செல்லும்போது இனிமையாயிருக்கும்; 32 பிறகோ அது பாம்புபோலக் கடிக்கும்; விரியனைப் போலத் தீண்டும். 33 உன் கண் என்னென்னவோ வகையான காட்சிகளைக் காணும்; உன் உள்ளத்திலிருந்து ஏறுமாறான சொற்கள் வெளிப்படும். 34 கடல் அலைமீது மிதந்து செல்வது போலவும், பாய்மர நுனியில் படுத்துறங்குவது போலவும் உனக்குத் தோன்றும். 35 "என்னை அடித்தார்கள். எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், நான் அதை உணரவில்லை; நான் எப்போது விழித்தெழுவேன்? அதை இன்னும் கொடுக்கும்படி கேட்பேன்" என்று நீ சொல்வாய்.

பின்புலம்

இப்பகுதி அறிவுரைகளைக் கொண்டதாக உள்ளது. பல கருப்பொருள்கள் பற்றிப் பேசுகிறது. ஆளுநரோடு உணவு உண்பது, பேராசை கொள்ளுதல், செல்வம் சேர்க்கும் ஆசை, சொத்தின் எல்லையை மாற்றியமைத்தல் போன்றவை பற்றிப் பேசப்படுகின்றன (காண். 23:1-11). அமெனமோப்பெயின் போதனைகள் போலுள்ளவை இவை. பின்புவரும் வசனங்களில் (12-35) 'கீழ்ப்படியும் மகன்' பற்றிக் கூறப்படுகிறது. இருப்பினும்

இளைஞருக்குப் பயிற்சி (12-16).
தவறுவோரைப் பின்பற்றாதே (17-18)
குடிப் பழக்கம் (19-21)

இளைஞரும் பெற்றோரும் (22-25)

விலைமாதுவிடம் எச்சரிக்கை (26-28)

குடிப்பதால் வரும் தீமை (24-32) போன்ற கருத்துகளை முன்வைக்கிறார்.

இறுதி வசனங்களை (29-32) புதிர் என்றும் கூறுவர். மனிதனைப் பாதிக்கும் நல்ல, தீய பண்புகளைத் தன் போதனையின் கருப்பொருளாக்குகிறார் ஆசிரியர்.

சொல்விளக்கம்

1 – 1-3வசனங்களில் அமெனமொப்பெயின் படிப்பினைகள் எதிரொலிப்பதைக் காணலாம். எப்படி மேலிடங்களில் நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றிப் பல எகிப்திய இலக்கியங்களில் பேசப்படுகிறது (கெகாமனி, ப்டாஒடெப், அமெனைமோப்பெ) காண் சீஞா 31:12-32:13. இது உண்ணும் உணவையோ அல்லது அழைத்த விருந்தினரையோ குறிக்கலாம். விருந்துக்கு அழைப்பவர் விருந்தினரைச் சோதிக்கலாம்.

2 – தொண்டையில் கத்தி இருப்பது எனும் உருவகம் அடங்காப் பசியைக் கட்டுப்படுத்துவதை அல்லது அடங்காப் பசியால் அதிகம் உண்பதைக் குறிக்கும். எதிலும் நிதானம் தேவை.

3 – வஞ்சிக்க விளையும் உணவு: அதிகம் உண்பதால் ஏற்படும் உடல் சிரமத்தையோ அல்லது உடல் நலத்துக்கு உகந்ததல்லாத உணவையோ குறிக்கலாம். இது விருந்துக்கு அழைக்கும் மனிதனின் வஞ்சகக் குணத்தைக் குறிக்கலாம். இது விருந்தினர்க்குக் கொடுக்கும் உணவைவிட அழைத்தவரின் வஞ்சக எண்ணத்தைக் காட்டுகிறது.

4 – செல்வம் பற்றி நீதிமொழிகள் பேசினாலும் இங்குதான் செல்வத்திற்கு நேரெதிராகப் பேசப்படுகிறது. இது ஞானத்தின் அடிப்படையில் பேசப்படுகிறது. ஏனெனில் செல்வம் வாழ்வை விழுங்கும். சில சமயங்களில் ஏமாற்றிவிடும். செல்வத்தை இழந்தால் அதைப் பெறலாம். உடல் நலத்தை இழந்தால் அதை திருப்பிப் பெறுவது கடினம். செல்வம் பெற உடல் நலத்தை இழக்கக்கூடாது. ஞானம் வழிநடத்த விட்டுவிடு.

5 – பொருள்கள் கொள்ளையடிக்கப்படலாம், யாராவது அவற்றை ஏமாற்றிக் கொண்டு போகலாம். அவை நிலையானவையல்ல. உடனே பறந்து மறைந்து போகும் பறவை போன்றது செல்வம்.

6-8 - வசனங்கள் விருந்து தருபவரின் குணநலன்களைப் பற்றிப் பேசுகின்றன.

6-7 - கஞ்சர் தரும் உணவும் அறுசுவை உண்டியும் அமிர்தமல்ல. அது நெருப்பு. அது உன் மதிப்பைக் கெடுத்துவிடும். ஏனெனில் உன்னை அழைத்தவர் ஒரு வெளிவேடக்காரர். அவரது சொல்லில் சுத்தமில்லை. மேலும் 7வது வசனத்தில் இவ்வுணவு தொண்டையில் முடிபோன்றது எனக் கூறப்பட்டுள்ளது (தமிழில் அது இல்லை). தொண்டையில் உள்ள முடி வாந்தியை ஏற்படுத்தும். ஏழைகளைச் சுரண்டும் மனிதன் பற்றிக் கூறுகையில் தொண்டையில் அடைப்பு ஏற்பட்டு வாந்திவருமென அமெனமொப்பெ கூறுகிறார் (14:5-7; 15-19).

8 – நீ விருந்து படைத்தவருக்குச் சாற்றிய புகழாரம் நீ வாந்தி எடுத்ததால் அது பயனற்றதாகிவிடும். புகழாரமும் வாந்தியும் வாயிலிருந்து வருவதை நோக்கவும்.

9 – மதிகேடரிடம் பேசுவது பயனற்றது (26:4; சீஞா 22:9-10). மதிகேடர் அறிவில் குறைந்தவராய் இல்லாதிருக்கலாம். ஆனால் அவர் கேட்க மறுப்பவர்.

10-11 – சொத்தின் எல்லையை, நிலத்தின் எல்லையை மாற்றியமைக்காதே (22:28). எல்லையை மதிக்கவேண்டும் என்பது முன்னோர்கள் வகுத்துத் தந்தது. காரணம் கடவுள் அனாதைகள், கைம்பெண்களுக்குச் சார்பாக இருக்கிறார் (15:15). இங்குக் கடவுள் 'கோயேலாக' அதாவது பாதுகாக்கும் சொந்தக்காரராக மாறிவிடுகிறார். அமனெமோப்பெ நூலிலும் இந்தக் கருத்து காணப்படுகிறது (8:9-15).

12 - இந்தக் கூற்று அடிக்கடி வலியுறுத்தப்படும் ஒன்று. ஞானநூல் நல்லுரை கேட்பதை, அறிவைப் பெருக்கும் உரைகளுக்குச் செவிமடுப்பதை வலியுறுத்துகிறது (காண். 19:20).

13-14 - இது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கூறுவதாக உள்ளது. இவர்கள் இளைஞர்களுக்குக் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிரம்பாலடிப்பது ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று (13:24 19:18). ஆனால் சாவும் இங்கே சாவு பற்றியும் பேசப்படுவது முகத்தைச் சுழிக்க வைக்கிறது. எனினும் இதன் நோக்கம் பாதாளத்திலிருந்தும் சாவிலிருந்தும் காப்பது. இச்சாவு பிரம்படியால் வரும் சாவல்ல, எதிர்பாராது இளமையில் வரும் சாவு.

15-16 - 'லப்' என்பது உள்ளத்தை (இதயத்தைக்) குறிக்கும். உள்ளம் உணர்ந்து கொள்ள, புரிந்துகொள்ள உதவும் அவயம். உள்ளமும் கல்லீரலும் முழு மனிதனையும் அகத்தின் ஆழத்திலுள்ள உணர்வுகளையும் எடுத்துரைக்கின்றன (எரே 11:20). ஞானமுள்ள இதயத்திலிருந்து உதடுகள் நீதியையும் நேர்மையையும் பேசும். இந்தக் கூற்றுகள் எளியன என்றாலும் ஆசானுக்கு அது மகிழ்ச்சி அளிக்கும் ஒரு நல்ல இலக்காக விளங்குகிறது. வச 12யில் கூறப்பட்ட கடின வார்த்தைகளுக்கு இது மாற்று மருந்தாக உள்ளது.

17-18 - வளமுடன் இருக்கும் பாவிகள்மேல் உள்ள பொறாமை பற்றி திப 37, 73 பேசுகின்றன. இந்தப் பொறாமையை ஆண்டவரிடம் கொள்ளும் அச்சத்தின் மீதுள்ள ஏக்கம் எனலாம்.

18 - வசனங்கள் 17ம் 18ம் இணையானவை என அறிஞர்கள் கூறுகின்றனர். 18ம் வசனம் 24:14ம் இறுதி வார்த்தைகளை எடுத்துரைக்கின்றன. இரண்டிலும் நல்ல முடிவு கூறப்படுகிறது. இங்குக் கூறப்படும் வாழ்வு மறுவாழ்வல்ல, மாறாக இகமதில் வாழும் மகிழ்வான நீண்ட வாழ்வு. இறுதிக்காலம் பற்றிக் கூறவில்லையே எனக் கவலை வேண்டாம். மாறாக அந்த நம்பிக்கை இதில் கொழுந்துவிட்டு எரிவதைப் பார்க்கலாம்.

19 - ஞானமும் நன்னெறியும் இளைஞர்களின் மகுடங்கள். ஞான ஆசிரியர் இந்தக் கட்டளையை அல்லது அறிவுரையை இளைஞர்முன் வைக்க வேண்டும். இது ஞானநூலில் (1-9) காணப்படும் அழுத்தமான கருத்து. 'நல்வழி' காட்டுவது ஞானத்தின் குறிக்கோள் (காண். வச 19). சபையுரையாளரின் (11:9) கூற்று சற்று மாறாக உள்ளது.

20-21 - அதிகம் குடிப்பதாலும் அதிகம் உண்பதாலும் அதிகம் செலவு, இறுதியில் வறுமை. இது இன்றும் நாம் கண்கூடாகப் பார்க்கும் ஒன்று. எல்லாச் சமுதாயத்திலும் இதை நாம் காண்கிறோம்.

22-25 - 22 இலும் 25 இலும் பெற்றோர்கள் பற்றிப் பேசப்படுவதைக் காணலாம். இது உட்படுத்துதல் என்ற இலக்கண அமைப்பைக் கொண்டுள்ளது.

22 - தந்தையையும் தாயையும் பேண இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. தாயைப் பேணவேண்டும் என்ற கூற்றில் கொஞ்சம் உருக்கம் உள்ளது.

23 – உண்மையை வாங்கவோ விற்கவோ முடியாது. அது வியாபாரப் பொருளல்ல. ஒருவேளை அதைத் தேடிக் கண்டடையச் செலவாகும் பணத்தைப் பற்றிக் கூறுவதாகவும் இருக்கலாம். தமிழ்ப் பண்பாடு 'பிச்சைபுகினும் கற்றல் நன்றே' என்கிறது. உண்மை தேடலின் பரிசு.

24 – மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை. அதனால் வரும் மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ! தன் மகன் "சான்றோன்" என்பதுபோல் வேறோர் மகிழ்ச்சி பெற்றோருக்கில்லை (வச 15). சான்றோன் என்பது நீதி, நேர்மை, ஞானம் அனைத்தையும் குறிக்கும்.

25 – இருமுறை தாயின் பெயர் வருகிறது. இது தாய் பெறும் மகிழ்ச்சி இரட்டிப்பு என்பதைக் காட்டுகிறது! (காண். விளக்கம் வச.24).

26-28 – விளக்கவுரையாளர்களின் கருத்துப்படி இது பின்வரும் விலைமகள் பற்றிய எச்சரிக்கைகளுக்கு ஒரு முன்னுரை (27-28). மீண்டும் காதும் மனதும் வலியுறுத்தப்படுகிறது (வச. 19); இஸ்ரயேல் ஞானத்தில் பதில் கூறுவது அதிகம் காணப்படுவதில்லை என்ற கருத்தை அலென்சோ ஷெக்கல் முன்வைக்கின்றார்.

27 – படுகுழி என்பது பரத்தையின், விலைமகளின் பால் உறவை அல்லது காம உறவைக் குறிக்கிறது. அவள் எல்லைமீறிய உறவுக்கு அழைத்துப் படுகுழியில் தள்ளுபவள்.

28 – அவள் ஒரு திருடியாகக் காட்டப்படுகிறாள். அவள் தனது செயலால் பலரைப் பிரமாணிக்கத்திலிருந்து தவற வைக்கிறாள்.

29 – திராட்சை இரச மது அருந்துதலால் வரும் அவலங்களைப் பட்டியலிடுகிறார் ஆசிரியர். துன்பம், கண்ணீர், ஓயாச் சண்டை, புலம்பல், புண்கள், சிவந்த கண்கள்; இவை கண்ணால் கண்டு அனுபவத்தில் பெற்ற உண்மைகள். நமது சூழலுக்கு இது எவ்வளவு உண்மை என்பது தெரியும்.

30 – மேலே கேட்ட கேள்விக்குப் பதில் ஒரு விடுகதை போல் இருக்கிறது.

31-32 – ஆசிரியர் மிகுந்த கற்பனையோடு பேசி அறிவுரை தருகிறார். சிவப்பான இரசம், அதன் பளபளக்கும் அழகு கண்டு வியக்கும் மதுப் பிரியர்களை கேலி செய்கிறார். ஆபத்து உங்கள் அருகில் இருக்கிறது என எச்சரிக்கிறார். (இச

7:9). அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருக்கும். இந்த ஆபத்து நச்சுப் பாம்பு கடிப்பதால் வரும் மரணத்தை எடுத்துக் கூறுகிறது (காண். இச 32:33).

34 – அதிகமாகக் குடிப்பதால் வரும் சொல்லமுடியா காட்சிகள் பற்றிப் பேசப்படுகின்றன. இது மனிதனுக்கு வரும் தனிப்பட்ட அனுபவத்தை எடுத்துக்கூறுகிறது. அது ஓர் இளைஞனாக இருக்கலாம். "உன் கண்கள்," "உனது உள்ளம்" சுயநினைவு இழந்து போதைக்கு அடிமையாகி விந்தையான காட்சிகளைக் காண்பதையும் முன்னுக்குப்பின் முரணான வார்த்தைகளைக் கூறுவதையும் கூறுவது ஓர் அனுபவச் சான்றாகக் காணலாம்.

35 – ஆசிரியர் ஒரு சிறப்புமிகு ஒப்புமையை முன்வைக்கிறார். கடல் அலைமீது நடந்து செல்வதுபோலவும் பாய்மர நூலில் படுத்துறங்குவது போலவும் என்பது ஒரு கற்பனைக் காட்சி. போதையிலிருப்பவர் நாம் எங்கே இருக்கிறோம், என்ன செய்கிறோம் என்பது தெரியாமலே உணர்விழந்து நிற்கும் அவல நிலையை (திபா 107:27) சுட்டிக் காட்டுகிறார்.

36 – அடித்தாலும் நோவு இல்லை அறைந்தாலும் உணர்வு இல்லை விழித்தெழுந்தவுடன் "இன்னும் மது ஊத்து" என நீ சொல்வாய். குடிப்போரின் இழிநிலை எல்லாருக்கும் ஓர் எச்சரிக்கை.

செம்பொருள்

வசனம் 23:11றோடு அமெனமோப்பெ போதனைகளின் தாக்கம் முடிவுக்கு வருகிறது. பின்பு வரும் வசனங்கள் அதி 1-9இல் கூறப்படும் பாணியில் உள்ளன. குடிமயக்கம் அதன் விளைவுகளைப் பற்றி ஆசிரியர் கூறும் பாணி வியப்பாக உள்ளது. குடிப்பதால் வரும் விளைவுகளைக் கூறி அதிலிருந்து கற்றுக்கொள்ள அழைக்கிறார். நேரடிப் போதனை இல்லை. திராட்சை மது முதலில் நல்லது போலிருக்கும், பின்பு பாம்புபோல் கடிக்கும் என்று ஆசிரியர் எச்சரிக்கிறார். இளைஞருக்கு ஞானம்பெறப் பயிற்சி, பெற்றோருக்கு மதிப்பு, விலைமாதிடம் எச்சரிக்கை, சொத்தின் எல்லையை மாற்றியமைக்காதிருத்தல் போன்ற நற்கருத்துகளை இப்பகுதியில் காணலாம்.

17. அறிவுரைகள், கூற்றுகள், கட்டளைகள் (24:1-22)

24:1 தீயோர் வளமுடன் இருப்பதைக் கண்டு மனம் வெதும்பாதே; அவர்களுடன் உறவு பாராட்டவும் விரும்பாதே. அவர்களுடைய தோழனாய் இருக்க விரும்பாதே. 2 அவர்கள் மனம் கொடுமை செய்வதையே நினைத்துக்கொண்டிருக்கும்; அவர்கள் பேச்சு, தீமை விளைவிக்கும் பேச்சு. 3 ஞானம் வீட்டைக் கட்டும்; மெய்யறிவு அதை உறுதியாக அமைக்கும். 4 அருமையும் நேர்த்தியுமான பல பொருள்களால் அறிவு தன் அறைகளை நிரப்பும். 5 வீரரைவிட ஞானமுள்ளவரே வலிமை மிக்கவர்; வலிமை வாய்ந்தவரைவிட அறிவுள்ளவரே மேம்பட்டவர். 6 ஏனெனில், போரில் வெற்றி பெற ஆழ்ந்த சிந்தனை தேவை; கவனத்துடன் வகுக்கும் திட்டமே வெற்றிக்கு அடிப்படை. 7 ஞானம் மூடருடைய அறிவெல்லைக்கு அப்பாற்பட்டது; எனவே, அவர் வழக்குமன்றத்தில் வாய் திறக்கமாட்டார். 8 தீமை செய்யத் திட்டமிடுபவன் வஞ்சனையாளன் என்னும் பெயர் பெறுவான். 9 மூடர்கள் பாவத்தைத் தவிர வேறெதற்காகவும் திட்டமிடுவதில்லை; ஒழுங்கீனரை மக்கள் அருவருப்பார்கள். 10 நிறைவுள்ள காலத்தில் உன் மனம் சோர்வடையுமானால், குறைவுள்ள காலத்தில் உன் ஆற்றல் இன்னும் குன்றிப்போகுமன்றோ? 11 கொல்லப்படுவதற்கு இழுத்துச் செல்லப்படுவோரைத் தப்புவிக்கப் பார்; கொலைக்களத்திற்குக் கொண்டு செல்லப்படுவோரைக் காப்பாற்றப்பார். 12 "அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்வாயானால் இதயத்தில் இருப்பதை அறிபவர் உன் எண்ணத்தையும் அறிவார் அல்லவா? உன் உள்ளத்தைப் பார்க்கிறவர் அதை அறிவார் அல்லவா? ஒவ்வொருடைய செய்கைக்கும் ஏற்றபடி அவர் பயனளிப்பார் அல்லவா? 13 பிள்ளாய்! தேன் சாப்பிடு; அது நல்லது; கூட்டினின்று ஒழுகும் தேன் உன் வாய்க்குத் தித்திப்பாய் இருக்கும்; 14 ஞானமும் அறிவும் உனக்கு அவ்வாறே இனிமையாயிருக்கும். அவற்றை நீ அடைந்தால் முடிவில் உனக்குப் பயன் கிடைக்கும்; உன் நம்பிக்கை வீண்போகாது. 15 கயவர் போல் பதுங்கியிருந்து நல்லவர் வீட்டைக் கெடுக்கப் பார்க்காதே; அவர் குடியிருப்பைப் பாழாக்கி விடாதே. 16 நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்; பொல்லார் துன்பம் வந்தவுடன் விழுந்துவிடுவர். 17 உன் எதிரி வீழ்ச்சியுறும்போது நீ மகிழாதே; அவர் கால் இடறும் போது களிகூராதே. 18 நீ அப்படிச் செய்வாயானால், ஆண்டவர் அதைக் கண்டு உன் மீது சினம் கொள்வார்; அவருக்கு அவர் மீது இருக்கக்கூடிய சினம் தணிந்து போகும். 19 தீயோரை முன்னிட்டு எரிச்சல் அடையாதே; வளமுடனிருக்கும் பொல்லாரைக் கண்டு மனம் வெதும்பாதே; 20 தீயவருக்கு வருங்காலத்தில் நல்வாழ்வு இராது; ஏனெனில் பொல்லாருடைய விளக்கு அணைந்து போகும். 21 பிள்ளாய்! ஆண்டவருக்கும் அரசனுக்கும் அஞ்சி நட; கிளர்ச்சி செய்வாரோடு உறவுகொள்ளாதே. 22 ஏனெனில், திடீரென்று அவர்களுக்குக் கேடு வரும்; அந்த இருவரும் எத்தகைய கேட்டை வருவிப்பார்களென்பது யாருக்குத் தெரியும்?

பின்புலம்

இரட்டை வசன நடையை இந்த அதிகாரத்தில் காண்கிறோம். இங்கு அறிவுரைகள், கூற்றுகள், கட்டளைகள் அனைத்தையும் காண முடிகிறது. ஞானம் கட்டும் வீடு பற்றியும் இங்குக் கூறப்படுகிறது (3-4).

சொல்விளக்கம்

1 – இந்த அறிவுரையைத் திருப்பாக்கள் 37; 1 7:3; நீமொ 3:31; 23:17; 24:19-20 கூறத் தவறவில்லை.

2 – தீயவரோடு உறவு தவிர்க்கக் காரணங்கள். அவர்கள் கொடுமை செய்வர். அவர்கள் பேச்சு தீமை விளைவிப்பது.

3 – கடவுள் ஞானத்தால் பூவுலகிற்கு அடித்தளமிட்டார் (3:19) அதேபோல மனிதர்கள் ஞானத்தால் வீடுகட்டவேண்டும். மெய்யறிவு என்பது கட்டிடம் கட்டுவதற்குரிய நுணுக்கங்களைக் குறிக்கிறது. உறுதியான கட்டிடம் அதன் அடித்தளம், தூண்கள் அதன்மீது வைக்கப்படும் கலவை எல்லாம் அதன் அளவுகளோடு இருந்தால் கட்டிடம் உறுதியாயிருக்கும்.

4 – இது தவிர வாழ்வதற்குத் தேவையான வீட்டின் பொருள்களை வீட்டிற்குள் அமைப்பதற்கும் அறிவு தேவை (காண். 31:15, 21, 27).

5 – உடல் உரம் உள்ளத்தின் விவேகத்தோடு ஒப்பிடப்படுகிறது. ஞானம் இல்லாதவரின் வீரம் விழலுக்கு இறைத்த நீர். ஞானம் உள்ளவர் தக்க நேரத்தில் தமது விவேகத்தைப் பயன்படுத்தி வெற்றியை அடைவர்.

6 – ஞானமுடையோரின் வெற்றிக்குக் காரணங்கள் கூறப்படுகின்றன. அவை ஆழ்ந்த சிந்தனை, கவனமான திட்டம்.

7 – ஞானம் மூடருக்கு எட்டாத கனி. அவன் வழக்கு மன்றத்தில் வாய் திறக்கமாட்டான் என்பதைவிட முடியாது என்பதேமேல். ஏனெனில் அவனது கருத்துகள் எடுபடா. அவனுக்கு எந்த கருத்தும் கிடையாது. ஏனெனில் கேட்கக்கூடிய அளவிற்கு அவனிடம் தகுந்த கருத்தில்லை (17:28). ஒருவேளை கருத்தில்லா வார்த்தை ஜாலங்கள் இருக்கலாம்.

8 – திட்டமிடுதல் வரவேற்கப்படும் ஒன்று. ஆனால் தீய நோக்கத்தோடு திட்டமிடுவதால் இதைச் சதி எனக் கூறுகிறோம். இங்கே இந்தத் திட்டத்தைத் தீட்டுபவன் வஞ்சனையாளன் என்று பெயர் சூட்டப்படுகிறான்.

9 – மூடர் செய்யும் திட்டங்கள் எல்லாம் பாவம் தவிர வேறில்லை. அவனை ஒரு மதிகேடன் என்பர். உள்ளத்தின் ஆழத்திலிருந்து உதிப்பதுதான் பாவம். மக்கள் அவனை மதிக்கமாட்டார்கள்.

10-12 - இந்த மூன்று நீதிமொழிகளிலும் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதில் தர வேண்டும். வசனம் 10 ஒருமையில் அமைந்துள்ளது. வச.10க்கும் 11க்கும் தொடர்பு உண்டா? வச 11 கூறும் கொலைத் தண்டனை பெறுபவர்கள் குற்றவாளிகளா அல்லது குற்றமற்றவரா? "எனக்குத் தெரியாதெனக் கூறுகிறாய்" கடவுளின் அறிவுக்கு நீ தப்ப முடியுமா?

10 – முதல் பகுதி நிபந்தனையாகவும் இரண்டாம்பகுதி அதன் தெளிவாகவும் உள்ளது. இறுதியில் மனித கோழைத்தனத்தை, பொறுப்பற்றதனத்தை ஆசிரியர் குறையாகப் பார்க்கிறார்.

11 - குற்றம் செய்தவராயிருந்து அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டால் அவரைக் காப்பாற்ற நினைப்பதும் குற்றமாகுமல்லவா? அவரைத் தப்பவிடாமல் இருப்பது பாவம் கிடையாது. ஆனால் இங்கு அவரைக் 'காப்பாற்று' என்று கூறப்படுவதால் அவர் மாசற்றவராய் இருக்கவேண்டும்.

12 – எனக்குத் தெரியாது, நான் மாசற்றவன் என்பதற்கு இங்கு இடமில்லை. ஏனெனில் நீதியுள்ள எல்லாம் அறிந்த கடவுள் உன்னையும் அறிவார். நீதியை நிலைநாட்ட நீ பயந்து கோழையாவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

13-14 - தனயனுக்குக் கொடுக்கப்படும் கட்டளையாக உள்ளது (வச 21, அதிகாரங்கள் காண் 1-9). ஞானமும் தேனும் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன (16:24). 'நெபெஷ்' என்று 14 இல் கூறப்படுவது அவனது பசியைக் குறிக்கும். தேனுக்காக ஏங்குதல்போல் ஞானத்திற்காக ஏங்க வேண்டும் (காண் சீஞா 24:20). தேன்கூட்டில் கிடைப்பது சுவையான மிகச் சிறந்த தேன். வச 14இன் பின்பகுதி 23:18ஐ திருப்பிச் சொல்வது போலுள்ளது. எனவே சில அறிஞர்கள் வச 14க்கு ஏற்புடைய வசனம் இங்கே இல்லை என்ற குறையுள்ளது என்கின்றனர்.

15-16 - பின்வரும் நீதிமொழிகளில் நல்லோர் தீயோர் பற்றிய அறிவுரை தரப்படுகிறது. அது யாவே பற்றோடு தொடர்புடையது.

15 - இந்த அறிவுரை நீமொ 1:11-18 உள்ளஅறிவுரைகளை நினைவுபடுத்துகிறது. பொல்லாதவர் பதுங்கியிருந்து செய்கிற அட்டூழியங்களும் அழிவுகளும் அதிகம். இதேபோல கெடுமதி செய்ய முயற்சிக்கும் பெண்களை 17:12; 23:28இல் காணலாம்.

16 - நல்லவர்கள் விடாமுயற்சியுடையவர்கள், அவர்கள் துன்பங்களில் துவண்டுவிடாமல் எழுந்து நிற்பர். கீழே விழுந்தாலும் ஆர்வமுடன் எழுந்து

பீடுநடைபோடுவர். பொல்லாரைப்போல் பொசுங்கிவிடுவதில்லை. சபை உரையாளர், பொல்லார் தண்டனை பெறாமலே நூறுமுறை தீமை செய்கின்றனர் என்கிறார். நீதிமொழி நம்பிக்கையை முன்வைக்கிறது. துன்பம் இல்லாமல் இல்லை; ஆனால் நல்லோர் இறுதியில் அமைதியை நிலைநாட்டுவர்.

17 - எதிரியின் வீழ்ச்சியில் மகிழ்வதை திபா 58:11 ஆமோதிப்பது போலுள்ளது. ஆனால் அது திபா 35:13-15 இப்பொல்லாதவரின் தீக் குணமாகக் காட்டப்படுகிறது. யோபு 31:29 இதைக் கண்டனம் செய்கிறது. நீதிமொழி இதைச் செய்யாதே எனக் கட்டளை இடுகிறது.

18 - இந்த நீதிமொழியில் அதிகம் தெளிவு இல்லை: பழிவாங்கும் உணர்வை தீமை என்று கருதி அதைத் தண்டித்து, எதிரி இழைத்த தீமைகளைக் கண்டுகொள்ளாது அவர் மீது தனது கோபத்தைக் காட்டாமல் விடுவாரா? அல்லது எதிரியின் வீழ்ச்சியால் வந்த மகிழ்ச்சியை கைவிட்டுக் கடவுள் சினம் அவனைத் தண்டிக்கும் என்ற நம்பிக்கையில் இருப்பாரா? கடவுள் இத்தகைய எண்ணத்தை விரும்புவதில்லை (25:21). ஒருவேளை எதிரியின் வீழ்ச்சியில் மகிழ்ந்தவர்மீது தமது கோபத்தைத் திருப்புவார் என்றும் கூறலாம். இந்தக் கூற்றுக் குழப்பமுடையதாக உள்ளது.

19 – தீயோரை முன்னிட்டு எரிச்சலடைவது பொறாமைப்படுவது போலாகும் (காண். திபா 37:1,7 காண் வச 1).

20 – இங்குக் காரணம் தரப்படுகிறது. அவர்களுக்கு எதிர் காலம் இல்லை. இது வச 14, 23:18இல் கூறப்படுவதற்கு மாறுபட்டது. விளக்கு வாழ்வைச் சுட்டுகிறது. பொல்லாரின் மதிப்பீடுகள் மறைந்துவிடும்.

21-22 – இந்த ஓர் இடத்தில் மட்டும் ஆண்டவர்க்கும் அரசனுக்கும் அஞ்சி நட என்று கூறப்படுகிறது. யாவேயும் அரசனும் ஒரே நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றனர். இவர்களுக்குக் கீழ்ப்படிவதில் எச்சரிக்கை தேவை. ஏனெனில் கீழ்ப்படியாததால் எந்த நேரத்தில் கேடுவரும் எனக் கூற இயலாது. இங்கு மட்டும் ஆண்டவர், அரசன் அளிக்கும் தண்டனையை இருவருக்குப் பொதுவாக வைத்து எதிர்மறையாகக் கூறுகிறார். அரசனின் எதிரியோடு நீ இருப்பது தெரிந்தால் சிறை அல்லது மரண தண்டனை; இது அரசனுக்கும் பொருத்தலாம். ஆண்டவருக்கு? ஆண்டவர் அரசனைவிட மேலானவர் (21:1; 25:21).

செம்பொருள்

வினைப்பயன் கொள்கை பற்றி விவிலியம் முழுவதும் கூறப்படுகிறது. நீதிமான் ஏன் துன்புற வேண்டும்? தீயவன் ஏன் செல்வச் செழிப்பில் வாழ்கிறான் என்ற கேள்வி இன்னும் விட்டபாடில்லை, (1, 19). 'தீயோருக்கு நல் வாழ்வு இராது' என்பது நல்ல பதிலாய் அனுபவத்தில் இல்லை என்பது பலர் கருத்து (16, 20). எனினும் இதைப் பார்த்துச் சினமோ பொறாமையோ கொள்வதில் பயனில்லை. இதன் மத்தியிலும் ஆசிரியர் நம்பிக்கையையும் வளமான எதிர்காலத்தையும் முன்வைக்கிறார். தீயோர் மடிவர் நேர்மையுடையோரின் நம்பிக்கை வீண்போகாது (14, 20) என்கிறார் (காண். திபா 37, 73). நல்லது செய்யாது விட்டவரும் கடவுளின் பார்வையில் தப்பமாட்டார் (10-12) என்று கூறப்படுகிறது. அரசனும் ஆண்டவர்போல் கருதப்படுகிறான் (21, 22).

18. நல்வாழ்வுக்குத் தேவையானவை (24:23-34)

24:23 ஞானிகளின் வேறு சில முதுமொழிகள்; நீதித்தீர்ப்பு வழங்கும்போது ஓர வஞ்சனை காட்டுவது நேரியதல்ல. 24 குற்றம் செய்தவரை நேர்மையானவர் எனத் தீர்ப்பளிக்கும் நீதிபதியை மனிதர் சபிப்பர்; உலகனைத்தும் வெறுக்கும். 25 ஆனால் குற்றம் செய்தவரைத் தண்டிக்கும் நீதிபதிக்கு நலமுண்டாகும்; நற்பேறும் கிடைக்கும். 26 நேர்மையான மறுமொழி கூறுபவரே அன்போடு அரவணைக்கும் நண்பராவார். 27 வாழ்க்கைத் தொழிலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்; வயலை உழுது பண்படுத்து; பிறகு உன் வீட்டைக் கட்டியெழுப்பத் தொடங்கு. 28 தக்க காரணமில்லாதபோது அடுத்திருப்பாருக்கு எதிராகச் சான்று சொல்லாதே; உன் வாக்குமூலத்தில் அவருக்கு எதிராக உண்மையைத் திரித்துக் கூறாதே. 29 "அவர் எனக்குச் செய்தவாறே நானும் அவருக்குச் செய்வேன்; அவர் செய்ததற்கு நான் பதிலுக்குப் பதில் செய்வேன்" என்று சொல்லாதே. 30 சோம்பேறியின் விளைநிலம் வழியாக நான் நடந்துசென்றேன்; அந்த மதிகேடருடைய திராட்சைத் தோட்டத்தினூடே சென்றேன். 31 அதில் எங்கும் முட்செடி காணப்பட்டது; நிலம் முழுவதையும் காஞ்சொறிச் செடி மூடியிருந்தது; அதன் சுவர் இடிந்து கிடந்தது. 32 அதை நான் பார்த்ததும் சிந்தனை செய்தேன்; அந்தக் காட்சி எனக்குக் கற்பித்த பாடம் இதுவே; 33 இன்னும் சிறிது நேரம் தூங்கு; இன்னும் சிறிது நேரம் உறங்கு; கையை முடக்கிக்கொண்டு இன்னும் சிறிது நேரம் படுத்திரு. 34 அப்பொழுது வறுமை உன்மீது வழிப்பறிக் கள்வனைப்போலப் பாயும்; ஏழ்மை நிலை உன்னைப் போர் வீரனைப் போலத் தாக்கும்.

பின்புலம்

இச்சிறிய பகுதி ஓரவஞ்சகத்தைக் கண்டனம் செய்கிறது. நேர்மையைப் புகழ்கிறது, செய்யும் தொழிலில் முன்னுரிமை, அடுத்திருப்போருக்குத் தீமை செய்யாதே போன்ற கருத்துகளை உள்ளடக்கியது. மனித வாழ்க்கையில் மிக

அவசியம் எவை என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. அவை நீதியோடு செயல்படுதல், உழைப்பு ஆகும்.

சொல்விளக்கம்

23 – நீதி வழங்குவது மிகமிக முக்கியமானது (இச 16:19). மேலும் 28:21இல் இதைக் காணலாம். ஓரவஞ்சனை காட்டுவது என்பது எபிரேயத்தில் 'முகத்தை தூக்கிக்கொள்வது' (18:5) என்றும் முகத்தை விசாரமாக வைத்துக்கொள்வது என்றும் கூறப்படுகிறது.

24 – நீதியை அகில உலகும் ஏற்றுக்கொள்கிறது. அநியாயமாகத் தீர்ப்பளிப்பவரைச் சபிப்பதும், கடவுளின் தண்டனை அவர்மீது விழவேண்டும் என்பதும் ஏற்புடையதுதான். இவர் உண்மையான நீதித் தீர்ப்பு வழங்காத அனைத்து நீதிபதிகளுக்கும் ஒரு சான்று.

25 – குற்றம் செய்யும் நீதிபதியைத் தண்டிக்கும் நீதிபதி கடவுளைப் போன்றவராகிறார். அவருக்குக் கிடைக்கும் பேறு விவிலியத்தில் கூறப்படும் செல்வம் புகழைக் குறிக்கலாம்.

26 – உடலை அணைப்பது நேர்மைக்குக் கிடைக்கும் அங்கீகாரமும் சன்மானமுமாகும். இது அரும் பெரும் கூற்று. இதற்கும் முன்னைய கூற்றுக்கும் தொடர்பு உண்டு. இது நேர்மொழி கூறுபவரின் நம்பகத்தன்மையை, நண்பர்கள் இருவரிடமோ அல்லது பல சமூக உறவுகளிலோ காட்டும் நேர்மையைக் குறிக்கிறது. 'முத்தம்' கொடுப்பது அக்காலத்து வழக்கம் என்பதைத் தெரிந்திருத்தல் நல்லது.

27 – இளைஞர்களுக்கு அறிவுரை தரும் ஞானிகள் வாழ்க்கை பற்றிச் சிந்தித்து நடைமுறைகளை எடுத்துக்கூறுகிறார்கள். வாழ்க்கைக்கு எவை முக்கியமானவை, எவை முன்னுரிமை பெறுபவை என்பது தெரிந்திருக்க வேண்டும். திருமணம் செய்து குடும்பம் நடத்த நிலமும் வீடும் முக்கியமானவை (27:23-27) என்பது தெரிந்திருக்க வேண்டும்.

28 – தக்க காரணமின்றி எதிராகச் சான்று சொல்வது தவறு. அவருக்கும் அந்த மனிதருக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. இவ்வாறு எதிராகக் கூறும் சான்று கட்டாயத்தாலோ, எச்சரிக்கையாலோ இருக்கலாம். அதற்குப் பணிந்துவிடக் கூடாது. இப்படிச் சொல்வது 'பொய்ச் சான்று' என்றே கூற வேண்டும். இந்த நீதிமொழி இதை அழுத்தமாகச் சொல்கிறது.

29 - பழிக்குப் பழி, கண்ணுக்குக் கண் என்னும் கொள்கையை இந்நீதிமொழி நிராகரிக்கிறது. திருப்பிக் கொடுப்பதில் பழிவாங்க நினைப்பது தவறு (காண். 20:22).

30-34 - இது ஓர் அறிவுரைக் கதை அல்லது ஒரு ஞானி அனுபவத்தைக் கூறிப் பாடம் புகட்டுதல் எனலாம். இதன் நோக்கமே கற்பித்தல். எனவே கூறப்பட்டிருப்பது உண்மையா இல்லையா என்ற விவாதம் தேவையில்லை (காண். 6:9-11).

30-31 - சோம்பேறியின் நிலத்தின் திராட்சை தோட்டத்தில் முட்செடி காணப்பட்டது அது பராமரிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அது அலங்கோலமாக இருக்கிறது. பராமரிக்கப்படாததால் காட்டு விலங்குகள் அதைச் சின்னாப்பின்னப்படுத்துகின்றன (காண். எசா 28:24-29).

32 - சிந்தனை செய்வது ஞானிகளின் இயல்பாகிறது.

33-34 - இங்கு 6:10-11இல் கூறப்படுவதை மீண்டும் காணலாம். சோம்பேறி சமூகத்தின் தொல்லை. அவன் ஒரு பாரம். ஆனால் இங்குச் சொல்லப்பட்ட காட்சியிலிருந்து இன்னும் அதிக கருத்துகளை ஆசிரியர் கூறியிருக்கலாம் என்கிறார் மர்பி. ஆனால் ஏன் இங்கு இதைத் திருப்பிச் சொல்ல வேண்டும் என்ற கேள்விக்கு அலன்சோ ஷெக்கல் என்பவர் இங்கே தான் பார்த்தது பற்றிய ஓர் இறுதிச் சிந்தனையை ஆசிரியர் தருகிறார். இது ஞான இலக்கியச் சிறப்பு, வாழ்வைக் கவனித்து, தெளிவுகளை விளக்கிப் பிறருக்கு அறிவுரையாகவோ போதனையாகவோ தருவது என்கிறார்.

செம்பொருள்

எதுவும் புதிதாகச் சொல்லவில்லை என்றாலும் மக்கானே சொல்வது நம் கவனத்தை ஈர்க்கிறது. அவருடைய கருத்துப்படி வசனங்கள் 30-34 ஆசிரியரின் அதிகாரமிக்க அறிவுரையல்லாது, தனிப்பட்டவிதமாக நிகழ்வுகளைக் கவனித்து அவற்றைச் சிந்தித்து பின்பு முன்வைக்கப்படுகிறது.

19. நற்செய்தி குளிர்ந்த நீரை ஒக்கும் (25:1-28)

25:1 இவையும் சாலமோனின் நீதி மொழிகளே. இவை யூதாவின் அரசராகிய எசேக்கியாவின் அவையினர் தொகுத்து எழுதியவை. 2 மறைபொருள் கடவுளுக்கு மாட்சியாம்;

ஆய்ந்தறிதல் அரசருக்குப் பெருமையாம். 3 அரசரின் உள்ளக் கிடக்கையை ஆராய்ந்தறிய
மனிதரால் இயலாது; அது வானத்தின் உயரத்தையும் கடலின் ஆழத்தையும் போன்றது. 4
வெள்ளியினின்று மாசை நீக்கி விடு; அப்பொழுது தட்டார் அதிலிருந்து அழகிய பொருளொன்றை
உருவாக்குவார். 5 அரசரின் அவையினின்று கெடுமதி உரைக்கும் பொல்லாரை அகற்றி
விடு; அப்பொழுது அவரது ஆட்சி நீதிவழுவா நெறியில் நிலைக்கும். 6 அரசர் முன்னிலையில்
உன்னைப் பெரியவரென்று காட்டிக் கொள்ளாதே; பெரியோருக்குக்குரிய இடத்தில் நில்லாதே.
7 பெரியவர் ஒருவருக்கு இடமுண்டாகும்படி நீ கீழிடத்திற்கு அனுப்பப்படுவதைவிட, "நீ
மேலிடத்திற்கு வா" என்று அழைக்கப்படுவதே உனக்கு மேன்மை. 8 ஏதோ ஒன்றைப்
பார்த்தவுடன் உடனே வழக்கு மன்றத்திற்குப் போகாதே; நீ கூறுவது தவறென்று வேறொருவர்
காட்டிவிட்டால் அப்பொழுது நீ என்ன செய்வாய்? 9 அடுத்திருப்பாரோடு உனக்குள்ள
வழக்கை அவருடனேயே பேசித் தீர்த்துக்கொள்; வேறொருவரைப் பற்றிய மறைசெய்தியை
வெளிப்படுத்தாதே. 10 வெளிப்படுத்தினால் அதைக் கேட்பவர் உன்னை இகழுவார்; உனக்கு
வரும் மானக்கேடு நீங்காது. 11 தக்க வேளையில் சொன்ன சொல் வெள்ளித் தட்டில்
வைத்த பொற்கனிக்குச் சமம். 12 தங்கச் சங்கிலியும் பொற்கடுக்கனும் ஓர் இணையாக
அமைவது போல, எச்சரிக்கை கூறும் ஞானியும் அதை விருப்புடன் கேட்பவரும் ஓர்
இணையாக அமைவர். 13 குளிர்ந்த பானம் கோடைக் காலத்தில் எப்படி இருக்குமோ
அப்படியே உண்மையான தூதர் தம்மை அனுப்பினவருக்கு இருப்பார்; அவர் தம்
தலைவருக்குப் புத்துயிரளிப்பார். 14 கருமுகிலும் காற்றும் உண்டு; ஆனால் மழை இல்லை;
கொடாமலே தன்னைக் கொடைவள்ளல் என்பவனும் இவ்வாறே. 15 பொறுமை ஆட்சியாளரையும்
இணங்கச் செய்யும்; இனிய நா எலும்பையும் நொறுக்கும். 16 தேன் கிடைத்தால் அளவோடு
சாப்பிடு; அளவை மீறினால் தெவிட்டிப்போகும்; நீ வாந்தியெடுப்பாய். 17 அடுத்திருப்பார்
வீட்டுக்கு அடிக்கடி போகாதே; போனால் சலிப்பு ஏற்பட்டு, அவர் உன்னை வெறுப்பார். 18
அடுத்திருப்பாருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்பவர், குறுந்தடியையும் வாளையும்
கூரிய அம்பையும் ஒத்தவர். 19 இக்கட்டுக் காலத்தில் ஒரு துரோகியை நம்புவது, சொத்தைப்
பல்லையும் நொண்டிக் காலையும் நம்புவதற்குச் சமம். 20 மனத்துயரமுள்ளவரைப் பாட்டுப்
பாடச் செய்தல், குளிரில் உடைகளைக் களைவதுபோலவும், புண்ணில் காடியை
வார்ப்பதுபோலவும் இருக்கும். 21 எதிரி பசியோடிருந்தால் அவனுக்கு உணவு கொடு;
அவன் தாகத்தோடிருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு. 22 இவ்வாறு செய்வதால் அவன்
தலைமேல் எரிதழலைக் குவிப்பாய்; ஆண்டவரும் உனக்குக் கைம்மாறு அளிப்பார். 23 வட
காற்று மழையைத் தோற்றுவிக்கும்; புறங்கூறுதல் சீற்றப் பார்வையைத் தோற்றுவிக்கும். 24
மாடி வீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட குடிசை வாழ்க்கையே மேல். 25
தொலைவிடத்திலிருந்து வரும் நற்செய்தி, வறண்ட தொண்டைக்குக் கிடைக்கும் குளிர்ந்த
நீரை ஒக்கும். 26 பொல்லாருக்கு இணங்கிவிடும் நேர்மையானவர் கலங்கிய ஊற்றை
அல்லது பாழடைந்த கிணற்றை ஒத்திருக்கிறார். 27 தேனை மிகுதியாகச் சாப்பிடுவது
நன்றன்று; புகழ்ச்சியை மிகுதியாக விரும்புவதும் நன்றன்று. 28 தன்னடக்கமில்லா மனிதர்
அரண் அழிந்த காவல் இல்லாப் பட்டணம்.

பின்புலம்

அதிகாரங்கள் 25-29 நீதிமொழிகளில் ஒரு புதிய பகுதியைத் தொடங்குகின்றன. இவை யூதாவின் அரசராகிய எசேக்கியாவின் அவையினர்

தொகுத்து எழுதியவை என்று 25:1 கூறுகிறது. ஞான இலக்கியங்களின் புரவலரான சாலமோனே இதன் ஆசிரியர் என்றும் சொல்லப்படுகிறது. இக்கூற்றுகளைத் தொகுத்து எழுதிய ஆசிரியர்கள் பல இடங்களிலிருந்து இவற்றைச் சேகரித்திருக்க முடியும். சிலர் இவற்றை 25-27, 28-29 இரண்டாகப் பிரிப்பர். இதில் உருவகங்கள் ஒப்புமைகள் உள்ளன.

நீதிமொழி 25இல் ஓர் ஒப்புமையைப் பார்க்க முடியும். மேலும் 2-27 இதை 'நீதிமொழி காவியம்' என்றும் ஒரு 'சிறிய ஞானப் புத்தகம்' என்றும் அறிஞர்கள் கூறுவர். இந்த அதிகாரத்தில் மாட்சி, தேடல், கடவுள், மனிதன் போன்றோர் சிறந்த கருப்பொருள்களாக அமைகின்றனர். மூடர், நேர்மையாளர் பற்றியும் ஆசிரியர் கூறத் தவறவில்லை.

இந்த அதிகாரத்திலுள்ள கூற்றுகள் நீதிமன்ற மொழிகளாகவும் அதையும் தாண்டியதாகவும் உள்ளன.

சொல்விளக்கம்

1 – யூதேயாவின் அரசர் எசேக்கியாவின் அவையினர், 2அர 18-19இல் கூறியிருக்கின்றதுபோல் ஒரு வரலாற்றச் சூழலில் அவரது ஆணைப்படி இவற்றைத் தொகுத்து எழுதியிருக்கலாம். அறிஞர் ஸ்காட் எசேக்கியாவின் அவையினர் சிறந்த வல்லுனர்களாக இருந்தார்கள்; அவர்களே வடக்கு தெற்கு நாடுகளிலிருந்து ஞானத்தை ஒன்று சேர்த்து பின்பு அதை எழுதித் தந்தார்கள் என்பார். உண்மை எதுவென நிச்சயப்படுத்துவது கடினம். மேலும் 'கதிக்' எனும் எபிரேய வார்த்தைக்கு 'பார்த்தெழுது, மற்றோருக்குக் கொடு' என்ற பொருள்களும் உண்டு.

2 – கடவுளின் மேன்மை இங்கு வலியுறுத்தப்படுகிறது. அரசர் வலிமையானவர் என்றாலும் அவரது அறிவின் பெருமை அவரது தேடி ஆய்ந்தறியும் ஆற்றலிலுள்ளது. கடவுள் மறைபொருளானவர். அவரை அறிவது இயலாதது. மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. கடவுளது பெருமையே அவரது அறியஇயலாத் தன்மை அரசரோ இதற்கு மாறானவர். அவரைக் கண்டுபிடித்துவிடலாம். அவர் ஆய்ந்துக் கண்டதை மக்களுக்கு தெளிவாக விளக்க வேண்டும். சாலமோன் அவரது ஞானத்திற்காகப் பாராட்டப்படுகிறார் (1அர 3:28).

3 – அரச ஆற்றலைக் குறைவாக மதிப்பிடமுடியாது. எனவே இத்தகைய ஒப்புமைகள் தரப்படுகின்றன. இதற்கும் 24:21-22க்கும் தொடர்பு இருக்கலாம் (காண். இச 29:28-29).

4 – மாசு அகற்றப்பட்ட உலோகத்திலிருந்து சுத்த வெள்ளி கிடைக்கும் என்பது அறிவுரை தருவதற்கு ஏற்ற ஓர் ஒப்புமையாகக் கூறப்படுகிறது. இதை நமது மொழியில் சுத்த தங்கம் கிடைக்க நெருப்பிலிட வேண்டும், சந்தனம் மணம் கமழ அதை அரைக்க வேண்டும் அது போல வெற்றிபெறத் தோல்வியையும் சுவைக்க வேண்டும் என்போம்.

5 – நீதி வழுவாமை அரசுக்கு அழகு (காண் 10:1). அதுவே நல்ல அரசுக்கு அடிப்படை (16:12; 20:28; 29:15). எனவே நல்ல அரசனுக்கு உண்மையும் நேர்மையுமுடைய அவையினர் தேவை. இது நல்ல அறிவுரை. ஞானியின் கட்டளைகளை நிபந்தனைகளாகவும் ஏற்கலாம். இது அரசுக்கு ஓர் எச்சரிக்கை, மக்களுக்கு ஒரு நம்பிக்கை.

6 – பெரியவர் எனக் காட்டிக்கொள்வதும் பெரியவருடைய இடத்தைப் பிடித்துக்கொள்வதும் தற்பெருமை அல்லது தன்னலத்தின் செயல்களாகும். "நீ பெருமையைத் தேடிச் செல்லாதே; நீ தகுதியானவனென்றால் அதுவே உனக்கு மாலை சூட்டும்" என்பது தமிழறிஞர்களின் கூற்று. இந்த எதிர்மறை அறிவுரையை 22:29 வழியாகப் பார்க்கலாம். நீ தகுதியானவனென்றால் அரசரே உன்னைத் தேடிவந்து சன்மானம் அளிப்பார்.

7 – பணிவுடையருக்கு எங்குச் சென்றாலும் சிறப்பு. அவருக்கு எல்லோருமே சிறப்பிடம் அளிப்பர். மர்பி மிகுந்த பணிவு, தற்பெருமை இவற்றிற்கு இடைப்பட்ட நிலை வேண்டும் என முன்மொழிகிறார். ஒருவர் தன்னிலை உணர்ந்து தம் ஆற்றல், அறிவின்படி நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய விவேகத்திற்குப் பரிசு உண்டு (காண். சீஞா 13:9-10).

8 – 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்பதை இக்கூற்று வலியுறுத்துகிறது. இது தனிப்பட்டதாகவோ மக்களுக்கு வெளிப்படையான தீர்ப்பாகவோ இருக்கலாம். கண்ணால் பார்த்துவிட்டு விவாதத்தில் நுழையாதே; பார்க்காமல் இருப்பதும் ஏராளம் உண்டல்லவா? விவாதத்தில் நீ தோற்று அவமானம் அடைய நேரிடும் எச்சரிக்கை. சிலர் இதை "சும்மா இருந்ததை ஊதிக் கெடுத்தான்" என்பார்கள். தீர ஆய்வதே ஏற்புடையது.

9-10 – இரண்டு கூற்றுகளுக்கும் தொடர்புண்டு. ஒன்று அறிவுரையையும் மற்றொன்று அதை மீறுவதால் வரும் இழுக்கையும் கூறுகிறது. சிலர் 7-10 அதிகாரங்களும் நீதித் தீர்வையை அடிப்படையாகக் கொண்டவை என்பர். அதுவும்

ஏற்புடையதே. அடுத்தவரோடு உள்ள வழக்கைப் பேசும்போது வேறொருவர் கூறிய மறைவான செய்தியை வெளிப்படுத்தக் கூடாது. இரகசியங்களைக் காக்க வேண்டும். நம்பகத் தன்மையைக் காக்கத் தவறினால் இதில் தொடர்பில்லாதவருக்கும் தொல்லை ஏற்படும். இரகசியத்தைக் காக்கத் தவறினால் நீ பகைக்கப்படுவாய். உனது இழுக்கு நீங்காது.

11 – சொல், வார்த்தை அல்லது பேச்சு ஞானநூலில் மைய இடத்தைப் பெறுகின்றன. அவை பொற்கனிக்கு இணையாகப் பேசப்படுகின்றன. இது உண்மையான பழத்தையோ அல்லது கைவேலைப்பாடான கனியையோ குறிக்கலாம். எப்படி இருப்பினும் அது புகழப்படுகிறது.

12 – வசனம் 11இல் தொடங்கிய உருவகம் இங்குத் தொடர்கிறது. பொன்னும் நல் எச்சரிக்கையும் சமமாகத் தொடர்கின்றன. ஞானத்தைத் தேடுவதற்கு நல்ல அறிவுரைகளைக் கேட்பதைவிட மேலானது எதுவும் இல்லை. எச்சரிக்கை தரும் ஞானி பொன்னைப்போல மதிப்பில்லாதவர். ஞானியும் கேட்கும் மாணாக்கரும் ஒரே தட்டில் இணையாகப் பார்க்கப்படுவர்.

'நசம்' என்றால் காதணி அசன் (அசன்) காது – ஒலிப் பொருத்தமும் செயல்பாட்டு பொருத்தமும் கொண்டு எபிரேய வார்த்தை விளையாட்டை இங்குக் காண முடிகிறது.

13 – உண்மையான தூதர் தன்னை அனுப்பியவருக்கு மிகுந்த மன ஆறுதலைத் தருவார் (13:25). இதனால் அவர் புத்துயிர் அடைவார். இதைக் கோடை காலத்தில் கிடைக்கும் குளிர்பானத்துக்கு ஒப்பிடுவது வெப்ப நாடுகளில் உள்ளவர்க்கு நன்றாகப் புரியும்.

வள்ளலார் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை
கிடைத்த குளிர் தருவே தரு நிழலே நிழல் கனிந்த கனியே' எனக் கடவுளைப் பாடுவார்.

வார்த்தை விளையாட்டையும் இங்குக் காணலாம்.

சிர் (Sir) என்றால் அறுவடை நாள்

கசிர் (Qasir) என்றால் தூதன்.

14 – கருமுகில் நீரைச் சுமந்தும் மழை தராவிடில் அது மலடியான முகிலாவதுபோல் செல்வம் இருந்தும் அதைக் கொடாதவர் கொடைவள்ளல் எனக் கொள்ள முடியாது. அவர் கருமி. இது ஓர் அருமையான ஒப்புமை.

15 – பொறுமை ஓர் ஆற்றல் மிகுந்த பண்பு. அதனால் எதையும் சாதிக்க முடியும்; அதுதான் பொறுமையின் புதிர். அதனால் அனைவரையும் கவர முடியும். அரசர்களையும் தான். பொறுமையான மென்மை கலந்த பேச்சினால் பலரை வசப்படுத்த இயலும். சினம் கொள்ளத் தாமதிப்பவர் (14:29; 16:32) பொறுமை உடையவர் (15:18). பொறுமையோடு பேசுபவருடைய வார்த்தை ஆற்றலுடையது. எலும்பையும் நொறுக்கும் என்பது எந்த உடல் ஆற்றலும் பொறுமையின் முன் நிற்க இயலாது.

16 – 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்று கூறுவதை நீதிமொழி இன்னும் விரிவாகக் கூறுகிறது. நல்லது எது என்றாலும் அளவோடு சாப்பிட வேண்டும் இல்லையேல் அதை நீ வாந்தி எடுப்பாய். தேன் நல்லதுதான். எனினும் அளவுக்கு அதிகமாவதைக் கைவிடவேண்டும் (காண் சீஞா 37:27-31).

17 – நட்பிலும் நிதானம் வேண்டும்: அடிக்கடிச் செல்வதும் அதிக நேரம் செலவு செய்வதும் நட்பை வளர்ப்பதற்கு ஒரு தடையாக இருக்கும். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' அப்படிச் செல்வதைச் சிலர் சிரமமாக நினைப்பர், வெறுப்பர். இன்னொருவருடைய வருகை பாரமாகவும் இருக்கலாம். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தனிமையும் மறைவும் தேவைப்படுகிறது. நண்பனின் வெறுப்புக்கு ஆழாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். மேலேயுள்ள இரண்டு நீதிமொழிகளும் ஒரே கருத்தை வலியுறுத்துகின்றன.

18 – பொய்ச் சான்று சொல்வது கண்டனத்துக்குரியது (விப 20:16). அப்படிப்பட்டோர் காயம் ஏற்படுத்தும் ஆயுதங்களைப் போன்றவராவர்.

19 – துரோகியை நம்பலாமா?: சொத்தைப் பல்லால் கடிப்பான் அது நஞ்சைக் கொட்டும், நொண்டிக்கால் வலியெடுக்கும், நீ வீழ்ந்துவிடுவாய். நம்பிக்கைத் துரோகம் செய்வதால் வரும் குழப்பங்கள், ஏமாற்றங்களை நிறைவாகக் கூறுகிறது இந்நீதிமொழி.

20 – குளிர் ஆடைகளைக் களைந்தால் உடல் உறைந்துப்போய் விடநேரிடும். புண்ணில் காடியை வார்த்தால் மிகுந்த வலி ஏற்படும். இதே போலத்தான் துயரில் இருப்பவரை பாடச்சொல்வது. ஒருவேளை மனத்துயருடையோரை ஒரு மகிழ்ச்சியான பாடல் பாடச்சொன்னால் அது மடமையாகும்.

21-22 - இந்த இரண்டு நீதிமொழிகளையும் உரோ 12:17-21 பயன்படுத்தியதால் அவை புகழ்பெற்றதாகிவிட்டன. பலர் இதை ஆய்ந்துள்ளனர்.

21 - எதிரிக்கு உணவளிப்பதும் தண்ணீர்கொடுப்பதும் ஓர் அருமையான கட்டளை, புதிரானதும் கூட. பழிவாங்குதல் கூடாது. இதை அமெனமோப்பெ நூலிலும் காணலாம் (5:1-9). அதன் குறிக்கோள் என்ன என்பது அடுத்த வசனத்தில் கூறப்படுகிறது.

22 - தலைமேல் எரிதழலை வைப்பது என்ன பொருளைத் தருகிறது? (அ) தலைமேல் எரியும் தழலை சுமந்து (பரிகாரம்) கழுவாய் தேடுகிறது. இது எகிப்திய சடங்குகளில் காணப்படுகிறது. (ஆ) ஆய்ந்து பார்த்தால் இது எதிரியின் மனந்திருந்துதலைக் குறிக்கிறது. (இ) பல்வேறு விளக்கங்கள்: தண்டனை தருவது அல்லது எரித்து அவமானம் செய்வது அல்லது மனம் வருந்தித் திருந்துவது. எனினும் எதிரியிடம் ஒரு மனந்திருந்துதலை ஏற்படுத்துவது மிக ஏற்புடைய விளக்கமாக உள்ளது. அடுத்து எதிரிக்கு நல்லது செய்பவன் கடவுளின் கொடையைப் பெறுவான்.

23 - இயற்கை நிகழ்வு மனித பண்போடு ஒப்புமைப்படுத்தப்படுகிறது. வடகாற்று மழை தராது. இது இயற்கையின் நிலை. எனினும் 'சபின்' வடக்கு அல்லது மறைந்திருக்கிற என்ற பொருளைத் தருகிறது. 'சதார்' என்பதற்கும் மறைந்திருக்கிற என்ற பொருளுண்டு. எனவே மறைவாய் வீசும் காற்று மழை கொட்டுவதுபோல மறைவான நாவு (புறங்கூறுதல்) சீற்றப் பார்வையைத் தோற்றுவிக்கிறது என சொல்நயத்தோடு இப்பழமொழி கூறப்படுகிறது.

24 - இதன் விளக்கத்தை 21:9இல் காணலாம்.

25 - இதற்கும் வச 13க்கும் ஒப்புமை உண்டு. சலிப்போடிருக்கும் தலைவன் உற்சாகமடைகிறான். ஏனெனில் அவனுக்குத் தொலையிலிருந்து நற்செய்தி வருகிறது (15:30). இந்த நற்செய்தி வறண்ட காலத்தில் உலர்ந்திருக்கும் தொண்டைக்கு விடிவைக் கொணரும் குளிர்ந்த நீர்போன்றது. இந்த நீதிமொழி அருமையான ஒப்புமையைப் பயன்படுத்துகிறது.

26 - நேர்மையாளருக்கும் பொல்லாருக்கும் உள்ள வேறுபாட்டை அதிகாரங்கள் 10-15இல் காணலாம். அதிகாரம் 25 ஒரு நல்ல உருவகத்தைக் கையாள்கிறது. நல்லவர்களை அசைக்கவியலாது (காண். 12:3; திபா 55:23).

ஆனால் அவர்கள் பொல்லாரோடு இணையும்போது அவர்கள் தூய நீரூற்றுச் சேறு நீரானது போலும் நல் நீர் சுரக்கும் கிணறு பழுதடைந்தது போலும் ஆவர். அதைக் குடிக்க இயலாது. நல்லோரும் பயனற்றவராய் விடுவர்.

27 - இக்கூற்று வச 16ஐ ஒத்துள்ளது. தேனை உண்ணும்போது அளவோடு உண்ண வேண்டும். புகழைத் தேடும்போதும் அளவை மறந்துவிடக்கூடாது. நீ புகழைத் தேடாதே, புகழ் உன்னைத் தேடி வரட்டும். அப்படி நீ நடந்து கொள்ள வேண்டும்.

28 - எல்லா ஆசைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தத் தெரிய வேண்டும் (14:29 16:32). ஆசை அதிகமானால் அவமானம் அதிகமாய்விடும். உன் எதிரிகள் உன்னை ஏளனம் செய்து, உனது பெயரைக் காற்றில் பறக்க விட்டுவிடுவார்கள்.

செம்பொருள்

இங்கு பல சிறந்த, வேறுபாடான உருவகங்களைப் பார்க்கலாம். பல கருப்பொருள்களும் இங்குண்டு. வசனங்கள் 21-22 மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. உன் எதிரி பசியோடிருந்தால் அவனுக்கு உணவு கொடு. அவன் தாகத்தோடிருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு. இது ஒரு காலம் வென்ற உலகளாவிய கருத்துரை எனலாம். எதிரியின் அழிவைத்தான் யாரும் விரும்புவர் (நீமொ 24:17; 20:22). இது லேவி 19:17-18இல் கூறப்படும் குழும அன்பைப் பிரதிபலிக்கிறது.

மைன்கோல்ட் என்ற அறிஞர் இந்த அதிகாரத்தில் பொறுமை, எளிமை, தன்னடக்கம் என்ற மூன்று பண்புகளைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் நல்லவருக்கு ஆண்டவரின் பரிசும் தீயவருக்குத் தண்டனையும் உண்டு என்பதை வச 22 கூறுகிறது (காண். 10:3,29; 12:2; 15:29; 16:7). கடவுள் கண்டிப்பாக நல்லவர்களின் நேர்மையான செயல்களில் மகிழ்ச்சியடைகிறார்.

பழிவாங்குதல் தடுக்கப்படுகிறது (21-22)

ஒப்புரவு முன்வைக்கப்படுகிறது.

மேலும் கடவுளை நம்புதல் (16:20; 28:25; 29:25-26) அழுத்தமாக முன்வைக்கப்படுகிறது. இருவருக்கு உள்ள மனத்தாங்கல்களில் யாவேயும் நுழைவிக்கப்படுகிறார். ஏனெனில் அமைதி ஆண்டவரிடமே உள்ளது.

20. சோம்பேறி, மதிகேடர் (26:1-28)

26:1 வேனிற் காலத்தில் பனி இருக்குமா? அறுவடைக் காலத்திற்கு மழை பொருத்துமா?
அவ்வாறே மதிகேடருக்குப் புகழ் ஒவ்வாது. 2 சிட்டுக் குருவியும் அடைக்கலான் குருவியும்
பறந்து திரிவது போல, காரணமின்றி இட்ட சாபமும் காற்றாய்ப் பறந்துபோகும். 3 குதிரைக்குச்
சவுக்கடி, கழுதைக்குக் கடிவாளம்; முட்டாளின் முதுகுக்குப் பிரம்பு. 4 மடையரின் கேள்விக்கு
முட்டாள்தனமாகப் பதிலுரைக்காதே. உரைத்தால் நீயும் அவரை போல ஒரு மடையனே. 5
மடையரின் கேள்விக்கு அவரது மடமையை உணர்த்தும் வகையில் பதிலுரை; இல்லாவிடில்,
அவர் தம்மை ஞானி என்று எண்ணிக் கொள்வார். 6 மூடரைத் தூதாக அனுப்புதல், தன்
காலையே வெட்டிக் கேடு உண்டாக்கிக் கொள்வதற்குச் சமம். 7 ஊனக் கால்கள் தடுமாறி
நடக்கும்; அவ்வாறே மூடர் வாயில் முதுமொழியும் வரும். 8 மூடருக்கு உயர் மதிப்புக்கொடுப்பவர்
கவணில் கல்லை இறுகக் கட்டி வைத்தவருக்குச் சமம். 9 மூடன் வாயில் முதுமொழி,
குடிகாரன் கையிலுள்ள முட்செடிக்குச் சமம். 10 மூடனையோ குடிகாரனையோ வேலைக்கு
அமர்த்துபவர் வழிப்போக்கர் எவராயிருப்பினும் அவர் மீது அம்பு எய்கிறவரை ஒத்திருக்கிறார்.
11 நாய் தான் கக்கினதைத் தின்னத் திரும்பிவரும்; அதுபோல மூடர் தாம் செய்த
மடச்செயலையே மீண்டும் செய்வார். 12 தம்மை ஞானமுள்ளவரென்று சொல்லிக்கொள்ளும்
யாரையாவது நீ பார்த்திருக்கிறாயா? மூடராவது ஒருவேளை திருந்துவார்; ஆனால் இவர்
திருந்தவேமாட்டார். 13 “வீதியில் சிங்கம் இருக்கிறது; வெளியே சிங்கம் அலைகிறது”
என்று சொல்லிக்கொண்டிருப்பவர் சோம்பேறி. 14 கீல்பட்டையில் கதவு
ஆடிக்கொண்டிருப்பதுபோல, சோம்பேறி தம் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பார். 15
சோம்பேறி உண்கலத்தில் கையை இடுவார்; ஆனால் அதை வாய்க்குக் கொண்டுபோகச்
சோம்பலடைவார். 16 விவேகமான விடையளிக்கும் ஏழு அறிவாளிகளைவிட, தாம் மிகுந்த
ஞானமுள்ளவர் என்று நினைக்கிறார் சோம்பேறி. 17 பிறருடைய சச்சரவுகளில் தலையிடுகிறவர்,
தெருவில் செல்லும் வெறிநாயின் வாலைப் பிடித்து இழுப்பவருக்கு ஒப்பாவார். 18 கொல்லும்
தீக்கொள்ளியையும் அம்பையும் எறியும் பைத்தியக்காரனுக்கு ஒப்பானவர் யாரெனில், 19
பிறனை வஞ்சித்துவிட்டு “நான் விளையாட்டுக்குச் செய்தேன்” என்று சொல்பவரே. 20 விறகு
இல்லாவிடில் நெருப்பு அணையும்; புறங்கூறுபவர் இல்லாவிடில் சண்டை அடங்கும். 21
கரியால் தழல் உண்டாகும், விறகால் நெருப்பு எரியும்; சண்டை பிடிக்கிறவரால் கலகம்
மூளும். 22 புறணி கேட்பது பலருக்கு அறுசுவை உண்டி உண்பது போலாம். அதை
அவர்கள் பேராவலோடு விழுங்குவார்கள். 23 தீய நெஞ்சத்தை மறைக்க நயமாகப் பேசுவது,
மட்பாண்டத்திற்கு மெருகூட்டிப் பளபளக்கச் செய்வது போலாகும். 24 பகையுணர்ச்சி
உள்ளவர் நாவினால் கபடத்தை நயம்படப் பேசுவார்; உள்ளத்திலோ கபடம் மறைந்திருக்கும்.
25 அவர் நயமாகப் பேசினாலும் அவரை நம்பாதே; அவர் உள்ளத்தில் அருவருக்கத்தக்கவை
ஏழு இருக்கும். 26 அவர் தம் பகையை வஞ்சகமாக மறைத்து வைத்திருப்பினும், அவரது
தீயகுணம் மக்களிடையே அம்பலாகிவிடும். 27 தான் வெட்டின குழியில் தானே விழுவார்;
தான் புரட்டின கல் தன் மேலேயே விழும். 28 பொய் பேசும் நா உண்மையை வெறுக்கும்;
இச்சகம் பேசும் வாய் அழிவை உண்டாக்கும்.

பின்புலம்

ஆசிரியர் மதிகேடர் (1-3), சோம்பேறி (13-16) பற்றிப் பேசுகிறார். மேலும் கோர்வையாக அல்லாமல் ஆங்காங்கே ஏமாற்றுதல், புறம்கூறல், பகைமை பற்றிக்

கூறுகிறார். சண்டைசச்சரவு (20-21), புறங் கூறல் (20,22); வஞ்சகப் பேச்சு (23-24); பகைமை (26-28); போன்றவை பற்றிப் பேசபடுகின்றன.

சொல்விளக்கம்

1 - 12 - இந்த வசனங்கள் மதிகேடர் எப்படி பல நிலைகளில் பார்க்கப்படுகிறார் என்பதைக் காட்டுகின்றன. 1-3 வசனங்கள் புகழ் அவருக்கு ஏற்புடையதல்ல பிரம்படிதான் ஏற்புடையது என்கின்றன. பருவங்கள் தங்கள் வேலைகளைக் காலந்தவறாமல் செய்கின்றன. அவைகளில் மாற்றம் ஏற்பட்டால் விவசாயிகளுக்கு பேரிழப்பு நேரிடும். 1சாமு 12:17-19 இது பற்றிக் கூறுகிறது. இது ஓர் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

நல்லவரைப் புகழலாம். மதிகேடரைப் புகழ்வது அல்லது கௌரவிப்பது சமூகத்திற்குக் கேட்டை விளைவிக்கும். இயற்கையும் சமூகமும் இந்த ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்கின்றன.

2 - காரணமின்றி இட்ட சாபத்தால் எந்தப் பயனுமில்லை. இந்தச் சாபம் அநீதியானது. இது மாசற்றவர் மீது இடப்படுகிறது. எனவே அது சரி இல்லாதது. சாபமிடும் வார்த்தை ஆற்றல் வாய்ந்தது. மாசற்றவரைத் தவிர மற்றோருக்கு இடும் சாபம் பலித்துவிடும். இல்லையெனில் அது ஒன்றும் இல்லாது போய்விடும். இடும் சாபம் அங்குமிங்கும் பறக்கும் பறவைகளுக்கு ஒப்பிடப்படுகிறது.

சபிக்கிறவரைவிட சாபம் வேகமுடையதாகக் காட்டப்படுகிறது. பறவைகளும் இலக்கை அறியாது சிறகை அடித்துப் பறக்கின்றன.

3 - முட்டாளின் முதுகுக்குப் பிரம்படி: பிரம்பால் உடம்பில் அடித்தல் (10:13) ஆடுமாடுகளுக்கும் வன விலங்குகளுக்கும் பொருந்தும். பயிற்சிச் சமயத்தில் இளைஞர்களுக்குத் தரும் தண்டனையை விட இது பலமானது (23:13-14). இது கேட்க மறுக்கும் மதிகேடனுக்கு, திருந்த மறுப்பவனுக்குத் தரப்படும் அடி, உதை. இவனை அறிவுரையாலோ வேறெந்த சொல்லாலோ திருத்த முடியாது. எனவே கொஞ்சம் நம்பிக்கை இழப்பு இங்கே தொனிக்கிறது.

4-5 - விவிலியத்தில் இங்கே வேடிக்கையான முரண்பாடுகளைக் காண்கிறோம் என்று மர்பி கூறுகிறார். தோரா பற்றிய கேள்விக்குத் தவிர முட்டாள்களுக்குப் பதில் தர வேண்டியதில்லை என்று ரபிகள் ஏற்றுக்கொண்டார்கள். என்ன கேள்வி என்றும் தெளிவில்லை. எனவே தகுந்த விளக்கமளிப்பது கடினம்.

ஒவ்வொரு நீதிமொழியும் தனது பொருளைத் தருகிறது. எந்த ஒரு நீதிமொழியும் நிறைவானதல்ல. ஓரளவுதான் அதன் உண்மையை உணர்த்த முடியும். 15 தனித்தனியான கூற்றுகள் இங்கு அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. ஏன்? மேலும் தம்மை ஞானி என்று சொல்பவருண்டா (26:12)? இதை எப்படிப் புரிவது?26:5இன் விளக்கங்கள் ஒளியில் இதைக் காண முற்படுவோம்.

4 – எப்படிக் இக்கூற்றைப் புரிவது?: மடையரோடு உரையாடல் நடத்தாது ஞானம் உடையவர் இருக்க வேண்டும். எந்தப்பதிலும் கூறக்கூடாது. இந்தக் கட்டளை ஏற்கனவே கூறப்பட்டதுதான். இது குட்டியைப் பறிகொடுத்த கரடியை எதிர்கொள்வதைவிட ஆபத்தானது (17:12). 26:1இன் படி பதிலளிப்பது மடையனுக்கு மதிப்புத் தருவதாகும். இங்குத் தரப்படும் தடை 26:1ஐ ஒத்துள்ளது. எனினும் மடையனோடு பேசுவது ஆபத்தும் அழிவும் நிறைந்தது. என்ன பேசுகிறார் மடையர் என்று தெரியவில்லை. என்றாலும் அவர் பேசுவது முட்டாள்தனமானது (18:14, 21), ஆபத்தானது. எனவே பதில் தருவது காயம் ஏற்படுத்தும். இல்லையெனில் நீயும் ஒரு மடையனாவாய்.

5 – மடையர் தம்மை ஞானி என்று கருதாதவாறு ஞானி பதிலளிக்க வேண்டும். இது நேர்மறையா அல்லது எதிர்மறையா? மடையனை இன்னும் மடைமையாக்காது தடுப்பதா? அல்லது மடையர் தம்மை ஞானிகளாக்கிக்கொண்டு ஞானிகளின் வாயை மூட வைப்பதைத் தடுப்பதா? முதல் நோக்கம் மடையனிடம் உள்ள கரிசனையைக் காட்டுகிறது. இரண்டாவது எதிர்ப்பை அல்லது வெறுப்பைக் காட்டுகிறது. 1-12ன் பின்புலத்தில் பார்த்தால் கரிசனை முன்மொழியப்படவில்லை எனலாம். மாறாக மடையன் அவனது இடத்திலே இருப்பதே நல்லது. இல்லையெனில் மடமை ஞானத்தை வெல்ல ஏதுவாகிவிடும். மேலும் 26:12 'மடையர் தம்மை ஞானிகள் என்று சொல்வது' ஞானிகளுக்கு இன்னும் பெரிய ஆபத்தைக் கொணர்வதாக உள்ளது. இது ஒரு பாவமாகக் கருதப்படுகிறது.

6 – பழங்கால மக்கள் செய்தி கொணர்பவரின் மீது எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதை இக்கூற்று எடுத்துரைக்கிறது (காண் 10:26 13:17 25:13). செய்யும் செயல் மிகக் கொடியது, நகைப்புக்குரியது என்றாலும் காலை வெட்டக் கேட்டுக்கொள்வது சரியெனத் தோன்றுகிறது. ஏனெனில் செய்தி சொல்பவர் அவரை அனுப்பியவரின் நம்பிக்கையை இழந்து விட்டார். உண்மைச் செய்தி பறிபோய் விட்டது. இதனால் அனுப்பியவர் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார். அது அவர் திறமையற்ற ஒருவரைச் செய்தி சொல்ல அனுப்பியதால் வருகிறது.

கேடு என்பது ஒரு பெரிய அநீதி நடந்துவிட்டதைக் குறிக்கிறது. ஆனால் அனுப்பியவர் இத்தண்டனை அனுபவிக்க அவர் என்ன அவ்வளவு தவறு செய்துவிட்டார்?

7 – ஊனமுற்றவரின் கால்கள் உடம்பைத் தாங்கிக்கொள்ள இயலாது. எனவே அவர் தடுமாறி நடப்பார். இதைப் போலவே மூடரின் மதிப்பேதும் இல்லாத சொல். மூடன் என்பவன் ஞானமுள்ளவனல்ல, அவன் அதைக் கற்றுக்கொள்ளும் ஆவல் இல்லாதவன். எனவே அவனது மொழி பயனற்றது. அது மட்டுமல்ல அது தவறான வழிக்கு இட்டுச்செல்லும்.

8 – கவண் என்ற சொல் இங்கு மட்டும் ஒரே ஒரு முறைவருகிறது. கவணில் கல்லை வைத்துக் குறிபார்க்கிறாய்; ஆனால் கல் வெளியே வராதவாறு கவணில் கட்டி வைத்துள்ளது ஒரு பெரிய மடமை. அதேபோல மடையரைப் புகழ்வதும் மடமையாகும்.

9 – இது ஒரு புதிரான கூற்று. இரு வகைகளில் இதற்கு விளக்கம் அளிக்கலாம். போதையில் இருப்பவனிடம் இருக்கும் முள் அவனுக்கே காயம் ஏற்படுத்தக் கூடும். அதேபோல முட்டாளிடமிருக்கும் ஞானம் அவனுக்கே கேடாய் அமையும். ஆனால் கையில் முள்ளோடு திரியும் குடிகாரன் பிறருக்குத் தீங்கு செய்வான். அதுபோல் முட்டாளிடமுள்ள ஞானம் பிறருக்குத் தீங்காய் அமையும்.

10 – இந்த நீதிமொழியை மொழிபெயர்ப்பதும் விளக்குவதும் கடினம். எனினும் ஒரு தலைவனாக மூடனையோ குடிகாரனையோ அமர்த்தினால் அவன் பொறுப்பற்றவன் எனக் கருதப்படுவான். அவன் வழிப்போக்கர் யார் மீதும் அம்பு எய்கிறவனைப் போலாவான்.

11 – மூடர் நாயைப் போன்றவர். எதில்? நாய் கக்கினதைத் தின்னும்; மடையனும் செய்த தவற்றையே செய்வான். அதிலிருந்து விடுபடுவது கடினம்.

12 – அதிர்ச்சி தரும் நீதிமொழி இது: மூடத்தனத்தில் படிநிலைகள் உண்டா? இது உச்சத்தைக் காட்டும் முட்டாள்தனம். ஏனெனில் 'நான் ஒரு ஞானி' என்று ஞானியே கூறிக்கொள்கிறார். ஞானம் அவரிடம் இருந்தாலும் இப்படிச் சொல்வதனால் அவர் முட்டாளைவிட கீழாக எண்ணப்படுகிறார். திமிர் கொள்ளலாகாது, பணிவு தேவை என்பதை ஞான இலக்கியம் மிகத் துல்லியமாகக் காட்டுகிறது. சபை உரையாளர் இதை மிகத் தெளிவாக்குகிறார் (7:23-24); மனிதன் குறையுள்ளவன். ஞானிக்கு அது தெரியும். தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்

எனப் பல நீதிமொழிகள் கூறினும் ஞானத்தால் வரும் ஆபத்தை இங்குபோல் எங்கும் ஆய்ந்து கூறவில்லை (16:25); இதை வெறும் தற்பெருமை எனக் கூறிவிட முடியாது.

இது இன்னொரு வகையான உயர் ஞானத்தை அறிவுறுத்துகிறது. ஞானி கண் தெரியாதவராகிவிடுகிறார். அவரால் தன்னைச் சீர்தூக்கிப் பார்க்க முடியவில்லை. நான் ஞானி எனத் தனக்குத்தான் சொல்லிக்கொள்வது ஓர் எச்சரிக்கை. ஞானம் மதிப்புக்குரியதுதான் ஆனால் அபாயங்களும் உண்டு. இந்த அதிகாரத்தில் 1-11 வரையுள்ள கூற்றுகள் எதிர்மறையான நீதிமொழிகள். இந்தக் கூற்றை இடைச்செருகல் எனக் கூறுவார். பான் லூவென் என்பவர் 26:12ஐ தாவீது உரியாவைக் கொன்ற நிகழ்வை நாத்தான் இறைவாக்கினர் தாவீதுக்கு அறிவுறுத்தி எச்சரித்தது போல் (2சாமு 12:1-4) உள்ளது எனக் கூறுகிறார்.

13-16 - சோம்பேறிகள் பற்றிய எதிர்மறைக் கூற்றுகள் (24:30-34)

13 - இதை 22:13னுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சோம்பேறி பலவிதமான நொண்டிச் சாக்குபோக்குகளைச் சொல்லித் தனது சோம்பேறிதனத்தை நியாயப்படுத்துகிறான்.

14 - கீல் பட்டையில் ஆடும் கதவு: அது எவ்வளவு சுற்றினாலும் அதைவிட்டு வேறிடம் செல்லாது. அதுபோலவே படுக்கையில் புரண்டு புரண்டுபடுக்கும் சோம்பேறியும் இருக்கிறான். செக்குமாடு சுற்றி சுற்றி வந்தாலும் அங்கேதான் இருக்கும். எவ்வளவு அசைவு இருந்தாலும் அந்த இடத்தைத் தவிர வேறிடம் அசைந்து போவதில்லை. இதை ஒரு மிகச் சிறந்த பழமொழி என அலன்சோ செக்கல் கூறுகிறார்.

15 - மிக நகைப்புக்குரியது இக்கூற்று. தன் வாழ்க்கையைத் தானாகவே பாழாக்கிக் கொள்கிறார். உண்கலத்தில் இருக்கும் உணவை உண்பதற்குச் சோம்பல் கொள்வார் உண்டோ!

16 - 'நினைப்பு பொழப்ப கெடுக்கும்' என்பர். அதுபோலத்தான் ஞானிகளை விட தான் ஞானமுள்ளவன் என்று நினைப்பதே அவனை மடையனாக்கிவிடுகிறது. சோம்பேறியை அருமையாக விமர்சிக்கிறார் வான் லூவென் என்ற அறிஞர். அவன்

1. பல காரணங்களைக் காட்டி வீட்டுக்கு வெளியே வரமாட்டான் (13)
2. படுக்கையை விட்டு எழும்பமாட்டான் (14)

3. உண்பதற்கும் சோம்பல் கொள்வான் (15)

4. தனது அறிவிலே மனநிறைவு கொள்வான் (16)

17 – இது ஓர் அருமையான கூற்று 'உன் ஜோலியை நீ பார்; ஏன் மத்தவங்க விசயத்தில தலையிடுற' என்ற கருத்தை உள்ளடக்கியது. இது நாயின் வாலைப் பிடிப்பது போலாகும். அது உடனே கடிக்கும். பிறர் சச்சரவுகளில் தலையிடுவது உனக்கே தொந்தரவை வாரிக் கட்டிக்கொள்வதாகும்.

மர்பியின் கருத்துப்படி – இது ஓர் எச்சரிக்கை மட்டும்தானா? அல்லது மற்றவரது சச்சரவுகளில் விவேகத்தோடும் கவனத்தோடும் நடக்க வேண்டும் என்ற எச்சரிக்கையா?

18–19 – இந்த இரண்டும் சேர்ந்து செல்கின்றன: 'பிறரை வஞ்சித்துவிட்டு' விளையாட்டுக்குச் செய்தேன் என்பவர் கொடுமையானவர். இந்த நொண்டிச் சாக்குக் கண்டிக்கத்தக்கது. பிறரைக் கொல்லும் தீக்கொள்ளியையும் அம்பையும் வைத்திருப்பவன் பைத்தியக்காரன் மட்டுமல்ல, அதைவிடமேலான கொடூரன். இது நடக்கும் ஒன்று என்று கூற முடியாது. எனினும் இப்படிப்பட்ட செயலை அனுமதிக்கக் கூடாது.

20–21 – புறங் கூறுபவர் சண்டை, செய்கிறவர் இவர்களால் வரும் சண்டை பற்றிக் கூறப்படுகிறது. நெருப்பு சண்டைக்கும் சச்சரவுக்கும் ஒரு சரியான உருவகம் புறங்கூறுவதால் வரும் சண்டை (காண். 16:28). வசனம் 21 இதைக் கூர்மைப்படுத்துகிறது.

22 – இதன் விளக்கத்தை நீமொ 18:8இல் காணலாம்.

23–25 – இந்த வசனங்கள் ஏமாற்றும் போது பேசும் பொய் பேச்சுகளை முக்கியமாகப் புறங்கூறுதல், வாய்ச்சண்டை பற்றிப் பேசுகின்றன. அகம் (இதயம்) புறம் (பேசுதல்) இவைகளின் ஒவ்வாத நிலைகள் பற்றியும் கூறுகின்றன.

23 – உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசித்திரிவோரை இக்கூற்று பளபளக்கச் செய்யப்பட்ட மண்பாண்டம் எனக் கூறுகிறது. மண்பாண்டத்தைப் பளபளக்கச் செய்ய மேலே முலாம் பூச வேண்டும். உள்ளே மண்பாண்டம் புறமோ பளபளப்பு. இது வெளிவேடம் செய்வதாகும். வெறுமனே பேச்சில் மயக்கி உண்மை உள்ளத்தை மறைப்பது கபடமாகும். மேலும் நயமாகப் பேசுதல் மயக்கத்தைத் தரும் இனியான பேச்சாகக் கொள்வர். ஆனால் அதை எரியும் நாக்கு என்றும் பொருள்

கொள்ளலாம். நீமொ 16:27 எரிக்கும் நெருப்பான நாக்குப்பற்றிப் பேசுவதையும் இங்கு நோக்கலாம்.

24 – தேனொழுகப் பேசுவது மனதுக்கு இனிமையும் உடலுக்கு நலமும் தரும். ஆனால் அதில் வெறுப்பும் கபடமும் புறங்கூறலும் நிறைந்திருக்கும். எனவே கவனம் தேவை.

25 – அவரது உள்ளத்தில் 'ஏழு அருவருக்கத்தக்கவை' உள்ளன. அவை பகைமை உணர்வு போன்றவற்றைக் குறிக்கும். இப்படிப்பட்டவரை நம்புவது சரியல்ல.

26-28 – 26வது வசனம் ஏமாற்றுவதைக் கண்டனம் செய்கிறது. எனினும் 'செயல்பாடு விளைவு' என்ற முறையில் இந்த மூன்று வசனங்களும் ஒரு குழுமமாகிறது.

26 - பகைமை ஆளுருப்பெறுகிறது: 23-25 வசனங்களில் வெளிப்படுத்தப்படாத கபடரின் பகைமை இங்கு எல்லாருக்கும் முன்னால் வெட்டவெளிச்சமாகிறது. எப்படி அம்பலமாகும் என்பது கூறப்படவில்லை.

27 – இந்தக் கூற்றை ஒத்த கருத்தை திப 7:16, சஉ 10:8விலும் காணலாம். இது வினைப்பயன் கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறது. வெட்டப்படும் குழி தீமை என்பது வெளிப்படையானதே. பிறரை வீழ்த்த வெட்டப்படும் குழி தனக்கே வினையானது. உருட்டிவிடப்பட்ட கல்லும் தன்மீதே இவ்வாறு விழும். ஞானிகள் வாழ்வின் தெளிவின்மையில் இருப்பதால் இது 'கவிதை நீதி' அதாவது ஏட்டுச் சுரக்காய், உண்மை வாழ்வோடு ஒத்துப்போகவில்லை என்பர். அப்படி நடப்பது ஒரு வியூகமே. தீமை எண்ணமுடையவருக்கு இத்தகைய தண்டனை என்பது ஓர் இரண்டாம் எண்ணமே.

அழிவை உண்டாக்கும் எனும்போது யாருக்கு என்ற கேள்வியை எழுப்புகிறது. வெறுப்போருக்கா அல்லது வெறுக்கப்படுவோருக்கா? ப்லேகர் என்பவர் வெறுக்கப்படுபவருக்கு என்கிறார்.

செம்பொருள்

இந்த அதிகாரத்தில் அருகாமையில் வைக்கப்பட்டிருக்கின்ற கூற்றுகள் (4, 5) அறிஞர்களிடமிருந்து வளமான விளக்கங்களை தந்து கொண்டிருக்கின்றன.

ஞானிகளின் சிந்தனையால் ஏற்கும் பொறுப்புகளும் இந்த பொறுப்புகளை நிறைவேற்றுகையில் ஏற்படும் தர்ம சங்கடங்களும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

மடையரோடு உரையாடுவது ஒரு நிர்பந்தம். அதேநேரம் அது ஓர் அபாயம். இதிலிருந்து குருநாதர் தப்பவியலாது. நீதிமொழிகள் மடையர்களைத் தள்ளிவைக்கக் கோருகிறது. இதை எழுதும் ஆசிரியர் தானும் ஒரு கருத்துக்குச் சார்பாயில்லாமல் ஞானிகளின் முடிவுக்கு அவற்றை விட்டுவிடுகிறார். ஞானசிரியர்இதை வாசிப்பவர்கள் வாழ்வின் சிக்கல்களை அறிந்து அதன்படி தங்களுக்குச் சரியெனத் தெரிவதைப் பேச வேண்டும் என்கிறார். நீ கண்டிக்கவும் வேண்டும். அதேநேரம் எளிமையாகவும் இருக்க வேண்டும் என்பது புல்மானின் கருத்து. இது வேறுபாடுகள் நீங்க உதவும்.

மடையர்களிடம் எந்த உரையாடலும் எடுபடாது என்பது இன்னொரு கருத்து. நான்காவது வசனத்தில் உள்ள கருத்து: பதிலளிக்கும் நீயும் மடையரைப் போல அகந்தையுடையவராகலாம். ஐந்தாவது வசனம். 'ஞானிகள் மட்டுமே சரியான பதிலளிக்கமுடியும்' என்றுரைக்கிறது. வாழ்வின் புதிர்களை யார்தான் துல்லியமாக விளக்கமுடியும்.

எது எப்படியெனினும் மனித ஞானத்தின் எல்லை இங்கே எடுத்துக்காட்டப்படுகிறது. எனவே தன்னை மட்டும் நம்பாது இறைவனை நம்ப வேண்டும் (3:5, 7; 28:25, 26).

21. நண்பர்கள், நட்பு (27:1-27)

*27:1 இன்று நடக்கப்போவதே தெரியாது; நாளை நடக்கப் போவதை அறிந்தவன்போலப்
பெருமையாகப் பேசாதே. 2 உன்னை உன்னுடைய வாயல்ல; மற்றவர்களுடைய வாய்
புகழட்டும்; உன் நாவல்ல, வேறொருவர் நா போற்றட்டும். 3 கல்லும் மணலும் பளுவானவை;
மூடர் தரும் தொல்லையோ இவ்விரண்டையும் விடப் பளுவானது. 4 சினம் கொடியது;
சீற்றம் பெருவெள்ளம் போன்றது; ஆனால் பொறாமையின் கொடுமையை எதிர்த்து நிற்க
யாரால் இயலும்? 5 வெளிப்படுத்தப்படாத அன்பை விட, குற்றத்தை வெளிப்படையாகக்
கண்டிக்கும் கடிந்துரையே மேல். 6 நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை;
பகைவர் தரும் முத்தங்களோ வெறும் முத்தப்பொழிவே. 7 வயிறார உண்டவர் தேனையும்
உதறித் தள்ளுவார்; பசியுள்ளவருக்கோ கசப்பும் இனிக்கும். 8 தம் வீட்டை விட்டு
வெளியேறி அலைந்து திரிபவர், தன் கூட்டை விட்டு வெளியேறி அலைந்து திரியும்
குருவிக்கு ஒப்பானவர். 9 நறுமணத் தைலம் உள்ளத்தை மகிழ்விக்கும்; கனிவான அறிவுரை
மனத்திற்குத் திடமளிக்கும். 10 உன் நண்பரையும் உன் தந்தையின் நண்பரையும் கைவிடாதே;*

உனக்கு இடுக்கண் வரும்காலத்தில் உடன்பிறந்தான் வீட்டிற்குச் செல்லாதே; தொலையிலிருக்கும் உடன்பிறந்தாரைவிட அண்மையிலிருக்கும் நண்பரே மேல். 11 பிள்ளாய், நீ ஞானமுள்ளவனாகி என் மனத்தை மகிழச்செய்; அப்பொழுது நான் என்னைப் பழிக்கிறவருக்குத் தக்க பதிலளிப்பேன். 12 எதிரில் வரும் இடரைக் கண்டதும் விவேகமுள்ளவர் மறைந்து கொள்வார்; அறிவற்றோர் அதன் எதிரே சென்று கேட்டுக்கு ஆளாவர். 13 அன்னியருடைய கடனுக்காகப் பிணையாக நிற்கிறவனுடைய ஆடையை எடுத்துக்கொள்; அதை அந்தக் கடனுக்காகப் பிணையப் பொருளாக வைத்திரு 14 ஒரு நண்பரிடம் விடியுமுன் போய் உரக்கக் கத்தி அவரை வாழ்த்துவது, அவரைச் சபிப்பதற்குச் சமமெனக் கருதப்படும். 15 ஓயாது சண்டைபிடிக்கும் மனைவி, அடைமழை நாளில் இடைவிடாத் தூறல் போன்றவள். 16 அவளை அடக்குவதைவிடக் காற்றை அடக்குவதே எளிது எனலாம்: கையால் எண்ணெயை இறுகப் பிடிப்பதே எளிது எனலாம். 17 இரும்பை இரும்பு கூர்மையாக்குவது போல, ஒருவர்தம் அறிவால் மற்றவரைக் கூர்மதியாளராக்கலாம். 18 அத்திமரத்தைக் காத்துப் பேணுகிறவருக்கு அதன் கனி கிடைக்கும்; தம் தலைவரைக் காத்துப் பேணுகிறவருக்கு மேன்மை கிடைக்கும். 19 நீரில் ஒருவர் தம் முகத்தைக் காண்பார்; அதுபோல, தம் உள்ளத்தில் ஒருவர் தம்மைக் காண்பார். 20 பாதாளமும் படுகுழியும் நிறைவு பெறுவதேயில்லை; ஒருவர் கண்களின் விருப்பமும் நிறைவு பெறுவதில்லை. 21 வெள்ளியை உலைக்களமும் பொன்னைப் புடைக்குகையும் சோதித்துப் பார்க்கும். ஒருவரை அவர் பெறுகின்ற புகழைக்கொண்டு சோதித்துப் பார்க்கலாம். 22 மூடனை உரலில் போட்டு உரக்கையால் நொய்யோடு நொய்யாகக் குத்தினாலும், அவனது மடமை அவனை விட்டு நீங்காது. 23 உன் ஆடுகளை நன்றாகப் பார்த்துக் கொள்; உன் மந்தையின் மேல் கண்ணும் கருத்துமாயிரு; 24 ஏனெனில், செல்வம் எப்போதும் நிலைத்திராது; சொத்து தலைமுறை தலைமுறையாக நீடித்திருப்பதில்லை. 25 புல்லை அறுத்தபின் இளம்புல் முளைக்கும்; மலையில் முளைத்துள்ள புல்லைச் சேர்த்துவை. 26 ஆடுகள் உனக்கு ஆடைதரும்; வெள்ளாட்டுக் கிடாயை விற்று விளைநிலம் வாங்க இயலும். 27 எஞ்சிய ஆடுகள் உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் தேவைப்படும் பாலைக் கொடுக்கும்; உன் வேலைக்காரருக்கும் பால் கிடைக்கும்.

பின்புலம்

இவ்வதிகாரத்தில் கூற்றுகள், கட்டளைகள், தடைகள் பரவலாக இடம் பெறுகின்றன. 27:23-27ஐ ஒரு தனிப்பட்டப் பகுதியாகவும் அது ஆட்டுக்கிடைகளைக் கவனிக்க அழைப்பு விடுப்பதாகவும் காணலாம். இந்த அதிகாரத்திலுள்ள கூற்றுகள் முன்னைய இரு அதிகாரங்களைவிட மாறுபட்டது. ஒரே சீரான நடை.

லீவன் என்ற அறிஞர் இதில் 'நட்பு' பற்றிக் கணிசமாகப் பேசப்பட்டிருக்கிறது என்கிறார் (5, 6, 9, 10, 17, 19).

சொல்விளக்கம்

1 – நாளை நடக்கப்போவது என்ன என்பது தெரியாது அது உன் கையில் இல்லை என்பதே இந்த அறிவுரையின் அடித்தளம். நாளை நடப்பது எனக்குத் தெரியும் என்பதுதான் அறியாமை.நாளை என்பது கடவுள் கையில் உள்ளது. இப்போது நடப்பதைச் சமாளிப்பதே சரியாய்ப் போய்விடும். இதை எகிப்திய இலக்கியங்களிலும் காணலாம்.

2 – தன்னையே புகழ்வது சரியல்ல. அப்படிப்பட்டவரை யாரும் பாராட்டமாட்டார். தன்னை உயர்த்துபவன் தாழ்த்தப்படுவான் என்பது இயேசுவின் வாக்கு. தன்னை மதிப்பிடும்போது எவரும் சாதகமாகவே மதிப்பிடுவர். இன்னொருவர் மதிப்பிடும்போது அவர் நடுநிலைநின்று பேசுவார் (நீமொ 16:2; 27:2).

3 – எதைவிட எது பெரிது என்பதே இக்கூற்று. நீதியும் நேர்மையும் விவிலியம் வலியுறுத்தும் கடவுளின் குணங்கள். பலியைவிட கீழ்ப்படிதலை 1 சாமு 15:22 மேலாகக் கருதுகிறது. உடல் வருத்தம் தொல்லைதான் ஆனால் மன வருத்தம் மிகக் கொடியது (காண். சீஞா 22:14-15).

4 – கோபத்தால் வரும் அக, புற வேதனைகள் வெளிச்சமிட்டுக் காட்டப்படுகின்றன. அதன் முன்னால் மனிதன் கதியற்றவனாகிறான். பொறாமையோ கொடுமையிலும் கொடுமையானது. எலும்பையும் துளைத்து விட்டு உன்னை அசைவற்ற நிலைக்குச் சேர்த்துவிடும் (நீமொ 14:30). இது இருவரையும் தாக்கும் சினத்தைப் பார்க்கலாம். ஆனால் பொறாமை மறைவாயிருக்கும். இது வெளிப்படையானால் அதன் விளைவுகள் அதிர்ச்சி தருபவையாயிருக்கும்.

5-6 – வசனங்களில் அகம் 'அன்பைக்' கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இது இரண்டு வசனங்களையும் இணைக்கிறது. இவைகளில் புதிர்கள் உண்டு. கண்டிப்பு அன்பின் அடையாளமாகுமா? முத்தங்கள் காட்டிக்கொடுப்பதை மறைக்க முடியுமா?

5 – ஞானிகள் தரும் ஒரு சிறந்த கூற்று இது. இக்கூற்று ஞானமுடையவர் கண்டிப்புக்கும் திருத்தத்திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று அழுத்தமாகக் கூறுகிறது (காண். 3:11-12; 13:14). அன்புடையவர் திருந்த அறிவுரை தரவும் பெறவும் அஞ்சமாட்டார். பலவீனமோ, நண்பரை இழப்போமோ என்ற அச்சமோ, மௌனமோ அதற்கு ஒரு காரணமாய் இருக்கக் கூடாது.

6 – நண்பர் கொடுக்கும் அடி காயப்படுத்தலாம். ஆனால் அது நல்ல நோக்கம் கொண்டது. இதை ஏற்றுக்கொள்ள நேர்மையும் தைரியமும் வேண்டும். பகைவரின் முத்தங்கள் வெளிவேடமானவை, உண்மையல்ல என்பது தெளிவு. இந்த இரு கூற்றுகளும் தனிப்பட்ட உறவை காத்துக் கொள்ள ஒரு சவால் விடுகிறது. அங்குதான் உனது ஆற்றல் அல்லது ஆற்றலின்மை வெளிப்படும்.

7 – உணவு பற்றி நீதிமொழிகளில் பரவலாகக் கூறப்படுகிறது (5:3; 16:24; 24:13; 25:16,27) தேனும் உணவுதானே. உணவு பொதுவாக நல்லது. அதை உதறித்தள்ளுவது வினோதமாக உள்ளது. ஒருவேளை இது செல்வத்தையோ அல்லது அதிகாரத்தையோ குறிக்கலாம். அது தனக்கு எளிதாகக் கிடைக்கையில் அதன் மீதுள்ள பசி போய்விடுகிறது. என்னை உண்பவர்கள் மேலும் பசி கொள்வார்கள்; என்னைக் குடிப்பவர்கள் மேலும் தாகம் கொள்வார்கள் என்று சீராக் ஞானம் (24:21) கூறுகிறது. ஞானத்திற்கு இக்கூற்று ஒத்து வராது. அனுபவமே அதற்குச் சான்று, பசி வந்திட பத்தும் பறந்து போகும். நல்லொழுக்கம் போய்விடும் என்றும் இதற்குப் பொருள் கூறுவர். ஆனால் பசியுடையோர்க்குக் கசக்கும் உணவும் இனிக்கும் எனலாம்.

8 – அலைந்து திரிவது வெளியே சென்றுவிட்டு திரும்பிவரும் செயலைக் குறிக்கவில்லை. மாறாகத் தனது இடத்திலிருந்து முற்றிலுமாக இடம்பெயர்வது. இன்று இடம் பெயர்வது வாடிக்கையாகிவிட்டது. ஆனால் இஸ்ரயேலருக்குச் சொந்த மண் மிக முக்கியமானது. மேலும் அலைந்து திரியும் பறவை மனித வாழ்வில் காணப்படும் தடுமாற்றங்களையும் ஏற்ற இறக்கங்களையும் குறிக்கும் ஓர் அடையாளமாகவும் இருக்கலாம்.

9 – நறுமணத் தைலம் உள்ளத்தை மகிழ்விக்கும்: நறுமணத் தைலமும் இதமூட்டும் சாம்பிராணியும் மக்கள் தங்களிடம் வைத்துக்கொள்வர். இவை இரண்டும் நண்பனின் சுகத்துக்கு அடையாளமாகவும் சொல்வர். எனவே இப்பகுதியின் இரண்டாம் பாகத்தை நண்பனின் இனிமை மனதுக்குத் திடமளிக்கும் என்றும் மொழிபெயர்ப்பர்.

10 – இங்கு மூன்று அறிவுரைகள் தரப்படுகின்றன (1) உண்மை நட்பு, அதிலும் குடும்ப நட்பு. (2) துன்பம் வருகையில் சகோதரனை அண்டாதே (இதற்கு மாறான கூற்றை 17:17 இல் காணலாம்). (3) தூரத்திலிருப்பவரைவிட அருகிலிருப்பவரே மேல். இவர் நட்பை உயர்வாகக் கருதுகிறார். உடன்பிறப்பும் குறைந்ததல்ல என்பது

அனுபவம் தரும் பாடம். ஒன்றின் மேன்மையைக் கூற வரும்போது மற்றவை அதிகம் பேசப்படுவதில்லை.

11 – இது 23, 15ஐ ஒத்திருக்கிறது. ஞானி தன் மகன் ஞானத்தில் வளர உற்சாகப்படுத்துகிறார். ஞானத்தை வளர்ப்பது தனிப்பட்டவர் அடையும் வளர்ச்சி, எனினும் அது ஞானிக்கும் பெருமை. யார் என்ன குறைகளை முன்வைத்தாலும் தனது கற்பித்தலுக்குத் தக்க விளக்கமும் பதிலும் அளிக்க முடியும்.

12 – இது 22:3ஐப் போலுள்ளது. அதன் விளக்க உரை காண்க.

13 – இதுவும் 20:16ஐ மறுபடியும் திருப்பிக் கூறுகிறது.

14 – உரக்கக் கத்தி அதிகாலையில் ஒருவரைப் புகழ்வது பல உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. இது தேவையில்லாதது, உண்மையற்றது, காயம் உண்டாக்குவது. ஏனெனில் அது சபிப்பதாகக் கருதப்படுகிறது. இந்தப் பாராட்டுகள் பல கேள்விகளை எழுப்புகின்றன. விடியற்காலை நேரம் என்பது சந்தேகத்தைக் கொணர்கிறது. இந்த நேரம் அவரைத் தொந்தரவு பண்ணி வாழ்த்துவது எதைக் குறிக்கிறது? அவரை வாழ்த்தாமல் இவரால் தூங்க முடியவில்லை. அது ஓர் உந்துதலான உணர்வை வெளிக்கொணர்கிறது. சபிக்கப்படுவது யார்? மேலெழுந்த வாரியாக அது வாழ்த்துவோரைக் குறிக்கும். ஆனால் பாராட்டப்படுபவரோ அதைச் சாபம் எனக் கொள்ளலாம்; பாராட்டுபவரும் தனது பொய்யான பாராட்டுத் தீர்ப்புக்குள்ளாகும் என்பதை அறிந்துகொள்வார்.

15 – சண்டைபிடிக்கும் மனைவியை 19:13இல் காணலாம் (மேலும் காண் 21:9,19; 25:24). இம்மனைவி அண்டத்தின் ஆற்றலுக்கு ஒப்பிடப்படுகிறார். துளித் துளியாய்க் கணவன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறான். கவுஸ்மான் என்பவர்: இது பெண்களின் பொதுவான அல்லது மிகச் சிறப்பான பண்பல்ல. அன்பு செய்யப்படும் மனைவி தொந்தரவு செய்வதில்லை. தொந்தரவு செய்பவள் அன்பு செய்யப்படாதவள் என்கிறார்.

16 – இரண்டு சிறப்பான ஒப்புமைகளால் அவளைக் கட்டுப்படுத்த முடியாதென்பதை ஆசிரியர் விளக்குகிறார். காற்றை அடக்க யாரால் முடியும்? அதேபோல மனைவியை அடக்க முடியாது. கையால் எண்ணையை இறுகப் பிடிப்பது இயலாதது. எண்ணை நழுவிக்கொண்டேயிருக்கும். இப்படிப்பட்ட மனைவியும் கட்டுப்பாடிலிருந்து நழுவிவிடுவாள்.

17 – இரும்பை இரும்பு கூராக்கும். அறிவாற்றல் மற்றவரைக் கூர்மைப்படுத்தும் என்பதுதான் முதல் பொருள். பின்புதான் மற்ற பொருள்களை விரிவுரையாளர்கள் தருகின்றனர். எது எப்படியாயினும் ஞானியின் தூய்மை, அறிவாற்றல், அமைதி மற்றவர்மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அறிவாளிகளின் உரையைக் கேட்க பலர் வருவதைப் பார்க்கிறோம்.

18 – மரத்தைப் பேணி வளர்த்தால் கனி கிடைக்கும். தலைவரைப் பேணிக் காப்பவருக்குக் கண்டிப்பாகப் பரிசு கிடைக்கும். நன்மை நன்மையை உருவாக்கும்.

19 – தண்ணீர் அதை உற்று நோக்கும் முகத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோல உள்ளமும். அது ஒரு கண்ணாடிபோலச் செயல்படுகிறது. அதிலே நீ உண்மையோடும் நேர்மையோடும் நோக்கும்போது உனக்கு உள்ளொளி கிடைக்கும், பெரிய ஞானம் கிடைக்கும். யாருடைய உள்ளம் அது, உனதா அல்லது இன்னொருவரதா? இரண்டும் தன்னைப் பற்றி அறிய உதவுகின்றன. நம்மை நமக்குத் தெரிய வேண்டும். நம்மை நாம் அறிவதால் மற்றவரையும் நாம் அறியவருகிறோம். இவ்வாறு இக்கூற்று வசனம் 17ல் இன்னும் கூராக்கப்டுகிறது. (சீஞா 37:7-15) நல்ல அறிவுரைகள் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து அதை ஆய்ந்து உணர வேண்டும். உள்ளம் சொல்லும் நல்லுரைக்குச் செவிமடுக்க வேண்டும், செபிக்க வேண்டும் என்கிறது.

20 – பாதாளமும் படுகுழியும் சேர்ந்து வருவதை வச 15:11இல் காணலாம். அவை மறைபொருள்களின் அடையாளங்களாக அல்லாமல், பலியானோரை விழுங்கும் பூதங்களாகக் காட்டப்படுகின்றன. பாதாளம் தீராத தாகமுடையது (நீமொ 30:16). அது திருப்பாவில் சாவோடு இணைத்துக் கூறப்படுகிறது. இபா 8:6இல் மனித அன்பைப் பாராட்டும் ஒன்றாகக் காட்டப்படுகிறது. அன்பு பாதாளத்தைப்போல் ஆற்றலுடையது.

ஆனால் மனித கண்களின் விருப்பமோ இவைகளையும் தாண்டுகிறது. பேராசைக்கு அளவே இல்லை என்றும் மொழி பெயர்க்கலாம். கடவுளாலும் மனித ஆசையை நிறைவுசெய்யமுடியாது. சஉ 4:8ம் செல்வத்திலும் மனநிறைவு இல்லை என்கிறார். மேலும் (காண். 1யோவா 2:16).

21 – புடமிடப்படும் வெள்ளியும் தங்கமும் மனித வாழ்வில் நல்லுரைகளுக்காய்ப் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு இது இன்னும் ஒரு புதிய கருத்தைத் தாங்கிவருகிறது. ஒருவரை நல்லவரா என்று செய்யும் தேர்வு அல்லது

சோதனை கடவுளிடமிருந்தல்ல மாறாக அவருக்குக் கிடைக்கும் புகழிலிருந்து கண்டறியலாம்.

புகழ் எவ்விதத்தில் ஒரு தேர்வாக அமைய முடியும்: புகழ், நேர்மை, உண்மை, நியாயமான புகழாக இருந்தால் நல்லது, வரவேற்கத்தக்கது. நீயே உன்னைப் புகழ்வது நல்லதல்ல (வச 2). உனது ஞானத்திற்கேற்ற புகழாயிருந்தால் (12:8) அந்தப் புகழுக்கு நீ தகுதியுடையவனே. உண்மையான புகழ் உன்னை வந்தடைந்தால், ஞானிகள் மத்தியில் நீ புகழ்பெற்றவனாயிருந்தால், உண்மையிலே நீ பாராட்டுக்குரியவன். எனினும் மற்றவர் உன்னைப் புகழ்வது இரு புறமும் கூரான வாள் போன்றது. நீ புகழுக்குத் தகுதியுடையவனாயினும் புகழ் உன்னைத் தலைக் கனத்துக்கும் தேவையற்ற தன்னம்பிக்கைக்கும் கொண்டு சேர்க்கும். தகுதியற்ற பாராட்டாயிருந்தால் நீயே ஏமாற்றப்படுவாய்.

அலன்ஸோ ஷெக்கல்: மற்றவரது புகழ் போதுமானதா? ஒரு மனிதன் வாழ்வில் தான் எப்படிப்பட்டவன் என்று தெரிந்திருக்க வேண்டும். உண்மையில் இவன் பெருமைக்குரியவனா என்பது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? உலைக்களம் எப்போதும் உன்னைத் தூய்மைப்படுத்தும், புனிதப்படுத்தும் என்பதை மறவாதே.

22 – மூடனின் மடமையை எவ்வளவு தண்டனை கொடுத்தாலும், அறிவுரை தந்தாலும், எத்தனை முயற்சி செய்து அவனுக்கு உதவினாலும் அவனிடமிருந்து எடுத்துவிட முடியாது. மூடனைத் திருத்தமுடியாது. இங்கே இந்த முயற்சி உரலில் மூடனைப்போட்டு உலக்கையால் திரும்பத் திரும்ப குத்தினாலும் அவன் திருந்தமாட்டான் என்று கூறப்படுகிறது. மூடனோடு மடமை ஒட்டிப் பிறந்தது போல் ஆகிவிடுகிறது.

23 – இஸ்ரயேல் மக்கள் ஆடுமாடுகளோடு வாழ்ந்தவர்கள். அது அவர்கள் சொத்து மட்டுமல்ல வாழ்வுக் காலச்சாரத்தோடு ஒன்றிப்போன ஒன்று. எனவே அவைகளைக் கண்ணும் கருத்துமாகப் பேண ஆணையிடுகிறார் ஆசிரியர்.

24 – செல்வம் சென்றுவிடும். அது நிலைத்திருப்பதில்லை. எனவே இது வச 23ன் செயல் நோக்கமாக உள்ளது.

25 – இக்கூற்றை ஆடுமாடுகளைப் பேணுவதோடு இணைத்துப் பொருள் கூறவேண்டும். புல்லை அறுவடைசெய்ய இளம்புல் முளைப்பது வளர்ச்சியைக்

காட்டுகிறது. மலைப் புல்லையும் சேர்த்துவைத்து அந்தந்த நேரத்தில் உணவளித்து ஆடுமாடுகளைப் பேணுவது சாலச் சிறந்தது.

26-27 - இந்த இரண்டு கூற்றுகளும் ஆடுமாடுகளால் வரும் பயனைப் பற்றிப் பேசுகின்றன. உடை, உணவு, உறைவிடம், மனித வாழ்வின் தேவைகள். கம்பளி ஆடைகள் அனைத்தும் ஆடுகள் தரும் பரிசு. மேலும் ஆடுகளை விற்று நிலம் வாங்கலாம். 3:13. நல்ல மனையாள் ஆடைகளைத் தானே செய்துகொள்வாள்; மேலும் 31:21-26இல் அவளது வியத்தகு செயல்பாடு பற்றிப் பேசப்படுகின்றன.

செம்பொருள்

மூடனது மடமை அவனைவிட்டு நீங்காது (22) என்பது அருமையான உருவகத்தில் சொல்லப்படுகிறது. இது ஒரு மிகைக் கூற்று என்றாலும் மூடனுடைய நம்பிக்கையில்லாச் சூழல் வலியுறுத்தப்படுகிறது (வச 4,5) பான் லீவன் '28-27' வசனங்களுக்கு ஒரு புது விளக்கம் தருகிறார்; இந்தக் கூற்றுகளில் உருவகமாக நாட்டுப்புற வாழ்வைக் காண்கிறார். செல்வம் எப்போதும் நிலைத்திராது என்பதைச் செல்வமும் மகுடமும் நிலைத்திராது எனப் பொருள் கொள்கிறார். மகுடம் அரசரைக் குறிக்கும். அரசர் ஒரு நல்ல ஆயராகத் தம் மக்களைக் காக்க வேண்டும். மேலும் இங்குப் பயிர் தொழிலும் ஆடுமாடு மேய்த்தலும் குறிப்பிடப்படுகிறது. வசனங்கள் 23, 24 ஆடுமாடுகளுக்கு மேய்ப்பன் தேவை; அதுபோல மக்களை அரசன் நல்ல ஆயனாக இருந்து வழிநடத்த வேண்டும்.

அரசுகள் வளம் மிகுந்த நிலத்தை நம்பியுள்ளன. 26, 27 வசனங்கள் ஆடுமாடுகள் மந்தைகளைப் பற்றிப் பேசுகின்றன. இவைதான் மக்களின் வாழ்வாதாரம். அதிகாரம் 31ம் இதைக் கூறுகிறது. அதிகாரம் முப்பதில் அரசருக்கு அளிக்கப்படும் அறிவுரை இடம் பெறுகிறது. அரசருக்கும் நிலத்தின் வளத்திற்கும் நெருக்கம் உண்டு.

பலர் பல கருத்துகளை முன்வைத்தாலும் இந்த விளக்கம் ஒரு புதுமையானதாக உள்ளது.

22. நீதர், அநீதர் (28:1-28)

28:1 பொல்லாங்கு செய்தோரை எவரும் பின்தொடர்ந்து செல்லாதிருந்தும் அவர்கள் ஓடிக்கொண்டே இருப்பார்கள்; நேர்மையானவர்களோ அச்சமின்றிச் சிங்கம் போல் இருப்பார்கள். 2 ஒரு நாட்டில் அறிவும் விவேகமுள்ள தலைவர்கள் இருந்தால், அதன் ஆட்சி வலிமைவாய்ந்ததாய் நிலைத்திருக்கும்; ஆனால் ஒரு நாட்டினர் தீவினை புரிவார்களாயின், ஆளுகை அடுத்தடுத்துக் கைமாறிக் கொண்டே இருக்கும். 3 ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி, விளைச்சலை அழிக்கும் பெருமழைக்கு ஒப்பானவன். 4 நீதிபோதனையைப் புறக்கணிப்போரே, பொல்லாரைப் புகழ்வர்; அதைக் கடைப்பிடித்து நடப்போர் அவர்களை எதிர்ப்பர். 5 தீயோருக்கு நியாயம் என்றால் என்ன என்பதே தெரியாது; ஆண்டவரை வழிபடுபவரோ எல்லாவற்றையும் நன்குணர்பவர். 6 முறைகேடாய் நடக்கும் செல்வரை விட, மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல். 7 அறிவுக்கூர்மையுள்ள மகன் நீதிச் சட்டத்தைக் கடைபிடித்து நடப்பான்; ஊதாரிகளோடு சேர்ந்துகொண்டு திரிபவன் தன் தந்தைக்கு இழிவு வரச் செய்வான். 8 அநியாய வட்டி வாங்கிச் செல்வத்தைப் பெருக்குகிறவரது சொத்து, ஏழைகளுக்கு இரங்குகிறவரைச் சென்றடையும். 9 ஒருவர் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படியாதிருப்பாரானால், கடவுளும் அவர் வேண்டுதலை அருவருத்துத் தள்ளுவார். 10 நேர்மையானவர்களைத் தீயவழியில் செல்லத் தூண்டுபவர், தாம் வெட்டின குழியில் தாமே விழுவார். தீது செய்யாதவர்கள் வளம்பட வாழ்வார்கள். 11 செல்வர் தம்மை ஞானமுள்ளவர் என்று எண்ணிக்கொள்வார்; உணர்வுள்ள ஏழையோ அவரது உண்மையான தன்மையை நன்கறிவார். 12 நேர்மையானவர்கள் ஆட்சியுரிமை பெற்றால் மக்கள் பெருமிதம் கொள்வர்; பொல்லார் தலைமையிடத்திற்கு வந்தால், மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள். 13 தம் குற்றப் பழிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது; அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார். 14 எப்போதும் கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர் நற்பேறுபெறுவார்; பிடிவாதமுள்ளவரோ தீங்கிற்கு உள்ளாவர். 15 கொடுங்கோல் மன்னன் ஏழைக்குடிமக்களுக்கு முழக்கமிடும் சிங்கமும் இரைதேடி அலையும் கரடியும் போலாவான். 16 அறிவில்லாத ஆட்சியாளர் குடி மக்களை வதைத்துக் கொடுமைப்படுத்துவார்; நேர்மையற்ற முறையில் கிடைக்கும் வருவாயை வெறுப்பவர் நீண்டகாலம் வாழ்வார். 17 கொலை செய்தவன் தப்பியோடுவதாக எண்ணிப் படுகுழியை நோக்கி விரைகிறான்; அவனை எவரும் தடுக்க வேண்டாம். 18 நேர்மையாக நடப்பவருக்குத் தீங்கு வராது; தவறான வழியில் நடப்பவர் தீங்கிற்கு உள்ளாவார். 19 உழுது பயிரிடுகிறவர் நிரம்ப உணவு பெறுவார்; வீணானவற்றில் காலத்தைக் கழிப்பவர் எப்போதும் வறுமை நிறைந்தவராய் இருப்பார். 20 உண்மையுள்ள மனிதர் நலன்கள் பல பெறுவார்; விரைவிலேயே செல்வராகப் பார்க்கிறவர் தண்டனைக்குத் தப்பமாட்டார். 21 ஓரவஞ்சனை காட்டுவது நன்றல்ல; ஆனால் ஒரு வாய்ச் சோற்றுக்காகச் சட்டத்தை மீறுவோருமுண்டு. 22 பிறரைப் பொறாமைக் கண்ணோடு பார்ப்பவர் தாமும் செல்வராக வேண்டுமென்று துடிக்கிறார்; ஆனால் தாம் வறியவராகப்போவதை அவர் அறியார். 23 முகப்புகழ்ச்சி செய்கிறவரைப் பார்க்கிலும் கடிந்துகொள்ளுகிறவரே முடிவில் பெரிதும் பாராட்டப்படுவார். 24 பெற்றோரின் பொருளைத் திருடி விட்டு "அது குற்றமில்லை" என்று சொல்கிறவன் கொள்ளைக்காரரை விடக் கேடு கெட்டவன். 25 பேராசைக்கொண்டவன் சண்டை மூளச் செய்வான்; ஆண்டவரையே நம்பியிருப்பவர் நலமுடன் வாழ்வார். 26 தன் சொந்தக் கருத்தையே நம்பி வாழ்பவன் முட்டாள்; ஞானிகளின் நெறியில் நடப்பவரோ தீங்கினின்று விடுவிக்கப்படுவர். 27 எழைகளுக்குக் கொடுப்பவருக்குக் குறைவு எதுவும் ஏற்படாது; அவர்களைக் கண்டும் காணாததுபோல் இருப்பவர் பல சாபங்களுக்கு ஆளாவார்.

28 பொல்லார் தலைமையிடத்திற்கு வந்தால், மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள்; அவர்கள் வீழ்ச்சியுற்றபின் நேர்மையானவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவார்கள்.

பின்புலம்

அதிகாரம் 27 முதல் பகுதியை முடிவுக்கு வர அதிகாரம் 28இல் நாம் புதிய பகுதியைக் காண்கின்றோம். காரணம் இங்கு எதிர்மறை இணையணிகள் அதிகம் காணப்படுகின்றன. இங்கு நீதிமான், பொல்லாதவர் முரண்பாடுகள் அடிக்கடி வருகின்றன. அறநெறி சார்ந்த கருத்துரைகள் உள்ளன. சட்டம் பற்றிய குறிப்பு இருமுறை இடம் பெறகிறது. பதிமூன்று முறை வருகின்ற தோரா (சட்டம்) ஞானிகளுடைய போதனையைக் குறிப்பதாகவும் உள்ளது.

மேலும் நல்லார் பொல்லார் பற்றிய கூற்று (28:1; 29:27), இவைகளோடு மற்றும் நான்கு நீதிமொழிகள் (28:17,28; 29:2;16), எப்படி ஓர் அரசன் நீதியோடு மக்களை ஆளவேண்டும் என்பதை அழுத்தமாகக் கூறுகின்றன.

சொல்விளக்கம்

1 – நீதிமான்களுக்கும் தீயோருக்கும் உள்ள முரண்பாடு நமக்குத் தெரிந்ததே. ஆனால் இக்கூற்றைப் பரந்த நிலைகளுக்கு நாம் எடுத்துச்செல்லலாம். தீயோர் மன அமைதியின்றியிருப்பர். காரணம் மனசாட்சி குற்றம் சொல்லும், காவலர்கள் அவர்களைத் தொடரலாம். அச்சம் அவர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. நீதிமான்கள் திடமனத்துடன் இருப்பர். கண்டிப்பாகச் சிங்கம்போல் அச்ச உணர்வின்றி நீதிமான்கள் இருப்பது ஆண்டவரின் அருளால்தான் (காண். வசனங்கள் 25, 26; சாஞா 17).

2 – நல்லோராட்சி நீடித்திருக்கும். தீயோராட்சி மாறிக்கொண்டேயிருக்கும். ஆட்சியாளர்கள் தீவினை புரிந்தால் நிலைமை படுமோசமாகும். ஆட்சியைப் பிடிக்கப் பலர் எத்தனிப்பர். இதனால் பல சதி, குழப்பங்கள் ஏற்படும். புதிய தலைவர்கள் உருவாவர். இது வட இஸ்ராயேலில் அரச குடும்பங்களிடையே நடந்த ஆட்சி மாற்றங்களை நினைவு கூர்வதாக இருக்கலாம். மேலும் அரசியல் குழப்பத்தையும் இது எடுத்துரைக்கிறது.

அறிவும் விவேகமும் பல பொருள்களை இன்று குறிக்கும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட நலமான ஆட்சி புரிகிறார்களா? ஆனால் நல்ல மனிதர் அமைதியரசைத் தரவியலும்.

3 – ஏழைகளை ஒடுக்கும் 'ஏழை' என்றுதான் இந்த கூற்று உள்ளது. ஆனால் அது ஏற்றுக்கொள்ள முடியாததுபோன்று விரிவுரையாளர்களுக்குத் தெரிந்ததால் அவர்கள் பொல்லார் அல்லது அதிகாரி என்று மொழிபெயர்த்துள்ளனர். அதிகாரி ஒடுக்குவதில் எந்த வியப்புமில்லை. ஆனால் ஏழை ஓர் ஏழையை ஒடுக்குவது கேட்பதற்கே கடினமாயுள்ளது.

ஆனால் திடீரென வசதிக்கு வந்த ஏழை பணமும் அதிகாரமும் படைத்தவராய் இருப்பார். புதிதாய் அதிகாரத்திற்கு வந்தவன் தன்னலமும் அதிகாரத்தைக் காட்டும் ஆர்வமுடையவனுமாய் இருப்பான். அவன் தனது முந்தைய நிலையை மறந்து ஏழைகளாயிருக்கும் சக தோழர்களுக்குக் கொடூரனாய் இருப்பான். இவர்கள் வளமையும் செழுமையும் தரும் மழை சில சமயங்களில் பேரழிவையும் தந்துவிடுவது போல இருப்பர்.

4 – நீதிப் போதனை எனும்போது அது கடவுளின் கட்டளைகள், அவரது திருவுளம், பெற்றோரின் அறிவுரைகளைக் குறிக்கிறது. இவைகளுக்குச் செவிமடுக்காதவர் பொல்லாரோடு தொடர்புடையவர். நல்லதை எதிர்க்க பொல்லாரைப் புகழ்ந்து அவரோடு உறவு வைத்திருப்பதை இது உணர்த்துகிறது.

5 – நான்காவது வசனத்தில் கூறப்பட்ட கருத்து இன்னொரு வகையில் இங்கே தொடர்கிறது. நீதியும் நியாயமும் பொல்லாருக்குப் புறம்பானவை. ஆனால் ஆண்டவரை வழிபடுவோர் எது நீதி, எது சரியானது என்பதைப் புரிந்துகொள்வர். ஆண்டவரைத் தேடுவோர் (வழிபடுவோர்) என்பது இங்கு நல்லது தீயது எது என்பதைப் பகுத்துணரும் அறிவு கொண்டோர் (தொநூ 2:9,17; 3:5). இது நன்னடத்தையை மட்டுமல்ல வாழ்வின் மதிப்பீட்டைக் கடைபிடிப்பதைப் பற்றிக் கூறுகிறது. மேலும் போன்ராட் அவர்களின் கருத்துப்படி: யாவேயிடம் அச்சம் கொள்பவருக்குக் குழப்ப நேரத்தில் நல்லது எது தீயது எது என்று கண்டறிய இயலும். எனினும் இது நன்னெறியை மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக. எல்லா நிலைகளிலும் ஆண்டவர் சரியானதைக் கண்டுபிடிக்க உதவுவார் என்கிறது.

6 – இக்கூற்றை 19:1இல் காணலாம். மாசற்றவர் எப்பொழுதும் ஏழையாய் இருக்கவேண்டியதில்லை. உண்மை ஞானம் மாசற்றவர் செல்வராய் இருப்பாரென்ற கருத்துடையது. எனினும் அது மாறாக இருக்கலாம். இவர் செல்வராயிருக்கும் பொல்லாரைவிட மேலானவர் என்பது ஒரு விசுவாசக் கூற்று (காண். திபா 37; 15:16).

7 – இங்குக் கூறப்படும் தோரா அல்லது சட்டம் தந்தையின் போதனையைக் குறிக்கிறது. ஏனெனில் இரண்டாம் பகுதி தந்தைக்கு இழிவு தேடித்தரும் மகன் பற்றிக் கூறுகிறது. இவன் கலகம் செய்யும் தோழர்களோடு (காண் 23:19-20) சேர்ந்து கொண்டு தந்தைக்கு மனவருத்தம் அளிப்பவன் (காண் 23:24-25).

8 – அநியாய வட்டி சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது (விப 22:24; இச 23:24). திருப்பா 15:5 வட்டிக்குப் பணத்தைக் கொடாதவர் பேறுபெற்றவர் என்கிறது. கடவுள் அநியாய வட்டி வாங்குவதை வெறுக்கிறார். எனவே அச்செல்வத்தால் பயனடையாதவாறு அதைத் தடுத்துவிடுவார். அவர் இன்னொருபடி மேலே சென்று சிந்திக்கிறார். அப்பணம் ஏழைகளுக்கு, இரங்குவோருக்கு வந்துசேரும் என்பது மிகச் சிறப்பான (காண். 14:31; 19:17; 13:22) கருத்து.

9 – பழிக்குப் பழி போன்று இக்கூற்று அமைகிறது. யார் கேட்க மறுக்கிறாரோ அவர் கேட்கப்படமாட்டார். சட்டத்தைக் கடைப்பிடிக்காதவர் கடவுளுக்கு அருவருப்பானவர். அவர் நேர்மை இல்லாதவர். அவர் வேண்டுதல் செய்யத் தன்னையே தகுதி இல்லாதவராக்கிக் கொள்கிறார். அவர் வேண்டுதல் கேட்கப்படமாட்டாது.

10 – இடறல் தருபவனுக்கு ஐயோ கேடு என்கிறார் இயேசு (மத் 18:6). பிறரை அதுவும் நேர்மையானவர்களைத் தீய வழிக்குத் தூண்டுபவருக்கு இயேசு பெரும் தண்டனை அளிக்கிறார். இங்கு பிறருக்குத் தீங்கிழைப்பவன் தனக்கே தீங்கிழைக்கிறான் என்னும் வினைப்பயன் கோட்பாட்டைக் காண்கிறோம். நல்லது செய்பவருக்கு நலமே வந்து சேரும்.

11 – செல்வம் புகழையும் ஆற்றலையும் கொணரும். ஆனால் அது உண்மை ஞானத்தின் சான்று அல்ல. தன்னை ஞானி என்று எண்ணிக்கொள்வது மடமையாகும் (26:12). சான்றாக நாபால் செல்வந்தன்தான், ஆனால் முட்டாளாகச் செயல்பட்டான் (1சாமு 25). ஆனால் ஏழையாக இருந்தாலும் அவர் செல்வந்தரைவிட ஞானியாக இருப்பார். 28:5 கடவுளை நாடுவோர் எல்லாம் அறிந்திருப்பர்.

12 – இந்தக் கூற்றும் வச 28ம் ஒரே கருத்தைக் கூறுகின்றன. நல்லோராட்சி தீயோராட்சிக்கு மாற்றாகக் கூறப்படுகிறது. நல்லோர் ஆட்சி செலுத்தும்போது அனைவரும் நலம் பெறுவர்; மக்களும் மாண்படைவர். தீயோராட்சியில் மக்கள்

தங்களை மறைத்துக்கொள்வர். அவர்கள் அநீதிகளைக் கண்டு அப்புறம் சென்றுவிடுகின்றனர். (காண் 29:2).

13-14 - இந்த இரண்டு கூற்றுகளும் கடவுளின் ஆசிரையும் இரக்கத்தையும் பற்றிப் பேசுகின்றன.

13 - நாவால் தன் குற்றத்தைப் பகிரங்கமாக அறிக்கையிடுகிறவர் கண்டிப்பாகக் கடவுளின் இரக்கத்தைப் பெறுவார். இதை திபா 32; 51; யோபு 31:33-34இல் காணலாம். ஒருவர் இன்னொருவரின் பாவத்தை மறைக்கலாம் (10:12), தன் பாவங்களை மறைக்க இயலாது.

14 - கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர் எச்சரிக்கையாயிருப்பர். பாவங்களை விலக்குவர். இவர்கள் தங்கள் பலவீனத்தை அறிந்து கடவுளிடம் நம்பிக்கை கொள்கின்றனர். இதயச் செருக்கும் இறுமாப்பும் உள்ளவர் தங்களையே நம்புவர். இதனால் சிக்கல்களில் மாட்டிக்கொள்வர்.

15 - கொடுங்கோல் ஆட்சியாளர்கள் பற்றி 15ஆம் 16ஆம் அதிகாரங்கள் பேசுகின்றன. பிற விலங்குகளைத் தாக்கிக் கொல்லும் சிங்கத்திற்கு கொடுங்கோல் மன்னனை ஒப்பிடுவது மிகச் சரியானது. அநீத ஆட்சியாளரது கோபம் சிங்கத்தை ஒத்தது (19:129; 20:2). தங்களைப் பார்த்து மக்கள் அஞ்சவேண்டுமென ஆட்சியாளர் ஆசைப்படுவது புதிதல்ல.

16 - அறிவில்லா ஆட்சியாளரைவிட, என்பதைவிட தகுந்த வருமானம் இல்லாத ஆட்சியாளர் மக்களை வதைத்துக் கொடுமைப்படுத்துவார். நேர்மையற்ற முறையில் பணம் சேர்ப்பதை வெறுப்பவருக்கு நீடிய ஆயுள் கிடைக்கும். நீதிமான்களுக்கும் ஞானிகளுக்கும்தான் பொதுவாக நீடிய ஆயுள் (15:27) கிடைக்கும்.

17 - கொலை செய்தவன் தனது வாழ்நாள் முழுவதும் ஓடிக்கொண்டே இருக்கிறான் என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவர் ஓடுவதற்குக் காரணம் பழிவாங்கப்படுவோம் என்னும் பயத்தாலோ அல்லது தனது மனசாட்சி குற்றப்படுத்துவதாலோ இருக்கலாம். இவரை யாரும் தடுக்கவேண்டாம். ஏனெனில் நீதியை அதன் ஓட்டத்திற்கு விட்டுவிடு என்பது ஆசிரியரின் எண்ணம்.

18 - நேர்மையான வாழ்வு நடத்துபவருக்குத் தீங்கு வராது. ஆனால் பொல்லாருக்கு வரும். அவர் இரட்டை வேடம் போடுபவர்; ஏதாவது ஒரு வழியில் அவர் வாழ்வார்.

19 – நல்ல உழைப்பைத் தந்து பயிரிடுகிறவருக்கு நல்ல பலன் கிடைக்கும், ஏன் மேலாகவும் கிடைக்கும். வீணாகக் காலத்தைக் களிப்பவர் சோம்பேறி. அவருக்கு வறுமையின்றி எதுவும் இல்லை.

உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்வர் (குறள் 1033).

20 – திடீர் பணக்காரரைப் பார்ப்போம். எப்படி இந்தப் பணம் அவருக்கு வந்ததென எல்லாருமே சந்தேகப்படுவர். தவறான வழியில் வந்ததென அனைவரும் கூறுவர் (20:21). ஆனால் நேர்மையாளருக்குக் கடவுளிடமிருந்து நலன்கள் கிடைக்கும் (12:22).

21 – ஓரவஞ்சனை காட்டுவது ஏற்புடையதில்லை. 24:23 இது வழக்காடு மன்றச் சூழலில் கூறப்படுகிறது. ஒரு வாய்ச் சோறு என்பது இங்கு மிகைப்படுத்துதல் இல்லை. ஏனெனில் மிகக் குறைந்த அருவருக்க தக்கக் கையூட்டுக்காக எச்சட்டத்தையும் மீறுகிறவரைக் கண்கூடாகக் காண்கிறோம். இப்படி வாங்குவோருக்கு அதைச் செய்துமுடிக்க பல நிர்ப்பந்தங்களும் அழுத்தங்களும் கொடுக்கப்படுகின்றன.

22 – பேராசை என்றாலே பொறாமை கண்ணோடு பார்ப்பது, (23:6; 22:9). இவர் விரைவில் செல்வம் பெறத் துடிப்பது தவறான வழிகளில் ஈடுபடுவதைச் சுட்டுகிறது. இறுதியில் பேராசை பெரு நட்டத்தில் முடிகிறது. எதுவானாலும் இழப்பைத் தடுக்கவியலாது. "ஆமை புகுந்த வீடும் (பொறாமை) அமினா புகுந்த வீடும் உருப்படாது."

23 – கடிந்துரைப்பதை ஞானிகள் நல்லதெனக் கண்டனர் (19:25; 25:12; 27:5). முதியோர் சொல் முதலில் கசப்பதாகத் தோன்றும். எனவே எதிர்ப்பு உண்டாகும். ஆனால் இறுதியில் அது இனிக்கும். முகம் குளிரப் பேசுபவரது உள்நோக்கம் தெரியாமல் அதைக் கேட்டுக்கொண்டேயிருந்தால் உனக்குத் தலைக்கனம் உண்டாகும். அதுவே உனக்குத் தொல்லையாகும்.

24 - பெற்றோரிடமே திருடுவது வெட்கக்கேடானது. என்ன திருடியிருக்கலாம்? ஆபரணங்களாகவோ, நிலத்தை கையகப்படுத்தும் ஆவணங்களாகவோ, வேறு விலையுயர்ந்த பொருளாகவோ இருக்கலாம். இவற்றை எடுத்துவிட்டு இல்லை என்பது இன்னும் அருவருப்பானது. அது 'குற்றமில்லை' எனக் கருதுவது தீர்ப்புத் தண்டனைக்கு உரியதாகிறது. திருடன்

'அழிப்பவன்' அவன் ஒரு கொலைகாரன் என்கிறது விவிலியம் (காண். 19:26; 20:20; 28:24; 30:11,17).

25 - பேராசை என்றால் தீராப் பசி: மற்ற இடத்தில் பகைமை (10:12) என்றும் கோபம் (15:18; 29:22) என்றும் கூறப்படுகிறது. இவை இரண்டும் எப்பொழுதும் சண்டைகளை உண்டாக்குபவை (15:18; 29:22). தனக்குத்தான் வேண்டும் எனும் ஆசை பல தொல்லைகளை வரவழைக்கும். கடவுளிடம் உள்ள நம்பிக்கை செல்வத்தின் மீதுள்ள ஆசைக்கு எதிரானது.

மேலும், அதிக செல்வம் வைத்திருப்பவனின் பணம் அவனை ஆட்கொண்டுவிடுமா? அவனிடம் இன்னும் பணத்தின் மீது ஆசை அதிகரிக்குமா? என்ற கேள்விகள் சிந்திக்க வைக்கின்றன.

26 - தன்னை நம்புகிறவன் கடவுள் மீதுள்ள நம்பிக்கையற்றுப்போகிறான். அவனிடம் ஞானம் நிலைக்காது என்பது ஞானிகளின் கருத்து. ஞானம் எப்போதும் கடவுளோடு தொடர்புடையது (2:5; 3:5)

27 - ஏழைகளுக்கு வாரி வழங்குபவனிடம் பேராசை இராது (வச. 25). அவருக்குக் கருணை நிறைந்த உள்ளம் (22:9) உண்டு. அவர் கடவுளுக்குக் கடன் கொடுக்கிறார் (3:5). எவ்வளவு கொடுத்தாலும் அவருக்கு எதுவும் குறைவுபடுவதில்லை.

ஏழைகளைக் கவனியாதவருக்குச் சாபங்களே வரும் (20) அது கடவுளிடமிருந்தோ அல்லது ஏழைகளிடமிருந்தோ வரலாம் (சீஞா 4:1-6).

28 - இந்தக் கூற்று வசனங்கள் 12, 29:2 டோடு தொடர்புடையது. பொல்லாத் தலைவர்கள் ஆளும்போது நீதியற்ற சமூகச் சூழல் உருவாகும். அப்போது நல்லோர் தீய அதிகாரிகளிடமிருந்து மறைந்திருப்பர். அந்த அரசு கவிழும்போது நேர்மையாளர் வெளியில் வந்து ஆட்சியைக் கைப்பற்றுவர். அவர்கள் வளமுடையோராய் விளங்குவர்.

செம்பொருள்

இந்த அதிகாரம் பல கருத்துகளை எடுத்துரைக்கும் ஒரு கதம்பம் எனலாம். இங்கு அறநெறி சார்ந்த அறிவுரைகள் உண்டு. இது நல்லார், பொல்லார், சட்டம் அறிவுரை, செபம், மனமாற்றம் (9,13) பற்றிக் குறிப்பிடுகிறது. ஞானக் கூற்றுகளாக 25,26ஐக் காணலாம். வீட்டுப் பொருளாதாரம் பற்றிப் பேசப்படுகிறது (3, 8, 11, 19-

22, 27). அலோன்சே ஷெக்கலின் கருத்துப்படி ஆற்றலைப் பயன்படுத்துவது பற்றிய கூற்றுகளும் அரசியல் அல்லது பொருளாதாரம் பற்றிய கூற்றுகளும் இவ்வதிகாரத்தில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. மேலும் அரசியல், ஆற்றல், அதைப் பயன்படுத்தல், செல்வம் போன்ற கருத்துகளை ஆசிரியர் விளக்குகிறார் (3, 5 , 15, 16, 21), (6, 11, 15, 17).

23. நீதியான அரசர் (29:1-27)

29:1 பன்முறை கண்டிக்கப்பட்டும் ஒருவர் பிடிவாதமுள்ளவராகவே இருந்தால், அவர்
ஒருநாள் திடீரென அழிவார்; மீண்டும் தலைதூக்கமாட்டார். 2 நேர்மையானவர்கள் ஆட்சி
செலுத்தினால், குடிமக்கள் மகிழ்ச்சியுடனிருப்பார்கள்; பொல்லார் ஆட்சி செலுத்தினால்
அவர்கள் புலம்பிக் கொண்டிருப்பார்கள். 3 ஞானத்தை விரும்புவோர் தம் தந்தையை
மகிழ்விப்பார்; விலைமகளின் உறவை விரும்புகிறவர் சொத்தை அழித்துவிடுவார். 4
நியாயம் வழங்குவதில் அரசர் அக்கறை காட்டினால் நாடு செழிக்கும்; அவர் வரி சுமத்துவதில்
அக்கறை காட்டினால் நாடு பாழாய்ப் போகும். 5 தமக்கு அடுத்திருப்போரை அவர்கள்
எதிரிலேயே அளவுமீறிப் புகழ்கிறவர் அவரைக் கண்ணியில் சிக்கவைக்கிறார். 6 தீயவர்
தம் தீவினையில் சிக்கிக் கொள்வர்; நேர்மையாளரோ மகிழ்ந்து களிகூர்வர். 7 ஏழைகளின்
உரிமைகளைச் காப்பதில் நேர்மையாளர் அக்கறை கொள்வர்; இவ்வாறு அக்கறைகொள்வது
பொல்லாருக்குப் புரியாது. 8 வன்முறையாளர் ஊரையே கொளுத்திவிடுவர்;
ஞானமுள்ளவர்களோ மக்களின் சினத்தைத் தணிப்பார்கள். 9 போக்கிரியின்மீது ஞானமுள்ளவர்
வழக்குத் தொடுப்பாராயின், அவர் சீறுவார், இகழ்ச்சியோடு சிரிப்பார், எதற்கும் ஒத்துவரமாட்டார்.
10 தீங்கறியாதவனைக் கொலைகாரர் பகைப்பர்; நேர்மையானவர்களோ அவருடைய உயிரைக்
காக்க முயல்வார்கள். 11 அறிவில்லாதவர் தம் சினத்தை அடக்கமாட்டார்; ஞானமுள்ளவரோ
பொறுமையோடிருப்பதால், அவர் சினம் ஆறும். 12 ஆட்சி செலுத்துகிறவர் பொய்யான
செய்திகளுக்குச் செவி கொடுப்பாராயின், அவருடைய ஊழியரெல்லாரும் தீயவராவர். 13
ஏழைக்கும் அவரை ஒடுக்குவோருக்கும் பொதுவானது ஒன்று உண்டு; இருவருக்கும்
உயிரளிப்பவர் ஆண்டவரே. 14 திக்கற்றவர்களின் வழக்கில் அரசர் நியாயமான தீர்ப்பு
வழங்குவாராயின், அவரது ஆட்சி பல்லாண்டு நீடித்திருக்கும். 15 பிரம்பும் கண்டித்துத்
திருத்துதலும் ஞானத்தைப் புகட்டும்; தம் விருப்பம் போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள்
தாய்க்கு வெட்கக்கேட்டை வருவிப்பர். 16 பொல்லாரின் ஆட்சி தீவினைகளைப் பெருக்கும்;
அவர்களது வீழ்ச்சியை நல்லார் காண்பர். 17 உன் பிள்ளையைத் தண்டித்துத் திருத்து;
அவர் உனக்கு ஆறுதலளிப்பார், மனத்தை மகிழ்விப்பார். 18 எங்கே இறைவெளிப்பாடு
இல்லையோ, அங்கே குடிமக்கள் கட்டுங்கடங்காமல் திரிவார்கள்; நீதி போதனையின்படி
நடப்பவர் நற்பேறு பெற்று மகிழ்வார். 19 வெறும் வார்த்தைகளினால் வேலைக்காரர்
திருந்தமாட்டார்; அவை அவருக்கு விளங்கினாலும் அவற்றைப் பொருட்படுத்தமாட்டார். 20
பேசத் துடிதுடித்துக்கொண்டிருப்பவரை நீ பார்த்திருக்கிறாயா? மூடராவது ஒருவேளை
திருந்துவார்; ஆனால் இவர் திருந்தவேமாட்டார். 21 அடிமையை இளமைப் பருவமுதல்
இளக்காரம் காட்டி வளர்த்தால், அவர் பிற்காலத்தில் நன்றிகெட்டவராவார். 22 எளிதில்
சினம் கொள்பவரால் சண்டை உண்டாகும்; அவர் பல தீங்குகளுக்குக் காரணமானவர். 23

இறுமாப்பு ஒருவரைத் தாழ்த்தும்; தாழ்மை உள்ளம் ஒருவரை உயர்த்தும்; 24 திருடனுக்குக் கூட்டாளியாயிருப்பவர் தம்மையே அழித்துக் கொள்கிறார்; அவர் உண்மையைச் சொன்னால் தண்டிக்கப்படுவார்; சொல்லாவிடில், கடவுளின் சாபம் அவர்மீது விழும். 25 பிறர் என்ன சொல்வார்களோ என்று அஞ்சிக்கொண்டு நடப்பவர் கண்ணியில் சிக்கிக்கொள்வார்; ஆண்டவரை நம்புகிறவருக்கோ அடைக்கலம் கிடைக்கும். 26 பலர் ஆட்சியாளரின் தயவை நாடுவதுண்டு; ஆனால் எந்த மனிதருக்கும் நியாயம் வழங்குபவர் ஆண்டவர் அன்றோ? 27 நேர்மையற்றவரை நல்லார் அருவருப்பார்; நேரிய வழி நடப்போரை பொல்லார் அருவருப்பர்.

பின்புலம்

எதிர்மறை இணையணியை இந்த அதிகாரத்தில் அதிகமாகக் காணலாம். ஆனால் 25-27 அதிகாரங்களிலுள்ள அழகும் ஒப்புமையும் இங்குக் காணப்படவில்லை. நீண்ட கூற்றுகளை காணலாம் (1, 5, 9, 12-14, 19-21, 24). இந்த அதிகாரம் அரசருக்கு வேண்டிய அறிவுரைகளைத் தருவதாகக் கூறுவர் (காண். 29:4, 12, 14, 16; 28:2, 15, 16). குழந்தை வளர்ப்பு (3, 15), நீதியான அரசர் பற்றிக் (4, 14) இங்குப் பேசப்படுகிறது. மேலும் கண்டிப்பதைக் கண்டுகொள்ளாதிருப்பதால், வஞ்சகப் புகழ்ச்சிக்கு செவிமடுப்பதால் (1, 5) வரும் இக்கட்டுகளும் குறிப்பிடப்படுகின்றன.

சொல்விளக்கம்

1 – கண்டிப்பதும் திருத்துவதும் ஞான இலக்கியங்களின் பாரம்பரியக் கூறுகள். அவை வளர்ச்சிக்கும் திருந்துவதற்கும் துணை நிற்கும். ஆனால் ஆசிரியர் கூறும் நபர் பிடிவாதமுள்ளவர். அவர் கடிந்துரையைக் கேட்காதவர் (காண். இச 31:27; விப 32:9). இவரது எதிர்காலம் அழிவே (6:15).

2 – முரண்பாட்டைக் கொண்ட இக்கூற்று வச 16; 28:12,28 கூறப்பட்டிருப்பதை ஒத்தது. நேர்மையாளர்கள் ஆட்சி செலுத்தினால் மக்கள் மகிழ்வுடனிருப்பர். நீதியும் நேர்மையும் ஆட்சி புரியும். ஆனால் கொடுங்கோலன் ஒருவனால் மக்கள் அழுதுகொண்டும் புலம்பிக்கொண்டும் இருப்பர்.

3 – ஞானத்தை விரும்புகிறவரைக் கிரேக்கத்தில் பிலாசபர் Philosopher என்பர். ஞானத்தை அன்பு செய்பவர் விலைமகளை விரும்பிப் பணத்தைத் தாறுமாறாகச் செலவழிப்பவரிலிருந்து முரண்படுகிறார். முன்னையவர் தந்தைக்கு ஆனந்தம், பின்னையவர் அழிவின் விளிம்பில் நிற்பவராவார். தந்தையும் அவரால் வேதனைப்படுகிறார் (லூக் 15:30).

4 – நியாயம் வழங்குவதில் அரசர் அக்கறை காட்டுதல் அல்லது ஆட்சியாளர் அக்கறை காட்டுவது இன்றியமையாதது. வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் அதுவே அடிப்படையானது. அது மனிதர்மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது. பொதுவாக அநியாயம் ஏழைகள் மீது திணிக்கப்படுகிறது. அது பல்வேறு வடிவங்களில் நடந்தேறுகிறது.

அதுவல்லாமல் வரி விதிப்பதிலே ஆட்சியாளர்கள் கவனமாய் இருக்கவேண்டும் அல்லது நாடும் மக்களும் தத்தளிப்பர். பழங்கால அரசர்களுக்கு இந்த விதியானது கூறப்பட்டது (16:10-13; 20:28). குறள் 385, 388

5 – நீதிமொழி 28:23இல் முகப் புகழ்ச்சியைக் கடிந்துகொள்வதற்கு முரணாக இங்கக் கூறப்படுகிறது. இந்தக் கூற்று முதல் வசனத்திற்குக் கூறும் விளக்கமாகக் கொள்ளலாம். கண்டிப்பதை ஏற்காதவர் அழிவார். முகப் புகழ்ச்சியை அதாவது எல்லையற்றுப் புகழ்வதை ஞானிகள் ஏற்பதில்லை. அவர்கள் பார்வையில் புகழ்வதின் நோக்கம் ஏதும் இல்லாவிட்டாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் அது அவருக்குக் கண்ணியாகிவிடும்.

6 – இக்கூற்று 12:13இல் வரும் கூற்றுபோல் உள்ளது. தன் வினை தன்னையே சுடும். தீயவர் செயல் தமக்கே கண்ணியாகும். அதில் அவர் சிக்கித் தவிப்பர். நேர்மையாளரின் நற்செயல்கள் எவை என்பது பற்றிக் கூறப்படாவிடினும் அவர்களைத் தீங்கு அணுகுவதில்லை. அவர்கள் ஆடிப்பாடி மகிழ்வர்.

7 – இங்கு நடப்பது ஏழைகளின் உரிமைகளைக் காக்கும் செயல். இது ஏதோ கற்பனைக் கதையன்று. நேர்மையாளர் ஏழைகளுக்கு நேரிடும் இன்னல்களைக் காண்கையில் உடனே மனமிரங்குபவர்கள். அவர்களுடைய அக்கறையும் கரிசனையும் தீயோருக்குப் புரிவதில்லை. தீயோர்கள் செயலில் இறங்கி உதவி செய்வதில் தோற்றுப்போகிறவர்கள்.

8 – வன்முறையாளர்கள் சமூகக் கலகங்களைக் கட்டவிழ்த்துவிடுவர்; ஏழைகளின் குடிசைகளைத் தீக்கிரையாக்குவர் (26:21). இவர்களுடைய செயல்கள் அனைத்தும் நாசவேலையே. ஆனால் ஞானிகள் மக்களின் சினத்தைத் தணிப்பவர்கள். அவர்களின் ஞானம் அதற்கு உறுதுணையாயுள்ளது (காண் 2சாமு 20:14-22).

9 – இது வழக்குப் பற்றியது; எனவே ஓர் இக்கட்டான சூழல் உருவாகிறது (காண். 26:4-5). இரண்டாம் பகுதியில் கோபப்படுபவர், சீறுபவர் யார்? ஞானியா

அல்லது போக்கிரியா? சிலர் ஞானி என்பது அவ்வளவாகச் சரியில்லை என்றே படுகிறது என்பர். போக்கிரி கோபத்திலிருந்து கேலிக்குச் செல்கிறான். ஒரு சிலர் இருவருமே என்பர். ஞானி கோபமுறப் போக்கிரி சிரிக்கிறார்.

10 – மாசற்றவனைப் பகைக்கிறவன் கொலைகாரன். ஏனெனில் மாசற்றவர் அவனுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் அவனைக் கண்டிக்கிறவராகவும், அவரது நேர்மை அவனை உறுத்துவதாகவும் உள்ளது (காண். சாஞா 2:10-24). ஆனால் நேர்மையாளர்களோ அவர்களைக் காக்க முயல்வர். ஆனால் உண்மையில் அவர்கள் பக்கமாய் நிற்பவரும் காப்பவரும் கடவுளே (சாஞா 3).

11 – ஞானமுள்ளவர் தமது கோபத்தையா அல்லது அறிவிலியின் கோபத்தையா அடக்குவார்? சரியான விடை தமது கோபத்தை தான். ஏனெனில் தன்னைக் கட்டுப்படுத்துவது ஞானிகளின் தனிப்பட்ட குணம் (14:17). அறிவிலியால் அது முடிவதில்லை (12:16; 14:29).

12 – ஆட்சி செய்கிறவர்கள் உண்மையாயென்று கண்டறிய வேண்டும். ஒற்றர்கள் கூறுவது உண்மையா, இல்லையா என அறியாமல் எல்லாவற்றிற்கும் செவிமடுத்தால் தவறுகள் பல நடந்தேறும். மதிப்பீடுகள், நற்பண்புகள் அரசரிடம் இருப்பின் அவரது அமைச்சர்களிடமும் ஊழியர்களிடமும் அப்பண்புகள் நடமாடும். இல்லையேல் தீமையே விளையும் (காண். திபா 101; சீஞா 10:1-3).

13 – இதே கருத்து இன்னொரு விதமாக 22:2இல் கூறப்பட்டிருக்கிறது. ஏழைகளும் அவரை ஒடுக்குவோரும் எனும்போது அதன் எதிர்பாடான செயல்பாடுகளைக் கூர்மையாக உய்த்துணரலாம். ஒடுக்குவோரால் தான் ஏழைகள் உருவாகின்றனர். இரண்டு பேரையும் உண்டாக்கியவர் கடவுளே எனும்போது இது ஒரு சாதாரண கூற்றுபோல் தோன்றுகிறது. ஆனால் இக்கூற்று ஒடுக்குவோருக்கு ஓர் எச்சரிக்கை, ஓர் அச்சுறுத்தல். ஏனெனில் இங்குக் கூறப்படுவது கடவுள் கேட்கும் நீதி.

14 – அரசனின் கடமை ஏழைகளைப் பராமரிப்பதாகும். எந்த ஒரு வஞ்சகமும் அவரிடம் இதைப் பொறுத்தமட்டில் இருக்கக்கூடாது. ஏழைகள் பக்கம் நிற்பது பற்றிக் கூறப்படவில்லை எனினும் 13, 14ஐ சேர்த்துப் பார்க்கும்போது அது தெளிவாகும். குரல் எழுப்ப முடியாதோரும் குரல் எழுப்பினால் அது கேட்கப்படாதபடி தடுக்கப்படுவோரும் உண்டு. அவர்களையும் கண்டுபிடித்து நீதி வழங்குவதுவே அரசரின் தலையாய கடமை. அவரது நீதியை முன்னிட்டு அவரது ஆட்சி தொடரும்.

இக்கூற்றில் இரண்டாம் பகுதியை விவிலியத்தின் (16:12; 20:28; காண் திபா 45:7-8; 72:4,12) மற்ற பகுதிகளிலும் காணலாம்.

15 – பிரம்பும் அடித்துத் திருத்துதலும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவைதான் (13:24; 19:18; 22:15; 23:13-14). பிள்ளைகளை அவர்கள் வழியில் விட்டுவிட்டால் அவர்கள் "பண்பற்றோராய் வளர்வர்". அவர்களுக்கு வழிகாட்டல் தேவை. இல்லையெனில் தாய்க்குத் தலைகுனிவைக் கொணர்வர் (காண். 10:5 12:4). 'தலைகுனிவு' இஸ்ரயேல் பண்பாட்டில் வலுவான ஒன்று. வச 3இல் தந்தையும், இங்குத் தாயும் குறிப்பிடப்படுகின்றனர் (17:25; வச.17).

16 - இக்கூற்றை 28:12,28; 29:2லும் காணலாம். தீயோர்கள் அதிகமானால் தீய ஆட்சி நடக்கும். நல்லோர்களால் நல்லாட்சி நடைபெறும். ஆசிரியர் தீய ஆட்சி முடிவுக்கு வரும் என்கிறார். அது வீழும் என்று நம்புகிறார். தீமை நிரந்தரமல்ல, அது முடிவுக்குவரும் எனும் நம்பிக்கையில் ஞானி வாழ்கிறார். அதை நல்லோர் காண்பர். (காண் திபா 37:36-36; 54:9).

17 – தண்டித்துத் திருத்துதல் பெற்றோருக்கு அழகு. அவர்கள் மன அமைதியையும் மகிழ்ச்சியையும் இவ்வுலகிலே சுவைப்பர். திருந்திய மகன் பொறுப்புடையவனாயிருந்து பெற்றோரைக் கவனிப்பான். அவன் அவர்களின் மகிழ்ச்சியாயிருப்பான் (காண். 10:1; 19:18; 23:13).

18 – வெளிப்பாடும் சட்டமும் வேறுபட்ட இறையியல் தெளிவுகளைக் கொண்டுள்ளன. 'ஹசோன்' என்பது இறைவாக்கினருக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டைக் குறிக்கும். இங்கு மட்டுமே நீதிமொழிகளில் இந்த வார்த்தை வருகிறது. இந்த வெளிப்பாடு இறைவாக்கினர்களைப் புறக்கணிக்கும் சமூகச் சூழலையோ, இறைவாக்கினர் இல்லாத (குறைவாக) நிலையையோ அல்லது இறைவார்த்தைப் பஞ்சத்தையோ குறிக்கும் (ஆமோ 8:11-12). அடுத்து 'தோரா' சட்டத்தைக் குறிக்கும் (காண் 28:7). மேலும் இது ஞானிகளின் போதனைகளையோ, குருக்களின் அறிவுரைகளையோ குறிக்கலாம். பொதுவாக ஞானிகளின் போதனை ஒரு தனி நபருக்கு அல்லது வகுப்பு மாணக்கருக்குக் கொடுக்கப்படும். இங்கு மக்கள் என்று கூறப்படுகிறது. நற்பேறு பெற்றோர் நற்போதனையைக் கடைபிடிப்போர்.

19 - வார்த்தைகளும் அதன் விளக்கங்களும் வேலைக்காரரைத் திருத்தவில்லையெனில் அவர்கள் தலைவரை எதிர்க்கின்றார்கள் என்பது பொருள்.

(விப 21:20-21,26-27). சட்டத்தின்படி உடலைக் காயப்படுத்துவது குற்றம் என்றாலும் வேலைக்காரர்கள், அடிமைகள், குழந்தைகள் இவர்களை திருத்தக் கண்டிப்பைப் பயன்படுத்துவது பற்றிப் பேசப்படுகிறது.

மற்ற இலக்கியங்களிலும் ''தலைவரின் கைகளில் பிரம்பு இல்லையெனில் வேலைக்காரர்கள் அவரைக் கேட்பதில்லை'' என்று வாசிக்கிறோம். இப்படிப்பட்ட உறவே அக்காலத்தில் இருந்திருக்கிறது.

20 - 'தபார்' என்ற எபிரேயச் சொல் செயல் அல்லது வார்த்தையைக் குறிக்கும். இக்கூற்று பலவற்றைக் குறிக்கிறது. வேகம் அல்லது அவசரம் நல்லதாகக் கருதப்படவில்லை (13:11; 28:20). பேசும்போது அவசரம் காட்டினால் அது தன் அடக்கத்தை, நல்ல நேரத்தில் நல்லதைச் சொல்வதைப் பாதித்து விடுகிறது. அதேபோல அவசரப்பட்டுச் செய்யும் செயல் பல தவறுகளுக்குக் காரணமாகிவிடுகிறது.

இப்படிப்பட்டவர்களுக்கு என்ன நேரிடும்? மூடராவது திருந்துவார் ஆனால் இவர் திருந்தமாட்டார். ஒருவேளை இது மிகைப்படுத்திக் கூறும் கூற்றாயிருக்கலாம் (காண். சீஞா 9:18; 1:19).

21 - அடிமையை கண்காணிக்காது வளர்த்தால் அதாவது இளக்காரம் கொடுத்தால் தலைவருக்கோ அல்லது அடிமைக்கோ எந்தவித நன்மையும் ஏற்படுவதில்லை. எனவே அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவேண்டும், நல்ல கல்வியளிக்க வேண்டும். இந்த அடிமை அடிமைக் குடும்பத்தில் பிறந்தவராய் இருக்கலாம் (விப 21:4).

22 - சினம் கொள்பவர் தனக்கும் பிறருக்கும் தொல்லையாயிருப்பார். (காண். 15:18; 28:26).

23 - இறுமாப்பு பாவத்தில் தள்ளும். இல்லாதது பொல்லாதது சொல்லித் தன்னைப் புகழும், இவ்வாறு இக்கூற்று சுயநலத்திற்கு ஒரு சாட்டையடியாக இருக்கிறது. ஆனால் உண்மை புகழை மதிக்கிறது. இறுமாப்புடையவனுக்குக் குறைந்த நண்பர்களே உண்டு. அவன் தாழ்ந்துவிடுவான். தாழ்மையுடையவன் எல்லோரும் விரும்பும் நண்பனாவான். இக்கருத்தை 11:2; 16:18; சீஞா 10:6-18 காணலாம்.

24 – திருடனுடைய கூட்டாளி அவன் செய்யும் சட்டத்திற்கு எதிரான செயல்களிலும் அதில் கிடைக்கும் வருமானத்திலும் பங்குபெறுகிறான். திருட்டே ஓர் அழிவை உண்டாக்கும் வேலை. இங்கே தண்டனை வருவதால் நீதிமன்றக் கூறுகளை உள்ளடக்கியதாகிறது. தண்டனையை லேவி 5:1-5 வாக்குகளின் வழியாகப் புரிந்து கொள்ளவேண்டும். தப்பான செயல் எனத் தெரிந்திருந்தால் அந்த உண்மையைச் சொல்லவேண்டும். ஆணையிட்டும் உண்மையை உரைக்கவேண்டும். நீ மௌனம் காத்தால் நீயும் திருடனைப்போல தண்டனைக்குரியவன்.

25 – இங்கே அஞ்சுதல் கடவுளுக்கு அஞ்சுவதையல்ல மாறாக தன்னைப் பற்றிய வீண் கவலைகளால் தனக்கே அஞ்சுவது. இது தன்னிலே முடங்கிவிடுவதாகும். பிறரைக் கண்டும் பயப்படுவதாகும். இது தனது அல்லது பிறரது ஆசைகளுக்கு இலகுவில் ஒரு பலியாக மாறக்கூடிய ஒரு மனநிலையைக் குறிக்கிறது. ஆனால் ஆண்டவரை நம்புவோருக்கு தன்னம்பிக்கை உருவாகிறது. அவரை யாரும் அசைக்கவியலாது (காண். 18:10; 28:25).

26 – இக்கூற்று வச 25இல் நாம் காணும் அச்சத்தோடு வாழ்பவருக்கு ஒரு விரிவுரையாகக் கருதப்படலாம். இவர்கள் பெரிய மனிதர்களின் உறவை அல்லது தொடர்பை நாடுவர். இவ்வாறு அவரிடமிருந்து சலுகைகளைப் பெற முயல்வர் (19:6). ஆண்டவர்தான் அனைவரையும் காப்பார் அல்லது நீதி வழங்குவார் என்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. ஆண்டவரை நம்புவது எதைவிடவும் மேலானது. யார் என்ன திட்டம் தீட்டினாலும் இறைவனது விருப்பமே நிறைவேறும். மனிதரை முழுமையாக நம்பி இறைவனுக்குக் குறைந்த மதிப்புக் கொடுப்பதை இந்த வசனம் குறைகூறுகிறது.

27 – இந்தப் பகுதி நல்லோர் தீயோர் பற்றிய கூற்றுகளை முன்வைக்கிறது. நல்லோரைத் தீயோரும் தீயோரை நல்லோரும் அருவருப்பர். இது நன்மைக்கும் தீமைக்கும் இடை உள்ள தொடர் போராட்டத்தை எடுத்துக் கூறினாலும் இறைவனில் நம்பிக்கை வைப்பது அச்சங்களைப் போக்கி அமைதி தர வல்லது என்பது ஞானியரின் கருத்து,

செம்பொருள்

பல கருப்பொருள்களைப் பற்றி நன்றாகப் பேசினாலும் பெற்றோரின் அதிகாரம், கடமைகள் பற்றியும் கொஞ்சம் சிந்திக்கலாம். வச 3, தந்தைக்கு மகிழ்ச்சி,

15, தாய்க்கு வெட்கக் கேடு, 17, கண்டித்துத் திருத்துவது இது ஏற்கனவே கூறப்பட்டது எனினும் பெற்றோருக்கு அவமானம் கொடுக்கும் மதிகேடரான குழந்தைகள் பற்றிக் கூறியாகவேண்டும். வச 27:11 தந்தையே தன் மகனிடம் வருந்திக் கேட்பதுபோலுள்ளது. பெற்றோரின் மகிழ்வு அல்லது துயரம் பிள்ளைகளுடைய நடத்தையோடு தொடர்புடையது (காண். 17:25; 23:24-25; 28:7).

நீதிமொழிகள் பலமுறை குழந்தைகள் பெற்றோருக்குத் தொல்லையாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன (19:26; 20:20; 30:11) பெற்றோரைச் சபிப்பது, 28:24 பெற்றோரிடம் திருடுவது, 30:17 பிள்ளைகளின் விழிகளைக் காகம் பிடுங்கும், கழுகுகள் தின்னும் என்று சொல்லப்படுகிறது. இது நமது சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இத்தகைய நீதிமொழிகள் குடும்ப உறவுகளில் பெரிய தவறுகள் இருப்பதைக் காட்டுகின்றன. பத்துக்கட்டளைகள் கூறும் "பெற்றோரை மதித்துநட" என்பது மிகமிகத் தேவையானது. இதன் சிறப்புக்கு ஞானப் போதனைகளே காரணம். ஞான இலக்கியமும் பெற்றோருக்குக் கொடுக்கப்படும் பெரிய கடமையாகப் பிள்ளைகளுக்குக் கல்வி கொடுப்பதையே வலியுறுத்திக் கூறுகிறது.

24. ஆகூரின் மொழிகள் (30:1-33)

30:1 மாசாவைச் சார்ந்த யாக்கோயின் மகன் ஆகூரின் மொழிகள்; அவர் ஈத்தியேல், ஊக்கால் என்பவர்களுக்குக் கூறிய வாக்கு. 2 மாந்தருள் மதிகேடன் நான்; மனிதருக்குரிய அறிவாற்றல் எனக்கில்லை. 3 ஞானத்தை நான் கற்றுணரவில்லை; கடவுளைப்பற்றிய அறிவு எனக்கில்லை. 4 வானத்திற்கு ஏறிச்சென்று மீண்டவர் யார்? தம் கைப்பிடிக்குள் காற்றை ஒருங்கே கொணர்ந்தவர் யார்? கடல்களை மேலாடையில் அடக்கிவைத்தவர் யார்? மண்ணுலகின் எல்லைகளைக் குறித்தவர் யார்? அவர் பெயரென்ன? அவர் மகன் பெயரென்ன? நீதான் எல்லாவற்றையும் அறிந்தவனாயிற்றே! 5 கடவுளின் ஒவ்வொரு வாக்கும் பரிசோதிக்கப்பட்டு நம்பத்தக்கதாய் விளங்குகிறது; தம்மை அடைக்கலமாகக் கொண்டவர்களுக்கு அவர் கேடயமாயிருக்கிறார். 6 அவருடைய வார்த்தைகளோடு ஒன்றையும் கூட்டாதே; கூட்டினால் நீ பொய்யனாவாய்; அவர் உன்னைக் கடிந்துகொள்வார். 7 வரம் இரண்டு உம்மிடம் கேட்கிறேன், மறுக்காதீர்; நான் சாவதற்குள் அவற்றை எனக்கு அளித்தருளும். 8 வஞ்சனையும் பொய்யும் என்னை விட்டு அகலச் செய்யும்; எனக்குச் செல்வம் வேண்டாம், வறுமையும் வேண்டாம்; எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும். 9 எனக்கு எல்லாம் இருந்தால், நான் உம்மை "எனக்குத் தெரியாது" என்று மறுதலித்து, "ஆண்டவரைக் கண்டது யார்?" என்று கேட்க நேரிடும். நான் வறுமையுற்றால், திருடனாகி என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்க நேரிடும். 10 வேலைக்காரரைப் பற்றி அவர் தலைவரிடம் போய்க் கோள் சொல்லாதே; சொன்னால் அவர் உன்மீது பழிசுமத்துவார்; நீயே

குற்றவாளியாவாய். 11 தந்தையைச் சபிக்கிற, தாயை வாழ்த்தாத மக்களும் உண்டு. 12 மாசு நிறைந்தவராயிருந்தும் தம்மைத் தூயோர் எனக் கருதும் மக்களும் உண்டு. 13 கண்களில் இறுமாப்பு, பார்வையில் ஆணவம்-இத்தகைய மக்களும் உண்டு. 14 பற்கள் கூரிய வாள், கீழ் வாய்ப் பற்கள் தீட்டிய கத்தி - இவற்றை உடைய மக்களும் உண்டு; அவர்கள் நாட்டிலுள்ள ஏழைகளை விழுங்கிவிடுவார்கள்; உலகிலுள்ள எளியோரைத் தின்று விடுவார்கள். 15 அட்டைப்பூச்சிக்கு, 'தா, தா' எனக் கத்தும் இரு புதல்வியர் உண்டு; ஆவல் தணியாத மூன்று உண்டு; "போதும்" என்று சொல்லாத நான்காவது ஒன்றும் உண்டு. 16 அவை: பாதாளம், மலடியின் கருப்பை, நீரை அவாவும் வறண்ட நிலம், "போதும்" என்று சொல்லாத நெருப்பு ஆகியவையே. 17 தகப்பனை ஏளனம் செய்யும் கண்களையும் வயது முதிர்ந்த தாயை இகழும் விழிகளையும் இடுகாட்டுக் காக்கைகள் பிடுங்கட்டும். கழுகுக் குஞ்சுகள் தின்னட்டும். 18 எனக்கு வியப்பைத் தருவன மூன்று உண்டு; என் அறிவுக்கு எட்டாத நான்காவது ஒன்றும் உண்டு. 19 அவை, வானத்தில் கழுகு மிதத்தல், கற்பாறைமேல் பாம்பு ஏறுதல், நடுக்கடலில் கப்பல் மிதந்து செல்லுதல், ஆண்மகனுக்குப் பெண்மீதுள்ள நாட்டம் ஆகியவையே. 20 விலைமகள் நடந்துகொள்ளும் முறை இதுவே; தவறு செய்தபின் அவள் குளித்துவிட்டு "நான் தவறு எதுவும் செய்யவில்லை" என்பாள். 21 உலகத்தை நிலைகுலைப்பவை மூன்று; அது பொறுக்க இயலாத நான்காவது ஒன்றும் உண்டு. 22 அரசனாகிவிடும் அடிமை, உண்டு திரியும் கயவன், 23 யாரும் விரும்பாதிருந்தும் இறுதியில் மணம் முடிக்கும் பெண், உரிமை மனைவியின் இடத்தைப் பறித்துக் கொள்ளும் அடிமைப் பெண். 24 சிறியவையாயினும் ஞானமுள்ள சிற்றுயிர்கள் நான்கு உலகில் உண்டு; 25 எறும்புகள்; இவை வலிமையற்ற இனம்; எனினும் கோடைக்காலத்தில் உணவைச் சேமித்து வைத்துக் கொள்கின்றன. 26 குறுமுயல்கள்: இவையும் வலிமையற்ற இனமே; எனினும், இவை கற்பாறைகளுக்கிடையே தம் வளைகளை அமைத்துக் கொள்கின்றன. 27 வெட்டுக்கிளிகள்: இவற்றிற்கு அரசன் இல்லை; எனினும், இவை அணி அணியாகப் புறப்பட்டுச் செல்லும். 28 பல்லி: இதைக் கைக்குள் அடக்கி விடலாம்; எனினும், இது அரச மாளிகையிலும் காணப்படும். 29 பீடுநடை போடுபவை மூன்று உண்டு; ஏறுபோல நடக்கின்ற நான்காவது ஒன்றும் உண்டு; 30 விலங்குகளுள் வலிமை வாய்ந்ததும் எதைக் கண்டும் பின்வாங்காததுமான சிங்கம்; 31 பெருமிதத்துடன் நடக்கும் சேவல்; மந்தைக்குமுன் செல்லும் வெள்ளாட்டுக்கடா; படையோடு செல்லும் அரசன். 32 நீ வீண் பெருமைகொண்டு மூடத்தனமாக நடந்திருந்தாலும், தீமை செய்யத் திட்டம் வகுத்திருந்தாலும் உன் வாயை பொத்திக் கொண்டிரு. 33 ஏனெனில், மோரைக் கடைந்தால் வெண்ணெய் திரண்டுவரும்; மூக்கை நெரித்தால் இரத்தம் வரும்; எரிச்சலூட்டினால் சண்டை வரும்.

பின்புலம்

ஆகூரின் மொழிகள் அடங்கியுள்ள இந்த அதிகாரத்தை 1-14 என்றும் 15-33ஐ எண்ணிக்கைக் கூற்றுகள் என்றும் கூறுவர். எனினும் நாம் இதை ஒன்றாகக் காண்போம்.

1-14 வரை உள்ளவற்றில் புதிர்கள் பண்பு கொண்டவையாக 1-4ஐயும், இறை வார்த்தையோடு அறிவுரையைக் கொண்டதாக 5-6ஐயும், எண்ணிக்கைக் கூற்றுகள் கொண்ட செபமாக 7-9ஐயும், அறிவுரையாக 10ஐயும், எண்ணிக்கை பண்பைக் கொண்டதாக 11-14ஐயும் கூறுவார்.

வசனம் 15 அட்டைப் பூச்சியையும், புதல்வியர் 1-14ஐயும் 16-33ஐயும் இணைக்கும் கூற்றுகளாகவும் கொள்வர் அறிஞர்.

30:16-33 உள்ள கூற்றுகள் எண்ணிக்கைக் கூற்றுகள். எண்ணிக்கைக் கூற்று விவிலிய நூல்களிலுள்ள ஓர் இலக்கிய கூறு (காண். ஆமோ 1:3 -2:6; மீக் 5:4). இந்த எண்ணிக்கைக் கூற்றுகளின் செயல்பாடாகவும் பொருளாகவும் ஒய்பிரே என்பவர்

- கேளிக்கை
- கவனித்தல்
- கல்வி
- சிந்தித்தல் என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.

அலென்சோ ஷெக்கல் 'நடுநிலை'இல் இரு. குறைத்துவிடாதே நிறைத்துவிடாதே என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

ஒரு மன்றாட்டு எனினும் இது எபிரேய எழுத்துகளின் எண்ணிக்கையை வைத்து எழுதப்படுகிறது. தமது மனநிலையைக் கடவுள்முன் இவர் வைக்கிறார்.

சொல்விளக்கம்

1 - ஆகூர் யார் என்பது புதிராக உள்ளது. அவர் மாசாவைச் சார்ந்தவரானதால் அவர் யூதராயிருக்க வாய்ப்பில்லை. யாக்கே இவரது தந்தை என்பதும் எவ்வளவு உண்மை என்பது தெரியவில்லை. அவர் கற்பனை மனிதராய் இருக்கலாம். வரலாற்று மனிதன் என்பதற்கு ஆதாரமில்லை. முதல் கூற்று இந்த விளக்கங்களை நிறைவாக ஏற்க மறுக்கிறது. ஆகூர் என்றால் புரியாத அல்லது புதிரான மொழிகளைக் கூறுபவர். ஈத்தியேல், ஊக்கால் என்ற சொற்கள் மனித பெயர்கள் என்பது சரியல்ல. பல மொழிபெயர்ப்புகள் ஒத்த கருத்துடையவையாக இல்லை.

எழுபதின்மர் நூல்கள் 'அவர் மனிதன் (என்) மகனுக்குக் கூறுவது' என்ற பொருளைத் தருகிறது.

2 - இவர் தம்மை அறிவில்லாதவர், மதிகேடன் என்கிறார் (திபா 73:22; 92:7). இவர் நேர்மையாய்ப் பேசுகிறார். தனது இயலாமையை ஒத்துக்கொள்கிறார். எனினும் இத்தகைய கூற்றுக்கள் நான் மற்றவரைப்போல் மதிகேடனல்ல என்பதைக் கூறுவதுபோல் உள்ளது.

3 – ஞானமுமில்லை கடவுளறிவுமில்லை என்பதை யோபு, சபையுரையாளரைப்போல் ஞானத்தைத் தேடியும் வெற்றி பெற முடியவில்லை எனக் கொள்ளல் வேண்டும். யோபு 28 ஞானத்துக்கு வழிகாண்பது கடினம், பாருக் 3:9-37, சபை உரையாளர் (7:23-24). ஞானத்தை எவ்வளவு அடைய முயன்றும் முடியவில்லை என்று புலம்புவதுபோல் புரிந்துகொள்ளவேண்டும்.

4 – இந்த நீதிமொழி 5 புதிர்களைக் கொண்டது. இதை விளக்குவது கடினம் என்றாலும் முயற்சிக்கலாம். இங்குக் கேட்கப்படுகின்ற கேள்விகளெல்லாம் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளியைக் குறிப்பிடுகின்றன.

அடுத்து இந்தக் கேள்விகளைக் கேட்பவர் யார் என்பது தெளிவில்லை. அது ஆகூராக இருக்கலாம் அல்லது இன்னொரு நபராகவும் இருக்கலாம். இவர்கள் இந்தக் கேள்விகள் வழியாகக் கடவுளைப் புகழ்கின்றனர். பாருக் என்ற அறிஞர் நான்காவது வசனத்தைப் பேசுபவர் கடவுள் என்கிறார். ஆனால் முதல் நான்கு கேள்விகளுக்கும் பதில் கடவுளே. இங்குள்ள கேள்விகள் யோபு 38-41இல் காணப்படும் கேள்விகளை நினைவுகூர்கின்றன.

இக்கூற்றின் இறுதியில் நீதான் எல்லாவற்றையும் அறிந்தவராயிற்றே என்பது ஒரு கேலிக் கூற்று போலுள்ளது (யோபு 38:18). இவ்வசனத்தின் 5ஆவது பகுதி இரண்டு கேள்விகளைக் கொண்டுள்ளது. அவர் பெயரென்னவெனில் ‘கடவுள்’ என்போம். அனால் அவர் மகன் பெயரென்ன? எனும்போது ‘கடவுள்’ என்ற முதல் கேள்வியின் பதில் முன்னுக்கு வருவதில்லை. இது புதிர் நிறைந்ததா? முதல் நான்கு கேள்விகளுக்கும் பதில் ‘கடவுளே’.

அ) முதலில் கடவுள் வானத்திற்கும் பூமிக்கும் இடையே உலவுகிறார். திருப்பா (139:8) ஆசிரியர் கடவுளிடமிருந்து தப்ப முடியாமல் திகைக்கிறார். அவர் ஒரு புதிராகவே உள்ளார் என்கிறார்.

இச 30:12 சட்டம் பற்றிக் கூறும்போது “யார்தான் வானம் சென்று அதைக் கொணர முடியும்?” என்கிறார்.

பாரூ 3:29 “வானகம் சென்று ஞானத்தைக் கொணர்பவர் யார்? என்று கேட்கிறார். இவை எல்லாம் கடவுள் பெரியவர், அணுக முடியாதவர். எல்லா ஞானமும் வல்லமையும் உடையவர் என்பதைக் குறிப்பிடுகின்றன.

ஆ) கடவுள் காற்றைக் கைப்பிடிக்குள் கொணர்பவர் (காண். ஆமோ 4:13; திபா 135:7).

இ) மேலாடையில் கடலை அடக்கிவைப்பரும் கடவுளே (காண் யோபு 26:8).

ஈ) மண்ணுலகுக்கு எல்லைகளைக் குறித்தவர் கடவுள் (காண் திபா 22:28 நீமொ 8:27-29).

உ) அவர் பெயரென்ன?, அவர் மகன் பெயரென்ன? இப்போது அந்த நபர்கள் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முயல்கிறோம்.

ஏன் இங்கு மகனின் பெயர் குறிக்கப்படவில்லை. இந்தக் கேள்வி புதிர் நிறைந்ததாக உள்ளது. **இதற்குரிய பதிலை ஸ்கெகான்** (Skehan) என்பவர் **ஆகூர் யாக்கேயின் மகன் (வச 1)** என்று காண்கிறார். ஆகூர் என்றால் 'நான் குடியேறியவன்' என்பது பொருள். யாக்கோபும் (தொநூ 47:9) பாரோனிடம் நான் குடியேறி ஆண்டுகள் 130 ஆகின்றன என்கிறார். திருப்பா 39:13 ஆசிரியர் 'நான் மறைந்துவிடுபவன்' என்று தன் நிலைபற்றிக் கூறுகிறார். ஆகூரும் தன் பெயருக்கு ஏற்பத் தனது வாழ்வு குறுகியது என்று உரைக்கிறார். தனக்குக் கடவுள் பற்றிய அறிவு இல்லை என்றும் ஒத்துக்கொள்கிறார். யாக்கோபுக்கும் தூயவரின் அறிவு இல்லை என்று சாஞா 10:10 உரைப்பது ஆகூருக்கும் பொருத்தமாக உள்ளது.

மேலும் யாக்கோபு இறைவனின் தூதுவர்கள் வானங்களுக்குச் செல்வதையும் இறங்குவதையும் தனது காட்சியில் காண்பது (தொநூ 28:12-13) பற்றிப் பேசப்படுகிறது. ஆகூருக்கு யாக்கோபு இரு வகைகளில் ஒத்திருக்கிறார். யாக்கோபு / அல்லது இஸ்ரயேல் விடுதலைப் பயண நூலில் (4:22) 'கடவுளின் மகன்' எனப்படுகிறார். "இஸ்ரயேல் எனது மகன், எனது தலைப்பேறு" என்பதைக் கவனிக்கவும்.

ஆகூர் யாக்கோபு / **யாக்கோபின்** மகன் என அழைக்கப்படுகிறார். யாக்கே யார்? யாக்கே ஆண்டவர். யாக்கே என்பது யாவே என்னும் சொல்லைச் சுருக்கி எழுதுவதாகும்.

இந்த விளக்கத்தின்படி ஆகூர்: யாக்கோபு, இஸ்ரயேல் என்பவர் கடவுளின் மகன் எனப்படுகிறார். ஒரு சிலர் இந்த விளக்கத்தை ஏற்க மறுப்பினும் ஐந்தாவது கேள்வி விந்தையானதுதான். அதன் விளக்கமும் விந்தையானது.

5 – கடவுளின் வாக்குப் பரிசோதிக்கப்பட்ட வாக்கு. அதை எல்லோரும் நம்ப வேண்டும். 'எனக்கு எதுவும் தெரியாது' என்கிற ஆகூரும் இதை நம்பி ஏற்கும் நபராகிறார். அவருக்கு அது கேடயமாகிறது.

இக்கூற்று திபா 18:31 (2சாமு 22:31)ஐ பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமானதே. தோராவிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் பரிசோதிக்கப்பட்டதே (திபா 19:8-10). இறைவனே ஒரு கேடயம் (2:7), அவரை நம்புபவருக்கும் பாதுகாப்புக் கிடைக்கும் (16:20).

6 – இறைவார்த்தை கடவுளின் அதிகாரம் பெற்றது. அதைக் கூட்டக் கூடாது. (இச 4:2 13:1) இதைத் தெளிவாகக் கூறுகிறது சீஞா 18:5-6.

7-8 இது ஒரு செபம். இது வித்தியாசமானது; சிந்தனையில், பக்தியில், இறைப்பற்றில், போதுமென்ற மனத்தில் விரவிவரும் இம்மன்றாட்டு ஓர் ஈடு இணையற்ற மன்றாட்டு. வஞ்சனையும் பொய்யும் என்னைவிட்டு அகலட்டும் என்ற பின்புலத்தில் இந்த மூன்று கூற்றுகளும் சுழல்கின்றன.

7 – வரம் இரண்டு முன்வைக்கப்படுகின்றது. ஆனால் வேண்டுதலில் மூன்று முன்வைக்கப்படுகின்றன. பொய் பேசாமை, வறுமையோ, செல்வமோ இல்லாமை; தேவையான உணவு. நான் சாவதற்குள் என்றால் நான் வாழும் நாள்களில் என்பது பொருள்.

8 – பொய்மை என்பது சிறிய பொய்களைவிட ஏமாற்றுவது, நடிப்பது, இரட்டை வேடம் போடுவது (விப 20:7). செல்வத்தைக் கடவுளின் ஆசிர் எனக் கருதும் சூழலில், அதை எல்லாரும் விரும்பும் பின்புலத்தில் எனக்கு வேண்டாம் என்பது ஓர் ஆழ்ந்த மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது (இதேபோல் காண். 15:16-17). வறுமை பற்றி மற்ற இடங்களில் கூறியவற்றை இது தாண்டிவிடுகிறது. கடவுளே ஒருவரைச் செல்வராக, இன்னொருவரை ஏழையாகப் படைக்கிறார் (1சாமு 2:7) என்றிருக்க இங்கு வேண்டுபவர் 'தேவையான உணவைத் தந்தால் போதும்' என்கிறார். ஒரு நடுநிலையைத் தேர்கிறார்.

இவ்வேண்டுதலை வேண்டுதல்களில் மிகச் சிறப்பான வேண்டுதலாகக் காணலாம். இயேசு கற்றுக்கொடுத்த வேண்டுதலுக்கு இது ஆதாரமாய் அமைந்திருக்க வேண்டும். இயேசு 'அன்றாட உணவை' எங்களுக்குத் தந்தருளும் (மத் 7:11; லூக் 11:3) என்று தமது விண்ணப்பத்தில் சேர்த்துக்கொள்வது மிகமிக அற்புதமானது.

9 – செல்வமும் வறுமையும் தம்மோடு பல ஆபத்துகளைக் கொண்டுள்ளன. எனினும் தேவையானது ஒன்றே. கடவுளுக்கு உண்மையாய் இருப்பது. அனைத்தும் இருந்தால் கடவுளை மறப்பேன். அவர் இருக்கிறாரா? அவரைக்

கண்டதுண்டா? என்று திமிராய்க் கேட்பேன். வறுமையாய்ப் போனால் திருடுவேன். 'திருட்டு' கடவுளுக்கு இழிவு ஏற்படுத்தும்.

10 – வேலைக்காரன் ஒரு பாமரன். நீ உண்மையோ அல்லது அபாண்டமோ அவன் தலைவனிடம் அவனைப் பற்றிச் சொன்னால் அவனால் எந்த எதிர்ப்போ, தன்னைக் காத்துக்கொள்ளும் வசதியோ கிடையாது. கடவுள்தான் அவனது பாதுகாப்பு. அல்லது தன்னைப் பற்றித் தவறாகப் பேசியோரை அவன் சபிக்கலாம். கடவுள் முன் அப்படிப் பேசியோர் குற்றவாளி என நிறுத்தப்படுவர். இ.சட்டம் 23:16 தனது அநீதித் தலைவனை விட்டு உன்னிடம் அடைக்கலம் தேடி வரும் அடிமையை திரும்ப அனுப்பத் தடைவிதிக்கிறது. இக்கூற்றின்படி தலைவரே புகார் சொல்பவரைத் தண்டிப்பார். நீ உன் வேலையைப் பாரு. இன்னொருவரின் காரியத்தில் தலையிடாதே என்பதே இதன் பொருள்.

11 – இந்தக் கூற்றின் விரிவுரையை நீமொ 30:17இல் பார்க்கலாம். காண் 29. தாய் தந்தையரைப் புறக்கணிப்போருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என விப 21:15,17 கூறுகிறது. வெளிப்படையான தண்டனை பற்றி இங்குக் கூறப்படவில்லை (20:20 தண்டனை). இவர்களுக்கு மறைமுகமான தண்டனை கொடுக்கப்படுகிறது. இந்த வகையைச் சார்ந்தவர்கள் இங்கே ஒன்றுசேர்த்துக் கூறப்படுகின்றனர்.

12 – நிறைய குற்றம் செய்திருந்தும் இத்தகையோர் தம்மைக் குற்றவாளிகள், மாசுடையவர்கள் என ஒத்துக்கொள்ள மறுப்பவர்கள். இவர்கள் குற்றமற்றவர்கள் என கூறிக்கொண்டு திருப்தியடைபவர்கள் (16:2; 20:9).

13 – இறுமாப்பும் ஆணவமும் உடையவர்களை வெளிப்படையாகக் கண்டிக்கிறார் ஆசிரியர். கண்களின் பாவனைகள் ஒருவரைக் காட்டிக் கொடுத்துவிடும்.

14 – கண்கள் பற்றி இரண்டு சொற்கள் கூறப்படுவதுபோல பல் பற்றியும் இரு சொற்கள் கூறப்படுகின்றன: 'கூரியவாள்,' 'தீட்டிய கத்தி'. இவை பேராசையையும், கொடூரத்தையும் குறிக்கின்றன. இவற்றை உடையவர்கள் ஏழைகளை விழுங்கி எளியோரைத் தின்றுவிடுபவர்களாவர்.

15அ – அட்டைப் பூச்சியின் செயல்களைக் கொண்டு அதை விளக்கலாம். அட்டைப் பூச்சி இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும். அது தனது உடம்பின் இரு முனைப் பகுதிகளாலும் இரத்தத்தை உறிஞ்சி விடும். மரத்தின் கிளைகள் 'அதன்

புதல்வியர்' என அழைக்கப்படுவது போல் (தொநூ 49:22). இவைகள் இரண்டு புதல்வியராகக் கணிக்கப்படுகின்றனர். அவை இன்னும் இரத்தம் கேட்பதுபோல் உள்ளது. எனினும் அவை நிறைவு அடைவதில்லை. இவைகளை மற்றவையோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் விளக்கங்கள் வேறுபடலாம். எனினும் இரத்தத்தை எவ்வளவு குடித்தும் வயிறு நிறையாத இந்த அட்டைப்பூச்சியின் இந்த விநோதப் பண்பு பின்வரும் கூற்றுக்கு நல்ல முன்னுரையாக உள்ளது.

15ஆ, 16 – எண்களால் அலங்கரிக்கப்பட்ட இந்தக் கூற்றுகள் 15அ விலிருந்து வேறுபட்டவை. முதலில்: பாதாளம். இதற்கு எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. ஒருவேளை பாதாளம் எல்லாருக்கும் தெரிந்த ஒன்று என்பதால் விளக்கம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். பாதாளம் ஓய்வதில்லை. எல்லோரையும் தேடிக்கொண்டிருக்கும் எமன் (இபா 8:6; தி.ப 49:16; 89:49).

இரண்டாவது மலடியின் கருப்பை. இதை நமது சிந்தனையில் தெரிந்துகொள்ளலாம். இது கருத்தரிக்க ஏங்கிக் கொண்டிருக்கும். மூன்றாவது வறண்ட நிலம் இது நீருக்காக ஏங்கும். வளமையும் வளர்ச்சியும் நீராலே.

நான்காவது நெருப்பு, இது எப்போதும் விழுங்கிக் கொண்டிருக்கும், தொடர்ந்து எரியும். எதை விழுங்கினாலும் திருப்தியடையாதது. போதவில்லை, இன்னும் வேண்டும் என்பதே இதன் இயல்பு. இவை ஆசிரியரது அனுபவங்கள். ஆனால் இவைகளுக்குப் பல்வேறு பொருள்களையும் கூற முடியும். சான்றாகப் பேராசை, சினம்...

17 – இக்கூற்று 30:11ஐ ஞாபகப்படுத்துகிறது. கண்கள் பார்க்கும் ஏளனப் பார்வை. அது தந்தை தாயைக் காயப்படுத்துகிறது. இது மகனின் (மகளின்) இறுமாப்பைக் குறிக்கிறது (30:12-13). இவர்களுக்குரிய தண்டனை மிகக் கொடியது.

இப்படிப்பட்டவனுக்கு அகால மரணம் ஏற்படும். வெட்ட வெளியில் அவன் பிணம் கிடக்கும், கழுகுகள் அதைத் தின்னும் (1அர 14:11; 2 சாமு 21:18). இவன் அடக்கம் செய்யப்படுவதில்லை. இதைவிடக் கொடிய தண்டனையை நினைத்துப் பார்க்கவியலாது.

18-19 – இவை எண்ணிக்கை சார்ந்த கூற்றுகள். இக்கூற்றுகளுக்கு விளக்கமளிப்பது எளிதல்ல. பல தெளிவுகள் முன்வைக்கப்படுகின்றன. வியப்பைத் தரும் அறிவுக்கு எட்டாதது நான்கு என்று ஆசிரியர் கூறுகிறார். நான்காவது வியப்பு

முன்னைய மூன்றைவிட மேலானது. கழுகும் பாம்பும் கப்பலும் ஆராய்ந்து பார்க்கும் பொருள்களல்ல. அவற்றின் விழிகள் மனிதச் சிந்தனையைத் தாண்டுவதால் அவற்றை வியப்புடன் நோக்க அழைக்கின்றது இக்கூற்று. பொருள்களோ நபர்களோ அல்ல, அவைகளின் வழிகளே நமது விளக்கத்தின் ஆய்வுப் பொருளாகிறது.

கழுகு வானத்தில் மிதப்பது,

பாம்பு கால்களின்றி மலைமீது ஏறுவது. இவை எல்லாமே அற்புதங்கள். இன்னும் சொல்லப்போனால் இவை தடயங்களை விட்டுச் செல்வதில்லை, கண்டுபிடிப்பது கடினம். ஆதாரங்கள் எங்குமில்லை. இவை சென்ற வழிகளைக் கணிக்கவோ கண்டுபிடிக்கவோ இயலாது. கப்பலும் தண்ணீரைத் தாண்டிச் சென்றபின்பு எந்த வழியாகச் சென்றது என்பதைக் கண்டுபிடித்தல் இயலாது.

இங்கு நாம் வியக்கும் வழிகளுக்கு இலக்கு இல்லாமலில்லை. மனித உறவு இதைவிடத் தாண்டியதாக ஆச்சரியத்தையும் வியப்பையும் தருகிறது. எப்படி ஒருவர் இன்னொருவரில் புகுந்தார், ஒன்றாயினார்? பல ஆண்டுகளுக்குப்பின் மின்னலடிப்பதுபோல் இருவரும் ஒன்றாய்விடுகின்றனர்!

பெண் ஆணுக்காக ஏங்குவதும் (தொநூ 3:16) ஆண் பெண்ணுக்காக மாய்வதும் (இப 7:10) உறவின் மறைபொருளை எண்பிக்கின்றன. அவை விவரிக்கவோ, சொல்லவோ முடியாதவை.

நீதிமொழிகளில் இப்படிப்பட்டது இது ஒன்றே. இதுபோன்ற பல நீதிமொழிகள் கிடைத்திருந்தால் நலமாயிருக்கும். பொதுவாக, ஞானிகள் மிக எளியமையாய்ச் சொல்லிவிடுவர் என்ற எண்ணமுண்டு.

இருப்பினும் அவர்களது பார்வையிலும் போதனையிலும் மனித உறவில் அவர்கள் வியப்போடும் உள்ஆழச் சிந்தனையோடும் ஓர் ஆழ்ந்த மறைபொருளை முன்வைப்பதை மறக்கலாகாது.

20 – இக்கூற்று வசனங்கள் 18, 19துடன் ஒத்துப்போகவில்லை. 19இல் கூறப்பட்ட நான்காவது வியப்புகளுக்குத் தொடர்பில்லாமல் இக்கூற்றுப் போய்விடுகிறது. மேலும் இதற்கு முன்னாலுள்ள இரண்டு வசனங்களில் காணப்பட்ட விந்தையும் இங்கில்லை. விலைமகள் பற்றி ஏற்கனவே அதி 7இல் நாம் பார்த்துள்ளோம். அவளின் வழியே தனி. தவறு செய்தாலும் வாயில் ஒட்டியிருக்கும்

உணவைத் துடைத்துவிட்டு, நான் ஏதும் செய்யவில்லை என்பாள். உண்பது இங்குப் பாலியல் உறவை அடையாளமாகக் காட்டுகிறது (காண். 9:16-17). குளித்துவிட்டு எதுவும் செய்யவில்லை என்பதும் இதை ஒத்ததே.

21-33 - உலகத்தை உருட்டிப்போடும் நிகழ்வுகளை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார். இவர் காட்டும் சான்றுகள் நகைப்புக்குரியவையாய் இருப்பினும் ஆட்சி மாற்றங்கள், எதிர்பாராதத் திருப்பங்கள் அரசியலில் ஏற்படுவது இன்றும் நடப்பவையே.

21 - உலகம் நிலைகுலைவது ஒரு மிதமிஞ்சிய கூற்றாயிருந்தாலும் அதன் கருப்பொருளைக் கண்டுபிடிப்பதே நல்லது. ஆமோஸ் இஸ்ரயேலுக்கு ஏற்படும் இழிநிலைகளைப் பற்றிக் கூறுகிறார் (7:17).

22 - அரசனாகிவிடும் அடிமை: அரசுகளை அரியணையிலிருந்து நீக்கி அடிமை அரசாட்சியைப் பிடித்துக் கொள்வது ஒரு பதற்றமே. அரசு வாரிசையே அப்புறப்படுத்திவிட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்பவன் ஒரு புதிய ஆட்சியாளன் (காண். 15:5-7). இதனால் உலகம் நிலைகுலைகிறது.

'கயவன் உண்டு திரிவது' இங்கே ஒரு தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது. நீதிமொழி 19:10 மடையனுக்கு அரண்மனை வாழ்வு ஏற்றதல்ல. மேலானோரை ஆளும் பதவி அடிமைக்கு உகந்ததல்ல என்று கூறுகிறது. அது இக்கூற்றை வலுப்படுத்துகிறது. இது ஒரு தலைகீழ் மாற்றம், கயவனுக்கும் பொதுவாகச் சரியான உணவு இராது. ஆனால் இங்கு அது தலைகீழாய் மாறுகிறது.

23 - யாரும் விரும்பாதிருந்தும் மணமுடிப்பவள்: சூழல் சரியாகப் புரியவில்லை. இவள் மணம் செய்து, முதலில் அதிகம் விரும்பப்படாதவளாகிவிட்டாள். (இச 21:14-15), அல்லது திருமண முறிவுக்குப்பின் மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்பட்டவள் (இச 24:3). இதில் எதுவாயினும் இவளது முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்கும் வேறுபாடு உண்டு. அடிமை உரிமை மனைவியின் இடத்தைப்பிடிப்பது கணவனைப் பொறுத்தது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. ஒருவேளை அவள் குழந்தையின் காரணமாகவும் இருக்கலாம் (சாரா, ஆகார், தொநூ 16).

24-28 - இங்குள்ள எண்ணிக்கை கூற்றுகள் மிருகங்கள் பற்றிக் கூறுகின்றன. முந்தயவை மனிதன் பற்றியவையாகும். மிருகங்கள் சிறியவை,

சிறப்பானவை அல்ல. ஆனால் அவைகளின் ஞானத்திற்காக அவை பாராட்டுப் பெறுகின்றன. மனித ஞானத்துக்கு நாங்கள் சளைத்தவர்களல்ல என்பது போல் உள்ளது.

25 – எறும்பு அதன் ஓயா உழைப்புக்காகவும் அதன் முன்மதிக்காகவும் பாராட்டுப் பெறுவது பற்றி நீமொ 6:6-8 பேசுகின்றன. இங்கு அது வலிமையற்றதெனினும் கோடைக்காலத்துக்குரிய உணவை சேகரித்துவைக்கிறது.

26 – பாறைகளிலுள்ள இடைவெளிகளை (காண். திபா 104:18) முயல்கள் தங்கள் வளைகளாக மாற்றிக்கொள்கின்றன. இங்கே அதன் எதிரிகள் யாரென்று பொதுவாகச் செல்லவியலாது.

27 – வெட்டுக்கிளிகள் சிறியவை. அவற்றிற்கு அரசனில்லை. ஆனால் இவை ஒன்று சேர்ந்தால் இஸ்ரயேல் விவசாயிகளின் பயிர் நாசமாகிவிடும் (யோவே 2:7-9; ஆமோ 7:1-2).

28 – பல்லிகள் அரண்மனையில் காணப்படுகின்றன. ஆனால் மக்களில் பலர் முயன்றாலும் அரண்மனை அவர்களுக்கு எட்டாக்கனியாகிறது என்று நகைச்சுவையாகக் கிண்டல் செய்கிறார் ஆசிரியர்.

29 – பீடுநடை போடுவது வலிமை, அழகு, சிறப்பு இவைகளைச் சுட்டும்.

30 – சிங்கம்: அதன் கர்ஜனையும் போரிடும் திறனும் அதை விலங்குகளின் அரசனாக்குகிறது.

31 – சேவலும் வெள்ளாடும் அரசனும் பீடுநடைபோடும் வரிசையில் வைக்கப்படுகின்றனர்.

32 – 33 – வீண்பெருமை, சதித் திட்டம் இவைபற்றித் தம்பட்டம் அடிக்காதே, மௌனமாயிரு என்று நீதிமொழி கூறுகிறது. யோபு 21:16 தீயோரின் ஆலோசனையை உதறித்தள்ளுகிறது. ஆனால் இங்கே மௌனமாயிரு கூறப்படுகிறது. அடுத்த நீதிமொழி அதன் காரணங்களைக் கூறுகிறது. முதலில் மோரைக் கடைந்தால் வெண்ணெய் வரும் என்பது புதிய மாற்றம் உருவாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது இரத்தம் வரும். இது ஒரு கை கலப்பு அடிதடி சண்டையைக் காட்டுகிறது. மூன்றாவது எரிச்சலையும் சண்டையையும் குறிக்கிறது.

செம்பொருள்

இறைவார்த்தை கடவுளைப் பற்றி நமக்கு அறிவிக்கிறது. வசனங்கள் 5, 6 - இறைவார்த்தை எதைக் குறிக்கிறது: எழுதப்பட்ட சட்டநூலையா? இறை மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட கடவுளனுபவத்தின் நம்பிக்கை, பாதுகாப்பா? மர்பி பின்னயதைக் கூறுகின்றார். பழங்காலத்தில் ஞானிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்குக் கொடுக்கப்படுவதை வினைப்பயன் கொள்கை வழியாக விளக்கினர். ஆனால் அது நம்பிக்கை, ஆழமான செபம் இவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை. அடுத்து ஓர் அன்பனின் ஈடு இணையற்ற செபம்.

"செல்வமும் வேண்டாம், வறுமையும் வேண்டாம்

தேவையான உணவு மட்டும் தந்தருளும்" (8) என்ற செபம் புதிய ஏற்பாட்டின் இயேசு கற்பித்த செபத்திற்கு வழிவகுத்தது என்றால் மிகையாகாது.

'எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு அளித்தருளும்' என்ற வேண்டுதலை நீதிமொழிகளில் பார்க்கின்றோம். 'எண்ணிக்கைக் கூற்றுகள்' (31:15-33) என்று அழைப்பது சரியானதே. இவற்றைத் தொகுத்தவர் தெளிந்த உள்ளத்தோடு இதை செய்துள்ளார். ஏற்கனவே எண்ணிக்கையைப் பயன்படுத்தியிருக்கிறார். சான்றாக 375 கூற்றுகள் 'சாலமோன்' என்றும் எபிரேயப் பெயரின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

நாம் காணும் இப்பகுதியில் பல கருத்துகள் பற்றிப் பேசப்படுகின்றன. இயற்கையின் விந்தை, மனித உறவில் விந்தை ஆகியவை புரிய முடியாதவையாக உள்ளன. சிறியவை ஞானமுடையவையாய்ச் செயல்படுவது இன்றும் விந்தை (காண் 15, 18, 22, 24-28). பலவை படிக்கப் படிக்க இன்னும் புதிராக உள்ளன. ஆழ்ந்து படிப்பதே புரிதலைத் தரவியலும்.

25. அரசனுக்கு அறிவுரை (31:1-9)

31:1 மாசாவின் அரசனான இலமுவேலின் மொழிகள்: இவை அவனுடைய தாய்
தந்த அறிவுரைகள்: 2 பிள்ளாய், என் வயிற்றில் பிறந்தவனே, என் வேண்டுதலின் பயனாய்க்
கிடைத்த என் பிள்ளாய், நான் சொல்வதைக் கவனி. 3 உன் வீரியத்தையெல்லாம்
பெண்களிடம் செலவழித்துவிடாதே; அரசரை அழிப்பவர்களை அணுகாதே. 4 இலமுவேலே,
கேள், அரசருக்குக் குடிப்பழக்கம் இருத்தலாகாது; அது அரசருக்கு அடுத்ததன்று; வெறியூட்டும்
மதுவை ஆட்சியாளர் அருந்தலாகாது. 5 அருந்தினால், சட்டத்தை மறந்து விடுவார்கள்;
துன்புறுத்தப்படுவோருக்கு நீதி வழங்கத் தவறுவார்கள். 6 ஆனால் சாகும் தறுவாயில்

இருப்பவருக்கு மதுவைக் கொடு; மனமுடைந்த நிலையில் இருப்பவருக்கும் திராட்சை இரசத்தைக் கொடு. 7 அவர்கள் குடித்துக் தங்கள் வறுமையை மறக்கட்டும்; தங்கள் துன்பத்தை நினையாதிருக்கட்டும். 8 பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசு; திக்கற்றவர்கள் எல்லாருடைய உரிமைகளுக்காகவும் போராடு. 9 அவர்கள் சார்பாகப் பேசி நியாயமான தீர்ப்பை வழங்கு; எளியோருக்கும் வறியோருக்கும் நீதி வழங்கு.

பின்புலம்

அரசன் யார், கூற்றுகள் யாருடையவை என்பவை முதல் வசனத்திலே கூறப்பட்டுள்ளது. எகிப்திய, பாபிலோனிய இலக்கியங்களில் காணப்படும் அரச கூற்றுகள், இளவரசருக்கு அறிவுரை போன்றவைகளின் தாக்கம் இங்குள்ளது. ஆனால் தாய் கொடுத்ததுபோல் எங்குமில்லை. தன் அரச மகனுக்குத் தாய் மாதிடமும் மதுவிடமும் கவனமாகயிருக்க வேண்டும் எனக் கூறுகிறார் (காண் 3, 4-7). இவற்றால் சட்டம் மறக்கப்படுகிறது, ஏழைகளுக்குச் செலுத்தப்படும் நீதி கிடைப்பதில்லை. அதே சமயம் மனமுடைந்தோர் குடிக்க அனுமதி கிடைக்கிறது. காரணம் அவர்கள் தங்கள் துன்பத்தை, வறுமையை மறக்கலாம்.

சொல்விளக்கம்

1 – இலமுவேலின் மொழிகள் அவர் அன்னை தந்தது. அவர் மாசாவின் அரசர் என்று நீதிமொழி கூறுகிறது. இது வடக்கு அராபியாவிலுள்ள ஓர் இடம்.

2 – இக்கூற்று ஒரு தாயின் கூற்று. இது ஓர் அரசரின் தாய் கூறுவது. அவர் அரசியும் தாயுமா? அல்லது முடிசூட்டப்பட்ட அரசரின் தாயா? எது என்பது தெளிவில்லை. அவள் தாய் என்ற அதிகாரத்தில் செவிகொடுக்கக் கேட்கிறாள். அவள் மகனை ஈன்றவள் மட்டுமல்ல, அவனை அர்ப்பணித்தவள் (அன்னா 1சாமு 1:11-28).

3 – இந்த அறிவுரை அரசருக்கு மனைவியர் பலர் உண்டு என்ற பின்புலத்தில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். சிலர் கேடு விளைவிப்பர். அதே நேரம் பாலுறவில் எச்சரிக்கை தேவை..

4 – குடிப்பதால் வரும் ஆபத்தைக் கூறி குடிப் பழக்கம் கூடாது என எச்சரிக்கிறார் (காண் 20:1; எசா 28:7)

5 – குடித்து மயங்குவதால் கடமைகள் தடைபடும். மிக முக்கியமாக நீதிமன்றங்கள் செயல்படுவதும் கடினம், ஏழைகள் இதனால்

அலைக்களிக்கப்படுவர், நீதி அவர்களுக்குக் கிடைக்காது போகலாம். இது மக்கள் நலனைப் பாதித்துவிடும்.

6 - குடியாதே என்பவர் இப்போது மிகத் தைரியமாகக் குடிக்க அறிவுறுத்துகிறார். அரசருக்கும் அரசவைக்கும் மறுத்து, சாவின் பிடியிலும் துன்பத்திலும் இருப்போரின் மன சாந்திக்காக மது குடிக்க அறிவுரைத் தருகிறார் ஆசிரியர். சிலர் இதை நக்கலாகக் கூறுகிறார் என்பர் மற்றும் சிலர் இது பிற் சேர்க்கை என்பர்.

ஆசிரியர் திட்டத்தில் ஏழைகள் கொஞ்சம் ஆறுதல் பெறும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. அரசர்களுக்கு வழங்கப்படுவது ஆண்டிக்கும் வழங்கப்படுகிறது. ஏனெனில் அவர்கள் காணும் சுகம் வெறும் சொற்பமே. இது கொஞ்ச காலத்துக்கென்றாலும் இது சிபாரிசு செய்யப்படுகிறது.

8-9 - பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசுவது ஒரு நீதியான செயல் திக்கற்றவர்களின் உரிமைக்காகப் போராடுவது மாண்பு மிக்க செயல். அரசரின் அறப்பணி இவையாகத்தான் இருக்க வேண்டும். அனாதைகள், வறியோர்கள் சார்பாகப் பேசுவது அரசரின் கடமை.

செம்பொருள்

அரசர்கள் நீதி வழங்க வேண்டும் என்பது நீதிமொழிகளின் விருப்பம். கொடிய அரசர்களைக் கண்டிப்பதும் (28:16 29:12), அவர்களது கோபத்தை விளக்குவதும் (16:14; 19:22; 20:2) நீதி மொழிகளில் உண்டு. ஆனால் ஓர் எடுத்துக்காட்டான அரசர் என்ன செய்கிறார் (16:10-15) என்பது பற்றியும் கூறப்படுகிறது.

இங்கு அரசனுடைய சமூகப் பொறுப்புகள் வலியுறுத்தப்படுகின்றன. அரசன் எப்படிச் செயல்பட வேண்டும் என்பது மெசபோத்தாமிய, எகிப்திய, தமிழ் இலக்கியங்களில் நிறைய உண்டு.

அரசவைகளிலும் பள்ளிகளிலும் நீதிமொழிகள் சொல்லப்பட்டாலும் (அதி 10-29), மொத்தத்தில் அரசருக்குரிய கூற்றுகளில் மேன்மை மிக்க கூறுகள் குறைவாகவே உள்ளன.

26. நல்ல மனையாள் (31:10–31)

31:10 திறமைவாய்ந்த மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது; அவள் பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள். 11 அவளுடைய கணவன் அவளை மனமார நம்புகிறான்; அவளால் அவனுக்கு நலமும் வளமும் பெருகும். 12 அவள் தன் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நல்லதையே செய்வாள்; ஒரு நாளும் தீங்கு நினையாள். 13 கம்பளி, சணல் ஆகிய பொருள்களைத் தானே தேடிக் கொணர்வாள்; தன் வேலையனைத்தையும் விருப்புடன் தானே செய்வாள். 14 அவளை ஒரு வணிகக் கப்பலுக்கு ஒப்பிடலாம்; அவள் உணவுப் பொருள்களைத் தொலையிலிருந்து வாங்கி வருவாள். 15 வைகறையில் துயிலெழுவாள்; வீட்டாருக்கு உணவு சமைப்பாள்; வேலைக்காரிகளுக்குரிய வேலைகளைக் குறிப்பாள். 16 ஒரு நிலத்தை வாங்கும்போது தீர எண்ணிப்பார்த்தே வாங்குவாள்; தன் ஊதியத்தைகொண்டு அதில் கொடிமுந்திரித் தோட்டம் அமைப்பாள். 17 சுறுசுறுப்புடன் அவள் வேலை செய்வாள்; அயர்வின்றி நாள் முழுதும் ஊக்கம் குன்றாது உழைப்பாள். 18 தன் உழைப்பு நற்பலன் தருமென்பது அவளுக்குத் தெரியும்; அவள் தன் வீட்டில் ஏற்றிவைத்த விளக்கு ஒருபோதும் அணையாது. 19 இராட்டினத்தைத் தானே பிடித்து வேலை செய்வாள்; நூல் இழைகளைத் தன் விரல்களால் திரிப்பாள். 20 எளியவனுக்கு உதவி செய்யத் தன் கையை நீட்டுவாள். வறியவனுக்கு வயிறார உணவளிப்பாள். 21 குளிர்காலத்தில் அவள் வீட்டாரைப்பற்றிய கவலை அவளுக்கு இராது; ஏனெனில், எல்லார்க்கும் திண்மையான கம்பளிப் போர்வை உண்டு. 22 தனக்கு வேண்டிய போர்வையைத் தானே நெய்வாள்; அவள் உடுத்துவது பட்டாடையும் பல வண்ண உடைகளுமே. 23 அவளை மணந்த கணவன் ஊர்ப் பெரியோருள் ஒருவனாய் இருப்பான்; மக்கள் மன்றத்தில் புகழ் பெற்றவனாயுமிருப்பான். 24 அவள் பட்டாடைகளை நெய்து விற்பாள்; வணிகரிடம் இடுப்புக் கச்சைகளை விற்பனை செய்வாள். 25 அவள் ஆற்றலையும் பெருமையையும் அணிகலனாகப் பூண்டவள்; வருங்காலத்தைக் கவலை இன்றி எதிர்நோக்கியிருப்பாள். 26 அவள் பேசும்போது ஞானத்தோடு பேசுவாள்; அன்போடு அறிவுரை கூறுவாள். 27 தன் இல்லத்தின் அலுவல்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பாள்; உணவுக்காகப் பிறர் கையை எதிர்பார்த்துச் சோம்பியிருக்க மாட்டாள். 28 அவளுடைய பிள்ளைகள் அவளை நற்பேறு பெற்றவள் என வாழ்த்துவார்கள்; அவளுடைய கணவன் அவளை மனமாரப் புகழ்வான். 29 "திறமை வாய்ந்த பெண்கள் பலர் உண்டு; அவர்கள் அனைவரிலும் சிறந்தவள் நீயே" என்று அவன் சொல்வான். 30 எழில் ஏமாற்றும், அழகு அற்றுப் போகும்; ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள பெண்ணே புகழத்தக்கவள். 31 அவளுடைய செயல்களின் நற்பயனை எண்ணி அவளை வாழ்த்துங்கள்; அவளது உழைப்பை மக்கள் மன்றம் பாராட்டுவதாக.

பின்புலம்

திறமை வாய்ந்த பெண்ணை ஆசிரியர் நம் முன் வைக்கிறார். இந்தப் பகுதியில் வச 10–18ஐ ஒரு பகுதியாகவும் 21–29ஐ இன்னொரு பகுதியாகவும் அறிஞர்கள் கணிப்பர். இவை ஒவ்வொன்றிலும் ஒன்பது வசனங்கள் உள்ளன. திறமை வாய்ந்த மனையாள் ஒப்பிடுவதற்கு அரிதானவள் (10, 29). அவளது கணவர் (11, 23), அவளது நன்னெறி (12, 26), கைவேலைப் பாடுகள் (13, 22, 24), வீட்டைக்

கையாளும் விதம் (15, 21, 27), வியாபாரம் (16, 24) எல்லாம் அவளது திறன்களாகக் கூறப்படுகின்றன. இந்த இரண்டு பகுதிகளுக்கும் சிறந்த ஒற்றுமை உண்டு.

இதை ஒரு ‘வீர காவியம்’ என்பர். எச்சரிக்கையும் இதிலுண்டு (வச 30) பொதுவாக வீர காவியத்தில் உள்ள உணர்ச்சியைத் தூண்டும் கவிதைகள் இதில் உண்டு.

இது திருமணமாகவிருக்கின்ற இளம் பெண்களுக்கு ஒரு தயாரிப்பு என்பர். உன்னதமான பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது என்றும் கூறுவர்.

பொனோரா என்ற அறிஞர் திறமை வாய்ந்த இப்பெண்ணை ஞானத்தின் அடையாளமாகச் சித்தரிக்கிறார், ஒரு ஞானியாகக் காண்கிறார். காம்ப் என்பவர் இவள் ஓர் உன்னத சமூகத்திலுள்ள வீட்டில் வாழும் ஞானமுடைய பெண் என்கிறார். அவள் ஞானப் பெண்ணின் தொன்மம். நல்ல மனைவி, யாவேயின் ஆசிரை குடும்பத்திற்குப் பெற்றுத்தரும் இடைநிலையாளர். அவளுடைய வேலையாலும் கடவுள் அச்சத்தாலும் சமாதானம் நிலைக்கிறது. மக்ரீஷ் கருத்துப்படி: இச்சித்திரத்தைப் நூல் வடிவில் தருவது மிகச் சிறப்பு வாய்ந்தது. காம்ப் என்ற அறிஞர் இந்தக் கவிதையை அதிகாரங்கள் 1-9உடன் இணைத்து விளக்க முற்படுகிறார். இவ்வாறு பல்வேறுபட்ட சிந்தனைகளுக்குப் பின்புலமும் அடித்தளமுமாகின்றன ஆசிரியரின் படைப்புகள். காம்ப் எட்டு இணைப்புக்களைப் பார்க்கிறார். (காண். ம்ர்மி பக் 246).

சொல்விளக்கம்

10 – நல்ல மனையாளை யார்தான் கண்டுபிடிப்பர்? நல்ல மனையாளைக் காண்பது முடியாத ஒன்றாயிருக்கலாம். ஞானத்தை எங்கே கண்டுபிடிப்பது (யோபு 28:12) என்ற கேள்விக்கு யாராலும் பதில் தர முடியாது. ஏனெனில் அது கடவுளோடு உள்ளது. நீமொ 18:22 ‘மனையாளைக் கண்டுபிடிப்பது’ சாத்தியமே என்கிறது. எனினும் அது கடவுள் கொடை. இது உடனே தேடிக் கண்டுபிடிப்பதல்ல, மாறாக ஆவலோடும் ஏக்கத்தோடும் தேடுவதைக் குறிக்கிறது (1:28; 8:35; யோபு 27:12-13). எனினும் இந்த நீதிமொழி ஒரு புதிராக உள்ளது. நல்ல மனையாளைக் கண்டுபிடிப்பது இயலாத ஒன்று. ஏனெனில் இது கடவுள் செயல். மனித முயற்சிகளால் முடியாது (18:22). ஆனால் இங்கு மணமான குடும்பப் பெண்ணைக்

காண்கிறோம்; எனவே கண்டுபிடித்துவிட்டதையும் அவளைக் கணவன் புகழ்வதையும் காண்கிறோம் (28:29). நல்ல மனைவி எந்த வியாபாரப் பொருளோடும் ஒப்பிடமுடியாதவள் (3:15; 8:11; 20:15).

11-12 – கணவன் மனைவியைப் புகழப் புகுத்தப்பட்ட நபர்போல் உள்ளார். அவன் அவளைப் புகழ்வது பற்றி மட்டுமே கூறப்படுகிறது. 'வாழ்நாள் வளம்' என்பது அவரது செல்வப் பெருக்கைக் குறிக்கிறது. மனமார நம்புதல் கணவனின் அன்பையும் அவள்மீது கொண்டிருக்கும் அளவற்ற கரிசனையையும் குறிக்கிறது.

12 – மனைவி கணவனுக்குத் தீங்கு நினையாள், நல்லதைச் செய்வாள் என்பது ஓர் உச்சகட்ட அன்பின் வெளிப்பாடு.

13 – கம்பளி, சணல் இவைகளை முன் கூட்டியே தயாரிப்பில் வைத்துக்கொள்வது வீட்டை நடத்துவதில் நல்ல மனையாளுக்குள்ள கரிசனையைக் காட்டுகிறது (21-22). வீட்டிலுள்ளோர் அவளிடம் கேட்பதற்கு முன்பே அவற்றைத் தயாரித்துவிடுவாள். இவற்றைத் தன் மந்தையிலுள்ள ஆடுகளிடமிருந்தோ அல்லது விற்பனையாளர்களிடமிருந்தோ அவள் ஏற்பாடு செய்யலாம்.

14 – மத்தியதரைக் கடல் பகுதியில் வாழ்ந்தோர் பொனிசியர்கள். அவர்கள் தான் கப்பல் வழியாக வியாபாரம் செய்பவர்கள்; யூதர்களல்லர். வணிகக் கப்பல் என்பது வியாபாரம். அது வணிகப் பொருள்களைக் குறிக்கும். கப்பல் வியாபாரம் பிறநாட்டுப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள், இறக்குமதிப் பொருள்களைச் சுட்டும். ஒரு மனைவியால் இத்தகைய அரிய வேலைகளில் ஈடுபடுவது மிகைப்படுத்தலாக உள்ளது.

15 – பொதுவாக இரண்டு வாக்கியங்களையுடைய இப்பகுதியில் இங்கு மூன்று வாக்கியங்களைக் காண்கிறோம். இது பிற்சேர்க்கையாக இருக்கலாம். வைகறை எழுவது கீழை நாடுகளில் இன்றும் காணப்படுகிறது. வீட்டைப் பெருக்கி, உணவு சமைப்பது, வேலையாள்களுக்கு வேலைகளை நிர்ணயிப்பது ஒரு வீட்டு முதலாளியின் வேலை. முதலாளியாய்ச் செயல்படும் இம் மனையாள் உண்மையிலேயே சிறப்பானவள்.

16 – நிலம் வாங்குவது, கொடி முந்திரித் தோட்டம் அமைப்பது பொதுவாக ஆண்கள் வேலை. இடையை வரிந்து கட்டிக்கொண்டு வயல் வெளியில் வேலை செய்கின்ற நிலத்தைப் பண்படுத்துகின்ற மனையாள் ஓர் அரிய பிறவி. தனது

ஊதியம் என்பது நிலத்தில் வேலை செய்து பெற்ற ஊதியமா, அல்ல நூல்நெய்து ஆடை செய்தோ அல்லது அழகு பொருள்கள் செய்தோ வந்த ஊதியமா? (வச 19). ஒன்று மட்டும் நிச்சயம் இவள் தளராது உழைப்பவள்.

17 - இவள் ஓர் உழைப்பாளி. ஆவலோடு அதைச் செய்வாள். அத்தோடு அவருக்கு உறுதியும் தளராத்தன்மையும் அவருக்கு உண்டு.

18 - வருமானம் இல்லையெனில் உழைப்பில் கவனம் செலுத்துவது கடினம். கடின உழைப்புப் பலன் தரும் என்பதற்கு இவள் ஒரு சான்று. பல வேலைகளில் பம்பரமாய்ச் சுழல்வதால் ஒன்றில் இழப்பு ஏற்பட்டாலும் மொத்தத்தில் வருமானம் அதிகமே. அதில் அவளுக்கு திட்டவட்டத் தெளிவு உண்டு.

இவள் ஏற்றிவைத்த விளக்கு ஒருபோதும் அணையாது என்பது பல அடையாளப் பொருள்களைத் தருகிறது. அவள் குடும்ப விளக்காக, குல விளக்காக பலரின் வாழ்வில் ஒளியேற்றியவளாக, இருளை ஓட்டுபவளாகக் கொள்ளலாம். அவள் ஏற்றுவதெல்லாம் விளக்கே ஏன்; அவளும் ஒரு விளக்குதான்.

19 - இராட்டினம் கீழை நாடுகளுக்கு அந்நியமானதல்ல. இவள் வீட்டுவேலையில் மட்டுமல்ல வருவாய் தரும் குடிசைத் தொழிலிலும் கை தேர்ந்தவள்.

20 - இவள் கைகள் வேலை செய்பவை மட்டுமல்ல; அறச் செயல்கள் செய்து புனிதம் பெறுபவை. வயிறார உணவளிக்கும் கை வானத்தைத் தொடும். இவள் நற்செய்தியின் ஒரு சான்று எனலாம்.

21 - காலத்தின் மாற்றங்களால், கடுங்குளிரால் யாரும் பாதிக்கப்படாதவாறு இருக்க கம்பளிப் போர்வை உண்டு.

22 - இரவில் போர்த்திக் கொள்ளத் தனது போர்வையை அவளே செய்கிறாள். சிலர் இதைப் படுக்கையை மூடும் போர்வையாகவும் கொள்வர் (7:16). இவள் செல்வம் மிகுந்த சீமாட்டியாயிருக்கலாம். இவள் உடுத்துவது விலையுயர்ந்த பட்டாடைகள். தரமான நூலினால் நெய்யப்பட்டவை.

23 - ஒவ்வோர் ஆணின் வளர்ச்சிக்குப் பின்னும் ஒரு பெண் உண்டு எனக் கூறுவது மிகமிகப் பொருந்தும். நல்ல மனையாளின் கணவர் புகழ் பெற்றவனாக, அனைவரின் பாராட்டையும் பெற்றவராக இருப்பார். மக்கள் மன்றம் என்பது மக்கள் கூடும் இடம். அது நகரங்களின் நுழைவாயிலாக இருக்கும். அந்த இடத்தில்

வியாபாரம் நடக்கும், தகராறுகள் தீர்த்துவைக்கப்படும், பொதுவான செய்திகள் அறிவிக்கப்படும். அவளது கணவன் புகழ் பெறவும், ஊர்ப் பெரியோர்களின் ஒருவனாய் மாறவும் முடிகிறதென்றால் அதன் பெரும் பங்கு அவனது மனைவியைச் சாரும் (12:4). ஞானமுள்ள பெண் கணவனின் மகுடம்.

பொதுவாகக் கவிதைகள் ஆண்களின் கண்ணோட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளன என்பது அறிஞர் கணிப்பு. பெண் போற்றப்படுவதும் கூட அவளது கணவனால்தான்.

எனவே மனிதனுடைய புகழ் நக்கலாகக் கூறப்படுகிறதா? அல்லது கணவன் ஊரிலுள்ள நுழைவாயிலில் உள்ள மனிதர்களுள் ஒருவராகவும் அவனது மனைவி வீட்டுத் தலைவியாக மாண்புடன் விளங்குவதாகக் கூறப்படுகிறதா?

24 – இப்போது மனையாள் பொருள்களை உற்பத்திசெய்து அவைகளை விற்கும் வியாபாரியாகக் காட்டப்படுகிறாள். பொதுவாகக் கனானியர்கள் இதற்குப் பேர் போனவர்கள்.

25 – ஆற்றல், பெருமை இவற்றை ஆடைகள் போல் போர்த்துவது உருவகமாகப் பேசுவதாகும். பொதுவாக நீதியை உடுத்துவது (திபா 132:9; மகிழ்ச்சி 30:11) விவிலியக் கூற்றாக உள்ளது. இந்த குணநலன்கள் அந்த மனிதர் எப்படிப்பட்டவர் என்பதைக் காண்பிக்கிறது. அவரது எதிர்காலம் அச்சமற்றது, கவலையற்றது, ஒளிமயமானது.

26 – அவளது பேச்சு ஞானம் நிறைந்ததாக உள்ளது. ஞானச் சீமாட்டியாகவே அவள் காணப்படுகிறாள். ஞானம் அவளிடமுள்ளதால் தோரா நூல் தரும் கனிவை, கனிவு பற்றிய அறிவுரையை அவள் கூறுகிறாள். யாருக்கு அவள் இதைக் கூறுகிறாள் என்று தெளிவில்லை. ஒருவேளை தன் பிள்ளைகளுக்கு அல்லது வேலைக்காரிகளுக்குக் கூறலாம்.

27 – செல்வச் செழிப்பில் வாழும் தம் மனைவியானவள் பிறரிடம் உணவுக்காகக் கையேந்த வேண்டுமா என்பது அவளைக் குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது. உணவுக்காகப் பிறர் கையை எதிர்பார்ப்பவர் பிச்சைக்காரர் மட்டுமல்ல, உழைக்க மறுப்பவர். சோம்பேறிக்கு உணவு கிடைக்காது. உணவு உழைக்காமலிருப்பதை ஏற்றுக்கொள்ளாது. எனவே சுறுசுறுப்போடு உழைப்பவர் கையேந்தவேண்டிய நியாயமும் நிர்பந்தமும் இல்லை. இந்தக் கூற்றுப் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய (2தெச 3:10) கூற்றை உறுதிப்படுத்துகிறது.

28 - நல்ல மனையாள் பிள்ளைகளாலும் தன் கணவராலும் புகழப்படுகிறாள். அவள் நற்பேறு பெற்றவள். அவருடைய பேரையும் புகழையும் எடுத்துரைக்கும் வச 10ம் இதுவும் (28) உள்ளடைப்பு என்ற இலக்கியச் சிறப்பைக் கொண்டுள்ளன.

29 - கணவனால் 'சிறந்தவள்' என்று புகழப்படுகிறாள்.

30 - இது ஓர் அறிவுரை என்பர் ஒருசிலர். மற்றோர் இது வேண்டப்படாத ஒரு கூற்று என்பர். இது கூர்ந்து நோக்கும் ஒருவர் மற்றோரைக் கடைபிடிக்கக் கூறும் ஒரு தீர்ப்பு. அவரது தீர்ப்பை மேலோட்டமாக எடுத்துக் கொள்வதா? எழிலும் அழகும் காலத்தால் மறைந்து போய்விடும். ஆனால் 'ஆண்டவரிடம் அச்சம்' நிலைக்கும்.

நல்ல மனையாளை ஞானமும் உழைப்பும் உடைய ஒரு வீட்டுத் தலைவியாகக் காட்டும் இப்பகுதியில் ஆண்டவரின் அச்சம் ஏன்? நல்ல மனையாள் ஞானமுடையவர் என்று வச 26 கூறுகிறது. அவளுடைய செயல்கள் நல்லன. இருப்பினும் இப்படி இந்தக் கவிதை முடிவடைவது வியப்பாக உள்ளது.

பல விளக்கங்கள் நீமொ 1:7 ஞானத்தைக் கடவுள் அச்சமாகக் கொள்கின்றன. எனினும் ஆற்றலும் திறமையுமுடைய பெண் ஞானச் சீமாட்டியாக இனம் காணப்படுகிறாள். திறமையுடை மனையாளும் ஞானச் சீமாட்டியும் குடும்பத்தைக் கட்டி எழுப்புபவர். இருவரும் மக்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்துபவர். இருவரும் கடவுள் அச்சத்தோடு ஆழமாகத் தொடர்புடையவர்கள்.

31 - இது ஆசிரியர் கூற்றாக உள்ளது. இது வச 29ஐப் போன்று நல்ல மனையாளைப் புகழும் ஒன்றாக இருக்கிறது. அவளது நல்ல உழைப்பையும் உழைப்பின் பயனையும் எண்ணிப் பாராட்ட ஆசிரியர் அழைக்கிறார். அவள் வாழ்வில் சாதித்த அனைத்து நற்செயல்களையும் நினைத்துப் போற்றக் கேட்டுக்கொள்கிறார்.

செம்பொருள்

விவிலியம் காட்டும் பெண்களுக்கிடையே வேறுபாடுகளைக் காண முடிகிறது இனிமைமிகு பாடல்கள் பெண்ணின் அழகைப் போற்றுகின்றன. உடலின் கவர்ச்சியை விளக்கத் தயங்குவதில்லை. ஆனால் நமது காவியத் தலைவி எல்லா வேலையையும் செய்யக் கூடியவள். கைகள், முழங்கைகள், உள்ளங்கைகள் பற்றிப் பேசப்படுகின்றன. இவைகளுக்காக கணவன் அவளைப் புகழ்கிறான் (28,

29). இனிமைமிகு பாடல்களின் தலைவன் அங்கமங்கமாகப் புகழ்கிறான். இங்குக் கணவனின் செயல்கள் குறைவே (10-31). மனைவியும் அவரிடம் அதிகம் கவனம் செலுத்தவில்லை. அவள் பம்பரமாகச் சுழல்கிறாள். இனிமைமிகு பாடல்களின் தலைவி காட்டும் அன்பு, காதல், கொஞ்சல் இவளிடம் இல்லை, அதற்கு நேரமுமில்லை. இல்லத் தலைவியை ஒரு நிறைவான, முழுமையான பெண்ணாக இக்கவிதையில் காணலாம்.

இந்த ஞானப் பெண்ணைப் பல்வேறு விதமாக அறிஞர்கள் நோக்குகின்றனர் கவுஸ்மான் என்பவர்: இங்குக் காணப்படும் பெண், அவளுடைய செயல்கள் உண்மையானவையா? ஏனெனில் நூலில் காணப்படும் எல்லாவற்றையும் ஒரு பெண்ணால் செய்யவியலாது என்கிறார். ஆனால் ஞானம் கடவுளோடு உள்ளதால் அதைக் கண்டுபிடிப்பது கடினம்தான் (காண். யோபு 28; நீமொ 8:22-30). இத்தகைய பெண்ணும் ஞானம் போன்றவளே. அவளைக் காண்பது கடினம். அதனால் இவை இல்லை எனக் கூறவியலாது.

மேலும் இங்குக் காணப்படும் நல்ல மனையாளின் விவேகமும் கடின உழைப்பும் வெறும் புகழ்ச்சிக்காக எழுதப்பட்டுள்ளனவா? ஏனென்றால் 10-29 அதிகாரங்களில் இதற்கான தயாரிப்பு இல்லையே.

நல்ல பெண் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமாகவும் (31:30) கருதப்படுகிறாள். யாவேயிடம் அச்சம் என்று மொழிபெயர்க்கப்படும் இவ்வார்த்தை ஞானத்தைக் குறித்து நிற்கிறது.

எனவே இந்நூலின் தொடக்கத்திலும் இறுதியிலும் ஞானமும் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமும் பெண்ணாகச் சித்தரிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது ஆசிரியரின் ஞானமும் இறையச்சமும் பற்றிய நுட்பமான அறிவு வெளிப்படுகிறது.

மக்ரீஷ் என்ற அறிஞர் இன்னுமொரு கருத்தை முன்வைக்கிறார்.

அதிகாரம் 9:4-6இல் ஞானம் விருந்தினரை தனது வீட்டிற்கு அழைக்கிறாள். ஆனால் 31இல் நாம் பார்க்கும் ஞானப் பெண் தனது வீட்டிலே வசிக்கிறாள். இதை ஓர் அடையாளமாகக் கொள்ளலாம்.

அதி 9இல் அவள் திருமணமாகாத ஒரு பெண். அவள் தனது காதலர்களைத் தேடுகிறாள். தான் அளிக்கும் கொடைகளை, வாழ்வை அவள் அவர்களுக்குத் தந்து மகிழ்கிறாள். இப்போது காதலிப்பதும் கற்பதும் முடிந்துவிட்டது. அதி 31இல் அவள் நம்பிக்கையான மனைவி, வீட்டைப் பராமரிக்கும் தலைவி, தனது இல்லத்தில் குடியிருக்கிறாள்.

நீதிமொழிகள் நூலின் நுட்பமான அடையாளக் கூற்றுகள் ஞானம் பற்றிய அருமையான கருத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவள் ஒரு தூரத்து இலட்சியம் அல்ல. மாறாக அவளைத் தேர்ந்துகொண்டவருடைய வாழ்வுக்கு உதவும் உண்மை வழிகாட்டி. அவள் வாழ்நாள் தோழியாக இருப்பாள். அவள் கடவுளிடமிருந்து தோன்றியவள் (8:22-38). அவளுடைய போதனைகளைச் கடைப்பிடித்தால் கடவுளின் பேறுபலன்கள் கிடைக்கும் (8:35). உலகே அவளது வீடு. அதுவே அவளது விருப்பம். அவள் படைத்தவரின் பக்கத்தில் விளையாடினாலும்

> "பூவுலகில் எங்கும் மகிழ்ந்து செயலாற்றுகிறாள்
> மனிதனோடு இருப்பதில் மகிழ்ச்சியடைகிறாள்" (8:31)

துணை நின்ற நூல்கள்

1. Aitken, K. 'Proverbs', DSB. Philadelphia: Westminster, 1986.
2. Alonso Schökel, L. 'Provubios', NEB., Madrid: Ediciones Cristiandad, 1984.
3. Cohen, A. 'Proverbs', London: Sonerilno, 1973.
4. Gemser, B. Sprüche Salomos: HAT 16. Tubingen: I.C.B. Mohr (Paul Siebeek) 1963.
5. Hubbard, D. 'Proverbs', CC. Dallasl: Word, 1989.
6. Mekane, W. 'Proverbs', OTL. Philadelphia: Westminister, 1970.
7. Meinhold, A. Die Sprüche, Z. B. Zürich: Theologiseher Verlag, 1991. 2 Vols.
8. Murphy, R. E. 'Proverbs', WBC. Nashuille, 1998.
9. Ringgern, H. Sprüche, ATD 16/1. Gottingen: Vandenhoeck and Rupreeht, 1962.
10. Scott, R.B.Y. 'Proverbs, Ecclesiastes'. AB. New York: Doubleday, 1965.
11. Van Lecuwen, R.C. 'The Book of Proverbs' NIB, Nashville: Abingdon, 1937.

விவிலிய விளக்க உரைகள்

அறிமுக நூல் (1)

- 1. விவிலியம் ஓர் அறிமுகம்

பழைய ஏற்பாட்டு நூல்கள் (2-26)

2. தொடக்க நூல்
- 3. விடுதலைப் பயணம்
- 4. லேவியர்
- 5. எண்ணிக்கை நூல்

6. இணைச் சட்டம்
- 7. யோசுவா
- 8. நீதித் தலைவர்கள்

9. 1, 2 சாமுவேல்
10. 1, 2 அரசர்கள்
- 11. 1, 2 குறிப்பேடு
- 12. எஸ்ரா, நெகேமியா
- 13. ரூத்து, எஸ்தர், யூதித்து
- 14. யோபு
- 15. திருப்பாடல்கள்

16. நீதி மொழிகள்
17. சபை உரையாளர்
18. இனிமைமிகு பாடல்
19. எசாயா
- 20. எரேமியா,புலம்பல்

21. எசேக்கியேல்
- 22. தானியேல்
- 23. ஓசேயா, ஆமோஸ், மீக்கா
- 24. நாகூம், அபக்கூக்கு, செப்பனியா
- 25. ஆகாய், செக்கரியா, மலாக்கி
- 26. ஒபதியா, யோனா, யோவேல்

இணைத்திருமுறை நூல்கள் (27-30)

27. சீராக்கின் ஞானம்
- 28. சாலமோனின் ஞானம்
- 29. பாரூக்கு, தோபித்து

30. 1 2, மக்கபேயர்

புதிய ஏற்பாட்டு நூல்கள் (31-45)

- 31. மத்தேயு
- 32. மாற்கு
- 33. லூக்கா
- 34. யோவான்
- 35. திருத்தூதர் பணிகள்
- 36. உரோமையர், கலாத்தியர்
- 37. 1 கொரிந்தியர்
- 38. 2 கொரிந்தியர்

39. சிறைக்கூட மடல்கள்
- 40. 1, 2 தெசலோனிக்கர்

41. ஆயர் பணித் திருமுகங்கள்
- 42. எபிரேயர்
- 43. 1, 2 பேதுரு, யாக்கோபு, யூதா
- 44. 1, 2, 3 யோவான்
- 45. திருவெளிப்பாடு

• இக்குறியிடப்பட்ட நூல்கள் அனைத்தும் வெளிவந்தவை

நூல்கள் கிடைக்கும் இடங்கள்

அருள்வாக்கு மன்றம்,
புனித பவுல் இறையியல் கல்லூரி
அ.பெ. எண் : 36, திருச்சி-620 001.
☎ : 0431-2412500

தமிழ் இறையியல் நூலோர் குழு
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை - 10.
☎ : 0452 - 2602352